ஸ்ரீ குருகிருபா விலாஸம்



ஸ்ரீ குருகிருபா விலாஸம்

ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு
ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின்
திவ்ய மஹிமைகளை எடுத்துக்காட்டும்
கட்டுரைகளின் தொகுப்பு

முதல் பாகம்

எழுதியவர்
ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள்

வெளியிடுவோர்
சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் பக்தர்கள்
புதிய பதிப்பு
2003

Sri Gurukripa Vilasam (Vol. I)
Essays on the greatness of
H.H. Sri Chandrasekhara Bharathi Mahaswamigal
(in Tamil)
By : Sri Bhashya Swamigal

Published by :
Sri. K. Narayanaswami
'Srikanta Vilas'
5, Brindavan street,
Mylapore, Chennai - 600 004.
(Also, Vidyaranyapuram,
Sringeri - 577139)

Price : Rs. 60/-

On behalf of
The Devotees of Dakshinamnaya
Sri Sharada Peetam,
Sringeri - 577 139.

Computer composing :
M/s. Kamala Artz
T. Nagar, Ph: 2432 0532

Supervision :
Sri. E.R. Ravikumar

Offset printing :
Sri. K. Narasimhan
Aaral Graphics
Phone: 2483 4488



சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ பாரதீதீர்த்த மஹாஸ்வாமிகளின் ஸன்னிதியில்
இந்தப் பதிப்பு பக்தியுடன் ஸமர்ப்பணம் செய்யப்படுகிறது

முதற் பதிப்பிற்கு தத்துவப்பேராசிரியர்
Dr. T.M.P. மஹாதேவன் M.A. Ph.D
அவர்கள் அளித்திருந்த முன்னுரையிலிருந்து
சில முக்கிய பகுதிகள்

ஸ்ரீ ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அவர்களின் கருணு விலாஸத்தைச் செம்மையாக விளக்கும் ஓர் அரிய நூல் இது.

குரு பக்தி எவ்வாறு செய்யவேண்டும், குரு பக்தியின் பிரவாஹம் எத்துணையது என்பதற்கு ஸ்ரீ மஹாஸ்வாமிகள் சிறந்த ஆதர்ச புருஷராக விளங்கினுர்கள். தம்முடைய குருநாதரான ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளுக்கு அவர் ஸமர்ப்பித்த அன்பிற்கு ஈடு காட்டமுடியாது. எல்லா க்ஷேமங்களுக்கும் காரணமாக அந்த குருநாதரின் அதிஷ்டானத்தையே அவர் காட்டுவது வழக்கம். நாம் எவ்வாறு குருபக்தி செய்யவேண்டும் என்பதை ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் அநுஷ்டித்துக் காட்டியுள்ளார்கள். அவர் தமது குருநாதருக்குச் செலுத்திய பக்தியில் லவலேசம் நாம் பெற்ருலும் க்ருதார்த்தராகலாம். அந்த ஒரு ஸாதனத்தைப் பெற இந்நூல் மிகவும் உதவி புரியும்.

ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள் பஞ்சதசியில் த்யான தீபப்கரணத்தில் தபஸ்ஸுக்கும் ஞானத்திற்கும் உள்ள வித்யாஸத்தைப் பற்றிக் கூறுகின்ருர். தபஸ்ஸினுல் ஸித்திகள் பல பெறலாம். சாபானுக்ரஹ ஸாமர்த்தியம் வரும். ஞானமோவென்ருல் சிரவண–மனன–நிதித்தியாஸன மூலமாக எழுகின்றது. ஒருவரிடம் ஸித்திகளும் தத்துவ ஞானமும் காணப்படலாம். ஆனுல் இரண்டும் வேறு என்பதை நாம் உணர வேண்டும். ஸித்தரிடம் தத்துவ ஞானம் இல்லாமல் இருக்கலாம், ஞானியிடம் ஸித்திகள் இல்லாது இருக்கலாம். ஸித்திகள் இல்லேயே என்ற காரணத்திற்காக, அவருடைய ஞானத்திற்குக் குறைவு ஏற்படாது. பூர்ண ஞானம் அடைந்த ஒருவருக்கு தபஸ்ஸின் பயனுக ஸித்திகள் உண்டானுல் அவற்றை அவர் பெருமைப்படுத்த மாட்டார்.

ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் பரிபூரண ஞானியாகத் திகழ்ந்தார். மஹாஸித்தபுருஷராகவும் இருந்தார். அவருடைய அனுக்ரஹத்திஞல் பலருக்குப் பல இன்னல்கள் நீங்கப்பெற்றன. ஸ்ரீ பாஷ்யஸ்வாமிகள் கூறியுள்ளதுபோல முக்கியமாக ஞானமார்க்கத்தை உபதேசித்துவந்த மஹான் ஜகத்குரு அவர்கள்; அவர்களிடமிருந்து க்ஷுத்ர பலன்களை விரும்புவது அவ்வளவு உசிதம் அல்ல. ''ஸர்வ ஐச்வர்யங்களையும் கொடுக்கக்கூடிய போஜராஜனிடம் சென்று செருப்பு வேண்டுமென்றும், ஊசி வேண்டுமென்றும் கேட்ட மேதாவிகளின் கதைதான் இதெல்லாம்'' என்று ஸ்ரீபாஷ்ய ஸ்வாமிகள் கருதுகின்ருர். சிருங்ககிரி ஸம்ஸ்தானத்தின் பீடாதிபதி என்ற காரணத்தால் ஸ்ரீ மஹாஸ்வாமிகளிடம் தபஸ் ஸித்தி, மந்திர ஸித்தி, யோக ஸித்தி முதலிய எல்லா ஸித்திகளும் பூர்ணமாக இருந்தன என்பது உண்மையே. ஆனுல் இவற்றை அவர் மதிக்கவில்லை, விரும்பவும் இல்லை.

பீடாதிபத்யமே அவருக்கு ஒரு பாரமாகத்தான் தென்பட்டது. தமது குருநாதரின் ஆக்ஞையை சிரமேற்கொண்டு அந்த ஸ்தானத்தை வகித்தார். எவ்வளவு சீக்கிரம் முடிந்ததோ அவ்வளவு சீக்கிரம் அதனின்று விலகிக் கொண்டார்–தக்க சிஷ்யரை அந்த ஸ்தானத்தில் அமர்த்திவிட்டு. ஸ்ரீஸதாசிவ பிரம்மத்திடம் நமது ஸ்வாமிகளுக்குப் பெரிதும் ஈடுபாடு. அவரிடம் காணப்பட்ட ஜீவன்முக்த லக்ஷணங்களெல்லாம் இவரிடம் விளங்கின. வெளிவியவகாரங்களை விட்டு, அந்தர்முக நிலையில் பிரஹ்ம நிஷ்டராய் இருந்தபடியால் ஸ்ரீ மஹாஸ்வாமிகளை உன்மத்தர் என்றுகூடச் சிலர் நினைத்தார்கள்.

உலகக் கண்ணுக்கு பிரஹ்மஞானி உன்மத்தன்தானே! நரஸிம்ம வனத்தில் ஆத்மரதியாய், ஆத்மக்ரீடராய்த் திகழ்ந்த மஹாத்மாவை தரிசித்து, அவரது அருளைப் பெற்ற சிஷ்யர்கள் பரம பாக்யசாலிகள் என்பதில் என்ன ஸந்தேஹம் ?

ஜீவன்முக்த நிலை எப்படிப்பட்டது என்று சாஸ்திரங்களிலிருந்து நாம் அறிகிருேம். ஜீவன்முக்தர்கள் ஸமத்துவத்தை அநுபவிப்பவர்கள், வித்யாசம் சிறிதும் பாராதவர்கள், எங்கும், எல்லாவற்றிலும் (இது நம்முடைய த்வைத பாஷை) அத்விதீய பரவஸ்துவையே காண்பவர்கள். இது முடியுமா என்று நமக்குத் தோன்றும். இந்த ஸந்தேஹத்திற்குப் பின்வரும் கேள்வியால் பதில் அளிக்கிருர் ஸ்ரீ பகவத்பாத சங்கரர்.

कथं हि एकस्य स्वहृदयप्रत्ययं ब्रह्मवेदनं देहधारणं च अपरेण प्रतिक्षेप्तुं शक्यते?

''ஒருவருக்கு தேஹத்திலிருக்கும்பொழுதே ஹ்ருதயத்தில் ஸ்புரிக்கும் பிரஹ்மானுபவத்தை, 'இது முடியாது' என்று எவ்வாறு மற்றவர் ஆக்ஷேபிக்க முடியும்? ''

ஸ்ரீ மஹாஸ்வாமிகளின் ஆத்மானுபவநிலை எப்பேர்ப்பட்டது என்று விளக்க சாஸ்திர வாக்கியங்கள் பலவற்றை லக்ஷண வாக்கியங்களாக காட்டலாம். கீதையில் உள்ள ஒரு சுலோகம் இங்கு தரப்பட்டுள்ளது.

विद्याविनयसंपन्ने ब्राह्मणे गवि हस्तिनि।
शुनि चैव श्वपाके च पण्डिताः समदर्शिनः॥

ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகளைப் போன்ற ஸமதர்சிகளை இக்காலத்திலும் பெற்றது பாரதீயர்களாகிய நம்முடைய பெரும் பாக்கியம் என்றே கருதவேண்டும்.

சென்னை
01-04-1964

✣ ✣ ✣

இளந்துறவி ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்

பதிப்புரை

1912 ஆம் ஆண்டு முதல் 1954 ஆம் ஆண்டு வரை தக்ஷிணாம்னாய சிருங்ககிரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 34 ஆவது ஜகத்குருவாக மிகவும் பிரஸித்தியுடன் விளங்கிய ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் ஸ்ரீ சங்கரர் ஸ்தாபித்த முதல் மடத்தின் அதிபதிகளாக மட்டுமல்லாமல் ஸர்வக்ஞராகவும் ஜீவன்முக்த நிலையை அடைந்துவிட்ட ஒரு ஞானியாகவும் போற்றப்பட்டு எல்லோராலும் வணங்கப்பட்டார்.

அவர் விதேஹமுக்தியடைந்து சுமார் 50 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும் இன்றைக்கும் சிருங்ககிரியிலும் அதன் சுற்றுப்புறம் உள்ள கிராமங்களிலும் வசித்து வரும் சற்று வயதானவர்களிடம் ''நீங்கள் சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளை தரிசனம் செய்திருக்கிறீர்களா ?'' என்று கேட்டால் போதும். உடனே அவர்கள் கைகளை அஞ்ஜலிபந்தமாகக் கூப்பிக்கொண்டு ''ஆஹா! ஸாக்ஷாத் ஸ்ரீ ஈச்வரன் அல்லவா அவர்கள் !'' என்று கூறுவர். அவர்கள் நா தழுதழுக்கும். கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்பும். பக்தி உணர்ச்சியை கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடிய வெகு சிலர் அந்த மஹான் சம்பந்தப்பட்ட ஏதாவது ஒரு நிகழ்ச்சியை நினைவு கூர்ந்து ஆனந்திப்பர்.

உன்னதமான ஸர்வாத்மபாவ நிலையில் தன்னையே மறந்து இருந்து கொண்டிருக்கும் ஒரு ஞானி எந்த சந்தர்ப்பத்தில் என்ன பேசுவார், எப்படி நடந்துக் கொள்ளுவார் என்று முன்கூட்டியே அனுமானிக்க முடியாது. ஆகையால் அந்தப் பக்தர் வர்ணிக்கும் நிகழ்ச்சி அதிசயமானதாகவும் சாதாரண சூழ்நிலையில் எதிர்பார்க்க முடியாததாகவும்தான் இருக்கும். அதைக் கேட்டவுடன் நாமும் மெய்சிலிர்த்து விடுவோம். 'ஆஹா !' என்று பக்திப் பரவசமும் அடைவோம்.

அவருடைய வாழ்க்கை வரலாற்றை கூறும் புத்தகங்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் வந்திருக்கின்றன. Saint of Sringeri, Life and Teachings of Sri Chandrasekhara Bharathi Swamigal, குருராஜ

வைபவம், குருராஜ ஸ்மரணம் போன்ற புத்தகங்களைப் படித்தால் அவருடைய சரித்திரத்தைப் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

அவருடைய ஜனனம், வித்யாப்யாஸம், குருவின் கருணாவீக்ஷணம், ஸந்யாஸ ஆசிரம ஸ்வீகரணம், பட்டாபிஷேகம், சாதனைகள், விதேஹமுக்தி என்று ஒவ்வொன்றும் ஓர் அதிசய நிகழ்ச்சியாகவும் தைவ ஸங்கல்பத்தால் மட்டும் நடந்திருக்கக் கூடியதாகவும் அமைந்துவிட்டன. அவருடைய நாற்பத்திரெண்டு ஆண்டு ஆட்சிகாலத்தின் முன்பாதியில் தென்னிந்தியாவில் (இன்றைய கர்னாடகா, தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில்) பல ஊர்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் விஜயம் செய்து தம்மை நாடி வந்த ஆஸ்திகர்களை அனுக்ரஹித்தார். அந்த சமயங்களில் அவர் ஸனாதன தர்மத்தைப் பற்றியும் சாஸ்திர விஷயமாகவும் பல உபந்யாஸங்களைச் செய்தார்.

''பேசுவதென்றால் அத்யாத்ம விஷயத்தைப் பற்றித்தான் பேச வேண்டும். இல்லாவிட்டால் மௌனமாக இருக்கவேண்டும்'' என்ற கொள்கையை அவர் கடைப்பிடித்தார். பின்னர் அவர் உபந்யாஸங்களைச் செய்வதையும் ஸம்பாஷணைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொள்ளத் தொடங்கினார். அதற்கும் பிறகு சாஸ்திரங்களை முறைப்படி படித்து அதில் உண்மையாக ஏற்பட்டிருக்கக்கூடிய ஸந்தேஹங்களைப் போக்கிக் கொள்ளவேண்டும் என்று ஆதங்கத்துடன் தம்மை நாடி வரும் பக்தர்களை அடையாளம் தெரிந்து கொண்டு அவர்களுடைய சிரத்தைக்குத் தகுந்தவாறு அவகாசம் ஏற்படுத்திக் கொண்டு அவர்களிடம் மட்டும் ஸம்பாஷிப்பது என்று வைத்துக் கொண்டார். காலக்ரமத்தில் அப்படிப்பட்ட ஸம்பாஷணைகளும் நின்று போய் தரிசனம் மட்டும் கொடுப்பது என்று ஆகி, பின்னர் அதுவும் அபூர்வமாயிற்று.

இந்தப் புத்தகத்தில் உள்ள கட்டுரைகளின் விசேஷம் என்னவென்றால் சாஸ்திர விசுவாஸத்துடன் கூடிய சில அறிஞர்களுடன் ஸ்ரீ ஆசார்யர்கள் விஸ்தாரமாகச் செய்த ஸம்பாஷணைகள் இதில் உள்ளன. மற்றும் சிலவற்றில், பின்னால் ஸ்ரீ ஆசார்யர்கள் தமக்குப் பிரதம சிஷ்யராகவும் பீடத்திற்கு வாரிசாகவும் தேர்ந்தெடுத்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர் , ஸ்ரீநிவாஸன் என்ற பெயருடன் பிரம்மச்சாரியாக குருகுலவாஸம் செய்த காலத்தில் அவருக்கு ஸ்ரீ ஆசார்யர்களுடன் தைவாதீனமாக ஏற்பட்ட

ஸம்ஸர்கங்கள் மிகவும் சுவாரஸியத்துடன் வர்ணிக்கப்பட்டுள்ளன. பாலசூரியனுக இருந்த சிஷ்யரின் மேதா விலாஸமும் கருணு மூர்த்தியாக இருந்த குருநாதரின் கிருபா விலாஸமும் இந்தக் கட்டுரைகளிலிருந்து நமக்கு நன்கு விளங்குகின்றன. இவைகளே எல்லாம் நாம் படிக்கும்போது அந்த குருராஜரின் ஸந்நிதியில் நாமும் இருந்ததுபோல நமக்கு ஆனந்தம் உண்டாகிறது.

இந்தக் கட்டுரைகளின் ''லேககர்'' (எழுதியவர்) ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் என்று மரியாதையாக அழைக்கப்பட்ட ஸ்ரீ ஸச்சிதானந்த தீர்த்தர் ஆவார். பூர்வ (பிரம்மசர்ய) ஆசிரமத்தில் அவருடைய பெயர் ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரி. ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள் பீடாதிபதியாக விளங்கிய காலத்தில் ஸ்ரீவைத்யநாத சாஸ்திரி மடத்தின் 'ஸ்ரீ ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ' பாடசாலையில் அத்யாபகராக இருந்து வந்தார். தன்னுடைய உயர்ந்த குணங்கள், ஆசாரம், நியமம், ஞாபக சக்தி ஸம்ஸ்கிருதத்தில் புலமை, கவிதைகளேப் புனேயும் ஸாமர்த்தியம், ரஸிகத்தன்மை இவைகளால் ஸ்ரீ ஆசார்யர்களின் அன்பிற்குப் பாத்திரமாகி அவருக்கு அருகிலேயே வசித்து வரும் பாக்கியமும் பெற்ருர். மேலும் இவர் 'ஸ்ரீநிவாஸன்' என்ற பெயருடன் பாடசாலேயில் இளம் வித்யார்த்தியாக அனுமதிக்கப்பட்டு பின்னுல் முப்பத்தி ஐந்தாவது ஜகத்குருவாக மகோன்னதமாகப் பிரகாசித்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தருடைய பூர்வாச்ரம வித்யாப்யாஸ காலத்தில் அவருக்கு காவியங்களேப் போதித்த ஆசிரியராகவும், பாதுகாவலராகவும் இருந்தார். இவருக்கும் பிரம்மசர்யாசிரமத்திலிருந்து நேராக ஸந்யாஸம் பிராப்தமாயிற்று. பின்னர் மஹாதானபுரம், காசி க்ஷேத்ரம் முதலிய இடங்களுக்குப் போய் பிரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்று சித்தி அடைந்து விட்டார்.

சொல்வன்மை மிகுந்த அவருடைய எழுத்து நடை அவர் வர்ணித்துள்ள சம்பவங்களே நாமும் நேரில் பார்ப்பது போல நமக்குத் தோற்றுவிக்கிறது. முன்யோசனேயுடன் அவர் அவ்வப்போது எடுத்து வைத்துக்கொண்ட குறிப்புகள்தான் கட்டுரை வடிவம் பெற்று நாம் அனுபவித்து பயனடைய வகை செய்கின்றன.

இவர் எழுதிய 'ஸ்ரீ ஜகத்குரு சரிதாம்ருதம்' என்ற காவியம் நான்கு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் புத்தகங்கள் இன்று யாரிடமாவது இருந்தால் அவர் பாக்கியசாலி. இவர் பல ஸ்தோத்ரங்களேயும் தனி சுலோகங்களேயும் இயற்றியுள்ளார். அவைகள் சில இந்தப் புத்தகத்தில் அனுபந்தமாக சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் கட்டுரைகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னுல் எழுதப்பட்டவை. 'ஸ்ரீ சங்கர கிருபா' என்ற பத்திரிகையில் தொடர்ந்து வெளியாயின. பின்னர் இவைகளும் மற்ற பக்தர்கள் எழுதிய கட்டுரைகளும் மூன்று பாகங்களாக வெளியிடப்பட்டன. அவைகளிலிருந்து ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் எழுதியவைகளை மட்டும் திரட்டி இப்போது முதல் பாகமாக புதிய பதிப்பாக வெளியிடுகிறோம். மற்றவர்கள் எழுதிய கட்டுரைகளை இரண்டாவது பாகமாக வெளியிட உத்தேசம்.

இந்தக் கட்டுரைகளில் 'ஸ்ரீ ஸந்நிதானம், ஸ்ரீ மஹாஸந்நிதானம்' போன்ற வார்த்தைகள் ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளையே குறிக்கும்.

இந்தப் புதிய பதிப்பை வெளியிடும் முயற்சிக்கு வழக்கம்போல் உற்சாகமும், ஊக்கமும் அளித்த ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின் அபாரமான கருணைக்குப் பாத்திரமானவரும் சிறந்த குருபக்தருமான ஸ்ரீ R.M. உமேஷ் அவர்களுக்கும், இதை அச்சிட வேண்டிய பொருளுதவியை தாராளமாக வழங்கியுள்ள M/s. M M Forgings Limited, Chennai - 600 032 அவர்களுக்கும் எங்கள் கிருதக்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மிகுந்த சிரத்தையுடனும் பக்தியுடனும் சிரமதானம் செய்து இப்புத்தகம் அழகிய முறையில் அச்சாகி வெளிவர மிகவும் பாடுபட்டு உழைத்துள்ள நண்பர் ஸ்ரீ E.R. இரவிகுமார் அவர்களுக்கும் தேவையான போதெல்லாம் தகுந்த ஆலோசனைகளை வழங்கிய ஸ்ரீ G. இராமசுப்ரமணியன் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

இந்தப் புத்தகத்தை மிகக் குறுகிய காலத்தில் மிக அழகிய வடிவத்தில் அச்சிட்டுத் தந்த Aaral Graphics நிறுவனத்தின் உரிமையாளர் திரு K. நரசிம்மன் அவர்களுக்கும் எங்கள் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்புத்தகம் ஒவ்வொரு ஆஸ்திகர் வீட்டிலும் இருக்கவேண்டும் என்பது எங்கள் அவா.

வித்யாரண்யபுரம்
ஸுபானு ஆண்டு மஹாளய அமாவாஸ்யை
26.09.2003

கே. நாராயணஸ்வாமி

✣ ✣ ✣



ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகள்

ஒப்பற்ற குருவும் இணையற்ற சீடரும்

~ 1 ~

चमत्कृतसुधीचेताश्चन्द्रचूडालसद्गुरुः ।
सच्चिदानन्दतीर्थेऽस्मिन् समुदञ्चयतां दृशौ ॥

ஸமத்க்ருதஸுதீசேதா: சந்த்ரசூடாலஸத்குரு: |
ஸச்சிதாநந்ததீர்த்தேऽஸ்மின் ஸமுதஞ்சயதாம் த்ருசௌ ||

புத்திமான்களின் மனதைக் கவருகின்ற ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குரு இந்த ஸச்சிதானந்த தீர்த்தரிடத்தில் தன் கடாக்ஷத்தைச் செலுத்தட்டும்.

लोकानन्दनचन्द्रशेखरगुरोः श्रीपादपाथोजयोः
छायामाश्रयता दशाधिकतरा नीता मया वत्सराः ।
तत्संस्कारबलेन केवलमहं तद्वाग्झरीविप्रुषाम्
काश्चिद्वा कणिकाः कदापि कलयन्मन्ये हि धन्यां जनिम् ॥

லோகாநந்தன சந்த்ரசேகரகுரோ: ஸ்ரீபாதபாதோஜயோ:
சாயாமாச்ரயதா தசாதிகதரா நீதா மயா வத்ஸரா: |
தத்ஸம்ஸ்காரபலேந கேவலமஹம் தத்வாக்ஜரீவிப்ருஷாம்
காச்சித்வா கணிகா: கதாபி கலயன்மந்யே ஹி தந்யாம் ஜநிம் ||

உலகை ஆனந்தப்படுத்தும் ஸ்ரீ சந்திரசேகர குருவின் திருவடித் தாமரைகளை ஸேவிப்பதிலேயே சுமார் 10 வருஷங்களுக்கு மேலான காலம் சென்றது. அந்த ஸம்ஸ்காரபலத்தால் (அப்பொழுது கிடைத்த) உபதேசாமிருத பிரவாஹத்தில் சில திவிலைகளை நினைத்து பிறவிப் பயனடைந்ததாகக் கருதுகிறேன்.

जीवन्मुक्तिसुखानुभूतिलहरीमामज्यमानान्तरो-
ऽप्यात्मानं जडबालमूकबधिरोन्मत्तादिवद्दर्शयन् ।
योऽयं व्यंजयति क्रमेण भरतादीनां स्थितिं तादृश-
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥

ஜீவந்முக்திஸுகாநுபூதி லஹரீமாமஜ்யமாநாந்தரோ-
ऽப்யாத்மாநம் ஜடபாலமூகபதிரோந்மத்தாதிவத்தர்சயன் ।
யோऽயம் வ்யஞ்ஜயதி க்ரமேண பரதாதீநாம் ஸ்திதிம் தாத்ருச-
ஸ்ரீமச்சந்த்ரகிசோரசேகரகுரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

ஜீவன்முக்திஸுகானுபவ பிரவாஹத்தில் மனது மூழ்கிய போதிலும் தன்னை ஜடன், சிறுவன், ஊமை, செவிடன், பைத்தியக் காரன் இவர்களைப்போல வெளியில் காண்பித்துக் கொண்டு முறையே ஜடபரதர் முதலானவர்களின் நிலைமையைக் காட்டுகிற ஸ்ரீ சந்திரசேகர குருவின் பாதுகைதான் எனக்கு கதி.

நமது ஸ்ரீசங்கரபகவத்பாதாளால் முதலாவதாக ஸ்தாபிக்கப்பட்ட தக்ஷிணாம்நாய சிருங்கேரி சாரதாபீடத்தில் வியாக்யான ஸிம்மாஸனத்தை அலங்கரித்துவந்த நமது குருசரணான ஸ்ரீ மஹாஸந்நிதானத்தை (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகளை) நேரில் கண்டு அவர்கள் கருணையை அநுபவித்தவர்கள் யாவரும் அந்த மூர்த்தியை ஸாமான்ய மனித உருவமாக நினைக்கமாட்டார்கள். அந்த மூர்த்தியை அபிநவ ஸதாசிவப்ரஹ்மம் என்றே சிஷ்யர்களாகிய நாங்கள் கருதியும் வியவஹரித்தும் வந்திருக்கிறோம். இந்த லேககர் பூர்வாசிரமத்தில் ஸ்ரீ ஸந்நிதானத்தில் ஸமர்ப்பித்த ''சித்தானுசாஸநம்'' (चित्तानुशासनम्) என்ற குருஸ்துதியில் இதை விளக்கியிருக்கிறார்.

अधिष्ठानीभूतं तव हृदय यन्मानुषवपुः
  यदृच्छाप्राप्तं त्वं किमिति विफलं नाम कुरुषे ।
इदानीमेतत्त्वं विफलयसि चेदीदृशमहो
  कदा ते लभ्यं स्यादिति विमृश किंचित्करुणया ॥१९॥

அதிஷ்டாநீபூதம் தவ ஹ்ருதய யந்மாநுஷவபு:
யத்ருச்சாப்ராப்தம் த்வம் கிமிதி விபலம் நாம குருஷே ।
இதாநீமேதத்த்வம் விபலயஸி சேதீத்ருசமஹோ
கதா தே லப்யம் ஸ்யாதிதி விம்ருச கிஞ்சித்கருணயா ॥ (19)

ஏ மனமே, நீ தங்குவதற்கு இடமான இந்த மனித சரீரம் யத்ருச்சையாக உனக்குக் கிடைத்திருக்கிறது. இதை ஏன் வீணாக்குகிறாய். இப்பொழுது இதை வீணாக்கினால் இம்மாதிரியான

சரீரம் மறுபடியும் எப்பொழுது கிடைக்குமென்பதைக் கொஞ்சம் ஆலோசித்துப்பார்.

कुतस्त्योऽहं कोऽहं क्वच पुनरिदानीं स्थितिरियं
मया किं कर्तव्यं जगति मम का स्याद्गतिरिति ।
विमर्शं चेद्भ्रातर्न खलु कुरुषे तर्हि भवतः
पशुभ्यो वैशिष्ट्यं किमिव भविता जाड्यजलधे ॥२०॥

குதஸ்த்யோऽஹம் கோऽஹம் க்வச புநரிதாநீம் ஸ்திதிரியம்
மயா கிம் கர்த்தவ்யம் ஜகதி மம கா ஸ்யாத் கதிரிதி ।
விமர்சம் சேத்ப்ராத: ந கலு குருஷே தர்ஹி பவத:
பசுப்யோ வைசிஷ்ட்யம் கிமிவ பவிதா ஜாட்யஜலதே ॥ (20)

நான் எங்கிருந்து வந்தேன்? நான் யார்? எங்கு இருக்கிறேன்? நான் என்ன செய்யவேண்டும்? இவ்வுலகில் எனக்கு யார் கதி? என்பதை ஆராய்ந்து பார்க்காவிட்டால் தம்பி! ஜாட்யத்திற்கு இருப்பிடமான மனமே! உனக்கு பசுக்களைவிட மேன்மை எவ்விதம் உண்டாகும்?

नवीनं ब्रह्मेन्द्रं किमु कलयसे मानुषमिमं
सखे मैवं मंस्थाः किमपि तु महः शांभवमिदम् ।
तदीदृक्सांनिध्ये नियतसहवासेऽप्युपनते
कुतो जन्मैवेदं सफलमिति नाद्यापि मनुषे ॥२१॥

நவீநம் ப்ரஹ்மேந்த்ரம் கிமு கலயஸே மாநுஷமிமம்
ஸகே மைவம் மம்ஸ்த்தா: கிமபி து மஹ: சாம்பவமிதம் ॥
ததீத்ருக்ஸாந்நித்யே நியதஸஹவாஸேऽப்யுபநதே
குதோ ஜந்மைவேதம் ஸபலமிதி நாத்யாபி மநுஷே ॥ (21)

புதிய ப்ரஹ்மேந்த்ராளான ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸத்குருவை ஸாமான்ய மனிதனுக எண்ணுதே. இவர் பரமேசுவரனின் அம்சம். இவர் அருகில் வாஸம்செய்யும் பாக்யம் கிடைத்த பிறகும்கூட இந்த ஜன்மா ஸபலம் என்று ஏன் தோன்றவில்லை?

இந்த கிரந்தம் முழுவதையும் படிக்கச் சொல்லிக் கேட்டு நமது ஸந்நிதானம் (ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்) மந்தஹாஸத்துடன் இந்த லேககனுக்கு அருளிய அபயப்ரதான வரலாற்றை நினைத்துப்

பார்த்தால் இப்பொழுதும் மயிர்க்கூச்சலும் ஆனந்த பாஷ்பமும் கூடிய பரவச நிலைதான் ஏற்படுகிறது.

ஸ்ரீஸதாசிவபிரஹ்மத்தினிடமிருந்த ஜீவன்முக்த லக்ஷணங்கள் எல்லாம் இந்த குரு மூர்த்தியினிடம் பால்யம் முதற்கொண்டே அமைந்திருந்ததை அக்காலத்திலுள்ள பெரியோர்கள் வர்ணித்துச் சொல்வதை இந்த லேககர் சிருங்கேரிவாஸ காலத்தில் அநேகம் தடவை கேட்டுப் பரவசமடைந்துள்ளார். பூர்வாசிரமத்தில் நரஸிம்மசாஸ்திரி என்று பெயர் பெற்ற இந்த மஹான் பால்யத்தில் தனது தாய் தந்தையர்களைத் தெய்வமாக நினைத்து அளவற்ற சுசுரூஷைகளைச் செய்து *மாத்ருதேவோபவ, பித்ருதேவோ பவ* (मातृदेवो भव पितृदेवो भव) என்ற சுருதி வாக்கியங்களுக்கு முதல் உதாஹரணமாக விளங்கினர். லக்ஷ்மியம்மாள் என்ற அவரது தாயாருக்குப் பிறந்த 13 குழந்தைகளும் அல்பாயுஸ்ஸாய்போய் 14வது புத்திரனுக இந்த நரஸிம்ம சாஸ்திரி பிறந்தார். இவர் ஓர் அவதார புருஷர்தான் என்பதற்கு பிரமாணம் இதொன்றே போதுமானது. பால்யத்திலிருந்தே பையன் குணசாலியாயிருப்பதைக் கண்டு பெற்ருேர்கள் மிக மகிழ்ச்சியடைந்தாலும் மற்ற குழந்தைகளைப் போலல்லாமல் நல்ல தீர்க்காயுஷ்மானுக இருக்கவேண்டுமே என்ற கவலையினுல் அந்த மகிழ்ச்சியை பூர்ணமாக அனுபவிக்க முடியவில்லை.

ஒரு நாள் சிருங்கேரி கடைவீதிக்கு ஏதோ சாமான் வாங்கிவருவதற்காகச் சென்றவர் வழக்கம்போல் மூகபஞ்சசதி சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே, வந்த காரியத்தை மறந்து கடைவீதியைத் தாண்டி வெகுதூரம் சென்று விட்டார். அங்கு எதிரே வந்த ஒரு பெரியவர் பையனைப் பார்த்து ''ஊரை விட்டு எங்கே வந்தாய்?'' என்று கேட்கவே ''இப்பொழுது மூகபஞ்சசதியில் 50வது சுலோகத்துக்கு வந்திருக்கிறேன்'' என்ருர். வந்தவர் சிரித்துக் கொண்டே பையனை அழைத்துக் கொண்டு ஸாமான்களுடன் வீட்டில் கொண்டு வந்து விட்டார். இவ்விதம் தன் தேஹஸ்மரணையேயில்லாத வரலாறுகள் ஒன்றல்ல இரண்டல்ல. அவரது ஜலஸமாதி வரையிலுள்ள லீலைகளெல்லாம் இப்பேர்ப்பட்ட ஜடபரத சரித்திரமாகவேதானிருக்கும். இப்பேர்ப்பட்ட மஹான்கள் ஸ்ரீஸதாசிவ ப்ரஹ்மம் தோன்றியதுபோல் ஏதோ அபூர்வமாகத்தான் தென்படுவார்கள். இந்த மூர்த்திகளைப் பார்த்தால் பிராகிருத

ஜனங்களுக்கு பைத்தியம்போலவும் மூடன் போலவும்தான் தோன்றும். இதைத்தான் ப்ரஹ்மேந்திராள்

तिष्ठन् परतरधाम्नि स्वीयसुखास्वादपरवशः कश्चित् ।
क्वापि ध्यायति कुहचिद्गायति कुत्रापि नृत्यति स्वैरम् ॥

திஷ்டன் பரதர தாம்நி ஸ்வீயஸுகாஸ்வாதபரவச: கச்சித் |
க்வாபி த்யாயதி குஹசித் காயதி குத்ராபி ந்ருத்யதி ஸ்வைரம் ||

(ப்ரஹ்மத்தில் நின்று ஆத்மானந்தத்தை அநுபவித்துக் கொண்டு மெய்மறந்த நிலையில் ஒருவர் ஓர் இடத்தில் த்யானிக்கிறார், மற்றோரிடம் பாடுகிறார், வேறொரு இடத்தில் கூத்தாடுகிறார்.)

என்று (आत्मविद्याविलास) ஆத்மவித்யாவிலாஸத்தில் ஜீவன்முக்த லீலையை வர்ணிக்கிறார்.

பிரஹ்மேந்திராள் தான் அனுபவித்து எழுதிய அனுபவ நூலான ஆத்மவித்யாவிலாஸம் பூராவும் நமது குருசரணாளுக்கு முகஸ்தம். ஏகாந்தம் கிடைக்கும்போதெல்லாம் இதைத்தான் ஸதா கானம் செய்து கொண்டிருப்பார்கள். சிருங்கேரியில் துங்கபத்ரா நதியின் அக்கரையில் நரஸிம்ம வனம் மலைமீது ஏறிச் சென்றால் மலை உச்சியில் கால பைரவ ஆலயம் தென்படும். நமது குருசரணாள் ஸாயங்காலங்களில் பிரதி தினமும் விச்ராந்திக்காக பாதசாரிகளாக அங்கு சென்று வருவது வழக்கம். அவ்விதம் செல்லும்போது சில நாட்களில் முக்கியமான சில யதீச்வரர்களையும் அந்தரங்கமான விரக்த சிஷ்யர்களையும் மாத்திரம் கூட அழைத்துக் கொண்டு அந்தாதி சுலோகங்களை சொல்லிக்கொண்டே போவார்கள். சிஷ்யர்களாகிய நாங்களும் அவரது கட்டளைப்படி அந்தாதி சுலோகங்கள் சொல்வது வழக்கம். அந்த ஸமயங்களில் வைராக்யபரமான சுலோகங்கள் சொன்னால் பரமானந்தப்படுவார்கள். இந்த லேககனிடம் அவருக்குக் கருணை ஏற்படுவதற்குள்ள காரணங்களில் இந்த அந்தாதி சுலோகப்பழக்கம்தான் முக்கியமானது. சித்தானுமாஸநம், சாந்திதரங்கிணீ, வைராக்யதரங்கிணீ முதலிய தானே இயற்றிய நூல்களிலிருந்தும் மற்றும் வைராக்யசதகம், சாந்திவிலாஸம் முதலியவற்றிலிருந்தும் வைராக்யபரமான சுலோகங்களை எடுத்துச் சொல்லும்பொழுது அதை பரமஸந்தோஷத்துடன் அபினந்தனம் செய்து உத்ஸாஹமூட்டுவார்கள். அந்தாதி முடிந்தவுடன்

ஆலயத்திற்குள்ளேயே உட்கார்ந்து சிஷ்யர்களையும் உட்கார வைத்து ஆத்மவித்யாவிலாஸம் பூராவையும் தனித்தனியாகச் சொல்லச்சொல்லிக் கேட்பார்கள். இப்படியே ஸ்வாத்மநிரூபணம் முதலிய லளிதமான ஆசார்யப்ரகரண க்ரந்த சுலோகங்களையும் சொல்லச் சொல்லிக் கேட்பார்கள். அந்த சுலோகங்களின் அர்த்தத்தை அனுஸந்தானம் செய்தபடியே மெய்மறந்து ஆனந்த பாஷ்பத்துடன் ஞானச்சுடராக விளங்குவதைப் பார்க்கவே கோடிபுண்ணியம் செய்திருக்கவேண்டும். இது எல்லோருக்கும் கிடைக்காது. விரக்தர்களும் ஸன்யாஸிகளுமான எங்களைத் தவிர மற்றவர்களுக்கு அந்த ஸமயம் பிரவேசமே கிடையாது. இவ்விதம் கிருஷ்ணபரமாத்மாவுடன் கோபாலர்கள் கூடிக் குலாவி ஆனந்தித்தது போல் அந்தரங்க சிஷ்யர்களான நாங்கள் அந்த நாட்களில் ஒரே ஆனந்த வெள்ளத்தில் மிதந்தோமென்றால் இது அதிசயோக்தியாகாது. ते हि नो दिवसा गताः ! அந்த நாட்கள் சென்றுவிட்டன. இனிமேல் வரப்போவதில்லை.

இவ்விதம் சிருங்கேரியில் காலபைரவ ஆலயத்திற்குச் சென்று வருவதும் அதுஸமயம் ஆசார்யாளுடன் கூடவே சிஷ்யர்கள் அந்தாதி சொல்லிக்கொண்டு போவதும் ஏற்கெனவேயுள்ள வழக்கம்தான். நமது பரமகுருநாதாளான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகளவர்கள் காலத்திலும் இந்த வழக்கமிருந்துவந்தது. ஒரு நாள் முன் சொன்ன நரஸிம்ம சாஸ்திரி, மஹாராஷ்டிரர்களான மார்க்கண்டேய பிரம்மசாரி, கேசவபட்டஜி என்ற மூவர் மாத்திரம் சென்றிருந்தார்கள். அதில் கேசவபட்டஜி என்பது இந்த லேககரின் ஆசிரம குருவாகிய ஸ்ரீ சிவானந்த தீர்த்தாளின் பூர்வாசிரமப் பெயர். இந்த மூவரையும் அந்தாதி சுலோக முடிவில் உட்காரச்சொல்லி கேசவபட்டஜியைப் பார்த்து ''ஏ ! பட்டஜி, நான் சொல்வதை காகிதத்தில் எழுதிக்கொள்'' என்று சொல்லி சில சுலோகங்களை (अन्यापदेश) அன்யாபதேசமாக, அதாவது நரஸிம்ம சாஸ்திரிக்கு மட்டும் அதன் கூடார்த்தம் விளங்கும்படியும் மற்றவருக்குப் புரியாதபடியும் சொல்லி எழுத உத்தரவிட்டார். எழுதியவருக்கு ஒன்றுமே புரியவில்லை. ஏதோ புதிர்போல் இருந்தது. ஆனாலும் குருமுகத்திலிருந்து வந்திருப்பதால் அதைக் காப்பாற்ற வேண்டும் என்று மாத்திரம் நினைத்துப் பத்திரப்படுத்தி வைத்திருந்தார். இது விஷயம் வேறு ஒருவரிடமும் பிரஸ்தாபிக்கவுமில்லை. மார்கண்டேய

பிரம்மசாரி என்பவரும் தன் தேசத்துக்குச் சென்று விட்டார். ஆகையால் இந்த ரஹஸ்யம் நரஸிம்மசாஸ்திரிக்கும் கேசவபட்டஜிக்கும் மாத்திரமே தெரிந்திருந்தது. பரமகுருநாதாளும் இந்த நரஸிம்ம சாஸ்திரியை (प्रौढविद्याभ्यास) ப்ரௌட வித்யாப்யாஸ மேல் படிப்புக்காக பெங்களூர் செல்லும்படி உத்தரவிட்டபடியால் அவர் தம் பெற்றோர்களுடன் பெங்களூரிலேயே வஸித்து வந்தார். ஸ்ரீஸந்நிதானம் எந்த நோக்கத்துடன் அவரை பெங்களூருக்கு அனுப்பினுர் என்பது தேவரஹஸ்யம்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நமது பரமகுருநாதாளும் திடீரென்று விதேஹமுக்தி யடைந்துவிட்டார்கள். ஸித்தியடைந்தவுடன் அடுத்த பீடாதிபதியாக யாரை நியமனம் செய்வது என்ற பிரச்னை வந்தபொழுது அங்கே உக்ரநரஸிம்ஹபாரதீ ஸ்வாமிகளின் பூர்வாச்ரம வம்சத்தைச் சேர்ந்த ஒருவரைத்தான் நியமிக்க வேண்டுமென்று பலர் முறையிட்டார்கள். பாத்யமும் கொண்டாடினுர்கள். பரமகுருநாதாள் ஏற்கெனவே ஸ்ரீகண்டசாஸ்திரிகளிடம் நரஸிம்ஹ சாஸ்திரியைத்தான் நியமிக்க வேண்டும் என்று ரஹஸ்யமாகச் சொல்லியிருந்தபோதிலும் ஸந்நிதானம் பகிரங்கமாகத் தன் அபிப்ராயத்தை வெளியிடாதபடியால் குழப்பம் ஏற்பட்டது. மஹாஸந்நிதானத்தின் அபிப்ராயத்தை ஸ்ரீகண்டசாஸ்திரிகள் எடுத்துச் சொல்லியும் அதை மற்றவர்கள் நம்பவில்லை. எழுத்து மூலமான பிரமாணமோ ஸாக்ஷியமோ இல்லாதபடியால் இது அவரது கல்பனையென்றே அவர்கள் வாதித்தார்கள். ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் சொல்வதை லக்ஷ்யம் செய்யாமல், நமது பரமாசார்யாளுக்கும் குருவான உக்ரநரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளுடைய பூர்வாச்ரம ஸம்பந்தம் என்ற காரணத்தால் விசேஷபாத்தியதையும் கொண்டாடினுர்கள். அந்தக் கக்ஷியாரின் விருப்பப்படியே நடந்துவிடுமோ என்று பலரும் அஞ்சினுர்கள். ஆனுல் அந்த பரமகுருநாதாள் வெகுகாலத்துக்கு முன் தர்சனத்துக்காக விஜயம் செய்திருந்த மைசூர் மஹாராஜாவிடம் தன் அபிப்ராயத்தைத் தெரிவித்திருந்தபடியாலும் கேசவபட்டஜி எழுதிவைத்திருந்த சுலோகங்களாலும் எல்லோருடைய அபிலாஷையும் பூர்த்தியாயிற்று. அந்த ஸமயத்தில் கேசவபட்டஜி என்பவர் (பின்னுல் துரீயாச்ரமம் பெற்று சிவாநந்ததீர்த்தர் என்று யோகப்பட்டம் பெற்றவர், இந்த லேககரின் ஆசிரம குரு) முன்வந்து காலபைரவாலயத்தில் நடந்த

விவரங்களையும் ஸ்ரீ ஸந்நிதானம் எழுதச்சொன்ன சுலோகங்களையும் வெளியிட்ட பிறகுதான் பரமகுருநாதாளின் அபிப்ராயம் உலகத்திற்கு ஸ்பஷ்டமாகத் தெரியவந்தது. அந்த கேசவ பட்டஜிக்கும் அதுவரையில் புரியாதிருந்த புதிரும் அன்றைக்குத்தான் விளங்கிற்று. அந்த சமயம் பெங்களூர் சங்கரமடத்திலிருந்த ஸ்ரீ நரஸிம்ஹசாஸ்திரிக்கு எல்லாம் தெரிந்தும் ஒன்றும் தெரியாதது போலவே சும்மாயிருந்து விட்டார். இந்த விஷயமெல்லாம் இந்த லேககர் தன் ஆசிரமகுருவாகிய ஸ்ரீ சிவானந்தர் மூலமாகவே கேள்விப்பட்டிருப்பதால் இதில் ஸந்தேஹத்திற்கிடமில்லை.

காலபைரவ ஆலயத்தில் பரமகுருநாதாள் எழுதச்சொன்ன சுலோகங்கள்:

संसारनामकसरिन्नाथोत्तरणे तवास्ति यदि वांछा ।
बालक शृणु मद्वचनं श्रुतिमस्तकसंमितं शुभोदर्कम् ॥

स्वीकृतपारमहंस्यः स्थिरतरसाधनचतुष्टयोपेतः ।
श्रद्धाभक्तियुतात्मा प्रविचारय तत्वमात्मनः सुचिरम् ॥

ஸம்ஸாரநாமகஸரிந்நாத்தோத்தரணே தவாஸ்தி யதி வாஞ்ச்சா ।
பாலக ச்ருணு மத்வசநம் ச்ருதிமஸ்தகஸம்மிதம் சுபோதர்கம் ॥

ஸ்வீக்ருதபாரமஹம்ஸ்ய: ஸ்திரதரஸாதநசதுஷ்டயோபேத: ।
ச்ரத்தாபக்தியுதாத்மா ப்ரவிசாரய தத்வமாத்மந: ஸுசிரம் ॥

(சிறுவனே, ஸம்ஸாரமென்ற கடலைத்தாண்ட உனக்கு ஆசை இருக்குமானால் உபநிஷத்துக்கள் ஒப்புக்கொண்டதும் பின்னால் நன்மை பயப்பதுமான என் வார்த்தையைக்கேள். ஸந்யாஸாச்ரம ஸ்வீகாரம் செய்துகொண்டு உறுதியாக நான்கு ஸாதனங்களையுமடைந்து சிரத்தாபக்தியுடன் ஆத்ம தத்துவத்தை வெகுகாலம் விசாரணைச்செய்.)

இதுமுதலான பத்து சுலோகங்களால் தன் அந்தரங்க அபிப்ராயத்தை நரஸிம்ம சாஸ்திரிக்குத் தெரிவித்து ஆசீர்வதித்திருக்கிறார்கள்.

தவிரவும் நமது பரமகுருநாதாள் அருளிய அம்பா ஸ்தோத்திரத்திலிருந்தும் அவரது அபிப்ராயம் ஸ்பஷ்டமாகத்

தெரிகிறது. நரஸிம்ம சாஸ்திரிக்குத்தான் அடுத்த பட்டத்தில் அதிகாரம் என்பதை அதில் அம்பாளுக்குத் தெரிவித்திருக்கிருர்கள்.

सर्वज्ञं श्रीनृसिंहं कुरु शिवदयिते सत्वरं मद्विनम्रम् ।

ஸர்வக்ஞம் ஸ்ரீ ந்ருஸிம்ஹம் குரு சிவதயிதே ஸத்வரம் மத்விநம்ரம் ।

இதனுல் தனது சிஷ்யனுக வரப்போகும் நரஸிம்ம சாஸ்திரியை ஸர்வக்ஞனுகச் செய்யும்படி அம்பாளை பிரார்த்தித்திருக்கிருர். இந்த லேககர் தான் எழுதிய சந்திரசேகர பாரதீ விஜயத்திலும் இதை விவரித்திருக்கிருர்.

सर्वज्ञं श्रीनृसिंहं कुरु सततमिति प्रार्थयन् पूर्वमंबां
स्वात्मानं श्रीनृसिंहं वटुमपि कलयामास तादात्म्यभावात् ।
तत्तादृक्प्रार्थनातो नरहरिगुरुराडात्मना साकमादौ
सर्वज्ञं यं वितेने स खलु यतिपतिश्चन्द्रचूडो गुरुर्नः ॥

ஸர்வக்ஞம் ஸ்ரீ ந்ருஸிம்ஹம் குரு ஸததமிதி ப்ரார்த்தயந் பூர்வமம்பாம்
ஸ்வாத்மாநம் ஸ்ரீந்ருஸிம்ஹம் வடுமபி கலயாமாஸ தாதாத்ம்யபாவாத் ।
தத்தாத்ருக்ப்ரார்த்தனுதோ நரஹரி குருராடாத்மநா ஸாகமாதௌ
ஸர்வக்ஞம் யம் விதேநே ஸ கலு யதிபதிச்சந்த்ரசூடோ குருர்ந: ॥

அம்பாளைப் பார்த்து ஆசார்யாள் பிரார்த்திக்கிருர்:–

'' ஹே அம்பிகே! நரஸிம்மனை ஸர்வக்ஞனுகச் செய்வாய். என் சிஷ்யனையும் ஸர்வக்ஞ மூர்த்தியாகச் செய்தருள வேண்டும்''. அதாவது நரஸிம்மன் என்ற பதமானது நரஸிம்மபாரதீ என்ற தன்னிடமும் நரஸிம்ம சாஸ்திரி என்ற சிஷ்யனிடமும் இரண்டிடங்களிலும் அன்வயிப்பதால் தன்னையும் நரஸிம்மன் என்ற வடுவையும் நரஸிம்ம பதத்தால் ஐக்யப்படுத்தி இருவரையும் ஸர்வக்ஞ மூர்த்திகளாகச் செய்ய வேண்டுமென்று அம்பாளை பிரார்த்தனை செய்திருக்கிருர் என்று விளங்குகிறது. அந்த மஹான்

பிரார்த்தித்தது வீணுகுமா? ஆகையால் தன்னைப்போலவே தன் பீடாதிகாரத்திற்கு வரப்போகிற சிஷ்யனையும் அம்பாளின் அருளால் ஸர்வக்ஞ மூர்த்தியாகச் செய்துவிட்டார் போலும். இவ்விதம் அம்பாளுடையவும் குருவினுடையவும் அனுக்ரஹ விசேஷத்தால் ஸர்வக்ஞபாவத்தைப்பெற்ற அபிநவ ஸதாசிவ பிரஹ்மத்தை குருவாக அடைவதற்கு என்ன ஸுகிருதம் செய்தோமோ! நாம் கிருதார்த்தர்கள்தான். *ஸர்வக்ஞம் யம் விதேனே* सर्वज्ञं यं वितेने என்ற பதங்களின் சேர்க்கையால் நமது ஆதி ஆசார்யாள் ஸர்வக்ஞபீடா ரோஹணம் செய்ததுபோல நமது குருசரணுளும் ஸர்வக்ஞ பீடம்போன்ற சாரதா பீடத்தை அலங்கரித்து வந்தார்கள் என்ற அர்த்தமும் த்வனிக்கிறது.

13வது சுலோகம் பின்வருமாறு:

सर्वज्ञो यः प्रसिद्धः श्रुतिषु जगति वा सोऽपि कैलासनाथः
ज्ञानाख्यां चन्द्रलेखां शिरसि कलयते चन्द्रचूडोऽस्ति तस्मात् ।
तुल्यं शंभोर्गुरोर्वा सहजमिह परब्रह्मविद्याधिपत्वं
भेदं नो विद्महेऽस्मद्गुरुपरशिवयोः नामतोऽप्यर्थतो वा ॥

ஸர்வக்ஞோ ய: ப்ரஸித்த: ச்ருதிஷு ஜகதி வா ஸோऽபி கைலாஸநாத:
ஞானக்யாம் சந்த்ரலேகாம் சிரஸி கலயதே சந்த்ரசூடோऽஸ்தி தஸ்மாத் ।
துல்யம் சம்போர் குரோர்வா ஸஹஜமிஹ பரப்ரஹ்ம வித்யாதிபத்வம்
பேதம் நோ வித்மஹேऽஸ்மத்குருபரசிவயோ: நாமதோऽப்யர்த்ததோ வா ॥

உலகத்தில் ஸர்வக்ஞன் என்ற பெயர் பரமசிவனுக்குத்தான் அஸாதாரணமானது. ஏனென்ருல் कृशानुरेताः सर्वज्ञः என்ற அமரகோசம் முதலிய நிகண்டுக்களில் ஸர்வக்ஞபதம் சிவபெருமானுடைய பர்யாயபதமாகவே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியே ईशानः सर्वविद्यानाम् முதலிய சுருதி வாக்கியங்களும் பரமசிவனையே ஸர்வக்ஞ மூர்த்தியாக கோஷிக்கின்றன. நமது குருசரணுளும் மேற்சொன்னபடி ஸர்வக்ஞ மூர்த்தியாயிருப்பதால்

सर्वज्ञत्वम् என்ற விஷயத்தில் குருவுக்கும் சிவனுக்கும் வேற்றுமை கண்டுபிடிக்க முடியவில்லே. இவ்விதமே பரமசிவனே சந்திரசேகரன் என்று அழைப்பார்கள். ஏனென்ருல் சிரஸில் சந்திரகலேயை தரித்துக்கொண்டிருக்கிருர். நமது குருசரணுளோ ஞானம் என்ற சந்திரகலேயை தரித்துக்கொண்டிருக்கிருர். ஆகவே சந்திரசேகரன் என்ற பெயரும் अन्वर्थ மாகவே இருவருக்கும் பொருந்தும். கடோபநிஷத்தில் வர்ணிக்கப்பட்ட பிரஹ்மவித்யாஸ்வரூபிணியான உமாதேவியை பரமசிவன் தழுவிக்கொண்டிருக்கிருர். ஆகையால் பிரஹ்மவித்யாம்பிகைக்குப் பதியாக விளங்குகிருர். நமது குருசரணுளோ குரு அம்பாள் அனுக்கிரஹ விசேஷத்தால் பர ப்ரஹ்மத்தின் அபரோக்ஷ ஸாக்ஷாத்காரத்தையடைந்து ब्रह्मविद्यापति யாக விளங்குகிருர். இவ்விதம் सर्वज्ञत्वं, चन्द्रशेखरत्वम्, ब्रह्मविद्यापतित्वं, முதலிய எல்லா விஷயங்களிலும் இருவரும் ஸமமாகவேயிருப்பதால் சப்தத்தாலோ அர்த்தத்தாலோ ஒருவிதத்திலும் குருவுக்கும் சிவனுக்கும் வித்யாஸத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லேயே! ஆகையால் நமது குருசரணுள் ஸாக்ஷாத் பரமசிவ அவதாரம்தான் என்று சொல்வதில் என்ன ஸந்தேஹம்?

இப்பேர்ப்பட்ட மஹான்களின் மஹிமைகளே அவரது ஜீவன்முக்த லீலேகளே வைத்துக்கொண்டுதான் பார்க்க வேண்டும். ஆனுல் இந்தப் பெருமைகளே அறிந்துகொள்ள முடியாத சிலர் அவரது தபஸ், மந்திர சக்தி இவைகளால் யார் யார் என்ன என்ன அபீஷ்டங்களே அடைந்திருக்கிருர்கள் என்றுதான் கேட்பது வழக்கமாய்விட்டது. ஞான மார்க்கத்தையே உபதேசிக்க வந்த மஹான்களிடம் க்ஷுத்ர விஷயங்களே எதிர்பார்ப்பது எவ்வளவு மதியீனம்! ஸர்வ ஐச்வர்யங்களேயும் கொடுக்கக்கூடிய போஜராஜனிடம் சென்று செருப்பு வேண்டுமென்றும் ஊசி வேண்டுமென்றும் கேட்ட மேதாவிகளின் கதைதான் இதெல்லாம். நமது குருசரணுள் ஒரு ஸம்ஸ்தானத்தில் பீடாதிபதியாயிருந்தபடியால் அந்த ஸ்தானத்துக்குத் தகுந்தபடி அவர்களுக்கு தபஸ்ஸித்தி, மந்திரஸித்தி, யோகஸித்தி முதலான எல்லா மஹிமைகளும் பூர்ணமாகத்தான் இருந்தன. ஆனுலும் அந்த ஸித்திகளேயெல்லாம் வெறுக்கத்தான் செய்தார்கள்.

न योगसिद्धीरपुनर्भवं वा वाञ्छन्ति मत्पादयुगं प्रपन्नाः ।

ந யோகஸித்தீரபுநர்பவம் வா வாஞ்ச்சந்தி மத்பாதயுகம் ப்ரபந்நா: ।

என்று பாகவதத்தில் சொன்ன ப்ரகாரம் அந்த ஸித்திகளையெல்லாம் தன்னுடைய ஞான மார்க்கத்துக்கு இடைஞ்சலாகவே எண்ணி வந்தார்கள். மந்திரவாத விஷயங்களையும் இவ்விதமே அதிதுச்சமாகவே கருதிவந்தார்கள். உதாஹரணமாக பாஷ்ய பாடம் நடந்துவருகையில் சில சிஷ்யர்களுக்கு மந்திர சாஸ்திர ப்ரமம் இருந்ததை அறிந்து கொண்டு அதை விலக்குவதற்காக அடிக்கடி அதன் கெடுதலைப்பற்றிக் கூறுவார்கள்.

उत्तमा तत्वचिन्ता स्यात् मध्यमं शास्त्रचिन्तनम् ।
अधमा मन्त्रचिन्ता स्यात् तीर्थभ्रान्तिस्ततोऽधमा ॥

உத்தமா தத்வசிந்தா ஸ்யாத் மத்யமம் சாஸ்த்ரசிந்தநம் ।
அதமா மந்த்ரசிந்தா ஸ்யாத் தீர்த்தப்ராந்திஸ்ததோ஽தமா ॥

என்பது போன்ற வாக்கியங்களைக் காட்டி விளக்குவார்கள். அதாவது ''தத்துவவிசாரம் முக்கியம். அதையே சிஷ்யர்களாகிய நீங்கள் செய்யவேண்டும். அது முடியவில்லையென்றால் சாஸ்திர விசாரமாவது செய்து ஆனந்தமாகக் காலக்ஷேபம் செய்யலாமே. இவ்விரண்டிலும் யோக்யதை இல்லாதவர்களல்லவோ மந்திர விசாரத்துக்குப் போகவேண்டும். அப்படி மந்திர சாஸ்திரத்தில் புகுந்தாலும் அதனால் அந்த மந்திர பிரயோகங்களால் உங்களுக்கு என்ன பலன்? மற்றவர்கள்தான் உங்களது மந்திர பிரயோகத்தால் பலன் அடைவார்கள். ஆத்மார்த்தமாக வேண்டிய மந்திரங்கள் காயத்ரீ, பஞ்சாக்ஷரம் முதலானவைகளோ உங்களிடம் இருக்கின்றன. மற்ற மந்திரங்களை புரச்சரணம் செய்வது ஞானாதிகாரிகளுக்கு அனாவசியம்'' என்றெல்லாம் உபதேசிப்பார்கள். ''அவர் விபூதி கொடுத்தார், வியாதி ஸ்வஸ்தமாய்விட்டது. ஆகையால் அவர் மஹான்'', என்று சொல்வதும் எழுதுவதும் அவரது பெருமையைக் காட்டாது. அவ்விதம் சொல்வது நமது ஞானகுருவாயிருப்பவரை ஏதோ ஒரு மந்திரவாதியாக மதிப்பிடுவதால் பெருமையாகக் கருத முடியாது. ஆகையால் தான் அந்த விஷயங்களையெல்லாம் விட்டு அவரது ஞான மஹிமையை மாத்திரம் இந்தக் கட்டுரையில் விளக்குகிறோம்.

ஸ்ரீ ஸதாசிவ பிரஹ்மத்தினிடமிருந்த ஜீவன்முக்த லக்ஷணங்களெல்லாம் நமது குருசரணாளிடத்திலும் பூர்ணமாகப்

பொலிந்து காணப்பட்டதை உணர்ந்தவர்கள் வெகுசிலரே. இந்த லேககர் எழுதிய ஸத்குருபாதுகாஸ்தவராஜம் என்ற குரு ஸ்துதியில் அவை நன்ருக விளக்கப்பட்டிருக்கின்றன. அந்த குருஸ்துதியின் கடைசி சுலோகம் பின்வருமாறு:-

आलापैरनवद्यसूक्तिभरितैरानन्दसन्दायिभिः
ब्रह्मात्मानुभवप्रकाशनपरैः स्वैरोद्गतैः सुस्वरैः ।
बालोन्मत्तविडंबनव्यतिकरे व्यावृण्वतो नैपुणीं
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥

ஆலாபைரநவத்யஸூக்திபரிதைராநந்தஸந்தாயிபி:
ப்ரஹ்மாத்மாநுபவப்ரகாசநபரை: ஸ்வைரோத்கதை: ஸூஸ்வரை: |
பாலோந்மத்தவிடம்பநவ்யதிகரே வ்யாவ்ருண்வதோ நைபுணீம்
ஸ்ரீமச்சந்த்ரகிசோரசேகரகுரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ||

(ஆனந்தத்தைக் கொடுப்பதும், குற்றமற்ற வார்த்தைகள் நிரம்பியதும், ஆத்மாநுபவத்தை வெளிக்காட்டுவதும், இஷ்டப்படி வெளி வந்ததும், நல்ல த்வனியுள்ளதுமான பேச்சுக்களால் பாலனேயும் உந்மத்தனேயும் போல நடந்து கொள்வதில் திறமையைக் காட்டுகின்ற ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகைதான் எனக்கு கதி.)

நமது குருசரணுள் சில ஸமயம் அந்தர்முகமாய்விடுவார்கள். அந்த ஸந்தர்ப்பங்களில் வெளியில் செல்லாமல் ஏகாந்த அறையிலேயே இருப்பது வழக்கம். அவ்விதம் ஏகாந்த வாஸம் செய்யும் காலங்களில் அவரது முகாரவிந்தத்திலிருந்து பெருகி வரும் அமிருத மொழிகளே அடிக்கடி கேட்கும் பாக்யம் இந்த லேககருக்கு ஏற்பட்டிருந்தது. அதையெல்லாம் குறித்தும் வைத்திருக்கிருர். அவைகளே எழுதுவதானுல் இந்தக் கட்டுரை மிக விரியும். ஆகையால் அவைகளே இன்னெரு சந்தர்ப்பத்தில் வெளியிடுகிருேம். இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் இந்தக் கட்டுரையின் கடைசியில் காணப்படும்.

நமது குருசரணுள் ஏகாந்த அறையில் அவதூத நிலேயில் இருந்துகொண்டு ஒன்றுக்கொன்று ஸம்பந்தப்படாதது போல் ஹாஸ்யமாகவும், கானமாகவும் கைத்தட்டலுடனும் மெய்மறந்து

பாடுவதைக் கேட்டால் யாரும் ஆனந்தப் பரவசம் அடையாமலிருக்க முடியாது. ஆனால் அந்த வார்த்தைகளின் முன்பின் ஸந்தர்ப்பம் அறியாத வேலைக்காரர்களுக்கு அதன் அர்த்தமும் ஸ்வாரஸ்யமும் விளங்காது. அவைகளை ஸம்பந்தப்படுத்தக்கூடிய புத்திசக்தியுடைய ஒருவர் நன்றாக கவனித்துப் பார்த்தால் அவ்வளவும் பிரஹ்மாத்மானுபவத்துடன் வெளிவந்த அற்புதமான ஞான மொழிகளாகவேயிருக்கும்.

மற்ற காலங்களில் யாராவது ஸங்கீத வித்வான்கள் குரு ஸன்னிதியில் பாடவேண்டுமென்று கேட்டால் அதற்கு ஸம்மதிக்காமல் ''அம்பாள் ஸன்னிதியில் பாடுங்கள்'' என்று நம் குருசரணாள் அனுப்பிவிடுவது வழக்கம். இதனால் அவரை ஸங்கீதரஸம் தெரியாதவரென்று நினைப்பவர்கள் கூட சிலருண்டு. அவர்களெல்லாம் ஸ்ரீ ஸந்நிதானத்தின் ஏகாந்தகானங்களைக் கேட்டால் மூக்கில் விரல் வைப்பார்கள். அவ்வளவு ஸுஸ்வரகானமாகவே இருப்பதை இந்த லேககர் நேரிலேயே பலதடவை கேட்டிருக்கிறார். மற்ற ஸமயங்களில் ஸம்ஸ்தான நியமங்களையும் ஸந்யாஸ தர்மங்களையும் அனுஸரிக்கவேண்டியிருப்பதால் தன்னிஷ்டம் போல் வாய்விட்டு கானம் செய்ய இயலாது. பைத்திய வேஷம் போட்டுக்கொண்டுவிட்டால் தன் மனம்போல் ஹாஸ்யம், கானம், நர்த்தனம், கைத்தட்டல், முதலிய லீலைகளுக்குத் தடங்கலே கிடையாதல்லவா? ஆகையால்

'विहरति बालवदेको विमलसुखांभोनिधौ मग्नः ।'
'अवधूतकर्मजालो जडबधिरान्धोपमः कोऽपि ।'

விஹரதி பாலவதேகோ விமலஸுகாம்போநிதௌ மக்ந: ।

அவதூதகர்மஜாலோ ஜடபதிராந்தோபம: கோऽபி ।

(நிர்மலமான ஆனந்தக் கடலில் மூழ்கியவராக ஒருவர் சிறுவன் போல விளையாடுகிறார். கர்மாக்களையெல்லாம் உதறித்தள்ளிவிட்டு ஜடன் போலும், செவிடன் போலும், குருடன் போலும், ஒருவர் ஸஞ்சரிக்கிறார்.) என்றெல்லாம் ஆத்மவித்யாவிலாஸத்தில் வர்ணித்த ப்ரகாரம் குழந்தை போலவும், முட்டாள் போலவும், பைத்தியம் போலவும், நடிப்பதில் தன் ஸாமர்த்தியத்தையெல்லாம் காண்பித்து லோகானுக்ரஹம் செய்து வந்தார் நம் குருநாதர் .

இந்த தத்துவத்தைப் புரிந்துகொள்ளமுடியாத சில மேதாவிகள் அவரை வெறும் பைத்தியமென்று பரிஹாஸம் செய்ததையும் இந்த லேககர் அநேகம் தடவை கேட்டிருக்கிறுர். ஆனுல் அவர்களிடம் பதில் பேசாமல் மௌனமாயிருப்பதுதான் வழக்கம். ஏனென்ருல் அவர்களுக்குப் புரியாத விஷயத்தைப் புரியாத பாஷையில் விளக்குவதால் வீண் கண்டசோஷணம் தான் பலன். இன்னும் அது மாதிரி யாராவது கேட்பதாக இருந்தால் அதற்கு பதில் பின் வருமாறு:—

முமுக்ஷுக்களாகிய நாம் எல்லோரும் என்ருவது ஒரு நாள் இந்த பைத்தியநிலையை அடைந்துதான் ஆக வேண்டும். அந்த நிலை ஏற்பட்ட பிறகுதான் நமக்கு மோக்ஷம். மோக்ஷம் வேண்டுமென்று ஆசைப்படுபவர்கள் அந்தப் பைத்திய நிலையையும் கூட எதிர்பார்த்துத்தாளுக வேண்டும். இது இந்த லேககரின் அபிப்ராயம் என்று எண்ண வேண்டாம். பிரஸித்த மஹான்கள் அங்கீகரித்த விஷயம்தான் இது. ஸ்ரீ ஸதாசிவ பிரஹ்மேந்திராளைவிட உலகத்தில் மஹான்களுண்டா? அவரது குருவாகிய பரமசிவேந்திரரும் ஒரு மஹாளுகத்தான் இருக்கவேண்டும். அவரே இந்த ரஹஸ்யத்தை வெளியிட்டிருக்கிறுர். அவர் ஸதாசிவேந்திராளுக்கு ஸந்யாஸதீக்ஷை கொடுத்து உபதேசம் செய்து அனுப்பியபிறகு வெகுகாலம் காசியிலேயே வஸித்து வந்தாராம். தக்ஷிணதேசத்திலிருந்து காசியாத்திரைக்குச் சென்றவர்களிடம் தன் சிஷ்யனுடைய யோக க்ஷேமத்தை அவர் விசாரித்தபொழுது அவர்கள் தெரிவித்தார்களாம்:— ''ஸ்வாமி ! தங்களது சிஷ்யரான ஸதாசிவேந்திரர் பைத்தியம் பிடித்து அலைகிறுர். வியவஸ்தையில்லாமல் நடந்து கொள்கிறுர். என்னென்னமோ ஸம்பந்தமில்லாமல் பேசுகிறுர். இந்தப் பைத்திய நிலை அவருக்கு எப்பொழுது நிவர்த்தியாகுமோ தெரியவில்லையே !'' என்று கண்ணீர் வடித்தார்களாம். குருவான பரமசிவேந்திரரும் கண்ணீர் விட்டாராம். அதைப்பார்த்து ''குருவே ! தாங்களும் வருத்தப்படுகிறீர்களா?'' என்று கேட்டார்களாம். அதற்குப் பதிலளிக்கையில் அவர் சொன்ஞராம். ''ஆமாம், நானும் வருந்துகிறேன். ஆனுல் அதற்குக் காரணம் வேறு. நீங்கள் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டதே என்று வருந்துகிறீர்கள். நானே அந்த மாதிரி பைத்தியம் எனக்கு வரவில்லையே, அந்த நிலையை நான் அடைய எத்தனை காலமாகுமோ என்று தான் வருந்துகிறேன்'' என்ருராம். இந்த வரலாற்றைத்தான்

நமது பரமகுருநாதாள் எழுதிய ஸதாசிவேந்திர ஸ்துதியில் குறிப்பிட்டிருக்கிருர்.

उन्मत्तवत्संचरतीह शिष्यस्तवेति लोकस्य वचांसि शृण्वन् ।
खिद्यन्नुवाचास्य गुरुः पुराहो! उन्मत्तता मे नहि तादृशीति ॥

உந்மத்தவத் ஸஞ்சரதீஹ சிஷ்ய:
தவேதி லோகஸ்ய வசாம்ஸி ச்ருண்வன் ।
கித்யந்நுவாசாஸ்ய குரு: புரோஹோ !
உந்மத்ததா மே நஹி தாத்ருசீதி ॥

('தங்கள் சிஷ்யன் பைத்தியம்போல் அலேந்து கொண்டிருக்கிருன்' என்ற ஜனங்களின் வார்த்தையைக் கேட்டு அவர் குரு அவ்விதப் பைத்தியம் தனக்கு வரவில்லேயே என்று வருத்தத்துடன் சொன்ஞர்.) இவ்விதம் முன் நடந்த விஷயங்களேத் தத்ரூபமாகவே வர்ணிக்கிருர்.

இவ்விதமே நமது குருசரணுளும் பலவிதமான ஜீவன்முக்த லீலேகளே நடத்திக்காட்டியிருக்கிருர். மேற்கூறியபடி எல்லா விஷயங்களிலும், அதாவது பாண்டித்யம், வைராக்யம், ஞானம், தபஸ், ஜீவன்முக்த குணங்கள் இவைகள் எல்லாவற்றிலும் பூர்வ பிரஹ்மேந்திராளுக்கும் இந்த அபிநவ பிரஹ்மேந்திராளுக்கும் வித்யாஸமில்லே. ஆனல் ஜகத்குருஸ்தானம் என்ற ப்ரதிபந்தம் நமது குருசரணுளுக்கு இருந்தபடியால் வெளியே செல்ல முடியவில்லே.

संत्यज्य शास्त्रजालं संव्यवहारं च सर्वतस्त्यक्त्वा ।
आश्रित्य पूर्णपदवीमास्ते निष्कम्पदीपवद्योगी ॥

ஸந்த்யஜ்ய சாஸ்த்ரஜாலம் ஸம்வ்யவஹாரம் ச
ஸர்வதஸ்த்யக்த்வா ।
ஆச்ரித்ய பூர்ணபதவீமாஸ்தே நிஷ்கம்பதீபவத்யோகீ ॥

(சாஸ்திர ஜாலங்களேயும், உலகவ்யவஹாரங்களேயும் விட்டுவிட்டு யோகியானவர் எங்கும் நிறைந்த ப்ரஹ்மத்தில் நின்று அசையாவிளக்குபோல் இருக்கிருர்.) என்று சொன்னபடி எல்லா வியவஹாரத்தையும் விட்டொழிக்க முடியாததால் पर्यटति पाटिताशः, अटवीकाणेष्वटन्नास्ते என்றபடி ஸ்வேச்சாவிஹாரம் செய்யமுடியாமற் போய்விட்டது. நமது பாக்யவிசேஷம்

பலமாயிருக்கும்போது பீடாதிகாரத்தை அவர் உதறித்தள்ள முடியாதல்லவா? ஆகையால் மற்ற எல்லா விஷயங்களிலும் இருவருக்கும் ஸாம்யம்தான். ஸமாதி விஷயத்திலும் அப்படியே நேர்ந்து விட்டது. பிரஹ்மேந்திராள் நெரூரில் காவேரிக்கரையில் குழந்தைகளிடம் விளையாடிக்கொண்டே மணலில் குழிபறிக்கச் சொல்லி அதில் இறங்கி மணலை மூடச்சொல்லி ஸமாதியானார். நமது குருசரணரோ துங்காநதியில் இறங்கி பத்மாஸன நிலையில் பிராணஸம்யமனம் செய்து ஜலஸமாதியானார். ஸ்தல ஸமாதியானால் என்ன, ஜலஸமாதியானால் என்ன? இரண்டு மஹான்களுமே பிராரப்தத்தால் ஏற்பட்ட இந்தக் கூட்டை விட்டு விதேஹகைவல்யமடைந்து பரப்ரஹ்மத்துடன் ஐக்யமாகி விட்டனர். இருவரும் எங்கும் நிறைந்த அகண்ட வஸ்துவாகவே விளங்கி வருகிறார்கள். நமது ஹிருதயகமலங்களிலும் இன்றும் விளங்கிக் கொண்டேயிருக்கிறார்கள்.

நமது குருசரணர் ஏகாந்தத்திலிருக்கும்பொழுது வெளிவந்த உபதேசமொழிகளில் இரண்டொரு விஷயங்கள் மாத்திரம் கீழே தரப்பட்டிருக்கின்றன. ஒருநாள் அவர் ஏகாந்த அறையில் நின்றுகொண்டு ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபொழுது, பூர்வாச்ரமத்திலிருந்த இந்த லேககர் தென்படவே ‘ஏ சாஸ்திரி ! ’ என்று அழைத்து,

जगदंबापदस्मर्तुः नहि दुःखं कदाचन ।
यदि जायेत नूनं तत् सुखोदर्काय केवलम ॥

ஜகதம்பா பதஸ்மர்த்து: நஹி துக்கம் கதாசந ।
யதி ஜாயேத நூநம் தத் ஸுகோதர்காய கேவலம் ॥

(அம்பாளுடைய சரண கமலங்களை ஸேவிப்பவருக்கு துக்கம் ஒருபொழுதும் ஏற்படாது. ஒருவேளை அவ்விதம் துக்கம் ஏற்பட்டால் அது நல்ல முடிவாகத்தானிருக்கும். இது நிச்சயம்.) என்ற சுலோகத்தைச் சொல்லி மந்திரேசுவர சர்மாவைப் பற்றி ஏதோ சில வார்த்தைகளைக் கூறி கடைசியில் ‘‘எழுது எழுது போ’’ என்று கர்ஜித்தார்கள். இந்த லேககருக்கு ஒன்றும் புரியவில்லை. சுலோகத்தை மாத்திரம் உடனே வந்து குறித்துக்கொண்டிருந்தபொழுது மனதில் திடீரென்று ஓர் அபிப்ராயம் தோன்றிற்று. மந்திரேசுவர சர்மாவுக்கு இந்த சுலோகத்தை எழுதியனுப்ப வேண்டுமென்று

உத்தரவாயிருக்கலாம் என்று நினைத்து இதை அவருக்கு எழுதியனுப்பினார். ஆனால் எதற்காக இந்த சுலோகத்தை எழுதச் சொன்னார் என்பது புரியாமலேயிருந்தது. ஸந்நிதானம் இரண்டு மாதத்திற்குப் பிறகு பஹிர்முகமானவுடன் பலரும் தர்சனத்திற்காக வந்தார்கள். மந்திரேசுவர சர்மாவும் வந்தார். அவரிடம் முன் சொன்ன சுலோகத்தின் வரலாற்றை கேட்டபொழுது அவர் பரவசத்துடன் சொன்னார். ''இந்த சுலோகம் மாத்திரம் வராவிட்டால் என் கதி என்னவாகியிருக்குமோ?'' என்றார். தனக்கு ஏற்கெனவேயிருந்த உத்யோகம் போய் குடும்பச் செலவுகளும் ஜாஸ்தியாகி என்ன செய்வது என்று தவித்துக் கொண்டிருந்ததாகவும் குருநாதாள் அனுக்ரஹித்துக் கொடுத்த அம்பாள் மூர்த்தியைத் தவறாமல் பூஜை செய்து கொண்டு வந்தும் தனக்கு இந்த நிலை ஏற்பட்டதால் ஏதேதோ விபரீத எண்ணங்களெல்லாம் தோன்றி அம்பாள் பூஜையில் சிரத்தை குறைந்து வந்ததாயும் அந்த ஸமயம் பார்த்து குருநாதரின் ஆசீர்வாதம் கிடைத்ததாயும், அந்த சுலோகத்தை நம்பியே மறுபடியும் விசேஷ பக்தியுடன் தேவியை ஆராதனை செய்து வந்ததாயும் அதனால் தனக்கு முன்னிருந்ததைவிட உயர்ந்த உத்யோகம் கிடைத்திருப்பதாயும் அதை ஸந்நிதானத்துக்குத் தெரிவிக்கவே வந்திருப்பதாயும் தன் கதையைச் சொல்லவே இந்த லேககரும் அவரும் சேர்ந்து ஆச்சரியத்தில் மூழ்கிவிட்டோம்.

இன்னொரு விஷயம் இந்த லேககரைப்பற்றியது. இந்த லேககர் பூர்வாசிரமத்தில் குருவின் ஆக்ஞையினால் பளவாடி என்ற கிராமத்துக்குச் சென்றிருந்தார். அந்த கிராமம் பூராவும் சிருங்கேரி மடத்தைச் சேர்ந்தது. அங்கே கொஞ்ச காலம் மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டிருந்தது. மானம்பார்த்த பூமியாகையால் ஏரிமூலம்தான் பாசனம். ஏரியோ வரண்டுவிட்டது. கிராமத்தார் முறையிட்டபடியால் ஸந்நிதானம் விராடபர்வ பாராயணத்துக்காக இந்த லேககரை அனுப்பியிருந்தார். குரு ஆக்ஞையை அனுஸரிக்க வேண்டியதாயிற்று. அவ்விடம் சென்றவுடன் அங்குள்ள சூழ்நிலையைப் பார்த்துப் பயம் ஏற்பட்டது. கிணறுகளோ மிக ஆழம். ஏரியும் வற்றிவிட்டது. ஏரி நிரம்பிவிட்டால் மூன்று வருஷம் கவலை கிடையாதாம். அதை நிரப்பவேண்டுமானால் நம்மிடம் என்ன சக்தியிருக்கிறது? ஆனாலும் குருசரணாளிடத்தில் அந்த சக்தியிருப்பதால்தானே நம்மை அனுப்பியிருக்கிறார். அவரது உத்தரவுப்படி நாம் நடக்கவேண்டியதுதான் நம் கடமை என்று கிரமமாகவே விராடபர்வ பாராயணம், பர்ஜன்ய ஜபம்

முதலியவைகளை குரு ஆக்ஞாப்ரகாரம் செய்துவந்தார். 12 நாள்தான் உத்தரவு. ஆனால் மழையின் சின்னமே தெரியாதபடியால் இன்னொரு 12 நாள் கூடவே செய்யவேண்டுமென்று தோன்றியதால் லேககர் அங்கேயே தங்கிவந்தார். 20 நாள் ஆனவுடன் மலேரியா ஜ்வரம் பலமாகப் பீடிக்கவே பாராயணத்தை நிறுத்தும்படியாயிற்று. அதுவரையில் மழையும் வரவில்லை. உடம்பும் அசக்தமாய்விட்டது. குக்கிராமமானபடியால் வைத்தியமும் கிடையாது. எப்படியோ குருநாதாளை நினைத்துக்கொண்டு 2 நாளிருந்துவிட்டு இந்த லேககர் சிவமொக்கா நகருக்குச் சென்று வைத்தியம் செய்து கொண்டு கொஞ்சம் குணமான பிறகு சிருங்கேரி சென்றார். கார்யம் பூர்த்தியாகாமல் ஸந்நிதானத்தை எப்படி தர்சிப்பது, என்ன சொல்வது என்ற கவலையுடனேயே மடத்திற்குச் செல்லவே குருநாதாள் அந்தர்முகமாய்விட்டார் என்ற செய்தி கிடைத்தது. குருநாதாள் அறைக்குப் பக்கத்தில் இருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளைப் பார்த்ததில் அவர் கோபித்துக் கொண்டு ''உன்னால் அந்தக் கார்யம் ஆகாதென்றால் அதை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும்?'' என்று கேட்டார். உடனே பக்கத்து அறையிலிருந்து ஒரு கர்ஜனை கேட்டது. *ஸுபிக்ஷம், ஸுபிக்ஷம், பூர்ணமத: பூர்ணமிதம்* என்ற குருசரணரின் சப்தம் வந்தவுடனேயே சாஸ்திரிகள் இந்த லேககரை வெளியே அனுப்பிவிட்டார். அப்பொழுது ஒன்றுமே புரியவில்லை. மறுநாள் ஸாயங்காலம் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அழைப்பதாக ஸேவகன் வந்து சொல்லவே, உடனே இந்த லேககர் திகிலுடன் அவரது ஆபீஸ் அறைக்குச் சென்றார். ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் மந்தஹாஸத்துடன் ''ஓ, சாஸ்திரி ! உன் பாராயண கார்யமெல்லாம் ஸபலமாய்விட்டது. எங்களுடைய மனோரதமும் பூர்ணம்; பளவாடி கிராமத்தாரின் மனோபீஷ்டமும் பூர்ணமாயிற்று. ஏரியில் பாதி நிரம்பி விட்டது. இன்னும் மழை பலமாகப் பெய்து கொண்டிருக்கிறது என்று தந்தி வந்திருக்கிறது பார்'' என்று தந்தியைக் காண்பித்தார். ஸந்நிதானம் அப்பொழுது *பூர்ணமத: பூர்ணமிதம்* என்றும் *ஸுபிக்ஷம்* என்றும் சொன்னதன் அர்த்தம் இதுதான் என்று இருவரும் புரிந்துகொண்டோம்.

இவ்வாறு நம் ஸந்நிதானம் அந்தர்முகமாயிருக்கும் பொழுதுகூட சிஷ்யர்களை அனுக்ரஹம் செய்யத் தவறவில்லை.

* * *

2

शृङ्गाद्रिसंभूतमतिप्रशान्तं स्वसेविनां पावनमार्तिहारि ।
विद्यासुतीर्थाख्यमुदक्प्रवाहं विराजते जङ्गमतीर्थमेकम् ॥

சிருங்ககிரி என்ற மலையில் உற்பத்தியாகி தன்னை ஸேவிக்கிறவர்களின் பாபங்களையும் துன்பங்களையும் போக்கி அவர்களை பரிசுத்தர்களாக்கிக் கொண்டு தெற்கிலிருந்து வடக்காக ஸஞ்சரிக்கும் அபிநவ வித்யாதீர்த்தரென்ற மனுஷ்ய உருக்கொண்ட மிகச்சாந்தமான புண்யதீர்த்தம் விளங்குகிறது.

ஸ்ரீ சிருங்ககிரி ஜகத்குரு வியாக்யான ஸிம்மாசனத்தை அலங்கரித்துவந்த நமது குருநாதாள் (ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்) செய்துவந்த அநேக அவதார லீலைகளைப்பற்றியும் ஜீவன்முக்த லீலைகளைப் பற்றியும் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். இன்னும் பலரும் தமது அநுபவங்கள் மூலம் அவரது மஹிமைகளை விளக்கியிருக்கிறார்கள். அவர் லோக க்ஷேமார்த்தமாகச் செய்த சிஷ்ய பரிக்ரஹத்தைப் பற்றி ஒருவரும் விரிவாக எழுதாதபடியாலும் அதைப்பற்றிக் கொஞ்சம் எழுத வேண்டுமென்று பலர் பிரார்த்தித்துக்கொண்டபடியாலும் இந்தக் கட்டுரையில் அதைக் கொஞ்சம் விளக்குவோம்.

இப்போதைய * மஹாஸந்நிதானம் ஐந்து வருஷங்களாக நமது தக்ஷிண தேசத்தில் காலடிமுதல் சென்னை, ஹைதராபாத் வரையில் பல இடங்களிலும் ஸஞ்சாரம் செய்துகொண்டும் பலவிதமாக தர்மப்ரசாரங்கள் செய்து கொண்டும் பற்பல உபதேசமாகிய அமிருத மழையால் எல்லா ஆஸ்திக மஹா ஜனங்களின் மனமாகிய பூமியிலும் அவரவர்களது அதிகாரத்துக்குத் தகுந்தபடி கர்ம பக்தி ஞான யோகங்களாகிய பயிரை விருத்தி செய்து கொண்டும் தாம் போகும்

* ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தர்

இடங்களை எல்லாம் பரிசுத்தம் செய்து கொண்டும் ஏதோ ஒரு ஜங்கம தீர்த்தமாக (जङ्गमतीर्थ) வித்யாதீர்த்த (विद्यातीर्थ) ரூபமாக விளங்கி வருவதை பரம பாக்யசாலிகளான நாம் நேரில் பார்த்தும் பத்திரிகைகள் மூலம் படித்தும் பரமானந்தம் அடைந்து வருவது எல்லோரும் அறிந்த விஷயமே.

இவ்விதமான ஓர் அபூர்வஜங்கம தீர்த்த (जङ्गमतीर्थ) த்தை நமக்கு ஏற்படுத்திக்கொடுத்தவர் நமது குருநாதரவர்கள் (ஸ்ரீ சந்திரசேகரபாரதீ மஹாஸ்வாமிகள்) தாம் என்பதை நாம் ஒரு நாளும் மறக்கமுடியாது; மறக்கவும் மாட்டோம். ''இப்படிப்பட்ட ஓர் உத்ஸவ மூர்த்தியை எவ்விதம் அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள் ? அதனுல் நாம் அடைந்த லாபம் என்ன ? பூர்வாசிரமத்தில் அந்தச் சிஷ்யரிடம் ஸாதன ஸம்பத்துக்களை எவ்விதம் உண்டு பண்ணிஞர்கள்?'' என்ற விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக வெளியிட்டால் பல குரு பக்தர்களுக்கு நமது பரமகுருநாதரவர்கள் எவ்வளவு தூரம் தீர்க்கதரிசி (दीर्घदर्शी) என்பது நன்கு விளங்கும் அல்லவா? அதற்காகவே இதை எழுதுகிறேம்.

நாம் ஏற்கெனவே சொன்னபடி ஓர் அபூர்வஜங்கம தீர்த்த (நடமாடும் தீர்த்தம்) மானது நமக்கு எவ்விதம் கிடைத்தது? தெற்கிலிருந்து வடக்கே சென்று பாரத தேசத்தையெல்லாம் புனிதமாக்கிக்கொண்டு வரும் இந்த அபூர்வ தீர்த்தமாகிய வித்யாதீர்த்த மூர்த்தியானது பூர்வாசிரமத்தில் ஸ்ரீநிவாஸன் என்ற பெயருடன் ஸ்ரீ சிருங்ககிரியில் விளங்கி வந்தது என்பது அனைவரும் அறிந்த விஷயம். உபநயனத்தையும் இவரது தாய் தந்தையர் சிருங்ககிரி மடத்திலேயே விதிவத்தாக நடத்தி வைத்து நமது பரமகுரு மஹாஸன்னிதானத்தில் குருகுலவாஸத்துக்காக ஸமர்ப்பணம் செய்துவிட்டு அவர்கள் பெங்களூர் சென்று விட்டார்கள். அது முதல் இந்த ஸ்ரீநிவாஸனுக்கு மாதா பிதா குரு தெய்வம் எல்லாம் இந்த மஹாஸந்நிதானந்தான். ஸ்ரீ மஹாஸந்நிதானமும் அதை ஏற்றுக் கொண்டு ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் ஸகல ஏற்பாடுகளையும் செய்யச் சொல்லித் தம் கண் பார்வையிலேயே ஸதா இந்தச்சிறுவன் இருக்கும்படி ஏற்பாடு செய்ய உத்தரவிட்டார்கள்.

வித்யாப்யாஸ காலத்தில் உலக ஸமாசாரப் பற்றோ பிரபஞ்ச வாஸனையோ வித்யார்த்திகளுக்கு ஏற்படக்கூடாது என்பது நமது

மஹாஸந்நிதானத்தின் தீவிர அபிலாஷை. ஆதலால் அதற்குத் தகுந்த இடத்தையே வித்யாப்யாஸத்திற்குத் தேர்ந்தெடுத்தார்கள். அதாவது துங்கா நதியின் அக்கரையில் உள்ள நரஸிம்ம வனத்தில் ஸ்ரீ நரஸிம்ம பாரதீ மஹாஸ்வாமிகளது அதிஷ்டானத்துக்குப் பக்கமாயும் ஸ்ரீ ஸந்நிதானம் வஸிக்கக்கூடிய ஸச்சிதானந்த விலாஸ ஆசிரமத்துக்கு மிக ஸமீபமாயும் உள்ள ஒரு குடீரம்தான் வித்யாப்யாஸத்துக்குத் தகுதியானது என்று தேர்ந்தெடுத்தார்கள்.

உலகத்திலேயே ரிஷ்யச்ருங்க க்ஷேத்திரம் பரம சாந்தமானது என்று ராமாயணுதிகள் முறையிடுகின்றன. அந்த க்ஷேத்திரத்திற்குள் மிக ரம்யமாயும் ஏகாந்தமாயும் உள்ள இடம் துங்கா நதிக்கரையில் உள்ள ஸ்ரீ மடம். ஆனுல் மடத்தில் ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயமும் மற்ற வேத பாடசாலே முதலான கட்டிடங்களும் ஸதா யாத்ரிகர்களாலும் ஸேவார்த்திகளாலும் வித்யார்த்திகளாலும் நிரம்பப்பட்டிருப்பதால் பூர்ண ஏகாந்த வாஸம் கிடைக்காது என்று கருதியே ஸ்ரீ சாரதாம்பாள் ஸன்னிதானத்தைக் கூட விட்டுத் துங்கா நதியின் அக்கரையில் உள்ள நரஸிம்ம வனத்தைக் குருநாதரவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். எப்படியாவது இந்த ஸ்ரீநிவாஸனே வித்யாப்யாஸத்திலேயே ஈடுபடச் செய்து பிரபஞ்ச வாஸனேயே இல்லாத ஒரு ரிஷி குமாரனுகச் செய்துவிட வேண்டும் என்ற ஆவல் போலும்! அவரது ஸங்கல்பம் போலவே ஸ்ரீநிவாஸனும் பிரம்மசர்ய அவஸ்தையில் ரிஷி குமாரன் போலவே விளங்கி வந்தார்.

குருசரணுள் தகுந்த இடத்தைத் தேர்ந்தெடுத்த பிறகு அந்த ஏகாந்தமான குடீரத்தில் ஒரு சமையல்காரனே ஏற்படுத்தி ஸாத்விகமான ஆஹாராதிகளுக்கு ஸௌகர்யம் செய்து கொடுத்தார்கள். ஸ்ரீநிவாஸனுடன் ஸஹபாடிகளாக மூன்று சிறுவர்களேயும் சேர்த்து இந்த நான்கு பையன்களுடன் கூடவேயிருந்து ஸந்த்யாவந்தனம், அக்னி கார்யம், ஸூர்ய நமஸ்காரம் இவைகளேயெல்லாம் தவருமல் செய்து வரும்படி கவனித்துக்கொள்ளவும், வேதத்தில் உபநிஷத் முதலானவைகளேயும், சில ஸம்ஸ்கிருத பால பாடங்களேயும் கற்பிக்கவும் இந்த லேககரையே நியமித்தார்கள். உலகமெல்லாம் போற்றக்கூடிய இந்த மஹானுக்குப் பால சிக்ஷை சொல்லிவைத்த வரலாற்றை நினேக்கும்போது இன்னும் இந்த லேககருக்கு மயிர்க்கூச்சல் ஏற்படுகிறது. ஆகக்கூடி இந்த மஹானுக்குப்

பால்யத்தில் பால சிக்ஷை சொல்லிக்கொடுக்கக்கூடிய பாக்யம் இந்த லேககருக்குக் கிடைத்துவிட்டது.

ஸ்ரீ ஸந்நிதானத்தின் உத்தரவுப்படி அந்தக் குடீரத்திலேயே இந்த லேககரும் அஹோராத்ரம் வசித்துக் கொண்டு அந்த நான்கு பையன்களையும் கவனித்துக் கொண்டு வந்தார். சிருங்ககிரி கிராமத்துக்கும் இந்த நரஸிம்ம வனத்துக்கும் ஒரு தொடர்பும் இல்லாதபடியால் இந்த நான்கு வித்யார்த்திகளுக்கும் வித்யாப்யாஸத்தைத் தவிர விளையாடுவதற்கு அவகாசமே இல்லை. அப்படி விளையாட வேண்டுமானாலும் அக்கரையிலிருந்து பையன்கள் வரமுடியாது. ஸாயங்கால வேளைகளில் அங்கிருந்த மான்களையும், மயில்களையும் வைத்துக்கொண்டுதான் விளையாட வேண்டும். அவ்விதம் இந்தப் பையன்கள் மான்களுடனும், மயில்களுடனும் விளையாடுவதைப் பார்த்தால் இவர்கள் ஒரு ரிஷி குமாரர்கள் என்றே தோன்றிப் பார்ப்பவர்களுடைய மனத்தில் ஏதோ ஓர் ஆஹ்லாதம் ஏற்பட்டுவிடும். இதையெல்லாம் நேரில் பார்த்தவர்கள் வால்மீகி ஆசிரமத்தில் குசலவர்கள் குருகுல வாஸம் செய்த வரலாற்றையே ஞாபகப்படுத்திக்கொள்வார்கள். அதையெல்லாம் கண்டுகளித்து ஆஹ்லாதப்படக் கூடிய பாக்யம் இந்த லேககருக்கும் கிடைத்தது. ஸ்ரீ ராமச்சந்திர சாஸ்திரிகளும் காவ்ய பாடங்கள் சொல்லி வைத்துக் கொண்டிருந்தபடியால் அவருக்கும் இந்தப் பாக்யம் சில ஸமயம் ஏற்பட்டது உண்டு. தமது பட்டத்துச் சிஷ்யனாக வரப்போகிற ஸ்ரீநிவாஸனுக்காகவே இந்த ஏற்பாடுகள். ஆனால் அவனைச் சிஷ்யபரிக்ரஹம் செய்யும் விஷயம் பின்னால்தான் எல்லோருக்கும் தெரியவந்தது. फलानुमेयाः प्रारंभाः *பலானுமேயா: ப்ராரம்பா:* என்பதல்லவா மஹான்களின் லக்ஷணம்.

நமது மஹாஸந்நிதானம் சுமார் 40 வயதுக்கு உட்பட்டிருக்கும்போதே இந்தச் சிஷ்ய பரிக்ரஹ எண்ணம் ஏன் உண்டாயிற்று என்றால் அதற்கும் தகுந்த காரணம் இருந்தது. ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளும்பொழுதே இந்தப் பீடாதிகாரத்தில் அவருக்கு விருப்பம் இல்லை. இதை அந்தக் காலத்து ஸர்வாதிகாரியாக இருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் ஸ்பஷ்டமாகவே தெரிவித்திருந்தார்கள். அந்தப் பரம குருநாதர் பூர்வாசிரமத்தில் நரஸிம்ம சாஸ்திரி என்று பெயர் பெற்றிருந்தார் அல்லவா? அவரை

ஸந்யாஸமும் பீடாதிகாரமும் பெற்றுக் கொள்ளும்படி ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் வற்புறுத்தியபொழுது அவ்விருவருக்கும் நடந்த ஸம்பாஷணையைக் கவனித்தால் இது விளங்கும். ஸம்பாஷணை பின்வருமாறு:-

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- நரஸிம்மா! நமது குருநாதர் உனக்கே ஸந்யாஸம் கொடுத்துப் பீடாதிகாரத்தை ஏற்படுத்தும்படி தமது விருப்பத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நரஸிம்ம சாஸ்திரி:- நீங்கள் முதலில் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் பிந்திச் சொன்ன விஷயத்தை ஏற்றுக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன்.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- வெறும் ஸந்யாஸத்தை மாத்திரம் ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்கிறாய்? ஸந்நிதானமே உன்னைப் பீடாதிகாரியாக நியமித்திருக்கும்போது அதை வேண்டாம் என்று சொல்லலாமா?

நரஸிம்ம சாஸ்திரி:- ஸந்நிதானம் ஸந்யாஸம் மாத்திரம் வாங்கிக்கொள்ளும்படிதான் முன் ஒரு தடவை சூசனையாகச் சொல்லியிருக்கிறார்.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- உன்போன்ற உத்தம சிஷ்யர்களுக்கு வெறும் ஸந்யாஸத்தையா கொடுக்கச் சொல்லியிருப்பார்? ஆகையால் ஸந்யாஸம் என்றால் பீடாதிகாரமும் அத்துடன் சேர்ந்ததுதான்.

நரஸிம்ம சாஸ்திரி:-பீடாதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமோ அதை நிர்வஹிக்கும் திறமையோ எனக்குக் கிடையாதே.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- உனக்குத் திறமை இல்லாவிட்டால் குரு ஆக்ஞை அவ்விதம் ஏற்படுமா?

நரஸிம்ம சாஸ்திரி:- प्रविचारय तत्वमात्मनः सुचिरम् (*ப்ரவிசாரய தத்வமாத்மந: ஸுசிரம்*) என்றுதான் குருசரணர் எனக்கு முன்னொரு காலத்தில் ஆக்ஞாபித்திருக்கிறார்கள். ஆகையால்

ஆத்மதத்துவ விசாரத்துக்காகவேதான் ஆசிரம ஸ்வீகாரமே தவிர, பீடாதிகாரத்துக்காக அல்ல.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:– அவரது சிஷ்யனுக நீ ஆசிரம ஸ்வீகாரம் செய்துகொண்டு உன் இஷ்டம்போல் ஆத்ம விசாரம் செய்யலாம். அதற்கென்ன தடை?

நரஸிம்ம சாஸ்திரி:– இந்தப் பீடாதிகாரம்தான் தடை. பீடாதிகாரத்தை ஏற்றுக்கொண்டால் அதில் பல லௌகிக வியவஹாரங்கள் ஏற்படாதா?

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:– அதற்காக அஞ்ச வேண்டாம். லௌகிக வியவஹாரத்தை எல்லாம் நானே ஏற்று நடத்துகிறேன். அதனுல் உன் ஆத்ம விசாரத்துக்கு இடைஞ்சல் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். கவலேயே வேண்டாம்.

நரஸிம்ம சாஸ்திரி:– ஆத்ம விசாரத்துக்கும் சாஸ்திர அப்யாஸத்துக்கும் தகுந்த ஸௌகர்யங்களே ஏற்படுத்திக் கொடுத்து லௌகிக வியவஹாரங்களே எல்லாம் நீங்களே பார்த்துக் கொள்வதானுல் நான் ஆச்ரம ஸ்வீகாரத்துக்குத் தயார்.

இந்த ஸம்பாஷணேயிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவென்ருல் பீடாதிகாரத்திலோ லௌகிக வியவஹாரங்களிலோ விருப்பமின்றி ஸதா ஆத்ம விசார ஸௌகர்யத்துக்காகவே அவர் ஸந்யாஸம் பெற்றுக்கொண்டார் என்பது தெளிவாகிறதல்லவா? அதனுல்தான் சிறு வயதிலேயே தாம் ஸம்ஸ்தான ஸம்பந்தமான கார்யங்களிலிருந்து விலகிக்கொள்வதற்காகவே சிஷ்ய பரிக்ரஹம் செய்வதாக ஸங்கல்பம் செய்து கொண்டார் போலும். கிரீடதாரணம் முதலிய ஸம்ஸ்தான ஆடம்பரங்களே எல்லாம் அதுவரையில் வேண்டாவெறுப்பாக பக்தர்களின் நிர்ப்பந்தத்திற்காகவும் பிரார்த்தனேக்காகவும் அனுஸரித்து வந்தபோதிலும் அதுவும் ஆத்ம நிஷ்டைக்கு இடைஞ்சலாக தோன்றவே சிஷ்ய பரிக்ரஹம் மூலம் எல்லாவற்றையும் துறந்து ஜீவன்முக்த லீலேகளே அனுஷ்டிக்கலானுர்.

ஸம்ஸ்தான ஸம்பந்தமான காரியங்களிலிருந்து பூர்ணமாக விலகிக்கொள்ளவேண்டுமானுல் நன்ருகச் சோதித்துப் பார்த்து தகுந்த பீடாதிகாரியை நியமிக்க வேண்டும் அல்லவா?

அதற்காகத்தான் முன்சொன்னபடி நான்கு வித்யார்த்திகளைக் குருகுலவாஸம் செய்யும்படி ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீநிவாஸன்தான் தகுந்த அதிகாரி என்று குருசரணுள் உணர்ந்திருந்தபோதிலும் ஸம்பிரதாயத்துக்காகவே மற்ற வித்யார்த்திகளையும் அவனுடன் சேர்த்துக் கல்வி பயில ஏற்பாடு செய்தார்கள். காவ்ய பாடம் ஆரம்பமானவுடன் அடிக்கடி பையன்களைத் தம்மிடம் வரவழைத்துப் பரீக்ஷித்துப் பார்த்து வந்தார்கள். ஒவ்வொரு பரீக்ஷையிலும் ஸ்ரீநிவாஸன்தான் முதலாவதாகத் தேறினுன் என்பதை இங்கே சொல்லாமலேயே வாசகர்கள் தெரிந்துகொண்டிருக்கக்கூடும். அவரது மேதா சக்தியையும், குருபக்தியையும், வாக்விலாஸத்தையும், அடிக்கடி பார்த்து நமது குருசரணுள் பரவசப்பட்டுப் போஞர்கள். கூடவே இருந்த இந்த லேககரும் பரவசமானுர் என்பதைச் சொல்ல வேண்டுமா?

காவ்ய பாடத்தில் கொஞ்சம் தேர்ச்சி வந்தவுடன் அந்தாதி சுலோகங்களைச் சொல்லவைத்துக் கேட்பார்கள். காலபைரவர் ஆலயம் செல்லும்போதெல்லாம் இந்தப் பையன்களுடன் இந்த லேககரையும் வரச்சொல்லிப் பல ரஸமான விஷயங்களைப் பற்றி விமர்சனம் செய்வார்கள். அதில் இரண்டொரு விஷயங்களை மாத்திரம் இங்கே குறிப்பிடுவோம்.

முன் குறிப்பிட்ட நான்கு வித்யார்த்திகளில் ஒருவன் இங்கிலீஷ் படித்தவன். இங்கிலீஷ் பாஷையிலேயே விசேஷ அபிமானம் உள்ளவன். துங்கா நதிக்கரையில் ஸாயங்காலம் விளையாடும் போது இங்கிலீஷ் பாஷையின் மேன்மையைப் பற்றி ஏதோ வாயடித்திருக்கிருன். ''ஸம்ஸ்கிருதம் எவ்வளவு உயர்ந்திருந்தாலும் ராஜபாஷையான இங்கிலீஷுக்கு ஸமமாக முடியுமா?'' என்றெல்லாம் சொல்லி மற்றப் பையன்களை மடக்கியிருக்கிருன். இவன் ஒரு வாயாடியானபடியால் மற்றவர்கள் ஸம்ஸ்கிருதத்தின் மஹிமைகளைப் பற்றி எவ்வளவு பேசியும் பலிக்கவில்லை.

இந்த லேககரும் அது ஸமயம் பக்கத்தில் இல்லாத படியால் அது விஷயம் பின்னுல்தான் தெரியவந்தது. இது நடந்த மறுநாள் இந்த லேககர் வழக்கம்போல் இந்த நால்வரையும் அழைத்துக் கொண்டு குருசரணுளுடன் காலபைரவர் ஆலயம் சென்றதும் எல்லோரையும் உட்காரச் சொல்லி 'ஸம்ஸ்கிருதம் பெரியதா ஆங்கிலம் பெரியதா? '

என்ற விஷயத்தைப் பற்றி சர்ச்சை செய்யும்படி உத்தரவிட்டார். நேற்று ஆங்கிலத்தின் மஹிமைகளைப்பற்றி வாயடித்தவன் இன்று ஒன்றுமே பேசாமல் விழிக்கலானான்.

அவனையே குறிப்பாகப் பார்த்துக் குருசரணுள் கேட்டார். ''அப்பா, ஸம்ஸ்கிருதத்தில் சூரியனுக்கு எத்தனை பெயர்கள் உண்டு? ''

பையன் அமரகோசத்திலுள்ள பதங்களை எண்ணலானான்.

''இருக்கட்டும்; சந்திரன், நக்ஷத்திரன், ஸமுத்திரம் இவைகளுக்கெல்லாம் எத்தனை பெயர்கள் உண்டு? ''

அமரகோச சுலோகத்தை ஸ்ரீநிவாஸன் ஒப்பித்தான். அந்தப் பையனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

''ஸரி, அதிருக்கட்டும்; இங்கிலீஷில் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம், ஸமுத்திரம் முதலியவைகளுக்கு எத்தனை பர்யாய பதங்கள் உண்டு என்பதை யாராவது சொல்லுங்கள்.''

மற்றவர்கள் அந்த வாயாடிப்பையனையே பார்த்தார்கள். அவனோ ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர்தான் சொல்லமுடிந்தது.

''ஸம்ஸ்கிருதத்தில் ஒவ்வொன்றுக்கும் ஏராளமான பதங்கள் இருக்கும்போது மற்றப் பாஷைகளில் ஏன் ஒரு பதம்தான் இருக்கவேண்டும் என்று புரிகிறதா? ஸம்ஸ்கிருதம் மாத்ரு பாஷை. மற்ற பாஷைகளெல்லாம் இதன் ஸந்ததிகள் என்று இதனுல் ஏற்படுகிறதல்லவா? '' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்கள்.

பையன்கள் எல்லாம் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு ஆச்சரியப்பட்டார்கள். ''நாம் ஆற்றங்கரையில் பேசிக் கொண்டதற்கல்லவா இது பதிலாக இருக்கிறது. நாம் பேசிக் கொண்டது இவருக்கு எப்படித் தெரியும்? '' என்றெல்லாம் பிறகு பேசிக் கொண்டார்கள். அவர் ஸர்வக்ஞ மூர்த்தி என்பதை அவர்கள் எங்கே கண்டார்கள்!

காலபைரவர் ஆலயத்தில் ஒருநாள் இவ்விதமே வித்யார்த்திகளுடன் ஸம்ஸ்கிருத பாஷையின் மஹிமைகளைப் பற்றி

விளக்கிக் கொண்டு வருகையில் அகஸ்மாத்தாக ஒரு வித்வான் அங்கே வந்து சேர்ந்தார். அவர் ஏதோ மிகவும் வருந்தியவர்போல் காணப்பட்டார். அவரைத் தூரத்தில் பார்த்தவுடனேயே குருசரணுள் ஏதோ நினைத்துக் கொண்டு அவர் வந்ததும் அவர் காதில் படும்படியாக வித்யார்த்திகளிடம் பின்வரும் சுலோகத்தைச் சொல்லி அதை மறுநாள் வந்து ஒப்பிக்கவேண்டும் என்று சொல்லிவிட்டு, அந்த வித்வானிடம் குசலப்ரச்னம் செய்ய ஆரம்பித்தார்கள்.

दारा इमे मे तनया इमे मे गृहा इमे मे पशवश्च मे मे ।
इत्थं नरो मेषसमानधर्मा मेमेकरः कालवृकेण नीतः ॥

தாரா இமே மே தநயா இமே மே க்ருஹா இமே மே
பசவச்ச மே மே ।
இத்தம் நரோ மேஷஸமான தர்மா மேமேகர:
காலவ்ருகேண நீத: ॥

இந்த சுலோகத்தைக் கேட்டவுடன் அந்த வித்வான் தாரை தாரையாகக் கண்ணீர் விட்டுக்கொண்டு வணங்கி, ''ப்ரபோ! தங்களை நான் எதற்காகத் தர்சனம் செய்யத் தூரதேசத்திலிருந்து வந்தேனோ அது இப்பொழுது கைகூடிவிட்டது. என் மனம் சாந்தி அடைந்துவிட்டது. மந்திராக்ஷதைப் பிரஸாதம் கிடைத்தால் உடனே ஊருக்கு அடுத்த வண்டிக்கே போக ஸௌகர்யமாக இருக்கும்'' என்று கேட்டார்.

குருசரணுளும் மந்தஹாஸம் செய்துகொண்டு பிரஸாதம் கொடுத்து அனுப்பிவிட்டார். இந்த லேககர் பக்கத்தில் இருந்தும் ஒன்றுமே புரியவில்லை. அந்த வித்வான் பிரஸாதம் பெற்றுக் கொண்டபோதிலும் ஏதோ ஸந்தேஹத்தால் ஊருக்குப்போகவில்லை. மறுநாளும் காலபைரவர் ஆலயத்தில் வித்யார்த்திகளுடன் இந்த லேககரும் அந்த வித்வானும் வந்திருந்தார்கள். குருசரணுள் முதலில் வித்யார்த்திகளைப் பார்த்து ஒவ்வொருவராக அந்த சுலோகத்தை ஒப்பிக்கச்சொன்னுர்கள். பிறகு அதன் அர்த்தத்தை உபந்யாஸம் போல் சொல்லி விளக்கி, ''இதை எதற்காகச் சொன்னேன் தெரியுமா?'' என்று ஒவ்வொருவரையும் கேட்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு காரணம் சொன்னுர்கள். ஆனுல் நமது ஸ்ரீநிவாஸன் சொன்ன

காரணம்தான் மிகவும் பொருத்தமாக இருந்தது. அதாவது, ''ஸம்ஸ்கிருதபாஷையின் மஹிமை இதனுல் வெளியாகிறது. கேவலம் (मे) மே என்ற சப்தமானது நான், என்னுடையது என்ற மனிதாபிமானத்தைக் காட்டுவதுடன் ஆடுகளின் அழுகைச் சப்தத்தையும் குறிப்பிடுகிறது. இவ்விதம் ஒரே பதத்தால் பல அர்த்தங்களைக் காட்டக்கூடிய சப்தங்களை ஸம்ஸ்கிருத பாஷையில்தான் காணமுடியும். அந்த ஸம்ஸ்கிருத பாஷையின் மஹிமையை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இந்த சுலோகம் வெளிவந்தது'' என்று கணீரென்று அவன் சொல்லவே நாங்கள் எல்லோரும் பரவசப்பட்டுப்போனேம்.

ஆனுல் வந்திருந்த வித்வான் இதை அங்கீகரிக்கவில்லை. ஸந்நிதானத்தில் தன் விக்ஞாபனத்தைத் தெரிவித்துக் கொண்டார். ''ப்ரபோ! என்னை ஸமாதானம் செய்வதற்காகவே இந்த சுலோகம் ஸந்நிதானத்தின் முககமலத்திலிருந்து வெளிவந்திருக்கிறது. எனக்கு யதேஷ்டமாக ஐச்வர்யம் இருந்தும் புத்திர பாக்கியம் இல்லை. பிறந்து பிறந்து அந்தர்த்தானம் ஆகிவிடுகிறது. ஸம்ஸாரத்துக்கும் உடம்பு சரியில்லை. இந்தக் கஷ்டங்களையெல்லாம் ஸந்நிதானத்தில் தெரிவித்து ரக்ஷாபந்தனம் ஏதாவது வாங்கிப் போகலாம் என்றுதான் வந்தேன். நான் வந்தவுடன் இந்த உபதேசமொழியைக் கேட்டபின் அதையெல்லாம் இங்கே தெரிவிக்க விருப்பம் இல்லாததால்தான் நேற்றையதினமே உத்தரவு வாங்கிக்கொண்டேன். அவ்விதம் நேற்றே போயிருந்தால் இந்தச் சுலோகத்தின் வியாக்யானத்தைப் பூர்ணமாகக் கேட்டிருக்க முடியாது. இன்று அதையும் கேட்டதில் என் மனம் பரமசாந்தி அடைந்துவிட்டது. ரக்ஷாபந்தனமும் தேவையில்லை என்றே தீர்மானித்துவிட்டேன். ஆகையால் இந்த சுலோகம் எனக்காகவேதான் ஸந்நிதானத்தால் நேற்று வெளியிடப்பட்டது என்பதில் ஸந்தேஹமே இல்லை'' என்று சொல்லி விடை பெற்றுச் சென்றூர். பின்னுல் அவர் காசியில் ஸந்யாஸம் வாங்கிக் கொண்டார் என்று கேள்வி.

குருசரணுளின் ஒவ்வொரு வார்த்தையும் இவ்விதம் பல அர்த்தங்களைக் கொடுக்கக்கூடியது என்றும், பலருடைய மனதிற்கு ஆறுதல் தரவல்லது என்பதும் அவரிடம் பழகிய சிஷ்யர்களுக்கு அடிக்கடி ஏற்படக்கூடிய அநுபவந்தான்.

இவ்விதம் ஸ்ரீநிவாஸன் மற்றப் பையன்களுடன் ரிஷிகுமாரர் போல் விளங்கிக்கொண்டு குருகுலவாஸமும் வித்யாப்யாஸமும் செய்து வருகையில் ஒருநாள் ஸ்ரீநிவாஸனின் தாயாரான மாத்ரு ஸ்ரீ லக்ஷ்மியம்மாள் தன் புதல்வனையும் குருநாதாளையும் தரிசித்துப்போவதற்காகப் பெங்களூரிலிருந்து வந்திருந்தார்கள். முதலில் ஸந்நிதானத்தைத் தரிசித்தபிறகு பையனையும் பார்த்துப் பேசிக் கொண்டிருந்து விட்டு ஸாயங்காலம் 5 மணிக்கெல்லாம் நரஸிம்மவனத்திலிருந்து அக்கரைக்குச் சென்றுவிட்டார்கள். உடனே ஸந்நிதானமும் காலபைரவர் ஆலயத்திற்கு கிளம்பி விட்டார்கள். காவலாளர்கள் வந்து கூப்பிடவே இந்த லேககரும் வித்யார்த்திகளுடன் சென்றார். குருநாதர் காலபைரவர் ஆலயத்துக்குப் போகும்வழியிலேயே பின்வரும் சுலோகத்தைச் சொல்லி அதன் அர்த்தத்தைப் பையன்களிடம் கேட்டார்.

सूते सूकरयुवतिः सुतशतमत्यन्तदुर्भगं झडिति ।
करिणी चिराय सूते सकलमहीपाललालितं कलभम् ॥

இதன் அர்த்தத்தை அச்சிறுவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருவிதம் சொல்லி முடித்தார்கள்.

''இதை இந்த ஸமயம் எதற்காகச் சொன்னேன் என்று யாராவது சொல்லமுடியுமா? '' என்று அவர் கேட்டார்.

எல்லோரும் பிரமித்தார்கள். கடைசியில் ஸ்ரீநிவாசன் ஒருவாறு தன் மேதா விலாஸத்தை உபயோகித்துச் சொன்னான். ''ஒரு பெரிய பாடசாலையானது நூறு வித்யார்த்திகளைத் தயார் செய்தாலும் அவர்கள் சரிவரப் படிக்காமலோ மேதா சக்தி இல்லாமலோ இருந்தால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது. இன்னொரு சிறிய பாடசாலையானது ஒரே ஒரு பையனைத் தயார் செய்தாலும், அந்தப் பையன் மேதாவியாக இருந்தால் அவன் ராஜாக்களாலும் போற்றப்பட்டு அந்தச் சிறுபாடசாலைக்கே பெரும் கீர்த்தியை உண்டு பண்ணி விடுவான்'' என்று தன் மனத்தில் உதித்த அபிப்பிராயத்தை வெளியிடவே குருவும் இந்த லேககரும் மற்ற எல்லோரும் ஆச்சர்யத்தில் மூழ்கி விட்டார்கள். இது அவர்கள் சிறிதும் எதிர்பாராதது.

குருநாதாள் இந்த லேககரைப் பார்த்து ''உன் அபிப்பிராயம் என்ன?'' என்று கேட்டார். இவரோ தம் அபிப்பிராயத்தை

ஸ்பஷ்டமாகச் சொல்லமுடியாமல் ஸூசகமாகவே சொன்னூர். ''அரசர்களெல்லாம் போற்றக்கூடிய உயர்ந்த ஜகத்குரு ஸ்தானம் வஹிக்கத் திறமையுள்ள ஒரு மஹா புருஷனைப் பெறக்கூடிய பாக்யம் யாரோ ஓர் அம்மாளுக்குத்தான் கிடைக்கும். மற்றவர்கள் பல பிள்ளைகளை பெற்றும் பயனில்லை'' என்று சொல்லி மேலும் லக்ஷ்மியம்மாளைப்பற்றி ஏதோ பேச வாயெடுக்கவே உடனே ஸம்க்ஞை செய்து அடக்கிவிட்டார்கள். பிறகு அதை மறைப்பதற்காகவே ஏதேதோ வித்யாப்யாஸ விஷயமாகப் பேசிவிட்டு அனுப்பிவிட்டார்கள்.

இந்தப் பையன்கள் பிறகு குசுகுசுவென்று ஏதோ பேசிக்கொண்டிருந்ததை இந்த லேககர் கவனித்துக் கேட்டார். ''ஸ்ரீநிவாசா! உன் அம்மாவைப் பற்றித்தானே ஸந்நிதானம் அந்தச் சுலோகம் சொன்னூர் ?'' என்று ஒரு பையன் கேட்டதற்கு ''அது எனக்குத் தெரியும். அதை நானே வெளியில் சொல்லிக்கொள்ளலாமா ? அதற்காகத்தான் இப்படியொரு உல்லேகம் செய்துவிட்டேன்'' என்று ஸ்ரீநிவாசன் பதில் சொன்னதைக் கேட்டதும் இந்த லேககருக்கு மயிர்க்கூச்சலே ஏற்பட்டுவிட்டது.

இது நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் ஸ்ரீநிவாஸன் ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மூர்த்தியாக மாறிவிட்டான். தம் தாயார் 5 நிமிஷம் முந்தியே வந்து போயிருப்பதால் இந்தச் சுலோகம் தாயாரைப்பற்றியதுதான் என்று தெரிந்திருந்தும் கூட அதை மறைத்துப் பாடசாலை விஷயமாக அதன் அர்த்தத்தை மாற்றி அபூர்வ உல்லேகம் செய்யக்கூடிய ராஜதந்திரமும் ஸாமர்த்தியமும் 14 வயது சிறுவனுக்கே இருக்குமானல் 44 வயதுள்ள அந்த மூர்த்திக்கு எவ்வளவு தூரம் லோக தந்திர ஞானம் இருக்க வேண்டும் என்பதை வாசகர்களே ஊஹித்துக் கொள்ளலாம்.

இப்பேர்ப்பட்ட ஸர்வக்ஞ மூர்த்தியான வித்யாதீர்த்த குருவை அடைந்த நாம் எல்லோரும் எவ்வளவு பாக்யசாலிகள் ! சிருங்ககிரி பீடபரம்பரையில் உள்ள ஒவ்வொரு குருவும் ஒவ்வொரு ரத்னமாக விளங்கி வருவதை நான்கு தலைமுறையாக நாம் நேரிலேயே கண்டு அநுபவித்து வருகிறோம். ஒவ்வொருவரும் தபஸிலும் வித்யையிலும் ஆத்மஞான நிஷ்டையிலும் நிகரற்று விளங்குவதையும் பார்த்து வருகிறோம் அல்லவா? அதற்கெல்லாம் காரணம் பால்யத்தில் உள்ள பயிற்சி முறைதான்.

இந்த வித்யாப்யாஸ ஸ்வகர்மாநுஷ்டானப் பயிற்சி முறையானது சிருங்ககிரி மடத்துக்கே அஸாதாரணமான ஒரு முறையாகும். ஏனென்ருல் இதுமாதிரி ஓர் ஏகாந்த ஸன்னிவேசம் வேறு எங்கும் கிடைப்பது மிகவும் துர்லபம். முதலில் நாகரிகக் காற்று வீசாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நல்ல ஸஹவாஸமும் வேண்டும். நரஸிம்ம வனத்தில் அவ்வித ஸௌகர்யம் அதிகம். கெட்ட பையன்களின் ஸஹவாஸ தோஷம் எவ்விதத்திலும் இங்கே வரமுடியாது. அன்ன தோஷமும் கிடையாது. ஏனென்ருல் பிரதி தினமும் பூஜையில் நிவேதனம் செய்யப்பட்ட ஸாத்விகமான ஆஹாரம்தான் சாப்பிடுவது வழக்கம். ஏற்கெனவே நமது குருநாதரால் அநுக்ரஹித்துக் கொடுக்கப்பட்ட பாண லிங்கத்தையும் நரஸிம்ம மூர்த்தியையும் அம்பிகையையும் இந்த லேககர் ஆத்மார்த்தமாகப் பூஜித்து வந்தபடியால் அந்த தேவதைகளுக்கு நிவேதனம் செய்த அன்னத்தைத்தான் சாப்பிடவேண்டும் என்று உத்தரவாகி இருந்தபடியாலும் அன்னதோஷத்துக்கு அங்கே பிரஸக்தியே கிடையாது. இவ்விதம் அன்ன சுத்தி, சரீர சுத்தி, வாக் சுத்தி, மனஸ் சுத்தி இதற்கெல்லாம் குறைவு இல்லாமல் வித்யாப்யாஸமும் நடந்து வந்தபடியால்தான் இன்று ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தாளின் மஹிமை வாசாமகோசரமாக எங்கும் பிரகாசிக்கிறது.

இவ்விதமான தபஸ் சக்தியையும் மேதாசக்தியையும் ஆத்ம நிஷ்டையையும் பிரம்மசர்ய அவஸ்தையிலேயே வ்ருத்தி செய்தவர் நமது குருசரணுள்தான். அதனுல்தான் அன்று வால்மீகி ஆசிரமத்தில் குசலவர்கள்போல் வளர்ந்து வந்த ஸ்ரீநிவாஸன் இன்று ஜகத்குருவாக விளங்குகிருர். அச்வமேத மஹாமண்டபத்தில் ஸ்ரீராமசந்திரர் வீற்றிருந்த மஹாஸபையில் ராமாயணப் பிரஸங்கம் செய்துவந்த குசலவர்கள்போல் இன்று ஆயிரக்கணக்கான மஹா ரஸிகர்களும் வித்வான்களும் பிரபுக்களும் நிறைந்த மஹா ஸபைகளில் தம் உபதேச அம்ருதவர்ஷத்தால் எல்லோரையும் மெய்சிலிர்க்கும்படி செய்யக்கூடிய ஓர் அபூர்வ மஹிமையும் அவர் பிரம்மசர்யம் முதல் பழகி வந்த தபோபலத்தால்தான்; கற்றுணர்ந்த கல்வியினுல்தான். அதுவும் நமது குருநாதாள் ஏற்படுத்திய கல்வி முறையினுல்தான் என்பதை வாசகர்கள் இதிலிருந்து அறிந்துகொண்டிருப்பார்கள். இந்தக் கல்வி முறைதான் அன்று மான்களுடனும் மயில்களுடனும் விளையாடி ரிஷிகுமாரன்போல் விளங்கிவந்த அந்த மூர்த்தியை இன்று

ராஜாக்களுடனும் மந்திரிகளுடனும் ராஷ்டிரபதிகளுடனும் உறவாடச்செய்கிறது. உலகமே காலடியில் வணங்கும்படி செய்கிறது. இவ்வளவுக்கும் மூலகாரணம் நமது குருநாதாள்தான்.

அந்தக் குருநாதாளை 24 வருஷகாலம் வரையில் பக்கத்திலிருந்தே பரமபக்தியுடன் சுசுரூஷை செய்து வந்தார் இந்த வித்யாதீர்த்தர். நமது குருநாதாளும் ஒரு செடியை நட்டு பத்ர புஷ்ப சாகாதிகளுடன் வ்ருத்தியாவதைக் கண்டு இனிமேல் இது ஸாதுக்களுக்குப் பலவ்ருக்ஷமாக निवासवृक्षः साधूनाम् என்று சொன்ன பிரகாரம் பரிணமிக்கக் கூடுமென்று தெரிந்து 24 வருஷத்துக்குப் பிறகுதான் அந்தர்த்தானமாஞர்கள்.

निवासवृक्षं साधूनां विद्यातीर्थं वितीर्य नः ।
योऽन्वग्रहीत् स्मरामस्तं चन्द्रशेखरसद्गुरुम् ॥

நிவாஸவ்ருக்ஷம் ஸாதூநாம் வித்யாதீர்த்தம் விதீர்ய ய: ।
யோ அந்வக்ரஹீத் ஸ்மராமஸ்தம் சந்த்ரசேகர ஸத்குரும் ॥

✣✣✣

3

अगौरीरमणं कञ्चिदफालनयनं नुमः ।
अविनायकतातं तमपूर्वं चन्द्रशेखरम् ॥१॥

அகௌரீ ரமணம் கஞ்சிதபால நயநம் நும: ।
அவிநாயக தாதம் தமபூர்வம் சந்த்ரஶேகரம் ॥

1. சந்திரசேகரர் (பரமசிவன்) பார்வதிக்கு நாயகன். நெற்றிக்கண்ணன் விநாயகருக்குத் தந்தை. நம் ஸந்நிதானத்தினிடம் இம்மூன்றுமில்லாவிட்டாலும் இவரும் அபூர்வமான சந்திரசேகரர்தான் (ஸ்ரீ சந்திரசேகரபாரதீ). இவரைத் துதிப்போம்.

ब्रह्मविद्यासमाश्लेषेऽप्यूर्ध्वरेतोव्रतान्वितम् ।
तथाऽपि विद्यातीर्थस्य जनकं सद्गुरुं नुमः ॥२॥

ப்ரஹ்மவித்யா ஸமாஶ்லேஷேऽப்யூர்த்வரேதோ வ்ரதாந்விதம் ।
ததாऽபி வித்யா தீர்த்தஸ்ய ஜநகம் ஸத்குரும் நும: ॥

2. ஸத்குரு, ப்ரஹ்ம வித்யை என்ற பெண்ணுடன் சேர்ந்திருந்த போதிலும் பிரஹ்மசர்ய நியமத்தைக் கைவிடாதவர். அப்படியிருந்தபோதிலும் வித்யாதீர்த்தர் என்ற தனயனுக்குத் தந்தை. ப்ரஹ்ம ஞானத்துடனும், ப்ரஹ்மசர்ய நியமத்துடனும் விளங்குபவர். வித்யாதீர்த்தர் என்ற சிஷ்யரை நமக்கு அருளியவர். இவரை துதிப்போம்.

तीर्थप्रसाददातारः सन्त्वन्येऽपि मठाधिपाः ।
विद्यातीर्थप्रदाता तु केवलं नो जगद्गुरुः ॥३॥

தீர்த்த ப்ரஸாத தாதார: ஸந்த்வந்யேऽபி மடாதிபா: ।
வித்யாதீர்த்தப்ரதாதா து கேவலம் நோ ஜகத்குரு: ॥

3. தீர்த்தத்தையும், பிரஸாதத்தையும் எல்லா மஹான்களும் கொடுக்கிறுர்கள். ஞானம் என்னும் தீர்த்தத்தை (அபிநவ வித்யாதீர்த்தரை) கொடுத்த மஹான் நம் ஸந்நிதானம் ஒருவர்தான்.

வழக்கம்போல் ஒருநாள் ஸாயங்காலம் சிருங்ககிரியில் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் உத்தரவின்பேரில் காலபைரவர் ஆலயத்துக்கு வித்யார்த்திகளுடன் இந்த லேககரும் சென்றுர். போகும்வழியில் பலவித புஷ்பச் செடிகள் இருந்தன. அவ்வழியாக நாங்கள் செல்லும்போது ஒருவன் ஒரு பசுமாட்டை விரட்டிக்கொண்டிருந்தான். கல்லாலும் தடியாலும் அடிப்பதைப் பார்த்து ஸ்ரீ ஸந்நிதானம் அவனை அழைத்து, ''பசுமாட்டை அடிக்கலாமா?'' என்று கேட்டார். அதற்கு அந்தப் பாராக்காரன், ''இது மடத்து பசுமாடில்லை. ஊரிலிருந்து வந்த ஏதோ ஒரு மாடு. புஷ்பச் செடியையெல்லாம் நாசம் செய்துகொண்டிருந்தபடியால்தான் இதை விரட்டுகிறேன்'' என்று பதில் கூறினுன். அதற்கு ஸந்நிதானம் சொன்னுர்கள் – ''அப்பா! பசுமாடுகளில் நம் மாடு, பிறர் மாடு என்று வேற்றுமை பாராட்டக் கூடாது. அது வாயில்லாப் பிராணி. அதை அடிக்கவே கூடாது.'' காவல்காரன் பயந்து நடுங்கி, ''ஸ்வாமி! அடிக்காமல் அதை வெளியேற்ற முடியாதே'' என்றுன். அதற்கு நம் குருநாதாள், ''நான் ஓர் உபாயம் சொல்லுகிறேன். இதோ இந்தக் கரையில் முளைத்திருக்கும் பசுமையான புல்லைப் பிடுங்கிக் கையில் வைத்துக்கொண்டு அதை 'வா வா' என்று அழைத்துக்கொண்டே வெளியில் விட்டுவிடு'' என்றுர். காவல்காரன் அவ்விதம் செய்யவே பசுமாடு வெகு சுலபமாக அவனுடன் வெளியே சென்று விட்டது. அப்பொழுது இந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீநிவாஸன் முதலிய வித்யார்த்திகளைப் பார்த்து, ''இந்தச் சந்தர்ப்பத்துக்கு உசிதமான ஒரு சுலோகம் சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்றுர்கள். எல்லோரும் திக்பிரமை அடைந்துவிட்டார்கள். இந்த லேககருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. ஸ்ரீநிவாஸனுக்கு மாத்திரம் எப்படித்தான் ஸ்புரணமாயிற்ருே தெரியவில்லை. 'उपायेन हि यच्छक्यं न तच्छक्यं पराक्रमैः' *(உபாயேன ஹி யச்சக்யம் ந தச்சக்யம் பராக்ரமை:)* என்று கணீரென்று சொல்லவே அவனுடைய பிரதிபா சக்தியை நாங்கள் எல்லோரும் மெச்சினேம். அப்பொழுது அவனுக்கு வயது 14. இதைக் கேட்ட ஸந்நிதானம் மனத்திற்குள் ஸந்தோஷப்பட்டபோதிலும், ''அதிருக்கட்டும் வேறு ஏதாவது

சொல்லமுடியுமா ?'' என்று கேட்கவே இந்த லேககர் உள்பட எல்லோரும் விழிக்கலானேம்.

அதுசமயம் ஒரு ஸாவுக்காரர் (ஜமீன்தார்) அங்கே வந்துசேர்ந்தார். ''காலபைரவ ஆலயத்துக்கு நானும் வரலாமா?'' என்று கேட்டார். ''ஆஹா! வரலாமே'' என்று சொல்லிக் கூடவே அழைத்துச் சென்ருர்கள். இந்தப் பசுமாட்டைப்பற்றியே நாங்கள் பேசிக்கொண்டு சென்ரேம். அந்தப் பசுமாடு இந்த ஸாவுக்காரருடைய மாடாகவே இருந்தது. இது ஸந்நிதானத்துக்கு எப்படித் தெரிந்ததோ நாம் அறியோம். அவரிடம் ஏதோ யோக க்ஷேமம் விசாரித்து விட்டு ''நான் கேட்டதற்குப் பதிலென்ன ?'' என்று இந்த லேககரைப் பார்த்துக் கேட்கவே நடுவில் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கிடைத்ததால் பாஷ்யபாட ஸமயத்தில் पश्चादिभिश्चाविशेषात् *பச்வாதிபிஸ்சாவிசேஷாத்* என்ற இடத்தில் हरिततृणपूर्णपाणिमुपलभ्य तं प्रति अभिमुखीभवन्ति *ஹிரித த்ருண பூர்ண பாணிமுபலப்ய தம் ப்ரதி அபிமுகீ பவந்தி* என்று பாஷ்யகாரர் விவரித்திருப்பதை எடுத்துக் காட்டி, ''இன்று பாடத்தில் வந்த விஷயம் பிரத்யக்ஷமாகவே காணப்படுகிறது. ஏனென்ருல் यथा दण्डोद्यतकरं पुरुषमभिमुखमुपलभ्य मां हन्तुमयमिच्छतीति पलायितुमारभन्ते *யதா தண்டோத்யதகரம் புருஷம் அபிமுகம் உபலப்ய மாம் ஹந்தும் அயம் இச்சதி இதி பலாயிதும் ஆரபந்தே* என்று சொன்ன பிரகாரம் காவல்காரன் தடியுடன் வந்தவுடன் மாடு ஓடுவதையும், அவன் ஸந்நிதானத்தின் ஆக்ஞையினுல் புல்லைக் கையில் பிடித்தவுடன் அவனைத் தொடர்ந்து வருவதையும் நேரிலேயே பார்த்துவிட்டபடியால், பாஷ்யகாராள் சொன்னது அவ்வளவும் உண்மைதான் என்பதை உணர்ந்துவிட்டேன்'' என்று சொல்லவே மந்தஹாஸம் செய்து ஆமோதித்து விட்டு ''இது உன் அபிப்பிராயம்; நான் சொல்ல வந்தது வேறு'' என்று சொல்லி,

गोशतादपि गोक्षीरं प्रस्थं धान्यशतादपि ।
प्रासादेऽपि च खट्वार्धं शेषाः परविभूतयः ॥

கோஶதாதபி கோக்ஷீரம் ப்ரஸ்த்தம் தான்யஶதாதபி ।
ப்ராஸாதேऽபி ச கட்வார்தம் ஶேஷா: பரவிபூதய: ॥

என்ற நீதி சுலோகத்தைச் சொல்லி அதன் அர்த்தத்தை விளக்கினுர்கள். அர்த்தத்தை விளக்கும்போது

धेनुर्वत्सस्य गोपस्य स्वामिनस्तस्करस्य वा।
पयः पिबति यो यस्याः धेनुस्तस्येति निश्चयः ॥

தேநுர் வத்ஸஸ்ய கோபஸ்ய ஸ்வாமிநஸ் தஸ்கரஸ்ய வா।
பய: பிபதி யோ யஸ்யா: தேநுஸ் தஸ்யேதி நிஶ்சய: ॥

என்ற சுலோகத்தையும் சொல்லி, ''இதை எதற்காகச் சொல்கிறேன் தெரியுமா?'' என்ருர்கள். இதற்கும் ஸ்ரீநிவாஸன்தான் தகுந்த பதிலளித்தான்.

ஒருவனிடம் நூற்றுக்கணக்கான பசுக்களும் தனதான்யாதிகளும் இருந்தும் அவனுடைய ஜீவனத்துக்கு உபயோகப்படக்கூடியது மிக ஸ்வல்பம்தான். அதுபோல் வேதங்கள் அநந்தமாயிருந்தபோதிலும் 'यत्सारभूतं तदुपासितव्यं' *யத் ஸாரபூதம் தத் உபாஸிதவ்யம்* என்று சொன்ன பிரகாரம் அதன் ஸாரத்தைக் கிரஹித்துக் கொள்பவன்தான் புத்திசாலி.

இதையெல்லாம் கேட்ட அந்த ஸாவுக்காரர் சொல்லலுற்ருர்:– ''ஸ்வாமி! இதை நான் ஆமோதிக்கவில்லே. ஸந்நிதானம் கோஸம்ரக்ஷணம் முதலிய விஷயங்களேப்பற்றிச் சொன்னதெல்லாம் என்னேப்பற்றித்தான் என்று நினேக்கிறேன். ஏனென்ருல் நான் நூற்றுக்கணக்கான பசுமாடுகளே வைத்துக் கொண்டு அவைகளே ஸரிவர ஸம்ரக்ஷணம் செய்யாததும் அவைகளே அடித்ததும் என்தவறுதான். பாலே விற்று அந்தப் பணத்தைக் குடும்பத்துக்கு உபயோகப்படுத்துவதும் என் குற்றம்தான். இனிமேல் அந்த கோக்ஷீரத்தை தேவதா விஷயமாகவும் ஸாதுக்கள் விஷயமாகவும் உபயோகித்துவருவேன். இது நிச்சயம்'' என்று உறுதிகூறி அவ்விதமே நடந்துவந்தார். ஸந்நிதானமும் 'एका क्रिया ह्यर्थकरी बभूव' *ஏகா க்ரியா ஹி அர்த்தகரீ பபூவ* என்று சொல்லி மகிழ்ந்தார்கள். இந்த லேககரோ 'एका क्रिया त्र्यर्थकरी बभूव' *ஏகா க்ரியா த்யர்த்தகரீ பபூவ* என்று வர்ணித்தார். அதாவது (1) அன்று பாஷ்ய பாடத்தில் வந்த पश्वादिभिश्चाविशेषात्, *பஶ்வாதிபிஶ்சாவிசேஷாத்*, என்ற பங்க்தியின் அர்த்தம் விசதமாயிற்று. (2) ஸ்ரீநிவாஸன் சொன்ன பிரகாரம் ஸாரகிரஹணம்தான் பிரதானம். (3) ஸாவுக்காரர் சொன்னபிரகாரம் கோஸம்ரக்ஷணம்தான் பெரிய தர்மம் என்பதும் விளங்கிவிட்டது. குடீரம் வந்தவுடன் ஸ்ரீநிவாஸன் மற்றப் பையன்களிடம்

பேசிக்கொண்டிருந்தான். ''என்னிடம் கேட்டிருந்தால் இன்னெரு விஷயத்தையும் விளக்கியிருப்பேன். அதாவது உபாத்யாயர்கள் பையன்களை அடிக்கக்கூடாது. புல்லினுல் பசுமாட்டை வசப்படுத்தியதுபோல் நல்ல வார்த்தைகளாலேயே வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்ற விஷயமும் இதனுல் விளங்குவதால் 'चतुरर्थकरी बभूव' *சதுரர்த்தகரீ பபூவ* என்று அல்லவா சொல்ல வேண்டும்'' என்று இந்த லேககர் காதில் விழும்படியாகவே சொல்லிக் குறும்புச் சிரிப்பினுல் எங்களது மனத்தைக் கவர்ந்துவிட்டான். மேதாவிலாஸத்துடன் இவ்விதமான பேச்சுத் திறமையும் பால்யம் முதற்கொண்டே தொடர்ந்து வந்ததை இந்த லேககர் பலமுறை அநுபவித்திருக்கிருர்.

நமது குருநாதாள் பெரிய ஜீவன்முக்த நிலையிலிருந்த போதிலும் வியவஹாரகாலத்தில் மற்றவர்களைப்போலவே பேசுவார்கள். சில ஸமயம் தமாஷாகவும் ஹாஸ்யமாகவும் கூடப்பேசி சிஷ்யர்களை மகிழ்விப்பார்கள். ஒருநாள் காலபைரவ ஆலயத்துக்குச் செல்லும்போது ரகுவம்ச சுலோக பாடங்களைப் பரீக்ஷித்துவிட்டுக் கேட்டார். ''ரகுவம்சம் என்று சொல்லுகிறீர்களே, அதில் யார் யார் இருந்திருக்கிருர்கள், பெயர் சொல்லமுடியுமா?'' சில பெயர்களைச் சொன்னவுடன் ''அதிருக்கட்டும் रामस्य पिता कः *ராமஸ்ய பிதா க:?* (ராமனின் தந்தை யார்)'' என்று கேட்டார்கள். *தசரத:* 'दशरथः' (தசரதர்) என்று பையன்கள் விடையளித்தார்கள். 'तस्य पिता कः?' *தஸ்ய பிதா க:?* ''(அவருடைய தந்தை யார்)'' என்று கேட்கவே 'अजः' *அஜ:* (அஜர்) என்று பதில் வந்தது. மறுபடியும் 'तस्य पिता कः?' 'तस्य पिता कः?' *தஸ்ய பிதா க:?* (அவருடைய தந்தை யார் ? அவருடைய தந்தை யார் ?) என்று கேட்டுக் கொண்டே போனுர்கள். பையன்களும் ரகு, திலீபன் முதலிய பெயர்களைச் சொல்லிக்கொண்டே போனுர்கள். அதற்கு மேல் பையன்களால் பதிலளிக்க முடியவில்லை. ''இதைப்பற்றி ஒரு நாடோடிக் கதை உண்டு. அதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ?'' என்று குருநாதாள் சொல்லவே அதைச் சொல்லவேண்டுமென்று நாங்கள் பிரார்த்தித்தோம்.

குருநாதர் மந்தஹாஸத்துடன் சொல்லலானுர்:– ஓர் ஊரில் ஒரு பெரிய பிரபு இருந்தார். அவர் கிருபண சிகாமணி. (கருமி). ஆனுல் தன்னை 'दाता' *தாதா* (கொடையாளியாக) எல்லோரும் எண்ணவேண்டுமென்று கருதி சில வித்வான்களுக்கு ஸம்பாவனை

செய்து வந்தார். இதைக் கேள்வியுற்ற அநேக வித்வான்கள் ஸம்பாவனைக்காகக் கூட்டம் கூட்டமாய் வரவே அந்தப் பிரபு ஓர் உபாயம் செய்தார். அதாவது தாம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சளைக்காமல் யார் பதில் சொல்லுகிறார்களோ அவருக்குத்தான் ஸம்பாவனை கொடுக்கமுடியும். மற்றவர்களுக்கு ஒன்றும் கிடையாது என்று நிபந்தனை ஏற்படுத்தினார். அதற்காகவே ஒரு கேள்வியையும் தயார் செய்துகொண்டார். வந்தவர்களிடமெல்லாம், ''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்பார். வித்வான்களும் தர்க்கம், வியாகரணம், வேதாந்தம் என்றெல்லாம் சொல்லி அதிலிருந்தே கேள்வி வரும் என்று எதிர்பார்ப்பார்கள். ஆனால் அவர் அதையெல்லாம் விட்டுவிட்டு ரகுவம்சத்திலேயே கேள்வி கேட்பார். அதாவது 'रामस्य पिता कः?' *ராமஸ்ய பிதா க:?* என்று ஆரம்பித்து 'तस्य पिता कः?, तस्य पिता कः?' *தஸ்ய பிதா க:? தஸ்ய பிதா க:?* என்று கேட்டுக்கொண்டே போவார். வந்த வித்வான்களெல்லாம் சளைத்துப்போய் ஸம்பாவனை வாங்காமலே திரும்பிப்போவார்கள். இதைக் கேள்விப்பட்ட தெனாலிராமன் என்ற விகடகவி தகுந்த ஏற்பாட்டுடன், அந்தப் பிரபுவினிடம் சென்றான். அவனிடமும் 'रामस्य पिता कः?' *ராமஸ்ய பிதா க:?* என்று கேட்கவே 'दशरथः' *தசரத:* என்று பதிலளித்தான். அவரும் வழக்கம்போல் 'तस्य पिता कः?' *தஸ்ய பிதா க:?* என்று கேட்கவே 'एकादशरथः' '*ஏகாதசரத :*' என்று பதில் வந்தது. மேலும் 'तस्य पिता कः?' *தஸ்ய பிதா க:?* என்று கேட்கவே 'द्वादशरथः, त्रयोदशरथः' *த்வாதசரத:, த்ரயோதசரத:* என்று சொல்லிக் கொண்டே போனதைப்பார்த்து அந்தத்தனிகர் சளைத்துப்போய், ''ஐயா உமக்கு நமஸ்காரம் . இந்தப் பதிலை யாரிடமும் சொல்லாதீர்கள். உமக்கு வேண்டிய ஸம்பாவனையைக் கொடுத்துவிடுகிறேன்'' என்று சொல்லி அனுப்பிவிட்டாராம். எப்படியிருக்கிறது நான் சொன்ன கதை'' என்று கேட்டுச் சிரித்தார்கள். அதைக் கேட்டு நாங்களும் வெகுநேரம் சிரித்துக்கொண்டே இருந்தோம். கடைசியில், ''நீங்களும் இந்தக் கதையைச் சொல்லி மற்றவர்களை ஏமாற்றவேண்டாம். இதை மறந்து விடுங்கள். உங்களது பாடத்திலேயே கவனமாயிருங்கள்'' என்று சொல்லி விடையளித்தார்கள். ஸந்நிதானமும் நாங்களும் எல்லோரும் சேர்ந்து அநுபவித்த அந்த ஹாஸ்ய நிகழ்ச்சியானது இன்று நடப்பது போலவே தோன்றுகிறது. ஸந்நிதானம் மறக்கச் சொன்னார்கள். நாங்கள் எவ்வளவோ முயன்றும் அதைமாத்திரம் மறக்கவே முடியவில்லை. இவ்விதம் ஜீவன்முக்த நிலையிலும் பரம ரஸிகர்களாக இருந்தார்கள்.

சில ஸமயத்தில் ஸந்நிதானம் பையன்களிடம் குசல ப்ரச்னம் பண்ணுவார்கள். ஸாதாரணமாகக் கேட்பது போல், ''இன்று சமையலெல்லாம் நன்ருயிருந்ததா? என்ன சமையல் செய்திருந்தார்கள்? வாய்க்கு ருசியாக இருந்ததா? உப்பு ஜாஸ்தியா? உறைப்பு ஜாஸ்தியா?'' என்றெல்லாம் பாமர ஜனங்கள் கேட்பதுபோல் கேட்டு விடை தெரிந்து கொள்வார்கள். அவரது அந்தரங்க நோக்கம் இன்னது என்று தெரியாத வெகுளிகளான மற்ற பையன்களெல்லாம் வாயில் வந்ததை உளறிவிடுவார்கள். ஸ்ரீநிவாஸன் மட்டும் பேசாமல் இருப்பான். ''சாப்பாட்டு விசாரத்தைப்பற்றிக் கேட்டால் நீங்கள் எல்லோரும் நன்ருகப் பதில் அளிக்கிறீர்களே. ஸ்ரீநிவாஸன் ஏன் வாயைத் திறக்கவே இல்லே?'' என்று அவனேயும் கிண்டிவிட்டு வேடிக்கையாகக் கேட்பார்கள். ஸ்ரீநிவாஸனே, ''எல்லாம் குருப்ரஸாதம்தான். குருப்ரஸாதம் எப்போதுமே நன்ருகத்தான் இருக்கும்'' என்று பதிலளிப்பான். ஆகார விஷயமான குணதோஷங்களே ஸ்ரீநிவாஸன் வாயினுல் சொல்லவைக்க வேண்டும் என்று ஸந்நிதானம் எவ்வளவோ முயன்று பார்த்தும் பலிக்கவில்லே. இது விஷயத்தில் ஸந்நிதானம்தான் தோல்வியடைந்தார். இந்தப் பையன்களுக்கு ஜிஹ்வா சாபல்யம் எவ்வளவு தூரம் இருக்கும் என்று பரீக்ஷிப்பதற்காகவே இந்தக் கேள்வியெல்லாம் என்பதை நமது ஸ்ரீநிவாஸன் எப்படியோ தெரிந்துகொண்டுவிட்டான். ஆகையால் அது விஷயத்தில் தனது சூக்ஷ்ம புத்தியை உபயோகித்து வெகு ஜாக்ரதையாகவே இருந்துவந்தான். ஸந்நிதானமும் ஸ்ரீநிவாஸனிடம் தன் தந்திரம் பலிக்காததைக் கண்டு அது முதல் ஆகார ஸம்பந்தமான கேள்விகள் கேட்பதையே விட்டுவிட்டார்கள். 14 வயது சிறுவனுடைய விவேகமும் வைராக்கியமும் இவ்விதம் எல்லோரும் பார்த்து அதிசயிக்கும்படி அஸாதாரணமாகவே அமைந்திருந்ததை இதனுல் வாசகர்கள் தெரிந்துகொள்வார்கள் என்பதில் ஸந்தேஹமில்லே.

ஸாயங்கால வேளேகளில் இந்த நான்கு சிறுவர்களும் மான் குட்டியுடனும் மயில்கள், கன்றுக்குட்டிகள் இவைகளுடனும் இந்த ஆசிரமத்தில் விளேயாடி வந்தார்கள் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிருேமல்லவா? அவ்விதம் ஒரு நாள் அங்கிருந்த மாமரச் சோலேயில் மான் குட்டியுடன் விளேயாடிக்கொண்டிருந்தார்கள்.

இதை ஸந்நிதானம் பக்கத்திலிருந்த ஸச்சிதானந்த விலாஸ ஆசிரமத்தின் மாடியிலிருந்து ஜன்னல் வழியாகக் கவனித்துக் கொண்டிருந்திருக்கிருர் போல் இருக்கிறது. மற்ற மூவரும் பலசாலிகளாக இருந்தபடியால் மான் குட்டி அவர்களுக்கு அடங்கியே இருந்தது. ஸ்ரீநிவாஸனே மிகவும் சிறியவன். மிகவும் இளைத்துப்போய் துர்ப்பலமாகவே இருந்தபடியால் மான் குட்டி அவனை முட்டித் தள்ளிவிட்டது. கீழே விழுந்தவன் தற்செயலாகக் குருநாதாள் பார்ப்பதைக் கண்டுவிட்டு, வெட்கமும் பயமும் மேலிட்டு உடனே எழுந்து குடீரத்தில் வந்து விழுந்தான். இந்த லேககருக்கு ஒன்றும் தெரியாதபடியால் படுத்திருந்த ஸ்ரீநிவாஸனிடம் சென்று, ''உடம்புக்கு என்ன?'' என்று கேட்கவே ஒன்றும் சொல்லாமல் கண்ணீர்விட ஆரம்பித்தான். இந்த லேககரிடம் பரம விசுவாஸமாக இருந்தபடியால் ஒன்றையும் மறைக்காமல் சொல்லிவிடுவான். அன்று மாத்திரம் என்ன கேட்டும் ஒன்றுமே பதிலளிக்கவில்லை. அன்று ராத்திரி ஜ்வரமும் கண்டுவிட்டது. அதற்கு அந்தச் சமையல்காரன் ஏதோ கஷாயம் பண்ணிக்கொடுத்தும் ஜ்வரம் நிற்கவில்லை. ஜ்வரத்தில் ஏதேதோ உளர ஆரம்பித்துவிட்டான். ''நான் இனிமேல் சிருங்ககிரியில் தங்கப்போவதில்லை. அவ்வளவுதான் எனக்குப் பிராப்தம்'' என்று ஏதேதோ உளறுவான். சில சமயம் सद्गुरो शरणं शिवोऽहं शिवोऽहं (*ஸத்குரோ சரணம் சிவோऽஹம் சிவோऽஹம்*) என்றெல்லாம் பிதற்றுவான். இது விஷயத்தை மறுநாள் ஸந்நிதானத்திடம் தெரிவித்ததற்கு, ''எல்லாம் ஸரியாய் விடும்'' என்று சொல்லி இந்த லேககரை அனுப்பிவிட்டார். இப்படியே மூன்று நாட்களிலும் ஸந்நிதானம், ''எல்லாம் ஸரியாய் விடும்'' என்றே சொல்லிவந்தார்கள். ஸ்ரீநிவாஸன் கனவில் என்ன என்ன சொல்லுகிருன். உளறுகிருன் என்பதை மாத்திரம் கவனித்துத் தெரிவிக்கச் சொன்னுர்கள். இந்த லேககரிடம் ஸ்ரீநிவாஸன் மிகுந்த விசுவாசமாக இருந்ததாலும், இவருக்கும் அவனிடம் அதிக பாசம் இருந்தபடியாலும் மூன்று நாட்கள் ஜ்வரம் விடாமல் இருப்பதைப் பார்த்து மிகவும் வருந்தினுர். ஸந்நிதான உத்தரவில்லாமல் டாக்டரை வரவழைக்கவும் இவரால் முடியவில்லை. ஸ்ரீநிவாஸனுக்கு ஏதோ மன அதிர்ச்சிதான் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று நினைத்து அவனைப் பல கேள்விகள் கேட்டு கடைசியில் அவனது மனக்கோளாறை ஒருவாறு தெரிந்து ஸந்நிதானத்திடமும் அதைத் தெரிவித்தார்.

அதாவது, மற்றப் பையன்களுக்கு இதுமாதிரி ஏதாவது உடம்பு அஸௌகரியமென்றால் ஸந்நிதானம் அதற்குத் தகுந்த சிகித்ஸை சொல்லிக்கொடுத்தும் அதில் ஸௌகர்யமாகாவிட்டால் விபூதி மந்திரித்துப் பிரஸாதம் கொடுத்தும் வந்திருப்பதை அநேகம் தடவை ஸ்ரீநிவாஸனே பார்த்திருக்கிறான். தனக்கு ஜ்வரம் இவ்வளவு பலமாயிருந்தும் குருநாதர் ஒன்றும் கவனிக்கவில்லையே. விபூதிப் பிரஸாதமும் அனுப்பவில்லையே என்ற ஏக்கத்தினால் ஜ்வரம் அதிகமாயிருப்பதை இந்த லேககர் தெரிந்துகொண்டார். ஸந்நிதானத்திடமும், இது விஷயத்தைத் தெரிவிக்கவே, ''ஒன்றும் பயப்படவேண்டாம் எல்லாம் சரியாய்விடும்'' என்றே பதில் வந்தது. வெறும்கையுடன் ஸ்ரீநிவாஸனிடம் வந்துசேர்ந்தார். ஸந்நிதானம் சொன்னதை அப்படியே தெரிவித்தால் அவனது ஏக்கம் ஜாஸ்தியாய்விடுமென்று எண்ணி அவனை ஸமாதானப் படுத்துவதற்காக அந்த க்ஷணத்தில் ஏதோ தோன்றியபடி ஒரு பொய்சொல்லி வைத்தார் இந்த லேககர். அதாவது, ''ஸந்நிதானமே நேரில் வந்து உன்னை அனுக்ரஹிக்கப்போகிறார்கள். நீ கவலைப்படாமல் தூங்கு'' என்று சொல்லவே அதையும் வாஸ்தவமென்றே நம்பிவிட்டான் அந்தப் பேதைச் சிறுவன். அதுமுதல் ''सद्गुरो पाहि सद्गुरो पाहि'' *ஸத்குரோ பாஹி ஸத்குரோ பாஹி* என்ற மந்திரத்தையே உச்சரித்தவண்ணம் இருந்தான். இந்த மந்திரத்தை யார் உபதேசித்தார்களோ தெரியவில்லை. விடாமல் சொல்லிவந்தான்.

அன்று மத்யான்னம் 12 மணி சுமாருக்குக் குருநாதாள் ஏகாதசியானபடியால் மாத்யான்னிக ஸ்நானத்துக்காகத் துங்காநதிக்குப் போகும் வழியில் இந்த ஆசிரமத்து வாயிலில் 'सद्गुरो पाहि' என்ற குரலைக் கேட்டு இந்த லேககரைக் கூப்பிட்டு, ''அதென்ன சப்தம்?'' என்றார்கள். ''ஸ்ரீநிவாஸன் தங்களையே ஸ்மரித்து இவ்விதம் ஏங்குகிறான்'' என்று இந்த லேககர் தெரிவிக்கவே நான்கு பக்கமும் பார்த்துக் கண்ணுக்கு எட்டியவரையில் ஒருவரும் தென்படாததைக் கண்டு ஸ்ரீநிவாஸன் படுத்திருக்கும் அறைக்குச் சென்றார்கள். ஸ்ரீநிவாஸன் வாரிச்சுருட்டிக் கொண்டு 'सद्गुरो पाहि' என்று அந்த மஹானின் காலில் விழுந்து விட்டான். அவ்விதம் காலைத்தொட்டு வணங்குவது மடத்தில் வழக்கம் இல்லாததால் இதில் என்ன அபசாரம் நேருமோ என்று இந்த லேககர் பயந்துவிட்டார்.

ஆனால் அவ்விதம் பயப்பட இடமில்லாமல் அந்தப் பாலகனைத் தூக்கிநிறுத்தி அவனது சிரஸ்ஸில் கைவைத்து, ''இன்னும் ஜ்வரம் அடிக்கிறதா என்ன?'' என்று ஒன்றும் தெரியாதவர் போல் கேட்டுவிட்டு ''எல்லாம் ஸரியாய்விடும் போய்ப்படு'' என்று அவனுக்குச் சொல்லிவிட்டு ஸ்நானத்துக்குச் சென்று விட்டார்கள். இந்த லேககர் கற்சிலைபோல் நின்றுவிட்டார்.

''ஸ்ரீநிவாஸனிடம் ஸமாதானத்துக்காக நாம் சொன்ன பொய்யும் கூட மெய்த்துவிட்டதே; இதென்ன ஆச்சர்யம்'' என்று இந்த லேககர் பரவசப்பட்டுப் போய்விட்டார். எப்படியோ குருநாதரின் அபயஹஸ்தம் ஸ்ரீநிவாஸனின் சிரஸுக்குக் கிடைத்துவிட்டது. காலில்விழுந்த சிஷ்யனைத் தன் அமிருதஹஸ்தத்தாலேயே தூக்கிவிட்டார். அதற்குப் பிறகு ஸ்ரீநிவாஸன் படுக்கவேயில்லை. தூக்கிவிடப்பட்டவன் மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போனான். இவ்வளவு நடந்தும் ஸ்ரீநிவாஸனுக்குத்தான் பீடாதிகாரம் என்று ஒருவரும் தீர்மானிக்கமுடியாமலே இருந்தது. ஸந்நிதானமும் அதற்குத் தகுந்தபடியே அஸக்தராக நடந்து வந்தார்கள்.

பின்னால் ஸ்ரீநிவாஸனது ஜாதகத்தைப் பார்த்து ஜோஸ்யர்கள் சொன்னதில் ''அவனுக்குப் பெரிய கண்டம் ஏற்பட்டது. குருநாதரின் அனுக்ரஹத்தால்தான் நிவிருத்தியாயிற்று என்றும், அதிலிருந்து எழுந்த பிற்பாடு அவனுக்குப் பெரிய சக்கரவர்த்தி யோகம்தான்'' என்றும் தெரியவந்தது. 'அந்தக் கண்டம் மூன்று நாள் ஜ்வரத்துடன் ஒழிந்துபோகட்டும் என்றுதான் குருநாதாள் பரிஹாரம் செய்யவில்லையோ' என்று பின்னால் நாங்கள் பேசிக் கொண்டோம். எப்படியோ ஸர்வக்ஞ மூர்த்தியான குருநாதாள் ஸ்ரீநிவாஸனைக் காப்பாற்றிவிட்டார். இதன்மூலம் சிஷ்யகோடிகளாகிய நம்மையும் காப்பாற்றி விட்டாரல்லவா? நாமெல்லோரும் பரமதன்யர்கள்.

இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்து அநுபவித்த இந்த லேககர் ''ஸ்ரீநிவாஸன்தான் அடுத்த பட்டத்திற்கு உரியவன்'' என்று தீர்மானித்துவிட்டார். ஏனென்றால் நமது குருநாதாளின் நயன தீக்ஷை இதற்குமுன் பல தடவை ஏற்பட்டிருந்தபோதிலும் ஸந்யாஸ காலத்தில் ஏற்பட வேண்டிய ஸ்பர்ச தீக்ஷை இன்றே கிடைத்துவிட்டது.

ஒருவருக்கும் கிடைக்காத இந்த ஸ்பர்ச தீக்ஷா யோகம் இந்த லேககரின் முயற்சியால்தான் ஏற்பட்டதென்று ஸ்ரீநிவாஸன் அடிக்கடி சொல்லுவான். அப்பாலகனின் குருபக்தியும் ''सद्गुरो पाहि'' (*ஸத்குரோ பாஹி*) என்ற மஹா மந்திரத்தின் பிரபாவமும்தான் காரணமென்று இந்த லேககர் சொல்லி வந்தார். ''அவனது அதிருஷ்ட விசேஷம்தான்'' என்று மற்றவர்கள் சொன்னுர்கள். ஜோஸ்யர்களோ, ''ஒரு பெரிய கண்டம் நீங்கிவிட்டபடியால் சக்கரவர்த்தியோகம் ஆரம்பித்திருப்பதுதான் காரணம்'' என்ருர்கள். பலர் பலவாருகக் கூறினுர்கள். இந்த அபூர்வ வித்யாதீர்த்த மூர்த்தியைக் குருவாக அடைந்த பாரத தேச மஹாஜனங்களின் பாக்கிய விசேஷம்தான் எல்லாவற்றிற்கும் மூல காரணம் என்பதை யாரும் ஆக்ஷேபிக்க மாட்டார்கள். இவ்விதம் விவேகம், வைராக்யம், மேதா சக்தி, வாக்கு வன்மை, ஞானம், தபஸ் முதலிய எல்லா விஷயங்களேயும் சோதித்த பிறகுதான் ஸந்நிதானம் சிஷ்ய பரிக்ரஹம் செய்யத் தீர்மானித்தார்கள்.

शांकरी मूर्तिरेषा हि चन्द्रशेखरसंज्ञिता ।
विज्ञानदीपकलनादज्ञानं परिमार्ष्टु नः ॥१॥

शृङ्गक्ष्माभृत्समुद्भूतं विद्यातीर्थं सुपावनम् ।
कलिदोषहरं किंचित् कलयामः पदे पदे ॥२॥

சாங்கரீ மூர்த்திரேஷா ஹி சந்த்ரசேகர ஸம்ஞிதா ।
விக்ஞான தீப கலநாத ஞானம் பரிமார்ஷ்டு ந: ॥

ச்ருங்கக்ஷ் மா ப்ருத் ஸமுத்பூதம் வித்யாதீர்த்தம் ஸுபாவனம் ।
கலிதோஷஹரம் கிஞ்சித் கலயாம: பதே பதே ॥

✣ ✣ ✣

๛ 4 ๛

विनाऽपि फालनयनं विना क्रोधं विनाऽनलम् ।
विनाशितस्मरं स्मेरं स्मरामश्चन्द्रशेखरम् ॥

விநாऽபி பாலநயநம் விநா க்ரோதம் விநாऽநலம் |
விநாஶித ஸ்மரம் ஸ்மேரம் ஸ்மராமஶ்சந்த்ரஶேகரம் ||

நெற்றிக் கண்ணில்லாமலும், கோபமில்லாமலும், நெருப்புப் பொறியில்லாமலும், மன்மதனே ஜயித்த, மந்தஹாஸத்துடன் கூடிய ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸத்குருவை ஸ்மரிக்கிறோம்.

श्रीनिवासाख्यया गूढं भस्मच्छन्नानलोपमम् ।
बालयोगिवरं कंचित् संस्मरामः पदे पदे ॥

ஸ்ரீநிவாஸாக்யயா கூடம் பஸ்மச்சந்நாநலோபமம் |
பாலயோகி வரம் கஞ்சித் ஸம்ஸ்மராம: பதே பதே ||

சாம்பலில் மறைந்துள்ள நெருப்புப்போல ஸ்ரீநிவாஸன் என்ற பெயரில் மறைந்திருக்கும் சிறந்த ஒரு பாலயோகியை அடிக்கடி மனதில் தியானிக்கிறோம்.

நமது ஸ்ரீநிவாஸனுக்கு ஒருவருக்கும் கிடைக்காத ஸ்பர்ச தீக்ஷை,நமது குருசரணுளின் அமிருத ஹஸ்தத்தால் கிடைத்த வரலாற்றை முன் கட்டுரையில் கூறினேமல்லவா? அன்றே அவனே சிஷ்ய பரிக்ரஹணம் செய்துகொண்டு விட்டதாக இந்த லேககர் தீர்மானித்துவிட்டார். ஏனென்ருல், ஸாதாரணமாக ஸந்யாஸம் கொடுப்பது, ஏகாதசீ தினத்தில்தான் வழக்கம். சிருங்ககிரியில் ஆசிரம ஸ்வீகாரம் செய்பவர்கள், அநேகமாக அந்த ஏகாதசியில்தான் குருவை அண்டி மஹாவாக்யோபதேசம் பெற்றுக் கொள்வார்கள். அந்த உபதேச காலத்தில்தான் தீக்ஷைகள் செய்வதும் வழக்கம். குருவானவர் சிஷ்யனே அநுக்ரஹம் செய்யும் முறைக்குத்தான் தீக்ஷை என்று பெயர். இந்த தீக்ஷைகளேப்பற்றி சிவரஹஸ்யம் முதலிய க்ரந்தங்களில்

விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதில் மூன்று தீக்ஷைகள்தான் முக்கியமானவை. அவையாவன:– ஸ்மரண தீக்ஷை, சாக்ஷுஷ தீக்ஷை, ஸ்பர்ச தீக்ஷை.

சிஷ்யன் எதிரில் இல்லாதபொழுது, மனதினால் தூரதேசத்திலிருக்கும் சிஷ்யனை நினைத்து அன்புடன் அநுக்ரஹிப்பதுதான் ஸ்மரண தீக்ஷை என்று சொல்லப்படுகிறது.

தன்னிடம் சரணாகதியடைந்த சிஷ்யன் நேரில் வரும்போது, குருவானவர் தன் கருணாகடாக்ஷத்தால் அன்புடன் பார்ப்பது சாக்ஷுஷ தீக்ஷை என்று சொல்லப்படுகிறது. இதைத்தான் நமது சங்கரபகவத்பாதாள் சிவானந்தலஹரியில் –

वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणां दिव्यैश्चिरं प्रार्थिताम् ।

(*வீக்ஷாம் மே திச சாக்ஷுஷீம் ஸகருணாம் திவ்யைச் சிரம் ப்ரார்த்திதாம்*) என்று வர்ணிக்கிறார்கள்.

சிஷ்யனைத் தன் பக்கம் வரவழைத்துத் தன் வலது கையால் சிஷ்யனுடைய சிரஸ்ஸை ஸ்பர்சிப்பது (*ஹஸ்தமஸ்தகஸம்யோகம்*) தான் ஸ்பர்ச தீக்ஷை என்று சொல்லப்படுகிறது. இதைத்தான், கைவல்ய நவநீதம் என்ற நூலில் விளக்குகிறார் ஆசிரியர்:–

कमठझषवयांसीवादरात् स्मृत्युदीक्षा-
च्छदयुगपुटमध्यस्पर्शनैर्दीक्षयित्वा ।

கமட ஜஷவயாம்ஸீவாதராத் ஸ்ம்ருத்யுதீக்ஷா-
ச்சதயுக புடமத்ய ஸ்பர்சனைர் தீக்ஷயித்வா ।

என்று இது மூன்று திருஷ்டாந்தங்களுடன் விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆமை வெகு தூரத்திலிருந்தபோதிலும் மனதால் ஸ்மரிப்பதாலேயே அதன் குஞ்சுகள் வளர்கின்றன. மீனோ, தன் குஞ்சுகளை அன்புடன் பார்க்கும் பார்வையினாலேயே வளர்க்கிறது. பறவைகளோ தன் குஞ்சுகளை இறக்கைகளின் மத்தியில் வைத்துக்கொண்டு (அடைகாத்து) போஷிக்கின்றன. இவ்விதம் ஸ்தன்யபானம் இல்லாமலேயே மூன்று பிராணிகளும் தன் குஞ்சுகளைப் போஷித்து வருவது உலகப் பிரஸித்தமல்லவா? நமது ஸ்ரீநிவாஸனுக்கோ இந்த மூன்று தீக்ஷைகளும் அன்று பூர்த்தியாய்க் கிடைத்துவிட்டன.

ஆனல் இந்த லேககருக்கு, முன்சொன்ன மூன்று திருஷ்டாந்தங்களும் அப்பொழுது ஞாபகத்துக்கு வரவில்லே. நரஸிம்ஹமூர்த்தியானவர் பிரஹ்லாதனுக்கு அபயஹஸ்தம் அளித்த வரலாறுதான் நினைவுக்கு வந்தது.

स्वपादमूले पतितं तमर्भकं विलोक्य देवः कृपया परिप्लुतः ।
उत्थाप्य तच्छीर्ष्ण्यदधात्करांबुजं कालाहिवित्रस्तधियां कृताभयम्॥

स तत्करस्पर्शधुताखिलाशुभः सपद्यभिव्यक्तपरात्मदर्शनः ।
तत्पादपद्मं हृदि निर्वृतो दधौ हृष्यत्तनुः क्लिन्नहृदश्रुलोचनः ॥

ஸ்வபாத மூலே பதிதம் தமர்பகம்
விலோக்ய தேவ: க்ருபயா பரிப்லுத: |
உத்தாப்ய தச்சீர்ஷ்ணி அததாத் கராம்புஜம்
காலாஹி வித்ரஸ்த தியாம் க்ருதாபயம் ||

ஸ தத்கர ஸ்பர்ச துதாகிலாசுப:
ஸபத்யபிவ்யக்த பராத்மதர்ஶந: |
தத்பாதபத்மம் ஹ்ருதி நிர்வ்ருதோ ததௌ
ஹ்ருஷ்யத்தனு: க்லிந்நஹ்ருதச்ருலோசந: ||

என்று பாகவதத்தில் சொன்ன வரலாறுதான் மனதில் ஸ்புரித்தது. அந்த ஸமயத்தில் கண்ணீர் விட்டுக்கொண்டு பரவசத்துடனும், விக்கலுடனும், மயிர்க் கூச்சுடனும் குருவின் பாதாரவிந்தத்தை அணேத்துக்கொண்டு விக்கி விக்கி அழுவதைப் பார்த்தால், அந்தச் சிறுவனே ஸாக்ஷாத் பிரஹ்லாத மூர்த்தியென்றுதான் யாரும் சொல்வார்கள். ஏற்கெனவே உள்ள பிரஹ்மதேஜஸ்ஸானது குருநாதாளின் கரகமல ஸ்பர்சத்தால் பன்மடங்காகப் பிரகாசித்தது.

முன் கூறப்பட்ட பாகவத சுலோகத்தில், மூன்று தீக்ஷைகளேயும் ஸூசனேயாக வியாஸர் காண்பித்திருக்கிருர். அதில் विलोक्य (*விலோக்ய*) என்ற பதத்தால் சாக்ஷுஷ தீக்ஷையையும், कृपया परिप्लुतः (*க்ருபயா பரிப்லுத:*) என்பதால் ஸ்மரண தீக்ஷையையும் तन्मूर्ध्नि अदधात्करांबुजम् (*தன் மூர்த்நி அததாத்கராம்புஜம்*) என்பதால் ஸ்பர்சதீக்ஷையையும் (हस्तमस्तकसंयोगं) (*ஹஸ்த மஸ்தக ஸம்யோகம்*) காண்பித்திருக்கிருர். ஶ்ரீநிவாஸனேத் தூக்கி நிறுத்தி அபயஹஸ்தம் கொடுத்து அனுக்ரஹம் செய்ததிலும், இந்த மூன்று தீக்ஷைகள்

அடங்கியிருப்பதை சூக்ஷ்மமாக கவனித்தால் தெரிந்து கொள்ளலாம். ஆனால் பிரஹ்லாத அனுக்ரஹத்துக்கும் ஸ்ரீநிவாஸ அனுக்ரஹத்துக்கும் ஒரு விசேஷம் மாத்திரமுண்டு. நரஸிம்ம மூர்த்தியானவர் கோபாவேசத்துடனிருக்கையில் அவரது கோபத்தை சமனம் செய்வதற்காக பிரம்மாதி தேவர்களால் அனுப்பப்பட்ட பிரஹ்லாதனைப் பார்த்தவுடன் கோபம் நீங்கி, வாத்ஸல்யம் மேலிட்டு, அவனது சிரஸில் அபயஹஸ்தம் வைத்தார். நமது ஸ்ரீநிவாஸன் விஷயத்திலோ கோபமில்லாமல் சாந்தமாகவேயிருந்து அபயஹஸ்தம் கொடுத்தார் நமது குருநாதாள். இவரும் பூர்வாசிரமத்தில் நரஸிம்மர்தான். ஆனால் கோபமில்லாத நரஸிம்மர், அவ்வளவுதான் விசேஷம். அது உக்ர நரஸிம்மம். இது சாந்த நரஸிம்மம்.

எப்படியும், தன் காலடியில் விழுந்த பிரஹ்லாதனைத் தூக்கி நிறுத்தி நரஸிம்ம மூர்த்தியானவர் சிரஸில் கை வைத்து அனுக்ரஹம் செய்ததுபோலவே, நமது ஸ்ரீநிவாஸனையும் காலில் விழுந்தவுடன் தூக்கி நிறுத்தி சிரஸில் அபயஹஸ்தம் வைத்து இவனை கிருதார்த்தனாகப் பண்ணிவிட்டார் நமது குருநாதாள் என்ற விஷயத்தில் வேற்றுமை கிடையாது. இந்த ஸ்பர்ச தீக்ஷையானது ஏகாதசீ புண்ய தினத்தில் அபிஜித் முஹூர்த்தத்தில் ஒருவரும் இல்லாத ஏகாந்த ஸ்தலத்தில் ஏற்பட்டதைப் பார்த்தவுடனேயே இந்த லேககர் அடுத்த பட்டத்துக்கு உரியவர் யார் என்பதைத் தீர்மானித்துவிட்டார். இந்தச் சந்தோஷ ஸமாசாரத்தை எல்லோரிடமும் சொல்லி மகிழ்விக்க வேண்டுமென்றும் எண்ணிக்கொண்டிருந்தார். ஆனால், அதை எப்படியோ தெரிந்து கொண்ட ஸந்நிதானம் ஜாடையினால் இது ஒருவருக்கும் தெரியக் கூடாது என்று உத்தரவு போட்டுவிட்டார்கள். ஆகையால் பஹிரங்கமாக சிஷ்யபரிக்ரஹம் ஏற்பட்ட பிறகுதான் இதைப் பற்றி இந்த லேககர் தன் ஆப்தர்களிடம் பிரஸ்தாவிக்கும்படி நேர்ந்தது. ஆனால் இதை ஒருவரும் பூர்ணமாக நம்பவில்லை. அவ்விதம் நம்பாமலிருப்பதும் நல்லதாகவே ஆயிற்று. ஏனென்றால் ஸந்நிதானம் இந்த பிரசாரங்களையெல்லாம் வெறுப்பவரல்லவா? அதனால்தான் ஒருவரும் இல்லாத ஸமயமாக பார்த்து விஜயம் செய்தார்கள். கூடவந்த ஸேவகனையும் துங்கா நதிக்கரைக்குப் போய் வஸ்திரம் சுத்தம் செய்யும்படி

அனுப்பிவிட்டார்கள். மற்ற பையன்களும் ஏதோ கார்யமாக ஆற்றங்கரைப் பக்கம் சென்றிருந்தார்கள். ஆகவே ஸ்ரீநிவாஸன், இந்த லேககர்,குருநாதாள் இந்த மூன்று பேருக்குத்தான் இது விஷயம் தெரியும். அதையும் வெளியிடக்கூடாது என்று உத்தரவு ஆகியிருந்தபடியால் இந்த லேககர் வாயைத் திறக்கவில்லை.

இது நடந்த க்ஷணம் முதற்கொண்டே ஸ்ரீநிவாஸன் மாறிவிட்டான். முன்போல் ஒருவரிடமும் தமாஷாகவோ, கலகலப்பாகவோ பேசுவதில்லை. தன்னையும் மறந்து ஏதேதோ சொல்லிக்கொண்டிருப்பான். குருநாதாளின் அபயஹஸ்தம் தனக்குக் கிடைத்த பாக்கியத்தைப் பற்றி இந்த லேககரிடம் மாத்திரம் தனியாயிருக்கும்போது சொல்லி அழுவான். சிறு பாலகனுயிருந்தபடியால் அந்த அபயஹஸ்தத்தின் மஹிமைகளைப் பூர்ணமாக உணரவில்லை. அந்த பயங்கரமான ஜ்வரம் உடனே தணிந்துவிட்டதைப் பற்றித்தான் ஆச்சர்யப்பட்டான். ஸம்ஸார ஜ்வரத்தையே அடியோடு நிவிருத்தி செய்யக்கூடிய அதன் மஹிமையை அறிந்துகொள்ளவில்லை. அதனுல் தன்னை சிஷ்யபரிக்ரஹம் செய்துகொள்வார் என்று எண்ணவில்லை. குருநாதாளும் அதற்குத் தகுந்தபடியே நடந்துகொண்டார்கள். வேறொரு பையனிடம் அதிக விசுவாஸம் இருப்பதுபோலவும் ஸ்ரீநிவாஸனிடம் உதாஸீனமாயிருப்பது போலவும் நடித்து வந்தார்கள். எல்லோரும் நஞ்சன் கூடிலிருந்து வந்த பையனுக்கே பட்டாபிஷேகம் நடக்கப்போவதாகப் பேசிக் கொண்டார்கள். தன் அபிப்பிராயத்தைக் கொஞ்சமேனும்வெளியிடாமல் அடக்கிவைத்துக் கொள்ளக்கூடிய கம்பீரமான குணம் நமது குருசரணுளுக்கு இயற்கையாகவே அமைந்திருந்ததைப் பல நிகழ்ச்சிகளாலும் வாசகர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள்.

இது நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் சிஷ்யபரிக்ரஹ கார்யம் நிர்விக்னமாக நடக்க ஏற்பாடாயிற்று. அந்த ஒரு மாதத்தில் நடந்த சில முக்கியமான நிகழ்ச்சிகளை மாத்திரம் சுருக்கமாகக் கூறுவோம். ஸ்ரீநிவாஸனுக்கு அபயஹஸ்தம் கொடுத்த தினம் முதற்கொண்டே நமது குருசரணுள் பூஜையின் முடிவில் அநேகப் பிரார்த்தனைகளுக்கு மத்தியில்,

''सर्वज्ञं श्रीनिवासं कुरु शिवदयिते सत्वरं मद्विनम्रम्''

(ஸர்வக்ஞம் ஸ்ரீநிவாஸம் குரு சிவதயிதே ஸத்வரம் மத்விநம்ரம்)

என்ற சுலோகத்தையும் சேர்த்துக்கொண்டுவிட்டார்கள். பரமகுருநாதாளான ஸ்ரீ ஸச்சிதானந்தசிவாபிநவந்ருஸிம்ம பாரதீஸ்வாமிகள் தன் சிஷ்யனுன நரஸிம்மனுக்காக,

''सर्वज्ञं श्रीनृसिंहं कुरु शिवदयिते''

(ஸர்வக்ஞம் ஸ்ரீந்ருஸிம்ஹம் குரு சிவதயிதே)

என்று பிரார்த்தித்ததுபோல் श्रीनृसिंहं என்பதை மாத்திரம் மாற்றி श्रीनिवासं என்று சேர்த்துக்கொண்டு அம்பாளிடம் பிரார்த்தித்து வந்தபடியால்தான் அந்த ஸ்ரீநிவாஸன் இன்று ஸர்வக்ஞ மூர்த்தியாக வித்யாதீர்த்த உருவத்தில் நமக்குக் காட்சியளிக்கிருர்.

ஒருநாள் மாலே வழக்கம்போல் காலபைரவ ஆலயத்துக்கு வித்யார்த்திகளுடன் இந்த லேககரும் சென்ருர். கல்யம் சுந்தர சாஸ்திரிகள், மல்லிக்கரை சுப்பிரமண்ய சாஸ்திரிகள் முதலிய ஆஸ்தான வித்வான்களும் அன்று வந்திருந்தார்கள். அந்தாதி சுலோகம் நடந்து கொண்டிருக்கையில் புதிதாக ஒருவர் அதிகாரிகளிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு எப்படியோ அங்கு வந்து ஸந்நிதானத்தை வணங்கினுர். அவர் M.A. பட்டம் பெற்றவர்; ஸம்ஸ்கிருதத்திலும் பாண்டித்யம் உள்ளவர். ஆனுல் சிகையில்லாதவர். லௌகிக வேஷத்துடனேயே வந்திருந்தார். ஸந்நிதானம் எல்லோருக்கும் ஹிதோபதேசம் செய்பவராதலால் அவரை குசலப்ரச்னம் விசாரித்து உட்காரும்படி சொன்னுர்கள். அந்த லௌகிகரோ சும்மாயிருக்காமல் தான் அப்பய்ய தீக்ஷிதரின் வம்சத்தில் பிறந்தவன் என்றும், அந்த வம்சம் எப்படியெல்லாம் பிரிந்திருக்கிறது என்பதற்கு ஒரு சித்திரம் வரைந்திருப்பதாயும் சொல்லி விருக்ஷ உருவத்தில் வரைந்து கொண்டுவந்திருந்த வம்சாவளியை ஸந்நிதானத்தினிடம் காண்பித்தார். ஸந்நிதானமும் அதைப் பார்த்து ஸந்தோஷத்தைத் தெரிவித்தார்கள்.

இதற்குள்ளேயே அந்த லௌகிகர் நான்குதடவை அப்பய்யதீக்ஷித வம்சத்தில் பிறந்த தன் பாக்கியத்தைப் பற்றியும்

பெருமையைப் பற்றியும் சொல்லிவிட்டார். அவ்வளவையும் ஸந்நிதானம் சாந்தமாகக் கேட்டுக் கொண்டு கடைசியில் மடத்து வித்வான்களைப் பார்த்து ''நீங்களெல்லாம் என்ன கோத்திரம், சொல்லுங்கள்'' என்று கேட்கவே, வாசிஷ்ட கோத்திரம், பாரத்வாஜ கோத்திரம், ஆத்ரேய கோத்திரம் என்று அவர்கள் விடையளித்தார்கள். ''அதிருக்கட்டும், வசிஷ்டர் எப்படியிருந்தார்? பரத்வாஜர் எப்படியிருந்தார்? என்ன என்ன கர்மானுஷ்டானங்கள் எல்லாம் செய்துவந்தார் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' என்று கேட்டார்கள். ''தெரியும். ஆனாலும் अग्निहोत्रादिकर्माणि सापायानि कलौ युगे (கலியுகத்தில் அக்னிஹோத்ரம் முதலான கர்மாக்களைச் செய்வது மிகவும் கடினம்)'' என்று வித்வான்கள் விடையளித்தார்கள். ''அக்னிஹோத்ரம், ஸோமயாகம் எல்லாம் வேண்டாம். ஸ்மார்த்த கர்மாக்களையாவது செய்யக்கூடாதா'', என்று கேட்கவே ''அதற்கும் உமி, வரளி, முட்டான் முதலிய ஸாதனங்கள் கிடைப்பதில்லையே'' என்றார்கள் வித்வான்கள். அதற்கு ஸந்நிதானம், ''இதற்காகக் கவலைப்படவேண்டாம். மடத்திலுள்ள பசுமாட்டுக் கொட்டகையிலிருந்து இந்த ஸாதனங்களையெல்லாம் தயார் செய்து அனுப்ப ஏற்பாடு செய்கிறோம். அப்படியாவது கர்மாக்களை செய்வீர்களா?'' என்று கேட்கவே வேறு வழியில்லாமல் ''ஔபாஸனம் செய்கிறோம்'' என்று அந்த வித்வான்கள் ஒப்புக்கொண்டார்கள். கடைசியில் எல்லோரையும் பார்த்து ஸந்நிதானம் சொன்னார்கள்:–

''நாமெல்லாம் வசிஷ்டர் முதலிய மஹரிஷிகளின் வம்சத்தில் பிறந்ததாகப் பெருமையடித்துக் கொள்கிறோமே தவிர, அவர்களது கர்மாக்களில் கொஞ்சமாவது அனுஷ்டானம் செய்கிறோமா? இந்த உத்தம வம்சத்தில் பிறந்தும், அதற்குரிய கர்மாக்களைச் செய்யாவிட்டால் அந்த வம்சத்துக்கு நம்மால் தூஷணமா பூஷணமா? என்பதை யோசித்துப் பாருங்கள்'' என்றார். அன்று முதல் எல்லா வித்வான்களும் ஔபாஸனம் செய்து வந்தார்கள். ஸந்நிதானத்தின் உபதேச மொழிகளைக் கேட்ட அந்த லௌகிக வித்வானும் வெட்கித் தலைகுனிந்தார். மறுநாளே தன் லௌகிக வேஷத்தைவிட்டு சிகாதாரணம் செய்து கொண்டு ஸந்நிதானத்தை வணங்கினார். ஸந்நிதானமோ அவரிடம் ஒன்றும் சொல்லாமல் வித்வான்களைப் பார்த்து ''*ஹரே: கோலாவதாரேணே கிடீநாம் கா வரேண்யதா?*

हरेः कोलावतारेण किटीनां का वरेण्यता (விஷ்ணு வராஹாவதாரம் எடுத்ததற்காக ஸாதாரணப் பன்றிகளுக்கு ஏதாவது சிறப்பு உண்டா?)'' என்று கேட்கவே எல்லோரும் வாயடைத்து நின்றனர்.

ஸந்நிதானம் செய்த உபதேசத்தால் வித்வான்கள் கர்மாநுஷ்டானம் செய்ய ஆரம்பித்தார்கள். அந்த லௌகிகரும் வித்வான்களின் வியாஜத்தால் தனக்குத்தான் இந்த உபதேசமென்று அறிந்து மாறிவிட்டார். வித்யார்த்திகளுக்கும் ஸமிதாதானம் முதலிய கார்யங்களில் ஊக்கம் பிறந்தது. இவ்விதம் ஒரே ஓர் உபதேசத்தால் பலருக்கும் பலன் கிடைத்துவிட்டது. ஒருவருக்கும் மனத்தாங்கல் இல்லாமலே இந்தக் கார்யத்தை நமது குருநாதாள் ஸாதித்துவிட்டார். அவர் செய்து வந்த தர்ம பிரசாரம் இவ்விதமானதே.

✣✣✣

5

இன்னெரு நாள் நாங்கள் காலபைரவ ஆலயத்தில் அந்தாதி சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு பெரிய மனிதர் வந்து ஸந்நிதானத்தை வந்தனம் செய்தார். பலவிதமான பழங்களையும் குரு காணிக்கையாகக்கொண்டு வந்திருந்தார். அந்தப் பழங்களை வித்யார்த்திகளுக்கு ஸந்நிதானம் விநியோகித்துக் கொண்டிருக்கையில் ஒரு வானரம் அங்கு வரவே, கறுப்புத் திராக்ஷைக் கொத்தை அதனிடம் தூக்கி எறிந்தார்கள். அதுவும் அதை எடுத்துத் தூரத்தில் சென்று ஒவ்வொரு பழமாகக் கையினுல் பிய்த்துக் கை விரலால் நசுக்கித் தூர எறிந்தது. தனக்குப் பழக்கமில்லாத பழமாகையாலும் கறுப்பாயிருந்ததாலும் அதை உட்கொள்ளவில்லை. ஸந்நிதானம் ஆச்சர்யமடைந்தார்கள். ''இவ்வளவு ருசியான பழங்களை ஆனந்தமாக சாப்பிடாமல் தூக்கி எறிந்துவிட்டதே'' என்று வருத்தப்பட்டார்கள். ''குரங்கின் கையில் கொடுத்த பூமாலைபோல் ஆகிவிட்டது'' என்று இந்த லேககர் சொன்ஞர். ஶ்ரீநிவாஸனே ''ஆஞ்ஜனேய ஸ்வாமியிடம் கிடைத்த முத்துமாலைபோல்'' என்று அதைத் திருத்தினுன். ஒருவருக்கும் அதன் அர்த்தம் புரியவில்லை. ஸந்நிதானமோ ஶ்ரீநிவாஸனைப் பார்த்து ''ஆஞ்ஜனேயருக்கும் முத்துமாலைக்கும் என்ன ஸம்பந்தம்? ஏதோ புதிர்போடுகிருயே'' என்று கேட்கவே ஶ்ரீநிவாஸன் விநயமாக ''இது புதிரொன்றுமில்லை. ராமாயண காலத்தில் நடந்த கதைதான்'' என்று சொல்லவே எங்களுக்கு இன்னும் ஆச்சர்யம் அதிகமாய்விட்டது. ''ஸரி அதைத்தான் சொல் பார்ப்போம்'' என்று குருநாதாள் உத்தரவிடவே ஶ்ரீநிவாஸன் கூறலானுன்:–

''ஶ்ரீராமசந்திரமூர்த்திக்குப் பட்டாபிஷேகம் நடந்ததல்லவா? அது ஸமயம் ஸுக்ரீவன், விபீஷணன், அங்கதன் முதலிய பிரமுகர்களுக்கெல்லாம் பலவித பரிசுகளை ஶ்ரீ ராமசந்திரமூர்த்தியே வழங்கினுர். ஆனுல் ராமாயண கதைக்கே முக்கிய ஜீவநாடியான ஆஞ்ஜனேய ஸ்வாமிக்கு மாத்திரம் ஒன்றும் கொடுக்காததைப் பார்த்து

ஸீதாப்பிராட்டி அதன் காரணத்தை ராமசந்திரமூர்த்தியிடம் கேட்டாள். 'ஆஞ்ஜநேயருக்குப் பரிசு கொடுக்கும்படியான பொருள் ஒன்றும் நம்மிடம் இல்லையே! ' என்று ஸ்ரீராமர் பதிலளித்தார். ஏற்கெனவே ஸ்ரீராமசந்திரமூர்த்தியானவர் ஸீதையைக் கண்டு வந்த ஆஞ்ஜனேயஸ்வாமியை தன் மார்புடன் ஆலிங்கனம் செய்துவிட்டு 'இதுதான் நான் உனக்குத் தரும் வெகுமானம்' என்று கூறி 'இந்த ஆலிங்கமானது என் ஸீதையைத் தவிர வேறொருவருக்கும் கிடைத்ததில்லை' என்றும் சொல்லியிருப்பதை மனதில் வைத்துக் கொண்டுதான் அவர் அவ்விதம் சொன்னார். ஆனாலும் ஸீதையின் மனம் கேட்கவில்லை. தன் உயிருக்கே அபாயம் நேரக்கூடிய ஸமயத்தில் ஸ்ரீராமநாம அமிருத வர்ஷத்தால் தன்னை உஜ்ஜீவனம் செய்வித்த இந்த உத்தமனுக்கு இந்த உத்ஸவ காலத்தில் ஏதாவது பரிசு கொடுத்தே தீரவேண்டுமென்று நினைத்து தன் கழுத்திலிருந்த விலைமதிக்கமுடியாத ஒரு முத்துமாலையைக் கழற்றி ஆஞ்ஜனேயரிடம் கொடுத்த பிறகுதான் ஸீதாதேவியின் மனம் சாந்தியடைந்தது.

ஆனால் ஆஞ்ஜனேய ஸ்வாமியானவர் அந்த முத்து மாலையைத் தன் கழுத்தில் போட்டுக்கொள்ளாமல் அந்தத் தர்பாரின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டு அந்த முத்துமாலையிலிருந்து ஒவ்வொரு முத்தாகக் கழற்றி மேலும் கீழுமாகப் பார்த்தார். அதில் விசேஷம் ஒன்றும் புலப்படாததால் ஒவ்வொன்றாகக் கடித்து அதன் உள்ளேயாவது தான் விரும்பிய பொருள் இருக்குமா என்று பார்த்தார். ஒன்றும் இல்லாததைக் கண்டு அதை வீசி எறிந்தார். இதையே வெகு சூக்ஷ்மமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஸீதாதேவிக்குக் கோபம் வரவே 'அந்த ஆஞ்ஜநேயரை இங்கே கொண்டுவாருங்கள்' என்று உத்தரவிட்டாள். ஸேவகர்கள் அவரை இழுத்துவந்தவுடன் 'அடே! நான் என் உயிருக்கும் உயிராக இதுவரையில் காப்பாற்றிவந்த விலை மதிப்பில்லாத முத்து மாலையைக் கடித்து வீணடித்துவிட்டாயே! உன் வானர ஸ்வபாவத்தை இதில் காட்டிவிட்டாயே. இது நியாயமா?' என்று கேட்கவே, ஆஞ்ஜநேய ஸ்வாமி வணக்கத்துடன் பதிலளித்தார்:– 'தாயே! தாங்கள் அன்புடன் கொடுத்த முத்து மாலையில் என் மனதிற்கு வேண்டிய பொருள் ஏதாவது இருக்குமோ என்று பார்த்தேன். ஒன்றும் அகப்படவில்லை. உள்ளேயாவது ஒளிந்திருக்குமா என்று கடித்துப்பார்த்தேன். உள்ளேயும் அந்த வஸ்துவைக் காணவில்லை. இந்த வெறும் முத்து மாலையை

வைத்துக்கொண்டு என்ன செய்வது என்று தெரியவில்லை. அதனால்தான் அதை எறிந்துவிட்டேன்' என்றார். உடனே ஸீதாதேவியானவள் கோபங்கொண்டு, 'அட முட்டாளே! உனக்கு வேண்டிய பொருள் என்ன? எந்தப் பொருளை அந்த முத்துக்களுக்குள் தேடிப்பார்த்தாய்?' என்று கேட்கவே, கையால் ஸ்ரீராமசந்திரமூர்த்தியின் உருவத்தையே காண்பித்தார். ஸீதாதேவியும் அதைப் புரிந்துகொண்டு, 'ஸரி. அப்படியானால் உன் சரீரத்துக்குள் அந்த வஸ்து இல்லையே. அதற்காக உன் சரீரத்தையே விட்டுவிடுவாயா?' என்று கேட்கவே, அந்த உத்தம ராமபக்தரான ஆஞ்ஜநேய ஸ்வாமியானவர் அந்த ஸபையிலுள்ள அனைவரும் ஸீதாலக்ஷ்மணாதிகளும் ஆச்சர்யப்படும்படியான ஒரு காரியம் செய்தார். அதாவது இரண்டு கைகளாலும் தன் மார்பைப் பிளந்து காண்பித்து விட்டார். அதற்குள் ஒரு ராமனும் ஸீதையும் மற்ற பரிவாரங்களும் பட்டாபிஷேகக் கோலத்துடன் வீற்றிருப்பதை அனைவரும் கண்டு பரவசப்பட்டார்கள். ஸ்ரீராமசந்திரமூர்த்தியும், 'அப்பா ஆஞ்ஜநேயா! உன்னைப் போன்ற பக்தர் உலகிலேயே கிடையாது. நீதான் பரம பக்தன்' என்று அவரது மார்பைத் தனது அமிருத ஹஸ்தத்தால் தடவிவிட்டார். முன்போலவே ஆஞ்ஜநேயர் ஸ்வஸ்தமாகி ஆனந்தக் கூத்தாடினார். ஸீதாதேவியோ வெட்கித் தலை குனிந்து, 'அப்பா ஆஞ்ஜநேயா ! பக்தியில் நீ எங்களெல்லோரையும் மீறிவிட்டாய். உன் பக்தியை மெச்சுகிறேன். நீதான் ஸ்ரீ ராமாயணமாகிய மாலைக்கு ரத்னம் (रामायणमहामालारत्नम्) (*ராமாயண மஹாமாலா ரத்னம்*)' என்ற பிருதுவுடன் ஆசீர்வதித்து, 'நீயே ராமாயணத்துக்கு ஓர் அலங்கார ரத்னமாக விளங்கும்போது அந்த ரத்னத்துக்கு முத்தினால் அலங்காரம் செய்ய நான் நினைத்தது தவறுதான். இந்த பக்தியானது உனக்கு சாசுவதமாக இருக்கட்டும். நீயும் சிரஞ்ஜீவியாக இருக்கவேண்டும்' என்று சொல்லி அநுக்ரஹம் செய்தாள்'' என்று கூறி முடித்தான் ஸ்ரீநிவாஸன்.

இந்தச் சிறு பையனுடைய வெகு அழகாகக் கதை சொல்லும் திறமையை ஸந்நிதானம் மனதிற்குள் புகழ்ந்துகொண்ட போதிலும் அதை வெளிக்காட்டாமல் ''ஸரி இதை எதற்காகச் சொன்னாய்?'' என்று கேட்கவே, அச்சிறுவன் சொல்லலுற்றான்: ''குரங்கின் கையில் கிடைத்த பூமாலை போல் என்று சாஸ்திரிகள் சொன்னதைக்கொஞ்சம் மாற்றிச்சொன்னேன். அவ்வளவுதான். இந்தக் கறுப்பு திராக்ஷையின்

ருசியும் அருமையும் தெரியாமல் அந்த வானரம் அதை வீணடித்து விட்டதே! ஆஞ்ஜநேயர் செய்ததுபோலவே செய்துவிட்டதே என்று சொல்லுவதற்காக இந்தக்கதைச் சொன்னேன். அவ்வளவுதான் !'' என்று குறும்புச்சிரிப்புடன் கூறவே ஸந்நிதானம் உள்பட நாங்களெல்லோரும் பரமானந்தமடைந்தோம். அதைக் கொண்டு வந்திருந்த பெரிய மனிதர் ஸந்நிதானத்திடம் சொன்னூர்: ''நான் இந்தப் பழங்களையெல்லாம் கொண்டுவந்து தங்களது பாதகமலங்களில் ஸமர்ப்பணம் செய்யக் கிடைத்ததை பெரும் பாக்கியமாக நினைக்கிறேன். அதில் ஒன்றுகூட தாங்கள் ஸ்வீகரிக்காமல் சிஷ்யர்களுக்கே கொடுத்துவிட்டீர்களே என்று முதலில் ஒரு தப்பெண்ணம் ஏற்பட்டது வாஸ்தவம்தான். ஆனுல் இந்தச் சிறுவன் மூலம் இந்த அபூர்வமான கதையைக் கேட்டபிறகு அந்த எண்ணத்தை விட்டுவிட்டேன். இவன் கேவலம் ஒரு பையனில்லை, யாரோ ஒரு யோகிதான் இவனது உடலில் ஒளிந்துகொண்டிருக்கிருர், ஸந்தேஹமில்லை. ஆகையால் இவனை நான் சிறு பையனுகவே நினைக்கவில்லை'' என்றெல்லாம் புகழ ஆரம்பித்தார். ஸந்நிதானமோ அவரை ஜாடை மூலம் சும்மா இருக்கும்படி செய்து ''அதிருக்கட்டும். உனக்கு இந்தக் கதையை யார் சொன்னுர்கள்?'' என்று பேச்சை மாற்றி ஸ்ரீநிவாஸனைக் கேட்கவே, தன் தாயார் தான் குழந்தையாயிருக்கும்போது சொன்ன கதைதான் இது என்று பதிலளித்தான் அச்சிறுவன். நாங்களெல்லோரும் ஆச்சர்யமடைந்தோம். ஸந்நிதானம் ''இந்தக் கதை ஆனந்த ராமாயணத்தில் காணப்படுவதுதான், விசேஷமொன்றுமில்லை'' என்று சொல்லி எல்லோருடைய ஆச்சரியத்தையும் அடக்கிவிடப் பார்த்தார்கள். ஆனுலும் அவன் சொல்லும் அழகை நாங்கள் மெச்சாமலிருக்க முடியவில்லை.

நாங்கள் எல்லோரும் விடைபெற்றுக் கொண்டு ஆசிரமத்துக்குச் சென்ருேம். அப்பொழுது ஸ்ரீநிவாஸன் மற்ற பையன்களிடம் சொன்னது இந்த லேககரின் காதிலும் விழுந்தது. ''நமது ஸந்நிதானம் ஆரஞ்சுப்பழம், வாழைப்பழம் முதலியவைகளை நமக்குக் கொடுத்து, கறுப்பு திராக்ஷையை மாத்திரம் அந்த ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்தது வேண்டுமென்றே செய்த கார்யம்தான். அவ்விதம் செய்யாமல் மற்ற பழங்களையெல்லாம் ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்திருந்தால் அது எல்லாவற்றையும் தின்றுவிட்டு ஓடியே போயிருக்கும். கதையும் அதோடு முடிந்திருக்கும். என்னுடைய பிரஸங்கத்துக்கு இடமே

இராது. ஸந்நிதானம் என்னைப் பேசவைக்கவேண்டும் என்றே இந்தக் கார்யம் செய்திருக்கிறார். நானும் என் மனதில் தோன்றியதையெல்லாம் உளறிவிட்டேன். நான் ஒன்றுமே பேசக்கூடாது என்று வாயை எவ்வளவு கட்டுப்படுத்தியும் ஸந்நிதானம் எப்படியோ என்னைக் கிளப்பிப் பேசவைத்துவிடுகிறார். இனிமேல் நான் அதிகம் பேசப் போவதில்லை'' என்று குறும்புச் சிரிப்புடன் கூறி எங்களையெல்லாம் மயக்கிவிட்டான்.

பின்னொரு நாள் காலபைரவ ஆலயத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தபோது ஒரு காங்கிரஸ்காரர் ஸந்நிதானத்தை ஸாஷ்டாங்கமாக வணங்கினார். யார் என்று கேட்கவே, மைசூரிலிருந்து கதர் வஸ்திர பிரசாரத்திற்காக வந்திருப்பதாகத் தெரிவித்தார். தானும் காலபைரவ ஆலயத்துக்கு வரலாமா என்று கேட்டதற்கு 'ஆலயம் எல்லோருக்கும் பொதுதானே' என்று பதில் வந்தது. அவர் அத்துடன் நிற்காமல், மடத்திலுள்ளவர்கள் எல்லோரும் கதர் ஆடை அணியும்படி உத்தரவிட்டால் எங்களுடைய காதி பிரசாரத்திற்கு உபகாரமாயிருக்குமென்றும், விதேச வஸ்துக்களை பஹிஷ்காரம் செய்யும்படி காங்கிரஸ் பிரமுகர்கள் சொல்லி வருவதால் வெளி தேசத்திலிருந்து வந்த வஸ்திரங்களையெல்லாம் கொளுத்திவிடும் இயக்கமொன்று நடப்பதாயும், அவ்விதம் தான் பல இடங்களில் பிரசாரம் செய்து பல ஆயிரக்கணக்கான வஸ்திரங்களை கொளுத்திவிட்டதாயும் வீராப்புடன் பேசியவுடன் ஸந்நிதானம் மேலே செல்லாமல் அங்கேயே நின்று அவருக்குப் பதிலளித்தார். ''ஐயா! நீங்கள் சொல்வது நன்றாகப் புரியவில்லையே! வெளிதேச வஸ்துக்கள் எல்லாவற்றையும் பஹிஷ்காரம் செய்யச் சொல்லுகிறீர்களா? அல்லது வஸ்திரம் மாத்திரம்தானா? '' என்று ஸந்நிதானம் கேட்கவே, அவர் திணறிவிட்டு ''இப்பொழுது வஸ்திரம் மாத்திரம்தான் பஹிஷ்காரம் செய்ய உத்தேசித்திருக்கிறோம்'' என்றார். ஸந்நிதானம் சொல்லலுற்றார்: ''நமக்குக் கெடுதலை உண்டு பண்ணும் விதேச வஸ்துவை முதலில் பஹிஷ்காரம் செய்வதுதான் விவேகம். அவ்விதம் பார்க்கையில் புகையிலை என்ற சரக்கு வெளிதேசத்திலிருந்து வந்ததுதான். காபி, தேயிலை முதலிய பதார்த்தங்களும் மருந்து ஸாமான்களும் வெளியிலிருந்துதான் வந்திருக்கின்றன. அவற்றால் பல வியாதிகளும் கெடுதல்களும் பிரத்யக்ஷமாயிருக்கையில் அந்த வஸ்துக்களையல்லவோ பஹிஷ்கரிக்க வேண்டும். வஸ்திரத்தால் உடம்புக்கு ஒரு கெடுதலும்

தெரியவில்லேயே! அதை ஏன் நீக்கவேண்டும்?'' என்று கேட்கவே, அவர் பதில் சொல்லமுடியாமல் விழிக்கலானுர். பிறகு ஸந்நிதானமே சொன்ஞர்: ''நமக்குக் கெடுதலே விளேவிக்கும் விதேச வஸ்துவை முதலில் பஹிஷ்காரம் செய்து கடைசியில் வஸ்திர பஹிஷ்காரம் செய்யலாம். இப்படிச் செய்தால் ஸ்வராஜ்யம் சீக்கிரமே கிடைத்துவிடும். தவிரவும் நீங்கள் தலேமயிரை (சிகையை) விட்டுவிட்டீர்கள். மீசையை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள். இதில் எதை விட வேண்டும், எதை வைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசித்துப் பாருங்கள். கிராப்பு வைத்துக் கொள்வது சட்டைப்போட்டுக்கொள்வதெல்லாம் விதேசத்திலிருந்து இறக்குமதியான ஆசாரங்கள். அதை உங்களால் விட்டு ஒழிக்கமுடியுமா? காசி யாத்திரை செய்பவர்கள் அங்கே விச்வேசுவர ஸன்னிதியில் தனக்குப் பிடித்தமான வஸ்துவை பஹிஷ்கரிக்க வேண்டுமென்று சாஸ்திரம் கூறுகிறது. அங்கு யாத்திரைக்குச் செல்லும் ஒவ்வொரு மனிதரும் சுண்டைக்காயையோ வெண்டைக்காயையோ தியாகம் செய்கிருர்களே தவிர தனக்குப் பிடித்தமான துராசாரங்களேயோ, தூமபாநம் (புகைபிடித்தல்), நஸ்யம் (பொடி போடுதல்) முதலியவைகளேயோ, கோபதாபங்களேயோ தியாகம் செய்திருப்பதாக ஒரு திருஷ்டாந்தமாவது காட்டமுடியுமா? அதுபோல் இதுவும் ஒரு பஹிஷ்கார இயக்கம். அவ்வளவுதான். நான் சொல்வதில் தவறு ஒன்றும் இல்லேயே ! '' என்று கேட்கவே, ''அவ்வளவும் உண்மைதான். இதை உணராது கெட்டுப்போய் விட்டேன்'' என்ருர் அவர். மறுநாள் காலேயில் க்ஷௌரம் செய்துகொண்டு சிகை வைத்து மீசை எடுத்து பஞ்சகச்சம் கட்டிக்கொண்டு எங்களுடன் காலபைரவ ஆலயத்துக்கும் வந்துவிட்டார்.

அன்று காலபைரவ ஆலயத்தில் வித்யார்த்திகளுடன் இருக்கும்பொழுது ஒரு மஹாவித்வான் அங்கு வந்து சேர்ந்தார். தான் ஒரு மடத்திலிருந்து தர்மப் பிரசாரத்துக்காக நியமிக்கப்பட்டிருப்பதாயும் ஒவ்வொரு ஊராகச் சென்று தர்ம பிரசாரம் செய்வதாயும் இந்த மடத்திலும் உபந்யாஸம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் மளமளவென்று உபன்யாஸ சைலியில் கூறிமுடித்தார். ஸந்நிதானமோ மந்தஹாஸம் செய்துகொண்டு ''நீங்கள் எந்த தர்மத்தைப் பற்றி உபந்யாஸம் செய்யப்போகிறீர்கள்?''

என்று கேட்கவே, ''வேதோக்தமான கர்மாக்களேயும், ஸந்தியா ஸ்நாஞதி நித்யகர்மங்களேயும் வர்ணுசிரம ஆசாரங்களேயும் செய்யும்படி உபந்யாஸம் செய்யப்போகிறேன்'' என்றுர். ''ஸரி நீங்கள் அக்னி கார்யம் செய்து வருகிறீர்களா? ச்ரௌதாக்னியா, ஸ்மார்த்தாக்னியா? '' என்று கேட்டார்கள். அவருக்கு ஒன்றும் புரியவில்லே. ''ஔபாஸனம் செய்துவருகிறீர்களா என்று கேட்கிறேன்'' என்றுர்கள். ''சிரார்த்தகாலத்தில்தான் ஔபாஸனம் செய்வது வழக்கம்'' என்றுர் அந்த வித்வான். ''அது ஸரி. உபந்யாஸம் செய்பவர்கள் தானும் அனுஷ்டித்துக் காட்டிஞல்தான் ஜனங்களேத் திருத்தலாம். ஸரியான ஸந்தியாகாலத்தில், தான் ஸந்தியாவந்தனம் செய்யாமல் பிறருக்கு ஸந்தியாவந்தன உபதேசம் செய்தால் அது பலனேத் தருமா? ஆகையால் நீங்கள் கடைசிபக்ஷம் ஔபாஸனக்னியாவது வைத்துக்கொண்டு ஸ்வகர்மானுஷ்டானம் செய்துகொண்டு பிறருக்கு உபந்யாஸம் செய்வதுதான் நல்லது. ஆயிரம் வித்வான்கள் உபந்யாஸம் செய்வதைவிட ஒரே ஒரு வித்வான் தன் கர்மானுஷ்டானத்தால் ஜனங்களேத் திருத்திவிடலாம். நான் சொல்வது ஸரிதானே? '' என்று கேட்டார்கள். வித்வானும் ''ஆமாம்'' என்று சொல்லி ஸம்பாவனேயை வாங்கிச் சென்றுர்.

முன் குறிப்பிட்ட காங்கிரஸ்காரரும் இந்த வேடிக்கைகளேயெல்லாம் பார்த்துக்கொண்டிருந்து கடைசியில், ''தாங்கள் ஒரு வனத்தின் மூலேயிலிருந்து கொண்டே இத்தனே தர்மபிரசாரம் செய்துவருவதைப் பார்க்க ஆச்சர்யமாய் இருக்கிறது'' என்றுர். அதற்கு ஸந்நிதானம், ''பிரசாரம் என்ற வார்த்தையை உபயோகிக்காதீர்கள். அது ஒரு லௌகிகமான, ராஜகீய கார்யங்களேக் குறிக்கும் பதம். வந்தவர்களுக்கு எங்களுக்குத் தெரிந்ததைச் சொல்வது எங்கள் கடமை. அவ்வளவுதான். அதற்குப் பிரசாரம் என்ற ஆடம்பரமான பெயரை வைக்காதீர்கள்'' என்று சொல்லவே அந்த காங்கிரஸ்வாதியானவர் கண்ணீர்விட்டு ''தங்களேப்போன்ற மஹான்களே தர்சிக்க என்ன புண்ணியம் செய்தேனே? இன்றுதான் என் ஜன்மம் ஸபலமாயிற்று'' என்று சொல்லி வணங்கி பிரஸாதம் பெற்றுக்கொண்டு தனது இருப்பிடம் சென்றுர்.

✣ ✣ ✣

6

ஒரு சமயம் நாங்கள் எல்லோரும் ஸ்ரீ மஹாஸந்நிதானத்தோடு கூட அந்தாதி சுலோகம் சொல்லிக்கொண்டு வரும்போது இந்த லேககருக்கு தகாரத்தில் சுலோகம் ஆரம்பிக்கும்படி வந்தது. உடனே,

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपारावारः परिवहति सारस्वतमिव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

தவ ஸ்தன்யம் மன்யே தரணி தரகன்யே ஹ்ருதயத:
பய: பாராவார: பரிவஹதி ஸாரஸ்வதமிவ ।
தயாவத்யா தத்தம் த்ரவிடசிசுராஸ்வாத்ய தவ யத்
கவீனும் ப்ரௌடாநாமஜனி கமநீய: கவயிதா ॥

என்ற ஸௌந்தர்யலஹரீ சுலோகத்தை இந்த லேககர் சொல்லி முடித்தவுடன் அதன் அர்த்தத்தைச் சொல்ல வேண்டுமென்று உத்தரவாயிற்று. தெரிந்தவரையில் அர்த்தத்தையும் ஒருவாறு சொல்லிமுடித்தார். அதாவது:- ''ஹே பரதேவதே! உன்னுடைய ஸ்தனங்களிலிருந்து பெருகும் பாலானது ஸாரஸ்வத ப்ரவாஹமென்றே நினைக்கிறேன். ஏனென்ருல் அந்த ஸ்தன்யத்தை சாப்பிட்ட திரவிடக் குழந்தையான ஸம்பந்த முனியானவர் உத்தம கவியாக உலகில் விளங்கினுர். ஆகையால் தேவியானவள் ஸ்தன்யம் என்ற வியாஜத்தால் ஞானப்பாலையே அந்த ஸம்பந்தமூர்த்திக்கு ஊட்டினுர் என்று தாத்பர்யம்'' என்ருர். ஸந்நிதானம் இதைக் கேட்டதும், ''ஸரி, இதில் வரும் द्रविडशिशुः (*த்ரவிட சிசு*) என்ற பதத்துக்கு ஸம்பந்தமூர்த்தி என்ற அர்த்தத்தை வைத்துக்கொள்வதற்கு என்ன பிரமாணம்?'' என்று கேட்டார்கள். ஒருவருக்கும் தெரியவில்லை. இதற்கு தேவீபக்தர்கள் ஒரு கதை சொல்லுவார்கள் என்று குருநாதாள் ஒரு சிறுகதையைக் கூறினுர்கள். அதாவது:-

பார்வதீ பரமேசுவரர்கள் ஒருநாள் உலகத்தில் ஏதாவது விநோதமான காக்ஷிகள் தென்படக் கூடுமென்று கருதி அதைப்பார்ப்பதற்காகவே விமானத்தில் ஏறி ஸஞ்சாரம் செய்து வந்தார்களாம். பாரதபூமியில் தக்ஷிண தேசத்தில் விமானம் சென்று கொண்டிருக்கும் போது ஏதோ ஓரிடத்தில் ''அம்மா அம்மா'' என்ற குழந்தையின் குரல் கேட்கவே விமானத்தை நிறுத்தினார்களாம். ''அம்மா'' என்று குரல் வந்தபடியால் பார்வதீ தேவிதான் அவ்விடம் போய் பார்க்கவேண்டுமென்று தீர்மானமாயிற்று. பரமேசுவரனே விமானத்திலேயே தங்கிவிட்டார். அம்பாளும் குரல் வந்த இடத்துக்குச் சென்று பார்த்தவுடன் ஒருவருமில்லாத அந்த வனத்தில் குழந்தையொன்று திவ்ய தேஜஸ்ஸுடன் படுத்திருப்பதைப் பார்த்ததும் அன்பினால் தாய்ப்பால் பெருகிவிட்டது. குழந்தையை எடுத்து அணைத்து அதற்குத் தன் ஸ்தன்யத்தை ஊட்டவே அது ஞானப்பாலானபடியால் குழந்தை உடனே எழுந்து அம்பாளை வணங்கி 100 சுலோகங்கள் பாடியதாம். அவ்விதம் குழந்தையை அனுக்ரஹித்துவிட்டுப் பரமேசுவரன் இருக்கும் விமானத்துக்கு வந்து சேர்ந்தாராம் அம்பிகை. நடந்த விபரத்தைக் கூறவே அந்த சுலோகங்களைச் சொல்ல வேண்டுமென்று பரமேசுவரன் வற்புறுத்தினாராம். அம்பாளோ ஆத்மச்லாகையானபடியால் ஸங்கோசப்பட்டுக்கொண்டு சொல்லவில்லையாம். கைலாஸம் சென்றவுடன் பரமேசுவரன் மறுபடியும் வற்புறுத்தவே வேறு வழியில்லாமல் அந்த சுலோகங்களை வாயினால் சொல்ல இஷ்டப்படாமல் கல்லில் வரைந்து கொண்டே போனாளாம். அது ஸமயம் பகவத்பாதாள் ஸமாதியில் கைலாஸத்தில் மனதைச் செலுத்தி ஞானதிருஷ்டியினால் அதைப் பார்த்துக்கொண்டு வந்தாராம். 74 சுலோகம் வரையில் ஆசார்யாள் ஞானதிருஷ்டியினால் பார்த்து வந்தாராம். அதற்குள் அம்பாள் 100 சுலோகங்களையும் முடித்துப் பின்னாலிருந்து அழித்துக்கொண்டே வந்தாளாம். அதனால் கடைசியிலுள்ள 26 சுலோகங்கள் ஆசார்யாளது கண்ணில் படவில்லையாம். அதை ஆசார்யாளே கவனம் செய்து பூர்த்தி பண்ணினாராம். அழித்துக் கொண்டு வரும்போது 74வது சுலோகத்தில் நின்று அதை மறுபடியும் படித்துப்பார்த்தார்களாம். பார்வதீ பரமேசுவரர்கள். இந்தக் கதையைத்தான் பகவத்பாதாள் 75வது சுலோகத்தில் ஸூசனையாகக் காண்பித்து அம்பாள் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டின வரலாற்றை ஸ்பஷ்டமாக எடுத்து உரைத்திருக்கிறார். இந்தக்கதையை பிரமாணமாக

வைத்துக்கொண்டால் ஞானஸம்பந்தரைத்தான் த்ரவிட சிசு என்ற பதத்தால் குறிப்பிடுகிறுர் என்று ஏற்படும். ஆகையால் த்ரவிடசிசு என்பதற்கு திருஞான ஸம்பந்தர் என்று அர்த்தம் சொல்வதில் தவறென்றுமில்லை என்று சொல்லி முடித்தார்.

ஆனல் ஸ்ரீநிவாஸன் அத்துடன் விடவில்லை. ''நமது சங்கரபகவத்பாதாளுக்கே அம்பாள் தாய்ப்பால் ஊட்டியதாகக் கேள்விப்பட்டிருக்கிறேனே. அது ஸரியில்லையா ?'' என்று கேட்டான். குருநாதரும் நாங்களும் ஆச்சரியம் அடைந்தோம். ''அதென்ன கதை, சொல் பார்க்கலாம் ! '' என்று ஸந்நிதானம் கேட்கவே ஸ்ரீநிவாஸன் தொடர்ந்தான். ''நமது ஆசார்யாள் குழந்தையாய் இருந்தபொழுது ப்ரதி தினமும் அம்பாளுக்கு நிவேதனம் செய்த பசும்பாலை இந்த சங்கரனுக்குக் கொடுத்து வந்தார்களாம். ஒருநாள் ஞாதிகளில் ஒருவருக்குக் குழந்தை பிறந்து ஜனனசௌசம் (விருத்தி) ஏற்பட்டதால் அம்பாளுக்கு நிவேதனம் செய்யவில்லையாம். நிவேதனம் செய்யாத பாலைக் குழந்தைக்கு ஆர்யாம்பாள் கொடுக்கவே, அதை சிறிது சாப்பிட்ட குழந்தை வழக்கம்போல் ருசியில்லாததைக் கண்டு அழுது அந்தப்பாலை அருந்தவில்லையாம். உடனே தாயைப் பார்த்து ''அம்மா, வேறு பால் கொடு, நானே அம்பாளுக்குக் கொடுத்து மீதியை சாப்பிடுகிறேன்'' என்று சொல்லவே, ''ஸரி'' என்று சொல்லி வேறு பாலைக் கொடுத்தனுப்பினாளாம். குழந்தை வெகு உத்ஸாஹத்துடன் அந்த அம்பாளிடம் சென்று பாலை வைத்து ''அம்மா! நீ கொஞ்சம் சாப்பிட்டு மீதியை எனக்குக் கொடு'' என்று கேட்டாராம். அம்பாளோ இந்தக் குழந்தை அன்புடன் கொடுத்த பால், வழக்கத்தை விட மிகவும் ருசியாயிருந்ததால் அது பூராவையும் சாப்பிட்டு வெறும் கிண்ணத்தைக் கீழே வைத்ததைக் கண்டு குழந்தை அழ ஆரம்பித்துவிட்டதாம். உடனே அந்த பால சங்கரனைத் தூக்கி அணைத்துக்கொண்டு அதற்குத் தன் தாய்ப்பாலை அம்பாள் ஊட்டிவிட்டு முத்தம் கொடுத்து வெளியே அனுப்பிவிட்டாராம். குழந்தையோ இந்த ஸமாசாரத்தைத் தன் தாயாரிடம் சொல்லவே தாயாரும் மற்றவர்களும் அம்பாள் ஸன்னிதியில் வந்து பார்த்து ஒரு விசேஷமும் தென்படாததால் குழந்தை ஏதோ தெரியாமல் உளருகிறது என்று போய்விட்டார்கள். ஒருவேளை பாலக்ரஹம் ஏதாவது குழந்தையைத் தீண்டி விட்டதோ என்று நினைத்து

உடனேயே ஏதேதோ மாந்திரிகம் ரக்ஷாபந்தனம் எல்லாம் செய்வித்தார்களாம். அவ்விதம் அம்பாளின் ஞானப்பாலே உண்டதால்தான் நமது பாலசங்கரர் ஸர்வக்ஞ மூர்த்தியானுர் என்று ஒரு கதை நான் கேட்டிருக்கிறேன். அது ஸரியோ, தப்போ, ஸந்நிதானத்திடம் சொல்லிவிட்டேன்'' என்று சொல்லி முடித்தான். ஸந்நிதானம் அதை ஆமோதித்து ''இதையும் உன் தாயார்தான் சொன்னுர்களா?'' என்று கேட்கவே ''ஆமாம்'' என்று சொல்லி ஸ்ரீநிவாஸன் எங்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்து விட்டான்.

ஸந்நிதானம், ''இந்த இரண்டு கதைகளும் பொருத்தமாகத்தானிருக்கிறது. இரண்டாவது கதையின்படி பார்த்தால் ஆசார்யாள் தன் வரலாற்றையே சொல்லி தனக்கு அம்பாளின் ஞானப்பால் கிடைத்ததால்தான் இவ்விதம் அழகான கவிதைகளை இயற்றமுடிகிறது என்று வர்ணிப்பதாக நாம் அர்த்தம் கொள்ளவேண்டும். த்ரவிட சிசு என்று தன்னைத்தான் குறிப்பிடுகிருர் என்றுதான் வைத்துக்கொள்ளவேண்டும்'' என்று கூறி விடையளித்தார்கள். இவ்விரு கதைகளையும் கேட்ட நாங்கள் ஸந்நிதானத்தையும் ஸ்ரீநிவாஸனையும் என்றென்றும் மறக்கமுடியாதவர்களாய்விட்டோம்.

✣✣✣

7

ஒரு நாள், ஸ்ரீஸந்நிதானம், ஸ்ரீநிவாஸன், நாங்கள் எல்லோரும் அந்தாதி சொல்லிவரும்பொழுது, 'மகார'த்தில் ஆரம்பிக்கும்படியாக வரவே ஸ்ரீநிவாஸன்,

मनो न मे योषिदुरोजकुम्भे न शिष्यडिम्भे न च शातकुम्भे ।
परं तु रन्तुर्गिरिकन्यकायाः पादारविन्दे रतिमेव विन्दे ॥

*மநோ ந மே யோஷிதுரோஜகும்பே ந சிஷ்யடிம்பே **
ந ச சாதகும்பே ।

பரம் து ரந்துர் கிரிகந்யகாயா:
பாதாரவிந்தே ரதிமேவ விந்தே ॥

(என் மனது பெண்களின் ஸ்தனத்திலோ, பால சிஷ்யனிடத்திலோ, ஸுவர்ணத்திலோ செல்லவில்லை. ஆனால் பர்வதகுமாரி உமையின் காந்தர் சங்கரருடைய பாதார விந்தத்திலேயே ப்ரீதியை அடைகிறேன்.) என்ற அபூர்வமான சுலோகத்தைச் சொன்னான். உடனே ஸந்நிதானம், ''இந்த சுலோகம் யார் பண்ணினது?'' என்று கேட்கவே ஸ்ரீநிவாஸன் லேககரைச் சுட்டிக் காட்டினான்.

ஸ்ரீஸந்நிதானம்:– உன் கவிதைதானா?

லேககர்:– இல்லை. ஸந்நிதானம் அந்தர்முக நிலையில் இருந்தபோது இந்த முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்ததுதான் இது. இவ்வளவு அர்த்தபுஷ்டியுடனும் அநுப்ராஸங்களுடனும் எங்களால் கவனம் செய்யமுடியுமா?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானால் அப்பய்ய தீக்ஷிதர் ஆத்மார்ப்பண ஸ்துதி செய்ததுபோல் நானும் என் தேஹ

---

* சிஷ்யடிம்பே என்ற பதம் ஸ்ரீநிவாஸனையே குறிக்கும்

ஸ்மரணையில்லாமலே ஏதாவது சொல்லிவிட்டேனு? இன்னும் வேறு சுலோகங்கள் ஏதாவது இருக்கிறதா ?

லேககர்:– ஏதோ சிலவற்றை மட்டும் குறித்து வைத்திருக்கிறேன். அதிலிருந்துதான் ஸ்ரீநிவாஸன் இரண்டொரு சுலோகங்களை நெட்டுருப் பண்ணியிருக்கிருன்.

ஸ்ரீஸந்நிதானம் மறுநாள் அதைக் கொண்டுவந்து வாசிக்கும்படி உத்தரவிட்டார்கள். மறுநாள் அந்தக் குறிப்புப் புத்தகத்துடன் இந்த லேககர் வரவே அதை வாசிக்கும்படி உத்தரவிட்டு அவைகளில் பின்வரும் ஒரு சுலோகத்தை மட்டும் குறிப்பிட்டு நாளைக்கு இதற்கு அர்த்தம் சொல்லவேண்டும் என்று உத்தரவாயிற்று.

अवचनचिन्मुद्राभ्यां अद्वैतं बोधरूपमात्मानम् ।
ब्रूते तत्र च मानं पुस्तकभुजगाग्निभिर्महादेवः ॥

அவசநசிந்முத்ராப்யாம் அத்வைதம் போதரூபமாத்மாநம் ।
ப்ரூதே தத்ர ந மாநம் புஸ்தகபுஜகாக்நிபிர்மஹாதேவ: ॥

(மஹேச்வரன் (தக்ஷிணுமூர்த்தி அவஸரத்தில்) மௌனம், சின்முத்திரை இவைகளால் ஆத்மா அத்விதீயமென்றும், ஞானவடிவமென்றும், எங்கும் நிறைந்தது என்றும் உபதேசிக்கிருர். (தன்னிடமுள்ள) புஸ்தகம், ஸர்ப்பம், அக்னி இவைகளால் அதற்குப் பிரமாணத்தையும் கூறுகிருர்.)

மறுநாள் மடத்து வித்வான்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் வெளிப்படையான அர்த்தத்தைச் சொன்னுர்களே தவிர அதன் கூடமான தாத்பர்யத்தை யாரும் சொல்லவில்லை. இந்த லேககரைப் பார்த்து ''உன் அபிப்ராயம் என்ன?'' என்று கேட்கவே இவர் சொன்னுர்: ''பரமேசுவரன் தக்ஷிணுமூர்த்தி அவஸரத்தில் மௌனம், சின்முத்திரை இவைகளாலேயே ஆத்மதத்துவத்தை போதிக்கிருர். அந்த ஆத்மாவோ அத்விதீயமாக ஒரே வஸ்துவாகவும், கேவல ஞானவடிவமாகவும், ஸர்வவியாபகமாகவும் இருக்கிறது. இதில் 'அத்வைதம்' என்பதற்கு புஸ்தக திருஷ்டாந்தமும் 'போதரூபம்' என்பதற்கு பாம்பு திருஷ்டாந்தமும் 'வியாபகம்' என்பதற்கு அக்னி திருஷ்டாந்தமும் கிரமமாக எடுத்துக்கொள்ளலாம். புத்தகத்தில் ஏடுகள் வெவ்வேருயிருந்தபோதிலும் புத்தகரூபத்தில்

ஐக்யம் இருப்பதுபோல பிரபஞ்ச ரூபத்தில் பேதமும் பிரம்ம ரூபத்தில் அபேதமும் கிடைக்கும். அப்படியே (ரஜ்ஜு) ஸர்ப்ப திருஷ்டாந்தத்தால் அதிஷ்டானம் ஸத்யம் என்ற அம்சம் கிடைப்பதால் சைதன்யாம்சமே ஸத்யமாகையால் சைதன்ய ரூபமென்று கிடைக்கிறது. அக்னி திருஷ்டாந்தத்தால் ஸர்வவியாபகத்வம் கிடைக்கிறது. பூமியில் எங்குமே தேஜஸ் வியாபித்திருப்பது போல் ஆத்மா ஸர்வ வியாபி என்ற அர்த்தம் கிடைக்கிறது'' என்று தன் மனதில் தோன்றியதைச் சொல்லவே அதை குருநாதாள் பூர்ணமாக அங்கீகரிக்கவில்லை. மற்ற வித்வான்களாலும் ஒன்றும் சொல்லமுடியவில்லை. உடனே ஸ்ரீநிவாஸன் எழுந்து நின்று ''புஸ்தகம், பாம்பு, நெருப்பு இந்த திருஷ்டாந்தங்களால் ச்ருதி–யுக்தி–அநுபவங்கள் என்றும் அர்த்தம் கொள்ளலாம்'' என்று சொல்லவே எல்லோரும் ஆச்சரியமடைந்தோம். ''இன்னும் இதற்கு விசேஷ அர்த்தமுண்டு. அதை இன்னொரு நாள் சொல்லுகிறேன்'' என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பின்னால் ஸந்தர்ப்பமே ஏற்படவில்லை.

மறுநாள் காலபைரவ ஆலயத்துக்குச் சென்றவுடன் ''நீ எழுதியிருந்த சுலோகங்களில் இன்னொரு சுலோகம் சொல்லு'' என்று இந்த லேககரிடம் சொல்லவே இவர்,

> नहि नहि मनुतां स्वत्वं मर्त्यः स्वीये शरीरेऽपि ।
> पितृभूमिशृगालगणाः स्वत्वं परिचिन्तयन्ति तत्काले ॥
>
> *நஹி நஹி மநுதாம் ஸ்வத்வம் மர்த்ய: ஸ்வீயே சரீரேऽபி ।*
> *பித்ருபூமிச்ருகாலகணா: ஸ்வத்வம் பரிசிந்தயந்தி தத்காலே ॥*

(மனிதன் தன் சரீரத்திலும்கூட தன்னைச் சேர்ந்தது என்ற அபிமானம் வைக்கவேண்டாம். ச்மசான பூமியில் உள்ள நரிக்கூட்டம் (உயிர் பிரிந்த பிறகு இதே சரீரத்தை) தன்னுடையது என்று எண்ணுகின்றன.)

என்ற சுலோகத்தை வாசித்தார். அந்த ஸமயத்தில் ஒரு பெரியவர் அங்கு வந்து சேர்ந்தார். குடைபிடித்துக் கொண்டே வந்ததைப் பார்த்தவுடன் ஸந்நிதானம் ''நீங்கள் மலையாளமோ ? '' என்று கேட்கவே, ''ஆமாம்'' என்று சொல்லி தான் வருவதாக ஏஜெண்டுக்குக் கடிதம் எழுதியிருந்ததாயும் அதில் எழுதியபடி,

வரமுடியவில்லை என்றும் பல லௌகிக கார்யங்களால் தாமஸம் ஏற்பட்டது என்றும் மன்னித்துக்கொள்ளும்படியும் பிரார்த்தித்துக் கொண்டார். ''தாமஸம் ஏற்பட்டதா? இங்கே தாமஸமெல்லாம் வேண்டாம். ஸாத்விகம்தான் வேண்டும்'' என்று ஸந்நிதானம் சொல்லவே அவரும் எல்லோரும் சேர்ந்து சிரித்து விட்டோம். ''நீங்கள் வேதம் கற்றிருக்கிறீர்களா?'' என்று கேட்கவே ''நாங்களெல்லாம் லௌகீகம்தான். எங்கள் வம்சத்திலே வைதீகாளே கிடையாது'' என்று மலையாள பரிபாஷையில் ஏதோ பேச ஆரம்பித்தார். அதற்கு ஸந்நிதானம் ''அய்யா! வைதீகம் என்றோ லௌகீகம் என்றோ நீட்டிச்சொல்லாதீர்கள். வைதிகம் லௌகிகம் என்று சொன்னால்தான் எங்களுக்குப் புரியும். ஸரி, நீங்கள் ஸந்தியாவந்தனம் செய்வீர்களா? '' என்று கேட்கவே, ''ஸந்தியாவந்தனம் மாத்திரமா, சூர்ய நமஸ்காரம், ருத்ரம், சமகம் எல்லாம் நித்யம் சொல்வதுண்டு'' என்றார் அவர். ''அப்படியானால் நீங்கள் வைதிகர்தான். வேதத்தை பிரமாணமாக நம்புபவர்களெல்லாம் வைதிகர்தான். அப்படியிருக்கையில் லௌகிகர் என்ற ஒரு தனி ஜாதி கிடையாது. எல்லோரும் தன்னை வைதிகன் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட வேண்டுமே தவிர மட்டமாக நினைக்கவே கூடாது'' என்று சொல்லி प्रकृतमनुसरामः ''அந்த சுலோகத்தை மறுபடியும் சொல்லி ''அர்த்தம் சொல், பார்ப்போம்'' என்றார்கள். அர்த்தம் சொல்லும்பொழுதே பக்கத்தில் சலசலப்பு சப்தம் கேட்டது. ஒரு நரியானது ஏதோ ஒரு பிராணியின் எலும்புக்கூட்டை இழுத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது கண்ணுக்குப் புலப்படவே ''நரி, நரி'' என்று பையன்கள் கூச்சலிட்டார்கள். சத்தம் கேட்டவுடன் நரி அந்த மனித மண்டையோட்டை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டது. உடனே இந்த லேககர் முன் சொன்ன சுலோகத்தை ஞாபகப்படுத்தி पितृभूमिशृगालगणाः स्वत्वं परिचिन्तयन्ति तत्काले *பித்ருபூமி ப்ருகாலகணா: ஸ்வத்வம் பரிசிந்தயந்தி தத்காலே* என்பதை விளக்கினார். ஸந்நிதானமோ, ''இந்த சரீரம் அநித்யம், இதில் நமக்கு அபிமானம் இருப்பது போல் நரிக்கும் தன்னைச் சேர்ந்த ஆஹார வஸ்து என்று அபிமானமில்லையா? நாம் ஏன் இதை வளர்க்கவேண்டும்'' என்று ஓர் உபதேசமே செய்துவிட்டார்.

❖ ❖ ❖

~ 8 ~

சிருங்ககிரி மஹாஸந்நிதானம் அவர்கள் எங்களுக்குச் சரீரத்தில் அபிமானம் விலகும்படியும் வைராக்யம் ஏற்படும்படியும் பலவிதமான உபதேசங்களைக் கூறிவிட்டுக் கடைசியில்

सिंहासनोपविष्टं दृष्ट्वा यं मुदमवाप लोकोऽयम् ।
तं कालाकृष्टतनुं विलोक्य नेत्रे निमीलयति ॥

ஸிம்ஹாஸநோபவிஷ்டம் த்ருஷ்ட்வா யம் முதமவாபலோகோऽயம் ।
தம் காலாக்ருஷ்டதநும் விலோக்ய நேத்ரே நிமீலயதி ॥

(ஸிம்ஹாஸனத்தில் உட்கார்ந்திருக்கும்பொழுது எந்த அரசனைப் பார்த்து ஜனங்கள் ஸந்தோஷம் அடைந்தனரோ அவருடைய பிராணனை யமன் கொண்டுபோனபிறகு அதே சரீரத்தைப் பார்த்து கண்களை மூடிக் கொள்கின்றனர்.) என்பதுபோன்ற சுலோகங்களைச் சொல்லி எல்லோரையும் மெய்சிலிர்க்கும்படிச் செய்துவிட்டார்.

இவ்வளவையும் கேட்டுக்கொண்டிருந்த அந்த மலையாள பிராமணர் எழுந்துநின்று வணங்கி, ''ஸ்வாமீ, நான் புத்திரசோகத்தாலும் மனைவி இறந்த சோகத்தாலும் பைத்தியம் பிடித்தவன்போல் அலைந்துகொண்டு மன நிம்மதிக்காக இங்கே வந்தேன். தங்களது உபதேச மொழிகளைக் கேட்டதும் என் மனப்ராந்தி எல்லாம் விலகி விட்டது. நான் கோரி வந்த பலன் கிடைத்துவிட்டது'' என்று சொல்லி மறுபடியும் விழுந்து விழுந்து வணங்கினார். ஸ்ரீஸ்வாமிகள் அவரைப் பார்த்து, ''நீங்கள் கொஞ்சநாள் இங்கேயே இருக்கலாம். அதிகமாகக் காயத்ரீ ஜபம் செய்துவாருங்கள். இன்னும் நன்றாக மனம் நிம்மதி அடையும்'' என்று சொல்லி அருளினார்கள்.

இந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஸ்ரீநிவாஸனுக்கு வைராக்யம் ஏற்பட ஹேதுவாயிற்று. இதற்காகவே ஸந்நிதானம் இவ்வித ஸந்தர்ப்பங்களை

ஏற்படுத்தி உபதேசம் செய்தாரோ என்றுகூடத் தோன்றிற்று. ஆனால் அந்த ஸந்தர்ப்பத்தில் நரியை வரவழைத்தது ஸந்நிதானம்தானா அல்லது அது தானாகவே வந்ததா என்பது மட்டும் தெரியவில்லை. மறுநாள் ஸ்ரீநிவாஸனை மாத்திரம் அழைத்து வரும்படி இந்த லேககருக்கு உத்தரவாயிற்று. அவ்விதமே மறுநாள் இந்த லேககரும் ஸ்ரீநிவாஸனும் சென்றதும் ஸ்ரீ ஸந்நிதானம் இருவரையும் உட்காரச்சொல்லி, ''இன்று ஸம்ஸாரம் நல்லதா, வைராக்யம் நல்லதா, என்ற விஷயத்தைப்பற்றி விமர்சனம் செய்யவேண்டும். முதலில் நீங்கள் ஸம்ஸாரத்தின் குணங்களைச் சொல்லுங்கள்'' என்றார்கள். நாங்கள் இருவரும் ஸம்ஸாரத்திலுள்ள அநுகூலங்களைப்பற்றி விளக்கினோம். ஆனால் ஸந்நிதானம் அவ்வளவையும் கண்டித்து கிருஹஸ்தாச்ரமத்தில் தனிகனாயிருந்தாலும், ஏழையாயிருந்தாலும், நடுத்தரமாயிருந்தாலும், எவ்விதத்திலும் கஷ்டம்தான் என்பதற்குப் பல உதாரணங்களையும், பிரமாணங்களையும் அநுபவங்களையும் காட்டி ஸந்யாஸத்திற்கு அதிகாரியாயிருந்தும் ஸந்யாஸாச்ரமத்தில் பிரவேசிக்காமலிருந்தால் அதைப்போல, வேறு முட்டாள்தனம் கிடையாது, வேறு நஷ்டமும் கிடையாது.

को हि जानाति कस्याद्य मृत्युकालो भविष्यति ।
युवैव धर्मशीलः स्यात् अनित्यं खलु जीवितम् ॥

बाल्ये नष्टविवेकः विषयसुखास्वादलम्पटस्तरुणः ।
परतो जातविवेको वृद्धोऽशक्तः किमाप्नुयात्सिद्धिम् ॥

கோ ஹி ஜாநாதி கஸ்யாத்ய ம்ருத்யுகாலோ பவிஷ்யதி |
யுவைவ தர்மசீல: ஸ்யாத் அநித்யம் கலு ஜீவிதம் ||

பால்யே நஷ்டவிவேக: விஷயஸுகாஸ்வாத-
லம்படஸ்தருண : |
பரதோ ஜாதவிவேகோ வ்ருத்தோऽஶக்த: கிமாப்னுயாத்
ஸித்திம் ||

(யாருக்கு எப்பொழுது மரணம் வரும் என்பதை எவன் அறிவான்? வாழ்க்கை சாஸ்வதமில்லாதபடியால் வாலிபப்பருவத்திலேயே தர்மத்தை அனுஷ்டிக்கப் பழகவேண்டும். பால்யத்தில் பகுத்தறிவில்லாமலும், வாலிபப்பருவத்தில் விஷயஸுகத்தை அநுபவிப்பதில் ஈடுபட்டும் இருந்துவிட்டு

பின்னுல் விருத்தாப்பிய வயதில் சக்தியில்லாதபொழுது விவேகம் ஏற்பட்டாலும் பயனை அடையமுடியுமா?) இது முதலான வாக்கியங்களைக் காட்டி வயதானபிறகு ஸந்யாஸம் பெறுவதில் பயனில்லை. சரீரம் திடமாயிருக்கும்போதே ஸந்யாஸம் செய்து கொண்டால்தான் ஆத்ம விசாரம் செய்ய சௌகர்யமாயிருக்கும் என்றெல்லாம் கூறி ''ஸ்ரீநிவாஸா, இப்பொழுது சொல் ஸம்ஸாரம் நல்லதா, ஸந்யாஸம் நல்லதா?'' என்ருர்கள். ''ஸந்யாஸம்தான் சிலாக்யம்'' என்று பதில் வந்தது. இச்சம்பாஷணையின் மூலம் இந்த லேககருக்கும் ஸந்யாஸ அதிகாரமுண்டு என்று ஸூசனை செய்தார்கள். (சீக்கிரமே இவருக்கும் ஸந்யாஸம் கிடைத்தது.)

இதற்குமுன் ஸ்ரீநரஸிம்மபாரதீ குருநாதாள் தன் சிஷ்யனுன நரஸிம்மனைப்பார்த்து 'संसारो वा श्रेयान् संन्यासो वेति निर्णयः क्रियताम्' (*ஸம்ஸாரோ வா ச்ரேயான் ஸந்யாஸோ வேதி நிர்ணய: க்ரியதாம்*) என்று கேட்டது போலவே இவர்களும் தன் முன் அனுபவத்தை வைத்துக்கொண்டு ஸ்ரீநிவாஸனிடம் அதே கேள்வியைக் கேட்டார் போலும்.

இவ்வாறு ஸ்ரீநிவாஸனது அங்கீகாரம் கிடைத்தவுடன் இவருடைய தாய் தந்தையர்களை வரவழைத்து அவர்களுக்கு ஸ்ரீ ஸந்நிதானமும் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் பலவிதமாக உபதேசம் செய்து அவர்களுடைய அனுமதியையும் பெற்ற பிறகுதான் ஸந்யாஸத்திற்கு நாள் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீஸந்நிதானம் இதுவரையில் வெளியிடாமல் வைத்திருந்த ரஹஸ்யம் அன்றுதான் வெளியாயிற்று. ஸ்ரீநிவாஸன்தான் அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. பாரதமெங்குமுள்ள மஹாராஜாக்களுக்கும், பிரபுக்களுக்கும், வித்வான்களுக்கும் எல்லா சிஷ்யகோடிகளுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டன. ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் இஞ்சினியர்களை வரவழைத்து லக்ஷம் ஜனங்கள் தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் தர்பார் நடப்பதற்கும் வசதிகள் ஏற்படுத்தும்படி உத்தரவிட்டார். எல்லாம் விரைவில் தயாராய் விட்டது.

இவ்விதம் ஸகல ஏற்பாடுகளும் நடந்துகொண்டு இருக்கையில் ஒருநாள் வெள்ளிக்கிழமை இந்த லேககர் வித்யார்த்திகளுடன் சாரதாம்பாள் ஆலயம் சென்று தர்சனம் பிரார்த்தனம் எல்லாம்

முடித்துக்கொண்டு ஜாகைக்குத் திரும்பிவந்து வழக்கம்போல் ஸ்ரீநிவாஸனைத் தன் பக்கத்திலேயே படுக்கச்சொல்லித் தானும் படுத்துக்கொண்டு ஸ்ரீஸத்குருமூர்த்தியை தியானம் செய்து நித்ரை செய்தார். அப்பொழுது திடீரென்று ஏதோ சப்தம் கேட்கவே தூக்கம் கலைந்து எழுந்து பார்க்கையில் ஸ்ரீநிவாஸன் தூக்கத்தில் ஏதேதோ சொல்லிக்கொண்டு இருந்தான். அவன் கனவில் என்ன என்ன சொல்கிறான் என்பதைத் தெரிந்து சொல்லும்படி குருநாதாளின் கட்டளை அல்லவா! அதனால் நன்றாக அதை கவனித்து வந்தார். ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் ஏதேதோ பிதற்றிய போதிலும் அவைகளைச் சேர்த்து நன்கு கவனித்துப்பார்த்தால் அவனது மனோநிலை நன்கு புலப்பட்டது. கனவில் காக்ஷி கொடுத்த அம்பாளிடம் அவன் பேசிக்கொண்டு இருந்ததுபோல் தோன்றியது. கடைசியில் ''அடடா! கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விட்டதே! என்ன முட்டாள்தனம்!'' என்று தலையில் அடித்துக்கொண்டான். இனிமேலும் பொறுத்திருக்க முடியாமல் இந்த லேககர் அவனைத்தட்டி எழுப்பவே ''சாஸ்திரிகளே, அந்த ஸ்படிக மாலையைத் தொலைத்துவிட்டேனே. அது கைக்கு வந்தும் பயன்படவில்லையே. அது கிடைக்குமா? '' என்று புதிர் போட்டது போல் கூறவே, அவனை எழுப்பி உட்காரவைத்துக் கேட்டதில் விவரமாகக் கூறினான்:–

''நான் அம்பாள் ஸந்நிதிக்குச் சென்றிருந்தேன். ஆயிரக்கணக்கான கூட்டத்தின் நடுவில் நான் நின்றிருந்தபொழுது நமது குருநாதாள் என்னை அழைத்து அம்பாள் ஸந்நிதியில் கர்ப்பகிருஹத்திற்குள் போகும்படி சொல்லவே நான் அங்கு சென்றேன். உடனே கதவும் தாளிடப்பட்டது. அம்பாள் என்னைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு ''குழந்தாய், உனக்கு இனிமேல் நல்லகாலம் பிறக்கப்போகிறது. உன்னைச் சக்கரவர்த்திகள் எல்லோரும் வந்து வணங்கக்கூடிய பெரிய பாக்யம் ஏற்படப் போகிறது. அப்பொழுது கொஞ்சமும் கர்வம் அடையாமல் என்னையும் மறக்காமல் ஆராதித்துவரவேண்டும். உன் குருநாதாளை விட்டு நீ வேறு எங்கும் செல்லக்கூடாது. என் ஞாபகார்த்தமாக இந்த ஸ்படிகமாலையைத் தரித்துக் கொள்'' என்று சொல்லி அழகான ஒரு மாலையை என் கழுத்தில் அணிவித்து என்னை வெளியில் அனுப்பினாள். உடனே மஹா தீபாராதனை நடந்தது. நானும் தர்சனம்

செய்தேன். அந்தக் கூட்டத்தில் உங்களைக் காணவில்லை. நான் திரும்பி வந்துகொண்டிருக்கும்பொழுது என் கழுத்திலுள்ள ஸ்படிக மாலையைக் காணவில்லை. அது எங்கோ மறைந்து விட்டது. யாரோ எனக்குத் தெரியாமல் கழற்றிக்கொண்டு போய்விட்டார்கள். ஆஹா! அந்த அம்பாளின் ரூபமும் தேஜஸ்ஸும், அந்த மாலையின் அழகும் என்னவென்று சொல்வேன். அதைப்பறிகொடுத்துவிட்டேனே!'' என்று சொல்லி அழுதான். ''இது எல்லாம் கனவுதான். நீ கவலைப்படவேண்டாம்'' என்று இந்த லேககர் சொன்னபிறகுதான் அவன் அதை உணர்ந்தான். ''ஆனாலும் ப்ராஹ்ம முஹூர்த்தத்தில் ஏற்பட்ட கனவாகையால் உடனே பலிக்கக்கூடியதுதான். பயப்படாதே'' என்று சொன்னதை அந்தச் சிறுவன் நம்பி சிறிது ஆறுதல் அடைந்தான். அதற்குப் பிறகு ஸந்யாஸ தீக்ஷை பெற்றதும், வியாக்யான ஸிம்ஹாஸனத்தை அலங்கரித்ததும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் கூடி அநுபவித்த காக்ஷியானபடியால் அதை இங்கு விஸ்தரிக்கவில்லை. இவ்விதம் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகள் 35–வது பீடாதிபதியாக நியமனம் செய்யப்பட்டு 24 வருஷ காலம் குரு சுசுரூஷை செய்து அவரது பூர்ண அநுக்ரஹத்துக்குப் பாத்திரமாகி இப்பொழுது* விஜயயாத்திரை செய்து கொண்டு நம்மை அநுக்ரஹித்துவரும் விஷயம் யாவரும் அறிந்ததே.

ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ப்ரஜாபதி ஸம்வத்ஸரத்தில் ஸந்யாஸ தீக்ஷை கிடைத்ததை ஸ்ரீராமதாஸர் என்னும் பாலகவி இவ்வாறு வர்ணிக்கிறார்:–

> वर्षं प्रजापतिं तं वन्दे यस्मिन् समाश्रिताऽऽचार्यान् ।
> पारमहंसी वृत्तिः पातुं नेतुं प्रजाः शुभे मार्गे ॥
>
> सशरीरः शास्त्रगणः तनुमांस्तुर्याश्रमोचितो धर्मः ।
> विग्रहवद्वैराग्यं शृङ्गपुरे भाति शारदापीठे ॥

வர்ஷம் ப்ரஜாபதிம் தம் வந்தே யஸ்மின் ஸமாச்ரிதாSS சார்யான் |
பாரமஹம்ஸீ வ்ருத்தி: பாதும் நேதும் ப்ரஜா: ஶுபே மார்கே ||

ஸஶரீர: ஶாஸ்த்ரகண: தநுமாம்ஸ்துர்யா ச்ரமோசிதோ தர்ம: |
விக்ரஹவத் வைராக்யம் ச்ருங்கபுரே பாதி ஶாரதாபீடே ||

---

* 1961 ஆம் ஆண்டு

ஸந்யாஸ தர்மமானது ப்ரஜைகளை காப்பதற்கும் நல் வழியில் நடத்திச் செல்வதற்கும் ப்ரஜாபதி வருஷத்தில் நம் ஆசார்யாளை அடைந்தது. அதனால் அந்த வருஷத்தை வணங்குகிறேன்.

சாஸ்திர ஸமூஹமும் ஸந்யாஸாச்ரம தர்மமும் வைராக்யமும் உருவெடுத்துக் கொண்டு சிருங்ககிரியில் ஸ்ரீசாரதாபீடத்தில் (ஆசார்ய ரூபமாக) விளங்குகிறது.

✣✣✣

⁂ 9 ⁂

இதற்கு முன் எழுதிய கட்டுரைகளில் நமது குருநாதரின் பலவித ஜீவன்முக்த லீலைகளையும், தற்பொழுது விளங்கி வரும் அபிநவ வித்யாதீர்த்த குரு மூர்த்தியின் பாலலீலைகளையும் தொடர்ந்து எழுதி வந்தோம். எவ்வளவு எழுதினாலும் அவருடைய அனந்தமான லீலைகளையும் முழுவதும் எழுத ஸாத்யமே இல்லை. இருந்தாலும் பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்கி மேலும் பல அபூர்வ நிகழ்ச்சிகளை நேரில் கண்டபடி இக்கட்டுரையில் காட்டுகிறோம்.

ஒரு ஸமயம் நமது குருநாதர் அந்தர்முக நிலையில் இருக்கும்போது மைசூர் திவான் ஒருவர் டிப்டி கமிஷனர் முதலியவர்களுடன் மிக ஆடம்பரத்தோடு வந்து இறங்கி, ஸந்நிதானத்தை தரிசனம் செய்யவேண்டுமென்று ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் கேட்டார்கள். அவருக்கு உடம்பு ஸரியில்லை என்று சொல்லி அவர்களைத் திரும்பிப் போகும்படி சொல்லியும் அவர்கள் விடாமல் ''அவரது உடம்பு அசௌகர்யம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கத்தான் வந்திருக்கிறோம். ஆகையால் இப்பொழுதே தரிசனத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்றார்கள். வேறு வழியில்லாமல் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் அவர்களை அழைத்துச் சென்றார். ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் பயப்படுவதற்குக் காரணமுமிருந்தது. இவர்கள் வரப்போகிறார்கள் என்பது ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்குத் தெரியாது. ஸந்நிதானமோ அவர்கள் மைசூரிலிருந்து கிளம்பிய நேரம் முதற்கொண்டே அதை ஞானதிருஷ்டியால் தெரிந்துகொண்டு,

अल्पवेतनभृत्यस्तु अमलदारिति कथ्यते ।
महावेतनभृत्यस्तु महामात्य इतीरितः ॥

भृत्यो वास्तु महाभृत्यः सर्वथा भृत्य एव सः ।
स्वतन्त्रजीवनं येषां नास्ति ते सेवकाः स्मृताः ॥

அல்பவேதநப்ருத்யஸ்து அமல்தார் இதி கத்யதே |
மஹாவேதநப்ருத்யஸ்து மஹாமாத்ய இதீரித: ||

ப்ருத்யோ வாஸ்து மஹாப்ருத்ய: ஸர்வதா ப்ருத்ய ஏவ ஸ: |
ஸ்வதந்த்ரஜீவநம் யேஷாம் நாஸ்தி தே ஸேவகா: ஸ்ம்ருதா: ||

(குறைந்த சம்பளம் வாங்கும் வேலைக்காரர் 'அமல்தார்' என்று கூறப்படுகிறார். நிறைய சம்பளம் வாங்கும் வேலைக்காரர் 'மஹாமாத்யர்' (திவான்) என்று கூறப்படுகிறார். சம்பளம் குறைவாயிருந்தாலும் அதிகமாயிருந்தாலும் அவர் வேலைக்காரரே ஆவர். எவர்களுக்கு வாழ்க்கையில் ஸ்வாதந்திரியம் இல்லையோ அவர்கள் ஊழியர்களேயாவர்.) என்ற சுலோகங்களை அன்று காலையிலிருந்தே அடிக்கடி சொல்லிக்கொண்டும் தாளம் போட்டுக்கொண்டும் இருந்தபடியால் இதெல்லாம் அந்த அதிகாரிகளின் காதில் விழுந்தால், அலௌகிகமாயிருக்குமோ என்று பயந்துதான் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் முதலில் அவர்களை விடவில்லை. இப்பொழுது அவர்கள் நிர்ப்பந்திக்கவே அவர்களை அழைத்துக் கொண்டு போனார்கள். அங்கு சென்றவுடன் ஸந்நிதானம் பழையமாதிரி விபூதி ருத்ராக்ஷங்களுடன் நல்ல வஸ்திரத்தை தரித்து ஆஸனத்திலமர்ந்திருப்பதைப்பார்த்து, ஸ்ரீகண்ட சாஸ்திரிகளே ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார். வந்தவர்கள் வழக்கம்போலவே வணங்கி, ஸந்நிதானத்தின் உத்தரவுடன் உசிதம்போல் உட்கார்ந்தார்கள். அவர்களிடம் மந்தஹாஸத்துடன் குசலப்ரச்னம் விசாரித்து பகவத்கீதையிலுள்ள,

'स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः' (१८-४६)
ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானவ: (18–46)

மனிதன் சாஸ்திரத்தில் தனக்கு விதிக்கப்பட்டுள்ள கர்மாவைச் செய்து ஸித்தியை அடைகிறான் என்ற சுலோகத்தின் கருத்தை வெகு அழகாக எடுத்துச் சொல்லி அதில் *மானவ:* என்ற பதத்தின் ஸ்வாரஸ்யத்தைச் சொல்லும்பொழுது,

'स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेपि यान्ति परां गतिं'
ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா ஶூத்ராஸ்தேபி யாந்தி
பராம் கதிம் (9–32)

''ஸ்திரீகள், வைச்யர்கள், சூத்ரர்கள் எல்லோருமே மேலான நிலையை அடைகின்றனர். எல்லோருக்குமே ஸ்வதர்மா நுஷ்டானத்தில் அதிகாரமுண்டு–பலப்ராப்தியும் உண்டு என்பதைக் காட்டுவதற்காகத்தான் பொதுவாக 'மாநவ:' என்ற பதத்தை பகவான் உபயோகப்படுத்தியிருக்கிறார். அவருக்கு உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற வேற்றுமையே கிடையாது.

'स्वे स्वे कर्मण्यभिरतः संसिद्धिं लभते नरः'

(ஸ்வே ஸ்வே கர்மண்யபிரத: ஸம்ஸித்திம் லபதே நர:) (18–45)

எந்த ஜாதியாயிருந்தாலும் தனக்கேற்பட்ட கர்மாக்களைச் செய்பவன்தான் உத்தமன். உயர்ந்த ஜாதியாக இருந்தாலும் ஸ்வகர்மாவை விட்டவன் உத்தமனாக முடியாது. அவன் அவனுக்கு ஏற்பட்ட கர்மாக்களைச் செய்பவன் யாராயிருந்தாலும் மோக்ஷபர்யந்தமுள்ள எல்லா பலன்களையும் அடைவான். ஆகையால் பகவானது திருஷ்டியில் நாமெல்லோரும் குழந்தைகள்தான். நமது சிரேயஸ்ஸுக்காகத்தான் பகவான் இந்த உபதேசம் செய்திருக்கிறார்'' என்றெல்லாம் சொல்லி அந்த அதிகாரிகளின் மனதை எப்படியோ கவர்ந்துவிட்டார்கள். அவர்கள் ஸந்நிதானத்தினிடம் எதைக் கேட்கவேண்டுமென்று விரும்பி வந்தார்களோ, அதற்கு விடையானது கேட்காமலேயே வந்து விட்டதைப் பார்த்து அவர்கள் அதிர்ச்சியடைந்து ஒன்றும் தோன்றாமல் இருந்தனர். அதைப் பார்த்த ஸந்நிதானம் மேலும் அவர்களைச் சோதிக்க விரும்பாமல், ''நீங்கள் வந்த காரியம் இரண்டு மாதத்திற்குள் நிறைவேறும். கவலைப்படவேண்டாம்,'' என்று சொல்லி மந்திராக்ஷதைப் பிரஸாதம் கொடுத்தனுப்பிவிட்டார்கள். இவர்கள் எந்தக் காரியத்தை உத்தேசித்து வந்திருந்தார்கள் என்பதை அவர்களும் சொல்லவில்லை, ஸந்நிதானமும் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் தாங்கள் வந்த கார்யம் கைகூடிவிட்டது என்று சொல்லிக்கொண்டே வெளியில் சென்றார்கள். பின்னால்தான் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்கு அதன் அந்தரங்கம் தெரியவந்தது.

பிறகு அவர்கள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் தனியாக வந்து வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் தம்பதியாகவும் மற்றவர்கள் வெவ்வேறு வர்ணத்தாருமாக வந்திருந்தார்கள்.

स्त्रियो वैश्यास्तथा शूद्राः तेपि यान्ति परां गतिं *ஸ்திரியோ வைச்யாஸ்ததா*

ஸூத்ரா: தேபி யாந்தி பராம் கதிம் என்ற கீதா வாக்கியத்தை வைத்துக்கொண்டு ஸந்நிதானம் செய்த உபதேசமானது ஸமயோசிதமாகவே அமைந்துவிட்டது. அந்த திவான் கோஷ்டியைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தங்களுக்குத்தான் அந்த உபபேதசம் என்று எண்ணும்படி அவ்வளவு அழகாக எடுத்துச் சொல்லவே எல்லோரும் அந்த உபதேச மொழியில் ஈடுபட்டு மெய்மறந்து போய் விட்டார்கள். அதில் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஒருவரும் இருந்தார். அவர் நமது குருநாதரின் உபதேசமொழியைக் கேட்டது முதல் வேதசாஸ்திரங்களிலும் வைதிகர்களிடமும் தனக்கு இருந்த த்வேஷத்தை விட்டுவிட்டார்.

இதெல்லாம் அவர்கள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் பேசிக் கொண்டதிலிருந்து தெரியவந்தது. ''இவ்விதமான அமிருத மொழிகளை உபதேசித்து வரும் இந்த மஹானுக்கா உடம்பு ஸரியில்லை என்று சொன்னீர்கள்? இதை நம்ப முடியவில்லையே ! '' என்று அந்த திவான் கேட்கவே ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் வெட்கித் தலைகுனிந்து கொண்டார். பிறகு, ''இதெல்லாமிருக்கட்டும். நீங்கள் வந்த கார்யமென்ன? கார்யம் கைகூடிவிட்டது என்று சொன்னீர்களே. ஸந்நிதானமும் கார்யம் ஸபலமாகும் என்று சொன்னார்களே? அந்தக்கார்யம்தான் என்னவென்று நீங்கள் இன்னும் சொல்லவில்லையே'' என்று ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் கேட்கவே, ''அதைச் சொல்லுவதற்காகத்தான் உங்களிடம் வந்திருக்கிறோம்'' என்று சொன்னார்கள். அவர்களில் ஒருவர் பின் வருமாறு கேட்டார்:–

ஒருவர்:– சாஸ்திரிகளே! நீங்களோ மடத்து ஸர்வாதிகாரி. உங்களுக்குத் தெரியாத விஷயம் மடத்தில் ஒன்றும் இருக்கமுடியாது. நீங்களே எங்களிடம் இப்படிச் சொல்லலாமா ?

சாஸ்திரிகள்:– ஸந்நிதானம், ஒருவிதமாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்புகளைச் செய்ய வேண்டியதுதான் என்கடமை. அதைத் தவறாமல் நான் செய்து வருகிறேன்.

ஒருவர்:– ஸந்நிதானமும் நன்றாகத்தானிருக்கிறார்கள். நாங்கள் அவரை தரிசனம் செய்ததில் யாரோ ஒரு மனிதனிடம் பேசியதாகவே எங்களுக்குத் தோன்றவில்லை. ஸாக்ஷாத் பகவானிடமே நேரில் கண்டு பேசியது போன்ற உணர்ச்சிதான் எங்களுக்கு உண்டாகிறது. அதிலும்

இதோ இருக்கிருரே இவர் (ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்) அவரது அமிருதமொழியைக் கேட்டுப் பரவசமடைந்து கண்ணீரே விட்டுவிட்டார் தெரியுமா?

சாஸ்திரிகள்:- அவர் ஸாக்ஷாத் ஈசுவர அவதாரம்தான் என்பதை இப்பொழுதாவது நீங்கள் உணர்ந்து கொண்டீர்களல்லவா?

ஒருவர்:- நாங்கள் உணர்ந்து கொண்டது இருக்கட்டும். நீங்கள் அதை நம்புவதாகத் தெரியவில்லையே!

சாஸ்திரிகள்:- அந்த நம்பிக்கையில்லாவிட்டால் இந்த ஸ்தானத்திலே நான் இருக்கவே முடியாதே!

ஒருவர்:- அப்படியானல் ஸந்நிதானம் ஏதோ ஒரு விதமாயிருக்கிருர்கள் என்று இதற்கு முன் சொன்னீர்களே அது நியாயம்தானு?

சாஸ்திரிகள்:- அவ்வித எண்ணமும் கொஞ்சம் ஏற்பட்டது வாஸ்தவம்தான். இனிமேல் அந்த தப்பெண்ணத்தையும் விட்டுவிடுகிறேன். அதிருக்கட்டும் மைசூர் ஸம்ஸ்தான அதிகாரிகள், முன் தகவல் கொடுத்துத்தான் இங்கு வருவது வழக்கம். அந்த வழக்கத்திற்கு விரோதமாக திடீரென்று நீங்கள் எல்லோரும் புறப்பட்டு வந்ததற்குக் காரணம் புரியவில்லையே.

ஒருவர்:- திடீரென்று வந்ததனுல்தான் இவ்வளவு விஷயங்களையும் தெரிந்துகொண்டோம். நாங்கள் வழக்கம் போல் வந்திருந்தால் வழக்கம்போலவே திரும்பியிருப்போம். இந்த அதிசயத்தையும் அவரது மஹிமைகளையும் நேரில் பார்த்திருக்க முடியாது. அதனுல் தான் புறப்பட்டு வரும் விவரத்துக்குத் தந்திகொடுக்காமல் திடீரென்று புறப்பட்டு வந்தோம்.

சாஸ்திரிகள்:- ஸந்நிதானத்துக்கு உடம்பு ஸரியில்லை என்று எண்ணி உங்களை பேட்டிக்கு அழைத்துப்போகாதது பிசகுதான். அதை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர்:- இதில் உங்களது தவறென்றுமில்லை. நீங்கள் ஸந்நிதானத்தைப் பாதுகாக்க வேண்டியது உங்கள் கடமைதான். அதை இன்னும் தொடர்ந்து செய்துதான் வரவேண்டும்.

இதில் மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது? ஆனாலும் ஜாக்கிரதையாயிருங்கள்.

சாஸ்திரிகள்:– நான் என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் தெரிவித்தால் உபகாரமாயிருக்கும்.

ஒருவர்:– நீங்கள் செய்து வருவதுதான் நியாயம். புதிதாக ஒன்றும் செய்யவேண்டியதில்லை. வாஸ்தவத்தில் ஸந்நிதானம்தான் ஒரு மாதிரியாயிருப்பதுபோல் அபிநயம் செய்து உங்களையெல்லாம் மயக்கிவிட்டார்கள். நீங்களும் அதில் மயங்கிவிட்டீர்கள். இதுதான் நாங்கள் இன்று தெரிந்துகொண்ட விஷயம்.

சாஸ்திரிகள்:– இவ்வளவு பேசியும் நீங்கள் எந்தக் கார்யத்துக்காக ஸந்நிதானத்தை தரிசனம் செய்ய வந்தீர்கள் என்று நான் புரிந்துகொள்ள முடியவில்லையே.

ஒருவர்:– ஸரி, உங்களுக்குப் புரியும்படியாகவே சொல்லுகிறேன். நீங்கள் தினசரிப் பத்திரிகை படிப்பதுண்டா இல்லையா?

சாஸ்திரிகள்:– முழுவதுமாகப் படிப்பதில்லை. படிக்க ஸாவகாசமுமில்லை. மடத்து மானேஜர் மார்க் பண்ணி வைத்த இடங்களை மாத்திரம் பார்ப்பதுண்டு.

ஒருவர்:– அப்படியானால் நமது மைசூர் ராஜ்யத்திலும் மற்ற சில இடங்களிலும் மூன்று வருஷமாக மழையில்லாமல் பயிர்களெல்லாம் வாடிப்போயிருப்பதையும் அதனால் நம் ராஜ்யத்தில் பஞ்சம் வரும்போலிருப்பதையும் பத்திரிகைகளில் நீங்கள் படித்துப் பார்த்ததுண்டா?

சாஸ்திரிகள்:– பத்திரிகைகளில் பல ஸமாசாரங்களுடன் இதுவும் வந்திருக்கலாம். இது ஸஹஜம்தானே. கொஞ்ச நாள் மழையில்லாமலிருந்தது என்றும், பிறகு ஒருநாள் திடீரென்று மழை பெய்தது என்றும், பத்திரிகைகள் பலவாறு கோஷித்துக் கொண்டுதானிருக்கும். அதில் என்ன ஆச்சரியம்?

ஒருவர்:– உங்களுக்கு அது ஆச்சர்யமாகத் தோன்றவில்லை. ஏனென்றால் ஏற்கெனவே இது ரிஷ்யசிருங்கர் வசித்து வந்த

தபோவனம். அதிலும் நமது ஸந்நிதானத்தின் பாததூளியால் பரிசுத்தம் செய்யப்பட்ட இடம். சாரதாம்பாளின் கருணைகடாக்ஷமும் இங்கே இருக்கிறது. அதனால் இங்கே நல்ல மழை பெய்து ஸுபிக்ஷமாயிருக்கிறது. நீங்களும் கவலையற்று இருக்கிறீர்கள். ஆனால் மைசூர் ராஜ்யம் பூராவும் இப்படியே இருக்குமென்று நினைக்கிறீர்களா?

சாஸ்திரிகள்:– சிலவிடங்களில் மழையில்லாமலிருப்பது இயற்கைதானே.

ஒருவர்:– அதுதான் கிடையாது. அதற்காகத்தான் நீங்கள் தினஸரி பத்திரிகைகளைப் படிக்கிறீர்களா என்று முதலிலேயே கேட்டேன். நீங்கள் ஸரிவரப்படிக்கவில்லையென்றே தெரிகிறது. ஆனால் ராஜ்ய அதிகாரிகளாகிய நாங்கள் அவ்விதமிருக்கலாமா? அதற்காகத்தான் ஸந்நிதானத்திடம் வந்தோம். மைசூர் தேச அட்லாஸ் சித்திரத்தையும் வரைந்து அதில் மழையில்லாமல் பஞ்சம் ஏற்படக்கூடிய இடங்களைப் புள்ளிகள் போட்டுக் குறித்திருக்கிறோம். பாருங்கள். இதைத்தான் ஸந்நிதானத்திடம் காண்பித்து அதற்கு ஏதாவது பரிஹாரம் செய்யலாம் என்று எடுத்து வந்திருக்கிறோம். ஆனால் ஸந்நிதானம் அதைக் காண்பிக்க அவகாசமேயில்லாமல் செய்து விட்டார்கள். நான் இந்தக் குறிப்பை எடுத்துக்காட்டுவதற்காகப் பையிலிருந்து எடுத்தவுடனேயே ஸந்நிதானம் வேண்டாமென்று ஜாடை காட்டிவிட்டு இதற்கும் இன்னும் நாங்கள் கேட்கக்கூடிய மற்ற சில கேள்விகளுக்கும் முன்கூட்டியே பதில் அளித்துவிட்டார்களே! இவரையல்லவா மஹான் என்று சொல்லவேண்டும்.

சாஸ்திரிகள்:– நீங்கள் உங்களது புதிரை இன்னும் பூராவாக அவிழ்க்கவில்லையே! நீங்கள் என்ன கேட்பதாக இருந்தீர்கள்? ஸந்நிதானம் அதற்கு என்ன பரிஹாரம் செய்துவிட்டார் ? என்று விளங்கவில்லையே. நானும் கூடவேதானிருக்கிறேன். அவ்விதம் பரிஹாரம் செய்வதாக ஒன்றும் சொல்லவில்லையே. இது ஆச்சர்யமாகவல்லவா இருக்கிறது.

அதற்கு அவர், ''ஆச்சர்யமாகவே இருக்கட்டும். ஸந்நிதானம் சொன்ன இரண்டு மாதத்திற்குள் எல்லாம் தானாகவே விளங்கும்.

நாங்களெல்லோரும் போய்வருகிரேம்'' என்று சாஸ்திரிகளிடம் சொன்ஞர்.

பிறகு அந்த திவான் கோஷ்டியார்கள் மூன்று கார்களிலும் ஏறிக்கொண்டார்கள். கார் புறப்படும்பொழுது ஸிம்ம கர்ஜனைபோல் पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते । *பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணுத் பூர்ணமுதச்யதே* । என்று ஸந்நிதானத்தின் அறையிலிருந்து பலத்த சப்தம் கேட்கவே, இதுவும் ஒரு மங்கள சூசகம்தான் என்று நினைத்துக் கொண்டு அந்த அதிகாரிகள் கிளம்பிச் சென்றுவிட்டார்கள்.

✣ ✣ ✣

ௐ10ௐ

திவான் முதலியவர்கள் சென்று மஹாராஜாவைப் பேட்டி கண்டு நடந்த விஷயங்களையெல்லாம் சொல்லி, ஸந்நிதானம் மிகவும் ஆரோக்யமாகவே இருப்பதாகத் தெரிவித்தார்கள். ஸந்நிதானம் स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः, स्त्रियो वैश्यास्तथा शूद्रास्तेऽपि यान्ति परां गतिम्

ஸ்வகர்மணு தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மானப: ।

ஸ்த்ரியோ வைச்யாஸ்ததா ஶூத்ராஸ் தேऽபி யாந்தி பராம் கதிம் ॥

என்ற கீதா வாக்கியங்களை வைத்துக்கொண்டு ஸ்வகர்ம அநுஷ்டானத்தை எல்லோரும் செய்துவந்தால் க்ஷேமம் உண்டாகும் என்று பொதுவாகச் சொன்னார்கள். ஸந்நிதானத்தின் இந்த விளக்கவுரையை வைத்துக் கொண்டு எல்லாக் கோவில்களிலும் எல்லோருமாகச் சேர்ந்து பகவானுக்குப் பிரார்த்தனைகள் நடத்தவேண்டும் என்று எல்லோருமாகத் தீர்மானித்தார்கள். அப்படியே ஒவ்வோர் ஆலயத்திலும் பிரார்த்தனை நடத்தும்படி ஏற்பாடு செய்தார்கள்.

அந்த திவான் கோஷ்டியாரெல்லாம் சென்றபிறகு ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தனியாக உட்கார்ந்து எவ்வளவோ யோசித்துப் பார்த்தும், ஒன்றும் புலப்படவில்லை. ஸந்நிதானத்திடம் சென்ருலோ, ''अल्पवेतनभृत्यस्तु अमल्दार इतीर्यते'' *அல்பவேதன ப்ருத்யஸ்து அமல்தார இதீர்யதே* என்று முன்சொன்ன சுலோகத்தையே கானம் செய்ய ஆரம்பிக்கிருர்கள். ஆகையால் இரண்டு மாதத்திற்குள் தாஞகவே, விஷயம் வெளிவராமல் இருக்க முடியாது, என்று தீர்மானமாக இருந்துவிட்டார். ஆனல் மறுநாள் பத்திரிகைகளில் மைசூர் ராஜ்யத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் மழைக்காக எல்லா ஜாதியாரும் கலந்துகொண்டு விசேஷ பிரார்த்தனைகள் செய்து

வருவதாக எழுதியிருப்பதைப் பார்த்தவுடன்தான் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்கு எல்லாம் விளங்கிவிட்டது. ஸந்நிதானம் பொதுவாகச் சொன்னதை அவர்கள் வேறுவிதமாக அர்த்தம் செய்துகொண்டு இந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

இவ்விதம் யோசித்துக் கொண்டிருக்கும்போது ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்குத் திடீரென்று ஒரு விஷயம் புலனாயிற்று. அதாவது ஸந்நிதானம் அந்தர்முகாவஸ்தை அடைவதற்கு 10 நாள் முன்னமேயே அங்குள்ள ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையின் அத்யக்ஷராயிருந்த கல்யம் சுந்தர சாஸ்திரிகளையும் மற்ற உபாத்தியாயர்களையும் வரவழைத்து, ''நீங்கள் எல்லோரும், தினமும் காயத்ரீ ஜபம் 1008 ஆவர்த்தி செய்து வரவேண்டும்'' என்று உத்தரவிட்டார்கள். ''ஸரி, அப்படியே செய்கிறோம். ஸங்கல்பம் எப்படிச் செய்யவேண்டும்?'' என்று கேட்கவே, 'परमेश्वरप्रीत्यर्थं' *பரமேஶ்வர ப்ரீத்யர்த்தம்* என்று மாத்திரம் ஸங்கல்பம் செய்தால் போதும். ஒவ்வொரு நாளும் எல்லோருமாகச் சேர்ந்து எத்தனை ஆவர்த்தி ஜபம் செய்தீர்கள் என்ற விவரத்துக்குக் குறிப்பு எடுத்துக் கொண்டு என்னிடம் தெரிவிக்க வேண்டும்'' என்றார்கள். அந்தச் சுந்தர சாஸ்திரிகளும் பிறரும் ''உத்தரவுப் பிரகாரம் செய்கிறோம்'' என்று வணக்கத்துடன் தெரிவித்து விடை பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

பிறகு அந்தப்பாடசாலை அத்யக்ஷரான சுந்தர சாஸ்திரிகளுக்கு பலவித ஸந்தேஹங்கள் உண்டான போதிலும் அதை எல்லாம் ஸந்நிதானத்திடம் தெரிவிக்க விரும்பாமல் உடனேயே தான் மாத்திரம் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடம் சென்று ஸந்நிதானம் உத்தரவிட்டதைத் தெரிவித்தார்.

சுந்தர சாஸ்திரிகள்:- நாங்கள் எல்லோரும் காயத்ரீ ஜபம் தினந்தோறும் செய்து வருகிறோமே. அப்படியிருக்கையில் இந்தத் திடீர் உத்தரவுக்குக் காரணம் என்ன?

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்: लोकोत्तराणां चेतांसि कः परिच्छेत्तुमर्हति *லோகோத்தராணும் சேதாம்ஸி க: பரிச்சேத்தும் அர்ஹதி* (உலகில் மேலான நிலையில் இருக்கும் மஹான்களின் மனத்திலுள்ள அபிப்பிராயத்தை யார் தீர்மானிக்க முடியும்?) என்று சொன்ன பிரகாரம்

மஹான்களின் கார்யத்தில் நாம் விமர்சனம் செய்ய உத்தேசிப்பதே தவறு. இது உமக்குத் தெரியாதா?

சுந்தர:- தெரியும். அதனுல்தான் ஸந்நிதானத்திடம் ஒன்றும் சொல்லாமல் அவரது கட்டளையை அப்படியே ஒப்புக்கொண்டு வந்திருக்கிறோம்.

ஸ்ரீகண்ட :- ஸரி, அவரது உத்தரவுப்படியே செய்யலாமே! என்னிடம் ஏன் வரவேண்டும் ?

சுந்தர:- ஸந்நிதானத்தின் உத்தரவுப்படி செய்தாலும் இன்ன பலனுக்காகச் செய்கிறோம் என்று தெரிந்தால் அந்த பிரார்த்தனையுடன் ஜபம் செய்ய சௌகர்யமாக இருக்கும் அல்லவா?

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- அதையும் ஸந்நிதானத்திடமே நீங்கள் கேட்டிருக்கலாமே?

சுந்தர:- அதையும் கேட்காமலில்லை. அதைக் கேட்டதற்கு 'எல்லாம் परमेश्वरप्रीत्यर्थं *பரமேச்வர ப்ரீத்யர்த்தம்* என்று வழக்கம் போல் ஸங்கல்பம் செய்யுங்கள்' என்றே உத்தரவாகியிருக்கிறது. எங்களுக்கோ பல ஸந்தேஹங்கள் உண்டாகின்றன. ஆகையால் நீங்களே ஸந்நிதானத்தின் அந்தரங்க அபிப்பிராயத்தைத் தெரிவித்து விட்டால் மிக உபகாரமாக இருக்கும்.

ஸ்ரீகண்ட:- ஸரி. ஸந்நிதானத்திடம் ஸமயம் பார்த்துக் கேட்கிறேன். அதற்குக் கொஞ்சநாள் தாமதமாகலாம். அதுவரையில் நீங்கள் உத்தரவுப்படி ஜபம் செய்து வாருங்கள்.

அன்று முதல் பாடசாலை உபாத்தியாயர்களும், வித்யார்த்திகளும் மடத்திலுள்ள சிப்பந்திகளும், தங்கள் தங்கள் இருப்பிடத்தில் இருந்துகொண்டே 1000 ஆவர்த்தி ஜபம் செய்து வந்தார்கள். சுந்தர சாஸ்திரிகளும் அவரவர் செய்த ஜப ஸங்க்யையைக் குறித்ததுடன் ஒவ்வொரு நாளும் ஸந்நிதானத்திடம் அதைத் தெரிவித்து வந்தார். ஆனுல் இந்த ஜபம் செய்வது எதற்காக என்று மாத்திரம் அவரிடம் கேட்கத் தைரியம் இல்லாமல் திரும்பிவிடுவார்.

ஒருநாள் காயத்ரீ ஜபம் செய்பவர்கள் அனைவரையும் வரவழைத்துக் காயத்ரீயின் அர்த்தத்தை விளக்கி, இவ்வளவு

மஹிமைவாய்ந்த ஒரு மந்திரம் இருக்கும்போது வேறு என்ன வேண்டும்? ஆகையால் गायत्रीमात्रसारोऽपि ब्राह्मणो नात्र संशयः *காயத்ரீ மாத்ர ஸரோऽபி ப்ராஹ்மணோ நாத்ர ஸம்சய:* என்று சொன்ன பிரகாரம், காயத்ரீயையாவது காப்பாற்றிவந்தால்தான் பிராஹ்மண்யம் நிலைக்கும் என்றெல்லாம் சொல்லிக் கடைசியில் அப்பய்ய தீக்ஷிதர் செய்த சிவதத்வவிவேக நூலிலிருந்து–

द्विजानां गायत्री खलु परमुपास्या नियमिता
प्रसिद्धं तस्याश्च त्वमसि परमं दैवतमिति ।
अकुर्वाणस्यातस्तव चरणसेवां द्विजपशोः
अवस्त्रोऽलङ्कारः सकलमपि सत्कर्मचरितम् ॥

(பிராம்மணர்களுக்கு காயத்ரீதான் ஜபிக்கவேண்டிய சிறந்த மந்திரமாக விதிக்கப்பட்டிருக்கிறது. பரமேச்வரா! அந்த மந்திரத்திற்கு நீதான் அதிதேவதை என்பது பிரஸித்தம். ஆகையால் உன்னைப் பூஜிக்காமல் வேறு எந்த நல்ல கர்மா செய்தபோதிலும் அவனுக்கு அது வீண்தான். ஆடையில்லாமல் எவ்வளவு நகைகளை அணிவித்தாலும் அது அலங்காரமாகுமா?)

என்ற அழகான சுலோகத்தைச் சொல்லி ''காயத்ரீ ஜபம் இல்லாமல் செய்யும் மற்ற ஜப பூஜாதிகளெல்லாம் வஸ்திரம் இல்லாத மற்ற அலங்காரங்கள் போல் வீண்தான்'' என்பதை வெகு அழகாகக் குழந்தைகளுக்கும்கூடப் புரியும்படி எடுத்துச்சொல்லி, ''இந்தக் காயத்ரீயை விடாமல் செய்து வாருங்கள், அதனால் உங்களுக்கெல்லாம் ஸகல க்ஷேமங்களும் உண்டாகும். நீங்கள் செய்யும் ஜபத்தால் உலகத்திற்கும் க்ஷேமம் உண்டாகும்'' என்று உபதேச மொழிகளால் அநுக்ரஹித்துவிட்டு ஸ்நானத்துக்குச் சென்றார்கள். போகும்போது இன்னொன்றையும் ஞாபகப் படுத்தினார்கள். ''நீங்கள் உங்களது ஜாகையில் இருந்து ஜபம் செய்ய வேண்டாம். காலையில் ஸ்நான ஸந்தியாவந்தனமானவுடன் 7 மணிக்கெல்லாம் சாரதாம்பாள் ஸந்நிதியில் எல்லோரும் சேர்ந்து ஜபம் செய்யவேண்டும்'' என்று. ஸந்நிதானம் கடைசியில், ''ஆத்ம க்ஷேமத்துடன் உலக க்ஷேமமும் உங்களது ஜபத்தால் ஏற்படக்கூடும்'' என்று சொன்னதை மற்றவர்கள் ஸஹஜமாகவே எண்ணிவிட்டார்கள். ஆனால் இந்த லேககருக்கு மாத்திரம், அதில் ஏதோ விசேஷம் இருக்கிறது என்ற எண்ணம் ஏற்பட்டதால், சாஸ்திரிகளிடம் சென்று

தன் எண்ணத்தைத் தெரிவிக்கவே, ''அதெல்லாம் ஒன்றுமில்லை, பொதுவான வார்த்தைதான் அது'' என்று இந்த லேககரை மடக்கி அனுப்பிவிட்டார்.

இவ்விதம் காயத்ரீ மஹிமையைப் பற்றி உபதேசம் செய்தபிறகு, நமது ஸந்நிதானம் மறுநாளிலிருந்தே அந்தர்முகமாகிவிட்டார்கள். அதாவது தம் ஸங்கல்பப்படியே எல்லாம் நடக்கும் என்று உறுதிசெய்துகொண்ட பிறகுதான், அந்தர்முகாவஸ்தையை ஏற்றுக்கொண்டார்கள். அவர் ஸத்யஸங்கல்பர். ஆதலால் சாரதாம்பாளது ஸந்நிதியிலேயே எல்லோருமாகக் கூடி ஸந்நிதானத்தின் உத்தரவுப்பிரகாரம் காயத்ரீ ஸஹஸ்ர ஆவர்த்தி ஜபம் செய்து வந்தார்கள். அந்தர்முக அவஸ்தையிலும்கூட காயத்ரீ ஜபம் நடக்கிறதா இல்லையா என்பதை, மறைமுகமாகக் கவனித்துக்கொண்டுதான் வந்தார்கள். ஸ்ரீகண்ட சாஸ்திரிகளிடமும் ஜபம் ஸரியாக நடக்கிறதா என்றும் ஒவ்வொரு நாளும் எத்தனை ஸங்க்யை என்றும் விசாரித்துக் குறித்து வைத்திருக்கும்படி சொல்லியிருந்தபடியால் அவரும் மேல் விசாரணை செய்து கொண்டு வருவதுடன் ஜப ஸங்க்யைகளையும் தேதிவாரியாகவே குறித்துவந்தார்.

இந்த ஸந்தர்ப்பத்தில்தான் திவான் கோஷ்டியார் ஸந்நிதானத்தைத் தரிசிக்க வந்திருந்தார்கள் என்பதை நினைக்கவே இப்பொழுது ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் மூளை கொஞ்சம் வேலை செய்ய ஆரம்பித்தது. ஸந்நிதானம் காயத்ரீ ஜபம் செய்ய உத்தரவிட்டதற்கும், இந்தத் திவான் கோஷ்டியார் வந்ததற்கும், ஏதாவது ஸம்பந்தம் இருக்கலாமோ, என்று அவர் யோசிக்கலானார். வந்தவர்களையெல்லாம் அனுப்பிய பிறகு முன் பின் நடந்தவைகளையெல்லாம் சேர்த்து, யோசித்துப் பார்க்கையில், 'பளிச்' என்று உண்மை விளங்கிவிட்டது. அதாவது ''ஸந்நிதானம் ஒருமாதம் முன்னிருந்தே ராஜ்யத்தில் மழையில்லாமையையும், வறட்சியையும், அதனால் ஜனங்கள்படும் துன்பத்தையும் எப்படியோ தெரிந்துகொண்டு அந்த அனாவிருஷ்டி தோஷத்திற்குப் பரிஹாரமாகத்தான், இந்தக் காயத்ரீ ஜபயக்ஞத்தை, ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள். திவான் கோஷ்டியாரிடமும் மறைமுகமாகப் பிரஜைகள் எல்லோரும் சேர்ந்து எல்லா ஆலயங்களிலும் பிரார்த்தனை செய்யும்படி ஸூசனையாகத்

தெரிவித்திருக்கிருர்கள். அதற்காகத்தான் இரண்டுமாத அவதியையும் அன்று குறிப்பிட்டார்கள். தானும் ஏகாந்தவாஸம் செய்வதுபோல் அபிநயம் செய்துகொண்டு, கடினமான தபஸ்ஸினுல் உடலே வாட்டிக்கொண்டு வருகிருர்கள். ஆஹா! இதை நாம் முன்னமேயே தெரிந்துகொள்ளாமல் போய்விட்டோமே, என்ன மதியீனம்! '' என்றெல்லாம் நினேத்துக்கொண்டே அன்று இரவு முழுவதும் நித்திரையே செய்யவில்லே.

மறுநாள் விடிந்ததும் இந்த லேககரை வரவழைத்து ''அப்பா! சாஸ்திரி! உன்வாயில், சர்க்கரைதான் போட வேண்டும்'' என்ருர். இந்த லேககருக்கு ஒன்றும் விளங்காமல் திகைத்து நிற்கவே, ''வேருென்றுமில்லே. அன்று காயத்ரீயைப்பற்றி ஸந்நிதானம் உபந்யாஸம் செய்தார்கள். அல்லவா! அதில் கடைசியில் 'காயத்ரீ ஜபத்தினுல் ஆத்மக்ஷேமத்துடன் லோகக்ஷேமமும் உண்டாகும்' என்று ஸந்நிதானம் சொன்னதில் ஏதோ விசேஷ அபிப்பிராயம் இருக்கும்போலிருக்கிறது என்று நீ சொன்னுயல்லவா? அது இன்றுதான் எனக்கு விளங்கியிருக்கிறது. அதை அப்பொழுதே நீ கண்டுபிடித்துவிட்டாய். அதை நான் லக்ஷ்யம் செய்யாமல் விட்டு விட்டேன். நமது ஸந்நிதானம் எவ்வளவு (दीर्घदर्शी) தீர்க்கதர்சியாக இருக்கிருர் பார்த்தாயா? மனதின் கம்பீரத்தன்மையை நாம் அறிந்துகொள்ள முடியவில்லேயே! நமது ஆசார்யாளின் பாஷ்யம் எவ்விதம் பிரஸந்நகம்பீரமாக இருக்கிறதோ அவ்விதமே ஸந்நிதானத்தின் மனநிலேயும் இருக்கிறது. ஒருமாதத்துக்கு முன் சொன்ன வார்த்தையின் அர்த்தம் இன்றுதான் எனக்கு விளங்குகிறது. கீதையில் यज्ञानां जपयज्ञोऽस्मि *யக்ஞாநாம் ஜபயக்ஞோ அஸ்மி*, என்று பகவான் சொன்ன பிரகாரம் (कोटिगायत्रीजपयज्ञ) கோடி காயத்ரீ ஜபயக்ஞத்தை நடத்தும் எண்ணத்துடனேயே இவ்விதம் நமக்கெல்லாம் கட்டளே யிட்டிருக்கிருர்கள். லக்ஷக்கணக்கில் பணம் செலவழித்தாலும் இந்த யக்ஞத்தை இவ்வளவு விதிவத்தாக ஒரு மஹாராஜாவினுல்கூட நடத்த முடியாது. அப்பேர்ப்பட்ட மஹத்தான காரியத்தையல்லவா நமது ஸந்நிதானம் ஸங்கல்பித்துக்கொண்டு அதை நடைமுறையிலும் காட்டிவிட்டார்கள். இதற்காகத்தானே அவரும் ஏகாந்தவாஸம் என்ற வியாஜத்தால் காயக்லேசம் செய்து கொண்டு, கடும் தவம் செய்கிருர்கள். ஆஹா! ஜகத்குரு என்று இந்த மஹானேயல்லவா சொல்லவேண்டும். ஜனங்கள் படும் கஷ்டத்தைப்

பொறுக்கமாட்டாமல் தானே இந்த மஹத்தான தியாகம் செய்யவேண்டுமென்ருல், ஜனங்களிடம் அவருக்குள்ள கருணையை என்னவென்று சொல்வது? இப்பேர்ப்பட்ட தியாகமூர்த்தியை, நாம் வேறு எங்கே காணமுடியும்?'' என்றெல்லாம் சாஸ்திரிகள் கூறவே, இருவருக்கும் ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று. அதை நினைத்தால் இன்றும் மயிர்க்கூச்சல் ஏற்படுகிறது. ஸந்நிதானத்தின் பெருமையை நினைத்தாலே ஆனந்த பாஷ்பம் உண்டாகிறது. இனிமேல் அந்தக் கருணு மூர்த்தியை நாம் எங்கே பார்க்கப்போகிருேம் என்ற ஏக்கமே உண்டாகிறது. ஆனுலும் அவர் வித்யாதீர்த்த ஸ்ரீசரணுளின் மூர்த்தியிலேயே, கலந்திருப்பதாக எண்ணி ஒருவாறு ஸமாதானம் அடைவதைத் தவிர வேறு வழி இல்லை. சதசுலோகியில், ''श्रितचरणयुगे सद्गुरुः स्वीयशिष्ये स्वीयं साम्यं विधत्ते'' *ச்ரித சரணயுகே ஸத்குரு: ஸ்வீய சிஷ்யே ஸ்வீயம் ஸாம்யம் விதத்தே* என்று ஸத்குருவானவர் தன் சிஷ்யனிடத்தில் கலந்து தன் ஸாம்யத்தையே உண்டுபண்ணுகிருர் என்று சொல்லியிருப்பதால் அந்த மஹாஸந்நிதானமே நமது வித்யாதீர்த்தமூர்த்தியில் ஐக்யமாய் இருப்பதாக நினைத்துக்கொண்டு ஸமாதானம் அடைவோமாக.

மைசூர் ராஜ்யம் எங்கும் மழைக்காகப் பிரார்த்தனைகள் ஜரூராக நடந்துகொண்டிருக்கையில் இங்கே சிருங்ககிரியில் கோடி காயத்ரீ ஜப யக்ஞமும் மும்முரமாக நடந்து வந்தது. இரண்டுக்கும் ஸந்நிதானத்தின் ஆக்ஞாபலம்தான் காரணம். இத்துடன் ஸந்நிதானம், தானும் சில ஜபங்களையும், அந்தரங்க பிரார்த்தனைகளையும், செய்து கொண்டு கடினமான தவவாழ்க்கையில் ஈடுபட்டிருந்தார்கள். இவைகளெல்லாம் இரண்டு மாதம் விடாமல் நடந்து வந்தன. இம்மூன்றும் ஒன்று சேரவே அந்தப் புண்ணியங்களெல்லாம் கூடி ஒன்ருகக் குவிந்து பலமடைந்து, எங்கேயோ அந்தர்தானமாக இருந்த வருணபகவானை மைசூர் ராஜ்யத்துக்கு இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. எங்கே பார்த்தாலும் ஜலப்ரளயம். ஜனங்களெல்லாம் ஆனந்தக்கூத்தாடினுர்கள். மைசூர் ராஜ்யமெங்கும் ருஷ்ய சிருங்க ஆசிரமம் போலவே புத்துயிர்ப் பெற்று விளங்கியது.

ஒரு நாள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் தினசரிப் பத்திரிகையுடன் நமது குருநாதரிடம் வந்து ''உங்களது ஸங்கல்பம் நிறைவேறி விட்டது. மைசூர் ராஜ்யம் எங்கும் மழை பெய்து சுபிக்ஷம்

ஏற்பட்டிருக்கிறது'' என்று பத்திரிகையைப் பிரித்து வாசிக்கவே, அவர் மந்தஹாஸம் செய்துகொண்டு ஒன்றும் புரியாதவர்போலவே 'पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते' *பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே* என்று சத்தம் போட ஆரம்பித்தார்கள். அதற்கு சாஸ்திரிகள், ''ஆமாம். உங்கள் எண்ணமும் பூர்ணம் ஆயிற்று, எங்கள் ஆசையும் பூர்ணமாயிற்று, மைசூர் ராஜ்யத்தில் உள்ள குளங்களும் ஏரிகளும் பூர்ணமாகி விட்டன அவ்வளவுதானே'' என்று அதற்கு வியாக்யானம் செய்யவே, அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் 'अल्पवेतनभृत्यस्तु अमल्दारिति कथ्यते' *அல்பவேதந ப்ருத்யஸ்து அமல்தார் இதி கத்யதே* என்று ஏதேதோ ஸம்பந்தம் இல்லாமல் பேச ஆரம்பிக்கவே சாஸ்திரிகள் மேலே பேசமுடியாமல் தனது இருப்பிடம் சென்றார்.

பிறகு கொஞ்சநாளில் ஸந்நிதானம் பஹிர்முகமானதும் காயத்ரீ ஜபம் செய்தவர்களைப் பாராட்டி அவர்களுக்கு ஸம்பாவனை செய்வித்தார்கள். இவ்வாறு அந்த மஹானால் தேசம் ஸுபிக்ஷம் அடைந்தது.

✣ ✣ ✣

11

(இக்கட்டுரையில் வெளிவரும் விஷயங்கள் சுமார் * முப்பது வருஷங்களுக்கு முன் நடந்தவைகள். அக்காலத்தில் எழுதி வைத்துக்கொண்ட குறிப்புகளிலிருந்து இப்பொழுது எழுதப் படுகின்றன. அக்குறிப்பில் வருஷம், மாதம், தேதி இல்லாததால் இதில் வரும் நிகழ்ச்சிகள் கொஞ்சம் முன்னும் பின்னுமாக இருக்கலாம். மேலும் இவைகளில் சில நேரில் பார்த்தவை. நேரில் பார்த்த பக்தர்கள் சொல்லிக் கேட்டவை சில. மடத்தில் உள்ளவர்கள் மூலம் தெரிந்தவை சில. நமது குருசரணுளின் மஹிமாதிசயத்தை விளக்கிக் காட்டுவது ஒன்றுதான் இந்த லேககரின் லக்ஷ்யம். இதைக் கருத்தில் கொண்டு வாசகர்கள் வாசிப்பார்கள் என்று நம்புகிறோம்.)

'கோடி காயத்ரீஜப மஹாயக்ஞம் ' நடந்ததையும், அதனுல் மைசூர் ராஜ்யத்தில் விசேஷமாக மழை பொழிந்து துர்பிக்ஷம் நீங்கியதையும் பார்த்தோம். ஸந்நிதானம் அந்தர்முகமாக இருந்தே இக்காரியத்தை நடத்தியதையும் விளக்கினேம். பின்னுல் 1952ல் சிருங்ககிரியில் அதிருத்ர மஹாயாகம் நடக்கும் போதும் ஸந்நிதானம் அந்தர்முகமாகத்தான் இருந்தார்கள் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பார்த்தால் இரண்டுக்கும் உள்ள ஸாம்யம் புலனுகும். அதைப் பின்னுல் விளக்குவோம்.

கோடி காயத்ரீஜப மஹாயக்ஞத்தாலும், ஸந்நிதானத்தின் தவமஹிமையாலும் மைசூர் ராஜ்யத்தில் மட்டும் அல்ல, பக்கத்திலுள்ள சென்னை ராஜ்யத்திலும் ஏராளமாக மழை பொழிந்து ஸுபிக்ஷம் ஏற்பட்டது. இது எல்லாம் ஸந்நிதானத்தின் தபோமஹிமையால் ஏற்பட்டது என்பதைத் தெரிந்துகொண்டு பல ஊர்களிலிருந்தும் பல பிரமுகர்கள் சிருங்ககிரிக்கு வந்து ஆசார்யாளை தரிசனம் செய்தவண்ணம் இருந்தனர். இவர்களில் காங்கிரஸ்

---

* அதாவது அநேகமாக 1961ம் ஆண்டில் இக்கட்டுரை எழுதப்பட்டது

பிரமுகரான ஸ்ரீமான் ஸத்யமூர்த்தியும் ஒருவர். இவர் தேச விடுதலைக்காகக் காங்கிரஸில் ஈடுபட்டிருந்தபோதிலும் பழுத்த ஸனாதனியாகவே இருந்துவந்தார். அவர் பகவத்கீதை பாராயணம் செய்யாத தினமே இல்லை என்பது யாவரும் அறிந்ததே.

அவர் வந்து ஸந்நிதானத்தை நேரில் கண்டவுடன் பரவசம் அடைந்துவிட்டார். ஸந்நிதானம் அவரைப் பக்கத்தில் அமரும்படி செய்து குசலப்ரச்னம் செய்தார். அது ஸமயம் இந்த லேககரும் கூடவே இருந்தார். பின்வருமாறு ஸம்பாஷணை நடந்தது.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் தேசவிடுதலைக்காகக் காங்கிரஸில் சேர்ந்து ஸ்வராஜ்யம் கிடைக்கப் பாடுபட்டு வருவதைக் கேட்டு வருகிறோம். மிகவும் ஸந்தோஷம்.

ஸத்யமூர்த்தி:– காங்கிரஸில் ஈடுபடுவதால் ஸ்வகர்மானுஷ்டானத்தைச் சரிவரச் செய்யமுடியவில்லையே என்றுதான் மிகவும் வருத்தமாக இருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்: पश्चात्तापेन शुध्यति (*பச்சாத்தாபேனஶுத்யதி*) என்ற நியாயப்ரகாரம் 'செய்யமுடியவில்லையே' என்ற அநுதாபம் இருக்குமானால் அந்தத் தோஷங்களுக்குப் பரிஹாரம் ஏற்படலாம்.

ஸத்யமூர்த்தி:– மைசூர் போலவே சென்னை ராஜ்யத்திலும் பல இடங்களில் மழை இல்லாமல்தான் இருந்தது. போன வாரம் நல்ல மழை பெய்ததால் ஸுபிக்ஷம் ஏற்படும்போல் தோன்றுகிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் எல்லோரும் கூடியவரையில் ஸ்வகர்மானுஷ்டானம் செய்துவந்தால் மழை பெய்யாமல் இருக்குமா? எல்லோருடைய புண்ணியமும் சேர்ந்தால் எதைத்தான் ஸாதிக்கமுடியாது ?

ஸத்யமூர்த்தி:– நாங்கள் மழை பொழியும்படியான கர்மாக்கள் ஒன்றும் செய்யவில்லையே!

ஸ்ரீஸந்நிதானம்: 'इमं मे वरुण श्रुधीहवमद्या च मृडय' (இமம் மே வருண ச்ருதீஹவமத்யா ச ம்ருடய), என்ற மந்திரத்தை நீங்கள் தினமும் சொல்வதில்லையா?

ஸத்யமூர்த்தி:– சொல்லிவருகிறோம். அதற்கும் மழைக்கும் என்ன ஸம்பந்தம் என்று தெரியவில்லையே?

ஸ்ரீஸந்நிதானம்:– அதில் வருணபகவானைப் பார்த்து हे वरुण मृडय (ஹே வருண, ம்ருடய) என்று 'எங்களையெல்லாம் ஸுகம் அடையும்படி செய். எங்களது பிரார்த்தனையை ஏற்றுக்கொள்' என்று வருணனைப் பிரார்த்திக்கவில்லையா?

ஸத்யமூர்த்தி:– இப்பொழுதுதான் இதன் அர்த்தம் கொஞ்சம் விளங்குகிறது. ஆனால் பெரும்பாலும் அர்த்தம் தெரியாமலேதான் ஸந்த்யாவந்தனாதி கர்மாக்களைச் செய்து வருகிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– அர்த்த ஞானத்துடன் செய்தால் விசேஷம்தான். அர்த்தம் தெரியாவிட்டாலும் அந்த மந்திரங்கள் வீண் போகாது.

'अनिच्छयापि संस्पृष्टो दहत्येव हि पावकः'

(*அநிச்சயாபி ஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவ ஹி பாவக:*) என்ற நியாயப்ரகாரம் அர்த்த ஞானம் இல்லாவிட்டாலும் மந்திரங்கள் தகுந்த பலனை அளித்தே தீரும்.

ஸத்யமூர்த்தி:– ஆனாலும் இந்த அனாவ்ருஷ்டி, துர்பிக்ஷம் போன்ற தோஷங்களை நிவர்த்தி செய்யும் அளவுக்கு, எங்களது அல்பமான ஸந்தியாவந்தனாதிகளுக்கு ஸாமர்த்தியம் உண்டா? இப்பொழுது ஏற்பட்ட துர்பிக்ஷங்கள் எல்லாம் நிவர்த்தி அடைந்ததற்கு ஸந்நிதானத்தின் தவமஹிமைதான் காரணம் என்று நாங்கள் நினைக்கிறோம். தவிரவும் இந்த அனாவிருஷ்டியும் துர்பிக்ஷமும் இங்கு மாத்திரம் அல்ல, தக்ஷிண தேசம் பூராவும் சரியான மழை இல்லாமல் தவித்தார்கள். இதற்காகவே சாந்திகளும், ஹோமங்களும் பல இடங்களில் நடந்தன. மஹாருத்ரங்களும், வேதபாராயணங்களும் நடத்தும்படி அநேக மஹான்கள் உபதேசித்தார்கள். இதை எல்லாம் நடத்துவதற்கு பொது ஜனங்களிடமிருந்து பல லக்ஷக்கணக்கான ரூபாய்கள் வசூலிக்கப்பட்டன. எப்படியாவது ஸுபிக்ஷம் உண்டாகவேண்டும் என்று எண்ணி மக்கள் பணம், அரிசி, நெய் முதலான பொருள்கள் கொடுத்தனர். ஆறுமாத காலமாக எங்கும் வேதபாராயணமும், சாந்தி

ஹோமங்களும் நடைபெற்றன. கடைசியில் இப்பொழுதுதான் மழை பெய்திருக்கிறது. முன்காலத்தில் அஞுவிருஷ்டி தோஷமானது இங்கே தவம் செய்து கொண்டிருந்த ருஷ்யச்ருங்க மஹரிஷியால்தான் நிவர்த்தியாயிற்று என்று இராமாயணமே கூறுகிறது. அதே ருஷ்யசிருங்காச்ரமத்தில் வஸித்துவரும் அபர ருஷ்யச்ருங்கர் ஆகிய தங்களது தபோமஹிமையால்தான் இந்த துர்பிக்ஷம் விலகி ஸுபிக்ஷம் ஆரம்பமாகியிருக்கிறது. இதற்குத் தாங்கள்தான் காரணம் என்பதில் ஸந்தேஹமே இல்லை. இந்த ஸுபிக்ஷம் மேன் மேலும் அபிவிருத்தியாகும்படி அனுக்ரஹம் செய்யவேண்டும். காயத்ரீ ஜப யக்ஞம் என்னும் இந்த மஹத்தான கார்யம் நடந்து நிறைவேறினதும் தங்கள் மஹிமையால்தான்.

ஸ்ரீஸந்நிதானம்:- உங்களது கர்ம பலமில்லாமல் நான் மாத்திரம் பிரார்த்தனம் செய்தால் ஒன்றுமே நடக்காது. எல்லோரும் சேர்ந்து செய்த பிரார்த்தனைகளுடன் எங்களுடைய பிரார்த்தனையும் சேர்ந்திருக்கலாம். அவ்வளவுதான். ஆகையால் நீங்கள் எல்லோரும் ஸ்வகர்மானுஷ்டானம் செய்துவந்தால்தான் என் பிரார்த்தனைக்கு ஸாபல்யம் ஏற்படும். அதிருக்கட்டும். கையில் ஏதோ புஸ்தகம் வைத்திருக்கிறீர்களே! அது என்ன?

ஸத்யமூர்த்தி:- இது பகவத்கீதைதான். இதை நான் விடாமல் யதாசக்தி பாராயணம் செய்து வருகிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- மிகவும் ஸந்தோஷம். அதில் ஏதாவது ஸந்தேஹம் இருக்கும்போல் தோன்றுகிறது. அதைக் கேட்பதற்குத்தான் புஸ்தகத்துடன் வந்தீர்களா?

இவ்விதம் ஸந்நிதானம் கேட்கவே அவர் ஆச்சர்யத்தால் அயர்ந்து போய்விட்டார். இதற்கிடையில் காவலாளர் வந்து யாரோ சில பெரிய மனிதர்கள் தரிசனத்திற்காக வந்திருப்பதாயும், அவர்கள் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கவே, ஸந்நிதானம் அவரைப் பார்த்தார்கள். ஸத்தியமூர்த்திக்கோ அவர்களை வரச்சொல்லுவதில் ஸம்மதமில்லை. இந்த ஏகாந்த ஸம்பாஷணைக்கு விக்னம் வந்து விட்டதே என்று யோசித்துக் கொண்டிருக்கையில், மடத்து அதிகாரி ஒருவர் அவர்களையெல்லாம் அழைத்துக்கொண்டு பக்கத்திலேயே வந்துவிட்டார். விசாரித்ததில், அவர்கள் எல்லோரும்

காங்கிரஸ் பிரமுகர்கள் என்றும், ஏதோ முக்கிய கார்யமாக ஸத்தியமூர்த்தியைக் கண்டு பேச விரும்புவதாயும், அத்துடன் ஸந்நிதானத்தையும் தரிசிக்கலாம் என்று மடத்துக்கு வந்திருப்பதாகவும் தெரிய வந்தது. வந்தவர்களைக் கண்டவுடன் ஸ்ரீஸத்தியமூர்த்தி மந்தஹாஸம் செய்வதற்குப் பதிலாக அவர்களை முறைத்துப் பார்க்கவே அந்தப் பார்வையிலிருந்தே விஷயத்தைப் புரிந்துகொண்ட அந்த காங்கிரஸ் பிரமுகர்கள் உடனே வெளியில் வந்து தங்களது லௌகிக வேஷங்களை எல்லாம் களைத்து விபூதி தாரணம் செய்துகொண்டு மறுபடியும் தயக்கத்துடனேயே வந்தார்கள். ஸந்நிதானத்தையும் வந்தனம் செய்தார்கள். மைசூர் தேசத்திலுள்ள அதிகாரிகள் அநேகமாக லௌகிக வேஷத்துடனேயே வந்து ஸந்நிதானத்தை தரிசனம் செய்வதும் வந்தனம் செய்வதும் வழக்கமாகையால் அங்கு உள்ளவர்களுக்கு அது வித்யாஸமாகப் படவில்லை. ஸந்நிதானமும் ஸஹஜமாகவே இருந்து விட்டார்கள். ஆனால் ஸத்தியமூர்த்திக்கு அது தெரியாது. தமிழ் நாட்டில் ஆசார்யாளைத் தரிசனம் செய்யும் போது மேல் வஸ்திரத்தை இடுப்பில் கட்டிக்கொண்டு பயபக்தியுடன் வணங்குவது வழக்கம் அல்லவா! அதுபோல் இல்லாததைப் பார்த்ததால்தான் அவருக்கு, இவர்கள் விநயம் இல்லாதவர்களோ என்ற ஸந்தேஹம் உண்டாயிற்று. அதைத் தெரிந்து கொண்டு ஸந்நிதானமே அவர் ஸந்தேஹத்தை நிவர்த்தி செய்துவிட்டார்கள்.

'कञ्चुकोष्णीषधारित्वं राजसेवकलक्षणम्'

(*கஞ்சுகோஷ்ணீ ஷதாரித்வம் ராஜஸேவகலக்ஷணம்*; அங்கி, தலைப்பாகை அணிவது அரசாங்க வேலைக்காரருக்கு அடையாளம்) என்று ஸந்நிதானம் சிரித்துக்கொண்டே சொன்னவுடன்,

पञ्चकच्छत्रिपुण्ड्रादि वैदिकानां तु लक्षणम् ।

(*பஞ்சகச்ச த்ரிபுண்ட்ராதி வைதிகாநாம் து லக்ஷணம்* பஞ்சகச்சம், விபூதி முதலானவை வைதிகர்களின் அடையாளம்) என்று இந்த லேககர் சுலோகத்தின் பின்பாதியைச் சொல்லி முடிக்கவே, ஸந்நிதானம் ''உனக்கு உத்தரார்த்தம் எப்படித் தெரிந்தது?'' என்று இந்த லேககரைப் பார்த்துக் கேட்டார்கள். ''ஸந்நிதானம் அந்தர்முகாவஸ்தையில் இருந்தபொழுது அந்த முககமலத்திலிருந்து வெளிவந்த சுலோகம்தான் அது. அதை எழுதி

வைத்திருந்ததால் இப்பொழுது அது ஞாபகத்திற்கு வந்தது. அவ்வளவுதான்'' என்று லேககர் சொல்லவே ஸத்யமூர்த்தி உட்பட எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனுர்கள். இதன் மூலம் ஸந்நிதானம் வந்தவர்களுக்கு மறைமுகமாக ஓர் உபதேசமும் செய்துவிட்டார்கள். அதாவது:– ''அங்கியும் தலைப்பாகையும் அணிந்து கொண்டுவிட்டால், தான் ஒரு பெரிய அதிகாரி என்ற மமதை சிலருக்கு ஏற்படலாம். ஆனுல் அந்த அதிகாரியும்கூட ராஜஸேவகன்தான். ஜவான் கூடத்தான் இந்த அங்கியும் தலைப்பாகையும் அணிந்திருக்கிருன். அதனுல் மட்டும் ஒருவனுக்கு விசேஷ மதிப்பு ஏற்படுவதில்லை'' என்று வியங்க்யமாகச் சொல்லியிருப்பதை ஸத்தியமூர்த்தி உணர்ந்து கொண்டார். ஸம்ஸ்கிருதம் தெரியாத மற்றவர்களுக்குப் பின்னுல் வெளியே வந்தவுடன் அதை எடுத்துச் சொன்ன பிறகுதான் தெரியவந்தது.

ஸந்நிதானம் சுலோகத்தின் முன்பாதியை அதிகமாக விவரிக்காமல் பின்பாதியை மட்டும் எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள். ''நாம் எல்லோரும் வைதிகர்கள். சிகா யக்ஞோபவீதம் தரிப்பவர்கள் அல்லது யக்ஞோபவீதத்தை மட்டுமாவது தரித்துக்கொண்டிருப்பவர்கள் எல்லோரும் வைதிகர்கள்தான். நீங்களும் சுத்த வைதிகர்கள்தான்'' என்ருர்கள். இதைக் கேட்டவுடன் சிலர் ஆச்சர்யப்பட்டு விழித்தார்கள். அவர்களைப் பார்த்து மறுபடியும் ''ஸந்தேஹமே வேண்டாம். நீங்களும் வைதிகர்கள்தான்'' என்று கூறி ''உங்களில் காயத்ரீஜபம் செய்பவர்கள் யாராவது உண்டா?'' என்று ஸந்நிதானம் கேட்டார்கள். எல்லோரும் சிரித்துவிட்டு ''காயத்ரீஜபம் செய்யாதவர்கள் உண்டா என்று கேட்கலாமே'' என்ருர்கள். அதற்கு ஸந்நிதானம் ''சரி. அப்படியே ஆகட்டும். காயத்ரீ ஜபம் என்ருவது செய்யாமல் இருந்ததுண்டா?'' என்று கேட்கவே, பொய் சொல்லித்துணிவில்லாத சிலர் ''அநேகமாக ஸந்தியாவந்தனம், காயத்ரீஜபம் எல்லாம் செய்துதான் வருகிருேம். உத்தியோக நிமித்தமாகச் சில சமயம் விட்டுப் போவதும் உண்டு. ஆனுலும் கர்மாக்களை விடக்கூடாது என்ற எண்ணம் எங்களுக்கு உண்டு'' என்ருர்கள். ஸந்நிதானம் ''உங்களுக்கு அந்த எண்ணம் இருப்பதில் பரமஸந்தோஷம். கூடியவரையில் கர்மாக்களை விடாமல் செய்து வருவதுதான் வைதிகர்களின் கடமை'' என்ருர்கள்.

அங்கு வந்திருந்தவர்களில் ஒருவர் லிங்காயதர். அவர் ''நானும் வைதிகன் ஆகமுடியுமா? எனக்கு யக்ஞோபவீதம் இல்லையே? '' என்று கேட்டார். ''வேதத்தைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டால் நீயும் வைதிகன்தான் என்பதில் என்ன ஸந்தேஹம்? '' என்று பதில் வந்தது. இதையெல்லாம் பார்த்த ஸத்தியமூர்த்திக்கு பயம் உண்டாய்விட்டது. தன்னைப் பார்ப்பதற்காக வந்தவர்கள் இப்படியெல்லாம் ஸந்நிதானத்தில் கேள்வி கேட்கிறார்களே என்று எண்ணி, அவர்களை வெளியே சென்று இருக்கும்படியும், பின்னால் தான் வந்து பார்ப்பதாயும் சொன்னார். அதற்கு அந்தக் காங்கிரஸ் பிரமுகர்கள் அவரிடம் ஏதோ ஆங்கிலத்தில் பேசி ஒரு முக்கிய காரியத்திற்காகத் தாங்கள் வந்திருப்பதாகச் சொல்லவே ''இவ்விடத்தில் ஆங்கிலத்தில் பேசவேண்டாம். அது அபசாரமாகும்'' என்று சொல்லி ஸத்தியமூர்த்தி அவர்களை அடக்கிவிட்டார். ஸந்நிதானமோ மந்தஹாஸம் செய்து கொண்டு ''அவர்கள் எல்லோரும் கன்னடியர்கள். கன்னட பாஷை உங்களுக்குத் தெரியாதோ என்ற ஸந்தேஹத்தால் இங்கிலீஷில் பேசிவிட்டார்கள். இதில் தவறு ஒன்றும் இல்லையே'' என்று சொல்லவே, எல்லோரும் ஒருவிதமாக ஸமாதானம் அடைந்தார்கள்.

பிறகு ஸந்நிதானம் ''நீங்கள் பேசிக்கொண்டபடி அவருக்கு ஆபத்து ஏற்படாது. அவர் நாளை சாயங்காலமே வீடு திரும்பிவிடுவார். பயப்படவேண்டாம்'' என்றார்கள். தாங்கள் ஸ்பஷ்டமாக ஒன்றும் சொல்லாமலிருந்தும் இந்த ரஹஸ்யம் ஸந்நிதானத்துக்கு எப்படித் தெரிந்தது என்று ஆச்சர்யப்பட்டு அவர்கள் ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள். இந்த லேககருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஸத்தியமூர்த்தியை வெளியே கூட்டிக்கொண்டுபோய் விஷயத்தை விளக்கிக் கூறவேண்டும் என்று அவர்கள் துடிக்கிறார்கள். ஸந்நிதானமோ அவரை வெளியில் விடுவதாயில்லை. இதற்காக அவர்கள் ஓர் உபாயம் செய்தார்கள். தாங்கள் வெளியே சென்று விட்டால் அவரும் வெளியே வந்துவிடுவார். உடனே அவரிடம் பேசி வந்த காரியத்தை முடித்துக்கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அவர்கள் எழுந்தார்கள். உடனே ஸந்நிதானம் ''அவசரப்படாதீர்கள். உட்காருங்கள். ஸத்தியமூர்த்தி ஏதோ சில ஸந்தேஹங்களைக் கேட்க வேண்டுமென்றே இங்கு வந்திருக்கிறார். ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்துகொண்டு போகவிடுங்கள்'' என்று சொல்லி நமது ஸந்நிதானம்

'श्लोकार्धेन प्रवक्ष्यामि गीतासर्वस्वसंग्रहम्' (ச்லோகார்தேன ப்ரவக்ஷ்யாமி கீதாஸர்வஸ்வஸங்க்ரஹம், பாதி சுலோகத்தால் கீதையின் முக்கிய தாத்பர்யத்தைச் சுருக்கிக் கூறுகிறேன்.) என்று ஆரம்பித்து பகவத்கீதையின் ஸாரமான 'स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः' (ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:) என்ற வாக்கியத்தை மாத்திரம் எடுத்துக் கொண்டு விவரணம் செய்தார்கள். சுமார் அரைமணி நேரம் அமிருத வர்ஷமாக வர்ஷித்தார்கள். இதைப் பார்த்து வருண பகவானும் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டார். பெரும் மழையைப் பார்த்து வந்தவர்கள் ஆச்சர்யமடைந்தார்கள்.

* * *

12

ஸ்ரீ ஸந்நிதானம் அவர்கள் கீதையின் ஸாரத்தை விரிவாக உபதேசித்துவிட்டு ஸத்தியமூர்த்தியைப் பார்த்து ''இனிமேல் உனக்கு ஏதாவது ஸந்தேஹம் இருந்தால் அதை பயப்படாமல் கேட்கலாம்'' என்றுர்கள்.

அதற்கு ஸத்தியமூர்த்தி தான் பல ஸந்தேஹங்களுடன் வந்தது வாஸ்தவம்தான் என்றும், இந்த அரைமணி நேரம் ஸந்நிதானம் செய்த உபதேச அமிருத வர்ஷத்தால் அந்த ஸந்தேஹங்கள் எல்லாம் நிவர்த்தியாகிவிட்டன என்றும் अज्ञानतिमिरान्धस्य ज्ञानाञ्जनशलाकया। चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

அக்ஞானதிமிராந்தஸ்ய ஞானாஞ்ஜனஶலாகயா ।
சக்ஷுருன்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம: ॥

(அக்ஞானம் என்னும் திமிரநோயால் குருடனுக இருப்பவனுடைய கண்ணுக்கு ஞானம் என்னும் மைவர்த்தியினுல் பார்வையைக் கொடுத்த குருவுக்கு நமஸ்காரம்.) என்ற சுலோகத்தின் பொருள் இப்பொழுதுதான் அனுபவத்துக்கு வந்தது என்றும் சொல்லி ஸாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். ஸந்நிதானமோ அவரை விடவில்லை. ''நீங்கள் முதலில் ஏதோ ஸந்தேஹம் இருப்பதாகச் சொன்னீர்கள். இப்பொழுது அது நிவர்த்தியாயிற்று என்கிறீர்கள். என்ன என்ன ஸந்தேஹம் இருந்தது? எப்படி அது நிவர்த்தி ஆயிற்று என்று சொல்லுங்கள்'' என்றுர்கள். அவரது கருணையை என்னவென்று சொல்வது!

ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியோ மிக்க வணக்கத்துடன் தம் கீதா புஸ்தகத்தில் உள்ள சில குறிப்புகளை எடுத்து ஸந்நிதானத்தினிடம் காண்பித்தார். அதில் சுமார் பத்து ஸந்தேஹக் குறிப்புகள் காணப்பட்டன. இந்த ஸந்தேஹங்கள் ஏற்பட்ட காரணங்களையும் ஸந்நிதானத்தின் உபதேசத்தால் ஸந்தேஹ நிவர்த்தி ஏற்பட்டதையும்

எடுத்துக்காட்டிக் கண்ணீர்விட ஆரம்பித்துவிட்டார். அந்த ஸந்தேஹங்களில் சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறோம்.

கேள்வி:- அர்ஜுனன் கர்மயோகத்துக்குத்தான் அதிகாரி என்று தெரிந்தும் பகவான் அவனிடம் ஸாங்கிய யோகத்தையும் ஸந்யாஸதர்மத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டிய காரணம் என்ன?

பதில்:- பகவான் கீதையை அர்ஜுனனுக்காக மாத்திரம் உபதேசம் செய்யவில்லை. அர்ஜுனனை வியாஜமாக வைத்துக் கொண்டு எல்லா அதிகாரிகளுக்கும் உபதேசம் செய்வதால் அப்படிச் சொன்னார்.

கேள்வி: 'कर्मण्येवाधिकारस्ते,' 'स्वकर्मणा तमभ्यर्च्य सिद्धिं विन्दति मानवः' (*கர்மண்யேவாதிகாரஸ்தே, ஸ்வகர்மணா தமப்யர்ச்ய ஸித்திம் விந்ததி மாநவ:*) என்று கர்மாக்களால்தான் மோக்ஷபர்யந்தமுள்ள பலன்கள் கிடைக்கும் என்று சொல்லி, பின்னால் 'सर्वधर्मान् परित्यज्य मामेकं शरणं व्रज (*ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ*) என்று அந்தப் பகவானே எல்லாத் தர்மங்களையும் விடும்படி உபதேசிப்பது நியாயமாகுமா?

பதில்:- முன்சொன்ன அதிகாரிபேத காரணத்தைக் கொண்டே இதற்கும் ஸமாதானம் சொல்லலாம். அதாவது அங்கே 'सिद्धिं' என்ற பதத்திற்கு சித்தசுத்தி என்று அர்த்தம் கொண்டால் அது கர்மாதிகாரி விஷயம் என்று ஆகிவிடும். 'सर्वधर्मान् परित्यज्य' என்பது ஞானாதிகாரி விஷயம். இவ்வாறு வியவஸ்தை செய்து விடலாம்.

கேள்வி:- கீதையில் முதல் அத்தியாயத்தில் அர்ஜுன விஷாதத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறது. முடிவிலோ 'तत्र श्रीर्विजयो भूतिः' (*தத்ர ஸ்ரீர் விஜயோ பூதி:*) என்று காண்கிறது. ஆரம்ப அவஸான (முடிவு) வாக்கியங்கள் ஒத்துவரவில்லையே.

பதில்:- கீதையின் முதல் அத்யாயம் भूमिका (முகவுரை) தான். 2-வது அத்தியாயத்தில் अशोच्यानन्वशोचस्त्वं (*அஶோச்யானன்வஶோசஸ்த்வம்*) என்பது முதல்தான் கீதாசாஸ்திரம் ஆரம்பம். 18-வது அத்தியாயக் கடைசியில் अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि माशुचः (*அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாஶுச:*) இதுதான்

சாஸ்திரத்தின் முடிவு. ஆகவே अशोच्यान् (*அஶோச்யான்*) என்று ஆரம்பித்து माशुचः (*மாஶுச:*) என்று முடிவடைவதால் उपक्रमोपसंहारैकरूप्यम् (ஆரம்பத்திலும் முடிவிலும் ஒரே மாதிரி இருப்பது) என்ற தாத்பர்யலிங்கமானது ஸ்பஷ்டமாகவே இருக்கிறது. இது பாஷ்யத்தில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

கேள்வி:- அப்படியானால் ஆரம்பத்தில் अन्वशोचस्त्वं (*அன்வஶோசஸ்த்வம்*) என்றும் अहं त्वा (*அஹம் த்வா*) என்று முடிவிலும் அர்ஜுனனைப் பார்த்து ''நீ, உன்னை'' என்று காட்டியிருப்பதால் அர்ஜுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு மற்றவர்களுக்கு உபதேசம் என்று எவ்விதம் கூறமுடியும்? அர்ஜுனனைப் பார்த்து உன்னை விடுவிக்கிறேன் என்றால் அது மற்றவர்களுக்கு எப்படிப் பொருந்தும்?

பதில்:- அர்ஜுன: என்ற பதத்திற்கு वलक्षो धवलोऽर्जुनः (*வலக்ஷோ தவளோऽர்ஜுந:*) என்ற அமரகோசப்ரகாரம் வெளுப்பானவன், அதாவது பரிசுத்தன், சித்தசுத்தியுள்ளவன் என்று அர்த்தம் கொள்ளவேண்டும். இதிலிருந்து ஸாதன சதுஷ்டயஸம்பத்தி உள்ளவன் என்று அர்த்தம் கிடைக்கும். இவன்தான் முக்யாதிகாரியாவான். அந்த முக்யாதிகாரியையே 'அர்ஜுன' பதத்தால் ஸம்போதனம் செய்கிறார் என்று தாத்பர்யம்.

கேள்வி: मिथ्यैष व्यवसायस्ते प्रकृतिस्त्वां नियोक्ष्यति (*மித்யைஷ வ்யவஸாயஸ்தே ப்ரக்ருதிஸ்த்வாம் நியோக்ஷ்யதி*) என்றும் प्रकृतिं यान्ति भूतानि निग्रहः किं करिष्यति (*ப்ரக்ருதிம் யாந்தி பூதானி நிக்ரஹ: கிம் கரிஷ்யதி*) என்றும் மனிதன் இயற்கைக்கு வசமாகிறான், அவனால் இந்திரிய நிக்ரஹம் செய்யமுடியாது என்றும் சொல்லியிருப்பது வாஸ்தவமானால் நாம் சிரமப்பட்டுத்தான் என்ன பலன்?

பதில்: 'कर्मण्येवाधिकारस्ते' , 'कुरु कर्मैव तस्मात्त्वम्' (*கர்மண்யேவாதிகாரஸ்தே, குரு கர்மைவ தஸ்மாத்த்வம்*) என்றெல்லாம் பகவான் சொல்லியிருப்பதால் கர்மாக்களில் மனிதர்களுக்கு ஸாமர்த்தியமுண்டு என்பதில் ஸந்தேஹம் இல்லை. 'मा फलेषु कदाचन' (*மா பலேஷு கதாசந*) என்ற வாக்கியப்ரகாரம் கர்மபலன்களில் ஈசுவரனுக்குத்தான் அதிகாரம், மனிதர்களுக்கு

இல்லை என்று வியவஸ்தை செய்து கொள்ளவேண்டும். இயற்கை (*ப்ரக்ருதி*) என்றால் ஜன்மாந்தரீய புண்யபாபங்கள் என்றுதான் அர்த்தம். स्वभावजेन कौन्तेय (*ஸ்வபாவஜேந கௌந்தேய*) என்ற இடத்தில் உள்ள ஸ்வபாவபதத்திற்கும் அதுதான் அர்த்தம். ஆகவே ஜன்மாந்தரீய புண்யபாபவாஸனைகளை இப்பொழுதுள்ள புருஷயத்னத்தால் மாற்றிவிடலாம் என்பது தாத்பர்யம்.

இப்படிப்போலவே இன்னும் வேறுசில கேள்விகளையும், தான் குறித்திருந்ததை வாசித்துக்காட்டி அதற்கெல்லாம் பதில் கிடைத்துவிட்டது என்று தெரிவித்தார் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி. முன் கூறப்பட்டவைகளில் கேள்விகள் ஸத்யமூர்த்தியினுடையவை, பதில்களோ நமது ஸந்நிதானத்தின் உபதேச மொழிகளிலிருந்து கிடைத்தவை. ஆகவே கிருஷ்ணார்ஜுனஸம்வாதம்போலவே இந்த குருசிஷ்யஸம்வாதத்தால் நமக்கெல்லாம் ஏற்படக்கூடிய பலஸந்தேஹங்களுக்கு விடை கிடைத்துவிட்டது.

ஸந்த்யாகாலம் ஸமீபித்தவுடன் ஸத்யமூர்த்தி கோஷ்டியாருக்குப் பலமந்திராக்ஷதை கொடுத்து ''பரமஸந்தோஷம். நீங்கள் அவசரப்பட்டுக்கொண்டு இன்று போக வேண்டாம். 5 மணிக்குப் புறப்படும் வண்டியும் (பஸ்ஸும்) ஷிமோகாவுக்குக் கிளம்பி இருக்கும். இன்று சுக்கிரவாரம் ஆகையால் அம்பாளை தரிசனம் செய்து நாளை போகலாம்'' என்று உத்தரவிட்டார்கள். இதைக் கேட்டு ஸத்தியமூர்த்தியானவர் கண்ணீர் பெருக ''இன்றுதான் ஸுதினம். என் ஜன்மாவானது இன்று ஸபலமாய்விட்டது. என் மனத்திலுள்ள பல ஸந்தேஹங்களைப் பலரிடம் கேட்டும் நிவிருத்தியாகாதது இன்றுதான் நிவர்த்தியாயிற்று. மறுபடியும் ஸந்நிதானத்தை வந்து தரிசனம் செய்ய அநுக்ரஹிக்க வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். ஸந்நிதானமும் மந்தஹாஸம் செய்துகொண்டு ''மறுபடியும் பல ஸந்தேஹங்களை ஸம்பாதித்துக்கொண்டு வராதீர்கள்'' என்று சொல்லவே ஸத்தியமூர்த்தி 'स्थितोऽस्मि गतसंदेहः करिष्ये वचनं तव' (*ஸ்த்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ*) என்று சொல்லிக்கொண்டே புறப்பட்டார். ''நல்லது गतोऽस्मि स्थितसंदेहः (*கதோऽஸ்மி ஸ்த்திதஸந்தேஹ:*) என்று சொல்லாமல் இருந்தீர்களே, அதுவே ஸந்தோஷம்'' என்று ஸந்நிதானம் சொன்னவுடன் எல்லோரும் சேர்ந்து சிரித்துவிட்டோம். அவரது ரஸிகத்தன்மையை நினைத்து நினைத்து மகிழ்ந்தோம்.

ஸ்ரீ ஸத்யமூர்த்தி கோஷ்டியார் விடைபெற்றுக் கொண்டு ஸந்தியாவந்தனுதி காரியங்களைத் துங்காநதிக் கரையில் முடித்துக்கொண்டு அம்பாள் ஆலயம் சென்றுர்கள். ஆனுல் அவர்களில் ஒருவர் மாத்திரம் ஏதோ அவசர காரியத்துக்காக ஊர்போக எண்ணி அங்கே சிருங்ககிரியிலுள்ள பஸ் ஸ்டாண்டிற்குச் சென்று விசாரித்ததில் ஷிமோகா போகும் பஸ் போய்விட்டதென்றும் நரஸிம்ம ராஜபுரம் செல்லக்கூடிய பஸ் கிளம்பத்தயாராயிருப்பதாகவும் தெரிந்துகொண்டு உடனே அதில் ஏறிக்கொண்டார். நரசிம்மராஜபுரம் ஸமீபத்தில் அந்தப் பஸ் விபத்துக்கு உள்ளாகி ஒருபக்கம் சரிந்துவிட்டபடியால் பிரயாணிகள் சிலருக்குக் காயங்கள் ஏற்பட்டது. அன்று மழை பெய்ததில் பாதை பல இடங்களில் சீர்கெட்டுப் போயிருந்தது. ஷிமோகா சென்ற பஸ்ஸுக்கும் இதேகதிதான் ஏற்பட்டது. ஆனுல் அதில் சென்றவர்களுக்கு பலத்த காயம். இதெல்லாம் மறுநாள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுக்கு வந்த தந்தி சமாசாரத்தால் தெரியவந்தது.

அந்த விபத்துக்கு உள்ளான ஒரு நபரைத் தவிர மற்ற ஸத்தியமூர்த்தி கோஷ்டியார் எல்லோரும் ஸந்நிதான உத்தரவின்படி சாரதாம்பாளை தரிசனம் செய்யப் போனுர்கள் அல்லவா? அவர்களுக்கு அன்று திவ்விய தரிசனம் கிடைத்தது. யாரோ ஒரு ஸாவுக்காரருடைய பிரார்த்தனைக்காக அன்று ஸ்ரீசாரதாம்பாளின் உத்ஸவ மூர்த்தியானது வெள்ளி ரதத்தில் ஆலயத்தைச் சுற்றிப் பவனி வந்தது. அந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அவர்கள் எல்லோரும் பரவசப்பட்டுப் போனுர்கள். ''ஸந்நிதானத்தின் உத்தரவுப்படி ஷிமோகா செல்லாமல் இங்கே தங்கியதால் அல்லவா இந்தத் திவ்விய தரிசனம் கிடைத்தது. உத்தரவை மீறி ஷிமோகா சென்றிருந்தால் இந்தப் பாக்கியம் கிடைத்திருக்குமா?'' என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள். அன்று தீபாராதனை ஸமயம் மஹாஸந்நிதானமும் தரிசனத்திற்கு ஸ்ரீசாரதாம்பாள் ஸந்நிதிக்கு வந்திருந்தார்கள். தீபாராதனை பிரார்த்தனையெல்லாம் முடிந்து வெளியே வந்தபோது ஸத்தியமூர்த்தி கோஷ்டியார் மறுபடியும் வந்தனம் செய்தார்கள். ஸ்ரீ ஸந்நிதானம் தம் திவ்விய ஹஸ்தத்தாலேயே ஸ்ரீமான் ஸத்தியமூர்த்திக்குக் குங்குமப் பிரஸாதத்தையும் சம்பகபுஷ்பங்களையும் அள்ளிக் கொடுத்துவிட்டு ''நாளைக்குச் சௌக்கியமாகப் போய்வாருங்கள்''

என்று மந்தஹாஸத்துடன் மொழிந்து சென்றுவிட்டார்கள். ''இந்தப் பாக்கியமெல்லாம் ஷிமோகாவுக்குச் சென்றிருந்தால் கிடைத்திருக்குமா?'' என்று பேசிக்கொண்டார்கள். ஆனுல் அங்கே போகும் வழியில் பஸ் விபத்து ஏற்பட்டதை அவர்கள் எங்கே கண்டார்கள் ?

மறுநாள் காலேயில் ஸ்நான ஸந்தியாவந்தனுதிகளேச் செய்து முடித்துப் பஸ் ஸ்டாண்டிற்கு அவர்கள் புறப்பட்டுக் கொண்டிருந்தபோது ஸ்ரீகண்ட சாஸ்திரிகளின் ஸேவகன் அவர்கள் முன் தோன்றி ''சாஸ்திரிகள் தங்களே வரச்சொன்னுர்கள். பஸ்ஸுக்கு இன்னும் நேரம் இருக்கிறது. 5 நிமிஷம் பேசிவிட்டுப் போகலாம் என்ருர்கள்'' என்று சொல்லவே எல்லோருமாக சாஸ்திரிகளது ஆபீஸ் ரூமுக்குச் சென்ருர்கள். சாஸ்திரிகள் மடத்துக்கு வந்த இரண்டு தந்திகளேயும் காண்பித்து, ''நீங்கள் அவசரப்படவேண்டாம். ரோடு ரிப்பேராகிக் கொண்டிருக்கிறது. நேற்றுப் பெய்த மழையினுல் சில இடங்களில் பள்ளம் விழுந்துவிட்டது. மத்தியான்னத்துக்குள் ரிப்பேர் ஆகிவிடும். இங்கேயே ஆகாரம் செய்துகொண்டு மத்தியான்னம் போகலாம். மடத்துக் காரிலேயே போக ஏற்பாடு செய்கிறேன்'' என்று சாஸ்திரிகள் சொன்னவுடன் அவர்கள் ஒரு பக்கம் ஸந்தோஷமும் இன்ஞெரு பக்கம் கவலேயுமாக அவஸ்தைப்பட்டார்கள். ''நேற்றுப் போன பஸ்ஸுகள் இரண்டும் நிலச்சரிவினுல் விழுந்து விட்டது என்னும் செய்தி வாஸ்தவமாக இருந்து நம் கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர், விபத்துக்கு உள்ளாகியிருந்தால் என்ன செய்வது?'' என்ற கவலே அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. ''நாம் எல்லோரும் நம் திட்டப்படி நேற்று ஷிமோகா சென்றிருந்தால் நாமும் அந்த விபத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்போமே! '' என்று நினேத்தனா்.

சாஸ்திரிகளுக்கு வந்த தந்தியில், ''இரண்டு பாதைகளும் ரிப்பேராக இருப்பதால் மத்தியான்னம் வரையில் பஸ்ஸோ காரோ அங்கு வரவேண்டாம். மத்யான்னத்துக்குள் ரிப்பேர் ஆகிவிடும். பிறகு வரலாம்'' என்றுதான் இருந்தது. இன்ஞெரு தந்தியில், ''நேற்றுப் பஸ்கள் விபத்துக்கு உள்ளாகி ரிப்பேராகிக் கொண்டிருக்கின்றன'' என்றும் கண்டிருந்தது. அதைப் பார்த்தபிறகுதான் இவர்களது கவலே அதிகரித்தது. அதை வெளியில் சொல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். சாஸ்திரிகளோ அவர்களிடம் குசலப்ரச்னம்

செய்து ''நீங்கள் ஸந்நிதானத்தைத் தரிசனம் செய்தீர்களா? அவரது அனுக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டீர்களா?'' என்று கேட்கவே, அதற்கெல்லாம் பதிலளித்துவிட்டு ஸ்ரீ ஸத்யமூர்த்தி சொன்னதாவது:- ''நான் காங்கிரஸ் விஷயமாக அலைந்து கொண்டிருப்பவன் என்பது உங்களுக்கெல்லாம் தெரிந்திருக்கு மென்று நினைக்கிறேன். சென்னையிலிருந்து காங்கிரஸ் கமிட்டி கூட்டத்துக்காகப் பெங்களூர் வந்தேன். வந்த இடத்தில் சிருங்ககிரியில் ஏதோ ஒரு யக்ஞம் நடந்ததாகவும், அது ஸந்நிதானத்தின் உத்தரவின் பேரில் அனுஷ்டிக்கப்பட்டதாகவும், அது முடிவதற்குள் எங்கும் மழை பொழிந்துவிட்டதாகவும் மூன்று வருஷ காலமாக எதிர்பார்த்திருந்த மழை இப்பொழுதுதான் பெய்து மைசூர் ராஜ்யம் எங்கும் ஸுபிக்ஷமாக இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். சென்னை ராஜ்யத்தில் பெய்த மழைக்கும் சுபிக்ஷத்துக்கும்கூட அதுதான் காரணமாக இருக்கும் என்றும் தீர்மானித்துக்கொண்டேன். இதற்கெல்லாம் காரண பூதாளான சிருங்ககிரி மஹாஸந்நிதானத்தை அவசியம் தரிசனம் செய்யவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டேன். எனக்குப் பகவத் கீதையில் விசேஷமான பிரியம் உண்டு. மகாத்மா காந்தி, லோகமான்ய திலகர் முதலிய மகான்கள் கீதையை வெகு ஆதரவுடன் போற்றி வருவதைப் பார்த்துத்தான் இது ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் நமது பகவத்பாதாள் பாஷ்யம் செய்திருப்பதால்தான் அதற்கு இவ்வளவு பெருமை என்பது இதற்குமுன் தெரியாது. ஸந்நிதானம் நேற்று அருளிய உபதேச மொழிகளால்தான் அந்தப் பாஷ்யகாரருடையவும் கீதாசார்யருடையவும் கீதையினுடையவும் மகிமைகளை உணர்ந்துகொண்டேன். எனக்கு என் பிதாவின் நிர்ப்பந்தத்தால் பால்யத்தில் கொஞ்சம் ஸம்ஸ்கிருத வாசனை ஏற்பட்டது. அதை வைத்துக்கொண்டும் திலகரின் கீதாரஹஸ்யத்தை வைத்துக்கொண்டும் அடிக்கடி விசாரம் செய்வது வழக்கம். அதில் ஏற்பட்ட பல ஸந்தேஹங்களைப் பல வித்வான்களிடமும் கேட்டுத் தெரிந்து கொண்டு வந்தேன். சில ஸந்தேஹங்கள் நிவிருத்தியடைந்த போதிலும் வேறு சிலவற்றுக்குத் தகுந்த பதில் கிடைக்கவில்லை. அதையும் நமது ஸந்நிதானத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாமே என்ற எண்ணம் ஏற்பட்டதால்தான் சிருங்ககிரிக்கு வந்தேன். பெரும் மழை, உபதேச மழை இரண்டையும்

கண்டு அனுபவித்தேன். கிருதார்த்தனுனேன்'' என்ருர் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி.

சாஸ்திரிகள்:– நீங்கள் தனியாக முதலில் வந்ததற்கும் பிறகு இவர்களெல்லாம் வந்ததற்கும் காரணம் என்ன?

ஸத்யமூர்த்தி:–தனியாக வந்தால் ஏகாந்த தரிசனம் கிடைப்பதுடன் கீதையிலுள்ள ஸந்தேஹங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சௌகர்யமாக இருக்கும் என்ற எண்ணம்தான்.

சாஸ்திரிகள்:– மற்றவர்களும் ஸந்நிதான தரிசனத்துக்காகத் தானே வந்தார்கள்?

ஸத்யமூர்த்தி:– இப்பொழுது அப்படித்தான் அவர்கள் சொல்லிக்கொள்வார்கள். ஆனுல் வாஸ்தவத்தில் அவர்கள் என்னைத் தரிசனம் செய்வதற்காகத்தான் வந்திருந்தார்கள். (சிரிப்பு)

சாஸ்திரி:– உங்களைப் பெங்களூரிலேயே தரிசனம் செய்தாய்விட்டதே. மறுபடியும் இங்கே என்ன காரியம்?

ஸத்யமூர்த்தி:– ஒரு பெரிய காரியமாகத்தான் இங்கே வந்தார்கள். ஆனுல் அது என்னுல் கைகூடவில்லை. நமது ஸந்நிதானத்தின் அனுக்ரஹத்தால் அது கைகூடி விட்டதாகவே நினைக்கிறேம்.

சாஸ்திரி:– நீங்கள் ஏதோ புதிர் போடுகிறீர்களே. அதை நான் தெரிந்துகொள்ளக்கூடாதா? அதற்காகத்தான் என்னிடம் சொல்லாமல் காலையில் கிளம்பி விட்டீர்களா?

ஸத்யமூர்த்தி:– நாங்கள் ஸந்நிதானத்தைத் தரிசிப்பதற்காகத் தான் வந்தோம். அது முடிந்துவிட்டது. உடனே ஊருக்குப் புறப்பட்டோம். அவ்வளவுதான்.

சாஸ்திரி:– உங்களைப்போன்ற பெரிய மனிதர்கள் இங்கு வந்தால் ஸந்நிதானத்தைத் தரிசித்து விட்டு என்னிடமும் வந்து கொஞ்சமாவது ஸம்பாஷணம் செய்து போவது வழக்கம். நீங்களோ இங்கு வராமல் பஸ் ஸ்டாண்டுக்கே கிளம்பிவிட்டீர்களே, இவ்விதம் செய்யலாமா?

ஸத்யமூர்த்தி:– உங்களிடம் பழக்கம் இல்லாததால் வரவில்லை. தவிரவும் நீங்கள் இவ்வளவு ஸௌஜன்யமாகப் பேசுவீர்கள் என்பதும் தெரியாது. ‘ சிருங்ககிரி ஸம்ஸ்தான திவான் ’ என்றுதான் தங்களைச் சொல்லுகிறார்கள். திவானைப் பார்ப்பதென்றால் ஸாதாரண கார்யமா?

சாஸ்திரி:– அப்படியெல்லாம் நினைக்காதீர்கள். நான் இந்த ஸம்ஸ்தான ஸேவகன், அவ்வளவுதான். சம்பளம் வாங்கி ஜீவிப்பவர்கள் யாராக இருந்தாலும் ஸேவகர்கள்தான் என்று ஸந்நிதானம் அடிக்கடி சொல்வதுண்டு.

अल्पवेतनभृत्यस्तु अमल्दारिति कथ्यते ।
महावेतनभृत्यस्तु महामात्यो दिवान् भवेत् ॥

அல்பவேதநப்ருத்யஸ்து அமல்தாரிதி கத்யதே |
மஹாவேதநப்ருத்யஸ்து மஹாமாத்யோ திவான் பவேத் ||

(குறைந்த சம்பளம் வாங்கும் வேலைக்காரன் அமல்தார் என்று சொல்லப்படுகிறான். நிறைய சம்பளம் வாங்கும் வேலைக்காரன் பெரிய மந்திரி, திவான் என்று சொல்லப்படுகிறான். சம்பளத்தில் உயர்வு தாழ்வு இருந்தாலும் எல்லோரும் வேலைக்காரர்களே.) என்று அடிக்கடி ஸந்நிதானம் எச்சரித்துக்கொண்டு வருவதால் நாங்கள் அவ்விதம் கர்வம் கொள்ள அவகாசமே இல்லை. ஆகையால் என்னைத் திவான் என்று நீங்கள் சொன்னால் உயர்ந்த சம்பளம் வாங்கும் ஒரு மஹா ஸேவகன் என்றுதான் நாங்கள் அர்த்தம் கொள்வோம்.

ஸத்யமூர்த்தி:– உங்களது பரிபாஷையே அலாதியாகத்தான் இருக்கிறது. ஆனாலும் அதையும் முழுவதுமாக நம்ப முடியவில்லையே. நீங்கள் உங்களை ஸேவகன் என்று நினைக்கிறீர்கள். ஆனால் ஸேவகனோ தன்னைத் திவான் என்று நினைத்து அதிகாரம் செய்கிறான். என்னைத் தடுத்து நிறுத்தி விட்டான்.

சாஸ்திரி:– யார் அவ்விதம் உங்களைத் தடை செய்தது என்று தெரிவித்தால் அவனை விசாரிக்கிறேன்.

ஸத்யமூர்த்தி:– நீங்கள் அவனை விசாரிக்கவும் வேண்டாம். தண்டிக்கவும் வேண்டாம். ஏனென்றால் நான் பஞ்ச கச்சமும் விபூதியுமாக வைதிக வேஷத்துடன் சென்றதால்தான் என்னை

உள்ளேவிட ஜவான் மறுத்துவிட்டான். எப்படியோ சிரமப்பட்டு மடத்து சாஸ்திரிகள் ஒருவர் என்னை அழைத்துச் சென்ருர். ஆனல் உள்ளே சென்று அங்கே பூஜை செய்பவரிடம் அந்த சாஸ்திரிகள் என் பெயரைச் சொல்லி ஸந்நிதானத்தில் தெரிவிக்கச்சொல்லவே உடனே வரும்படி எனக்கு உத்தரவு கிடைத்துவிட்டது. ஸந்நிதானம் காதில் என் பெயர் விழுந்தவுடனேயே எனக்கு அதிருஷ்டகாலம் பிறந்து விட்டது.

சாஸ்திரி:– மற்றவர்களும் அப்படித்தான் சிரமப்பட்டார்களா?

ஸத்யமூர்த்தி:– அதுதான் இல்லே. அவர்கள் லௌகிக வேஷத்துடன் சென்றபடியால் ஜவான் அவர்களே காம்பௌண்டுக்குள் உடனே விட்டுவிட்டான். அவர்களும் தயக்கம் இல்லாமல் நான் இருந்த இடத்திற்கே வந்து விட்டார்கள். வைதிக வேஷம் என்னை வஞ்சித்து விட்டது. (சிரிப்பு)

சாஸ்திரி:– ஆகா அப்படியா! எனக்கு நல்ல டோஸ் கொடுத்துவிட்டீர்களே! இருக்கட்டும்; மன்னித்துவிடுங்கள். இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க ஏற்பாடு செய்கிறேன். ஆனுலும் தாங்கள் இங்கு வருவதாக ஒரு தந்தியோ லெட்டரோ அனுப்பியிருந்தால் தங்களே ராஜமரியாதையுடன் அழைத்துச் சென்று தரிசனம் செய்ய ஏற்பாடு செய்திருப்பேனே !

ஸத்யமூர்த்தி:– நான் ராஜ கார்யமாக வருவதாக இருந்தால் அவ்விதமே தந்திகொடுத்து வந்திருப்பேன். ஆத்மகார்யமாக வந்தபடியால் இவ்விதம் அடக்கமாகவே வந்திருக்கிறேன். 'विनीतवेषप्रवेश्यानि तपोवनानि नाम' (*விநீதவேஷ ப்ரவேச்யானி தபோவநாநி நாம*) என்றல்லவா காளிதாசர் சாகுந்தளத்தில் வர்ணிக்கிருர்.

சாஸ்திரி:– நீங்கள் இவ்வளவு ரஸிகராயிருக்கிறீர்களே! நமது பாரததேசத்திலேயே உயர்ந்த பேச்சாளராக உங்களே எல்லோரும் சொல்வது நியாயம்தான். அத்துடன் ஸம்ஸ்கிருதத்திலும் பாண்டித்யம் உள்ளவராக இருக்கிறீர்களே! உங்களேவிட்டுப் பிரிய எனக்கு மனம் வரவில்லே, இன்னும் கொஞ்சநாள் தங்கிவிட்டு ஊருக்குப் போகலாமே!

ஸத்யமூர்த்தி:— நான் நாளைய தினம் பெங்களூர் போய்ச் சேர வேண்டும். அங்கே காங்கிரஸ் கமிட்டி கூடப்போகிறது. அத்துடன் இன்னொரு தொல்லையையும் இவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதாவது எங்களது நண்பர் ஒருவர் ஸத்தியாக்கிரஹ இயக்கத்தில் சேர்ந்து எங்கோ மறியல் செய்ததில் அவர் பலாத்காரத்தில் இறங்கியதாக அவர்மேல் பொய்க்குற்றம் சாட்டி, அவரைப் போலீஸ்காரர்கள் அரஸ்ட் செய்துகொண்டு போயிருக்கிறார்கள். அங்குள்ள மாஜிஸ்ட்ரேட் எனக்குத் தெரிந்தவர். அவரிடம் உண்மையைச் சொல்லி, வாதாடி அந்த நபரை விடுவிக்க வேண்டும். காலதாமதம் செய்தால் கெடுதல் உண்டாகும். அதற்காகத்தான் இவர்கள் என்னை அழைத்துப்போக வந்தார்கள். வந்த இடத்தில் அவர்களுக்கும் ஸந்நிதானத்தை தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

சாஸ்திரி:— நமது ஸந்நிதானத்தின் அனுக்ரஹத்தால் வந்தகாரியம் கைகூடும்போல் இருக்கிறது என்று சொன்னீர்களே, அது இதுதானா? ஸந்நிதானம் என்ன சொன்னார்கள் ?

ஸத்யமூர்த்தி:— கீதாவிஷயமாக என் ஸந்தேஹங்களை நான் கேட்டுக்கொண்டிருந்த பொழுது, இவர்கள் என்னை ஜாடையினால் வெளியே வரும்படி அவசரப்படுத்தினார்கள். அந்த ஸ்வாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்த நான் அசையவில்லை. உடனே அவர்கள் எழுந்துபோக முயன்றார்கள். ஸந்நிதானம் அவர்களைப் போகவிடாமல் தடுத்து, ''நீங்கள் கவலைப்படவேண்டாம். அவர் திரும்பி வந்துவிடுவார்'' என்று தைரியம் சொன்னவுடன் ஆச்சரியப்பட்டு, மறுபடியும் உட்கார்ந்தார்கள்.

சாஸ்திரி:— ஸந்நிதானம் தாமாகவே அதைச் சொன்னார்களா, அல்லது நீங்கள் பேசிக்கொண்டதைக் கேட்டு அவ்விதம் சொன்னார்களா? நீங்கள் என்ன பேசிக் கொண்டீர்கள்?

ஸத்யமூர்த்தி:— இவர்கள் எனக்கு மட்டும் தெரியும்படி இங்கிலீஷில், அந்த ஸத்யாக்ரஹி சிறைப்பட்டதையும் அவரை உடனே விடுவிக்க வேண்டுமென்றும் தாமஸம் செய்தால் அபாயம் உண்டாகுமென்றும் அது என்னால்தான் முடியுமென்றும் அதற்காகவே தாங்கள் வந்திருப்பதாகவும் தெரிவித்தார்கள். அதற்குத்தான் ஸந்நிதானம் ''அவர் வந்து விடுவார்'' என்று

சொன்ஞர்கள். அவர்கள் இங்கிலீஷில் பேசியது ஸந்நிதானத்திற்கு எப்படித் தெரியும்? அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது.

சாஸ்திரி:– அப்படியா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இங்கிலீஷ் ஞானமும் அவருக்கு உண்டு. ஆனுல் ஆங்கில வார்த்தை ஒன்றைக்கூட அவரது பேச்சில் நாம் காண முடியாது.

ஸத்யமூர்த்தி:– ஆகா! நாங்கள்தான் மோசம் போய்விட்டோம். ஸர்வக்ஞ மூர்த்தியான ஆசார்யாளை இங்கிலீஷ் தெரியாதவர் என்று நினைத்து ஏமாந்துவிட்டோமே. ஆஹா! ஸந்நிதானம் நேற்று எச்சரிக்கை செய்த விஷயம் இப்பொழுதுதான் புரிகிறது.

சாஸ்திரி:– அதென்ன எச்சரிக்கை, நான் தெரிந்து கொள்ளலாமா?

ஸத்யமூர்த்தி:– வேருென்றுமில்லை. இவர்கள் அவசரமாகப் புறப்பட்டவுடன், கையமர்த்தி அவர்களை உட்காரச் செய்து சுமார் அரைமணிநேரம் கீதையை உபந்யாஸம் செய்து காலஹரணம் செய்ததால் ஷிமோகா பஸ் போய்விட்டது. அல்லது பஸ் போகும் வரை உபந்யாஸம் செய்தார்கள். அதை ரஸித்துக்கொண்டு அவர்களும் இருந்துவிட்டார்கள். பிறகு சிரித்துக்கொண்டு ''பஸ்தான் போய்விட்டதே; இனிமேல் இன்று போகவேண்டாம். நாளை காலையில் போகலாம்'' என்று சொன்னதன் கருத்து இப்பொழுதுதான் வெளியாகிறது. ஆஹா! அவர் ஸர்வக்ஞ மூர்த்தி தான் என்பதில் என்ன ஸந்தேஹம்? இல்லாவிட்டால் ஷிமோகா பஸ்ஸில் சென்று அபாயமடைந்திருப்போமே.

இதற்கிடையில் தபால்காரன் வந்து ஒரு தந்தியை கொடுத்தான். அது ஸத்தியமூர்த்தி பெயருக்கே வந்து இருந்தது. அதை உடைத்துப் பார்த்ததில் முன்தினம் ஷிமோகா பஸ் கிடைக்காமல் நரஸிம்மராஜபுரம் பஸ்ஸில் போனவர் பஸ் விழுந்ததால் அடிபட்டு ஆஸ்பத்திரியில் கிடப்பதாகவும் உடனே வந்து பார்க்கவேண்டுமென்று அதில் கண்டிருந்தது. இதைப் பார்த்தவுடன் எல்லோரும் அலறிப் புடைத்துக்கொண்டு, ''இப்பொழுதே அங்கு போகவேண்டும்'' என்று துடித்தார்கள். உடனே ஸத்யமூர்த்தி அவர்களைச் சமாதானப்படுத்தி ''ஸந்நிதானத்தின் உத்தரவை அனுஸரித்து நாம் இங்கேயே தங்கியதால் பிழைத்தோம்.

உத்தரவை மீறிச் சென்றதால் அவர் விபத்துக்குள்ளானுர் என்பதை இந்த நிகழ்ச்சியிலிருந்தாவது தெரிந்துகொள்ளுங்கள். அவர் ஸர்வக்ஞ மூர்த்தி என்று இனிமேலாவது நீங்கள் அங்கீகரிப்பீர்களா?'' என்று மற்றவர்களிடம் கேட்கவே எல்லோரும் வெட்கித் தலைகுனிந்து, ''ஸர்வக்ஞ மூர்த்திக்கு ஜே'' என்று கோஷித்து விட்டார்கள்.

சாஸ்திரிகள் பேஷ்காரை வரவழைத்துக் கெஸ்ட் ஹௌஸில் அந்த ஸத்தியமூர்த்தி கோஷ்டியாருக்குத் தங்க இடம் கொடுக்கும்படியும் அவர்களை அங்கு அழைத்துப் போய் உபசரிக்கும்படியும் உத்தரவிட்டார். அவர்களோ பேஷ்காருடன் சாரதாம்பாள் ஆலயத்திற்குச் சென்று மறுபடியும் தரிசனம் செய்து, பிரஸாதம் பெற்றுக் கொண்டு கெஸ்ட்ஹௌஸுக்குச் சென்ருர்கள். அங்கே அம்பாளுக்கு நிவேதனம் செய்த கேஸரிபாத்துடன் பஞ்சபக்ஷ்யங்களுடனும் நடந்த விருந்துகளையும் உபசாரங்களையும் அனுபவித்துத் திணறிப் போய்விட்டார்கள். ''இந்த கேஸரிபாத் என்ற பக்ஷ்யமானது சிருங்ககிரிக்கே அஸாதாரணமான ஒரு பதார்த்தமாயிருக்கிறதே! வேறிடத்தில் இதைப் பார்த்ததில்லையே! '' என்று எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் பேசிக்கொண்டே பரமானந்தத்துடன் ருசித்துச் சாப்பிட்டார்கள். அம்பாளுக்கு நிவேதனம் செய்ததால்தான் இந்த ருசி ஏற்பட்டிருக்கிறது. அந்த அம்பாளுடையவும் குருநாதருடையவும் போட்டோக்கள் வேண்டுமென்று தெரிவிக்கவே பேஷ்கார் போட்டோக்காரரைத் தருவித்து எல்லாப் படங்களையும் கொடுக்க ஏற்பாடு செய்தார்.

போஜனமானவுடன் ஸத்தியமூர்த்தி கோஷ்டியார் மாடியில் விச்ராந்தியாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவ்விதம் பேசி வருகையில் அன்று நடந்த உபசாரத்தையும் கேஸரிபாத் முதலிய பக்ஷ்யங்களின் ருசியையும் ஒருவர் விமர்சனம் செய்து கொண்டிருந்தார். ''நேற்றெல்லாம் ஸந்நிதானத்தின் அமிருதமொழிகளைக் கேட்டுக் கேட்டுத் தெவிட்டாமல் இன்னும் கொஞ்சம் கேட்கமாட்டோமா என்று ஏக்கத்துடனேயே பிரிந்து வந்தோம். ஆனுல் இன்று கேஸரிபாத் ஸாப்பிட்டுத் தெவிட்டுகிறதல்லவா? இதுதான் ஸாத்துவிக சுகத்திற்கும் தாமஸ சுகத்திற்கும் உள்ள வித்யாஸம்'' என்று ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி விளக்கிக்கொண்டிருந்தார்.

'तत्सुखं सात्विकं प्रोक्तं आत्मबुद्धिप्रसादजम्'' (गी. १८-३७)

தத் ஸுகம் ஸாத்விகம் ப்ரோக்தம்
ஆத்மபுத்தி ப்ரஸாதஜம் (கீ, 18 – 37)

என்ற கீதாவாக்கிய பிரமாணத்தையும் எடுத்துக் காட்டினுர். இதைக்கேட்ட மற்ருெருவர், ''வாஸ்தவம்தான், ஸந்நிதானத்தின் உபதேச அமிருத மழையால் நேற்று நாம் பரமானந்தம் அடைந்தோம். அதற்கு ஸந்நிதானம்தான் காரணமானுர்கள். இன்று கிடைத்த பஞ்சபக்ஷ்ய பரமான்ன சுகத்துக்கு சாஸ்திரிகள்தான் காரணம். சாஸ்திரிகளின் உத்தரவால்தான் நமக்கு இந்த உபசாரமெல்லாம் கிடைத்தது'' என்று சொல்லவே யாவரும் சிரித்தனர்.

இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டுக்கொண்டே சாஸ்திரிகள் திடீரென்று அங்கே வந்து நிற்கவே, எல்லோரும் பிரமித்துவிட்டார்கள்.

ஸத்யமூர்த்தி:– உங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கையிலேயே வந்துவிட்டீர்கள். உங்களுக்கு நூறு ஆயுஸு. உங்களைப் போன்றவர் சிரஞ்ஜீவியாக இருக்கவேண்டும்.

சாஸ்திரி:– அதெல்லாம் இருக்கட்டும். ஸந்நிதானம் 'ஞானதாதா' என்றும், நான் வெறும் 'போஜனதாதா' என்றும் கேலி செய்து கொண்டிருந்தீர்கள், அவ்வளவுதானே!

ஸத்யமூர்த்தி:– கேலி செய்யவில்லை. உங்களது பெருமையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். நாங்கள் சாரதாம்பிகையின் பிரஸாதத்தைப் பற்றித்தான் பேசி வந்தோம். அதன் மாதுர்யத்தை அநுபவித்தவர்கள் அதை வாயினுல் கொஞ்சமாவது வர்ணிக்காமல் இருக்க முடியாதல்லவா! இந்த அதிமதுரமான அம்பாள் பிரஸாதம் கிடைத்ததற்கு சாஸ்திரிகளல்லவா காரணம், அவர் ஸௌக்யமாயிருக்கட்டும் என்று உங்களை வாழ்த்திக் கொண்டிருந்தோம். நீங்களும் வந்துவிட்டீர்கள். அவ்வளவுதான்.

சாஸ்திரி: अल्पप्रभोस्तु सेवायां भुक्तमात्रं प्रयोजनम् ।
महापुरुषसेवा तु जन्मसाफल्यकारिणी ॥

அல்ப ப்ரபோஸ்து ஸேவாயாம் புக்த மாத்ரம் ப்ரயோஜனம் ।
மஹாபுருஷ ஸேவா து ஜந்ம ஸாபல்ய காரிணீ ॥

(சின்ன பிரபுவிற்கு ஊழியம் செய்தால் பிரதி பலன் உணவுதான். மஹாத்மாக்களை ஸேவித்தால் பிறவியே பயன் அடையும்.) என்று நமது ஸந்நிதானம் அந்தர்முகாவஸ்தையில் அடிக்கடி சொல்வார்கள். அதன் அர்த்தம் இன்று நன்ருக விளங்கிவிட்டது. ஸரி, நான் வெறும் போஜனதாதாவாகவே இருந்துவிடுகிறேன்.

ஸத்யமூர்த்தி:- போஜனமும் சாரதா பிரஸாதமும் இல்லாமல் யாரும் ஜன்ம ஸாபல்யம் அடையமுடியாது. ஆதலால் நீங்களும் அதற்குக் காரணம்தான்.

இவ்விதம் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி அவர்கள், தங்களுக்கு ஸ்ரீ சாரதா பிரஸாதமும், மற்றும் விசேஷ வஸதிகளும் கிடைக்க ஏற்பாடு செய்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகளைப் புகழ்ந்து கூறினுர்.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- நீங்கள் என்ன என்னவோ சொல்லி என்னை மலை உச்சியில் ஏற்றிவிடுவீர்கள் போலிருக்கிறதே. பாரதத்திலேயே பிரஸித்தவாக்மி அல்லவா தாங்கள்! உங்களிடம் பேசி ஜெயிக்க முடியுமா?

ஸத்யமூர்த்தி:- அது எல்லாம் மற்ற இடத்தில்தான். இங்கு நீங்கள்தான் எங்களை ஜெயித்து விட்டீர்கள். உங்கள் ஸாமர்த்யத்தால் எல்லா விஷயங்களையும் எங்களிடமிருந்து கிரஹித்துக் கொண்டு விட்டீர்களே!

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:- உண்மைதான். இந்தியாவிலேயே பெரிய தலைவராயிருந்தும் ஸத்குரு ஸந்நிதானத்தில் ஒன்றும் தெரியாதவர்போல் அடக்கமாக இருந்ததை உங்களிடமிருந்து தெரிந்துகொண்டேன். ஸ்ரீ ஸந்நிதானமே நேற்று தங்கள் ரஸிகத்தன்மையை சிலாகித்துச் சொன்னுர்கள்.

ஸத்யமூர்த்தி:- இதெல்லாம் ரஸிகத்தன்மையா ? நேற்று ஸந்நிதானம் கீதையின் தாத்பர்யத்தை விளக்கும்பொழுது எத்தனை திருஷ்டாந்தங்கள், எத்தனை அநுபவங்கள், எத்தனை ரஸமான பேச்சுக்கள் வெளிவந்தன? எங்களைச் சிரிக்க வைத்துக்கொண்டே கீதையின் தத்துவங்களை வெகு சுலபமாக எங்கள் மனத்தில் ஏற்றிவிட்டார்களே!

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:– அப்படி என்ன ரஸமாகப் பேசினார்கள்?

ஸத்யமூர்த்தி:– மற்றதெல்லாம் இருக்கட்டும். நாங்கள் விடைபெற்றுக் கிளம்புகையில் 'स्थितोऽस्मि गतसंदेहः करिष्ये वचनं तव' (ஸ்த்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ) என்ற கீதாவாக்கியத்தை நான் சொன்னவுடன், ''ரொம்ப ஸந்தோஷம். 'स्थितसंदेहः' (ஸ்த்திதஸந்தேஹ:) என்று சொல்லாமல் இருந்தீர்களே'' என்று மந்தஹாஸம் செய்து கொண்டு எங்களையும் சிரிக்கவைத்த காட்சி என்றென்றும் மறக்கமுடியாத ஸம்பவமாகும்.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:– நீங்கள் இப்பொழுது முக்கிய காரியமாகச் செல்லவேண்டியிருப்பதால் நான் தடை செய்யவில்லை. ஆனால் கூடிய சீக்கிரம் இங்கே வந்து ஒரு வாரமாவது தங்கி ஸ்ரீ ஸந்நிதானத்தின் அமிருத மொழிகளைக் கேட்டுக் கொண்டு இருக்கவேணுமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஸத்யமூர்த்தி:– கரும்பு தின்னக் கூலியா கொடுக்க வேண்டும்? அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கவேண்டுமே ?

இவ்விதம் பேசிக்கொண்டிருக்கையிலேயே மடத்துக் கார் அங்கு வந்து நின்றது.

ஸ்ரீகண்ட சாஸ்திரிகள்:– கார் வந்து விட்டது. நீங்கள் ஷிமோகா போகிறீர்களா, நரஸிம்மராஜபுரமா?

ஸத்யமூர்த்தி:– நரஸிம்மராஜபுரத்துக்கே போகிறோம். அங்கே கார் விபத்துக்காளான நண்பரைப் பார்த்து அவருக்கு வேண்டிய உதவியையும் செய்துவிட்டுப் போகிறோம்.

ஸ்ரீ ஸத்யமூர்த்தி கோஷ்டியார் நரஸிம்மராஜபுரம் சென்று நண்பரை ஆஸ்பத்திரியில் பார்த்தார்கள். சுமாரான காயம்தான் என்றும், ஒரு வாரத்தில் குணமாகி விடும் என்றும் டாக்டர் சொன்னார். ஷிமோகா பஸ்ஸில் சென்றவர்களுக்கு பலத்த காயம் என்பதை அவரிடமிருந்து தெரிந்துகொண்டார்கள். ''ஸந்நிதானத்தின் வாக்கை மீறி வந்ததால்தான் எனக்கு இவ்வித கஷ்டம் நேர்ந்தது. நீங்களாவது இதில் தப்பித்துக் கொண்டீர்களே!'' என்று அடிபட்டவர் சொல்லவே, ஸத்யமூர்த்தி அவரை ஸமாதானப்படுத்தி, ''அப்படியெல்லாம்

வருந்தாதீர்கள். ஸந்நிதானத்தின் கடாக்ஷம் பட்டதால்தான் அதிக அடியில்லாமல் தப்பினீர்கள். அந்த மஹானையே ஸ்மரித்துக் கொண்டிருங்கள். விரைவில் குணமாகிவிடும்'' என்ருர்.

பிறகு எல்லோரும் ரயில்வே ஸ்டேஷன் வந்து ரயிலில் ஏறி சாயங்காலம் பெங்களூர் போய்ச் சேர்ந்தார்கள். இவர்கள் ரயிலிலிருந்து இறங்கியதும் ''ஸத்யமூர்த்திக்கு ஜே!'' என்று கோஷம் இட்டுக்கொண்டு சில வாலிபர்கள் இவர்களை வரவேற்ருர்கள். இரண்டு நாட்களுக்கு முன் மறியல் செய்து ஜெயிலுக்குச் சென்ற வாலிபரும் அந்தக் கூட்டத்தில் இருந்தார். அவரைப் பார்த்தவுடனே எல்லோரும் ஆச்சரியம் அடைந்தனர். ''நம் ஸந்நிதானம் சொன்னபடியே அந்த வாலிபன் திரும்பி வந்துவிட்டான்'' என்று எண்ணி பரவசம் அடைந்தார்கள். அவன் எப்படி விடுதலை அடைந்தான் என்பதைப் பற்றி விசாரிக்கவே, பின் வரும் விவரம் தெரியவந்தது.

மறியல் செய்துகொண்டிருந்த அந்த வாலிபரைப் போலீஸ்காரர் அழைத்துக்கொண்டுபோய் லாக்கப்பில் வைத்து அடித்துத் துன்புறுத்திஞர்கள். இரவு அங்கேயே வைத்திருந்து உண்மையைக் கூறும்படி நிர்ப்பந்தித்தார்கள். ''மறியல் செய்யத் தூண்டியது யார்?'' என்று கேட்டார்கள். ''ஒருவரும் தூண்டவில்லை. தேசபக்திதான் அவ்விதம் தூண்டியது'' என்று ஒரே போடாகப் போட்டு வைத்தார் அந்த வாலிபர். இது விஷயம் எப்படியோ தெரிந்து ஒரு வக்கீல் தாமாகவே போலீஸ்காரரிடம் வந்து ''அவனை அடிக்காதீர்கள். அடித்தால் உங்கள்மேல் கேஸ் திரும்பி விடும்'' என்று சொல்லிவிட்டுப் போஞர். அதற்குமேல் அடிக்காமல் நயமாகக் கேட்டார்கள். பழையபடியே பதில் வந்தது. அன்று ஸாயங்காலம் 4 மணிக்கே அந்த வாலிபரை விடுவிக்கும்படி மாஜிஸ்ட்ரேட்டிடமிருந்து உத்தரவு வந்ததால் அவர் விடுதலை செய்யப்பட்டார். தன் விடுதலைக்கு யார் காரணம் என்று அந்த வாலிபருக்கு ஒன்றும் தெரியவில்லை. வெளியே வந்து விசாரித்ததில் சிருங்ககிரி மடத்து வக்கீலிடம் மற்றப் பையன்கள் இது விஷயம் தெரிவித்ததாகவும் அவர் மாஜிஸ்ட்ரேட்டிடம் இது விஷயமாக வாதாடி அவன் குற்றமில்லாதவன் என்றும் சிருங்ககிரி மடத்து முக்கிய சிஷ்யரான ஒரு தனவந்தரின் பையன் என்றும்

அவனை விடுவிக்கவேண்டுமென்றும் சொல்லியும் மாஜிஸ்ட்ரேட் கேட்கவில்லை. பிறகு ஏதோ பளிச்சென்று ஒரு யுக்தி தோன்றவே, அதையும் உபயோகித்துப் பார்த்தார். அதாவது அந்த மாஜிஸ்ட்ரேட் ஸத்யமூர்த்திக்கு வேண்டியவர், அவரிடம் மிக்க மதிப்பு வைத்திருந்தவர் என்பது அவருக்குத் தெரியும். ஆகவே ''ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியை வரவேற்பதற்காக ஏற்படுத்தியுள்ள தொண்டர்களில் இந்த வாலிபன் முக்கியமானவன். அவர் சிருங்ககிரியில் இருந்து நாளைக்கு இங்கே வருகிறார். அவர் இந்த ஸமாசாரத்தைக் கேட்டால் மிகவும் வருந்துவார்'' என்று சொல்லவே மாஜிஸ்ட்ரேட்டின் கல் மனமும் கொஞ்சம் கரைய ஆரம்பித்து விட்டது. அது அவரிடமுள்ள அன்பினாலோ பயத்தினாலோ பக்தியினாலோ தெரியாது. எப்படியோ விடுதலை செய்யும்படி உத்தரவு கிடைத்துவிட்டது. பெங்களூர் ஸ்டேஷனில் வந்திறங்கிய ஸ்ரீஸத்தியமூர்த்தியை வரவேற்க வந்த வாலிபருடன் விடுதலையடைந்த அந்த வாலிபனும் எப்படியோ கலந்து கொண்டு விட்டான்.

இந்த வரலாற்றைக் கேட்டவுடன் ஸத்தியமூர்த்தி கோஷ்டியார் பிரமித்துப்போய்விட்டார்கள். ஸ்ரீஸந்நிதானம் அங்கிருந்தபடியே செய்த அனுக்ரஹம்தான் அதற்குக் காரணம் என்று ஸ்ரீஸத்தியமூர்த்தி உணர்ந்துகொண்டார். மற்றவர்களோ ஸத்தியமூர்த்திதான் காரணம் என்று எண்ணினார்கள். எப்படியோ விடுதலை கிடைத்துவிட்டது. ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி மாத்திரம் அன்று முதல் அனுதினமும் நமது குருநாதரை ஸ்மரித்து அவரது உபதேசங்களையும் நினைவில் வைத்துக்கொண்டு அவரது படத்துக்குப் பூஜையும் செய்து வந்தார். சிருங்ககிரியில் நடந்த காயத்ரீ ஜபயக்ஞத்தால் மழை பொழிந்த சமாசாரந்தான் இவ்விதம் ஸ்ரீ ஸத்தியமூர்த்தியை சிருங்ககிரிக்கு இழுத்து வைத்து ஸந்நிதானத்தின் அருளையும் ஸம்பாதித்துக் கொடுத்து விட்டது.

❖❖❖

13

ஒரு ஸமயம், சுப்ரீம் கோர்ட் ஜட்ஜாக இருந்த ஸ்ரீசந்திரசேகரய்யர் ஸ்ரீமஹாஸந்நிதானத்தை தரிசிப்பதற்காக குடும்பத்துடன் சிருங்ககிரிக்கு வந்தார். அப்பொழுது அவர் சேலத்தில் ஜட்ஜாக இருந்து வந்தார். சிருங்ககிரியில் கெஸ்ட் ஹவுஸில் தங்கி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளைப் பார்த்துவிட்டு பேஷ்காருடன் ஸச்சிதானந்த விலாஸம் வந்தார்கள். எல்லோரும் ஸ்ரீமஹாஸந்நிதானத்தை தரிசித்து முறைப்படி ஸாஷ்டாங்கமாக வந்தனம் செய்து அவரது அநுமதியுடன் உட்கார்ந்தார்கள்.

ஸ்ரீஸந்நிதானம்:– எல்லோரும் க்ஷேமமா ? சேலத்தில் உத்யோகமா ? ஸ்ரீசாரதாம்பாளை தரிசனம் செய்ய வந்திருக்கிறீர்களா ?

சந்திர:– முதலில் ஸந்நிதானத்தை தரிசனம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் வந்திருக்கிறோம். இதன் மூலம் ஸ்ரீசாரதா சந்திரமௌலீசுவர தரிசனமும் கிடைக்கக்கூடும்.

ஸ்ரீஸந்நிதானம்:– ஏன்? நாங்கள் உபாஸித்துவரும் தேவதையையல்லவா முதலில் தரிசிக்கவேண்டும் ?

சந்திர:– வாஸ்தவம்தான். ஆனாலும் பேசும் தெய்வமாகவும் பிரத்யக்ஷ தெய்வமாகவும் இருக்கும் தாங்கள்தான் எங்களுக்கு எல்லாம். தங்களைத்தான் முதலில் தரிசிக்க வேண்டும்.

ஸ்ரீஸந்நிதானம்:– கேவலம் ஓர் அசேதனமான சிலையில்கூட நமது பாவனா விசேஷத்தால் தேவதைகள் ஸான்னித்யம் அடையும்பொழுது மனிதரிடம் அவ்விதமே பாவனை செய்தால் அவ்வாறே தேவதா ஸான்னித்யம் ஏற்படலாம் அல்லவா ? ஆகையால் அதை நான் ஆக்ஷேபிக்கவில்லை.

சந்திர:– இந்த மூர்த்தியை நாங்கள் ஸாதாரண மனித உருவமாக எண்ணினால் அல்லவா அதில் தேவதா ஸான்னித்ய விசாரம் ஏற்படும்.

நாங்களோ இந்த உருவத்தை ஒரு தேவதா மூர்த்தியாகவே கருதுகிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்: ईश्वरो जीवकलया प्रविष्टो भगवानिति (*ஈச்வரோ ஜீவகலயா ப்ரவிஷ்டோ பகவானிதி*) என்ற நியாயப்படியும் एको देवः सर्वभूतेषु गूढः (*ஏகோ தேவ: ஸர்வபூதேஷு கூட:*) என்ற வாக்கியப் பிரகாரமும் பார்த்தால் ஈசுவராம்சம் இல்லாத இடமே இல்லையே! என்னிடம் மாத்திரம் என்ன விசேஷமாக இருக்கமுடியும் ?

இவ்விதம் ஸ்ரீஸந்நிதானம் சொல்லவே ஒருவரும் பதிலளிக்கமுடியாமல் திணறிவிட்டார்கள். பிறகு ஸந்நிதானம் அவர் கூட வந்திருப்பவரைப் பார்த்து ''இவர் உங்களது தந்தைதானு ?'' என்று கேட்டார்கள். அதற்கு சந்திரசேகரய்யர் ''ஆமாம்'' என்று பதில் சொல்லவே, அவரது யோகக்ஷேமத்தையும் உத்யோக விஷயங்களையும் கேட்டு விசாரித்துத் தெரிந்துகொண்டார்கள். அதாவது அவரது பெயர் குப்புஸ்வாமி ஐயர். ஆந்திர தேசத்தில் வக்கீலாக இருந்து ரிட்டையர் ஆனவர். நாகப்பூடி என்பது இருப்பிடம். ஸந்நிதானம் மந்தஹாஸத்துடன், ''அப்படியா ? இவர்தானு அந்த ஸ்தவரத்நாவளீ என்ற கிரந்தத்தை எழுதியவர்?'' என்று கேட்டார்கள்.

உடனே அந்த நாகப்பூடி குப்புஸ்வாமி ஐயர்

मृदुलां भक्तिरसामृतभरितां भावत्कनुतिततिं वीक्ष्य ।
आशास्महे नितान्तं प्रमुदितहृदयाः सदा भवद्भव्यम् ॥

ம்ருதுளாம் பக்திரஸாம்ருதபரிதாம் பாவத்கநுதிததிம் வீக்ஷ்ய ।
ஆசாஸ்மஹே நிதாந்தம் ப்ரமுதிதஹ்ருதயா: ஸதா பவத்பவ்யம் ॥

(மிருதுவாயும் பக்திரஸம் என்ற அமிருதம் நிறைந்ததுமான உங்களுடைய ஸ்தோத்திரத்தைப் பார்த்து மனதில் மிகுந்த ஸந்தோஷம் கொண்டு உங்களுக்கு க்ஷேமத்தை ஆசீர்வதிக்கிறோம்.)

என்ற ஆர்யாவிருத்த சுலோகத்தை அழகாக எடுத்துச் சொல்லவே ஸந்நிதானம் ''இது நம் மடத்திலிருந்து கொடுத்த ஸ்ரீமுகத்தில் உள்ள சுலோகம் அல்லவா? இப்பொழுதுதான் ஞாபகத்துக்கு வருகிறது. நீங்கள் கோயமுத்தூரில் வந்து ஸ்ரீமுகம் பெற்றுப்போன விஷயம்'' என்றார்.

குப்புஸ்வாமி ஐயர்:– ஸர்வக்ஞமூர்த்தியான தங்களுக்கு மறதி என்பது ஒருகாலும் ஏற்படாது. ஸ்ரீமுகம் கொடுத்தது கோயமுத்தூரில்தான் என்று நல்ல ஞாபகத்துடன் கூறவில்லையா?

ஸ்ரீஸந்நிதானம்:– ஸ்ரீமுகம்தான் ஞாபகம் வந்ததே தவிர உங்களது முகம் ஞாபகத்துக்கு வரவில்லையே. முகமும் ஸ்ரீமுகமும் ஒன்றுதானே ? ஸ்ரீ என்ற பத வித்யாஸம் தவிர வேறு விசேஷம் இல்லையல்லவா ?

குப்புஸ்வாமி:– ஸஞ்சார காலத்தில் பல லக்ஷக்கணக்கான பக்தர்கள் ஸந்நிதானத்தை தரிசனம் செய்கிறார்கள். அவர்களது முகம் எல்லாம் ஸந்நிதானத்துக்கு எப்பொழுதும் ஞாபகத்துக்கு வரமுடியுமா ? அந்தப் பக்தர்களுக்கல்லவா ஸந்நிதானத்தின் ஞாபகம் இருக்க வேண்டும் ?

ஸ்ரீஸந்நிதானம்:– இருந்தாலும் உங்களைப்போன்ற முக்கியமானவர்களை மறக்காமல் இருக்கவேண்டியது அவசியம் அல்லவா ?

குப்புஸ்வாமி:– ஸந்நிதானம் வேண்டுமென்றே இவ்விதம் மறதி வந்ததுபோல் காட்டிக்கொண்டிருக்கலாமோ என்று தோன்றுகிறது .

ஸ்ரீஸந்நிதானம்:– மறைக்கவேண்டிய காரணமே இல்லையே ?

குப்புஸ்வாமி: तथाचरेत वै योगी सतां धर्ममदूषयन् ।
जना यथाऽवमन्येरन् गच्छेयुर्नैव संगतिम् ॥

ததாSSசரேத வை யோகீ ஸதாம் தர்மமதூஷயன் ।
ஜநா யதாSவமந்யேரன் கச்சேயுர் நைவ ஸங்கதிம் ॥

(யோகியானவன் ஸாதுக்கள் அநுஷ்டித்து வந்த தர்மத்திற்கு மாறுபாடு அன்னியில் பாமரஜனங்கள் தன்னை அவமதிக்கும்படி நடந்துகொள்ளவேண்டும். அவர்களுடன் சேர்ந்து பழகக்கூடாது.)

என்று சொல்லியபடி ஜனங்கள் தன்னிடம் அதிகம் நெருங்காமல் இருப்பதற்காக ஸாதாரண மனிதர்போல் அபிநயம் செய்து தப்பித்துக் கொள்வது யோகிகளின் தந்திரம் அல்லவா ?

ஸ்ரீஸந்நிதானம்:- இவ்விதம் ஒரு தந்திரம் இருப்பதை உங்களிடமிருந்து அறிந்துகொண்டதில் வெகு ஸந்தோஷம். ஒரு காலத்தில் இதுவும் உபயோகப்படும்.

குப்புஸ்வாமி:- இன்னொரு காரணமும் இருக்கிறது. பிரபஞ்சத்திலேயே ஈடுபட்டவர்களுக்குத்தான் இந்த ஞாபகசக்தியோ மனிதப்பழக்கமோ வேண்டும். ஸதாசிவப்பிரஹ்மேந்திரர், தான் பார்த்தவர்களை எல்லாம் ஞாபகத்தில் வைத்துக்கொண்டா இருந்தார் ? ஸதா பிரஹ்ம நிஷ்டையிலேயே இருப்பவர்களுக்கு இதெல்லாம் அவசியம் இல்லையே ? தவிரவும் தங்களைப் போன்ற ஆத்மாராமர்களுக்குப் பிரபஞ்ச மறதியானது ஸஹஜம்தானே ? பூஷணம்தானே ?

ஸ்ரீஸந்நிதானம்:- அத்வைத ரஸமஞ்ஜரியில்

दृश्ये स्फुटीभवति नेष्यत एव भूमा
भूम्नि स्फुटीभवति नेष्यत एव दृश्यम् ।
द्वीपान्तरे स्फुरति भूमिरियं न दृश्या
भूमण्डले स्फुरति तच्च तथाविधानम् ॥

த்ருச்யே ஸ்புடீபவதி நேஷ்யத ஏவ பூமா
பூம்னி ஸ்புடீபவதி நேஷ்யத ஏவ த்ருச்யம் ।
த்வீபாந்தரே ஸ்புரதி பூமிரியம் ந த்ருச்யா
பூமண்டலே ஸ்புரதி தச்ச ததாவிதாநம் ॥

(மனதில் பிரபஞ்சம் நன்ருகத்தோன்றும்பொழுது பிரஹ்மம் தோன்ருது. ப்ரஹ்மம் நன்கு தோன்றும்பொழுது பிரபஞ்சம் தோன்ருது. வேருெரு த்வீபத்திலுள்ள தேசத்தைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்கும்பொழுது இந்த தேசம் தோன்றுவதில்லை. இந்த தேசத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த த்வீபம் தோன்றுவதில்லை.)

என்று சொல்லியிருப்பதுபோல் பிரபஞ்ச வாசனை இருக்கும்போது பிரஹ்மத்தின் ஞாபகம் வராது; பிரஹ்மத்தின் ஞாபகம் இருக்கும்போது பிரபஞ்ச வாசனை ஏற்படாது. இவ்விதம் சொல்லியிருப்பது உங்களது வார்த்தையில் பிரதிபலிக்கிறதல்லவா ?

குப்புஸ்வாமி:– எங்களைப்போன்றவர்களின் ஞாபகம் வர வேண்டுமானல் பல ஸந்தர்ப்பங்களில் நாங்கள் இங்கே வந்திருக்கவேண்டும். அவ்விதம் அடிக்கடி நாங்கள் வந்திருந்தால் எங்களது முகத்தைக் கண்டவுடனேயே இன்னர் என்று கூறிவிடுவீர்கள். நாங்கள் அவ்விதம் வராதது தவறுதல்தான்.

ஸ்ரீஸந்நிதானம்:– ஓஹோ ! उद्बोधकसामग्री *உத்போதகஸாமக்ரி* (தூண்டுதல்) இல்லை என்கிறீர்களா ?

குப்புஸ்வாமி:– நாங்கள் அடிக்கடி வருவதுதான் உத்போதக ஸாமக்ரீ ஆகும். அவ்விதம் வராததால்தான் எங்களைப் பற்றிய ஞாபகம் வரவில்லைபோலும். மேலும் அவ்வித ஞாபகசக்தியெல்லாம் தங்களுக்கு இல்லாமல் இருப்பதுதான் பூஷணமாகும். கிருஹஸ்தர்கள்தான் பல பேர்களையும் பல முகங்களையும் பல தேசங்களையும் ஸதா ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கவேண்டும். பல வருஷங்களுக்கு முன்பு வந்திருந்த ஒரு மனிதரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமானல் அவரைப்பற்றி அடிக்கடி சிந்தித்திருக்க வேண்டும் அல்லவா ? அவ்விதம் சிந்தித்திருந்தால்தான் அது விஷயமான ஒரு ஸம்ஸ்காரம் மனதில் உண்டாகும். அந்த ஸம்ஸ்காரம் (பாவனுவிசேஷம்) இருந்தால்தான் ஸ்மரணம் உண்டாகும். संस्कारमात्रजन्यं ज्ञानं स्मृतिः *ஸம்ஸ்காரமாத்ரஜன்யம் ஞானம் ஸ்ம்ருதி:* என்று ஸ்மிருதிக்கு லக்ஷணம் சொல்லப்படுகிறதல்லவா ?

ஸ்ரீஸந்நிதானம்:– ஒருவரை நேரில் பார்த்தவுடன் ஞாபகம் வருவது ஸ்மிருதிதான ? அதற்கு प्रत्यभिज्ञा (*ப்ரத்யபிக்ஞா*) என்றல்லவா பெயர் சொல்லவேண்டும்.

குப்புஸ்வாமி:– (யோசித்து) ஆமாம், मात्र (*மாத்ர*) பதம் போட்டதன் கருத்து இப்பொழுதுதான் விளங்குகிறது. எப்படியும் ஸம்ஸ்காரம் இருந்தால்தான் ஸ்மரணமோ பிரத்யபிக்ஞையோ உண்டாகக்கூடும். பல வருஷங்களுக்கு முந்தி வந்திருந்த ஒருவரைப்பற்றி ஞாபகம் வரவேண்டுமானல் அவரது உருவத்தை அநேக தடவை சிந்தித்து அதன் மூலமாகப் பாவனுரூபமான ஸம்ஸ்காரம் ஏற்பட்டால்தான் அது ஸித்திக்கும். தாங்களோ ஸதா ஸ்ரீ சாரதா சந்திரமௌலீசுவர தியானத்திலோ பிரஹ்ம

அனுஸந்தானத்திலோ காலம் கழிப்பதால் தேவதா விஷயமான ஞாபகம்தான் தங்களுக்கு ஏற்படுமே தவிர மனிதவ்யக்தி விஷயமான ஞாபகம் தங்கள் போன்ற யோகிகளுக்கு வரவேண்டிய அவசியம் இல்லைதான். ஆகையால் ஸந்நிதானத்துக்கு என்னை (என் உருவத்தைப்) பற்றிய ஞாபகம் வராதது பூஷணமேதான்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்களெல்லாம் என்னை ஒரு யோகியாகவோ ஞானியாகவோ, பாவனம் செய்தால் அந்தப் பாவனாவிசேஷத்தால் நானும் அவ்விதமே ஆகிவிடுவேன் போல் இருக்கிறது.

குப்புஸ்வாமி:– ஒரு மூர்த்தியிடம் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு இவர் ஸாக்ஷாத் பரமேசுவரன்தான் என்ற எண்ணமோ பாவனையோ வரவேண்டுமானால் அந்த மூர்த்தியினிடம் ஏதோ ஒரு விசேஷம் இருந்துதான் தீரவேண்டும் அல்லவா?

ஸ்ரீஸந்நிதானம்:– அவ்விதம் என்னிடம் என்ன விசேஷ அம்சத்தை நீங்கள் கண்டீர்கள்?

குப்புஸ்வாமி:– மற்ற விசேஷங்கள் இருக்கட்டும். தங்களைத் தரிசித்த மாத்திரத்திலேயே எங்கள் மனத்தில் ஏதோ ஒரு நிம்மதியும் ஆனந்தமும் உண்டாகின்றனவே. அது ஒன்றே போதுமே! அதனால்தான் சாரதாம்பாள் ஆலயத்துக்குக் கூடச் செல்லாமல் முதலில் ஸ்ரீ ஸந்நிதானத்தின் தரிசனத்துக்காகவே நாங்கள் வந்திருக்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் முதலில் சாரதா சந்திரமௌலீசுவர தரிசனம் செய்தபிறகு இங்குவந்து தரிசனம் செய்வதுதான் முறையல்லவா?

குப்புஸ்வாமி:– சாரதா ஆலயத்தில் சாரதாம்பிகையையும் சந்திரமௌலித் தொட்டியில் சந்திரமௌலீசுவரரையும் தனித்தனியாக தரிசனம் செய்வதைவிட ஒரே சமயத்தில் இருமூர்த்திகளையும் தரிசனம் செய்வதற்காகத்தான் இங்கு வந்தோம். அதாவது,

चन्द्रशेखरसंज्ञातश्चन्द्रमौलीश्वरो भवान् ।
भारतीति प्रसिद्ध्या तु शारदाऽपि त्वमेव नः ॥

சந்த்ரஶேகரஸம்ஜ்ஞாத: சந்த்ரமௌலீச்வரோ பவான் ।
பாரதீதி ப்ரஸித்த்யா து ஶாரதாऽபி த்வமேவ ந: ॥

சந்திரசேகரர் என்ற பெயர் உங்கள் இருவருக்கும் இருப்பதாலும் விசேஷ மஹிமை பொருந்தியிருப்பதாலும் தங்களேயே சந்திரமௌலீசுவரர் என்று எண்ணுகிருேம். அவ்விதமே சந்திரசேகரபதத்துடன் பாரதீ என்ற பதம் சேர்ந்திருப்பதால் பாரதீ பதத்துக்கு அர்த்தமான ஸ்ரீ சாரதாம்பிகையும் தாங்களேதான் என்று எண்ணுகிருேம். இவ்விதம் இரு தேவதைகளின் ஸான்னித்தியமும் ஒரே இடத்தில் விளங்கும்போது தனித்தனியான இடங்களில் சென்று அந்தத் தேவதைகளேச் சிரமப்பட்டு தரிசனம் செய்ய வேண்டுமா? என்றே எண்ணுகிருேம். ஸ்ரீ சந்திரமௌலி ரூபமாகவும் சாரதா ரூபமாகவும் தாங்களே காட்சி அளிப்பதால்தான் முதலில் தங்களேத் தரிசிக்க வந்தோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் இருவரும் இவ்வளவு ரஸிகர்களாக இருக்கிறீர்களே. உத்தியோகத்துடன் இந்தக் கவிதா சாதுர்யத்தை எப்படி ஸம்பாதித்தீர்கள்?

குப்புஸ்வாமி:– எனக்கு என் பிதாவின் நிர்ப்பந்தத்தால் ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல பயிற்சியும் கவிதை செய்யக்கூடிய ஒரு சக்தியும் ஏற்பட்டுவிட்டது.

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களது குமாரராகிய ஜட்ஜ் சந்திரசேகர ஐயருக்கும் அவ்விதமே பிதாவின் நிர்ப்பந்தத்தால்தான் ஸம்ஸ்கிருதப் பயிற்சி ஏற்பட்டதா ?

குப்புஸ்வாமி:– என் நிர்ப்பந்தமும் கொஞ்சம் உண்டு. ஆனுலும் அவனது சினேகிதர்கள் பலர் ஸம்ஸ்கிருத வியுத்பன்னர்களாக இருந்ததால் அவர்களது ஸஹவாசத்தால்தான் ஸம்ஸ்கிருத பாஷா ஞானம் விருத்தியடைந்தது.

ஸ்ரீஸந்நிதானம்:– பார்த்தீர்களா ? நல்ல ஸஹவாஸம் இருந்தால் ஒருவன் காலக்கிரமத்தில் நல்லவனுகி உலகத்துக்கே மார்க்கதரிசி ஆகிவிடுகிருன் என்பதற்குத் தங்களது குமாரரையே ஓர் உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம் போல் இருக்கிறதே.

குப்புஸ்வாமி:- ஸந்நிதானம் கூறுவது உண்மைதான். सत्संगतिः कथय किं न करोति पुंसां (*ஸத்ஸங்கதி: கதய கிம் ந கரோதி பும்ஸாம்*) நல்லோர்களின் ஸஹவாஸம் மனிதர்களுக்கு எந்த பலனைத்தான் கொடுக்காது?) என்றல்லவா பர்த்ருஹரி சொல்லியிருக்கிறார். அது பொய்யாகுமா? அவ்வித ஸத்ஸங்கத்துக்காகவேதான் நாங்கள் இவ்விடம் வந்திருக்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- நல்லது, இன்று ஜாகைக்குச் சென்று ஸாயங்காலம் சாரதாம்பிகையையும் தரிசனம் செய்து நாளைக்கு வாருங்கள். உங்களுக்கு வேறு அவசியமான காரியம் இல்லாவிட்டால் ஒரு வாரமாவது இங்கே தங்கியிருக்கலாம் அல்லவா ?

குப்புஸ்வாமி:- ஸந்நிதான தரிசனம்தான் எங்களுக்குப் பிரதானம். அது கிடைக்குமானால் மற்ற காரியங்களைப் பற்றிக் கவலையில்லை. கோர்ட்டுக்கு விடுமுறை அளித்திருப்பதால் வேறு அவசியமான காரியங்களும் இல்லை. ஆகையால் ஸந்நிதானத்து உத்தரவுப்படியே நாளைய தினம் வருகிறோம்.

✣✣✣

14

இவ்விதம் ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யரும் அவரது தந்தையாரும் ஸந்நிதானத்திடம் தெரிவித்து விட்டு ஜாகைக்குச் சென்ருர்கள். அன்று ஸாயங்காலமும் மறுநாள் காலேயிலும் ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவரர் பூஜை தரிசனம் செய்து, தீர்த்தப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு ஜாகையில் விச்ராந்தி செய்துகொண்ட பிறகு துங்காநதியின் அக்கரையிலுள்ள ஸச்சிதானந்தவிலாஸம் ஆச்ரமத்துக்குச் சென்ருர்கள். ஸந்நிதானம் அன்று நான்கு மணிக்கே கிளம்பிக் காலபைரவ ஆலயத்துக்குச் சென்றுவிட்டதாகத் தகவல் கிடைக்கவே அவ்விடத்துக்கும் எப்படியோ வந்துவிட்டார்கள். அங்கு நமது பூர்வாசிரம ஸ்ரீநிவாசனும், இந்த லேககரும் மாத்திரம் ஸந்நிதானத்துடன் சென்று அந்தாதி சுலோகங்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீஸந்நிதானம் அவர்களே உட்காரச்சொல்லிக் குப்புஸ்வாமி ஐயரைப் பார்த்து ''நீங்கள் எல்லோரும் ஸ்ரீசாரதாம்பாள் தரிசனம் செய்தீர்களா? தீர்த்தப் பிரஸாதம் பெற்றுக் கொண்டீர்களா ? இங்கு வந்ததில் கொஞ்சமாவது மனத்துக்கு நிம்மதி கிடைத்ததா ?'' என்றெல்லாம் விசாரித்தார்கள்.

குப்புஸ்வாமி:– ஸ்ரீசாரதா சந்திரமௌளீசுவர தரிசனமும் தீர்த்தப் பிரஸாதங்களும் எல்லாம் ஆனந்தமாகக் கிடைத்தன. ஆனுலும் இந்த ஏகாந்த ஸன்னிவேசத்தில் ஸந்நிதானத்தைத் தரிசிக்கும்போது உண்டாகும் நிம்மதிபோல் மற்ற இடங்களில் உண்டாவதில்லே. ஸந்நிதானத்தை விட்டுப்போகவும் மனம் வரவில்லே.

ஸ்ரீஸந்நிதானம்:– ருஷ்யசிருங்காதி மஹாமுனிவர்கள் வஸித்த இடம் அல்லவா இது ? இதில் இருப்பவர்களுக்கு மன விச்ராந்தி ஏற்படுவதில் என்ன ஆச்சரியம் ?

குப்புஸ்வாமி:– நாங்கள் இந்த ஊரில் கொஞ்ச நாழிகை தர்ம சாலேயிலும், கொஞ்சநேரம் ஸ்ரீ சாரதாலயத்திலும், மற்றும் பல ஸன்னிதிகளிலும் இருந்துவந்தோம். ஆனுல் இங்கே ஸந்நிதானத்தில்

வரும்போது ஏதோ ஓர் அஸாதாரண நிம்மதியை அடைவதாகவே உணருகிறோம். இதை மற்ற இடங்களில் காணமுடியவில்லையே!

ஸ்ரீஸந்நிதானம்:- மறுபடியும் ஆரம்பித்து விட்டீர்களா உங்களது புராணத்தை. ஸரி प्रकृतमनुसरामः என்று சொல்லி அந்தாதி சுலோகத்தைத் தொடரும்படி இந்த லேககரைப் பார்த்துக் கூறினார்கள். இவரும் தன் சுலோகத்தைக் கூறி முடித்தார். இதற்கு அடுத்தபடி நமது ஸ்ரீநிவாஸனது முறை வந்தபொழுது தன் சுலோகத்தைச் சொல்லி भजे शारदांबामजस्रं मदंबाम् (*பஜே சாரதாம்பாம் அஜஸ்ரம் மதம்பாம்*) என்று முடிக்கவே ஸந்நிதானம் ப (ब) காரத்தில் ஆரம்பிக்கும் சுலோகம் சொல்லும்படி நேர்ந்தது. கொஞ்சம் யோசித்துவிட்டு,

बालेन्दुप्रविभासिमौलिरनिशं स्मेराननः शंकरो
वीणावादनसादरा विधिसती कारुण्यपूर्णेक्षणा ।
मत्सान्निध्यसमुज्ज्वलं सहसुतं भक्ताग्रगण्यं कविं
पायान्मुक्तिवधूकरग्रहविधौ दत्वाऽऽनुकूल्यं जवात् ॥

பாலேந்து ப்ரவிபாஸிமௌளிரநிஶம் ஸ்மேராநந: சங்கரோ
வீணாவாதநஸாதரா விதிஸதீ காருண்யபூர்ணேக்ஷணா ।
மத்ஸாந்நித்யஸமுஜ்ஜ்வலம் ஸஹஸுதம் பக்தாக்ரகண்யம் கவிம்
பாயான் முக்திவதூகரக்ரஹவிதௌ தத்வாSSநுகூல்யம் ஜவாத் ॥

என்ற சுலோகத்தை நிறுத்தி அழகாக எடுத்துக் கூறவே குப்புஸ்வாமி ஐயரின் கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பம் பெருகியது. அவர் வணங்கி सद्गुरो (''ஸத்குரோ, இன்றைக்குத்தான் நான் தன்யனானேன். ஏற்கெனவே ஸ்தவரத்னாவளி ஸ்ரீமுகத்தில் ஸந்நிதானத்தால் கூறப்பட்ட சுலோகம்தான் கொஞ்சம் மாறுதலுடன் வெளிவந்திருக்கிறது. ஸ்ரீமுகத்தில் ஸாதாரணமாகத்தான் இது எழுதப்பட்டிருக்கிறது. இவ்வித ஆசீர்வாதங்களை ஸந்நிதானம் முகமாகவே நேரில் பெற்றுவிட்டபடியால் நாங்கள் எல்லோரும் பரம தன்யர்கள்'' என்று பரவசத்துடன் கூறினார். ஸந்நிதானமோ ஒன்றும் தெரியாதவர்போல் அதையெல்லாம் மறைத்து ''ப (ब) காராதி சுலோகங்கள் வேறு அகப்படாததால்தான் இதைக் கூறினேனே தவிர

வேருெரு காரணமும் இல்லை'' என்று மந்தஹாஸத்துடன் மொழிந்ததைக் கேட்டு நாங்களெல்லோரும் ஆனந்த பரவசம் ஆகிவிட்டோம் என்பதை நினைக்கும்போது இன்றைக்கும் மயிர்க்கூச்சலே உண்டாகிறது.

(ஸ்ரீமான் ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யர் தமக்கு ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் ஸ்தானம் வந்தவுடன் இந்த லேககருக்கு எழுதிய கடிதத்தில் அன்று சிருங்ககிரியில் காலபைரவ ஆலயத்தில் நடந்த நிகழ்ச்சியை ஞாபகப்படுத்திவிட்டு அன்று ஸந்நிதானம் ஸாக்ஷாத்தாகவே (*ஸஹஸுதம்*) सहसुतं என்று அப்பாவுடன் தன்னையும் சேர்த்து அனுக்கிரஹம் செய்தபடியால்தான் இந்த உயர்ந்த பதவி கிடைத்திருப்பதாகவும் இந்தக் குருபக்தி மாருமல் இருக்கும்படி அனுக்ரஹிக்கவேண்டும் என்றும் இந்த லேககரைக் கேட்டுக் கொண்டிருக்கிருர். நம் குருநாதரின் கிருபா விலாஸம் எவ்வளவு தூரம் சென்று எந்த எந்த அற்புதங்களையெல்லாம் விளைவிக்கக்கூடியது என்பதை வாசகர்கள் இதனுல் உணரலாம்.)

முன்தினம் போலவே மறுநாளும் ஸாயங்காலம் வந்து அந்த பிதா புத்ரர்கள் வந்தனம் செய்து அந்தாதி சுலோகங்களில் கலந்துகொண்டார்கள். அன்றைய பேச்சுக்களும் சுலோகங்களும் வைராக்யபரமாகவே அமைந்தன. அந்தாதி சுலோகவரிசையில் ल (ல) காரம் வரவே, ஸந்நிதானம் ஏதோ ஒரு நோக்கத்துடன்,

लोको नापुत्रस्यास्तीति श्रुत्या त्वभाषि को लोकः ।
मुक्तिः संसरणं वा तदन्यलोकोऽथवा नाद्यः ॥

லோகோ நாபுத்ரஸ்யாஸ்தீதி ஶ்ருத்யா த்வபாஷி கோ லோக: ।
முக்தி: ஸம்ஸரணம் வா ததந்யலோகோऽதவா நாத்ய: ॥

என்ற '*ப்ரபோதஸுதாகர*' சுலோகத்தைக் கூறி அதற்குப் பின்வரும் சுலோகங்கள் யாருக்காவது தெரியுமா ? என்று கேட்டார்கள். மற்றவர்கள் சொல்லாதபடியால் இந்த லேககரையே சொல்ல உத்தரவிட்டார்கள். அவை பின்வருமாறு:–

सर्वेऽपि पुत्रभाजः तन्मुक्तौ नैव संसृतिर्भवति ।
श्रवणादयोऽप्युपायाः मृषा भवेयुस्तृतीयेऽपि ॥
तत्प्राप्त्युपायसत्वात् द्वितीयपक्षेप्यपुत्रस्य ।
पुत्रेष्ट्यादिकयागप्रवृत्तये वेदवादोऽयम् ॥

ஸர்வே஽பி புத்ரபாஜ: தந்முக்தௌ நைவ ஸம்ஸ்ருதிர் பவதி |
ஶ்ரவணாதயோ஽ப்யுபாயா: ம்ருஷா பவேயுஸ்த்ருதீயே஽பி ||

தத்ப்ராப்த்யுபாயஸத்வாத் த்விதீயபக்ஷேப்யபுத்ரஸ்ய |
புத்ரேஷ்ட்யாதிக யாகப்ரவ்ருத்தயே வேதவாதோ஽யம் ||

இதன் அர்த்தத்தையும் சொல்லும்படி இந்த லேககரிடம் உத்தரவிடவே ஒருவாறு அதன் ஸ்தூலமான அர்த்தத்தை மாத்திரம் அவர் கூறலாஞர்.

அதாவது, 'नापुत्रस्य लोकोऽस्ति' (*நாபுத்ரஸ்ய லோகோ஽ஸ்தி*) என்ற சுருதி வாக்கியத்துக்கு என்ன அர்த்தம் ? புத்திரனில்லாதவனுக்கு உலகம் கிடையாது என்று அர்த்தமல்லவா ? அதில் உலகம் என்ருல் எந்த உலகம் என்று நமது ஆசார்யாள் கேட்கிருர்கள். முக்தி என்று அர்த்தம் கூறுவதாயிருந்தால் அது பொருந்தாது. ஏனென்ருல் புத்திரபாக்கியம் பெற்றவர்கள் எல்லோரும் முக்தி அடைந்துவிடலாமல்லவா? அவ்விதம் எல்லோரும் மோக்ஷமடைந்துவிட்டால் பிறகு ஸம்ஸாரத்துக்கு ப்ரஸக்தியே இல்லாமல் போய்விடாதா? தவிரவும் 'आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः' (*ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:*) என்ற மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில் காணப்படும் உபநிஷத் வாக்கியத்துக்கும் பிராமாண்யம் இல்லாமல்போய்விடும். ஏனென்ருல் முக்திக்கு ஸாதனமாக ஆத்மக்ஞானத்தை அந்த மைத்ரேயீ ப்ராஹ்மணத்திலேயே முன்பு குறிப்பிட்டிருக்கிறது 'अमृतत्वस्य तु नाशास्ति वित्तेनेति' 'येनाहं नामृता स्या किमहं तेन कुर्याम्' (*அம்ருதத்வஸ்ய து நாஶாஸ்தி வித்தேநேதி; யேநாஹம் நாம்ருதா ஸ்யாம் கிமஹம் தேந குர்யாம்*) இது முதலான வாக்கியங்களால் அமிருதத்வம் என்று மோக்ஷத்தைக் குறிப்பிட்டு அதற்கு ஸாதனமாக ஆத்மக்ஞானத்தை 'आत्मा वा अरे द्रष्टव्यः' (*ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய:*) என்று கூறி விட்டு அந்த ஞானத்துக்கு ஸாதனம் என்ன, எதஞல் அந்த ஆத்மஞானம் ஏற்படக்கூடும் என்பதை விளக்குவதற்காகவே 'श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः' (*ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:*) என்று சிரவணம், மனனம், நிதித்யாஸனம் என்று மூன்று ஸாதனங்களேயும் கூறியிருக்கிறது. ஆகவே சிரவணுதிகளின் மூலம் ஆத்ம ஞானத்தை அடைந்து அதன் மூலம்தான் अमृतत्व

(*அம்ருதத்வம்*) என்ற மோக்ஷ பதவியை அடையமுடியும் என்று மைத்ரேயீ ப்ராஹ்மணத்தில் கூறப்பட்டிருப்பதால் மோக்ஷ ஸுகத்தை அடைவிக்கக்கூடிய சிரவணுதி ஸாதனங்களை விதித்திருப்பதாலும், புத்ரபாக்கியம்தான் அதற்கு ஸாதனம் என்று சொல்லாதபடியாலும் புத்திரனுல் மோக்ஷம் கிடைக்கும் என்பது பொருந்தாது.

இஹலோக ஸௌக்யத்துக்கோ, பரலோக ஸௌக்யத்துக்கோ புத்திரன்தான் ஸாதனம் என்றும் நிச்சயமாகக் கூற இயலாது. ஏனென்ருல் 'तत्प्राप्त्युपायसत्वात्' (*தத்ப்ராப்த்யுபாயஸத்வாத்*) இஹலோக ஸுகத்திற்கு தன தான்யாதிகளும் பரலோக ஸுகத்திற்கு யாகாதிகளும் தான் ஸாதனமாகக் கூறப்படுகிறது 'ज्योतिष्टोमेन स्वर्गकामो यजेत' (*ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்ககாமோ யஜேத*) இது முதலான சுருதி வாக்கியங்களும் ஸ்வர்கத்துக்கு யாகம்தான் ஸாதனம் என்று ஸ்பஷ்டமாக விதிக்கிறது. ஆகவே 'नापुत्रस्य लोकोऽस्ति' (*நாபுத்ரஸ்ய லோகோऽஸ்தி*) என்ற சுருதியானது அர்த்தவாதவாக்யமே தவிர விதிவாக்யமல்ல. 'पुत्रकामः पुत्रेष्ट्या यजेत' (*புத்ரகாம: புத்ரேஷ்ட்யா யஜேத*) என்ற விதிக்கு இது அர்த்தவாதம் என்றே கருத வேண்டும்.

அதாவது புத்திரனை விரும்புபவன் புத்ரகாமேஷ்டி யாகத்தைச் செய்யவேண்டும் என்று ஒரு விதிவாக்யம் கூறுகிறது. புத்திரகாமனையில்லாவிட்டால் அந்த யாகத்தைச் செய்யாமல் விட்டுவிடுவார்களே என்று கருதி அவர்களையும் அந்த புத்ரகாமேஷ்டி யாகத்தில் ஈடுபடச் செய்யவே 'नापुत्रस्य लोकोऽस्ति' (*நாபுத்ரஸ்ய லோகோऽஸ்தி*) என்ற அர்த்தவாத வாக்யம் பிறந்திருக்கிறது. புத்திரன் இல்லாவிட்டால் ஒரு லோகமும் கிடையாது என்று பயமுறுத்திவிட்டால் புத்திரபாக்யம் இல்லாதவர்களெல்லாம் புத்ரகாமேஷ்டி யாகத்தை ராமாயணத்தில் தசரத மஹாராஜன் செய்தது போலவே செய்துவிடுவார்கள். புத்ரகாமேஷ்டியை விதித்த வேத வாக்கியமும் ஸபலமாய்விடும் என்று கருதியே மீமாம்ஸகர்கள் இவ்விதமான காம்ய யாகங்களையும்கூட கட்டாயமாகச் செய்யும்படி வற்புறுத்துகிருர்கள்.

ஆனுல் பரமஸித்தாந்தமான வேதாந்த சாஸ்திரத்தின் கொள்கைப்படி பார்த்தால் அது அவசியமில்லையென்றே தெரிகிறது. 'புத்திரகாமனையில்லாதவனை பலவந்தப்படுத்தி புத்ரகாமேஷ்டி செய்யும்படி சுருதியானது வற்புறுத்துமா ? ' என்று பகவத்பாதாள் கேட்கிருர்கள்.

नाकामतः क्रिया काचित् दृश्यते कस्यचित् क्वचित् ।
यद्यद्धि कुरुते जन्तुः तत्तत्कामस्य चेष्टितम् ॥

நாகாமத: க்ரியா காசித் த்ருச்யதே கஸ்யசித் க்வசித் |
யத்யத்தி குருதே ஜந்து: தத்தத் காமஸ்ய சேஷ்டிதம் ||

உலகில் ஓர் இடத்திலும் ஒருவனும் ஆசையில்லாமல் ஒரு காரியமும் செய்வதில்லே. பிராணிகள் செய்யும் ஒவ்வொரு காரியமும் காமத்தின் தூண்டுதலாலேயே ஏற்படுகிறது என்ற நியாயப்ரகாரம் காமனேயில்லாதவனுக்குக் கர்மாவில் அதிலும் காம்ய கர்மாவில் ப்ரவிருத்தியே ஏற்பட முடியாதல்லவா ? காமனேயிருந்தாலும் இல்லாவிட்டாலும் புத்ரேஷ்டியாகத்தைச் செய்துதான் தீரவேண்டுமென்று ஒரு சுருதி நம்மைப் பலவந்தம் செய்யுமா என்ன! ஆகையால் 'नापुत्रस्य लोकोऽस्ति' (*நாபுத்ரஸ்ய லோகோऽஸ்தி*) என்ற சுருதிவாக்யமானது புத்ரேஷ்டி யாகத்தைப் புகழ்வதற்காக வந்த அர்த்தவாத வாக்யம்தான் என்பது தீர்மானம்.''

இவ்விதம் இந்த லேககர் ஸ்தூலமான அர்த்தத்தை எடுத்துக்கூறவே ஸந்நிதானம் அதை ஆமோதித்துவிட்டு இன்னும் பல விசேஷமான கருத்துக்களே எங்களுக்கு உபதேசித்தார்கள். அதாவது:–

लोके व्यवायामिषमद्यसेवा नित्यास्तु जन्तोर्नहि तत्र चोदना ।
व्यवस्थितिस्तत्र विवाहयज्ञसुराग्रहैरासु निवृत्तिरिष्टा ॥

லோகே வ்யவாயாமிஷமத்யஸேவா நித்யாஸ்து
ஜந்தோர் நஹி தத்ர சோதநா |
வ்யவஸ்திதிஸ்தத்ர விவாஹயஜ்ஞஸுராக்ரஹைராஸு
நிவ்ருத்திரிஷ்டா ||

(உலகில் ஸ்திரீ போகம், மாம்ஸம், மத்யம் இவைகளே நாடுவது பிராணிகளுக்கு இயற்கையாகவே ஏற்பட்டிருக்கிறபடியால் இதுவிஷயத்தில் சாஸ்திரத்தின் தூண்டுதல் அவசியம் இல்லே. சாஸ்திரம், விவாஹம், யக்ஞம், ஸுராக்ரஹம் இவைகளேக்கொண்டு இதுவிஷயத்தில் ஒரு நிர்ணயம் செய்கிறது. இதைத்தவிர மற்ற இடங்களில் ஸேவிக்கக்கூடாது என்பதுதான் சாஸ்திரத்தின் கருத்து.) என்ற பாகவத சுலோகத்தையே இந்த விஷயத்துக்கு அனுகுணமாக

எடுத்துக்கொண்டார்கள். ஒருவன் ஸம்ஸாரத்தில் உழலவேண்டும் என்றிருந்தால்தான், விவாஹம் செய்துகொள்ள வேண்டுமே தவிர அதில் கட்டாயமில்லை. அப்படியே விஷய சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்றிருந்தால்தான் விவாஹம் செய்து கொள்ள வேண்டுமே தவிர மற்றவர்களுக்கு அது கட்டாயமில்லை. இன்னொருவர் ஔபாஸனம், வைச்வதேவம் முதலிய ஸ்மார்த்த கர்மாக்களையோ அக்னிஹோத்ரம் முதலிய ச்ரௌத கர்மாக்களையோ அனுஷ்டிக்க வேண்டுமென்று விரும்பினாலும் அதற்காக கிருஹஸ்தாசிரமம் பெறலாம். இந்த அபிலாஷை ஒன்றும் இல்லாத ஒரு விரக்தரை விவாஹம் செய்து கொள்ளும்படி கட்டாயப்படுத்த ஒரு சுருதிவாக்யமும் ஏற்படவில்லை. கட்டாயப்படுத்தவும் முடியாது. சுருதியானது மனிதனுக்குக் காமனை இருந்தால் அதை நிவிருத்தி செய்வதற்கு வழி சொல்லுகிறதே தவிர காமனை செய்ய வேண்டுமென்றோ, அதை விருத்தி செய்ய வேண்டுமென்றோ ஓரிடத்திலும் கூறவில்லை. தாயார் தன் குழந்தை நெருப்பிலோ படுகுழியிலோ விழப்போனால் அக்குழந்தையை அதில் விழாமல் காப்பாற்றுவாளே தவிர அதில் விழத் தூண்டுவாளா ? அவ்விதமே வேதமாதாவானவள் மனிதர்கள் காமனையினால் தூண்டப்பட்டுப் பல வழிகளில் செல்லும்போது மற்ற வழிகளிலிருந்து அவர்களைத் திருப்புவதற்காக ஒரு நல்வழியைக் காட்டுகிறாள்; அவ்வளவுதான்.

அதாவது ஒரு மனிதன் விஷயபோகத்திலுள்ள காமனையினால் தூண்டப்பட்டு தன் காமனையைத் தணித்துக்கொள்ளப் பல வழிகளிலும் பல துர்மார்க்கங்களிலும் செல்ல முயற்சிக்கும்போது அவனை நல்ல வழியில் திருப்புவதற்காக விவாஹம் என்ற ஒரு நியமத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சுருதிக்கு மனிதன் விவாஹம் செய்து கொள்ளத்தான் வேண்டும் என்ற கருத்துக் கிடையாது. ஜன்மாந்தர வாசனைகளினால் ஏற்பட்ட காமனைகளை நிவிருத்தி செய்து அவனை உயரத் தூக்கிவிடுவதில்தான் சுருதியின் கருத்து பூர்ணமாயிருக்கிறது. காமனைகளை நிவிருத்தி செய்வதற்காக ஒரே கட்டுப்பாடு செய்தாலும் பலன் கிடைக்காது. பிரவாஹம் வந்தபிறகு அதை ஒரேயடியாகக் கட்டுப்படுத்தினால் பல அபாயங்கள் ஏற்படக் கூடுமல்லவா? வந்த வெள்ளத்தை ஒரு பக்கமாகத் திருப்பி விடுவதுதான் விவேகமாகும்.

காமநாப்ரவாஹத்தை சாஸ்திரீயமான மார்க்கத்தில் திருப்புவதற்காகத்தான் விவாஹம் முதலிய சில நியமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த நியமங்களை அனுஸரித்துக் காமநா நிவிருத்தி செய்துகொள்ளட்டும் என்றுதான் சுருதியின் கருத்தாகும். இதைத்தான் வாசிஷ்டத்தில்கூட,

शुभाशुभाभ्यां मार्गाभ्यां वहन्ती वासनासरित् ।
पौरुषेण प्रयत्नेन योजनीया शुभे पथि ॥

சுபாசுபாப்யாம் மார்காப்யாம் வஹந்தி வாஸநாஸரித் ।
பௌருஷேண ப்ரயத்னேன யோஜநீயா சுபே பதி ॥

(ஜன்மாந்தர வாஸனை என்ற நதியின் பிரவாஹம் நல்வழி, கெட்டவழி இரண்டிலும் ஓடுகிறது. மனிதன் தன் முயற்சியால் கெட்டவழியில் செல்வதைத் தடுத்து நல்ல வழியிலேயே போகும்படி செய்யவேண்டும்.) என்று மனோ விருத்திகளையும் வாஸனைகளையும் ஒரு பெரு வெள்ளத்துடன் கூடிய ஆறுபோல் வர்ணித்து அதை நல்ல வழியில் திருப்புவதுதான் புத்திசாலித்தனம் என்றும் எல்லாவிதத்திலும் கட்டுப்படுத்தித் தடுப்பது முடியாத கார்யம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

விவேகமும் வைராக்யமும் உள்ளவர்கள்கூட விவாஹம் செய்துகொண்டுதான் தீரவேண்டும் என்று நினைக்க வேண்டாம். அப்படியிருந்தால் यदि वेतरथा ब्रहचर्यादेव प्रव्रजेत् (*யதி வேதரதா ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்*) என்ற சுருதிவாக்யமே வீணாகி விடுமல்லவா? விவாஹம் செய்துகொண்டுதான் தீரவேண்டும் என்றிருந்தால் பிரம்மசர்யாசிரமத்திலிருந்தே ஸந்யாஸம் பெறலாம் என்று ஜாபால சுருதி இவ்விதம் கோஷிக்குமா ? ஆகையால் விஷய ஸுகாதிகளில் காமனையுள்ளவர்களுக்குத்தான் விவாஹம் விதிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு அது கட்டாயம் இல்லை. இதைத்தான் அந்த பாகவத சுலோகத்தில் नहि तत्र चोदना (*நஹி தத்ர சோதநா*) என்று கூறியிருக்கிறது. ஏன் கட்டாயப் படுத்த வில்லையென்றால் அதற்குக் காரணமும் கூறுகிறது. नित्यास्तु जन्तो: (*நித்யாஸ்து ஜந்தோ:*) என்று.

அதாவது விஷயப்ரவ்ருத்தியானது ராகப்ராப்தமாயிருப்பதால் அதில் ஈடுபடும்படி சுருதியானது கட்டாயப்படுத்த வேண்டிய

அவசியமே இல்லை என்பது அதன் கருத்து. அப்படியானால் 'ऋतौ भार्यामुपेयात्' (*ருதௌ பார்யா முபேயாத்*) முதலிய விதிகள் எதற்காக என்று ஸந்தேஹம் வரலாம். அந்த ஸந்தேஹத்தை நிவிருத்தி செய்வதற்காகத்தான் ''आसु निवृत्तिरिष्टा'' (*ஆஸு நிவ்ருத்திரிஷ்டா*) என்று கூறப்பட்டிருக்கிறது. ஜன்மாந்தரீய வாஸனா பலத்தினால் ஏற்பட்ட காமனைகளை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்பதுதான் சுருதியின் கருத்தே தவிர ருது கமனம் செய்ய வேண்டுமென்று விதியில்லை; கட்டாயமில்லை. ஆனால் उपेयात् (*உபேயாத்*) என்பதற்கு என்ன தாத்பர்யம் என்றால் यदि उपेयात् तर्हि ऋतावेव भार्यामेव उपेयात् (காமனையுள்ளவன் மனைவியிடம்தான் செல்லவேண்டும். அதிலும் ருது காலத்தில்தான் செல்லவேண்டும்.) என்ற இரண்டுவித நியமங்களில்தான் சுருதிக்குத் தாத்பர்யமே தவிர उपेयादेव (செல்லத்தான் வேண்டும்) என்ற விதியில் தாத்பர்யம் கிடையாது என்பது நன்கு விளங்கும்.

ஸந்யாஸ விதியை அங்கீகரிக்காத மீமாம்ஸகர்களும்கூட இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கர்மாதிகாரமில்லாதவர்களான குருடன், ஊமையன், செவிடன் முதலானவர்களுக்குத்தான் ஸந்யாஸாசிரமமே தவிர திடகாத்ரமாயிருப்பவர்களுக்கு ஸந்யாஸமே கிடையாது என்று வாதிக்கிறார்கள். அவர்களும்கூட விஷயபோகத்துக்குத்தான் விவாஹம் என்று கூறவில்லை. கர்மானுஷ்டானத்துக்கும் ப்ரஜாவிருத்திக்கும்தான் விவாஹம் ஸாதனம் என்று ஒப்புக் கொண்டிருப்பதால் காமனா நிவிருத்தியில்தான் சுருதிக்குத் தாத்பர்யம் என்பதை அவர்களும்கூட ஒரு விதத்தில் அங்கீகரித்ததுபோல் ஆகிவிட்டது. விஷய ஸுகங்களில் அபிலாஷை ஏற்பட்டு மனிதன் வேறு துர்மார்க்கத்தில் சென்று தன் இஷ்டத்தைப் பூர்த்தி செய்ய முடியாதபடி இந்த விவாஹ நியமவிதியால் மீமாம்ஸகர்களும் செய்துவிட்டார்களல்லவா ? ஆகையால் மீமாம்ஸகர்களும் ஸதா பிரவிருத்தி மார்க்கத்திலேயே நோக்கமுள்ளவர்களாயிருந்தும்கூட தனக்குத் தெரியாமலே आसु निवृत्तिरिष्टा *ஆஸு நிவ்ருத்திரிஷ்டா* என்று சொன்னபடி விவாஹாதிகளுக்கு காமநா நிவிருத்தியில்தான் முடிவான கருத்து என்பதை ஒப்புக் கொண்டு விட்டார்களல்லவா ? அப்படியிருக்கையில் நிவிருத்தி மார்க்கத்திலேயே தாத்பர்யம் கொண்ட வேதாந்திகள் விவாஹாதிகளின் நோக்கம் காமநா

நிவிருத்தியில்தான் என்பதை அங்கீகரிப்பார்கள் என்று சொல்லவும் வேண்டுமா ?

இப்படியே ஆமிஷ-மத்யஸேவா விஷயத்திலும் காமநா நிவிருத்தியில்தான் சுருதிகளுக்குத் தாத்பர்யம் என்று நாம் அறியலாம். மாம்ஸ பக்ஷணத்திலும் மத்யபானத்திலும் ப்ரவிருத்தியானது ராகாதிதோஷங்களால் ஸ்வத: ப்ராப்தமாயிருப்பதால் அது விஷயத்தில் விதி ஒன்றும் கிடையாது. ஆனுல் வேறு வழியிலிருந்து திருப்புவதற்காக हुतशेषं भक्षयेत्, सौत्रामण्यां सुराग्रहान् गृह्णाति, *ஹுத ஶேஷம் பக்ஷயேத் ஸௌத்ராமண்யாம் ஸுராக்ரஹாந் க்ருஹ்ணதி* என்று சுருதியானது நியமனம் செய்கிறது. அதாவது यदि आमिषं भक्षयेत् तर्हि हुतशेषमेव *யதி ஆமிஷம் பக்ஷயேத் தர்ஹி ஹுதசேஷமேவ* என்றுதான் சொல்லகிறது. அதாவது மாம்ஸ பக்ஷணம் செய்வதாயிருந்தால் யாகத்தில் ஹோமம் செய்யப்பட்டு மீதியுள்ள ஹவிஸ்ஸைத்தான் சாப்பிடலாம் என்றுதான் கூறுகிறது.

அவ்விதமே यदि सुरां गृह्णाति तर्हि सौत्रामण्यामेव, *யதி ஸுராம் க்ருஹ்ணதி தர்ஹி ஸௌத்ராமண்யாம் ஏவ* – ஸுராபானம் செய்வதாயிருந்தால் ஸௌத்ராமணி யாகத்தில்தான் செய்யலாம் என்றிருப்பதால் வேறு வழியில் மத்யபானம் செய்யக்கூடாது என்று ஏற்படுவதால் மற்ற துர்மார்க்கங்களிலிருந்து விலக்குவதில்தான் சுருதிக்குத் தாத்பர்யமே தவிர ப்ரவிருத்தியில் தாத்பர்யம் இல்லே.

ஆகவே ஆமிஷ ஸேவையும் மத்ய ஸேவையும் எப்படி அதில் காமனே இல்லாதவனுக்கு அவசியமில்லேயோ அப்படியே விரக்தனுக்கு குடும்ப ஸேவையும் (விவாஹாதிகள்) கட்டாயம் செய்துதான் தீரவேண்டும் என்று விதி கிடையாது. பிரம்மசர்யத்திலேயே ஜன்மாந்தரீய ஸம்ஸ்கார பலத்தினுல் ஒருவனுக்கு ஸம்ஸாரத்தில் வைராக்யம் ஏற்படுமானுல் அவன் प्रव्रजन्त्यकृतोद्वाहाः परं वैराग्यमाश्रिताः (*ப்ரவ்ரஜந்த்யக்ருதோத்வாஹா: பரம் வைராக்யமாச்ரிதா:*) சிறந்த வைராக்யம் உள்ளவர்கள் விவாஹம் செய்து கொள்ளாமலேயே (பிரஹ்மசர்யாச்ரமத்திலிருந்தே) ஸந்யாஸம் செய்துகொள்கிருர்கள் என்ற வசனப்படி நிவிருத்தி மார்க்கத்தில் (ஸந்யாஸம்) சொல்லுவதே உசிதமாகும். நல்ல வைராக்யமிருந்தும்கூட ஸந்யாஸம் பெருமலோ வேதாந்த விசாராதிகள் மூலம் நிவிருத்தி மார்க்கத்தில் ஈடுபடாமலோ இருந்தால்

அவனது முயற்சியெல்லாம் வீணுகவே முடியும். நெற்பயிருக்கு பூமியை உழுவது அவசியம்தான். ஆனுல் அதற்கும் ஓர் எல்லே உண்டு அல்லவா ? விதை விதைக்கும் வரையில்தான் உழவு நடத்தலாம். விதைத்த பிறகும்கூட ஒருவன் உழுவானுனுல் அவன் முயற்சி வீணுகுமல்லவா ?

அவ்விதமே சித்தசுத்தி உண்டாகும் வரையில்தான் கர்மானுஷ்டானமோ அதற்குரிய கிருஹஸ்தாச்ரமமோ விதிக்கப் பட்டிருக்கிறதே தவிர சித்தசுத்தியடைந்த விரக்தனுக்கு அது அவசியமில்லே. ஆகையால்தான் चित्तस्य शुद्धये कर्म नतु वस्तूपलब्धये (*சித்தஸ்ய சுத்தயே கர்ம நது வஸ்தூப லப்தயே* – மனது பரிசுத்தமாவதற்குத்தான் கர்மா, வஸ்துவை அறிவதற்காக அல்ல) என்று விவேகசூடாமணியில் (சு.11) சித்தசுத்தி உண்டாகும் வரையில்தான் கர்மானுஷ்டானம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதனுல்தான் कषाये कर्मभिः पक्वे ततो ज्ञानं प्रवर्तते என்றும் कषायपक्तिः कर्माणि ज्ञानं तु परमा गतिः (*கஷாயே கர்மபி: பக்வே ததோ ஞானம் ப்ரவர்ததே*) கர்மாக்களால் பாபம் நீங்கியதும், பிறகு ஞானம் ஏற்படுகிறது. (*கஷாயபக்தி: கர்மாணி ஞானம் து பரமா கதி:* – கர்மாக்கள் தோஷங்களேப் போக்குகின்றன. ஞானம் முக்திக்கு ஸாதனம்) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆகையால் முன் கூறப்பட்ட விவாஹாதிகள் எல்லாம் விவேகம், வைராக்யம் இல்லாத மனிதர்களுக்காகக் கூறப் பட்டிருக்கிறதே தவிர நிவிருத்தி மார்க்கத்துக்குச் செல்ல யோக்யதை உள்ளவர்களுக்கு ஏற்பட்டதல்ல. அதனுல்தான் ऋतौ भार्यामुपेयात्, हुतशेष भक्षयेत् முதலானவைகளே अभ्यनुज्ञाविधिः (*அப்யநுஜ்ஞாவிதி:*) என்று சாஸ்திரக்ஞர்கள் கூறுகிருர்கள்.

இவ்விதம் கிருஹஸ்தாசிரமமே (ऐच्छिकम्) (*ஐச்சிகம்*) தன் இச்சையால் ஏற்பட்டது என்று இருக்கும்பொழுது, அந்த கிருஹஸ்தாச்ரமத்தில் ஏற்படக்கூடிய புத்திராதி பாக்கியமும் ஐச்சிகம்தான். புத்ராதி பாக்கியத்தைக் கட்டாயம் அடைந்தே தீரவேண்டுமென்ற நியமம் இல்லே என்று ஏற்படுகிறதல்லவா ! ஆகையால் விவேகிகளான கிருஹஸ்தர்கள் தனக்குப் புத்ரபாக்கியம் கிடைக்கவில்லேயே என்று வருந்தமாட்டார்கள். இதைத்தான் ஆசார்யாள், पुत्रात् सद्गतिरिति चेत् तदपि प्रायोऽस्ति युक्त्यसहम् (*புத்ராத்*

ஸத்கதிரிதி சேத் ததபி ப்ராயோऽஸ்தி யுக்த்யஸஹம்–புத்ரனுல் நற்கதி ஏற்படும் என்று சொல்வாரேயாகில் அதுவும் விசாரித்துப் பார்த்தால் யுக்திக்குப் பொருந்தி வராது) என்று கூறுகிருர்கள். புத்ரபாக்கியம் கிடைத்தால்தான் தனக்கு நற்கதியுண்டாகும், இல்லாவிட்டால் தன் ஜன்மாவே வீண்தான் என்று சில அவிவேகிகள் நினைக்கக்கூடுமல்லவா ! அதையே நமது ஆசார்யாள் கண்டித்து लोको नापुत्रस्यास्तीति श्रुत्या त्वभाषि को लोकः *லோகோ நாபுத்ரஸ்யாஸ்தீதி ஶ்ருத்யா த்வபாஷி கோ லோக:* என்று புத்ரனுல் அடையக்கூடிய லோகம் என்ன என்று கேட்கிருர்கள்.

ஆனுல் பிருஹதாரண்யக உபநிஷத்தில் ''पुत्रेणायं लोको जय्यः'' (*புத்ரேண அயம் லோகோ ஜய்ய:*, புத்திரனுல் இவ்வுலம் ஜெயிக்கத்தக்கது) என்று கூறப்பட்டிருக்கிறதே என்ருல் அதுவும் தவறில்லே. இஹலோகத்தில் தனக்கு வார்தக்ய (வயதான) காலத்தில் சுசுரூஷாதிகள் செய்வதற்கு ஒரு புத்திரன் இருந்தால் சில லௌகிக ஸௌகர்யங்கள் உண்டாகுமே தவிர வேறில்லே. पुंनाम्नो नरकात् त्रायते इति पुत्रः (*பும்நாம்நோ நரகாத் த்ராயதே இதி புத்ர:* – பும் என்ற பெயர் உள்ள நரகத்திலிருந்து காப்பாற்றுகிருன் என்ற காரணத்தால் புத்ரன் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது.) என்று சொல்லப்பட்டிருக்கிறதேயென்ருல் அதுவும் விவேகம், வைராக்யம் இல்லாத கிருஹஸ்தர்களுக்காகச் சொல்லப்பட்டதே தவிர விவேகிகளுக்கல்ல. சிரார்த்தம், பிண்ட ப்ரதானம் முதலியவைகளால் பரலோகத்தில் உள்ளவர்களுக்குப் புத்திரன் பல உபகாரங்களேச் செய்கிருனே என்ருல் அதுவும் அவிவேகி விஷயம்தான். விவேகிகளோ புத்ராதிகளேப் பெரும் பாரமாகவும் தனது ஞானமார்க்கத்துக்கு இடைஞ்சலாகவுமே கருதுவார்கள். அதைப் பாக்கியமாகக் கருதமாட்டார்கள்.

தவிரவும் புத்திரன் செய்யும் பிண்டப்ரதானத்திஞல்தான் பித்ருக்கள் ஜீவிக்கிருர்கள் என்று நினேக்கவேண்டாம். பித்ரு சிரார்த்தம் என்பது நைமித்திக கர்மாவாகையால் அதைப் புத்திரன் செய்தே தீரவேண்டும். அந்தக் கர்மாவும் ஸந்தியாதி கர்மாக்களேப் போல் சித்தசுத்தியை உண்டுபண்ணுவதால் கர்த்தாவுக்குத்தான் சிரார்த்தாதி கர்மாக்களால் அதிக பலனுண்டாகும். பிண்ட ப்ரதானத்தால்தான் பிதா ஜீவிக்கிருர் என்று வர்ணிப்பதெல்லாம் रोचनार्थी फलश्रुतिः (கர்மப்ரவ்ருத்தியில் ருசி ஏற்படுவதற்கான பலனேக்காட்டுகிறது) என்று தீர்மானம்.

ஆனால் பாரதத்தில் ஜரத்காரு உபாக்யானம் முதலியவைகளில் புத்திரபாக்கியமில்லாதவனுக்குப் பலவித கஷ்டங்களும் நரகங்களும் ஏற்படுவதாகக் கூறியிருக்கிறதே என்றால் அதை எல்லாம் புராண சிரவணம் செய்யக்கூடிய மத்தியம அதிகாரிகள் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். வேதாந்த சிரவண அதிகாரிகளின் திருஷ்டியில் அது எல்லாம் அர்த்தவாதமாகவே முடியும். அவைகளுக்கெல்லாம் மூலமான प्रजातन्तुं माव्यवच्छेत्सीः (*ப்ரஜாதந்தும் மாவ்யவச் சேத்ஸீ:*) என்ற தைத்திரீய உபநிஷத் வாக்கியமே அவிரக்த விஷயம்தான் என்று ஆசார்யாள் தீர்மானிக்கும்போது, அதன் மூலம் ஏற்பட்ட புராண இதிஹாஸ உபாக்யானங்களும் அவிரக்த விஷயங்கள்தான் என்று ஸ்பஷ்டமாகவில்லையா ? एष्टव्या बहवः पुत्राः यद्येकोऽपि गयां व्रजेत् (*ஏஷ்டவ்யா பஹவ: புத்ரா: யத்யேகோऽபி கயாம் வ்ரஜேத்* – பல பிள்ளைகளைப் பெற விரும்பவேண்டும். அவர்களில் ஒருவனாவது கயைக்குச் செல்லலாம் அல்லவா?) இது முதலிய கயாசிரார்த்த மஹிமைகளைக் கூறும் வாக்கியங்களும்கூட அவிரக்த விஷயம் என்றுதான் கூறவேண்டுமே தவிர விவேகி விஷயமில்லை.

ஆனால் ஒரு ஸந்தேஹம் வரலாம். प्रजातन्तुं माव्यवच्छेत्सीः *ப்ரஜாதந்தும் மாவ்யவச்சேத்ஸீ :* (1–10) என்ற தைத்திரீய உபநிஷத் வாக்கியத்துக்கு பாஷ்யம் எழுதும்பொழுது ஆசார்யாள் ''अनुत्पद्यमानेऽपि पुत्रे पुत्रकाम्यादिकर्मणा तदुत्पत्तौ यत्नः कर्तव्य इत्यभिप्रायः'' *அனுத்பத்யமானே அபி புத்ரே புத்ரகாம்யாதி கர்மணா ததுத்பத்தௌ யத்ந: கர்த்தவ்ய இத்யபிப்ராய:* என்று புத்திரன் பிறக்கவில்லையென்றால் புத்ரதோஷ பரிஹாரத்துக்காக புத்ர காமேஷ்டி முதலியவைகளைச் செய்தாவது புத்திரனை அடைவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறாரே என்றால் அதுவும் மத்யமாதிகாரி விஷயம்தான். உத்தமாதிகாரியாயிருந்தால் அவன் கிருஹஸ்தாசிரமத்துக்கே செல்ல மாட்டானல்லவா ? கிருஹஸ்த ஆசிரமம் அடைந்த பிறகு அதற்குரிய கர்மாக்களைச் செய்துதான் தீரவேண்டும். அவ்விதமே புத்ர தோஷ பரிஹாரத்திற்காக விதிக்கப்பட்ட கர்மாக்களையும் செய்வது நல்லதுதான்.

அப்படியே பிருஹதாரண்யக உபநிஷத்திலும் ஸம்ப்ரத்தி வித்யாப்ரகரணத்தில் तस्मादेनं सर्वस्मात्पुत्रो मुञ्चति तस्मात्पुत्रो नाम (*தஸ்மாதேனம் ஸர்வஸ்மாத் புத்ரோ முஞ்சதி தஸ்மாத் புத்ரோ நாம*)

என்று कर्तव्यताशेषपूरणात् पुत्रः *கர்த்தவ்யதாசேஷ பூரணாத் புத்ர:* என்று நிர்வசனம் செய்திருப்பதும் அவிரக்த விஷயம் என்றே வைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால் பிரபோதஸுதாகரத்தில் पुत्रेष्ट्यादिकयागप्रवृत्तये वेदवादोऽयम् *புத்ரேஷ்ட்யாதிக யாகப்ரவ்ருத்தயே வேதவாதோऽயம்* என்று பாஷ்யகாரரே பல உபபத்திகளுடன் விவேகிகளுக்குப் புத்திரனால் ஆக வேண்டியதொன்றும் கிடையாது என்று விவரணம் செய்திருப்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவேண்டுமல்லவா? ஆகவே பாஷ்யத்தில் புத்திர ஸந்ததிக்காக விசேஷ முயற்சி செய்யவேண்டுமென்றும் பிரபோதஸுதாகரம் முதலியவைகளில் அது அர்த்தவாதம் என்றும் விவேகிகளுக்கு அது அவசியமில்லையென்றும் கூறப்படுவதால் இவ்விரு வாக்கியங்களையும் அதிகாரிபேத விஷயம் என்றே நிர்ணயம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் பாஷ்யகாரரின் வாக்கியங்களுக்கு ஸாபல்யம் ஏற்படுமல்லவா ?

இன்னும் பிரபோதஸுதாகரத்தில் நன்றாக ஊன்றிப் பார்த்தால் பல அபூர்வ விஷயங்களும் புலப்படும். அதில் ஓரிடத்தில்,

> नानाशरीरकष्टैर्धनव्ययैः साध्यते पुत्रः ।
> उत्पन्नमात्रपुत्रे जीवितचिन्ता गरीयसी तस्य ॥
> *நாநாசரீரகஷ்டைர் தநவ்யயை: ஸாத்யதே புத்ர: ।*
> *உத்பந்நமாத்ரபுத்ரே ஜீவிதசிந்தா கரீயஸீ தஸ்ய ॥*

என்று பல தேவதைகளிடம் பிரார்த்தனைகள் செய்தும் பல விரதங்கள் அநுஷ்டித்தும் பல காயக்லேசங்களாலும் உண்டாகக்கூடிய புத்திரனாவது அவனுக்கு நிரந்தரமாக ஆனந்தத்தை உண்டுபண்ண முடியுமா ? முடியாது. ஸதா புத்திர விஷயமான கவலைதான் ஏற்படும். பிறந்தது முதல் அக்குழந்தை ஸுகமாக ஜீவித்திருக்கவேண்டுமே என்ற கவலைதான். அதிலும் ஸத்புத்திரனாக இருந்தாலாவது கொஞ்சம் ஸமாதானம் அடையலாம். அதனால்தான் பிருஹதாரண்யகத்தில் तस्मात्पुत्रमनुशिष्टं लोक्यमाहुः *தஸ்மாத் புத்ரம் அநுசிஷ்டம் லோக்யமாஹு:* என்று நன்றாகக் கல்வி கற்பிக்கப்பட்டு ஸதாசாராதிகளில் பழக்கப்பட்ட புத்திரன் பிறந்தால் தான் பிரயோஜனம் உண்டு என்று கூறுவதால் வித்யாவிநயாதி குணங்களில்லாத துராசார புத்திரர்களால் ஒரு பலனும் இல்லை என்றும்

விபரீத பலன்தான் ஏற்படும் என்றும் ஸ்பஷ்டமாகிறதல்லவா? அவ்விதம் ஸர்வஸத் குணங்களுடனும் கூடிய ஒரு புத்திரன் பிறப்பது மிகவும் அபூர்வம்.

सर्वगुणैरुपपन्नः पुत्रः कस्यापि कुत्रचिद्भवति ।
सोऽल्पायू रुग्णो वाऽप्यनपत्यो वा तथापि खेदाय ॥

ஸர்வகுணைருபபந்ந: புத்ர: கஸ்யாபி குத்ரசித் பவதி |
ஸோऽல்பாயூ ருக்ணோ வாऽப்யநபத்யோ வா ததாபி கேதாய ||

உலகில் எல்லா நற்குணங்களும் நிரம்பிய புத்திரன் கிடைப்பது மிகவும் துர்லபம். அப்படி யாராவது ஒருவருக்கு ஸத்புத்திரன் பிறந்தாலும் அநேகமாக அவன் அல்பாயுஸ்ஸாகத்தான் இருப்பான். ஜீவித்திருந்தாலும் ரோகியாயிருப்பான், அல்லது ஸந்ததியில்லாதிருப்பான். இதைப்பார்க்கும் தாய்தந்தையர்கள் படும் அவஸ்தையை சொல்லவே முடியாதல்லவா ?

இதைத்தான் வித்யாரண்யர் பஞ்சதசியில் (ஆத்மானந்த பிரகரணம்) கூறும்பொழுது,

जातस्य ग्रहरोगादिः कुमारस्य च मूर्खता ।
उपनीतेऽप्यविद्वत्त्वमनुद्वाहश्च पण्डिते ।
पित्रोर्दुःखस्य नास्त्यन्तो धनी चेन्म्रियते तदा ॥

ஜாதஸ்ய க்ரஹரோகாதி: குமாரஸ்ய ச மூர்க்கதா |
உபநீதேऽப்யவித்வத்த்வம் அநுத்வாஹச்ச பண்டிதே |
பித்ரோர் துக்கஸ்ய நாஸ்த்யந்தோ தநீசேன் ம்ரியதே ததா ||

''(குழந்தை பிறந்ததும் க்ரஹபீடை, பிணி ஏற்படுகிறது. கொஞ்சம் வயதானுல் முட்டாளாயிருக்கிருன். உபநயனம் செய்தும் ஞானம் ஏற்படுகிறதில்லே. பண்டிதனுயிருந்தாலும் விவாஹம் ஆகிறதில்லே. பணக்காரனுயிருந்தால் சிறு வயதிலேயே இறந்துவிடுகிருன். இவ்வாறு பெற்ருேர்களுக்கு புத்திரனுல் ஏற்படும் துன்பத்திற்கு அளவே இல்லே.) என்று குழந்தை பிறந்தது முதல் கடைசிவரையில் தாய் தந்தையர்கள் எவ்வளவு துக்கம் அநுபவிக்கிருர்கள் என்பதை விளக்கிப் புத்திரபாசத்தின் தீமையை வர்ணிக்கிருர். பிரபோதஸுதாகரத்திலும் பஞ்சதசியிலும் இத்துடன்

நிறுத்தி விட்டார்கள். உபநிஷத்துக்களின் வியாக்யான ரூபமான ஆத்மபுராணத்தைப் பார்த்தால் இதைவிட இன்னும் ஒரு படி மேல் சென்று, புத்ரோத்பாதனத்தால் ஒரு ஜீவனுக்குப் பலவித ஸம்ஸார துக்கத்தைக் கொடுப்பதால் உண்டான தோஷமும் பிதாவுக்கு ஏற்படக் கூடும் என்றும் அதிகமாகக் கூறியிருப்பதை நான் இங்கு விஸ்தரிக்கவில்லை. நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.''

''ஆகையால் புத்திரன் பிறந்தால் நமது குப்புஸ்வாமி அய்யருக்குப் பிறந்த சந்திரசேகரய்யர் மாதிரி குணசாலியான புத்திரன் பிறக்கவேண்டும். இல்லாவிட்டால் புத்திரனே இல்லாதிருப்பதே நலம்'' என்று கூறி ஸந்நிதானம் தன் பேச்சை முடிக்கவே அதைக் கேட்ட நாங்கள் எல்லோரும் பரவசம் அடைந்துவிட்டோம். கடைசி வார்த்தையைக் கேட்ட ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யரும் அவரது தந்தையும் ஆனந்தக் கண்ணீர் விட்டுப் பேசமுடியாமல் நின்றார்கள். பிறகு ஸந்நிதானம் அவர்களைப் பார்த்து ''நான் இவ்வளவு தூரம் கூறியதெல்லாம் உங்களுக்காக மட்டும் இல்லை; இன்னொருவருக்கும் பல ஸந்தேஹங்கள் நிவிருத்தி ஆகட்டும் என்பதற்காகத்தான் இவ்வளவு விஸ்தரித்தேன்'' என்று சொல்லி மந்தஹாஸத்துடன் நமது ஸ்ரீநிவாஸனைப் பார்த்தார்கள். அச்சிறுவனோ தனக்குத்தான் இந்த உபதேசங்களெல்லாம் என்று தீர்மானித்து மந்தஹாஸம் செய்தான். இந்த லேககரும்கூடத் தனக்குத்தான் இந்த உபதேசங்கள் என்று எண்ணி மகிழ்ந்தார். சந்திரசேகரய்யரோ தனக்குப் புத்திரபாக்கியம் இல்லாமையால் உண்டான வருத்தத்தை நிவிருத்தி செய்வதற்காகவே இந்த உபதேச மொழிகள் என்று எண்ணிக்கொண்டார். கடைசியில் ஸந்நிதானம், ''நான் சொன்னது முக்யாதிகாரி விஷயமாகையால் இந்த ரஹஸ்யங்களை உங்களது மனதிலேயே வைத்துக்கொண்டு சிந்தித்துப் பாருங்கள். மற்ற அதிகாரிகளிடம் இதைக்கூற வேண்டாம்'' என்றும் கூறினார்கள். ''ஏனென்றால்,

न बुद्धिभेदं जनयेदज्ञानां कर्मसंगिनाम् ।
जोषयेत् सर्वकर्माणि विद्वान् युक्तः समाचरन् ॥

ந புத்திபேதம் ஜநயேத் அக்ஞாநாம் கர்மஸங்கிநாம் ।
ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்த: ஸமாசரன் (3–26) ॥

என்ற கீதாவசனப்ரகாரம் கர்மமார்க்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு மேலும் பிரவிருத்தி மார்க்கத்தில் அபிருசி உண்டாக்குவதுதான் முறையாகுமல்லவா ? ஸரி இன்று இத்துடன் இருக்கட்டும். பாக்கியை நாளை வைத்துக் கொள்வோம்'' என்று சொல்லி மந்தஹாஸத்துடன் விடையளித்தார்கள்.

விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தவுடன் அந்த ஜஸ்டிஸ் சந்திரசேகர அய்யரும் அவரது பிதாவும் பேசிக்கொண்டதிலிருந்து சில விஷயங்கள் இந்த லேககருக்கும் தெரியவந்தன. அதாவது தனக்குப் புத்ரபாக்கியம் உண்டாகும்படி ரக்ஷாபந்தனம் ஏதாவது ஸந்நிதானத்தில் கேட்கவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டே அவர்கள் வந்திருந்தார்கள். ஸந்நிதானம் அதை எப்படியோ தெரிந்துகொண்டு முன்கூட்டியே அவர்கள் கேட்கப்போவதற்கு பதிலளித்துவிட்டார்களாம். புத்திர பாக்கியமில்லாதிருப்பது ஒரு பெரிய குறை என்ற எண்ணமானது நமது ஸந்நிதானத்தின் உபதேசமொழிகளால் நிவிருத்தியானதுடன் விவேகிகளுக்கு அந்தப் புத்திராதி பாசம் பந்தத்தையும் பல கஷ்டங்களையும்தான் விளைவிக்கக் கூடுமென்றும் பல திருஷ்டாந்தங்களுடன் ஸந்நிதானம் கூறியிருப்பதால் அந்தப் புத்திரகாமனையை விட்டுவிட்டு எல்லாப் பாசத்தையும் பகவானிடம் வைத்து எல்லா அன்பையும் ஸ்ரீ சாரதா சந்திரமௌலீச்வரரிடத்தில் செலுத்தி தாம் ஆனந்தமாக இருந்துவருவதுதான் முறை என்று அவர்கள் பேசிக்கொண்டார்கள். ''புத்திர தோஷ நிவிருத்திக்காக எல்லாவித பரிஹாரங்களையும் செய்ய வேண்டியதுதான் முறை'' என்று ஸ்ரீஸந்நிதானம் கூறினார்களல்லவா ? அப்படியே நாமும் ஸர்ப்ப சாந்தி, திலஹோமம், ராமேசுவர யாத்திரை, ஸேது ஸ்நானம் முதலியவைகளைச் செய்து முடித்து விட்டோம். இன்னும் பல மஹான்கள் கொடுத்த ரக்ஷாபந்தனுதிகளையும் தரித்து வருகிறோம். ஆனாலும் கடைசியாக நமது ஸந்நிதானத்தின் மூலம் ஒரு ரக்ஷாபந்தனம் கிடைத்தால் நமது மனோரதம் பூர்த்தியாகிவிடுமென்று நினைத்திருந்தோம். அதற்கு இடமில்லாமலே ஸந்நிதானம் செய்துவிட்டார்கள். இந்த ஜன்மாவில் புத்ரப்ராப்தி பாக்கியம் கிடையாது என்பதையே நமது ஸந்நிதானம் மறைமுகமாகக் கூறியிருக்கலாமோ என்றும் தோன்றுகிறதே. இதன் உண்மைதான் என்ன ?'' என்று அவர்கள் இந்த லேககரையே கேட்டார்கள்.

அதற்கு இந்த லேககர் கூறிய பதில் பின்வருமாறு:

''நீங்கள் இன்று ரக்ஷாபந்தனம் கேட்கப்போகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொண்டுதான் ஸந்நிதானம் இவ்வளவு தூரம் விஸ்தாரமாக விவேகிகளுக்குப் புத்திரபாக்கியம் அவசியமில்லை என்பதை விளக்கிக் கூறியிருக்கிறார்கள். நீங்கள் கேட்டதற்காக ஒரு ரக்ஷாபந்தனம் கொடுத்திருக்கலாம். ஆனால் அது (फलवत्) பலவத்தாக ஆகவேண்டுமே. பலவத்தாக ஆகுமா ஆகாதா என்பதை யோசித்துப் பார்த்துத்தான் ஸ்ரீஸந்நிதானம் ரக்ஷாபந்தனம் கொடுப்பது வழக்கம். ஒருவருக்கு இந்த ஜன்மாவில் புத்திரப் பிராப்தி யோகம் இருக்கிறதா இல்லையா என்பது ஸர்வக்ஞ மூர்த்தியான அவருக்குத் தெரியாதிருக்குமா ? அதற்காகத்தான் அவ்விதம் மறைமுகமாகக் கூறியிருக்கலாமோ என்றுதான் தோன்றுகிறது.''

''தவிரவும், இன்று ஸந்நிதானம் கூறியதெல்லாமே உங்களுக்காகவேதான் என்று நினைக்கவேண்டாம். நமது ஸ்ரீநிவாஸன் இன்று காலையில் என்னிடம் பல கேள்விகளைக் கேட்டுவிட்டான். அவைகளுக்குத் திருப்திகரமாக என்னால் பதில் கூறமுடியவில்லை. ஸந்நிதானம் அவைகளுக்கும் சேர்த்து இந்த வியாஜத்தினால் பதில் கூறியிருக்கிறார்கள். அப்படியே என் மனத்தில் ஏற்பட்ட பல ஸந்தேஹங்களுக்கும்கூட இன்று ஸ்ரீ ஸந்நிதானத்தின் உபதேச மொழிகளிலிருந்து தகுந்த பதில் கிடைத்துவிட்டது. ஆகவே, ஸந்நிதானம் செய்யும் உபதேசமானது பலபேர்களுக்குப் பலவிதத்தில் உபயோகப்படக்கூடியது என்பதை இன்று நீங்கள் நேரில் கண்டுவிட்டீர்கள். நாங்களோ பிரதிதினமும் இம்மாதிரியான நிகழ்ச்சிகளை அநுபவித்து வருகிறோம்.''

சந்திரசேகரய்யர்:– அதெல்லாம் ஸரி. ஸ்ரீநிவாஸன் உங்களிடம் அவ்விதம் என்ன கேள்வி கேட்டான் என்பதை நாங்கள் அறிந்துகொள்ளலாமா ?

லேககர்:– ஆஹா! அவசியம் தெரிந்துகொள்ளலாம். அதாவது:– (1) ஒரு குடும்பத்தில் ஒருவன் ஜ்யேஷ்ட (மூத்த) புத்திரனாயிருந்தால் அவன் கட்டாயம் விவாஹம் செய்துகொள்ளத்தான் வேண்டும் என்று பலர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேனே ! அது வாஸ்தவம்தானா ?

(2) நம் குருநாதர் நல்ல பாண்டித்யமடைந்த பிறகுதான் ஆசிரமஸ்வீகாரம் செய்துகொண்டார் அல்லவா? அதுபோல் பாண்டித்யம் பெற்று வயதுவந்த பிறகுதான் ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளலாம் என்று கட்டாய விதிகள் உண்டா ?

(3) மனிதன் பிறந்தவுடனேயே பல ருணங்கள் (கடமைகள்) அவனை வந்தடைகின்றனவென்றும் அவற்றில் சில மாதாபித்ரு சுசுரூஷையாலும் சில தேவபித்ரு கர்மாக்களாலும், சில புத்ரஸந்ததி பெறுவதாலும் விலகும் என்று கேள்விப்பட்டதெல்லாம் உண்மைதானா ?

(4) வெகுகாலம் வரையில் குருகுலவாஸம் செய்த பிறகுதானே பிரம்மசர்ய ஆச்ரமத்தை முடித்து மற்ற ஆசிரமங்களைப் பெறலாம். என்னைப்போன்ற சிறு பாலகன் ஸந்யாஸம் பெற விரும்பினால் அது உசிதமாகுமா ?

(5) சிறு பாலகனாயிருப்பவன் ஸந்யாஸம் பெறுவதாக இருந்தால் அவனது தாய்தந்தையர்கள் அனுமதி அளிக்க மாட்டார்களே. அவர்களது அனுமதியில்லாமலேயே ஆசிரமம் பெறலாமா ?

இது முதலான பல ஸந்தேஹங்களையும் ஸ்ரீநிவாஸன் கேட்டுவிட்டான்.

குப்புஸ்வாமி அய்யர்:- சுருக்கமாகச் சொன்னால்

ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत् ।
अनपाकृत्य मोक्षं तु सेवमानः पतत्यधः ॥

ருணானி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேஶயேத் ।
அநபாக்ருத்ய மோக்ஷம் து ஸேவமாந: பதத்யத: ॥

(மூன்று கடன்களையும் தீர்த்துவிட்டு மனத்தை மோக்ஷத்தில் செலுத்தவேண்டும். கடனைத்தீர்க்காமல் மோக்ஷ மார்க்கம் செல்கிறவன் கீழே விழுந்துவிடுவான்.) என்ற மனு ஸ்மிருதி வாக்கியத்தின் கருத்தையே இச்சிறுவன் மனதில் வைத்துக்கொண்டு கேட்கிறான் போலிருக்கிறது.

லேககர்:– ஸந்நிதானம் இவைகளுக்கெல்லாம் பதில் கூறியதிலிருந்து முன்சொன்ன ஸ்மிருதி வாக்கியங்கள் எல்லாம் பூர்வபக்ஷ வாக்கியமென்றே தீர்மானமாய்விட்டது.

குப்புஸ்வாமி அய்யர்:– இது பூர்வபக்ஷ வாக்கியமானுல் இதற்கு மூலமான जायमानो वै ब्राह्मणस्त्रिभिः ऋणवा जायते ब्रह्मचर्येण ऋषिभ्यो यज्ञेन देवेभ्यः प्रजया पितृभ्यः (*ஜாயமாநோ வை ப்ராஹ்மண: த்ரிபி: ருணவா ஜாயதே ப்ரஹ்மசர்யேண ரிஷிப்ய: யஜ்ஞேந தேவேப்ய: ப்ரஜயா பித்ருப்ய:* – பிறக்கும்பொழுதே பிராஹ்மணன் மூன்று கடன்களுடன் பிறக்கிருன். பிரஹ்மசர்யத்தால் ரிஷிகளின் கடனையும், யாகத்தால் தேவர்களின் கடனையும், ப்ரஜையினுல் பித்ருக்களின் கடனையும் தீர்க்க வேண்டும்.) என்ற தைத்திரீய சுருதி வாக்கியமும் பூர்வபக்ஷமாகி விடாதா? அது நியாயமாகுமா ?

லேககர்:– இந்த விஷயத்தைத்தான் ப்ரஹ்மஸூத்ரம் ஜிக்ஞாஸாதிகரணத்தில் பாமதீகாரர் விமர்சனம் செய்து ஸித்தாந்தத்தை வெளியிட்டிருக்கிருர். இன்று ஸந்நிதானம் கூறியவைகளும் அந்த ஸித்தாந்த பக்ஷத்தையே குறிக்கிறது.

குப்புஸ்வாமி அய்யர்:– பாமதீகாரரின் வாக்கியப்ரகாரம் எது பூர்வ பக்ஷம், எது ஸித்தாந்தபக்ஷம் என்பதை நீங்களே விளக்கிக் கூறினுல்தான் ஸந்நிதானத்தின் உபதேசமொழிகளின் கருத்தை நாங்கள் நன்ருகப் புரிந்துகொள்ள முடியும். அதை விளக்குவீர்களா ?

லேககர்:– தெரிந்தவரையில் விளக்குகிறேன். அதாவது:– *அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா* (अथातो ब्रह्मजिज्ञासा) என்ற ப்ரஹ்மஸூத்திரத்தில் *அத* (अथ) சப்த விசார ஸந்தர்ப்பத்தில் பாஷ்யகாரர் *ஶேஷஶேஷித்வே அதிக்ருதாதிகாரே வா ப்ரமாணுபாவாத்* (शेषशेषित्वे अधिकृताधिकारे वा प्रमाणाभावात्) என்று கூறுகிருர். *அத* (अथ) சப்தத்திற்கு 'க்ரமம்' என்ற அர்த்தம் கூறவேண்டுமானுல் *ஶேஷஶேஷித்வ* (शेषशेषित्व) மோ *அதிக்ருதாதிகார* (अधिकृताधिकार) மோ அவசியம் வேண்டும். எப்படி என்ருல் हृदयस्याग्रेऽवद्यति अथ जिह्वाया अथ वक्षसः (*ஹ்ருதயஸ்யாக்ரே அவத்யதி அத ஜிஹ்வாயா அத வக்ஷஸ:*) என்ற இடத்தில் அவதானக்ரமத்தை ஸூசிப்பதற்காக *அத* अथ சப்தம் ஏற்பட்டிருக்கிறது என்று மீமாம்ஸகர்கள் கூறுகிருர்கள். இங்கேயோ தர்ம

ஜிக்ஞாஸைக்கும் ப்ரஹ்ம ஜிக்ஞாஸைக்கும் அவ்வித க்ரமம் கிடையாது. முன்சொன்ன அவதான வாக்கியத்தில் மூன்று அவதானங்களுக்கும் ஒருவனே கர்த்தாவானபடியால் एककर्तृकत्वं இருக்கிறது. இங்கேயோ தர்மஜிக்ஞாஸாதிகாரி வேறு. ப்ரஹ்மஜிக்ஞாஸாதிகாரி வேறு. அதனுல் एककर्तृकत्वं வரமுடியாது. 'समानकर्तृकयोः पूर्वकाले' என்ற பாணினி ஸூத்திரப்படி क्त्वाप्रत्यय ம் இருந்தாலும் एककर्तृकत्वं சொல்லலாம்; அதுவும் கிடையாது.

மேலும் एककर्तृकत्वं வரவேண்டுமாளுல் சேஷசேஷித்வமோ, அதிக்ருதாதிகாரமோ இருந்தே தீரவேண்டும். எப்படியென்ருல் ப்ரயாஜம் முதலான அங்கங்களுக்கும் தர்ச பூர்ணமாஸ ரூபமான (अंगि) பிரதான யாகத்துக்கும் அங்காங்கிபாவம் என்ற சேஷசேஷித்வம் வருவதுபோல் தர்ம–ப்ரஹ்மஜிக்ஞாஸைகளுக்கு அங்காங்கிபாவம் சொல்லக்கூடிய பிரமாணங்கள் ஒன்றும் கிடையாது. 'दर्शपूर्णमासाभ्यामिष्ट्वा सोमेन यजेत' என்ற இடத்தில் क्त्वाप्रत्यय இருப்பதால் தர்சபூர்ணமாஸயாகம் செய்தவன்தான் ஸோமயாகம் செய்யவேண்டும் என்ற நியமம் கிடைக்கும். 'समानकर्तृकयोः पूर्वकाले' என்ற ஸூத்திரப்படி एककर्तृकत्वं அங்கே காணப்படுகிறதல்லவா ? இதுபோல் தர்மவிசாரம் செய்த பிறகுதான் பிரஹ்மவிசாரம் செய்யவேண்டும் என்ற நியமம் கிடையாது. धर्मजिज्ञासायाः प्रागपि अधीतवेदान्तस्य ब्रह्मजिज्ञासोपपत्तेः என்று பாஷ்யகாரரே உபநிஷத்துக்களை அத்யயனம் செய்துவிட்டால் பிரஹ்மவிசாரம் செய்யலாம், மற்ற வேத பாகங்களின் அர்த்தவிசாரம் தேவையில்லை என்று சொல்கிருரல்லவா ?

அந்த இடத்தில் பூர்வபக்ஷியானவன் அதிக்ருதாதிகாரத்தை மறு படியும் ஸாதிப்பதற்காக *ப்ரஹ்மசர்யம் ஸமாப்ய க்ருஹீ பவேத் க்ருஹாத் வநீ பூத்வா ப்ரவ்ரஜேத்* (ब्रह्मचर्यं समाप्य गृही भवेत् गृहाद्वनी भूत्वा प्रव्रजेत्) என்ற ஜாபால சுருதி வாக்கியத்தைக்காட்டி ஆசிரம ஸமுச்சய பக்ஷத்தை ஆதரித்து *ஆச்ரமாதாச்ரமம் கச்சேத்* (आश्रमादाश्रमं गच्छेत्) என்ற நியாயப்படி க்ரமமாக ப்ரஹ்மசர்யத்திலிருந்து கிருஹஸ்தாசிரமமும் அதிலிருந்து வான ப்ரஸ்தமும் அதிலிருந்துதான் ஸந்யாஸ ஆசிரமமும் பெற வேண்டும் என்பதைக் காட்டுகிருர்.

பூர்வபக்ஷிகள் 'ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत्' *ருணனி த்ரீண்யபாக்ருத்ய மநோ மோக்ஷே நிவேசயேத்* என்று முன் சொன்ன

சுலோகத்தையும், இதற்கெல்லாம் மூலமான 'जायमानो वै ब्राह्मणः' (ஜாயமாநோ வை ப்ராஹ்மண:) என்ற சுருதி வாக்கியத்தையும், மற்றும் பல சுருதிகளையும் காட்டி க்ரமமாகத்தான் ஸந்யாஸம் பெற வேண்டும் என்று வாதம் செய்கிறார்கள்.

குப்புஸ்வாமி:– அந்த சுருதி வாக்கியப்படி பார்த்தால் பிறந்த உடனே தேவ–ரிஷி–பித்ரு ருணங்கள் பிராஹ்மணனை வந்து அடைகிறதாகவல்லவோ தோன்றுகிறது! அதை நிவ்ருத்தி செய்யாமல் ஸந்யாஸம் பெறுவது நியாயமாகாதே ?

லேககர்:– அதற்கும் பாமதீகாரரே பதில் கூறுகிறார்:–

''अत एव न ब्रह्मचारिणः ऋणानि सन्ति, येन तदपाकरणार्थं कर्मानुतिष्ठेत् । एतदनुरोधाच्च 'जायमानो वै ब्राह्मणः' इत्यत्र जायमान इत्यस्य गृहस्थः संपद्यमानः इति व्याख्येयम्; अन्यथा 'यदि वेतरथा ब्रह्मचर्यादेव प्रव्रजेत्' इति श्रुतिर्विरुध्येत ।''

(*அத ஏவ ந ப்ரஹ்மசாரிண: ருணானி ஸந்தி; யேந தத பாகரணார்த்தம் கர்ம அநுதிஷ்டேத்* | *ஏததநுரோதாச்ச ''ஜாயமாநோ வை ப்ராஹ்மண:'' இத்யத்ர ''ஜாயமாந:'' இத்யஸ்ய ''க்ருஹஸ்த: ஸம்பத்யமாந:'' இதி வ்யாக்யேயம், அந்யதா ''யதி வேதரதா ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்'' இதி ச்ருதி: விருத்யேத* |)

அதாவது (जायमानः) *ஜாயமாந:* என்பதற்கு மனிதன் பிறக்கும்பொழுதே ருணங்கள் வந்து சேருகின்றன என்று அர்த்தம் கூற இயலாது. (जायमानः) ஜாயமாந: என்பதற்கு (गृहस्थः संपद्यमानः) ''*க்ருஹஸ்த: ஸம்பத்யமாந:*'' ''கிருஹஸ்தனாகும் பொழுது'' என்றுதான் அர்த்தம் கொள்ளவேண்டும் என்று பாமதீகாரரே அடித்துக் கூறுகிறார். இவ்விதமில்லாமல் ''பிறந்த மாத்திரத்தில்'' என்ற அர்த்தத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டால் (ब्रह्मचर्यादेव प्रव्रजेत्) *ப்ரஹ்மசர்யாதேவ ப்ரவ்ரஜேத்* என்ற சுருதிக்கு விரோதம் உண்டாகும் அல்லவா? என்று காரணமும் காட்டுகிறார். ஆகையால் அதிக்ருதாதிகாரம் என்ற வியாஜத்தை வைத்துக்கொண்டு கிருஹஸ்த ஆச்ரமத்திற்குப் பிறகுதான் ஸந்யாஸம் பெறவேண்டும் என்ற நியமம் இல்லை என்பதை பாஷ்யகாரரும் பாமதீகாரரும் ஒப்புக்கொண்டதாக ஏற்படுகிறதல்லவா ?

குப்புஸ்வாமி:– ஸ்ரீநிவாஸன் கேட்ட ஒரு ஸந்தேஹத்துக்கு விடை கிடைத்துவிட்டது. மற்றவைகளுக்கு ஸந்நிதானத்தின் இன்றைய உபதேச மொழிகளிலிருந்து பதில் ஒன்றும் கிடைத்ததாகத் தெரியவில்லையே ?

லேககர்:– நீங்கள் வந்து இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. நீங்களோ ஒரு வாரம் தங்குவதாக ஸந்நிதானத்திடம் வாக்களித்திருக்கிறீர்கள். இன்னும் ஐந்து நாட்கள் இருந்துதானே ஊருக்குப் போகப்போகிறீர்கள். அதற்குள் நமது ஸ்ரீநிவாஸனது கேள்விகளுக்கெல்லாம் பதில் வராமலா இருக்கப்போகிறது? கட்டாயம் பதில் வரும்.

இதைக் கேட்டுப் பரம ஸந்தோஷமடைந்த அந்தப் பிதா புத்திரர்கள் (ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யரும் குப்புஸ்வாமி அய்யரும்) திரும்பித் தம் ஜாகைக்குச் சென்று சாரதா சந்திரமௌலீசுவர தரிசனம் செய்து விச்ராந்தி செய்துகொண்டு மறுநாள் ஸாயங்காலம் வழக்கம்போல் ஸந்நிதானத்திடம் வந்தார்கள். அன்றும் ஸ்ரீநிவாஸனுடன் நாங்கள் காலபைரவாலயத்துக்குச் சென்ரேம். அன்று நடந்த அந்தாதி சுலோகங்களும் வைராக்ய பரமாகவே அமைந்து இருந்தன. ஸ்ரீஸந்நிதானம் அப்பய்ய தீக்ஷிதரின் மானஸோல்லாஸத்திலிருந்து அழகான ஒரு சுலோகத்தை அந்தாதி மத்தியில் எடுத்துக் கூறினார்கள். குப்புஸ்வாமி அய்யரும் சந்திரசேகரய்யரும் கேட்டுக் கொண்டபடி அதன் அர்த்தத்தையும் கொஞ்சம் விளக்கிக் கூறினார்கள். சுலோகம் பின்வருமாறு:–

अयि भ्रातश्चेतः परममुपदेशं शृणु मम
स्मरारेर्चायां पटुषु करणेषु स्मर फलम् ।
तवैषां प्रेष्याणामुपरतिकृति श्रान्तिमहति
त्वयैकेन श्वासप्रशमसमये किंनु सुकरम् ॥

அயி ப்ராத: சேத: பரமமுபதேசம் ச்ருணு மம
ஸ்மராரேரர்சாயாம் படுஷு கரணேஷு ஸ்மர பலம் ।
தவைஷாம் ப்ரேஷ்யாணும் உபரதிக்ருதி ச்ராந்தி மஹதி
த்வயைகேந ச்வாஸப்ரசமஸமயே கிம் நு ஸுகரம் ॥

ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷிதர் தன் மனதைப்பார்த்துக் கூறுகிரூர். ''ஓ மனமே! நீ என் தம்பியல்லவா? (ஆத்மாவுக்கு மனது

தேஹாதிகளைவிட அந்தரங்கமாகையால் அதைத் தம்பி என்று ஸம்போதனம் செய்கிருர் போலும்.) நான் சொல்லும் உபதேச மொழிகளைக் கேட்கமாட்டாயா ? உன் வேலைக்காரர்களாகிய இந்தக் கண் முதலான ஞானேந்திரியங்களும் வாக் முதலான கர்மேந்திரியங்களும் திடமாயிருக்கும்போதே அந்தப் பரமேசுவரனைப் பூஜை செய்ய முயற்சி செய். ஒரு பில்வதளம் பரமசிவனது சிரஸில் அர்ச்சிக்கப்பட்டால் அதற்கு எவ்வளவு பலன் உண்டு என்பதை இப்பொழுதே உணர்ந்து கொள்வாய். உன் வேலைக்காரர்களாகிய இந்திரியங்கள் எல்லாம் அடங்கி நீ ஒருவன் மாத்திரம் மிஞ்சக்கூடிய சமயத்தில், அதாவது மரண அவஸ்தையில், நீ தனியாக என்ன புண்ணியகார்யங்கள் செய்யமுடியும் ? ஆகையால் இப்பொழுதே பரமேசுவர ஆராதனம் செய்ய முயற்சிக்க வேண்டும்.''

ஸந்நிதானம் இந்த சுலோகத்தின் தாத்பர்யத்தை வெகு அழகாக எடுத்துரைத்த பிறகு எங்களைப் பார்த்து இதற்கு அடுத்துள்ள சுலோகங்களைச் சொல்லும்படி உத்தரவிட்டார்கள். லேககர் அந்த சுலோகங்களைக் கூறினர். அப்பொழுது,

इदानीमत्यल्पेष्वपि हृदय कार्येष्वतिमहान्
इयान्व्यासंगस्ते न कलयसि येन स्मररिपुम् ।
अतिक्रन्दद्बन्धुव्यसनजलधावार्तिसमये
कियानागन्ता ते शिव शिव हतोस्म्येव भवता ॥

இதாநீமத்யல்பேஷ்வபி ஹ்ருதய கார்யேஷ்வதிமஹான்
இயான் வ்யாஸங்கஸ்தே ந கலயஸி யேந ஸ்மரரிபும் ।
அதிக்ரந்தத் பந்துவ்யஸந ஜலதாவார்த்தி ஸமயே
கியாநாகந்தா தே சிவ சிவ ஹதோஸ்ம்யேவ பவதா ॥

என்ற சுலோகத்தைக் கூறினதும் அதன் கருத்தையும் ஸந்நிதானமே எடுத்துரைத்து எங்களெல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்து விட்டார்கள். ''ஓ மனமே! மிகவும் ஸாவகாசமாயிருக்கக்கூடிய இந்த ஸந்தர்ப்பத்தில் பரமேசுவரனை தியானம் செய்யவோ பூஜிக்கவோ உனக்கு வேண்டிய அனுகூலங்கள் இருந்தும் அதைச் செய்யாமல் மிகவும் துச்சமான கார்யங்களில் விஷயசுகத்துக்காக ஈடுபட்டுக் கொண்டு காலத்தை வீணுக்குகிருயே. கடைசி காலத்தில் பந்துக்களெல்லாம் உன்னைச் சூழ்ந்துகொண்டு ஒப்பாரி

வைக்கும்பொழுது பரமேசுவரனை நினைக்க அவகாசம் இருக்குமா ? நீயே யோசித்துப்பார்.''

இதைக் கூறும்போது ஸ்ரீ மஹாஸந்நிதானம் நம் ஸ்ரீநிவாஸனையே குறிப்பாக கவனித்து வந்தார்கள். மேலும் இந்த மானஸோல்லாஸ சுலோகத்தின் அர்த்தத்தை விளக்கும்போது பல திருஷ்டாந்தங்களையும் வேறுபல ஸமயோசித சுலோகங்களையும் எடுத்துக்காட்டினார்கள். அதில் அப்பய்ய தீக்ஷிதர் இயற்றிய ஆத்மார்ப்பண ஸ்துதியிலுள்ள,

प्राणोत्क्रान्तिव्यतिकरदलत्सन्धिबन्धे शरीरे
प्रेमावेशप्रसरदमिताक्रन्दिते बन्धुवर्गे ।
अन्तः प्रज्ञामपि शिव भजन्नन्तरायैरनन्तै-
राविद्धोऽहं त्वयि कथमिमामर्पयिष्यामि बुद्धिम् ॥

ப்ராணோத்க்ராந்திவ்யதிகர தள த்ஸந்திபந்தே ஶரீரே
ப்ரேமாவேஶப்ரஸரதமி தாக்ரந்திதே பந்துவர்கே ।
அந்த:ப்ரஜ்ஞாமபி ஶிவ பஜந்நந்தராயைரநந்தை -
ராவித்தோऽஹம் த்வயி கதமிமாமர்பயிஷ்யாமி புத்திம் ॥

என்ற ஓர் அழகான சுலோகத்தையும் சேர்த்து அதன் கருத்தையும் விளக்கினார்கள். சிவபக்த சிரோமணியான ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர் பரமேசுவரனை நேரில் கண்டு பேசுவது போல் தம் மனோநிலையைக் காட்டுகிறார்.

यं यं वापि स्मरन् भावं त्यजत्यन्ते कलेबरम् ।
तं तमेवैति कौन्तेय सदा तद्भावभावितः ॥

யம் யம் வாபி ஸ்மரன் பாவம் த்யஜத்யந்தே களேபரம் ।
தம் தமேவைதி கௌந்தேய ஸதா தத்பாவபாவித: ॥

என்ற கீதா சுலோகபிரகாரம் கடைசி காலத்தில் உன் நினைவு ஏற்படுமானால் நான் கட்டாயம் உன்னையே வந்து அடைந்துவிடலாம். ஆனால் அவ்விதம் ஏற்பட முடியாதபடி பல இடையூறுகளும் வந்துவிடுமே! அதாவது இந்தப் பௌதிக சரீரத்தைவிட்டு உயிர் பிரியும் ஸமயத்தில், இந்த சரீரத்தில் அதிக பிரேமை கொண்டவர்கள்போல் நடிக்கும் பந்து ஜனங்கள், தங்களது அழுகை

சத்தத்தால் உன் ஸ்மரணம் வராமலே செய்துவிடுவார்களே! ஹே ஈசா! அது ஸமயம் நான் என் மனதை உன்னிடம் செலுத்த முடியுமா ?

மானஸோல்லாஸத்தில் இன்னொரு சுலோகம் இதே கருத்தைக் காட்டுகிறது:–

अनापृच्छय ज्ञातीननिशरुदितोच्छूननयनान्
गतिः का नस्तातेत्यतिकरुणमग्रे विलुठितान् ।
अवश्यं गन्तव्यं खलु तदहितानामपि पुरः
तदद्यैव स्नेहं त्यज हृदय तेष्वर्च गिरिशम् ॥

அநாப்ருச்சய ஞாதீநநிசருதிதோச்சூநநயநான்
கதி: கா நஸ்தாதேத்யதிகருணமக்ரே விலுடிதான் ।
அவச்யம் கந்தவ்யம் கலு ததஹிதாநாமபி புர:
ததத்யைவ ஸ்நேஹம் த்யஜ ஹ்ருதய தேஷ்வர்ச்ச கிரிஶம் ॥

அதாவது, ''ஹே மனமே ! மரண ஸமயத்தில் உன்னைச் சேர்ந்த புத்ராதிகள் உனது சரீர வியோகத்தால் வருந்தி 'ஓ அப்பா, அம்மா' என்று கதறிக் கொண்டு எதிரில் விழுந்து புரளும் பொழுது அவர்களுக்கு ஓர் (ஸமாதான) ஆறுதல் மொழியாவது உன்னால் அளிக்க முடியுமா ? போய் வருகிறேன் என்றாவது சொல்லிக்கொள்ள முடியுமா ? யம பாசம் இறுகி உன்னை இழுத்துக்கொண்டுபோனால் உனக்கு விருப்பமில்லாத இடத்திற்குக்கூட (யம ஸந்நிதிக்கு) நீ கட்டாயம் போகும்படி நேருமே ! நீ வேண்டாமென்றாலும் அது உன்னை விடாதே ! ஆகையால் ஹே மனமே ! அந்த புத்ராதிகளிடமுள்ள பாசத்தை நீ என்றாவது விட்டுத்தான் தீரவேண்டும். ஆகையால் அதை இப்பொழுதே விட்டு ஸாக்ஷாத் பரமேசுவரனை உபாஸித்து வரக்கூடாதா ?'' என்று தீக்ஷிதர் மனமுருகி வேண்டுகிறார். உலகத்தில் தினமும் நடக்கும் விஷயத்தையே தத்ரூபமாக இந்த சுலோகம் மூலம் காட்டுகிறார்.

நமது ஸந்நிதானம் முன் கூறிய பிரகாரம் பல சுலோகங்களைக் கூறி அதன் கருத்தை விளக்கி வருகையில், அடிக்கடி ஸ்ரீநிவாஸனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்துக்கொண்டே வந்தார்கள். அவ்விதமே மற்றவர்களுடைய முகக் குறிகளையும் ஜாடைகளையும் பார்த்துக்கொண்டே வந்தார்கள். நாங்கள்

எல்லோருமே அவரது உபதேச மொழிகளில் தன்மயமாகவே லயித்திருந்ததைப் பார்த்து மறுபடியும் மானஸோல்லாஸத்தையே தொடர்ந்து அதிலுள்ள

कियन्तो नाभूवन् हृदय परमप्रेमविषयाः
पुराजन्मस्वद्य क्व कथमिति जानासि किमु तान् ।
वृथा मोहं बन्धुष्वहितपरिणामं त्यज सखे
यदासंगाद्दोषात् स्मरसि न कदापि स्मररिपुम् ॥

கியந்தோ நாபூவன் ஹ்ருதய பரம ப்ரேம விஷயா:
புராஜந்மஸ்வத்ய க்வ கதமிதி ஜாநாஸி கிமு தான் |
வ்ருதா மோஹம் பந்துஷ்வஹித பரிணமம் த்யஜ ஸகே
யதாஸங்காத் தோஷாத் ஸ்மரஸி ந கதாபி ஸ்மரரிபும் ||

என்ற சுலோகத்தையும் கூறி அதன் அர்த்தத்தையும் விளக்கினுர்கள். ''என் மனைவி, என் புத்திரன் என்றெல்லாம் அபிமானமோ பாசமோ வைப்பதாயிருந்தால் இந்த ஜன்மாவில் உள்ளவர்களிடம் மாத்திரம் அதை வைப்பது பக்ஷபாதமாகாதா? முன் ஜன்மாக்களில் புத்ரபார்யாதி ரூபமாயிருந்த ஜீவர்களிடமும் அவ்வித அன்பை வைக்க வேண்டாமா ? முன் பிறவிகளில் இருந்த புத்ரபார்யாதிகள் இப்பொழுது எங்கே, எவ்விதம் இருக்கிருர்கள் என்பதை நாம் அறிய முடியுமா ? அறிந்தாலும் அவர்களிடம் அன்பு செலுத்த முடியுமா ? ஆகையால் புத்ராதிகளிடம் வீணுக வைக்கப்பட்ட ஸ்நேஹ பாசத்தை விட்டு அந்த அன்பைப் பரமேசுவரனிடம் செலுத்தக் கூடாதா ? ''

अनित्यानि शरीराणि विभवो नैव शाश्वतः ।
नित्यं संनिहितो मृत्युः कर्तव्यं दैवचिन्तनम् ॥

அநித்யானி ஶரீராணி விபவோ நைவ ஶாச்வத: |
நித்யம் ஸந்நிஹிதோ ம்ருத்யு: கர்த்தவ்யம் தைவசிந்தனம் ||

(சரீரமும் ஐச்வர்யமும் எப்பொழுதும் நம்மிடம் இருக்காது; சாச்வதமில்லை; மரணம் நம் அருகிலேயே இருக்கிறது. எந்த நிமிஷமும் நேரலாம்; இதை ஆலோசித்து உடனேயே ஈசுவர ஸ்மரணம் செய்ய வேண்டும்.)

என்ற நியாயப்படி எல்லா பாசங்களேயும் விட்டு பகவானே உபாஸிப்பதுதான் உசிதமாகும் என்று நமது ஸந்நிதானம் பேசிக் கொண்டு வரும்பொழுதே ஓர் ஆச்சர்யம் நடந்தது.

காலபைரவ ஆலயம் மலே உச்சியில் இருப்பதால் அங்கிருந்து பார்த்தால் சிருங்கேரி கிராமம், வயல்கள், காடுகள் எல்லாம் நன்ருகப் புலப்படும் என்பதை அங்கு சென்றவர்கள் அநுபவித்திருக்கலாம். அப்படியே அன்றைய தினம் சிருங்கேரி கிராம மூலேயில் ச்மசான கட்டத்தில் ஒரு சவ ஊர்வலம் வந்து கொண்டிருந்தது எல்லோர் கண்ணிலும் பட்டுவிட்டது. காலபைரவக் குன்றின் அடிவாரத்தில் துங்கா நதியும் அதன் மறுகரையில் ச்மசானமும் இருப்பது அன்றுதான் எங்களுக்குத் தெரிய வந்தது. பக்கமாயிருந்தாலும் காலபைரவ ஆலயத்தைச் சுற்றி மரங்களும் புதர்களும் அடர்ந்திருந்தபடியால் ஸந்நிதானமோ நாங்களோ நிற்பதை அந்த ஜனங்கள் காண முடியாது.

அந்த ஊர்வலம் பக்கத்தில் வந்தவுடன் அது ஒரு ஸாவுக்காரரின் மரண ஊர்வலம்தான் என்பது ஸந்நிதானத்துக்கு எப்படியோ விளங்கிவிட்டது. அவரது பெயரையும் கூறிவிட்டார்கள். ''ஆஹா! இந்த மனிதன் எவ்வளவு சுகமாக வாழ்ந்து வந்தார்! இந்த இளம் வயதில்கூட அவரையும் தர்மராஜா விடவில்லேயே! தர்மராஜன் பணக்காரன்–ஏழை–இளமை–முதுமை– என்பதை பார்க்கமுடியுமா ?'' என்று கூறி இந்த லேககரைப் பார்த்தார். உடனே அவரது இங்கிதம் தெரிந்து கொண்ட இந்த லேககரும் ஸந்நிதானம் அந்தர்முகாவஸ்தையில் இருந்தபோது சொன்ன ஒரு சுலோகத்தை எடுத்துக் கூறினர்.

धनं वा धान्यं वा भवतु बहुशो भोग्यमपि वा
विरामे को ब्रूते ननु चिरमहं निर्वृत इति ।
प्रकोपप्रोद्भिन्नप्रकटयमदंष्ट्रां तु पुरतः
प्रपश्यन् किं कुर्यात्प्रसभमवसाने प्रभुरपि ॥

தனம் வா தான்யம் வா பவது பஹுசோ போக்யமபி வா
விராமே கோ ப்ரூதே நனு சிரமஹம் நிர்வ்ருத இதி ।
ப்ரகோப ப்ரோத்பிந்ந ப்ரகட யம தம்ஷ்ட்ராம் து புர த:
ப்ரபச்யன் கிம் குர்யாத் ப்ரஸபமவஸாநே ப்ரபுரபி ॥

இதன் அர்த்தம் பின்வருமாறு:- ஒரு மனிதனுக்குப் பூர்வ புண்ணியவசத்தால் யதேஷ்டமாக தனதான்யாதி ஐச்வர்யங்களும் போக்ய பதார்த்தங்களும் இருந்து அவன் பரமஸுகியாக இருந்தபோதிலும், கடைசிகாலத்தில் மரண தேவதையுடன் போராடும்பொழுது, அவன் ஸுகி என்று யாராவது கருத முடியுமா அல்லது கூற முடியுமா ? மஹா பிரபுவாக இருந்தாலும், சக்கரவர்த்தியாகவே இருந்தாலும், கடைசி காலத்தில் யமகிங்கரர்கள் எதிரில் வந்து மீசை துடிக்க, கோரைப்பல் வெளியே தெரிய, பயங்கரமாக நிற்கும் பொழுது, பாசக்கயிற்றை இறுக்கும்பொழுது யாரால் என்னதான் செய்யமுடியும் ?

இதைக் கேட்டவுடன் ஸந்நிதானம் ''இதைவிட அழகான சுலோகம் நமது பகவத்பாதாளது ப்ரபோதஸுதாகரத்தில் இருக்கிறதே ! அதையல்லவா இந்த ஸந்தர்ப்பத்தில் சொல்ல வேண்டும்!'' என்று சொன்னவுடன் நாங்கள் எல்லோரும் ஒன்றும் தெரியாமல் விழிக்கலானோம். உடனே ஸ்ரீநிவாஸன் கூறலானான்.

यो देहः सुप्तोऽभूत् सुपुष्पशय्योपशोभिते तल्पे ।
संप्रति स रज्जुकाष्ठैः नियन्त्रितः क्षिप्यते वह्नौ ॥

யோ தேஹ: ஸுப்தோऽபூத் ஸுபுஷ்பஶய்யோபஶோபிதே தல்பே ।
ஸம்ப்ரதி ஸ ரஜ்ஜு காஷ்டை: நியந்த்ரித: க்ஷிப்யதே வஹ்நௌ ॥

(நேற்றுவரை மலர் பரப்பிய படுக்கையில் எந்த தேஹம் தூங்கியதோ, அதுவே இப்பொழுது கயிறுகளாலும் கம்புகளாலும் கட்டப்பட்டு நெருப்பில் போடப்படுகிறது.)

ஸமயோசிதமாக இதன் கருத்தை ஸந்நிதானமே விளக்கிக் கூறினார்கள். அதாவது: ''நேற்று இரவுவரையில் இந்த ஸாவுக்காரர் பரமஸுகியாகவே இருந்திருக்கிறார். ஏதோ மாரடைப்பினால் திடீரென்று இறந்து விட்டதனால் அவரைச் சேர்ந்த பந்துக்களெல்லோரும் கதறிக்கொண்டு காட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் பார்த்தீர்களா ? இவ்விதம் நேற்று இரவில்கூட புஷ்பங்களால் தூவப்பட்ட ஹம்ஸதூலதல்பத்தில் படுத்து ஸுகமாக நித்ரை செய்து ஆனந்தானுபவத்தில் மூழ்கிக்கிடந்த யௌவன

தசையிலுள்ள இதே ஸாவுக்காரரது உடல் இன்று மூங்கில்களுடன் கயிறுகளால் கட்டப்பட்டு பத்னீபுத்ராதிகளின் ஒப்பாரி அழுகைகளுடன் இந்த மயான பூமிக்கு வரும்படி ஏற்பட்டுவிட்டதல்லவா ! நெருப்பிலும் வைக்கப்படுகிறதல்லவா ! எல்லோருக்கும் இதே கதிதானல்லவா ஏற்படப்போகிறது. ஆகையால் नित्यं संनिहितो मृत्युः कर्तव्यो धर्मसंचयः (*நித்யம் ஸந்நிஹிதோம் ருத்யு: கர்த்தவ்யோ தர்மஸஞ்சய:* – எப்பொழுதும் மரணம் நெருங்கி இருக்கிறது. தர்மத்தைச் செய்து சேகரிக்கவேண்டும்.) गृहीत इव केशेषु मृत्युना धर्ममाचरेत्, (*க்ருஹீத இவ கேஶேஷு ம்ருத்யுநா தர்மமாசரேத்* – கேசங்களில் யமனுல் பிடிக்கப்பட்டவன்போல் தர்மம் செய்ய வேண்டும்.) என்ற வாக்கியங்களின்படி நாம் நமது ஸ்வதர்மானுஷ்டானத்தில் ஈடுபடுவதுடன் இவ்விதத் துன்பங்கள் மறுபடியும் வராமலிருப்பதற்காக ஆத்ம ஸாக்ஷாத்காரத்தையும் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு ஜன்மஸாபல்ய மேற்பட்டதாகக் கருதமுடியும்.'' இவ்விதம் உபதேசமொழிகளைக் கூறிக் கொண்டே ஸ்ரீநிவாஸனது முக ஜாடையையும் நன்ருகக் கவனித்துக்கொண்டு வந்தார்கள்.

இதற்குள் அந்த ச்மசானத்திலிருந்து ஓர் அலறல் சப்தம் கேட்டது. அது பெண் குரல். அந்த ஸாவுக்காரர் சிறு வயதாயிருக்கும்பொழுதே இந்த கதி ஏற்பட்டதைப்பார்த்த அவரது தாயாரின் தீனக்குரல் அது. அந்த அம்மாள் புலம்பினுள்; ''வெகுநாள் தவமிருந்து பல விரத உபவாசங்கள் செய்து கிடைத்த இந்த ஒரு பிள்ளையும் தக்கவில்லையே! இவன் பிறக்காமலிருந்தால்கூட இவ்விதம் வருந்த இடமில்லாமல் போயிருக்குமே! பிறந்து கல்யாணமும் செய்து கொண்டு ஒரு பெண்ணையும் நிர்க்கதியாக்கிவிட்டு எங்களை எல்லாம் ஏமாற்றிவிட்டுச் செல்கிருனே ! புத்திரனைப் பெறுவதாலுண்டான சுகம் இவ்வளவுதான ? இதற்காககவா நான் பல விரதங்களாலும் உபவாசங்களாலும் உடம்பை வாட்டி வந்தேன்?'' என்றெல்லாம் சொல்லிப் புலம்ப ஆரம்பித்து விட்டாள் அந்த ஸாவுக்காரரது தாயார். இதையெல்லாம் நேரில் பார்த்த ஸ்ரீநிவாஸன், ''ஸம்ஸாரம் இவ்வளவுதான ? எனக்கு இது வேண்டவே வேண்டாம்'' என்று முணுமுணுத்தது இந்த லேககரது காதில் விழுந்தது. ஸந்நிதானமும் முகஜாடையைப் பார்த்து அவனது நோக்கத்தை ஒருவாறு தெரிந்துகொண்டார்கள். தான்

செய்துவரும் உபதேசங்கள் தம் உத்தேசப்படியே ஸ்ரீநிவாஸனிடம் பலித்து வருவதைக் கண்டு மகிழ்ந்தார்கள். ஸ்ரீசந்திரசேகரய்யரும் குப்புஸ்வாமி அய்யரும் இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்தும், ஸந்நிதானத்தின் ஞானமொழிகளைக் கேட்டும் கண்ணீர்விட்டுக் கொண்டு அழுதே விட்டார்கள். ''இந்த சோக நாடகத்தைப் பார்த்த பிறகு யாராவது புத்திர பாக்கியம் வேண்டுமென்று நினைப்பார்களா ? நீங்களே சொல்லுங்கள்!'' என்று ஸந்நிதானம் கூறி வேறு சில உதாஹரணங்களையும் காட்டி,

> सर्वगुणैरुपपन्नः पुत्रः कस्यापि कुत्रचिद्भवति ।
> सोऽल्पायू रुग्णो वाऽप्यनपत्यो वा तथापि खेदाय ॥
>
> *ஸர்வகுணைருபபன்ன: புத்ர: கஸ்யாபி குத்ரசித் பவதி* ।
> *ஸோऽல்பாயூ ருக்ணோ வாऽப்யநபத்யோ வா ததாபி கேதாய* ॥

(எல்லா நற்குணங்களும் நிரம்பிய புத்திரன் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. எங்கேயோ யாரோ ஒருவனுக்குத்தான் கிடைக்கிறது. அப்படி அரிதாகக் கிடைத்த புத்திரனும் அல்பாயுஸ்ஸாகவோ, பிணியுள்ளவனுகவோ குழந்தை இல்லாதவனுகவோ ஆகி விடுகிறுன். ஆகவே அந்தப் புத்திரனுல் தாய் தந்தையர்களுக்கு இன்பம் இல்லை, துன்பமேதான்.) என்ற பிரபோதஸுதாகர சுலோகத்தையும் கூறி அதன் கருத்தையும் விவரிக்கவே புத்ரபாக்கியம் வேண்டுமென்ற ஆவலுடன் வந்திருந்த ஸ்ரீமான் சந்திரசேகர அய்யர் மனம் தெளிந்து நிம்மதி யடைந்துவிட்டார். குப்புஸ்வாமி அய்யரும் ஸமாதானமடைந்துவிட்டதாகவே அவரது முகக் குறியிலிருந்து தெரியவந்தது. ஆனுல் இந்த நிகழ்ச்சிகளால் அவர்களை ஸமாதானப்படுத்துவது மாத்திரம் ஸந்நிதானத்தின் நோக்கமில்லை; ஸ்ரீநிவாஸனுக்கும் இந்த லேககருக்கும் மனதிலிருந்த பல ஸந்தேஹங்களைப் போக்கி அவ்விருவர்களையும் நிவிருத்தி மார்க்கத்தில் திருப்புவதே ஸந்நிதானத்தின் அந்தரங்க நோக்கமாய் இருக்கவேண்டும். இது விஷயம் பின்னுல் நடந்த பல நிகழ்ச்சிகளால் பிறகுதான் எங்களுக்குத் தெரியவந்தது.

ஸந்நிதானம் இந்த விஷயத்தை இத்துடன் நிறுத்தி விட்டு மறுபடியும் அந்தாதி சுலோகம் சொல்லும்படி உத்தரவிட்டார்கள். 'भज विश्वनाथं' (*பஜே விச்வநாதம்*) என்று ஸ்ரீநிவாஸன் சுலோகம்

கூறி முடித்திருந்தபடியாலும், தகாரத்தில் ஆரம்பிக்கும் சுலோகம் இல்லாதபடியாலும் முதல் அக்ஷரமான அகாரத்திலேயே ஆரம்பிக்கும்படி ஏற்பட்டது. உடனே லேககர்

अन्तेवसतां माभूद्भयमिति संपूर्णमर्त्यभावधरः ।
दयया यदात्मनाऽभून्नरसिंहस्तं भजे नृसिंहगुरुम् ॥

அந்தே வஸதாம் மா பூத் பயமிதி ஸம்பூர்ண மர்த்யபாவ தர: ।
தயயா யதாத்மநாऽபூத் நரஸிம்ஹஸ்தம் பஜே ந்ருஸிம்ஹகுரும் ॥

(அருகில் வசிக்கும் தம் சிஷ்யர்களுக்கு பயம் உண்டாகக் கூடாது என்று, தயவினுல் நரஸிம்ஹர் முழுவதும் மனித உருவம் தாங்கி, எந்த ஸ்வரூபமாக விளங்கினுரோ, அந்த ந்ருஸிம்ஹ குருவை ஸேவிக்கின்றேன்.) என்ற சுலோகத்தைச் சொன்னுர்.

ஸ்ரீஸந்நிதானம்:– இந்த சுலோகம் யார் இயற்றியது ?

லேககர்:– ஸந்நிதானம் அந்தர்முகாவஸ்தையில் இருந்த பொழுது வெளிவந்துள்ள சுலோகங்களில் இதுவும் ஒன்று.

ஸ்ரீஸந்நிதானம்:– சரி, இத்துடன் சேர்ந்த மற்ற சுலோகங்களும் தெரியுமா ?

லேககர்:– எல்லாம் முகஸ்தமாக இல்லை.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானுல் உன் குறிப்புப் புஸ்தகத்தில் எல்லா சுலோகங்களும் இருக்கின்றனவா ?

லேககர்:– ஏதோ கேள்விப்பட்ட வரையில்தான் எழுதி வைத்திருக்கிறேன். அது பூர்த்தியாகாமலேயே இருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– ஏன் எல்லா சுலோகங்களையும் குறித்து வைக்கவில்லை?

லேககர்:– பகல் வேளையில் மட்டும் அதிலும் சில ஸமயம்தான் அந்த அமிருத மொழிகளைக் கேட்பதற்கு அவகாசம் கிடைக்கும். மற்றவைகளைக் கேட்கவே முடியாமல் போய்விட்டது.

ஸ்ரீஸந்நிதானம்:– மற்ற சுலோகங்களைக் கேட்க முடியாதபடி அப்படி என்ன இடையூறு ஏற்பட்டது ?

லேககர்:– அந்தர்முகாவஸ்தையின்போது, ஸந்நிதானம் இருக்கும் அறைக்குப் பக்கத்திலேகூட ஒருவரையும் விடமாட்டார்களே காவலாளர்கள் !

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானுல் சில சுலோகங்களை மாத்திரம் எப்படி கேட்கமுடிந்தது ?

லேககர்:– சந்திரமௌலித்தொட்டி அறையில் ஸந்நிதானம் இருந்தபொழுது பலத்த குரலில் கூறப்பட்ட சில சுலோகங்கள் மாத்திரம் காதில் விழும். உடனே அவைகளைக் குறித்துக் கொள்வது என் வழக்கமாகையால் இவ்வளவாவது கிடைத்தது.

ஸ்ரீஸந்நிதானம்:– சந்திரமௌலி தொட்டியிலிருந்து இரைந்து கத்தினுலும்கூட அது கிராமத்தில் இருப்பவர்களுக்குக் காதில் விழ முடியாதே ?

லேககர்:– இதற்காகவே நான் தர்மசாலையில் தங்கிக்கொண்டு பின் பக்கத்திலேயே ஸதா கவனித்துக் கொண்டிருப்பேன். அதனுல் தான் சில உபதேச மொழிகளையாவது கேட்கும்படி நேர்ந்திருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானுல் தர்மசாலையில் வசித்து வந்த மற்றவர்களது காதிலும் இந்த சப்தங்கள் விழுந்திருக்கக் கூடுமல்லவா ?

லேககர்:– இதில் விசேஷ கவனமில்லாதவர்களுடைய காதுகளில் இந்த சப்தங்கள் விழுந்த போதிலும் மற்ற சப்தங்களைப் போல் இதுவும் காற்றில் பறந்துபோய் விடும். கவனித்து ஊன்றிக் கேட்டால்தான் அந்த சப்தங்கள் விளங்கக் கூடும்.

ஸ்ரீஸந்நிதானம்:– அநேக யாத்ரிகர்கள் அந்த தர்மசாலையில் வந்து தங்குகையில் அவர்களில் யாராவது ஒருவர் கவனித்துக் கேட்டால் அது தெரியாமல் போய் விடுமா ?

லேககர்:– ஸ்வபாவமாகவே பஹிர்முக ப்ரவிருத்தியுள்ள ஜனங்களுக்கு இதைக் கவனிக்க வேண்டுமென்ற எண்ணமே உண்டாகாது. இந்த சப்தங்கள் காதில் விழுந்தாலும் அது அர்த்தமாகாது. ஏதோ சப்தம் என்று மாத்திரம்தான் தெரியும்.

ஸ்ரீஸந்நிதானம்:– யாத்திரிகர்களில் பலர் வித்வான்களாகவும் இருக்கலாமல்லவா ? அவர்களது காதில் விழுந்தால் அதை அவர்கள் கிரஹிக்கக் கூடுமல்லவா ?

லேககர்:– வித்வான்கள் தர்மசாலைக்கு வருவதே அபூர்வம். அப்படி வந்திருந்தாலும் அவர்கள் தர்மசாலையின் முன்பக்கம்தான் கவனம் செலுத்துவார்களே தவிர பின்பக்கத்தில் அவர்களது கவனம் செல்லாது. ஒரு வேளை கவனம் சென்றாலும் இந்தப் பாரிபாஷிக சப்தங்களின் அர்த்தம் அவர்களுக்குப் புரியாது.

ஸ்ரீஸந்நிதானம்:– உனக்கு மாத்திரம் அந்தப் பாஷை எப்படிப் புரிந்தது ?

லேககர்:– எனக்கும் முதலில் புரியாமல் தானிருந்தது. காலக்ரமத்தில் அந்தப் பரிபாஷையை ஒருவிதமாக நான் புரிந்து கொண்டுவிட்டேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– இந்த ஸமயம் நான் பேசுவதுபோல்தானே அப்போதும் பேசியிருப்பேன்.

லேககர்:– அதுதான் கிடையாது. இப்பொழுதெல்லாம் ஒரு தொடர்ச்சியுடன் பேசி வருவதால் இதை ஒரு குழந்தை கூடப் புரிந்து கொள்ள முடியும். ஆனால் அந்தர்முகாவஸ்தையில் இவ்விதமான தொடர்பு இருக்காது. ஒன்றுக்கொன்று ஸம்பந்தம் இல்லாதது போலவே அந்த வார்த்தைகள் வெளி வருமாகையால், அதை வித்வான்களாலும் கூட ஸரிவரப் புரிந்து கொள்ள முடியாது.

ஸ்ரீஸந்நிதானம்:– பரஸ்பர ஸம்பந்தம் இல்லாதிருந்தால் நீ மாத்திரம் அதை எப்படி ஸம்பந்தப்படுத்த முடியும் ? உன் கற்பனைகளுக்கு அதில் கலப்புண்டோ ?

லேககர்:– கற்பனைகள் கொஞ்சம்கூட கிடையாது. ஆனால் பரஸ்பர ஸம்பந்தமில்லாதது போல் தோன்றும் வார்த்தைகளுக்கு உசிதம் போல் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய திறமை யிருந்தால் தான் அதன் அர்த்தத்தைக் கண்டுபிடிக்கமுடியும்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானால் உன் கவிதா சக்தியைக் கொஞ்சம் உபயோகிப்பதுண்டோ ?

லேககர்:– கவிதா சக்தியை இதில் உபயோகப்படுத்துவதில்லே. ஆனல் கவிதா சக்தி இல்லாதவர்களால் பூர்வாபர வாக்கியங்களேயோ சுலோகங்களேயோ ஒன்று சேர்க்க முடியாது. ஆகவே கவிதா சக்தியும் கொஞ்சம் இதில் அவசியம்தான்.

ஸ்ரீஸந்நிதானம்:– கவிதா சக்தியை உபயோகிப்பதில்லே, ஆனல் அது கொஞ்சம் அவசியம் தான் என்ருல் இதன் கருத்து என்ன ?

லேககர்:– ஒரு சுலோகத்தின் முதல் பாகத்தையோ, அல்லது பூர்வார்த்தத்தையோ சொல்லி விட்டுப் பிறகு, வேறு ஏதாவது ஸம்பந்தமில்லாத சில வார்த்தைகளேக் கூறிவிட்டுப் பிறகு கால் மணியோ அரை மணியோ கழித்துத்தான் அந்த சுலோகத்தின் மற்ற பாகங்களோ அல்லது உத்தரார்த்தமோ வெளிவரும். அது வரையில் அதை எதிர்பார்த்துக்கொண்டே மிகுந்த ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். இதற்கிடையில் வந்த சுலோகங்களேயும், பேச்சுக்களேயும் ஸூசனேயாக சுருக்கெழுத்துப்போல் குறித்து வைத்துக் கொள்ளவேண்டும். இதில் சில சுலோகங்கள் பாதியிலேயே நின்று விடுவதுமுண்டு. ஒரு விருத்தத்தில் ஆரம்பித்த சுலோகத்துக்கு அதே விருத்தத்திலுள்ள உத்தரார்த்தம் வரும் வரையில் காத்துக் கொண்டிருக்கவும் நேரிடலாம்.

அவ்விதம் காத்திருந்து, பூர்வார்த்தத்துடன் ஒட்டக் கூடிய உத்தரார்த்தம் எப்பொழுது வரும் என்று பார்த்துக் கொண்டேயிருந்து, அது வந்தவுடன் அதை முன் கூறிய பூர்வார்த்தத்துடன் சேர்க்க வேண்டும். பூர்வார்த்தம் அனுஷ்டுப் விருத்தமானல் உத்தரார்த்தமும் அதே விருத்தமாயிருக்கவேண்டும் அல்லவா ? நடுவில் உபஜாதி விருத்தம் வந்தால் அதை அத்துடன் சேர்க்க முடியுமா ? அப்படியே வஸந்த திலகா (वसन्ततिलका) விருத்தத்தில் ஆரம்பித்த சுலோகத்தை மாலினீ (मालिनी) விருத்தத்துடன் சேர்க்கலாமா ? ஆகவே விருத்த (वृत्त) ஞானம் நன்ருயிருந்தால்தான் அவைகளே உசிதம்போல் சேர்க்க முடியும். இதற்கு கவிதா சக்தி யில்லாதவர்களால் முடியாதல்லவா. அதனல் தான் கவிதா சக்தியும் கொஞ்சம் வேண்டியிருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– நீ சொல்வதைப் பார்த்தால் கவிதா சக்தி மாத்திரம் இருந்தாலும் போதாது போலிருக்கிறதே? உசிதம் போல் அவைகளே ஒன்று சேர்ப்பதற்கு ஔசித்ய (औचित्य) ஞானமும் வேண்டியிருக்குமல்லவா ? ஆகையால் ஒரு

(पत्रिकासंपादक) பத்திரிகை ஆசிரியனுக்குள்ள திறமை இருந்தால்தான் அதை எல்லாம் நிர்வகிக்க முடியும் போலிருக்கிறது.

லேககா்:– ஸந்நிதான அநுக்ரஹம் ஒன்றுமட்டும் இருந்தால் போதும், வேறென்றுமே வேண்டாம்.

ஸ்ரீஸந்நிதானம்:– பிரபவ வருஷத்தில் வெளிவந்த 'ஆஸ்திக மதோஜ்ஜீவினீ' பத்திரிகையில் நீ பல கட்டுரைகள் எழுதி விஷயதானம் செய்திருப்பதால் உனக்கு அந்த ஸாமர்த்தியமும் இருக்கும் போலிருக்கிறது.

லேககா்:– அதெல்லாமொன்றுமில்லே. ஸந்நிதான அநுக்ரஹம் மட்டும் இருந்தால் விளங்காததும் விளங்கும், கிடைக்காததும் கிடைக்கும்.

यस्य देवे परा भक्तिर्यथा देवे तथा गुरौ ।
तस्यैते(अ)कथिता ह्यर्थाः प्रकाशन्ते महात्मनः ॥
யஸ்ய தேவே பராபக்திர் யதா தேவே ததா குரௌ |
தஸ்யைதே (அ) கதிதா ஹ்யர்த்தா: ப்ரகாஶந்தே மஹாத்மன: ||

என்பதல்லவா நியாயம்! அந்த பலத்தை வைத்துக்கொண்டுதான் இந்தக் குறிப்புகளை எழுதி வைத்திருக்கிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– ''ஸரி, அந்தக் குறிப்பைத்தான் இங்கு கொடு பார்க்கலாம்'' என்று சொல்லி இந்த லேககரிடமிருந்த ஒரு நோட் புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தார்கள். பல பக்கங்களையும் புரட்டிப் பார்த்து மந்தஹாஸத்துடன் கூறினார்கள்.

ஸ்ரீஸந்நிதானம்:– உன் குறிப்பு புத்தகத்திலிருந்து நான் ஒன்றுமே புரிந்துகொள்ள முடியவில்லையே! உன்னிடமும் சில பரிபாஷைகள் இருக்கும் போலிருக்கிறதே! இதில் மலையாள அக்ஷரத்திலும் சில குறிப்புகள் காணப்படுகின்றனவே, இது எதற்காக ?

லேககா்:– ஸந்நிதானத்திடம் பக்தியில்லாத பாமரர்கள் இதைப் பார்க்கக்கூடாது என்பதற்காகவே இவ்விதம் சில பாரிபாஷிக சப்தங்களைப் போட்டிருக்கிறேன். மலையாள எழுத்து இங்கு ஒருவருக்கும் புரியாதாகையால் சில ரஹஸ்ய விஷயங்களை மலையாள எழுத்திலேயே குறித்திருக்கிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– மலையாளம் தெரிந்தவர்கள் பார்த்தால் அந்த ரஹஸ்யங்கள் வெளியாகாதா ?

லேககர்:– மற்றவர்கள் புரிந்துகொள்ளமுடியாத பாரிபாஷையிலேயே எழுதியிருப்பதால் மலையாளம் தெரிந்தவர்களும் கூட இதிலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது.

இந்தக் குறிப்பை ஸ்ரீமான் குப்புஸ்வாமி அய்யரும் வாங்கிப் பார்த்தார். அவருக்கும் ஒன்றும் புரியவில்லை. அவர் இந்த லேககரைப் பார்த்துக் கேட்டார்.

குப்புஸ்வாமி:– உங்களது குறிப்புப் புத்தகத்தால் மற்றவர்களுக்கு ஒரு லாபமும் இல்லாமல் செய்துவிட்டீர்களே. அதை ஒரே பாஷையில் விளக்கமாக எழுதக்கூடாதா ?

லேககர்:– நான் உலகத்துக்காக அதைக் குறித்து வைக்கவில்லை. என் ஆத்மானுபவத்திற்காகவே தான் இவ்வளவு சிரமப்பட்டுத் திருட்டு வழியில் கூடச் சென்று இதை எல்லாம் ஸங்கிரஹம் செய்திருக்கிறேன். இதன் மூலம் ஜீவன்முக்தசர்யை எப்பேர்ப்பட்டது என்பதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் இந்த முயற்சியாகும்.

குப்புஸ்வாமி:– திருட்டு வழியில் சென்ருல் ஜீவன்முக்தசர்யை புலப்படுமா ? நீங்கள் பேசுவது விசித்திரமாகவல்லவோ இருக்கிறது. நீங்கள் கூறியதன் கருத்துத்தான் என்ன ?

லேககர்:– திருட்டு என்ருல் பிறர் பணத்தையோ மற்ற பொருள்களையோ அவரது அனுமதியில்லாமல் ஸ்வீகரித்துக் கொள்வதுதானே? நானும் அவ்விதமே ஸந்நிதானத்தின் அனுமதியில்லாமலேயே, அவர் அந்தர்முகாவஸ்தையில் இருக்கும் போது மறைந்திருந்து அவரது அமிருதமொழிகளைக் கேட்டு அதை ஸங்கிரஹம் செய்திருப்பது ஒரு விதத்தில் பார்த்தால் திருட்டுத்தனமான கார்யமே ஆகும். அதற்காகப் பலமுறை வந்தனம் செய்து ஸந்நிதானத்தில் முதலாவதாக மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

குப்புஸ்வாமி:– ஸமுத்திரத்தில் மறைந்திருந்த நவரத்தினங்களை ஒருவர் எடுத்து அதை ஸர்க்கார் அதிகாரிகளிடமோ

மஹாராஜாவிடமோ கொடுத்தால் அது குற்றமாகுமா ? அதுபோல் ஸந்நிதான முகாரவிந்தத்திலிருந்து வெளிவந்த அமிருத மொழிகளை எழுதி வைத்துக்கொண்டு அந்த ஸந்நிதியிலேயே ஸமர்ப்பணம் செய்தால் அது குற்றமென்று கருதக்கூடுமா ?

லேககர்:– அனுமதியில்லாமல் செய்தது ஒருவிதத்தில் குற்றமாகவேதான் முடியும்.

குப்புஸ்வாமி:– நீங்கள் எதற்காக மறைந்திருந்து இந்தக் குறிப்புகளை எடுக்கவேண்டும் ? மடத்து அதிகாரிகளிடம் அனுமதிபெற்று ஸந்நிதானம் இருந்த அறையின் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்து அவரது அமிருத மொழிகளை எழுதிக் கொண்டிருக்கக் கூடாதா ?

லேககர்:– அந்தப் பக்கமே ஒருவரும் போகக்கூடாது என்று பலவித பலத்த காவல்கள் போட்டிருக்கும்போது அவைகளை மீறிச் செல்லமுடியுமா ?

குப்புஸ்வாமி:– ஸந்நிதானத்திடம் முன்கூட்டியே உத்தரவு பெற்றிருந்தால் அதிகாரிகள் விடமாட்டார்களா ?

லேககர்:– கொஞ்சநாள் அந்தர்முகாவஸ்தையில் இருக்கப் போகிறேன் என்று ஸந்நிதானம் நமக்குச் சொல்வார்களா ? அதைச் சொன்னால்தான் மடத்து அதிகாரிகள் அந்த ஸந்தர்ப்பத்தில் என்னைப் போன்றவனை அந்தரங்க அறைக்கு பக்கத்தில் உட்காரும்படி விட்டு விடுவார்களா? இதெல்லாம் நடக்காத காரியம். அதற்காகத் தான் இந்த யுக்தியைக் கைக்கொண்டுவிட்டேன். இதை ஸந்நிதானம் மன்னிக்கவேண்டும்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீ செய்ததில் தவறொன்றுமில்லை. மன்னிக்க வேண்டிய அவசியமுமில்லை. அதிருக்கட்டும், நீ எழுதிய குறிப்பை வைத்துக்கொண்டு நாங்களொன்றும் அறிந்து கொள்ள முடியவில்லையே. நீயே முன்கூறிய அன்தேவஸதாம் (அந்தேவஸதாம்) என்ற சுலோகத்தின் முன்பின் கூறிய சுலோகங்களை எடுத்து வாசித்தால் நாங்கள் கேட்கிறோம்.

இவ்விதம் ஸந்நிதானம் உத்தரவிட்டவுடன் இந்த லேககர் வணங்கி தன் குறிப்புப் புத்தகத்தில் மலையாள எழுத்தில்

எழுதப்பட்டிருந்த சுலோகங்களை ஒருவிதம் வரிசைப்படுத்தி ஒவ்வொன்ருக வாசிக்கலானுர். அவை பின்வருமாறு:-

॥ शिष्यानुशासनम् ॥

सच्चित्सुखरूपत्वं जीवितकालेऽपि दर्शयन् नाम्ना ।
कैवल्येऽपि तथात्वं व्यवृणुत यस्तं शिवाभिनवमीडे ॥१॥

ஸச்சித் ஸுக ரூபத்வம் ஜீவித காலேSபி தர்ஶயன் நாம்னு ।
கைவல்யேSபி ததாத்வம் வ்யவ்ருணுத யஸ்தம்
ஶிவாபிநவமீடே ॥

(எவர், தான் ஸச்சிதானந்த ஸ்வரூபமாக இருப்பதைத் தன் ஜீவ்ய காலத்திலும் தன் பெயரால் (உலகிற்கு) காண்பித்து பின் விதேஹ கைவல்யம் அடைந்த பிறகும் அதே ஸச்சிதானந்த ஸ்வரூபமாயிருப்பதை வெளிப்படுத்தினுரோ, அந்த ஸச்சிதானந்த சிவாபிநவந்ருஸிம்ஹபாரதீ குருவைத் துதிக்கிறேன்.)

நமது பரம குருநாதரின் முழு யோகப்பட்டம் 'ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகள்' என்பதேயாகும். அதன் முதல் பாகத்தை வைத்துக்கொண்டு நம் குருநாதர் ஓர் அபூர்வ உல்லேகம் செய்து அவரது மஹிமையை இதனுல் வர்ணிக்கிருர். அதாவது பஞ்சதசியில் 'ப்ரஹ்மம் எப்படி ஸச்சிதானந்த ஸ்வரூபமோ அப்படியே ஜீவனும் ஸத்ரூபனுகவும் சித்ரூபனுகவும் ஆனந்த ரூபனுகவும் விளங்குகிருன்' என்பதை முதல் பிரகரணமாகிய தத்வ விவேகத்தில் பல யுக்திகளாலும் சுருதிகளாலும் விளக்கியிருக்கிருர் அல்லவா ?

इत्थं सच्चित्परानन्द आत्मा युक्त्या, तथाविधम् ।
परं ब्रह्म तयोरैक्यं श्रुत्यन्तेषूपदिश्यते ॥

இத்தம் ஸச்சித்பராநந்த ஆத்மா யுக்த்யா, ததாவிதம் ।
பரம் ப்ரஹ்ம தயோரைக்யம் ச்ருத்யந்தேஷூபதிச்யதே ॥

'ஜீவனுக்கும் பிரஹ்மத்துக்கும் ஸச்சிதானந்த ரூபத்வம் ஸமானம்தான் என்பது யுக்தியினுலும் சுருதிகளினுலும் ஸித்தமாயிருப்பதால் அவ்வித ஸமான லக்ஷணங்களுடன் கூடிய ஜீவ பிரஹ்மங்களுக்கு ஐக்யம் ஏற்படுவதில் தடை இல்லை. இதைத்தான் வேதாந்த வாக்கியங்கள் கூறுகின்றன' என்று வித்யாரண்யர் தத்வவிவேக ப்ரகரணத்தில் ஸ்பஷ்டமாகவே கூறியிருக்கிருரல்லவா ?

அப்படியே அந்த வித்யாரண்ய பரம்பரையில் வந்திருக்கிற நமது பரம குருநாதரான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்மபாரதீ மஹா ஸ்வாமிகளவர்களும் सच्चिदानन्द (ஸச்சிதாநந்த) என்ற தன் பெயரின் ஒரு பாகத்தினுல், தன் ஜீவிதகாலத்திலேயே அதாவது ஜீவனுய் இருக்கும் காலத்திலேயே தான் ஸத்ரூபமாகவும் சித்ரூபமாகவும் ஆனந்த ரூபமாகவும் விளங்கி வந்திருப்பதைக் காட்டி இருக்கிருர். சுருக்கிக் கூறினுல் ஜீவனுயிருக்கும் போதே ப்ரஹ்ம லக்ஷணங்களுடன் ப்ரகாசித்துவந்தார். விதேஹ கைவல்யமடைந்த பிறகும் 'ब्रह्मवित् ब्रह्मैव भवति' (*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*) என்ற சுருதி ப்ரகாரம் ஸச்சிதானந்த ரூப ப்ரஹ்மமாகவே இன்னும் விளங்கிவருகிருர். இவ்வாறு ஜீவப்ரஹ்ம ஐக்ய ஸித்தாந்தத்தைத் தன் ஜீவித காலத்திலும், ஸித்தியடைந்த பிறகும் உலகிற்குக் காண்பித்த மஹாபுருஷரான என் ஸாக்ஷாத் குருவை முதலில் வணங்குகிறேன்.

'शिवाभिनव' (சிவாபிநவ) என்ற பதங்களால் அவர் பரமேசுவர அவதாரம்தான் என்பது கிடைக்கிறது. ஆனுல் 'பரமேசுவரன் கைலாஸத்தில் இருக்கிருரே? இவரோ சிருங்ககிரி வியாக்யான ஸிம்மாஸனத்தில் அல்லவா இருக்கிருர். இருவருக்கும் ஏதாவது வித்யாஸம் வேண்டாமா?' என்ருல் 'அவர் வெறும் சிவன், இவரோ அபிநவ சிவன்,' என்று வேண்டுமானுல் வேற்றுமை கூறலாமே தவிர வேறில்லை. அப்படியே ஜீவித காலமூர்த்திக்கும் , முக்தியடைந்த ரூபத்திற்கும் ஏதாவது விசேஷம் கல்பிக்கவேண்டுமானுல் ब्रह्मवित् ब्रह्मैव भवति (*ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி*) என்ற சுருதி ப்ரகாரம் 'முக்தியடையும் வரையில் 'ப்ரம்மவித்' என்ற பெயருடனும் முக்தியடைந்த பிறகு 'ப்ரஹ்மம்' என்றும் வழங்கப்பட்டார்' என்றுதான் கூறவேண்டுமே தவிர மற்றபடி ஸச்சிதானந்தாதி ரூபங்களெல்லாம் ஸமானம்தான் என்பதும் இதனுல் விளங்கும். அல்லது ஜீவன்முக்தன் என்றும் விதேஹ முக்தன் என்றும் வேண்டுமானுல் விசேஷம் கூறலாம். பேசும் தைவம், பேசாத தைவம் என்று வேண்டுமானுலும் கல்பனம் செய்யலாமே தவிர வேறில்லை.

ஆனுல் எல்லா ஜீவர்களும் வாஸ்தவத்தில் ஸச்சிதானந்த ரூபமாகத்தானே இருக்கிருர்கள். இவரிடம் மாத்திரம் என்ன விசேஷம் என்ருல், அந்த உண்மையைத் தெரிந்து அனுபவித்து வந்திருப்பதுதான் விசேஷம். மற்றவர்களைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்டால் தன் மார்பைத் தொட்டுக்காட்டி 'நான் ராமன், நான்

கிருஷ்ணன் ' என்றுதான் கூறுவார்கள். இவரோ தன்னை ஸச்சிதானந்த ஸ்வரூபமாகவே அனுபவித்து வந்திருக்கிறார். இதுதான் விசேஷமென்றறியவும். இதைக் காட்டுவதற்காகவே அவரது பெயரில் सच्चिदानन्द (ஸச்சிதானந்த) பதங்கள் வந்தன போலும்.

அதற்கடுத்த சுலோகம் நரஸிம்ம சப்தநிர்வசனம் செய்து குருநாதரின் மகிமையை வர்ணிக்கிறது:-

अन्तेवसतां माभूद्भयमिति संपूर्णमर्त्यभावधरः ।
दयया यदात्मनाऽभून्नरसिंहस्तं भजे नृसिंहगुरुम् ॥२॥

அந்தேவஸதாம் மாபூத் பயமிதி
ஸம்பூர்ணமர்த்யபாவதர: ।
தயயா யதாத்மனாஅபூத் நரஸிம்ஹஸ்தம் பஜே
ந்ருஸிம்ஹகுரும் ॥

இந்த சுலோகத்தின் கருத்து நன்கு விளங்கவேண்டுமானால் ஸ்ரீநரஸிம்மாவதார காலத்தில் நடந்த நிகழ்ச்சியை நாம் நினைத்துப் பார்க்கவேண்டும். அதாவது:

एवं सुरादयः सर्वे ब्रह्मरुद्रपुरःसराः .
नोपैतुमशकन् मन्युसंरंभं सुदुरासदम् ॥

ஏவம் ஸுராதய: ஸர்வே ப்ரஹ்மருத்ரபுரஸ்ஸரா: ।
நோபைதுமஶகன் மன்யுஸம்ரம்பம் ஸுதுராஸதம் ॥
(பாகவதம் 7-9-1)

பிரம்மா, பரமசிவன் முதலிய தேவதைகள் அந்த நரஸிம்மமூர்த்தி கோபத்தால் ஜ்வலித்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அந்த மூர்த்தியிடம் சென்று ஸமாதானம் செய்யலாமென்று நினைத்து அருகில் செல்ல முயன்ற பொழுது அந்த உக்ரமான தேஜஸ்ஸைக் கண்டு நடுநடுங்கித் தடைப்பட்டதுபோல் நின்றுவிட்டார்களாம். सुदुरासदम् (*ஸுதுராஸதம்*) என்ற பதத்தால் ஒருவராலும் அந்த நரஸிம்மமூர்த்தியின் பக்கத்தில் அண்டவே முடியவில்லை என்று விளக்கப்படுகிறதல்லவா? இவ்விதம் ப்ரம்மாதி தேவர்களெல்லாம் திகைத்து நிற்கையில் மற்றவர்கள் எவ்விதம் அவரருகில் செல்லத்துணிவார்கள்? ஆகவே தேவதைகள் எல்லோரும் சேர்ந்து

அவருடைய கோபத்தை சாந்தப்படுத்துவதற்காக ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவியையே வேண்டிக்கொண்டார்கள். ஆனுல் லக்ஷ்மீ தேவியோ,

अदृष्टाश्रुतपूर्वत्वात् सा नोपेयाय शङ्किता । (भा. ७-९-२)

அத்ருஷ்டாச்ரு தபூர்வத்வாத் ஸா நோபேயாய ஶங்கிதா ।

என்று சொன்ன ப்ரகாரம் அந்த மூர்த்தியின் அருகில் செல்லவே பயந்து நின்றுவிட்டாள். ஏனென்ருல் இதுவரையில் தான் பழகிவந்த திவ்ய மங்கள மூர்த்தியான மஹாவிஷ்ணுவாயிருந்தால் ஸுலபமாக அவரிடம் சென்றிருக்கலாம். ஆனுல் இந்த சிங்க உருவம் கொண்ட மூர்த்தியோ மிகமிக பயங்கரமான ஓர் அபூர்வவஸ்துவாகக் காணப்படுவதால் லக்ஷ்மீதேவியும்கூட பக்கத்தில் செல்ல முடியாமல் தயங்கி நின்றுவிட்டாள். லக்ஷ்மீதேவியும் கூட அவரிடம் அணுகத் தயங்குவதைப் பார்த்த தேவதைகளுக்கு திகில் ஏற்பட்டு விட்டது. உடனே பக்கத்திலிருந்த பக்த சிகாமணியான ப்ரஹ்லாதனையாவது அனுப்பிப் பார்க்கலாம் என்று எண்ணினுர்கள். அவ்விதமே தேவதைகளின் அபிப்ராயத்தை அனுஸரித்து பாலபக்தனுன அந்த ப்ரஹ்லாதனையே அழைத்து பிரம்மா அனுப்புகிருர்:–

प्रह्लादं प्रेषयामास ब्रह्माऽवस्थितमन्तिके ।
तात प्रशमयोपेहि स्वपित्रे कुपितं प्रभुम् ॥ (भा.७-९-३)

ப்ரஹ்லாதம் ப்ரேஷயாமாஸ ப்ரஹ்மாऽவஸ்திதமந்திகே ।
தாத ப்ரஶமயோபேஹி ஸ்வபித்ரே குபிதம் ப்ரபும் ॥

(பா. 7–9–3)

''அப்பா குழந்தாய்! நீதான் இந்த உக்ரமூர்த்தியிடம் சென்று அவரது கோபத்தை சாந்தப்படுத்தவேண்டும்'' என்று பிரம்மா கேட்டுக்கொள்கிருர். ஆனுல் ''நான்தானு அகப்பட்டேன்? வேறு யாரையாவது அனுப்பக்கூடாதா?'' என்று பிரஹ்லாதன் கேட்டுவிடுவானே என்று நினைத்து அதற்கும் பதில் கூறுகிருர். स्वपित्रे कुपितं प्रभुम् (*ஸ்வபித்ரே குபிதம் ப்ரபும்*) என்று. அதாவது ''நாங்களும் அருகில் செல்ல முடியவில்லை. லக்ஷ்மீதேவியும் அஞ்சுகிருள். மற்றவர்களோ பயந்து நடுங்குகிருர்கள். இப்படியே விட்டுவிட்டாலோ அவரது கோபத்துக்கு உலகமே இரையாகிவிடும் போலிருக்கிறது. இந்த நிலைமையில் மகாபக்தனுன நீதான்

உலகத்தைக் காப்பாற்றவேண்டும். நீயும் பயந்து சும்மா இருந்துவிட்டால் உன் காரணமாக உலகமே அழிந்து விடும். உன் பிதா செய்த குற்றத்தால்தான் இந்த உக்ரமான நரஸிம்ம அவதாரம் தோன்றியிருப்பதால் பிதா செய்த குற்றத்துக்கு புத்திரனும் ஒருவிதம் பொறுப்பாளியாகலாம் அல்லவா? ஆகையால் உன் பிதாமூலம் உலகிற்கு நேரவிருக்கும் இந்த அபாயத்தைப் புத்திரனுன நீதான் நிவிருத்தி செய்யவேண்டும். ஆகையால் மகாபக்தனுன நீதான் அவரிடம் சென்று அவரது கோபகலையை சாந்தப்படுத்த வேண்டும்'' என்று பிரஹ்லாதஸ்வாமியிடம் தகுந்த காரணங்களைக் காட்டி பிரம்மா வேண்டிக்கொண்டார்.

तथेति शनकै राजन् महाभागवतोऽर्भकः ।
उपेत्य भुवि कायेन ननाम विधृतांजलिः ॥ (भा. ७-९-४)

பிரம்மாவின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட அந்த மஹாபக்தனுன சிறுவன் அந்த பயங்கர மூர்த்தியிடம் தயங்கிக்கொண்டே சென்று அஞ்ஜலி பந்தத்துடன் ஸ்ரீ நரஸிம்மமூர்த்தியின் காலடியில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினுன். பக்தபராதீனன் என்ற தன் விருதை பகவான் அப்பொழுது உலகிற்கே விளங்கும்படி செய்துவிட்டார்.

स्वपादमूले पतितं तमर्भकं विलोक्य देवः कृपया परिप्लुतः ।
उत्थाप्य तन्मूर्ध्न्यदधात् करांबुजं कालाहिविध्वस्तधियां कृताभयम् ॥

ஸ்வபாத மூலே பதிதம் தமர்பகம்
விலோக்ய தேவ: க்ருபயா பரிப்லுத: |
உத்தாப்ய தன்மூர்த்ன்யததாத் கராம்புஜம்
காலாஹி வித்வஸ்ததியாம் க்ருதாபயம் ||

தம் காலடியில் வந்து வணங்கிய அந்த பாலபக்தனைப் பார்த்தவுடன் அந்த நரஸிம்மமூர்த்தியின் கோபமெல்லாம் சாந்தமாய்விட்டதாம். தன் மார்பில் வாஸம் செய்யும் ப்ரியகாந்தையான லக்ஷ்மீதேவியால்கூட முடியாத கார்யத்தைத் தன் பக்தர்களால் செய்யமுடியும் என்பதை இதனுல் காட்டி பக்தபராதீனன் என்பதை பகவான் விளக்கி விட்டாரல்லவா ? அந்த பாலபக்தனைத் தன் கையாலேயே தூக்கி எடுத்து தனது கையால் சிரஸ்ஸை ஸ்பர்சித்து அனுக்ரஹம் செய்த வரலாறு பாகவதம் 7வது ஸ்கந்தம் 9வது

அத்தியாய ஆரம்பத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அதை ஞாபகப்படுத்தி அந்த நரஸிம்ம மூர்த்தியின் அவதாரமேதான் தன் குருநாதர் என்று முன்கூறிய अन्तेवसतां माभूद्भयमिति संपूर्णमर्त्यभावधरः । दयया यदात्मनाऽभूत् नरसिंहस्तं भजे नृसिंहगुरुम् ॥ என்ற சுலோகத்தால் காட்டுகிருர்.

ஆனுல் ஒரு ஸந்தேஹம் வரலாம். ''பகவான் ஏற்கெனவே நரஸிம்ம அவதாரம் எடுத்தாய்விட்டதே, மறுபடியும் இன்னெரு நரஸிம்மமூர்த்தியாக ஏன் அவதரிக்க வேண்டும்?'' என்று ஸந்தேஹம் வரக்கூடுமல்லவா? அதற்கும் இந்த சுலோகத்திலேயே ஸமாதானம் கூறியிருக்கிருர். அதாவது: இதற்குமுன் ஏற்பட்ட நரஸிம்ம அவதாரமானது லக்ஷ்மீ தேவியுள்பட பிரம்மாதி ஸகல தேவதைகளேயும் நடுநடுங்க வைத்துப் பக்கத்திலேயே வரவிடாமல் அதிபயங்கரமாக நிகழ்ந்துவிட்டது. அந்தக்குறையைப் போக்கவே இந்த இரண்டாவது அவதாரம் ஏற்பட்டதுபோலும் என்று உத்ப்ரேக்ஷிக்கிருர். எப்படியென்ருல் பாகவதத்தில் வர்ணிக்கப்பட்ட நரஸிம்மாவதார காலத்தில் பக்கத்திலிருப்பவர்களுக்கெல்லாம் பயமேற்பட்டது போலில்லாமல் பக்கத்திலுள்ளவர்களுக்கும் தன் சிஷ்யகோடிகளுக்கும் கொஞ்சமும் பயம் ஏற்படக்கூடாது என்று கருதியே இந்த நரஸிம்மபாரதீ ரூபமான அவதாரம் ஏற்பட்டது போலும். 'अन्तेवसताम्' (*அந்தேவஸதாம்*) என்ற பதத்துக்கு, பக்கத்தில் வசிக்கும் பக்தர்களுக்கு என்றும் சிஷ்யர்களுக்கு என்றும் இரண்டு அர்த்தம் கூறலாம். ஆகவே நரஸிம்மாவதாரத்தில் பக்கத்திலுள்ளவர்களுக்கு பயமேற்பட்டதுபோல் இந்த நரஸிம்மபாரதீ குரு அவதாரத்தில் பக்கத்திலுள்ளவர்களுக்கோ தூரத்திலுள்ள தன் சிஷ்ய கோடிகளுக்கோ ஒருவித பயமும் ஏற்படாமல் எல்லோருக்கும் அபய ப்ரதானம் செய்வதற்காகவேதான் இந்த குருமூர்த்தியின் அவதாரம் என்ற கருத்தை வெளியிடுகிருர்.

மறுபடியும் ஸந்தேஹம் ஏற்படலாம். நரஸிம்ம மூர்த்தியால் செய்ய முடியாததை அவரது அபராவதாரமான குரு எவ்விதம் செய்யமுடியும் என்று கேட்கலாம். அதற்கும் விடையளிக்கிருர். 'संपूर्णमर्त्यभावधरः' (*ஸம்பூர்ணமர்த்ய பாவதர:*) என்று. அதாவது முன் செய்த நரஸிம்ம அவதாரத்தில் ஸிம்ஹ முகமும் மனித உடலும் கொண்ட உருவத்தில் அவதரிக்க வேண்டியதாயிற்று.

सत्यं विधातुं निजभृत्यभाषितं व्याप्तिं च भूतेष्वखिलेषु चात्मनः।
अदृश्यतात्यद्भुतरूपमुद्वहन् स्तंभे सभायां न मृगं न मानुषम् ॥

ஸத்யம் விதாதும் நிஜ ப்ருத்ய பாஷிதம்
வ்யாப்திம் ச பூதேஷ்வகிலேஷு சாத்மந: ।
அத்ருச்ய தாத்யத்புத ரூபமுத்வஹன்
ஸ்தம்பே ஸபாயாம் ந ம்ருகம் ந மாநுஷம் ॥

முந்திய நரஸிம்மாவதார காலத்தில் ஹிரண்ய கசிபுவானவன் தன் மைந்தனுகிய பிரஹ்லாதனைப் பார்த்து ''என்னைத் தவிர வேறு ஜகதீச்வரன் யாரிருக்கிருர் ? அப்படி ஒருவரிருந்தால் எங்குதானிருக்கிருர் காட்டு பார்க்கலாம்'' என்று கேட்டான். ''அவன் இல்லாத இடமே உலகில் கிடையாது. அவன் எங்கும் வியாபித்திருக்கிருன்'' என்று பிரஹ்லாதன் விடைகூறவே ஹிரண்ய கசிபு கேட்கிருன்.

यस्त्वया मन्दभाग्योक्तो मदन्यो जगदीश्वरः ।
क्वासौ यदि स सर्वत्र कस्मात् स्तंभे न दृश्यते ॥

யஸ்த்வயா மந்தபாக்யோக்தோ மதந்யோ ஜகதீச்வர: ।
க்வாஸௌ யதி ஸ ஸர்வத்ர கஸ்மாத்
ஸ்தம்பே ந த்ருச்யதே ॥
(பா. 9–8–13)

''என்னைத் தவிர வேறு ஜகதீச்வரன் இருந்தால், அவனும் நீ சொல்கிறபடி எங்கும் வியாபித்திருந்தால் இந்தக் கம்பத்தில் ஏன் காணப்படவில்லை?'' என்றுன். அல்லது कस्मात् स्तंभे न (*கஸ்மாத் ஸ்தம்பே ந?*) என்று கேள்வியாகவும் दृश्यते (*த்ருச்யதே*) என்பது பிரஹ்லாத ஸ்வாமியின் விடையாகவும் வைத்துக்கொள்ளலாம். அதாவது ''இந்தக் கம்பத்தில் பகவான் ஏன் இல்லை?'' என்று ஹிரண்ய கசிபு கேட்டதற்கு பிரஹ்லாத ஸ்வாமி விடையளிக்கிருர். दृश्यते (*த்ருச்யதே*) ''இதோ காணப்படுகிருரே! '' என்று.

இவ்வாறு தந்தைக்கும் தனயனுக்கும் வாக்குவாதம் நடப்பதை அறிந்த ஸர்வக்ஞ மூர்த்தியான பகவான் தன் பக்தனுன பிரஹ்லாத ஸ்வாமியின் ''அவர் எங்கும் இருக்கிருர்'' என்ற வாக்யத்தை உண்மைப்படுத்துவதற்கும், தன் பக்தனைக் காப்பாற்றுவதற்கும்,

பகவான் இல்லாத இடமே கிடையாது என்ற தத்துவத்தை உலகிலுள்ள எல்லோரும் உணரும்படி செய்வதற்கும், இவ்விதம் பல காரணங்களை யுத்தேசித்தே நரஸிம்மாவதாரம் செய்திருக்கிறார். பகவானுடைய லீலைகளெல்லாம் பல நோக்கங்கள் கொண்டதாகவே இருக்குமல்லவா?

முன்கூறிய சுலோகத்தில் निजभृत्यभाषितं सत्यं विधातुं (*நிஜப்ருத்யபாஷிதம் ஸத்யம் விதாதும்*) என்பதற்கு निजभाषितं भृत्यभाषितं च द्वयमपि सत्यं विधातुं (*நிஜபாஷிதம், ப்ருத்யபாஷிதம் சத்வயமபி ஸத்யம் விதாதும்*) என்றும் பதம் பிரித்து அர்த்தம் கொள்ளலாம். அதாவது பகவானுடைய வாக்கியமும், பக்தனுடைய வாக்கியமும் உண்மையானதுதான் என்பதை ஸ்தாபிக்கவேண்டும்.

अनन्याश्चिन्तयन्तो मां ये जनाः पर्युपासते ।
तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहम् ॥

அநந்யாச்சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே ।
தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥

என்று பகவான் கீதையில் ''என்னை அனன்ய பக்தியுடன் ஸேவிப்பவர்களை நான் காப்பாற்றுகிறேன்'' என்று சபதம் செய்திருக்கிறாரல்லவா? இன்னும் कौन्तेय प्रतिजानीहि न मे भक्तः प्रणश्यति (*கௌந்தேய ப்ரதிஜாநீஹி ந மே பக்த: ப்ரணச்யதி*) என்று முன் கூறியதை உறுதிப்படுத்தியிருக்கிறாரே. இங்கேயோ பிரஹ்லாதன் பகவானை நேரில் காண்பிக்காவிட்டால் ஹிரண்யகசிபு அவனை ஸம்ஹாரம் செய்வதாகவே தீர்மானித்து கத்தியும் கையுமாக நிற்கிறான். இந்த ஸந்தர்ப்பத்தில் ''பரம பக்தனான இந்த பிரஹ்லாதனை நாம் காப்பாற்றாமல் விட்டுவிட்டால் நாம் சொன்ன வார்த்தை பொய்யாகப் போய்விடுமே'' என்று பகவான் நினைத்தார்போலும். இதுதான் निजभाषितं என்பதன் கருத்து. भृत्यभाषितं என்பது பகவான் எங்கும் இருக்கிறார் என்று பிரஹ்லாதன் கூறிய வாக்கியத்தைக் குறிக்கிறது. இவ்விரண்டும் பொய்யாகாமல் உண்மையாவதற்கும் பக்தனைக் காப்பாற்றுவதற்கும் தான் நரஸிம்ம ரூபத்தை ஏற்றுக் கொண்டார் என்று கருத்து.

ஆனால் வேறு ஏதாவது உருவமெடுக்காமல் न मृगं न मानुषम् (*ந ம்ருகம் ந மாநுஷம்*) என்று மனிதனென்றும் மிருகமென்றும் கூறமுடியாத ஒரு விசித்திரமான உருவத்தை எதற்காக எடுத்தார் என்று கேட்டால் அதற்கும் सत्यं विधातुं निजभृत्यभाषितम् (*ஸத்யம் விதாதும் நிஜப்ருத்ய பாஷிதம்*) என்ற வாக்கியமே விடை தரக்கூடும். பகவான் ஒருவனே ஸ்வாமியானதால் ஜீவர்கள் எல்லோருமே அவருக்கு பிருத்யர்கள்தான் (பக்தர்கள்). ஆகவே ஹிரண்யகசிபுவும் அவருடைய பிருத்யன்தான். தன் பிருத்யனான ஹிரண்யகசிபுவின் வார்த்தை உண்மையாவதற்காகவே இவ்வித உருவம் எடுத்துக்கொண்டு வந்தார். ஹிரண்யகசிபு ஏற்கெனவே வரம் கேட்கும்பொழுது ''மனிதனாலும் எனக்கு மரணம் ஏற்படக்கூடாது, மிருகங்களாலும் ஏற்படக்கூடாது'' என்று வேண்டிக்கொண்டிருந்தபடியால் அவனைத் தந்திரத்தால் வெல்வதற்காக அவன் கேட்டுக்கொண்டபடியே மனிதனென்றும் மிருகமென்றும் கூறமுடியாத இரண்டும் கலந்த நரஸிம்ம அவதாரத்தை எடுத்து தன் கையாலேயே அந்த அசுரனை ஸம்ஹரித்து அவனும் உத்தமகதியை அடையும்படியே செய்துவிட்டார்.

लोकान् प्रयान्तु रिपवोऽपि हि शस्त्रपूताः
इत्थं मतिर्भवति तेष्वपि तेऽतिसाध्वी ॥

லோகான் ப்ரயாந்து ரிபவோऽபி ஹி ஶஸ்த்ரபூதா:
இத்தம் மதிர்பவதி தேஷ்வபி தேऽதிஸாத்வீ ॥

என்று தேவீமாஹாத்ம்யத்தில் (14-19) கூறிய பிரகாரம் பகவானது கையாலேயே மரணமடைவதும் நற்கதியையே விளைவிக்கக்கூடுமல்லவா? அதற்காகவேதான் இந்த இரண்டும் கலந்த உருவமெடுத்துக்கொண்டார் போலும்.

அல்லது அத்வைத ஸித்தாந்தமாகிய அநிர்வசனீய வாதத்தைக் காண்பிப்பதற்காகவும் இந்த நரஸிம்ம அவதாரம் ஏற்பட்டதாகச் சிலர் வர்ணிக்கிறார்கள். அதிலும் உண்மையில்லாமலில்லை. ஏனென்றால்,

'अनिर्वाच्यं जगत्सर्वं हेरंबनरसिंहवत्'

அநிர்வாச்யம் ஜகத் ஸர்வம் ஹேரம்ப நரஸிம்ஹவத்

என்று உலகமெல்லாமே மித்யை என்பதற்கு கஜமுகனை பிள்ளையாரையும் ஸிம்ஹமுகனை நரஸிம்மமூர்த்தியையும் திருஷ்டாந்தமாகக் கூறுகிறார்களல்லவா? 'सत्यं विधातुं निजभृत्यभाषितं' (*ஸத்யம் விதாதும் நிஜப்ருத்யபாஷிதம்*) தன் ஸித்தாந்தமான அத்வைதக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள்தான் உண்மையான பிருத்யர்கள், பக்தர்கள். அவர்களது வாக்கியமாகிய 'ब्रह्म सत्यं जगन्मिथ्या' (*ப்ரஹ்ம ஸத்யம் ஜகன்மித்யா*) என்ற வாதத்தையும் அம்மதத்தையும் உண்மையானவை என்று ஸ்தாபிப்பதற்காகவே இந்த அநிர்வசனீயமான நரஸிம்மரூபத்தை எடுத்திருக்கலாமோ என்றும் தோன்றுகிறது. எப்படியென்றால்,

'सन्नाप्यसन्नाप्युभयात्मिका नो भिन्नाप्यभिन्नाप्युभयात्मिका नो ।
साङ्गाऽप्यनङ्गाऽप्युभयात्मिका नो महाद्भुताऽनिर्वचनीयरूपा ॥

ஸந்நாப்யஸந்நாப்யுபயாத்மிகா நோ
பிந்நாப்யபிந்நாப்யுபயாத்மிகா நோ ।
ஸாங்காऽப்யநங்காऽப்யுபயாத்மிகா நோ
மஹாத்புதாऽநிர்வசநீயரூபா ॥

என்று விவேகசூடாமணியில் (சு.111) அவித்யையின் ஸ்வரூபம் அநிர்வசனீயமானது என்று கூறப்பட்டது, அவித்யாகார்யமான பிரபஞ்சத்துக்கும் பொருந்துமல்லவா? பிரபஞ்சத்தை ஸத்யமாகவும் கூறமுடியவில்லை. இல்லை என்றும் மறுக்கமுடியவில்லை. ஆகையால் அநிர்வசனீயம் என்று தீர்மானித்திருக்கிறார்கள். எதுபோல் என்றால் நரஸிம்மமூர்த்தியை நரன் என்றும் கூறமுடியவில்லை, சிங்கம் என்றும் ஸித்தாந்தம் செய்ய இயலவில்லை. ஆகையால் இது அநிர்வசனீயம்தான் என்று கூறுவது போல் என்று அத்வைதிகள் கூறுகிறார்கள். இதை மற்றவர்களும் நன்றாகத் தெரிந்து கொள்ளட்டும் என்ற எண்ணத்துடன் பகவான் இந்த நரஸிம்மாவதாரமெடுத்தாரோ என்று வர்ணிப்பதிலும் தவறில்லை. இதில் अनिर्वाच्यं जगत्सर्वं (*அநிர்வாச்யம் ஜகத் ஸர்வம்*) என்பது दार्ष्टान्तिकम् (*தார்ஷ்டாந்திகம்*) हेरंबनरसिंहवत् என்பது दृष्टान्तम् (*திருஷ்டாந்தம்*). திருஷ்டாந்தத்தைக் காட்டித்தானே தார்ஷ்டாந்திகத்தை விளக்கவேண்டும். அதற்காகவே திருஷ்டாந்த ரூபமாக இந்த அநிர்வசனீயமான நரஸிம்மரூபத்தை பகவான் எடுத்துக்கொண்டார்போலும்.

இவ்விதம் பல காரணங்களால் நரஸிம்மாவதாரம் ஏற்பட்டதை ஞாபகப்படுத்தி நம் குருநாதர் தம் குருவான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகள் அவர்களை ''अन्तेवसतां माभूत्'' (*அந்தேவஸதாம் மாபூத்*) என்ற முன்கூறிய சுலோகத்தால் வணங்குகிறார். தம் பக்கத்திலிருப்பவர்களுக்கும் தம் சிஷ்யர்களுக்கும் முந்திய நரஸிம்மாவதாரத்தில் ஏற்பட்டதுபோல் பயம் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இந்த நரஸிம்ம பாரதீ குருவின் வடிவத்தில் அவர் சாந்த ரூபமாக அவதரித்தார்போலும் என்று தாத்பர்யம். அவ்விதம் அவதரித்ததற்கு முக்கிய காரணம் கூறுகிறார். 'दयया यदात्मनाभूत्' (*தயயா யதாத்மநாபூத்*) என்று. அதாவது ''முந்தின நரஸிம்ம அவதாரத்தில் உக்ரகலையுடன் அவதரித்து ப்ரம்மாதி தேவர்களையும் பதினான்கு உலகங்களையும் நடுநடுங்கும்படி செய்துவிட்டோமே. ஓர் அஸுரனை ஸம்ஹாரம் செய்வதற்கு இவ்வளவு கோலாஹலமாய் செய்துவிட்டோமே. ஆகையால் நம் பக்தர்களை அவ்விதமெல்லாம் நடுங்கவைக்காமல் சாந்தரூபமாகவே அவதரித்து அவர்களை அனுக்ரஹிக்கவேண்டும்'' என்று அவர் எண்ணினார் போலும். அவ்வாறு மிகக் கருணையுடன் அவதரித்த மூர்த்திதான் அந்த அபிநவ நரஸிம்ம பாரதீ குருநாதர் என்பதைத்தான் முன்கூறிய अन्तेवसतां (*அந்தேவஸதாம்*) என்ற சுலோகத்தில் दयया यदात्मनाऽभून्नरसिंहस्तं भजे नृसिंहगुरुम्' (*தயயா யதாத்மநாऽபூத் நரஸிம்ஹஸ்தம் பஜே ந்ருஸிம்ஹகுரும்*) என்ற பதங்களால் காட்டுகிறார். முன் அவதாரம் போல் இது உக்ர அவதாரமில்லை, சாந்த அவதாரம்தான் என்பதைக் குறிப்பதற்காகவே அவரது பெயரில் अभिनव (*அபிநவ*) என்ற பதம் சேர்ந்து அபிநவ நரஸிம்ஹ பாரதியாக நமக்குக் காட்சியளித்தார்போலும்.

முந்தின நரஸிம்ம அவதாரத்தில் அப்படி என்ன கோலாஹலம் ஏற்பட்டது என்றால் அதைப் பின்வரும் பாகவத சுலோகமே எடுத்துக் காட்டுகிறது.

'सटावधूता जलदाः परापतन् ग्रहाश्च तद्दृष्टिविमुष्टरोचिषः ।
अम्भोधयः श्वासहता विचुक्षुभुः निर्ह्रादभीता दिगिभा विचुक्रुशुः ॥

ஸடாவதூதா ஜலதா: பராபதன்
க்ரஹாச்ச தத்த்ருஷ்டி விமுஷ்டரோசிஷ: ।
அம்போதய: ச்வாஸஹதா விசுக்ஷுபு:
நிர்ஹ்ராதபீதா திகிபா விசுக்ருசு : ॥ *(பா. 7–8–32)*

அதாவது முன் நிகழ்ந்த நரஸிம்மாவதார காலத்தில் அந்தச் சிங்க உருவத்தின் பிடரிமயிரால் அடிபட்ட ஆகாயத்திலுள்ள மேகங்களெல்லாம் சிதறிப்போய் விழுந்து விட்டன. அந்த நரஸிம்ம மூர்த்தியின் உக்ர தேஜஸ்ஸால் சூரியன், சந்திரன், நக்ஷத்திரம் முதலிய க்ரஹங்களெல்லாம் மங்கிப்போய் கண்ணுக்குப் புலப்படாமலே மறைந்துவிட்டன. அந்த மூர்த்தியின் மூச்சுக் காற்றுக்களின் வேகத்தால் எல்லா ஸமுத்திரங்களுமே கலக்கத்துடன் அலேமோத ஆரம்பித்துவிட்டன. அந்த நரஸிம்ம மூர்த்தியின் அட்டஹாஸ சப்தத்தால் பயந்து நடுங்கிய அஷ்டதிக் கஜங்களும்கூட மிக மிக ஆரவாரங்கள் செய்துகொண்டு கத்த ஆரம்பித்துவிட்டன. இப்படியெல்லாம் உலகத்தையே நடுங்கவைத்து விட்டதல்லவா முந்தின நரஸிம்ம அவதாரம். அதற்கெல்லாம் நேர் மாறுதலாகவே இந்த அபிநவ நரஸிம்ஹ குருவின் வடிவத்தில் ஏற்பட்டது பரம சாந்தமான அவதாரம். அதற்குக் காரணமும் முன் கூறியபடி 'दयया यदात्मनाभूत्' (*தயயா யதாத்மநாऽபூத்*) என்பதுதான். சிஷ்யர்களுக்கு பயத்தையோ, கலவரத்தையோ உண்டுபண்ணுமல் சாந்த ரூபத்துடன் அவர்களே அனுக்ரஹம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்த நரஸிம்ம குரு அவதாரம் ஏற்பட்டதுபோலும் என்று தாத்பர்யம்.

நம் குருநாதர் இயற்றிய ஆசார்யேந்திர ஸ்துதியிலும் இவ்விதமே நரஸிம்ம மூர்த்திக்கும் நரஸிம்ம குருவுக்கும் சிலேஷைமூலம் ஸாம்யத்தை வர்ணித்து ஸ்தோத்திரம் செய்திருப்பதையும் இந்த ஸந்தர்ப்பத்தில் வாசகர்கள் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமாகும். சுலோகம் பின்வருமாறு:-

प्रह्लादपोषकत्वं तव सिद्धमहो हिरण्यवैरित्वम् ।
तस्मान्नरसिंहगुरो हृत्स्तम्भं मे विभिद्य पुर एहि ॥

ப்ரஹ்லாத போஷகத்வம் தவ ஸித்தமஹோ ஹிரண்ய
வைரித்வம் ।
தஸ்மாத் நரஸிம்ஹகுரோ ஹ்ருத்ஸ்தம்பம் மே விபித்ய
புர ஏஹி ॥

இந்த சுலோகத்தில் நம் குருநாதர் பரம குருநாதரை நேரில் பார்த்துக் கேட்பதுபோல் கேட்கிருர். 'ஹே நரஸிம்ம குரோ' என்று

அந்த அபிநவ நரஸிம்மபாரதீ என்ற தன் குருவை வணங்கிப் பிரார்த்திக்கிருர். ஹே குரோ! உங்களுக்கும் நரஸிம்ம மூர்த்திக்கும் பலவிதத்திலும் ஸாம்யமே காணப்படுகிறது. எவ்விதமென்ருல் प्रह्लादपोषकत्वं, (*ப்ரஹ்லாத போஷகத்வம்*), हिरण्यवैरित्वं (*ஹிரண்யவைரித்வம்*) என்ற முக்கியமான தர்மங்கள் இரண்டும் ஸமமாகவே உங்கள் இருவரிடமும் பொருந்தி இருக்கின்றன. உக்ர நரஸிம்மர் பிரஹ்லாதன் என்ற அஸுரபாலகனை அபயம் கொடுத்து அனுக்ரஹம் செய்தபடியால் அவனைப் போஷித்தார், காப்பாற்றினுர். அதனுல் பிரஹ்லாத போஷகராஞர். சாந்த நரஸிம்மரூபமான தாங்களோ प्रकृष्टो ह्लादः प्रह्लादः என்ற வ்யுத்பத்தியின்படி பக்தர்களுக்குப் பலவிதத்திலும் உத்கிருஷ்டமான ஆனந்தத்தைக் கொடுக்கிறீர்கள். ஹ்லாதம் என்ருல் ஆனந்தம் என்று அர்த்தம். ப்ரக்ருஷ்டமான ஹ்லாதம் என்ருல் உயர்ந்த ஆனந்தம் என்று பொருள் கொள்ளலாம்.

ஆனந்தம் என்பது பொதுவாக விஷயானந்தத்தையே குறிக்கும். அதுவோ விஷயங்களின் மாறுபாடுகளை அனுஸரித்துப் பலவிதமாக மாறுபடக்கூடியது. தைத்திரீயத்திலும், பிருஹதாரண்யக உபநிஷத்திலும் இந்த ஆனந்தங்களைப் பற்றி விரிவாகக் கூறியிருப்பதை இந்த ஸந்தர்ப்பத்தில் கொஞ்சம் சுருக்கமாகக் குறிப்பிட்டால்தான் வாசகர்களுக்கு குருநாதரது சுலோகத்தின் அர்த்தம் நன்கு விளங்குமாதலால் அதைக் கொஞ்சம் காண்பிக்கிருேம். சுலோகத்திலுள்ள 'பிரஹ்லாத' பதத்திற்கும் 'ஹ்லாத' பதத்திற்கும் அர்த்தத்தில் எவ்வளவு வேற்றுமையிருக்கிறது என்பதையும் வாசகர்கள் இந்த விளக்கத்தின் மூலம் உணரலாம்.

தைத்திரீயோபநிஷத்தில் तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात् स एको मानुष आनन्दः (*தஸ்யேயம் ப்ருத்திவீ ஸர்வா வித்தஸ்ய பூர்ணு ஸ்யாத் । ஸ ஏகோ மாநுஷ ஆனந்த:*) என்று கூறப்பட்டிருக்கிறது. அதாவது பூமண்டலத்துக்கே சக்கரவர்த்தியாயிருப்பவனுக்கு ஏற்படும் ஆனந்தம்தான் மானுஷானந்தம் எனப்படுகிறது. அந்த சக்கரவர்த்தி நல்ல ஆரோக்யமும் தேஹதிடமும் பலமும் யௌவனமும் நல்ல கீர்த்தியும் படிப்பும் குறைவில்லாமல் பெற்றிருக்கவேண்டும். தர்மபுத்திரர்போல் ஏகச்சத்ராதிபதியாகவும் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் ஓர் ஆனந்தம் அவனுக்கு இருப்பதாகக் கூறலாம். ஆனுல் அவன் தேவலோக ஸுகங்களில்

காமனை உள்ளவனுயிருந்தால் அவ்வித காமனையில்லாத சுரோத்ரியனுடைய ஆனந்தத்தில் நூற்றில் ஒருபங்காகத்தான் அந்த சக்கரவர்த்தி ஆனந்தம் இருக்கக்கூடும். இப்படியே ஹிரண்யகர்ப்பானந்தம் வரையில் ஒவ்வொரு படியிலும் நூறுமடங்கு ஆனந்தம் விருத்தியாகிக்கொண்டே போனுலும் அந்த ஹிரண்யகர்ப ஆனந்தம் வரையிலுள்ள எல்லா ஆனந்தங்களும் நிஷ்காமனுன ப்ரஹ்மவித்தின் ஆனந்தத்தில் ஒரு பாகமேயாகும். ஆகவே காமனையில்லாத ப்ரஹ்மவித்தின் ஆனந்தம்தான் எல்லாவற்றையும் விட மேன்மையானது. அதைத்தான் பிரஹ்மானந்தம் என்று சாஸ்திரங்களில் பாஷ்யகாராதிகள் வர்ணிக்கிருர்கள்.

அதைத்தான் முன் கூறிய प्रह्लादपोषकत्वं (*ப்ரஹ்லாத போஷகத்வம்*) என்ற சுலோகத்திலுள்ள 'ப்ரஹ்லாத' பதத்தால் நம் குருநாதர் குறிப்பிடுகிருர்.

ஹ்லாதம் என்ருல் ஆனந்தம். ப்ரஹ்லாதம் என்ருல் உத்க்ருஷ்டமான ஆனந்தம். உத்கிருஷ்டம் என்ருல் எதை விட உத்கிருஷ்டம் என்ற கேள்வி வருகிறது. மானுஷானந்தத்தைவிட மனுஷ்யகந்தர்வானந்தம் நூறு மடங்கு உயர்ந்தது. அதைவிட தேவகந்தர்வானந்தம் நூறுமடங்கு சிறந்தது. இப்படியே பித்ருக்கள், ஆஜான தேவர்கள், கர்ம தேவர்கள், தேவர்கள், இந்திரன், பிருஹஸ்பதி, ப்ரஜாபதி என்ற முறையில் ஒன்றை விட ஒன்று 100 மடங்கு உயர்ந்தது என்று சொல்லிக் கடைசியாக ஹிரண்யகர்ப்பானந்தம் எல்லாவற்றையும்விட உயர்ந்தது. ஆனுல் பிரஹ்மவித்தானவன் அனுபவிக்கும் ஆனந்தமோ எல்லை இல்லாதது, நிரதிசயமானது என்று தைத்திரீய உபநிஷத்திலும் பிருஹதாரண்யகம் முதலியவற்றிலும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அப்பேர்ப்பட்ட நிரதிசய ஆனந்தத்தைத்தான் ப்ரஹ்லாத பதத்தால் குருநாதர் குறிப்பிட்டிருக்கிருர். அதாவது எல்லையில்லாத ஆனந்தமாகிய பிரஹ்மானந்தத்தையே தம் பக்தர்களுக்கு அளிக்க வல்லமையுள்ளவர் குருநாதர் என்று அவரது மகிமையை வர்ணிக்கிருர். நரஸிம்மமூர்த்தியானவர் தம் பக்தனுன பிரஹ்லாதனை மேன்மை அடையும்படி செய்தபடியால் ப்ரஹ்லாத போஷகராக ஆனது போலவே இந்த அபிநவ நரஸிம்ம குருவும் பிரஹ்மானந்தத்தைத் தம் சிஷ்யர்களுக்குக் கொடுப்பதால் ப்ரஹ்லாத

போஷகராக ஆகிவிட்டார். ஸதா வேதாந்த விசாரம் செய்து கொண்டுவரும் தம் சிஷ்யர்களுக்கு பாஷ்ய ப்ரவசனம், தத்வோபதேசம் இவைகளின் மூலம் பிரஹ்மானந்தம் ஏற்படும்படி செய்துவந்தார் குருநாதர் என்று தாத்பர்யம்.

முன் கூறியபடி ப்ரஹ்லாதபோஷகத்வம் (प्रह्लादपोषकत्वं) என்ற தர்மமானது இருவருக்கும் ஸமமாக இருந்த போதிலும் ஹிரண்யவைரித்வம் (हिरण्यवैरित्वं) என்ற தர்மம் நம் குருநாதரிடம் பொருந்தாதே; அவர் அஜாத சத்ருவாகவே இருந்தவராயிற்றே என்ற ஸந்தேஹம் வரலாம். அர்த்தத்தை விளக்கினுல் அந்த ஸந்தேஹம் தீர்ந்துவிடும். ஹிரண்ய (हिरण्य) பதத்திற்குத் தங்கம் என்று அர்த்தம். தங்கத்துடன் மற்ற எல்லா நாணயங்களையும் ஐச்வர்யத்தையும் உபலக்ஷணமாக அது குறிக்கும். ஆகவே குருநாதர் தனதான்யாதி ஐச்வர்யத்திற்கே நேர் எதிரியாக இருந்தார் என்று தாத்பர்யம்.

ஆனுல் तस्मादात्मज्ञं ह्यर्चयेद्भूतिकामः (*தஸ்மாத் ஆத்மக்ஞம் ஹி அர்சயேத் பூதிகாம:*) என்ற சுருதி வாக்கியப்படி இவ்வித ஆத்மஞானிகளை உபாஸிப்பவருக்கே ஐச்வர்யம் விருத்தியாகுமானுல் அவர் மாத்திரம் ஐச்வர்யத்துக்கு விரோதியாயிருப்பாரா என்ற ஸந்தேஹமும் எழலாம். தவிரவும் யானை, குதிரை, பல்லக்கு, பணியாட்கள், நிலபுலங்கள், மடங்கள் இவையெல்லாம் இருக்கும்பொழுது மடாதிபதியாகிய அந்த குருநாதர் ஐச்வர்யங்களுக்கே விரோதி என்பது பொருந்துமா என்ருல் அவசியம் பொருந்தும். 'யதி தர்ம ப்ரபோதம்' என்ற கிரந்தத்தில் तेषां तु यानच्छत्रादि भवेल्लोकोपकारकम् (*தேஷாம் து யானச்சத்ராதி பவேத் லோகோபகாரகம்*) என்று கூறியிருப்பதுபோல் யானை, குதிரை, மேனு பல்லக்கு, கிரீடம் முதலியவை சிஷ்யர்களின் அனுக்ரஹத்திற்காக ஏற்றுக்கொண்டவையே ஆகும். அந்த விருதுகளும் சிஷ்யர்களாலேயே கொடுக்கப்பட்டு சிஷ்யர்களாலேயே பரிபாலிக்கப்பட்டு வருபவைதான். அவருக்காக ஓர் ஐச்வர்யமும் கிடையாது.

அவரது அனுஷ்டான காலங்களில் மரப்பாத்திரமும் மரத்தட்டுகளும்தான் உபயோகத்திலிருந்தன. அனுஷ்டானம் என்பது ஆத்மார்த்தமான கார்யமாகையால் அது ஸமயம் இருக்கும் தண்டம், கமண்டலம், புத்தகம், மரபாத்திரம் இவைகள்

தான் அவரது ஐச்வர்யமாகும். மற்றவைகளே அவர்கள் வெறுக்கத்தான் செய்வார்கள்.

பூஜா காலங்களில் தங்கம் வெள்ளிப் பாத்திரங்களே உபயோகிக்கிருர்களே என்ருல் அதுவும் லோகோப காரத்துக்காகவேதான். பூஜை செய்யும்பொழுது ஸங்கல்பம் செய்துகொள்வதைப் பார்த்தாலே இது விளங்கும் आसेतुहिमाचलवर्तिनां सर्वेषां महाजनानां सर्वाभीष्टसिद्ध्यर्थं .... पूजां करिष्ये । என்றுதான் ஸங்கல்பம் செய்து வருகிருர்கள். ஆகையால் சிஷ்யர்கள் கொடுத்த தங்க வெள்ளிப்பாத்திரங்களால் சிஷ்யர்களுக்காகவே அவர்கள் தினமும் பூஜை செய்து வருவதால் அந்த ஐச்வர்யமெல்லாம் அவர்களேக் கட்டுப்படுத்த முடியாது. கையாலும் திரவியத்தைத் தொடமாட்டார்கள். அப்படியிருக்கையில் ஹிரண்யவைரித்வம் (हिरण्यवैरित्वं) என்ற தர்மமானது மஹாவைராக்ய ஸம்பத்துடன் கூடிய அம்மஹானிடம் ஏன் பொருந்தாது?

ஆகவே प्रह्लादपोषकत्वं, हिरण्यवैरित्वं, என்ற இரண்டு தர்மங்களும் அந்தப் பரமகுருநாதரிடம் நன்ருகவே பொருந்தக்கூடியதாக இருப்பதால் அவரை நரஸிம்மமூர்த்தியுடன் நம் குருநாதர் ஸாம்யப்படுத்தி வர்ணித்திருப்பதில் ஓர் ஆக்ஷேபணேயும் இருக்கமுடியாது. விசேஷ ஸ்வாரஸ்யம்கூட அவ்வித வர்ணனேயில் இருப்பது நன்ருக கவனித்துப் பார்ப்பவர்களுக்குப் புலனுகக்கூடும். உத்தரார்த்தத்தில் அவ்வித ஸ்வாரஸ்யத்தை குருநாதரே விளக்குவதைக் காணலாம்.

तस्मान्नरसिंहगुरो हृत्स्तंभं मे विभिद्य पुर एहि ॥

தஸ்மாத் நரஸிம்ஹகுரோ ஹ்ருத்ஸ்தம்பம் மே விபித்ய
புர ஏஹி ॥

என்னும் உத்தரார்த்தத்தில் இந்த உல்லேகத்தின் ஸ்வாரஸ்யத்தை நன்கு எடுத்துக்காட்டுகிருர். "ஹே குரோ! தாங்கள் வெறும் குருவன்று, நரஸிம்மாவதாரம் எடுத்து உலகத்தையே நடு நடுங்கச் செய்த தன் கோபாவேசத்தை வெறுத்துத் தம் பக்தர்களேயும் சிஷ்யர்களேயும் மகிழ்விக்கக் கூடிய சாந்தமான மனுஷ்ய உருவத்தில் எனது குருநாதராகத் தாங்கள் ஆவிர்பவித்திருக்கிறீர்கள். முன் குறிப்பிட்டபடி அந்த நரஸிம்ம அவதாரத்தில் உள்ள முக்கியமான

லக்ஷணங்கள் தங்களிடம் ஸித்தமாகவே காணப்படுகின்றன. பெயரும் பொருத்தமாகவே அமைந்திருக்கிறது. ஆனல் அவர் செய்த அற்புதமான கார்யத்தைத்தான் காணவில்லே. ஆகையால் ஹே ஸத்குரோ! அந்தக் கார்யத்துக்கு என்னேயே உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள். தாங்கள் நரஸிம்மாவதார காலத்தில் செய்த முக்கியமான கார்யம் என்ன என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தான் ஸர்வ வியாபகன் என்பதைக் காட்டுவதற்காகவல்லவா தாங்கள் கம்பத்திலிருந்து ஆவிர்பவித்தீர்கள்? 'सत्यं विधातुं निजभृत्यभाषितं' என்று சொன்னபடி कस्मात् स्तंभे न என்று தந்தையான ஹிரண்யகசிபு கேட்கவே दृश्यते என்று பிரஹ்லாதன் பதில் கூறும்படி தாங்கள் செய்யவில்லேயா! ''அவர் ஸர்வ வியாபி'' என்று பிரஹ்லாதன் கூறிய வாக்யம் பொய்யாகக்கூடாது என்பதற்காகத் தாங்கள் கம்பத்திலிருந்து வெளி வரவில்லேயா?

அதுபோலவே இந்த சாந்த நரஸிம்மகுரு அவதாரத்திலும் தாங்கள் அற்புதமான ஒரு கார்யத்தைச் செய்ய வேண்டும். அதாவது, தாங்கள் என் ஹிருதயமாகிய கம்பத்தில் என் குருபக்தியாகிய கயிற்ருல் கட்டப்பட்டு அங்கேயே இருந்துகொண்டு எனக்கு அனுக்ரஹம் செய்து வருகிறீர்களல்லவா? இப்பொழுது என் வேண்டுகோளின்படி அந்த என் மனமாகிய கம்பத்தை உடைத்துக்கொண்டு வெளிவரவேண்டும். அவ்விதம் செய்தால்தான் இந்த சாந்த நரஸிம்ம அவதாரம் செய்த கார்யம் பூர்த்தியாகுமல்லவா? இவ்வித அற்புதமான ஒரு கார்யத்தைச் செய்தால் தங்களது இந்த அவதாரத்தில் ஒரு முக்கியமான கார்யம் நிறைவேறியதாக ஆகும். நானும் கிருதார்த்தனுவேன். முன் கூறியபடி प्रह्लादपोषकत्वं, हिरण्यवैरित्वं என்ற தர்மங்கள் பொருந்தியது போல் स्तंभभेदनम्, என்ற இன்னெரு ஸாம்யமும் தங்களுக்கு ஏற்பட்டுவிடும். இம்மூன்று ஸாதிருச்யங்களும் தங்களிடம் இருந்தால்தான் தாங்கள் சாந்த நரஸிம்மாவதாரம் என்று நம்புவோம். ஆகையால் ஹே ஸத்குரோ! தாங்கள் என் மனதிலிருந்து வெளியில் வந்து எனக்கு பிரத்யக்ஷமாக வேண்டுமென்று வேண்டுகிறேன்'' என்று இவ்வளவு கருத்துக்கஃளயும் வைத்துத்தான் அந்த சுலோகம் குருநாதரால் எழுதப்பட்டிருக்கிறது. अन्तेवसतां என்ற முன்கூறிய சுலோகத்தையும் प्रह्लादपोषकत्वं என்ற சுலோகத்தையும்

இணைத்துப்பார்த்தால்தான் அதன் உல்லேகங்களும் அற்புதமான கருத்துக்களும் சமத்காரமும் நன்ருக விளங்கும். அதற்காகவே நம் குருநாதர் 'अन्तेवसतां' என்ற தம் அந்தர்முகாவஸ்தையில் வெளிவந்த சுலோகத்தை இந்த லேககரிடம் பல தடவை வாசிக்கச்சொல்லிக் கேட்டார் போலும். அதன் பிறகு ''அடுத்த சுலோகத்தை இன்னொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம்'' என்று குருநாதர் சொல்லி காலபைரவ ஆலயத்தில் தீபாராதனை செய்யும்படி உத்தரவிட்டார்கள். அன்று நடந்த நிகழ்ச்சியை மனனம் செய்து கொண்டே எல்லோரும் ஸ்ரீநிவாஸவடுவுடன் தம்தம் ஜாகைக்குச் சென்றுவிட்டோம். குப்புஸ்வாமி அய்யரும் சந்திரசேகர அய்யரும் அடைந்த ஆனந்தத்துக்கு அளவே கிடையாது.

ஸ்ரீ ஸந்நிதானத்தின் உத்தரவுப்ரகாரம் மறுநாளும் 4 மணி சுமாருக்கு நாங்கள் காலபைரவ ஆலயத்துக்குச் சென்ருேம். குப்புஸ்வாமி அய்யரும் ஜஸ்டிஸ் சந்திரசேகர அய்யரும் வந்திருந்தார்கள். வழக்கம்போல் எல்லோரும் சிறிது நேரம் அந்தாதி சுலோகங்கள் சொல்லிவந்தோம். பிறகு ஸ்ரீஸந்நிதானம் அவர்களைப் பார்த்து ''நீங்கள் இன்னும் கொஞ்ச நாட்கள் இங்கு தங்குவீர்களல்லவா ? அவஸரமொன்றுமில்லையே ?'' என்று கேட்டார்கள்.

குப்புஸ்வாமி:– வந்து நான்கு நாட்கள் ஆகிறது. ஆனாலும் ஸந்நிதானத்தையும் இந்த உபதேசங்களையும் விட்டுப் போக மனம் வரவில்லை.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்களோ கிருஹஸ்தர்கள். அதிலும் உங்களது குமாரர் ஜட்ஜாக இருப்பவர். இங்கே கட்டாயம் இருக்கவேண்டுமென்று நான் வற்புறுத்தினாலும் அது நடக்குமா ?

குப்புஸ்வாமி:– தங்களது கட்டளையை விட மற்றவைகள் பெரியதல்ல. எப்படியும் இன்னும் நாலு நாட்கள் இருந்தே போகலாமென்று முடிவு செய்திருக்கிருேம்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்களும் நானும் முடிவு செய்தால் போதுமா! கடவுளல்லவா அதை முடிவு செய்ய வேண்டும். ஸரி, நாளை காலையிலேயே வாருங்கள் பார்க்கலாம்.

இவ்விதம் கூறி ஸந்நிதானம் ஸ்நானத்துக்குச் சென்று விட்டார்கள். குப்புஸ்வாமி அய்யரோ ஆசார்யாள் சொன்ன வாக்கியத்திலிருந்து மனதில் பலமான ஸந்தேஹம் கொண்டு இந்த லேககரிடம் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டார்.

குப்புஸ்வாமி:–'' கடவுளல்லவா உங்களது பிரயாணத்தை முடிவு செய்யவேண்டும்'' என்று ஸந்நிதானம் கூறிவிட்டார்களே ! அதன் கருத்து என்னவாயிருக்கும் ?

லேககர்:–

केनापि देवेन हृदि स्थितेन यथा नियुक्तोस्मि तथा करोमि ।

கேநாபி தேவேன ஹ்ருதி ஸ்திதேன
யதா நியுக்தோ ऽஸ்மி ததா கரோமி ।

என்பதின் கருத்தைத்தான் பொதுவாகச் சொல்லியிருப்பார்கள்.

குப்புஸ்வாமி:– ''ஸரி இருங்கள்'' என்று உத்தரவிடாமல் கடவுளின் முடிவைப்பற்றி ஸந்நிதானம் பேசியிருப்பதில் ஏதோ ஸந்தேஹம் தோன்றுகிறது.

லேககர்:– எனக்கும் கொஞ்சம் ஸந்தேஹம்தான் தோன்றியது. ஆனுலும் ஸந்நிதானத்தின் எண்ணம் இன்னது என்று அதனுல் மாத்திரம் நாம் ஊஹிக்கமுடியாது. फलानुमेयाः प्रारंभाः (*பலானுமேயா: ப்ராரம்பா:*) என்ற நியாயப்ரகாரம் கார்யம் நடந்த பிறகுதான் அவரது அபிப்ராயம் இன்னதென்று தீர்மானிக்கமுடியும். அது வரையில் நாம் காத்திருந்து பார்க்கவேண்டியதுதான். எதற்கும் நாளைக்கு எல்லாம் தெரியலாம்.

குப்புஸ்வாமி:– சென்ற நான்கு நாட்களும் ''நாளை ஸாயங்காலம் வாருங்கள்'' என்றுதான் ஒவ்வொரு நாளும் சொல்லி வந்திருக்கிருர். இன்று மாத்திரம் நாளை காலையில் வரும்படி உத்தரவாகியிருக்கிறதே; இதிலிருந்து பல ஸந்தேஹங்கள் உண்டாகின்றனவே, மனதிலும் ஏதோ திகில் ஏற்படுகிறதே !

லேககர்:– இதிலெல்லாம் நீங்கள் ஒருவித ஸந்தேஹமும் கொள்ளவேண்டாம். ஸந்நிதானம் ஏதோ ஓர் அந்தரங்க அபிப்ராயத்தில் உங்களை அனுக்ரஹிக்க வேண்டுமென்பதற்காகத்

தான் நாளை காலையில் வரச்சொல்லியிருக்கிறார்கள். அவரது உத்தரவுப்படியே காலையில் நீங்கள் சென்று தரிசனம் செய்யுங்கள்.

ஸ்ரீஸந்நிதானம் உத்தரவுப்படியே மறுநாள் காலை 9 மணிக்கு ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யரும், அவர் தகப்பனாரும் இந்த லேககருடன் ஸ்ரீஸந்நிதானத்தை தரிசனம் செய்ய வந்தார்கள்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் தெரிவிக்க வேண்டியது ஏதாவது இருந்தால் தெரிவிக்கலாம்.

குப்புஸ்வாமி:– நாங்கள்தான் இன்னும் நான்கு நாட்கள் இருக்கப்போகிறோமே !

ஸ்ரீஸந்நிதானம்:– நான்கு நாட்கள்தானா ? (சிரிப்புடன்) பல வருஷங்கள் ஸௌக்யமாக இருக்கப் போகிறீர்கள். உங்களது குமாரரும் உயர்ந்த பதவியில் பலகாலம் இருக்கப்போகிறார்.

குப்புஸ்வாமி:– (ஆனந்த பாஷ்பத்துடன்) சிருங்கேரியில் தங்கப்போகும் காலத்தைத்தான் குறிப்பிட்டேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– நேற்றுதான் ‘கடவுளின் முடிவுதான் அது’ என்று சொன்னோமே.

குப்புஸ்வாமி:– நாங்கள் இன்னும் எவ்வளவோ ஸந்தேஹங்களைக் கேட்கவேண்டியிருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் இப்பொழுதே ஸாவகாசமாக உங்களது ஸந்தேஹங்களைக் கேட்கலாமே. உங்கள் மனதில் உள்ளதை இப்பொழுதே கேளுங்கள். இன்னும் நான்கு நாழிகை வரையில் நீங்கள் பேசலாம். அவஸரம் ஒன்றும் இல்லை. இன்று அஷ்டமியாகையால் பாஷ்ய பாடமும் கிடையாது. ஸங்கோசப்படாமல் வேண்டியதைக் கேளுங்கள்.

குப்புஸ்வாமி:– உலகத்தில் வித்யாப்யாஸத்தால் அறிவு வளர்ச்சியடைகிறது என்றே எல்லோரும் ஸாதாரணமாக நம்புகிறார்கள். ஆனால் என் விஷயத்தில் மாத்திரம் அது விபரீத பலனையே கொடுக்கும்போலிருக்கிறதே !

ஸ்ரீஸந்நிதானம்:- வித்யாப்யாஸம் என்பதால் லௌகிக வித்யாப்யாஸத்தைத் தானே குறிப்பிடுகிறீர்கள்? லௌகிக வித்யாப்யாஸத்தால் லௌகிக அறிவு நன்ருக விருத்தி அடைவதில் தவறில்லேயே! நீங்களோ நியாயவாத (வக்கீல்) படிப்பை நன்ருகப் படித்திருக்கிறீர்கள். அந்த விஷயத்தில் உங்களது அறிவும் விசாலமாகத் தானிருக்கிறது. இதில் என்ன தவறு ?

குப்புஸ்வாமி:- ஜன்ம ஸாபல்யத்திற்கு உதவாத படிப்பல்லவா அது ?

ஸ்ரீஸந்நிதானம்:- साफल्यं என்ற பதத்தைத் தமிழில் எழுதினுல் சாபல்யம் என்றல்லவா ஆகிறது. அவ்வித சாபல்யம் உங்களிடம் இல்லேயே என்ரு கவலேப்படுகிறீர்கள்?

குப்புஸ்வாமி:- द्रव्यचापल्यम् (*த்ரவ்யசாபல்யம்*) कुटुंबचापल्यं (*குடும்பசாபல்யம்*) இதெல்லாம் லௌகிக வித்யையினுலும் லௌகிக வேஷபாஷாதிகளாலும் விருத்தியாகுமே தவிர ஜன்ம ஸாபல்யம் அதனுல் ஏற்படாதே என்பதால் அந்த லௌகிக ஆங்கிலப் படிப்பால் ஜன்மாவை வீணுக்கி விட்டோமே என்றுதான் அனுதாபப்படுகிறேன். இதற்காகத்தான் जन्मसाफल्यं (*ஜன்மஸாபல்யம்*) என்ற பதத்தை உபயோகித்தேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- ஆங்கில வித்யையைக் கற்பதனுல் அதிக தோஷம் இல்லே. விதேச பாஷைகளும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம்தான். விதேச ஆசாரங்களே அனுஸரிக்காமல் இருக்கவேண்டியதுதான் முக்கியம். உங்களிடமும், உங்கள் குமாரர் சந்திரசேகரய்யரிடமும் நல்ல ஸதாசாரங்களே இருப்பதைப் பார்த்ததில் நாங்கள் பரம ஸந்தோஷமடைகிருேம்.

குப்புஸ்வாமி:-ஸந்நிதானத்தின் அனுக்ரஹத்தால் வைதிக ஆசாரங்களே அனுஸரிக்கும் எண்ணமும், ப்ரவிருத்தியும் எங்களுக்கு மேன்மேலும் விருத்தி அடையவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். கல்வியினுல் ஞானம் வரவேண்டியிருக்க, அக்ஞானமே எனக்கு விருத்தியாவதைத் தெரிவித்து அதற்குப் பரிஹாரம் தெரிந்துகொள்வதற்காகத்தான் அதை முதலில் கூறினேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- நானும் அதற்குப் பதில் சொல்லிவிட்டேனே. லௌகிகக் கல்வியினுல் லௌகிக ஞானம்தான் ஏற்படும் என்று

நான் முன்பே கூறவில்லையா ? 'न्यग्रोधबीजमुप्त्वा शोचन्निव नाम्रमस्येति' (ந்யக்ரோதபீஜம் உப்த்வா ஶோசன்னிவ நாம்ரமஸ்யேதி – ஆலம் விதையை ஊன்றி விட்டுப் பின்னுல் அதில் மாம்பழம் காய்க்கவில்லையே என்று வருந்துவதைப்போல்) என்ற நியாய ப்ரகாரம் லௌகிகப் படிப்பினுல் ஆத்மஞானம் வரவில்லையே என்று வருந்தலாமா ?

குப்புஸ்வாமி:– லௌகிகப் படிப்பை மாத்திரம் நான் கூறவில்லை. ஆங்கிலப் படிப்புடன் ஸம்ஸ்கிருத ஞானத்தையும் கூடியவரையில் நான் விருத்தி செய்துகொண்டிருக்கிறேன். உபயுக்தமான வேத பாகங்களையும் உபநிஷத்துக்களையும் குருமுகமாகவே கற்றுக் கொண்டிருக்கிறேன். வைதிக ஆசாரங்களையும் கூடியவரையில் விடாமல் பின்பற்றி வருகிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– அதனுல்தான் ஜன்மஸாபல்யம் ஏற்படவில்லையே என்ற பச்சாதாப எண்ணமாவது உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதுவே மோக்ஷமார்க்கத்தின் அடிப்படையாகும். இதைத்தான் சுபேச்சா (शुभेच्छा) என்று கூறுகிருர்கள்.

''स्थितः किं मूढ एवास्मि प्रेक्ष्येऽहं शास्त्रसज्जनैः ।
वैराग्यपूर्वमिच्छेति सा शुभेच्छा निगद्यते ॥

ஸ்தித: கிம் மூட ஏவாஸ்மி ப்ரேக்ஷ்யேऽஹம் ஶாஸ்த்ர ஸஜ்ஜனை: ।
வைராக்ய பூர்வமிச்சேதி ஸா ஶுபேச்சா நிகத்யதே ॥

(''எல்லாவற்றிலும் வெறுப்புக்கொண்டு, நான் மூடனுகவே இருக்கிறேனு ? சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் கடாக்ஷிக்கப் படுகிறேனு?'' என்று எண்ணி ஆத்மதத்துவத்தை அறிந்து கொள்வதில் தீவிரமான விருப்பம் சுபேச்சை எனப்படும்.) மோக்ஷமாகிய உயர்ந்த மாளிகைக்குச் செல்லக்கூடிய ஏழு படிகளில் முதல் படியாக இதை வாஸிஷ்டம் முதலிய கிரந்தங்களில் முன்னேர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இந்த சுபேச்சா (शुभेच्छा) என்ற முதற்படி ஏற்படுவதற்கே பல ஜன்மாக்கள் வேண்டும். கர்மபக்தி மார்க்கங்களில் பலகாலம் ஈடுபட்டவர்களுக்குத் தான் இந்த முதற்படியே ஏற்படக்கூடுமாகையால் நீங்கள் நல்ல வழியில்தான் சென்று கொண்டிருக்கிறீர்கள்.

குப்புஸ்வாமி:– இப்படியே ஸன்மார்க்கத்தில் சென்று கொண்டு ஜன்மஸாபல்யத்தை அடையவேண்டுமென்பதுதான் என் விருப்பம். அதற்கு அனுக்ரஹிக்கும்படி வேண்டுகிறேன். மஹான்களின் அனுக்ரஹத்தால்தான் அது கைகூடும்போலிருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்: जन्मचापल्यं (*ஜன்மசாபல்யம்*) जन्मसाफल्यं (*ஜன்மஸாபல்யம்*) இவ்விரண்டில் உமக்கு எது வேண்டும் ? (சிரிப்பு)

குப்புஸ்வாமி:– இரண்டிற்கும் உள்ள வித்யாஸம் தெரிந்தால் தான் அதைக் கூறலாம்.

ஸ்ரீஸந்நிதானம்:– जन्मचापल्यं (*ஜன்மசாபல்யம்*) என்ருல் மறுஜன்மா கிடைக்கவேண்டுமென்ற விருப்பம். जन्मसाफल्यं (*ஜன்மஸாபல்யம்*) என்ருல் ஆத்மஞானத்தை ஸம்பாதித்து இனி ஜன்மாவே ஏற்படாமல் செய்துகொள்வது. இதில் உங்களுக்கு எது வேண்டும் ?

குப்புஸ்வாமி:– முதலாவதை ஒருவரும் விரும்பமாட்டார்களே. ஜன்மாக்களை ஒழிப்பதாகிய மோக்ஷத்தைத்தானே எல்லோரும் விரும்புவார்கள். அதுதான் வேண்டும்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிச் சொல்லாதீர்கள். மோக்ஷமே வேண்டாம். மறுஜன்மாவே வேண்டும் என்று விரும்பும் மேதாவிகளும் உலகத்தில் இல்லாமலில்லை.

अपि बृन्दावने शून्ये शृगालत्वं स इच्छति ।
नतु निर्विषयं मोक्षं कदाचिदपि गौतम ॥

அபி ப்ருந்தாவனே ஶூன்யே ச்ருகாலத்வம் ஸ இச்சதி ।
நது நிர்விஷயம் மோக்ஷம் கதாசிதபி கௌதம ॥

(சூன்யமான (ஒருவருமில்லாத) ப்ருந்தாவனத்தில் நரியாகப் பிறப்பதையும் அவன் விரும்புவான். ஆனுல் போக விஷயமே இல்லாத மோக்ஷத்தை ஹே கௌதம, ஒருக்காலும் விரும்பமாட்டான்.) என்று கூறப்பட்டிருப்பதை நீங்கள் கேட்டதில்லையா ?

குப்புஸ்வாமி:- கேட்டிருக்கிறேன். அது பக்தியின் பெருமையைக் காட்டக்கூடிய வாக்கியமல்லவா ! யாராவது குள்ளநரியாகப் பிறக்கவேண்டுமென்று விரும்புவார்களா ?

ஸ்ரீஸந்நிதானம்:- பக்தியின் பெருமையைச் சிலர் கொண்டாடுவதுபோல் புக்தியின் பெருமையையும் சில மேதாவிகள் கொண்டாடலாமல்லவா ! (சிரிப்பு)

குப்புஸ்வாமி:- இந்த ஸந்தர்ப்பத்தில் भक्तिः (பக்தி) भुक्तिः (புக்தி) என்ற பதங்களின் விசேஷ அர்த்தம் புரியவில்லையே.

ஸ்ரீஸந்நிதானம்:- கூறுகிறேன் கேளுங்கள்: பக்தி என்றால் பகவத் கதாசிரவணம், கீர்த்தனம் முதலானவைகள். புக்தி என்றால் விஷயபோகங்கள். ஆகவே, இந்த ஜன்மாவில் அனுபவித்த சுகங்கள் போதாதென்று, அந்த விஷய சுக அனுபவத்திற்காகவே மறுஜன்மா வேண்டும் என்று விரும்பும் மேதாவிகள்தான் உலகில் அதிகம். அவ்விதம் மறுஜன்மா வேண்டும் என்று ஆவல் கொள்வதுதான் (जन्मचापल्यं) (ஜன்மசாபல்யம்) என்ற பதத்தால் குறிப்பிடப்பட்டது. இரண்டுக்கும் வித்யாஸம் புரிந்ததா?

குப்புஸ்வாமி:- அப்படியானால் அவ்விதமான ஜன்மசாபல்ய (जन्मचापल्यं) மானது எனக்குமட்டுமில்லை; என் வம்சத்தாருக்கே வேண்டாம் என்றே நான் வேண்டிக் கொள்கிறேன். அது இருக்கும்வரை जन्मसाफल्यं (*ஜன்மஸாபல்யம்*) ஒருநாளும் ஏற்படாதல்லவா ? தமிழ் எழுத்தில் साफल्यं - चापल्यं இரண்டும் ஒரே விதமாயிருந்தபோதிலும் கிரந்தாக்ஷரத்திலுள்ள ஸகாரத்தையே இவ்வித ஸந்தர்ப்பங்களில் சேர்த்துக்கொள்கிறோம். தவிரவும் உச்சரிப்பில் வித்யாஸம் நன்றாகத் தெரியும். அந்தந்த ஸந்தர்ப்பங்களை அனுஸரித்து உச்சாரணபேதத்தை தமிழர்களிடம் இன்றும் காணலாம்.

ஸ்ரீஸந்நிதானம்:- அதனால் ஒரு தோஷமும் கிடையாது. ஸம்ஸ்கிருத பதத்தைத் தமிழில் உச்சரிக்க முடியவில்லை என்றால் அது தோஷமாகுமா? தமிழில் உள்ள வாழைப்பழம் என்பதை ஸம்ஸ்கிருத பாஷையிலோ மற்ற பாஷைகளிலோ ஸரிவர உச்சரிக்க முடியுமா? ஆகையால் அது தோஷமாகாது. இது இருக்கட்டும். प्रकृतमनुसरामः உங்களுக்கு ஜன்மஸாபல்யம் வேண்டும் அவ்வளவுதானே.

அதற்குள்ள ஸாதனங்களை நீங்கள் செய்து வந்தால் பலனும் அவசியம் ஏற்பட்டே தீரும்.

குப்புஸ்வாமி:- ஸந்நிதானம் முன்பு குறிப்பிட்டபடி शुभेच्छा (*சுபேச்சா*) என்றதான பூமிகை(படி)யாவது எங்களுக்குக் கைகூடியிருந்தால் அதுவே பெரிய பாக்கியமாகும். அதற்கு அடுத்த படியையும் நாங்கள் அடைய விரும்புவதால் அதையும் ஸந்நிதானம் காண்பித்தால் அதற்கும் முயற்சி செய்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- शुभेच्छा (*சுபேச்சா*) என்பது கிடைத்து விட்டதா என்பதை லக்ஷணத்தால் நீங்களேதான் தெரிந்து கொள்ளவேண்டும். विचारणा (*விசாரணா*) என்பதை இரண்டாவது ஞானபூமியாகச் சொல்வார்கள். யோக வாஸிஷ்டத்தில் உத்பத்தி ப்ரகரணத்தில் வரும் லவணோபாக்யான முடிவில் ஞானபூமிகளைப் பற்றி விஸ்தாரமாக கூறப்பட்டிருக்கிறது. அதில்,

शास्त्रसज्जनसंपर्कवैराग्याभ्यासपूर्वकम् ।
सदाचारप्रवृत्तिर्या प्रोच्यते सा विचारणा ॥

சாஸ்த்ர ஸஜ்ஜன ஸம்பர்க வைராக்யாப்யாஸ பூர்வகம் ।
ஸதாசார ப்ரவ்ருத்திர்யா ப்ரோச்யதே ஸா விசாரணா ॥

(உபநிஷத்துக்கள், ஸாதுக்களின் ஸங்கம், வைராக்யம் இவற்றை அடிக்கடி எப்பொழுதும் அப்யாஸம் செய்து கொண்டு ஸதாசாரங்களையே அனுஷ்டிப்பது 'விசாரணா' எனப்படும்.) என்ற சுலோகத்தால் இரண்டாவது பூமிகையின் லக்ஷணம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இந்த லக்ஷணம் நம்மிடம் இருக்கிறதா என்று நாமேதான் பார்த்துத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

குப்புஸ்வாமி:- சுபேச்சா என்ற முதல் படியில்தான் நான் இருப்பதாக நினைத்திருக்கிறேன். இரண்டாவது பூமிகையான विचारणा (*விசாரணா*) என்பதின் லக்ஷணத்தைப் பார்த்தால் அதுவும் எனக்குக் கைகூடியிருப்பதுபோல் காண்கிறதே !

ஸ்ரீஸந்நிதானம்:- ஸ்தூலமாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். सदाचारप्रवृत्तिः (*ஸதாசாரப்ரவ்ருத்தி*) என்பதற்கு வெறும் ஆசாரம் என்று அர்த்தமில்லை. संन्यासपूर्वकश्रवणमनने एवात्र सदाचारः, अन्यस्य तु चित्तशुद्धिमात्रहेतुत्वेन प्रागेव सिद्धत्वात् (*ஸந்யாஸ பூர்வக*

ச்ரவணமனனே ஏவாத்ர ஸதாசார:, அன்யஸ்ய து சித்தசுத்தி மாத்ரஹேதுத்வேன ப்ராகேவ ஸித்தத்வாத்) என்று அந்த சுலோக வியாக்யானத்தில் விளக்கப்பட்டிருக்கிறது.

குப்புஸ்வாமி:– ஸாதாரணமாக ஸதாசாரம் என்பதற்கு அந்தந்த வர்ணாச்ரமோசிதமான கர்மானுஷ்டானங்கள் என்றுதான் அர்த்தம் கூறவேண்டுமல்லவா?

ஸ்ரீஸந்நிதானம்:– ஸந்தர்ப்பத்தை அனுஸரித்துத்தான் பதங்களுக்கு அர்த்தத்தைத் தீர்மானிக்க வேண்டும். கர்ம காண்ட பிரகரணத்தில் 'सदाचारः' (*ஸதாசார:*) என்ற பதம் வந்தால் சிஷ்டாசாரம் என்றுதான் அர்த்தம் கூறவேண்டும்.

'श्रुतिः स्मृतिस्सदाचारः स्वस्य च प्रियमात्मनः' ।

ச்ருதி:ஸ்மிருதி:ஸதாசார:ஸ்வஸ்ய ச ப்ரியம் ஆத்மன: |

என்றும் 'आचारश्चैव साधूनां' (*ஆசாரச்சைவ ஸாதூநாம்*) என்றும் மனுஸ்மிருதியில் காணப்படும் வாக்கியங்களுக்கு அந்த பிரகரணத்தை அனுஸரித்து சிஷ்டாசாரம் என்றுதானே அர்த்தம் கூறப்பட்டிருக்கிறது?

குப்புஸ்வாமி:– அதே அர்த்தத்தை இங்கேயும் அங்கீகரிப்பதில் என்ன தவறு என்று தெரியவில்லையே.

ஸ்ரீஸந்நிதானம்:– 'अन्यस्य तु चित्तशुद्धिमात्रहेतुत्वेन प्रागेव सिद्धत्वात्' என்ற வியாக்யான வசனத்தை கவனித்தால் இது விளங்கும். அதாவது, 'स्थितः किं मूढ एवास्मि' (*ஸ்தித:கிம் மூட ஏவாஸ்மி*) என்ற முதல் சுலோகத்தின் வியாக்யானத்தில் शुभेच्छा (*சுபேச்சா*) என்பதைப் பின் வருமாறு விளக்கியிருக்கிறார்.'तथा च निषिद्धवर्जननिष्कामकर्मानुष्ठानप्रयुक्ता साधनचतुष्टयसंपत्तिसहिता आत्मसाक्षात्कारोत्कटेच्छैव प्रथमा भूमिकेत्यर्थः' ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியுடன் ஆத்மஸாக்ஷாத்காரமடைய தீவ்ர ஆவல் கொள்வதே முதலாவது பூமிகையாகும்.

குப்புஸ்வாமி:– அப்படியானால் शुभेच्छा (*சுபேச்சா*) என்ற முதல்படியில்கூட நாங்கள் வந்திருப்பதாகக் கூறமுடியாது போலிருக்கிறதே. ஏனென்றால் எங்களுக்கு ஸாதன சதுஷ்டய ஸம்பத்தியே பூர்ணமாக ஏற்பட்டதாக நினைக்கமுடியவில்லையே !

ஸ்ரீஸந்நிதானம்:- வாஸ்தவம்தான். அவரவர்கள் தீர்மானிக்க வேண்டிய விஷயம்தான் அது.

குப்புஸ்வாமி:- ஸந்நிதானம் முதலில் லக்ஷணம் கூறும்போது முதல் படிக்கு நாங்கள் வந்துவிட்டதாக எண்ணிக் கொண்டோமே. இப்பொழுது அதுவும் ஸரியில்லை என்று அல்லவா ஏற்படுகிறது.

ஸ்ரீஸந்நிதானம்:- நீங்கள் முதல் படிக்கு வந்து கொண்டிருக்கிறீர்கள் என்று தானே கூறினேம். முதல் படியில் ஏறிவிட்டீர்கள் என்று கூறவில்லையே.

குப்புஸ்வாமி:- 'सदाचारः' (*ஸதாசார:*) என்ற பதத்திற்குப் பொருளாக சிரவண மனனங்கள் கூறப்பட்டதற்கு வியாக்யாதா ஏதோ காரணம் காட்டினரே, அதை விளக்கிக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேம்.

ஸ்ரீஸந்நிதானம்: 'अन्यस्य तु सदाचारस्य चित्तशुद्धिमात्रहेतुत्वेन प्रागेव सिद्धत्वात्' என்று வியாக்யாதா காரணம் காட்டுகிறார். அதாவது, ஸாதன சதுஷ்டய ஸம்பத்திக்கு முன்பு சித்த சுத்தி ஏற்படவேண்டும். சித்த சுத்தி ஏற்பட வேண்டுமென்றால் நிஷ்காமமாக வர்ணாச்ரம தர்மங்களை அனுஷ்டிக்க வேண்டும். ஆகவே 'சுபேச்சை' ஏற்படுவதற்கே காரணமான ஸதாசாரமானது அதற்கு முந்தியே இருந்திருக்க வேண்டுமல்லவா? அது ஸ்வதர்மானுஷ்டான ரூபமான ஸதாசாரமாகத்தானே இருக்க முடியும். அதை இரண்டாவது 'விசாரணாபூமியில்' எவ்விதம் சேர்க்க முடியும் என்று கருதியே வியாக்யாதாவானவர் संन्यासपूर्वकश्रवणमनने एवात्र सदाचारः' (ஸந்யாஸத்துடன் செய்யும் சிரவண மனனங்கள்தான் இங்கு ஸதாசாரம் என்பது)என்று ஸதாசாரபதத்தின் அர்த்தத்தைத் தகுந்த காரணங்களுடன் விளக்குகிறார்.

குப்புஸ்வாமி:- அப்படியானால் நாங்கள் இப்பொழுது முதல் பூமிகைக்கே இன்னும் வரவில்லை என்றாகிறது. எங்களுக்கோ ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைய வேண்டுமென்ற தீவ்ர அபிலாஷை இருக்கிறது. நாங்கள் அதற்கு என்ன செய்ய வேண்டும் ?

ஸ்ரீஸந்நிதானம்:- முதலில் நீங்கள் நிதானிக்கவேண்டும். அவஸரப்படக்கூடாது. ஏனென்றால் மனதில் ஏற்பட்ட அழுக்குகளெல்லாம் விலகவேண்டும். அந்த அவித்யாகாம

கர்மாதி அழுக்குகளோ பல பல கல்பகோடி காலங்களாக மனதில் ஊறிப்போய் கெட்டிப்பட்டிருக்கின்றன. அவைகளை சுத்தம் செய்வது எளிதாகுமா ?

குப்புஸ்வாமி:– குருவின் அனுக்ரஹமும் கருணையும் இருந்தால் ஸாதிக்க முடியாதது உண்டா ?

ஸ்ரீஸந்நிதானம்:– தன் பசி தீரவேண்டுமானால் தானேதான் சாப்பிடவேண்டும், தனக்கு வியாதி போகவேண்டுமானால் தானேதான் மருந்து சாப்பிடவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாததா? அதுபோல் சிஷ்யனுடைய அக்ஞானம் விலகி அவன் மோக்ஷ ஸுகத்தை அடைவதற்குள்ள வழியையும், ஸாதனங்களையும் தான் ஆசார்யர் உபதேசிக்க முடியும். வைத்தியம் செய்பவர் மருந்து சாப்பிட்டால் ரோகிக்கு ரோகம் விலகுமா ? ஆரோக்யமுண்டாகுமா ? அதுபோல் ஆசார்யர் ஸாதனானுஷ்டானம் செய்வதால் சிஷ்யனுடைய அஞ்ஞானம் விலகுமா? ஆகையால் ஆசார்யார் காட்டும் வழியில் சென்று சிஷ்யன் ஸாதனாப்யாஸம் செய்தால்தான் அநாதிகாலமாக உள்ள இந்த அஞ்ஞானம் விலகக் கூடும். நீங்கள் உபாகர்மா முதலிய காலங்களில் ஸங்கல்பம் செய்து கொள்ளும் பொழுது अनाद्यविद्यावासनया प्रवर्तमाने अस्मिन्महति संसारचक्रे पुनः पुनर्जनित्वा *அநாத்யவித்யாவாஸநயா ப்ரவர்த்தமானே அஸ்மின் மஹதி ஸம்ஸாரசக்ரே புந: புந: ஜநித்வா* – அநாதியான அவித்யையின் வாஸனையால் ஏற்படுகிற இந்த ஸம்ஸாரச் சுழலில் திருப்பித் திருப்பிப் பிறந்து) என்று சொல்லிவரும் வாக்கியத்தின் பொருளை கவனித்துப் பார்த்தால் இது விளங்குமே! அநாதிகாலமாகத் தொடர்ந்து வருகிற இந்த ஸம்ஸார பந்தம் ஒரு நொடியில் விலகவேண்டுமென்றால் அது நடக்கக்கூடிய காரியமா ? அதற்கு பக்தவத்ஸலரான பகவானையே ஸதா ஸேவித்து வாருங்கள்.

குப்புஸ்வாமி:– உபாகர்மாதி கர்மாக்களைச் செய்யும் பொழுது ஆரம்பத்தில் ममोपात्तसमस्तदुरितक्षयद्वारा श्रीपरमेश्वरप्रीत्यर्थम् (*மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷய த்வாரா ஸ்ரீபரமேச்வர ப்ரீத்யர்த்தம்*) என்று மாத்திரம் ஸங்கல்பம் செய்து கொண்டால் போதாதா? இவ்வளவு பெரிய ஸங்கல்பங்கள் எதற்கு என்றே இதுவரையில் நினைத்துக் கொண்டிருந்தேன். ஸந்நிதானத்தின் அருள்வாக்கைக் கேட்டபிறகுதான் அதன் தத்துவம் தெரிகிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– இதில் என்ன தத்துவத்தை நீங்கள் தெரிந்து கொண்டீர்கள்?

குப்புஸ்வாமி:– நாங்கள் இந்த ஜன்மாவைப் போல் பல ஜன்மாக்களை எடுத்திருக்கிறோம் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகவே, முன்னோர்கள் கர்மாரம்பகாலத்தில் देशकालौ संकीर्त्य (தேசகாலௌ ஸங்கீர்த்ய) என்று விதித்திருக்கிறார்கள் என்பதை இதனால் தெரிந்து கொண்டோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– அது மட்டுமல்ல. சித்தோபதேச ப்ரகரணத்தில்

कतिधा हृदनुबभूविथ तरुतृणकृमियोनिचक्रचंक्रमणम् ।
दिष्टया मानुषभावात् पारस्पृगिवासि मात्विह प्रमदः ॥

கதிதா ஹ்ருதனுபபூவித தரு த்ருண க்ருமி யோனி சக்ர
சங்க்ரமணம் ।
திஷ்ட்யா மானுஷ பாவாத் பாரஸ்ப்ருகிவாஸி மா –
த்விஹ ப்ரமத: ॥

(ஹே மனமே, மரம், புல், புழு முதலான பிறவிச் சுழலில் திரும்பித் திரும்பி வந்து எத்தனை துன்பம் அனுபவித்தாய். தைவவசமாக மனிதப்பிறவி அடைந்திருப்பதால் இப்பொழுது அக்கரையைத் தொடுகிறவன் போல் இருக்கிறாய். இங்கு கவனக் குறைவாக இருக்காதே.)

என்று ஆசார்யாள் கூறியிருப்பதுபோலும், ப்ரபோத ஸுதாகரத்தில் (சு.13)

नरपशुविहङ्गतिर्यग्योनीनां चतुरशीतिलक्षाणाम् ।
कर्मनिबद्धो जीवः परिभ्रमन् यातना भुंक्ते ॥ चरमस्तत्र नृदेहः-

நர பஶுவிஹங்க திர்யக் யோநீநாம் சதுரஶீதி லக்ஷாணாம் ।
கர்ம நிபத்தோ ஜீவ: பரிப்ரமன் யாதநா புங்க்தே ॥
சரமஸ்தத்ர ந்ருதேஹ:

(கர்மாவினால் கட்டுப்பட்ட ஜீவன், மனிதர், பசு, பறவை, மிருகம் முதலான 84 லக்ஷம் பிறவிகளில் சுற்றிக் கொண்டு துன்பங்களை அனுபவிக்கிறான். அதில் கடைசியில் ஏற்படுவது மனிதப்பிறவி.)

என்று பகவத்பாதாள் கூறிய ப்ரகாரமும் நாம் 84 லக்ஷம் ஜீவராசிகளுள் பல ஜன்மாக்களில் பல தடவை பிறந்து இறந்து பல கஷ்டங்களையும் அனுபவித்த பிறகு ஏதோ ஒரு ஸத்கர்மபரிபாக வசத்தால் இந்த மனிதப்பிறவியை அடைந்திருக்கிறோம். தண்ணீரில் மூழ்கினவன் பல கஷ்டங்களுக்குப் பிறகு கரையை அடைவதுபோல் நாம் இந்த ஸம்ஸார ஸாகரத்தின் கரையின் விளிம்பைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். அதாவது இந்த மனிதப்பிறவியை அடைந்திருக்கிறோம். இந்த மஹா பாக்யம் கிடைத்தும் கர்மானுஷ்டானம், ஆத்மவிசாரம் முதலிய ஸத்கார்யங்களில் அதை உபயோகப்படுத்தாமல் பாஹ்ய லௌகிக விசாரங்களினால் வீணடிக்கிறோமே ! இனிமேலாவது ஸன்மார்க்கத்தில் செல்ல முயற்சிக்கவேண்டும் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகத்தான் முன்னோர்கள் आदौ देशकालौ संकीर्त्य (*ஆதௌ தேசகாலௌ ஸங்கீர்த்ய*) என்று ஒவ்வொரு கர்மாக்களின் ஆரம்பத்திலும் தேச காலங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளும்படி ஒரு ஸம்பிரதாயத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள். அத்துடன் समस्तदुरितक्षयद्वारा श्रीपरमेश्वरप्रीत्यर्थम् (*ஸமஸ்த துரிதக்ஷய த்வாரா ஸ்ரீ பரமேச்வரப்ரீத்யர்த்தம்*) என்றும் ஸங்கல்பம் செய்துகொள்ளும்படி விதித்திருக்கிறார்கள். ஆகையால் ஆத்ம ஞானம், மோக்ஷம் வரையிலுள்ள எல்லா பலன்களையும் அடைவதற்கு ஸதா பகவானை கர்மாக்களால் ஆராதித்து அவரை வேண்டிக்கொள்வதுதான் நலம்.

குப்புஸ்வாமி:– ஈசுவரனால் முடியாததைக்கூட குரு ஸாதித்துத் தருவார் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்குமே குருவான ஆதிசங்கரபகவத்பாதர் நமக்கு என்ன உபதேசம் செய்கிறார் என்பதைப் பாருங்கள் –

मस्तकन्यस्तभारादेर्दुःखमन्यैर्निवार्यते ।
क्षुधादिकृतदुःखं तु विना स्वेन न केनचित् ॥

पथ्यमौषधसेवा च क्रियते येन रोगिणा ।
आरोग्यसिद्धिर्दृष्टाऽस्य नान्यानुष्ठितकर्मणा ॥

மஸ்தக ந்யஸ்த பாராதேர் துக்கமந்யைர் நிவார்யதே ।
க்ஷுதாதி க்ருத துக்கம் து விநா ஸ்வேந ந கேநசித் ॥

பத்யமௌஷத ஸேவா ச க்ரியதே யேன ரோகிணு |

ஆரோக்ய ஸித்திர் த்ருஷ்டாSஸ்ய நாந்யா னுஷ்டித கர்மணு ||

(தலையில் சுமையைச் சுமந்துகொண்டிருப்பதால் ஏற்படும் துன்பத்தை (சுமையை இறக்கிவைத்து)ப் பிறர்களால் போக்க முடியும். ஆனுல் பசி முதலியவற்ருல் ஏற்படும் துன்பத்தைத் தன்னைத் தவிர வேறு ஒருவராலும் போக்க முடியாது.)

(பத்தியத்தையும், மருந்து சாப்பிடுவதையும் எந்த ரோகி நடத்திவருகிருனே அவனுக்குத்தான் ஆரோக்கியம் ஏற்படுவது உலகில் காணப்பட்டிருக்கிறது. ஒருவர் மருந்து சாப்பிடுவதாலும், பத்தியமாக இருப்பதாலும் வேருெருவருக்கு ஆரோக்கியம் ஏற்படுவதைக் கண்டதில்லை.)

இந்த விவேகசூடாமணி சுலோகங்களின் (சு.54,55) அர்த்தத்தைக் கவனித்துப்பார்த்தால் நான் சொல்வது உங்களுக்கு நன்கு விளங்கும். ஞானமோ, மோக்ஷமோ கடையில் வாங்கக்கூடிய ஸாமான்களில்லை. பரலோகத்தில் சென்ருலும் அங்கும் அது கிடைக்காது. பிரம்மலோகம் வரையில் சென்று பார்த்தாலும், அந்த ஞானத்தையோ, மோக்ஷத்தையோ ஒருவரும் தயாராக மற்ற ஸாமான்கள் போல் வைத்திருப்பதாகக் கூற முடியாது. தேவலோகத்தில் அமிருதம் இருந்ததை கருடபகவான் வெகு சிரமப்பட்டு மனுஷ்ய லோகத்துக்குக் கொண்டுவந்தார் என்று கேள்விப்படுகிருேம். அவ்விதம் மோக்ஷம் என்பது ஒரு பொருளாயிருந்தால் அதை யாராவது உங்களுக்கு எடுத்துத் தர முடியும்.

குப்புஸ்வாமி:- ईशानात् ज्ञानमन्विच्छेन्मोक्षमिच्छेज्जनार्दनात् ।

ஈமாணுத் ஞானமந்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜனர்தனத் |

(ஈசுவரனிடமிருந்து ஞானத்தை அடைய விரும்ப வேண்டும். விஷ்ணுவிடமிருந்து மோக்ஷம் அடைய விரும்ப வேண்டும்.) என்பது போன்ற வசனங்களால் பகவானே ஞானத்தையும் மோக்ஷத்தையும் அளிப்பார் என்று கூறப்பட்டிருக்கிறதே. ஆகையால் பகவானை ஸேவித்தால் அவ்விரண்டும் கிடைக்காதா?

சந்திரசேகரய்யர்:– அதிருக்கட்டும்.

अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः ।

அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ।

என்று கீதாசார்யரே தன் பக்தனை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பதாகக் கூறுகிறாரே. அந்த கீதாசார்யரை ஸேவித்தால் நமக்கு மோக்ஷம் கிடைக்காதா?

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்களிருவரும் கேட்ட கேள்வி ஸரியான கேள்விதான். அதிலும் சந்திரசேகரய்யர் கேட்டது மிக துரூஹமானது. அதை மெச்சுகிறேன். அதற்கு பதிலளிக்கும் முன் உங்களை நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். ஸம்ஸார துக்கத்திலிருந்து நம்மைக் கரையேற்றி நமக்கு மோக்ஷ ஸுகத்தை அளிப்பதற்காகவே அவதாரமெடுத்த நமது ஞானகுருவான சங்கரபகவத்பாதாள் விவேக சூடாமணியில் கூறியிருப்பதைப் பாருங்கள்:

अविद्याकामकर्मादिपाशबन्धं विमोचितुम् ।
कः शक्नुयाद्विनाऽऽत्मानं कल्पकोटिशतैरपि ॥ (श्लो. ५७)

ऋणमोचनकर्तारः पितुः सन्ति सुतादयः ।
बन्धमोचनकर्ता तु स्वस्मादन्यो न कश्चन ॥ (श्लो. ५३)

அவித்யா காம கர்மாதி பாஶ பந்தம் விமோசிதும் ।
க: ஶக்நுயாத் விநா ஆத்மாநம் கல்பகோடி ஶதைரபி ॥ (சு.57)

ருண மோசந கர்த்தார: பிது: ஸந்தி ஸுதாதய: ।
பந்த மோசந கர்த்தா து ஸ்வஸ்மாதந்யோ ந கச்சன ॥ (சு.53)

(முதலில் அவித்யை, அதனால் காமம், அதனால் கர்மா இது முதலானவற்றால் ஏற்படும் பந்தத்தை விலக்குவதற்கு நூறு கோடி கல்பகாலம் ஆனாலும் தன்னைத் தவிர வேறு யாரால் முடியும்? கடன் உபாதியிலிருந்து தந்தையைத் தநயர்களால் விடுவிக்க முடியும். ஆனால் ஸம்ஸார பந்த உபாதியிலிருந்து தன்னைத் தானேதான் விடுவித்துக் கொள்ளவேண்டும். பிறரால் இயலாது.)

கீதாசார்யரான கிருஷ்ணபரமாத்மாவும்கூட கீதையில் 'उद्धरेदात्मनात्मानं' (உத்தரேதாத்மநா ஆத்மாநம்) என்று தன்

முயற்சியால்தான் மனிதன் மோக்ஷஸுகம் பெற முடியும் என்பதை விளக்கியிருக்கிருரே. இவ்விருவரது வாக்கியங்களும் பிரமாணமில்லையா?

சந்திரசேகரய்யர்:- பிரமாணமாக இருக்கக் கூடுமென்றே நம்புகிரும். ஆனுலும் அது நன்கு விளங்கவில்லை. எங்களது கேள்விகளுடன் ஸந்நிதானம் கேட்ட கேள்விக்கும் சேர்த்து ஸந்நிதானம்தான் பதிலளிக்க வேண்டுமென்று வணக்கத்துடன் பிரார்த்திக்கிறேன். ஏனென்ருல் ஏற்கெனவே இருந்த ஸாதாரண ஸந்தேஹம் இப்பொழுது மேலும் பலப்பட்டு ஊர்ஜிதமாகிவிட்டது. இதற்கு ஸந்நிதானம்தான் விமோசனம் செய்யவேண்டும். வேறு வழி இல்லை.

ஸ்ரீஸந்நிதானம்:- ஸந்தேஹங்களை நிவர்த்தி செய்து கொள்வதும் உங்கள் கையில்தான் இருக்கிறது. நான் ஸந்தேஹம் தீரக்கூடிய வழியைத்தான் காட்ட முடியும்.

சந்திரசேகரய்யர்:- (உடனே எழுந்து) ஆகா, அதுவே போதும்.

अज्ञानतिमिरान्धस्य ज्ञानांजनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

அக்ஞாநதிமிராந்தஸ்ய ஞாநாஞ்ஜனஶலாகயா |
சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீ குரவே நம: ||

(அக்ஞானம் என்னும் திமிரரோகத்தால் பார்வை தெரியாமல் குருடாயிருக்கிறவனுக்கு ஞானம் என்ற அஞ்ஜநத்தைத் தடவி நேத்திர வியாதியைப் போக்கிக் கண்ணைத் திறக்கும்படி செய்து பார்வையைக் கொடுத்த குருவுக்கு நமஸ்காரம்.) என்று கூறிக்கொண்டு விழுந்து விழுந்து கண்ணீர் பெருக வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டார். குப்புஸ்வாமி அய்யரும் அவ்விதமே வணங்கிவிட்டு ஸந்நிதானத்தின் பதிலை எதிர்பார்த்து நின்ருர்.

ஸ்ரீஸந்நிதானம்:- நீங்கள் இப்பொழுது சொன்ன சுலோகத்திலேயே உங்களது எல்லா கேள்விகளுக்கும் பதிலிருக்கிறது. நன்ருக விசாரித்துப் பார்த்தால் அது விளங்கக் கூடும்.

சந்திரசேகரய்யர்:– ஸந்நிதானத்தின் வாக்குமூலமாகவே அந்தப் பதிலை அறிய விரும்புகிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்: उद्धरेदात्मनात्मानं என்பதும் 'अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि मा शुचः' என்பதும், ஒன்றுக்கொன்று விருத்தம்போல் தோன்றுகிறதல்லவா? அப்படியே बन्धमोचनकर्ता तु स्वस्मादन्यो न कश्चन என்ற ஆசார்ய வாக்கியத்திற்கும், मोक्षमिच्छेज्जनार्दनात् என்ற புராண வாக்கியத்துக்கும் விரோதமிருப்பது போல் தோன்றுவது ஸஹஜம்தான்.

சந்திரசேகரய்யர்:– இன்னொரு ஸந்தேஹமும் இப்பொழுது ஏற்படுகிறது. கீதாசார்யரே முதலில் उद्धरेदात्मनात्मानं என்றும் கடைசியில் अहं त्वा सर्वपापेभ्यः என்றும் சொல்கிறார். இவ்வாறு ஒரே கிரந்தத்தில் ஒருவரே பரஸ்பர விருத்தம் போல் பேசியிருப்பதைக் கேட்டதிலிருந்து இன்னும் மூன்றாவது ஸந்தேஹமும் வந்துவிட்டது.

ஸ்ரீஸந்நிதானம்:– நல்ல வேளை 'விருத்தம்' என்று சொல்லாமல் 'விருத்தம் போல்' என்று சொன்னீர்களே! அதில் சந்தோஷம். நீங்கள் ஜட்ஜ் உத்தியோகம் பார்ப்பதால் பேச்சில் வெகு ஜாக்கிரதையாகவே இருப்பீர்கள் என்று இன்று ப்ரத்யக்ஷமாகவே கண்டுவிட்டோம். (சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:– अज्ञानतिमिरान्धस्य என்ற சுலோகத்திலேயே எங்களது கேள்விகளுக்கெல்லாம் பதில் இருக்கிறது என்று ஸந்நிதானம் உத்தரவிட்டபடி அதை நன்றாக விளக்கித் தரும்படி விநயத்துடன் வேண்டிக் கொள்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– முதலில் 'उद्धरेदात्मनात्मानं' 'अहं त्वा सर्वपापेभ्यः मोक्षयिष्यामि माशुचः' என்ற கீதா வாக்யங்களுக்கு விரோதமில்லை என்பதை எடுத்துக் காட்டிவிட்டால் அதன் மூலம் மற்ற கேள்விகளுக்கும் ஸமாதானம் கிடைக்குமாகையால் அதையே முதலில் குறிப்பிடுகிறோம். ஸாதாரணமாக பகவான் தன் பக்தர்கள் செய்த பாபங்களை எல்லாம் மன்னித்து அந்தப் பாப பலன்கள் பக்தனிடம் அணுகாதபடி செய்து பக்தனைக் காப்பாற்றுகிறார் என்பது பக்தி சாஸ்திரத்தை அனுஸரித்து ஏற்பட்டிருக்கும் வாதமாகும். அது பக்தி மார்க்கத்தையே நம்பிக்கொண்டு இருக்கும் மத்யம அதிகாரிகளுக்காகவே ஏற்பட்டது என்பதை முதலில்

தெரிந்துகொள்ளவேண்டும். இதையே ப்ரபத்தி சாஸ்திரம் என்று மற்றவர்கள் கூறுகிருர்கள். அந்த நிலையிலிருந்து பார்த்தால் முன் கூறிய இரண்டு கீதா வாக்கியங்களுக்கும் ஸாமரஸ்யம் கூறுவது சிறிது கடினமாகலாம். ஏனென்ருல் ஸ்வாமி பிருத்ய நியாயத்தை அனுஸரித்துத்தான் பகவானுக்கும் பக்தர்களுக்கும் ஸேவ்யஸேவகபாவம் சொல்ல வேண்டியிருக்கிறது. ஸேவகன் செய்யும் தவறுகளை பிரபுவானவர் மன்னித்து அவனைக் குற்றத்திலிருந்து விடுவிப்பதால் அந்த ஸேவகனுடைய விடுதலையானது பிரபுவினுல்தான் ஏற்பட்டதாகக் கூறமுடியும். ஸேவகன் பரதந்திரனுயிருப்பதால், தானே தன்னை விடுவித்துக் கொண்டதாகக் கூறமுடியாதல்லவா?

சந்திரசேகரய்யர்:- யஜமானனிடம் மன்னிப்பு கேட்பது, வணங்குவது, முதலான ஸேவக தர்மங்களால் யஜமானனை ஸந்தோஷப்படுத்தும் வியாபாரங்களில் அந்த ஸேவகனுக்கு ஸ்வாதந்திரியம் இருக்கலாமே. ஆகவே அதன் மூலம் தன்னை விடுவித்துக் கொள்வதில் அவன் ஸ்வதந்திரன் என்று கூறக்கூடாதா?

ஸ்ரீஸந்நிதானம்:- ஆகா! உங்களது மேதா விலாசத்தை மிகவும் மெச்சுகிறேன். நீங்கள் ஜட்ஜாயிருப்பது மிகப் பொருத்தம்தான். நீங்கள் சொல்லும் யுக்தியைத்தான் அந்தப் பக்தி சாஸ்திர நிபுணர்கள் கூறுகிருர்கள். ஒருவிதத்தில் அது ஸமஞ்ஜஸமானுலும், ஞான சாஸ்திரவாதிகளான அத்வைதிகள் சொல்லும் ஸாமரஸ்யம்தான் சிலாக்கியமானது.

சந்திரசேகரய்யர்:- 'अज्ञानतिमिरान्धस्य' என்ற சுலோகத்திலேயே இதற்கெல்லாம் விடை இருக்கிறது என்று ஸந்நிதானம் முன்பு கூறியதை ஞாபகப்படுத்துகிறேன். அதன் மூலம் முன் கூறிய விரோதங்களுக்குப் பரிஹாரம் எப்படி கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிரோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- ப்ரபத்தி சாஸ்திரப் ப்ரகாரம் ஒரு விதம் ஸமாதானம் முன்பு கூறினோமல்லவா ! அதைவிட பலமான யுக்திகளுடன் ஞானசாஸ்திரப் ப்ரகாரம் இதற்கு ஸரியான பரிஹாரம் காணமுடியும்.

சந்திரசேகரய்யர்:– ஞானசாஸ்திர ப்ரகாரம் 'उद्धरेदात्मनात्मानं' 'अहं त्वा सर्वपापेभ्य:' என்ற கீதா வாக்கியங்களுக்கு விரோத பரிஹாரம் எப்படி ? अज्ञानतिमिरान्धस्य என்ற சுலோகத்தால் அதற்குப் பரிஹாரம் எப்படிக் கிடைக்குமென்பதை முதலில் கூறி அனுக்ரஹிக்கும்படி பிரார்த்திக்கிறேம். அதன் பிறகு 'मस्तकन्यस्तभारादे:' 'पथ्यमौषधसेवा च' 'अविद्याकामकर्मादि,' 'ऋणमोचनकर्तार:' என்ற விவேகசூடாமணி சுலோகங்களுக்கும், 'ईशानात् ज्ञानमन्विच्छेन्मोक्षमिच्छेज्जनार्दनात्' என்ற புராண வாக்கியங்களுக்கும் விரோத பரிஹாரம் கூற வேண்டுமென்று வேண்டுகிறேம்.

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களது விருப்பப்படியே கூறுகிறேன். நமது அத்வைத ஸித்தாந்தக் கொள்கைப்படி தன் முயற்சியால்தான் ஞானத்தையோ மோக்ஷத்தையோ பெறவேண்டும். பகவானே உபாஸிப்பதெல்லாம் நமது முயற்சியில் இடையூறு வராமலிருப்பதற்குத்தான். நாம் இந்திரன் சந்திரன் முதலிய சாதாரண தேவதைகளே வழிபடுவதும் நம் முயற்சியில் விக்னமில்லாமலிருப்பதற்குத்தான். பகவானே நாம் நன்ருக நிஷ்காம கர்மாக்களால் ஆராதித்தால், 'स नो देव: शुभया स्मृत्या संयुनक्तु' என்ற நாராயணேபநிஷத் வாக்கியப்படியும் नाशयाम्यात्मभावस्थो ज्ञानदीपेन भास्वता என்ற கீதா வசனப்படிக்கும் அந்த பகவான் நமது வேண்டுகோளின்படி நமக்கு நல்ல புத்தி உண்டாகும்படி செய்வார். அப்படியே –

न देवा दण्डमादाय रक्षन्ति पशुपालवत् ।
यं हि रक्षितुमिच्छन्ति बुद्ध्या संयोजयन्ति तम् ॥

என்ற வாக்கிய ப்ரகாரம் இந்திராதி தேவதைகளும்கூட நம்மைக் காப்பாற்றுகிருர்கள் என்ருல் மாடு மேய்ப்பவன் போல் தடியை வைத்துக்கொண்டு நம் முன்ஞல் நின்று நம்மைக் காப்பாற்றுவார்கள் என்று அர்த்தமில்லே. நமது இந்திரியங்களுக்கு அதிஷ்டாதாக்களான அந்த தேவதைகள் அந்தந்த இந்திரியங்களுக்கு பலம் உண்டு பண்ணி அதன் மூலம் மனதுக்கும் மனனசக்தியை விருத்தி செய்து ஆத்ம விசாரத்துக்கு வேண்டிய ஸௌகர்யத்தை உண்டுபண்ணுகிருர்கள் என்றுதான் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே நாமேதான் நம் முயற்சியால் ஆத்ம ஞானத்தைப் பெறவேண்டும்.

சந்திரசேகரய்யர்:- அப்படியானல் 'गोप्यः कामाद्भयात्कंसः' என்று ஆத்ம விசாரமின்றியே கேவலம் பகவத்பஜனத்தினுலேயே கோபஸ்திரீகள் முதலானவர்கள் மோக்ஷமடைந்ததாகக் கூறும் வாக்கியங்களுக்கு பிராமாண்யம் கிடையாதா?

ஸ்ரீஸந்நிதானம்:- நமது அத்வைத ஸித்தாந்தப்படி கர்ம காண்டமோ, உபாஸனுகாண்டமோ, ஞானகாண்டமோ எல்லாமே ப்ரமாணம்தான்; ஆனுல் அவரவர்களது அதிகாரத்துக்குத் தகுந்தபடிதான் ப்ரமாணமாகும். அதாவது கர்ம காண்ட வாக்கியப்படி கர்மானுஷ்டானத்திற்குத் தகுந்த பிரம்மசர்யாதி ஆசிரம தர்மங்களேயோ, யக்ஞாதிகளேயோ கூறும் வாக்கியங்கள் அந்தக் கர்மாதிகாரிக்கு ப்ரமாணம்தான். அதே கர்மகாண்ட வாக்கியம் ஞானுப்யாஸம் செய்துவரும் ஸந்யாஸிகளேக் கட்டுப்படுத்த முடியாததால் அதற்கு *அனனுஷ்டாபகத்வ* (अननुष्ठापकत्व) ரூப அப்ராமாண்யம் வரலாம். ஆனுல் உபாஸனுகாண்டம் கர்மாவிற்கும் ஞான மார்க்கங்களுக்கும் மத்தியில் இருந்துகொண்டு இரண்டிற்கும் ஸாதகமாகவே இருக்கும். இதெல்லாம் ஸாதக தசையில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயங்களாகும். முன் கூறியபடி ஞானபூமிகையின் இரண்டாவது படி வரையில் சென்ற முக்யாதிகாரிகளுக்கோ ஞான காண்டம் ஒன்றுதான் ப்ரமாணமாகும். அதற்குமேல் சென்றவர்களுக்கு அதாவது ஸதாசிவேந்திராள்போல் ஸதா நிதித்யாஸனம், ஸமாதி இதில் ஈடுபட்டவர்களுக்கு எல்லா காண்டங்களுமே அப்ரமாணம்தான். அப்பேர்ப்பட்ட ஞானிகளே உத்தேசித்துத்தான் *வேதா : அவேதா:* (वेदा अवेदाः) என்று உபநிஷத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே अधिकारिणः प्रमितिजनको वेदः என்ற நியாயப்படி அந்தந்த அதிகாரிகளின் யோக்யதையை அனுஸரித்து எல்லா வேதபாகமும் பிரமாணம்தான். இந்த விஷயங்களே எல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் गोप्यः कामाद्भयात्कंसः (*கோப்ய: காமாத் பயாத் கம்ஸ:*) இது முதலான புராண வாக்கியங்களுக்கும் அர்த்தம் கூறவேண்டும்.

சந்திரசேகரய்யர்:- மீமாம்ஸகர்கள் கூறும் அர்த்த வாதங்கள் என்றுதான் அந்த வாக்கியங்களேத் தீர்மானிக்க வேண்டுமா?

ஸ்ரீஸந்நிதானம்:- முன் கூறியபடி अधिकारिणः प्रमितिजनको वेदः என்ற நியாயத்தை மனதில் வைத்துக் கொண்டு गोप्यः कामात् இது

முதலான வாக்கியங்களுக்கு அர்த்தம் சொல்லவேண்டுமே தவிர அர்த்தவாதம் என்று தள்ள வேண்டிய அவசியமில்லை.

சந்திரசேகரய்யர்:- அப்படியானல் அவ்வித புராண வாக்கியங்களுக்கு எப்படி அர்த்தம் கொள்ள வேண்டும்?

ஸ்ரீஸந்நிதானம்:- ஸகுணப்ரஹ்ம ரூபமான பகவானைப் பல விதத்திலும் உபாஸிப்பவர்கள் அந்தந்த உபாஸனைக்குத் தகுந்தபடி உத்தம பலன்களை அடைகிருர்கள் என்றுதான் அர்த்தம்.

சந்திரசேகரய்யர்:- அவர்களெல்லாம் மோக்ஷத்தை அடைந்திருப்பதாகத்தானே புராணங்கள் கூறுகின்றன.

ஸ்ரீஸந்நிதானம்:- மோக்ஷம் என்பதும் பலவிதமில்லையா? ஸாலோக்ய முக்தி, ஸாமீப்ய முக்தி முதலான பலவித முக்திகளில் ஏதோ ஒரு முக்தியை அவர்கள் அடைந்திருக்கலாம். கைவல்யரூபமான முக்தி வரவேண்டுமானுல் அது சிரவணமனனுதிரூபமான ஆத்ம விசாரத்தால்தான் ஏற்படுமே தவிர கேவல ஈசுவர கிருபையால் மாத்திரம் வந்து விடாது.

சந்திரசேகரய்யர்:- மோக்ஷம் பலவிதமுண்டு என்று ஸந்நிதானம் கூறியபடியால் அவைகளின் ஸ்வரூபத்தை விளக்கிக் காட்டினுல்தான் எங்களால் அதைப் புரிந்துகொள்ளமுடியும்.

ஸ்ரீஸந்நிதானம்:- ஸாலோக்யம், ஸாமீப்யம், ஸாரூப்யம், ஸாயுஜ்யம் என்று மற்றவர்கள் அதாவது பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டவர்களும் பிரபத்தி சாஸ்திரத்தை அனுஸரிப்பவர்களும் கூறுகிருர்கள். அவைகளில் ஸாலோக்யம் என்ருல் ஸத்ய லோகத்திலோ, வைகுண்டத்திலோ, கைலாஸத்திலோ வாஸம் செய்வது. இதுவும் ஒருவித முக்தியாகக் கருதப்படுகிறது.

சந்திரசேகரய்யர்:- திரிமூர்த்திகளின் லோகத்தில் வாஸம் செய்வதும் ஒரு மோக்ஷமாகுமா ? இவ்வுலகத்திலுள்ளது போன்ற துக்கங்கள் அங்கேயும் ஸம்பவிக்காமலிருக்குமா?

ஸ்ரீஸந்நிதானம்:- அந்த உலகங்களில் கிடைக்கும் சரீரம் இது போன்ற ப்ராகிருத சரீரமாக இராது. அங்குள்ளவர்களது சரீரம், *அப்ராகிருத* (अप्राकृत) சரீரம் என்றே கூறப்படுகிறது. அந்த

சரீரத்தில் இது போன்ற துக்கங்கள் ஏற்படாது என்று அவர்கள் வாதிக்கிறுர்கள்.

சந்திரசேகரய்யர்:– இருந்தாலும் அவரவர்களது கர்மாக்களே அனுஸரித்து அவரவர்களது போகஸாமக்கிரிகளும் வெவ்வேருகத்தானே இருக்கமுடியும். அப்படித் தாரதம்யங்கள் இருந்தால் த்வேஷம், அஸூயை முதலான தோஷங்கள் வராமலிருக்குமா?

ஸ்ரீஸந்நிதானம்:– அங்குள்ள வாதாவரணத்திற்குச் சென்று விட்டால் பூலோகத்திலிருப்பதுபோன்ற ராகத்வேஷாதி தோஷங்கள் அவர்களேப் பாதிக்காது என்று அவர்கள் சொல்கிறுர்கள். அது நியாயம்தாஞ என்பது வேறு விஷயம்.

சந்திரசேகரய்யர்:– ஸாலோக்ய முக்தி அடைந்தவர்கள் அப்படியிருந்தாலும் அதற்கு மேற்படியிலுள்ள ஸாமீப்யாதி முக்தி அடைந்தவர்களாவது ஆனந்தமாக இருக்க முடியாதா?

ஸ்ரீஸந்நிதானம்:– 'ஸாமீப்யம்' என்ருல் பகவானது ஸமீபத்திலிருப்பது. 'ஸாரூப்யம்' என்ருல் பகவானுக்கு ஸமமான உருவத்தை அடைவது. 'ஸாயுஜ்யம்' என்ருல் பகவானுடைய சரீரத்திலேயே லயத்தை அடைவது. இந்த முக்திகளிலெல்லாம் பேத புத்தி இருப்பதால் துக்கஸம்பந்தம் கொஞ்சமாவது இருந்தே தீரும்.

यदा ह्येवैष एतस्मिन्नुदरमन्तरं कुरुते । अथ तस्य भयं भवति ।

யதா ஹ்யேவைஷ ஏதஸ்மின் உதரமந்தரம் குருதே । அத தஸ்ய பயம் பவதி । – என்றல்லவா தைத்திரீயோபநிஷத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் நாம் கைவல்யத்தையே மோக்ஷமென்கிருேம்.

சந்திரசேகரய்யர்:– ஸத்திய லோகம் முதலானவைகளில் இங்கு உள்ளதுபோன்ற துக்கமில்லாமலிருந்தால், கேவல ஸுக ரூபமாகவே இருந்துவிட்டால் அதே ஸாரூப்யாதிகளே மோக்ஷமென்று கூறலாமே ?

ஸ்ரீஸந்நிதானம்: न ह वै सशरीरस्य सतः प्रियाप्रिययोरपहतिरस्ति (*ந ஹ வை ஸஶரீரஸ்ய ஸத: ப்ரியாப்ரியயோரபஹ திரஸ்தி*) என்ற சாந்தோக்ய ச்ருதி வாக்கியப்படியும், ஸாமான்ய யுக்தியின் படியும் பார்த்தால், சரீரமுள்ளவரையில் ஸுகமோ, துக்கமோ, ராகத்வேஷாதிகளோ கட்டாயம் இருந்தே தீரும்.

சந்திரசேகரய்யர்:- அது ஸாமான்ய நியாயமாயிருக்கலாம். பிரம்மலோகத்தில் துக்கஸம்பந்தமே கிடையாது என்ற விசேஷவசனம் இருந்தால் ஸாமான்ய நியாயத்திற்கு அபவாத மேற்படாதா ? பிரம்மலோகம் நித்யம் என்று சுருதியில் கூறப்படவில்லையா ?

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படி சுருதிகளில் விசேஷ வசனங்கள் காணப்படவில்லையே! ஏதோ புராணங்களில் சில இடங்களில் வர்ணித்திருந்தாலும் அதெல்லாம் அந்தந்த லோகங்களின் உத்கர்ஷத்தை வர்ணிப்பதற்காகக் கூறப்படும் அர்த்தவாத வாக்கியங்கள் என்றே தீர்மானிக்கவேண்டும்.

சந்திரசேகரய்யர்:- அவை அர்த்தவாத வாக்கியங்கள்தான் என்பதை நிரூபிக்கும் பிரமாணம் வேண்டாமா?

ஸ்ரீஸந்நிதானம்:- तद्यथेह कर्मचितो लोकः क्षीयते एवमेवामुत्र पुण्यचितो लोकः क्षीयते (*தத் யதேஹ கர்மசிதோ லோக: க்ஷீயதே ஏவமேவாமுத்ர புண்யசிதோ லோக: க்ஷீயதே*) இது முதலான யுக்தி யுக்தமான சுருதி வாக்கியங்களே பிரமாணமாகும். आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन (*ஆப்ரஹ்ம புவனாத் லோகா: புநராவர்த்திநோऽர்ஜுன*) என்ற கீதா வாக்கியமும் அதற்கு ஸாதகமாயிருக்கிறது.

சந்திரசேகரய்யர்:- சுருதி வாக்கியமென்றாலே பிரமாணமாகாதா? யுக்தியும் வேண்டுமா?

ஸ்ரீஸந்நிதானம்:- சுருதி வாக்கியமே போதும். ஆனாலும் கர்ம பலம் நித்யம் என்று கூறும் சுருதி வாக்கியங்களுமிருப்பதால் அவைகளை விட பிரபலமான யுக்தியுடன் கூடிய சுருதி வாக்கியத்தைக் காண்பிக்கும்படி நேரிட்டது. அவ்வளவுதான்.

சந்திரசேகரய்யர்:- சுருதிகளிலும் ப்ராபல்ய தௌர்பல்யங்களுண்டா, அதை எப்படி நிர்ணயிப்பது ?

ஸ்ரீஸந்நிதானம்:- श्रुतिस्मृत्योः परं बाधे श्रुतिरेव गरीयसी ।
श्रुत्योः परस्परं बाधे न्यायोपेता बलीयसी ॥

ச்ருதிஸ்ம்ருத்யோ: பரம் பாதே ச்ருதிரேவ கரீயஸீ।
ச்ருத்யோ: பரஸ்பரம் பாதே ந்யாயோபேதா பலீயஸீ॥

என்ற சட்டம் மீமாம்ஸா நியாயத்தால் காண்பிக்கப்பட்டிருக்கிறது. அதை அனுஸரித்துத்தான் ப்ராபல்ய தௌர்பல்யங்களைத் தீர்மானிக்க வேண்டும்.

சந்திரசேகரய்யர்:- பிரகிருதத்தில் அவ்வாக்கியத்தை எப்படி ஸமன்வயப்படுத்துவது என்று தெரியவில்லையே !

ஸ்ரீஸந்நிதானம்:- நீங்கள் ஜட்ஜாயிருப்பதால் உங்களது பரிபாஷையிலேயே அதை விளக்குகிறேன். அதாவது ஒருவனது குற்றத்தைப் பற்றி நியாயஸ்தலத்தில் விசாரிக்கையில் ஒரு ஸாக்ஷியானவன் அவன் குற்றம் செய்தான் என்றும், மற்றவன் செய்யவில்லை என்றும் ஸாக்ஷயம் கூறுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது உண்மையை அறிய நீங்கள் என்ன செய்வீர்கள் ?

சந்திரசேகரய்யர்:- அவர்களையே பல கேள்விகள் கேட்டு அவர்களது வாக்குமூலத்திலுள்ள பலாபலங்களைச் சீர்தூக்கிப் பார்த்து யார் சொல்வது சரி என்பதைத் தீர்மானிப்போம்.

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியேதான் சுருதி விஷயத்திலும் ஒப்புக்கொள்ளவேண்டும். இரண்டு சுருதிகளையும் சீர் தூக்கிப்பார்க்கவேண்டும். अक्षय्यं ह वै चातुर्मास्ययाजिनः सुकृतं भवति (*அக்ஷய்யம் ஹ வை சாதுர்மாஸ்ய யாஜிந: ஸுக்ருதம் பவதி*) என்ற சுருதியானது சாதுர்மாஸ்ய யாகத்தின் பலம் நித்யம் என்று கூறுகிறது. तद्यथेह (*தத்யதேஹ*) என்ற முன் கூறிய சுருதியோ கர்ம பலம் அநித்யம் என்று கூறுகிறது. அதில் तद्यथेह (*தத்யதேஹ*) என்ற சுருதியானது यत्कृतकं तदनित्यं (*யத்க்ருதகம் ததநித்யம்*) என்ற (யுக்தி) நியாயத்துடன் கூடியது. अक्षय्यं ह वै (*அக்ஷய்யம் ஹ வை*) என்ற சுருதியோ கர்ம பலன் நித்யம் என்பதற்கு யுக்தியொன்றும் கூறாதபடியால் அது வெறும் சுருதியாகையால் துர்பலமாகும். மற்றது பிரபலமாகையால் கர்மபலன் அநித்யம்தான் என்று அதன்படி தீர்மானிக்கவேண்டும்.

சந்திரசேகரய்யர்:- ஸத்யலோகம், வைகுண்டம் முதலிய லோகங்களில் ஏற்படக்கூடிய ஸாலோக்யம் முதலான முக்திகளும் முன்கூறிய तद्यथेह (தத்யதேஹ) என்ற சுருதி வாக்கியப்படி அநித்யம்தானா?

ஸ்ரீஸந்நிதானம்:- அநித்யம் மாத்திரமில்லை; அந்த முக்திகளில் பேதபாவம் விலகாதபடியால், ராகத்வேஷாதிதோஷங்களும் ஏற்படக்கூடுமாகையால் அவைகள் நித்ய சுகமான மோக்ஷமென்று கூறமுடியாது.

சந்திரசேகரய்யர்:- அப்படியானால்,

आब्रह्मभुवनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन ।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते ॥

ஆப்ரஹ்மபுவனாத் லோகா: புநராவர்த்திநோऽர்ஜுன।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே॥

என்று கிருஷ்ணபகவான் கூறியது பொய்யாகாதா? मां (*மாம்*) என்று வைகுண்டலோகவாஸியான தன்னையே அவர் குறிப்பிடுவதால் வைகுண்டம் சென்றவர்களுக்கு புனராவிருத்தி கிடையாது என்றல்லவா ஆகிறது. அது அநித்யம் என்று எப்படிக் கூற முடியும்?

ஸ்ரீஸந்நிதானம்:- வைகுண்டம் சென்றவர்களுக்கு புனரா விருத்தி கிடையாது என்றால் மஹாவிஷ்ணுவின் த்வார பாலகர்களான ஜயவிஜயர்கள் ஹிரண்யாக்ஷஹிரண்யகசிபுவாகவும், ராவண கும்பகர்ணர்களாகவும், சிசுபாலதந்தவக்திரர்களாகவும் ஸநகாதிகளின் சாபத்தால் பூமியில் பிறந்து பலவித கஷ்டங்களை அனுபவித்திருப்பார்களா? அவர்களோ ஸாலோக்யஸாமீப்யாதி முக்திகளைப் பெற்றவர்களாயிற்றே? மஹாவிஷ்ணுவின் அந்தரங்க பக்தர்களாயிற்றே? मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते என்று கூறிய அந்த மஹாவிஷ்ணுவானவர் தன்னால் முடிந்தால் தன் த்வாரபாலகர்களைப் பூலோகத்திற்குப்போக விட்டிருப்பாரா? அவர்கள் பல துன்பங்களை அடையும்படி செய்திருப்பாரா?

சந்திரசேகரய்யர்:- அப்படியானால் मामुपेत्य (*மாமுபேத்ய*) என்ற பகவத்வாக்கியம் பொய்யாகாதா?

ஸ்ரீஸந்நிதானம்:– அதன் கூடமான அர்த்தத்தைப் பார்த்தால் அந்த தோஷம் வராது. அதாவது मां (*மாம்*) என்ற பதத்திற்கு मत्पदलक्ष्यार्थ (*மத்பதலக்ஷ்யார்த்த*) மான நிர்குண ப்ரஹ்மத்தைப் பொருளாகக் கொள்ளவேண்டும். उपेत्य (*உபேத்ய*) என்பதற்கு गत्यर्थानां ज्ञानार्थकत्वं என்ற நியாயப்படி ज्ञात्वा என்று அர்த்தம். ஆகவே நிர்குண ப்ரஹ்மஸ்வரூபத்தை अहं ब्रह्म (நான் ப்ரஹ்மம்) என்ற பாவத்துடன் அறிந்து கொண்டால் புனர்ஜன்மம் கிடையாது என்று அதன் கூடார்த்தத்தைத் தெரிந்துகொண்டால் ஒரு விரோதமும் வராது.

சந்திரசேகரய்யர்:– யதாசுருதமான அர்த்தத்தைவிட்டு அவ்விதம் லக்ஷணையை ஏன் ஆசிரயிக்கவேண்டும்?

ஸ்ரீஸந்நிதானம்:– வாச்யார்த்தம் ஸரியாகப் பொருந்தாவிட்டால் वाच्यार्थानुपपत्ति ஏற்படுமல்லவா ? அதைத்தான் लक्षणाबीजं என்று சாஸ்திரக்ஞர்கள் கூறுவார்கள். பகவானை அடைந்தாலும் புனர்ஜன்மா உண்டு என்று முன்கூறிய ஜயவிஜயவரலாற்றினுல் விசதமாகி விட்டபடியால் முன் கூறியபடி निर्गुणब्रह्मस्वरूपं ज्ञात्वा पुनर्जन्म न विद्यते என்று அர்த்தம் கூறினுல்தான் பகவத்வாக்கியம் பொருந்துமல்லவா?

சந்திரசேகரய்யர்:– அது இருக்கட்டும். अज्ञानतिमिरान्धस्य (*அக்ஞானதிமிராந்தஸ்ய*) என்று நாங்கள் கூறிய சுலோகத்திலேயே எங்களது கேள்விகளுக்கெல்லாம் பதில் இருக்கிறது என்று ஸந்நிதானம் முன்பு கூறவில்லையா? அந்தப் பதிலையும் அறிய விரும்புகிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– அந்த சுலோகத்தில் चक्षुरुन्मीलितं येन (*சக்ஷுருன்மீலிதம் யேன*) என்ற வாக்கியத்திற்கு கண்ணைத் திறந்துவிட்டவர் யாரோ அந்த குருநாதருக்கு வணக்கம் என்றுதானே அர்த்தம் ! चक्षुः (*சக்ஷு:*) என்ற பதத்தால் வெளிக்கண்ணைக் குறிக்க முடியாதல்லவா ? ஞானக்கண் என்ற அகக்கண்ணைத் திறந்து வைத்தவர் குரு என்றுதானே அர்த்தம் கொள்ளவேண்டும். அதாவது மனதிலிருக்கும் அக்ஞானுதி தோஷங்களைத் தன் உபதேசமொழிகளால் விலக்கி ஆத்மதத்துவ ஞானத்தை விளங்க வைத்தவர் குருநாதர் என்றுதானே தாத்பர்யம் கிடைக்கிறது. குரு சிஷ்யனுக்கு உபதேசம் செய்தார் என்றுல் அது விவேகசூடாமணி

முதலிய கிரந்தங்களில் கூறப்பட்ட को नाम बन्धः कथमेष आगतः? (எது பந்தம்? இது எப்படி வந்தது?) இது முதலான கேள்வி பதில்கள் போல்தானே இருக்கவேண்டும்? சிஷ்யனுடைய மனதில் உள்ள அக்ஞானதி தோஷங்களை குருவானவர் ஏதோ மந்திரங்களால் போக்கடித்ததாக ஒரு கிரந்தத்திலும் காணப்படவில்லையே! ஆகையால் குருவின் உபதேசங்களை அனுஸரித்து சிஷ்யன் சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலியமனிதயத்னத்தினால்தான் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை அடைய முடியும் என்ற கருத்து வெளியாகவில்லையா? இதை வைத்துத் தான் கீதையில் आत्मैव ह्यात्मनो बन्धुः, उद्धरेदात्मनात्मानं (*ஆத்மைவ ஹ்யாத்மநோ பந்து:, உத்தரேதாத்மநாத்மாநம்*) என்றும், अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि (*அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி*) என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சந்திரசேகரய்யர்:- கீதையில் ஒரு வாக்கியத்தால் தானே தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும் என்றும், இன்னொரு வாக்கியத்தால், பகவான்தான் பக்தனைவிடுவிப்பார் என்றும் கூறப்பட்டிருப்பது பரஸ்பரவிரோதமாகுமென்று முன்பே குறிப்பிட்டிருந்தோமே அந்த விரோதத்துக்குத் தக்க பரிஹாரம் இதனால் கிடைக்கவில்லையே?

ஸ்ரீஸந்நிதானம்:- நன்றாக யோசித்துப் பார்த்தால் விடை கிடைக்கும். பகவான் தன் பக்தனை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவித்தார் என்றால் அது மந்திரதந்திரங்களால் அல்ல. தன் உபதேசமொழிகளால்தான். அந்த உபதேசமொழிகளைக் காதால் கேட்ட மாத்திரத்திலேயே சிஷ்யனுக்கு மோக்ஷம் கிடைத்துவிடுமா? சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலிய ஸாதனங்களில் தீவிர முயற்சி செய்து மனதில் நல்ல பரிபக்குவம் ஏற்பட்டு காலக்ரமத்தில் இவ்வித ஞானப்யாஸத்தால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுக் கடைசியில் மோக்ஷ சுகத்தை அடைகிறான் என்றல்லவா தாத்பர்யம்!

சந்திரசேகரய்யர்:- அப்படியானாலும் மனிதன் தன் முயற்சியால் மட்டும் ஞானத்தையோ மோக்ஷத்தையோ அடைந்ததாகக் கூறமுடியாதே! பகவானுடைய அனுக்ரஹமும் உதவியும் இருந்தால்தானே கரையேற முடியும்? அப்படியிருக்கையில் उद्धरेदात्मनात्मानं (*உத்தரேதாத்மநாத்மாநம்*) என்று மனிதனுக்கு ஸ்வாதந்திரியம் கூறுவது நியாயமாகுமா?

ஸ்ரீஸந்நிதானம்:– மனிதன் ஞானஸாதனங்களை அப்யாஸம் செய்வதில் ஸ்வதந்திரன்தான். ஆனால் தன் முயற்சியில் இடையூறில்லாமலிருப்பதற்காக பகவானது அனுக்ரஹமும் உதவியும் கிடைத்தால்தான் கார்யஸித்தியை அடைய முடியும். பகவானும் தம் பக்தனை ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவிக்க வேண்டுமானால் சாஸ்திரீயமான மார்க்கத்தில் அவனை ஈடுபடும்படி செய்துதான் அவனை விடுவிக்க முடியும். ஏனென்றால் –

तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

தஸ்மாத் ஶாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யாகார்ய
வ்யவஸ்திதௌ ।
ஞாத்வா ஶாஸ்த்ர விதாநோக்தம் கர்ம கர்துமிஹார்ஹஸி ॥

(ஆகையால் இதைச் செய்யவேண்டும், இதைச் செய்யக்கூடாது என்று தீர்மானிக்கும் விஷயத்தில் சாஸ்திரம்தான் உனக்குப் பிரமாணம். சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதை அறிந்து அதன்படி கர்மாவைச் செய்யவேண்டும்.) என்று கீதையில் பகவானே சாஸ்திரீயமான மார்க்கத்தில் சென்றால்தான் காரியஸித்தி அடையமுடியும் என்கிறார். தம் அனுக்ரஹ மாத்திரத்தாலேயே பக்தனை விடுவிக்க முடியுமானால் அவ்விதம் கூறியிருப்பாரா என்பதை நாம் கவனிக்கவேண்டும். ஆகவே अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि (*அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி*) என்ற வாக்கியத்துக்கும் இதை அனுஸரித்துத்தான் அர்த்தம் கூற வேண்டும். அதாவது பகவான் தம் பக்தனை சாஸ்திரீய மார்க்கத்தில் நடத்தி சாஸ்திரத்தில் கூறப்பட்ட கர்ம–பக்தி–ஞானாதி ஸாதனங்களை அனுஷ்டிக்கச் செய்து, தானும் அதற்குப் பல உதவிகள் புரிந்து கடைசியில் அவனை ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுவிக்கிறார் என்றுதான் தாத்பர்யம்.

சந்திரசேகரய்யர்:– அப்படியானால்,

मन्मना भव मद्भक्तो मद्याजी मां नमस्कुरु ।
मामेवैष्यसि युक्त्वैवमात्मानं मत्परायणः ॥
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥

மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு ।
மாமேவைஷ்யஸி யுக்த்வைவ மாத்மாநம் மத்பராயண: ॥ (கீ. 9–34)
மாமேவ யே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்தி தே ॥ (கீ. 7–14)

(என்னிடத்திலேயே மனதைச் செலுத்தி, என்னிடத்திலேயே பக்திபூண்டு, எனக்காகவே கர்மாக்களைச் செய்து என்னையே வணங்கு. இவ்விதம் மனதைக் கட்டுப்படுத்தி என்னிடம் ஈடுபட்டால் என்னையே அடைவாய். என்னையே சரணம் அடைகிறவர்கள்தான் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்.)

இது முதலான கீதா வாக்கியங்களில் பகவத்பக்தி ஒன்றினாலேயே தன்னை அடையலாம், அக்ஞானத்தை வென்று மோக்ஷமடையலாம் என்று பகவான் கூறியிருக்கிறாரே ! அவ்வாக்கியங்களில் பக்தர்களை ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிப்பதில் பகவானுக்குத்தானே ஸ்வாதந்திரியம் கூறப்படுகிறது ?

ஸ்ரீஸந்நிதானம்:– श्रुतिस्मृती ममैवाज्ञे यस्तामुल्लंघ्य वर्तते ।
आज्ञाच्छेदी मम द्वेषी मम वध्यश्च जायते ॥

ச்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞே யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆக்ஞாச்சேதீ மம த்வேஷீ மம வத்யச்ச ஜாயதே ॥

(வேதமும் ஸ்ம்ருதிகளும் என் உத்தரவுகள். அவை சொன்னபடி நடக்காதவன் என் உத்தரவை மீறுபவன். என் வெறுப்புக்கு இடமானவன். என்னால் கொல்லத் தகுந்தவன்.) என்று பகவான் கூறியபடி அவரது ஆக்ஞா ரூபமான சுருதி ஸ்மிருதிகளில் கூறப்பட்ட கர்மாக்களை விட்டுவிட்டு வெறும் பஜனம் செய்கிறேன் என்றால் அதை பகவான் ஏற்றுக்கொள்வாரா ? கர்மத்யாகம் செய்தவன் பகவானுக்கு பெரிய அபசாரம் செய்த விரோதியாகவல்லவா ஆவான்! தன் ஆக்ஞையை மீறி வெறும் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம் செய்தால் அதை பகவான் அங்கீகரிப்பாரா ? ஆகையால் கர்மாக்களுடன் செய்யும் பக்தியை அனுஸரித்துத்தான் பகவான் பலனளிப்பார்.

சந்திரசேகரய்யர்:– பஜனபத்ததி ஸம்பிரதாயத்தில் विधिक्रियाविहीनानां का गतिः पुरुषोत्तम (*விதிக்ரியா விஹீநாநாம் கா கதி: புருஷோத்தம* – ஹே புருஷ சிரேஷ்டரே, சாஸ்திர முறைப்படி

கர்மாவைச் செய்யாதவர்களுக்கு என்ன கதி?) என்ற கேள்விக்கு कलौ गोविन्दकीर्तनम् (*கலௌ கோவிந்த கீர்த்தனம்*–கலியுகத்தில் கோவிந்தநாம ஸங்கீர்த்தனம்தான் ஸத்கதியை அடைய உபாயம்) என்று பகவந்நாம ஸங்கீர்த்தனம் ஒன்றே எல்லாப் பாபங்களேயும் போக்கடிக்கும் என்று கூறுகிருர்களே. அது ஸரியில்லையா ?

ஸ்ரீஸந்நிதானம்:– கர்மாக்களேயும் விட்டு, பகவானேயும் த்யானம் செய்யாமல் கெட்டுப்போகிறவர்களுக்காக ஏற்பட்ட வாக்கியம் அது. நாமஸங்கீர்த்தனம் செய்யும் காலங்களிலாவது அவர்கள் பாபகார்யங்களேச் செய்யாமலிருக்கட்டும் என்பதற்காகவே அவ்விதம் கூறப்பட்டு இருக்கலாம்.

சந்திரசேகரய்யர்:– பகவந்நாம கௌமுதீ, பக்திரஸாயனம், முதலிய கிரந்தங்களில் பகவத்பக்தி ஒன்றே போதுமென்றும் நாமஸங்கீர்த்தனத்திஞலேயே மோக்ஷமடையலாமென்றும் கூறியிருப்பது கேவலம் அர்த்தவாத வாக்கியம்தாஞ ?

ஸ்ரீஸந்நிதானம்:– அந்த கிரந்தங்களிலும் சில நியமங்களுடன் நாமஸங்கீர்த்தனம் செய்தால்தான் பலனுண்டு என்று கூறப்பட்டிருப்பதை நீங்கள் கவனிக்கவில்லையா ? கேளுங்கள்,

सन्निन्दाऽसति नामवैभवकथा श्रीशेशयोर्भेदधीः
अश्रद्धा श्रुतिशास्त्रदेशिकगिरां नाम्न्यर्थवादभ्रमः ।
नामास्तीति निषिद्धवृत्तिविहितत्यागौ च धर्मान्तरैः
साम्यं नामनि शंकरस्य च हरेः नामापराधा दश ॥

ஸந்நிந்தாऽஸதி நாம வைபவ கதா ஸ்ரீஶேஶயோர் பேததீ:
அச்ரத்தா ச்ருதிஶாஸ்த்ர தேஶிக கிராம் நாம்ந்யர்த்தவாத ப்ரம: ।
நாமாஸ்தீதி நிஷித்த வ்ருத்தி விஹித த்யாகௌ ச தர்மாந்தரை:
ஸாம்யம் நாமநி சங்கரஸ்ய ச ஹரே: நாமாபராதா தஶ ॥

என்ற வாக்கியத்தில் பத்துவித நாமாபராதங்கள் கூறப்பட்டு இருக்கின்றன. அதாவது 1. ஸாதுக்களே நிந்திப்பது, 2. அஸாதுக்களிடம் (நாஸ்திகர்களிடம்) நாமாவின் மஹிமையை எடுத்துக் கூறுவது, 3. விஷ்ணு சிவமூர்த்திகளிடம் வேற்றுமை பாராட்டுவது, 4. வேத வார்த்தையில் அவநம்பிக்கை, 5. சாஸ்திரங்களில் அவநம்பிக்கை, 6. குருவின் உபதேசத்தில்

அவநம்பிக்கை, 7. பகவந்நாம மஹிமைகளைக் கூறும் வாக்கியங்கள் அர்த்தவாதம் (அர்த்தமற்றது) என்ற ப்ரமம், 8. நாமா இருக்கிறது என்ற தைரியத்தால் விலக்கப்பட்ட காரியங்களைச் செய்வது, 9. விஹித கர்மாக்களைச் செய்யாமல் விட்டுவிடுவது, 10. மற்ற தர்மங்களுடன் நாமாவைச் சமமாக எண்ணுவது. இந்தப் பத்து அபராதங்களையும் அடியோடு விலக்க வேண்டும். இவற்றில் ஒன்று இருந்தால்கூட நாமஸங்கீர்த்தனம் பயனைக் கொடுக்காது. ஆகையால் விலக்கப்பட்ட பாபகர்மாக்களைக் கொஞ்சமும் செய்யாமல் விஹித கர்மாக்களை முழுவதும் செய்துகொண்டு நாமஸங்கீர்த்தனம் செய்தால்தான் சுப பலனைக் கொடுக்கும். இல்லாவிடில் விபரீதபலன்தான் ஏற்படும். மேலும் நாமஸங்கீர்த்தனம் ஒன்றினாலேயே முக்தி கிடைக்குமானால் கர்ம–ஞான காண்டங்கள் வீணாகிவிடும். ஆகவே ஸ்வதர்மானுஷ்டானத்துடன் செய்யும் நாமஸங்கீர்த்தனம்தான் பலனைக் கொடுக்கும். கர்மாக்களை விட்டுவிட்டுச் செய்யும் நாமஸங்கீர்த்தனம் பலனைத் தராதென தெரிகிறது.

சந்திரசேகரய்யர்:– லௌகிக உத்யோகத்திலிருக்கும் என்னைப் போன்றவர்கள் முமுக்ஷுக்களாக இருந்தால் அவர்கள் அதிகமாகக் கர்மாக்களைச் செய்யமுடியாதே. ஸுலபமான வழியில் அவர்கள் என்ன ஸாதனங்களை அனுஷ்டிக்க வேண்டும்? குருவின் அனுக்ரஹத்தையும் அவர்கள் எவ்விதம் ஸம்பாதித்துக் கொள்ளவேண்டும் என்பதை உபதேசித்து அருளினால் அதன்படியே நடக்க ஸௌகர்யமாயிருக்கும்.

ஸ்ரீஸந்நிதானம்:– முக்கியமாக ஸந்த்யாஸ்நானாதி நித்யகர்மாக்களை விடாமல் செய்துவரவேண்டும். கீதா பாராயணம், ஸஹஸ்ரநாம பாராயணம் முதலியவைகளையும் செய்துவரவேண்டும். தன் இஷ்ட தெய்வத்தை ஆராதித்து வருவதுடன் குருவையும் அடிக்கடி தரிசித்து வரவேண்டும்.

சந்திரசேகரய்யர்:– அநேகமாக இவைகளில் எல்லாவற்றையுமே செய்துகொண்டுதானே இருக்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானால் அத்துடன் ஸாவகாசப்பட்ட ஸமயங்களில் கீதை, உபநிஷத்து இவைகளை சாந்தி பாடத்துடன் அர்த்த விசாரம் செய்துவரவேண்டும். பாஷ்ய சிரவணமும் செய்யலாம்.

சந்திரசேகரய்யர்:- இந்த விசாராதி சிரமமொன்றுமில்லாமல் குருவின் கிருபாகடாக்ஷத்தாலேயே எங்களுக்கு ஞானம் வரும்படி அனுக்ரஹம் செய்யக்கூடாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:- புருஷயத்னம்தான் ப்ரதானம் என்று முன்பு கூறியதை மறந்துவிட்டீர்களா ?

சந்திரசேகரய்யர்:- மறக்கவில்லை. தோடகாசார்யருக்கு பகவத் பாதாள் அனுக்ரஹித்ததுபோல் ஸந்நிதானம் அனுக்ரஹம் செய்தால் எங்களுக்கு ஞானோதயம் உண்டாகாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:- தோடகாசார்யருக்கு ஞானோதயம் ஏற்பட்டதும், எல்லா சாஸ்திரங்களிலும் பாண்டித்யம் வந்ததும், குருநாதரின் அனுக்ரஹத்தால் மாத்திரமில்லை. அவர் பூர்வ ஜன்மாவில் ஈசுவர ஆராதனம், சாஸ்திர விசாரம் முதலியவைகளை ஏராளமாகச் செய்திருந்து, அந்த ஸம்ஸ்காரம் மறு ஜன்மாவில் பரிபக்குவமடைந்து ஆசார்யாளது கருணையினால் திடீரென்று பலனைக் கொடுத்தது என்றுதான் வைத்துக்கொள்ளவேண்டும். அப்படிப்போல் உங்களுக்கும் ப்ரபலமான ஜன்மாந்தர ஸம்ஸ்காரமிருந்தால் அது பலிக்கட்டுமே !

சந்திரசேகரய்யர்:- சாஸ்திரங்களில் दृग्दीक्षा (*த்ருக்தீக்ஷை*) स्पर्शदीक्षा (*ஸ்பர்ஶதீக்ஷை*) என்றெல்லாம் கூறப்பட்டு இருக்கிறதே ! அவைகளில் ஏதாவது ஒரு குருதீக்ஷை எங்களுக்குக் கிடைத்தால் நாங்கள் கிருதார்த்ததையை அடையலாமே !

ஸ்ரீஸந்நிதானம்:- த்ருக்தீக்ஷைதான் உங்களுக்குக் கிடைத்து விட்டதே, வேறென்ன வேண்டும் ?

(இவ்விதம் கூறிக்கொண்டே அவர்களை ஸந்நிதானம் தம் கடாக்ஷ வீக்ஷணத்துடன் பார்த்தார்கள். குப்புஸ்வாமி அய்யரும், சந்திரசேகரய்யரும் அப்படியே கண்ணீர் விட்டுக் கொண்டே அசையாமல் உட்கார்ந்திருந்தார்கள். ஐந்து நிமிஷம் ஒருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாகவே ஸ்தம்பித்து விட்டார்கள். அந்தக் கடாக்ஷ பாதத்தின் மூலம் शक्तिपात (சக்திபாதம்) என்ற யோகமும் ஏற்பட்டது போலும். அதனாலேயே ஆகர்ஷிக்கப்பட்ட இந்த லேககரும் ஒன்றுமே பேசமுடியாமல் ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஸந்நிதானம் மந்தஹாஸத்துடன் அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள்.)

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களது இஷ்டம் பூர்த்தியாய்விட்டதல்லவா ? இனிமேல் என்ன வேண்டும் ? இன்னும் ஏதாவது ஸந்தேஹங்களிருந்தால் ஸங்கோசமில்லாமல் கேட்கலாம்.

சந்திரசேகரய்யர்:– ஸந்நிதானத்தின் கருணைகடாக்ஷம் கிடைத்தபிறகு வேறு என்ன வேண்டும் ? நாங்கள் மிகவும் தன்யர்களானேம். இனிமேல் கேட்கவேண்டியது என்ன இருக்கிறது ?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிச் சொல்லாதீர்கள். நீங்கள் இன்று ஊருக்குப் புறப்படப்போகிறீர்கள். ஸந்தேஹ மூட்டைகளை சுமந்துகொண்டு அங்கு செல்லவேண்டாம். இங்கேயே இறக்கிவிடுங்கள். ஸந்தேஹங்களை இப்பொழுதே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

சந்திரசேகரய்யர்:– (திடுக்கிட்டு) நாங்கள் இன்றே புறப்படவேண்டுமா ? ஸந்நிதான உத்தரவு அவ்விதமானல் அதை நாங்கள் மீற முடியாதல்லவா ?

ஸ்ரீஸந்நிதானம்:– இப்பொழுது ஊருக்குப்போகும்படி ஒரு ஸந்தர்ப்பம் வந்திருப்பதால் மத்தியானம் புறப்படுங்கள். மறுபடியும் பின்னல் வரலாமல்லவா ? கட்டாயம் வரவேண்டும். இப்பொழுது உள்ள ஸந்தேஹங்களைக் கேளுங்கள். ஸங்கோசம் வேண்டாம்.

சந்திரசேகரய்யர்:– பகவான் अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि என்று கீதையில் கூறியிருக்கிருர். ஸந்நிதானமோ चक्षुरुन्मीलितं येन என்ற வாக்கியப்படி குருதான் சிஷ்யனுடைய அக்ஞானத்தைப் போக்கவேண்டும் என்று கூறுவதால் இரண்டுக்கும் ஸாமரஸ்யம் எப்படி என்று ஸந்தேஹம் உண்டாகிறது. ஞானதானம் செய்பவர் ஒருவர், மோக்ஷத்தைக் கொடுப்பவர் மற்றெருவர் என்ருல் அது எப்படி ஸங்கதமாகும் ?

குப்புஸ்வாமி அய்யர்:– ईशानात् ज्ञानमन्विच्छेत् मोक्षमिच्छेज्जनार्दनात् (ஈசாநாத் ஞானமன்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்தனத்) என்ற

வாக்கியத்தில் ஞானதாதாவும் மோக்ஷதாதாவும் வெவ்வேருகக் கூறப்பட்டிருப்பதுபோல் இங்கேயும் வெவ்வேருக இருப்பதில் என்ன தவறு ?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிக்கூறிவிட்டால் அவரது ஸந்தேஹம் இன்னும் வலுப்படுமே தவிர கேள்விக்குத் தகுந்த பதில் ஆகாது. ஏனென்ருல் அங்கும் இதே ஸந்தேஹம்தான் வரக்கூடுமல்லவா ? ஆகையால் அதற்கும் சேர்த்தே நான் பதிலளிக்கிறேன்.

குப்புஸ்வாமி அய்யர்:– அப்படியாளுல் அது எங்களது பரம பாக்கியமேயாகும்.

ஸ்ரீஸந்நிதானம்:– முதலில் சந்திரசேகரய்யர் கேட்டதற்கு பதிலளிக்கிறேன். மோக்ஷதாதாவாகிய ஈசுவரனும் ஞானதாதாவாகிய குருவும் வெவ்வேறு என்ற எண்ணமே வரக்கூடாது. ஏனென்ருல் –

जन्मानेकशतैः सदाऽऽदरयुजा भक्त्या समाराधितो
भक्तैर्वैदिकलक्षणेन विधिना संतुष्ट ईशः स्वयम् ।
साक्षाच्छ्रीगुरुरूपमेत्य कृपया दृग्गोचरः सन् प्रभुः
तत्त्वं साधु विबोध्य तारयति तान् संसारदुःखार्णवात् ॥

ஜன்மாநேக ஶதை: ஸதாஆதரயுஜா பக்த்யா ஸமாராதிதோ
பக்தைர் வைதிக லக்ஷணேன விதிநா ஸந்துஷ்ட ஈஶ: ஸ்வயம்।
ஸாக்ஷாத் ஸ்ரீகுருரூபமேத்ய க்ருபயா த்ருக்கோசர: ஸன் ப்ரபு:
தத்த்வம் ஸாது விபோத்ய தாரயதி தான் ஸம்ஸார துக்கார்ணவாத் ॥

என்று ஸர்வ வேதாந்த ஸித்தாந்த ஸாரஸங்கிரஹத்தில் நமது பகவத்பாதாள் இதன் தத்துவத்தை விளக்கியிருக்கிருர். அதாவது: பல ஜன்மாக்களில் ஈசுவர ஆக்ஞாரூபமான வேதங்களில் கூறப்பட்ட வைதிக கர்மாக்களை முறைப்படி அனுஷ்டித்துவரும் பக்தர்கள், தான் செய்த கர்மாக்களை பகவானிடம் ப்ரஹ்மார்ப்பணம் (ब्रह्मार्पणम्) என்று ஸமர்ப்பணம் செய்து வந்தபடியால் தம் ஆக்ஞைகளைப் பரிபாலனம் செய்த அந்தப் பக்தர்களிடம் கருணைகொண்டு பகவான் அவர்களை ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்ற வேண்டுமென்று எண்ணி, தானே ஒரு குரு ரூபத்தில் பக்தர்களிடம் தோன்றி அந்த

குருவின் மூலமாகவே ஆத்மதத்துவ ஞானத்தை உபதேசித்து அவர்களை இந்த ஸம்ஸார ஸாகரத்திலிருந்தே கரையேற்றுகிறார் என்று பகவத்பாதாளே கூறியிருப்பதால் ஈசுவரனேதான் குருவாக வருகிறார் என்பதில் ஸந்தேஹமுண்டா?

குப்புஸ்வாமி அய்யர்:- இப்பொழுதுதான் अज्ञानतिमिरान्धस्य (*அஞானதிமிராந்தஸ்ய*) என்ற நாங்கள் கூறிய சுலோகத்தின் அந்தரங்கமான அர்த்தம் புலப்படுகிறது. இன்னும் அதன் தத்துவங்களை நன்றாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:-

ईश्वरो गुरुरात्मेति मूर्तिभेदाद्विभागिने ।
व्योमवद्व्याप्तरूपाय दक्षिणामूर्तये नमः ॥

ஈச்வரோ குருராத்மேதி மூர்த்திபேதாத் விபாகிநே ।
வ்யோமவத் வ்யாப்தரூபாய தக்ஷிணாமூர்த்தயே நம: ॥

(ஈசுவரன், ஆசார்யர், ஜீவன் என்று மூன்று மூர்த்திகளாகப் பிரிந்து தோன்றுபவரும் (உண்மையில்) ஆகாசம் போல் எங்கும் நிறைந்த ஒரே தத்துவமாக உள்ளவருமான ஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.) என்ற வார்த்திககார வாக்கியப்படி பார்த்தாலும் இதன் தத்துவம் நன்றாக விளங்கும்.

குப்புஸ்வாமி அய்யர்:- அப்படியானால் 'ईशानात् ज्ञानमन्विच्छेन्मोक्षमिच्छेज्जनार्दनात्' (*ஈசானாத் ஞானமந்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்தனாத்* - ஈசுவரனிடமிருந்து ஞானத்தை விரும்பவேண்டும். விஷ்ணுவிடமிருந்து மோக்ஷத்தை விரும்ப வேண்டும்) என்ற சுலோகத்தில் கூறப்பட்ட ஞானதாதாவான ஈசுவரன் பெரியவரா அல்லது மோக்ஷதாதாவான விஷ்ணு பெரியவரா ? என்ற ஸந்தேஹத்திற்கு என்ன பரிஹாரம் ?

ஸ்ரீஸந்நிதானம்:- முதலில் अभ्युपेत्यवाद * த்தை அனுஸரித்து அவர்களது பேதத்தை ஒப்புக்கொண்டே பதில் கூறலாம். ஒரு ஸபையில் கதாகாலக்ஷேப காலத்தில் ஒரு பாகவதர் தமாஷாக இதற்குப் பதிலளித்தாராம். அதாவது ஞானதாதாவான ஈசுவரன்தான்

---

* பிரதிவாதி சொல்வதை ஒப்புக்கொண்டு பதில் கூறுவது

பெரியவர் என்ருராம். ஸபையிலுள்ள வைஷ்ணவர்களெல்லாம் கூக்குரலிட்டு மோக்ஷதாதாவாகிய மஹாவிஷ்ணுதான் பெரியவர் என்ருர்களாம். ஞானமில்லாமல் மோக்ஷம் வருமா ? ஆகையால் ஈசுவரன்தான் பெரியவர் என்று மற்றவர்கள் கத்திஞர்களாம். ஞானமிருந்தாலும் மஹாவிஷ்ணு மனம் வைத்தால்தானே மோக்ஷம் தரமுடியும் என்று மற்றவர்கள் கூறிஞர்களாம். அந்த ஸபையில் ஓர் அத்வைதியானவர் புகுந்து ஸமரஸம் செய்து வைத்தாராம். ஸமரஸம் எப்படி செய்து வைத்திருப்பார் என்பதை நீங்களே கூறுங்கள் பார்க்கலாம்.

குப்புஸ்வாமி அய்யர்:– ஞானதாதாவும் பெரியவர், மோக்ஷதாதாவும் பெரியவர். அவர்கள் ஸமமானவர்கள். அவர்களிடம் தாரதம்யம் கிடையாது என்றுதான் கூறியிருக்கவேண்டும்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிக்கூறியும் அவர்கள் ஸமரஸமடையவில்லையாம். யாராவது ஒருவரைத்தான் பெரியவராகக் கூறவேண்டுமென்று கூச்சல் போட்டார்களாம்.

குப்புஸ்வாமி அய்யர்:– ஞானத்தைக் கொடுப்பதில் ஈசுவரன்தான் பெரியவர். மோக்ஷத்தைக் கொடுப்பதில் மஹாவிஷ்ணுதான் பெரியவர் என்று பதில் கூறியிருக்கலாமே.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிக்கூறிப்பார்த்தும் பலனில்லை. ஏனென்ருல் ஞானம் வெறும் ஸாதனம்தானென்றும், மோக்ஷமோ பல (फल) மாகையால் உயர்ந்ததென்றும், ஆகவே மோக்ஷத்தைக் கொடுப்பவர்தான் மிகப் பெரியவர் என்றும் வைஷ்ணவர்கள் வாதாட ஆரம்பித்துவிட்டார்களாம்.

குப்புஸ்வாமி அய்யர்:– அப்படியாஞல் இருவரையும் எப்படித்தான் திருப்திப்படுத்தமுடியும் ?

ஸ்ரீஸந்நிதானம்:– கதை சொல்லவந்த அந்த பாகவதர் கடைசியில் ஓர் உபாயம் கண்டுபிடித்துவிட்டாராம். அவர் கூறிஞர்:– மோக்ஷம் என்ருல் விடுதலை. பந்தம் என்ருல் ஸம்ஸாரம். ஸம்ஸாரம் என்பது ஒரு காராகிருஹம் போன்றது. காராகிருஹத்திலிருந்து (ஜெயில்) குற்றவாளியை விடுவிப்பவர் ஸேவகர்கள்தான். விடுவிக்க உத்தரவிடக்கூடியவர் ஜெயில் அதிகாரி

(மாஜிஸ்ட்ரேட்டு) தான். இதில் விடுவிப்பவர் பெரியவரா அல்லது விடுவிக்க உத்தரவளிப்பவர் பெரியவரா என்று நீங்களே ஆராய்ந்து பாருங்கள் என்று பாகவதர் கூறவே எல்லோரும் சிரித்து விட்டார்களாம் ! எப்படியிருக்கிறது கதை ?

குப்புஸ்வாமி அய்யர்:– கதை நன்ருகத்தானிருக்கிறது. எங்களது ஸந்தேஹம்தான் தீரவில்லை. அந்தப் பாகவதர் கூறியதைப் பரம ஸித்தாந்தமாக எடுத்துக்கொள்ள முடியுமா, என்ன ?

ஸ்ரீஸந்நிதானம்:– வாஸ்தவத்தில் அது ஸித்தாந்தமாகாதுதான். எதிரியின் வாயை மூடச்செய்வதற்கு ஒருவித விதண்டாவாதம் என்றுதான் கூறவேண்டும். வாஸ்தவ ஸமாதானமென்னவென்ருல்,

एकैव मूर्तिर्बिभिदे त्रिधा सा सामान्यमेषां हि परावरत्वम् ।
विष्णोर्हरस्तस्य हरिः कदाचिद्वेधास्तयोस्तावपि धातुराद्यौ ॥

ஏகைவ மூர்த்திர் பிபிதே த்ரிதா ஸா
ஸாமான்ய மேஷாம் ஹி பராவரத்வம் ।
விஷ்ணோர் ஹரஸ் தஸ்ய ஹரி: கதாசித்
வேதாஸ் தயோஸ் தாவபி தாதுராத்யௌ ॥

என்ற காளிதாச வசனம்தான் அதற்கு முக்கிய ஸமாதானமாகும். அதாவது आवयोरन्तरं नास्ति शब्दैरर्थैर्जगत्पते (*ஆவயோரந்தரம் நாஸ்தி ஶப்தைரர்த்தைர் ஜகத்பதே* – உலகத்தலைவனே, சொற்களாலும், பொருள்களாலும் எங்களுள் வேற்றுமை கிடையாது.) என்று கூறப்பட்ட பிரகாரம் சப்தத்தாலோ அர்த்தத்தாலோ சிவ விஷ்ணு மூர்த்திகளுக்கு பேதம் கிடையாது. ஒரே வஸ்துதான் சிவ ரூபமாகவும், விஷ்ணுரூபமாகவும் விளங்கிக்கொண்டிருப்பதால் ஞானதாதா ஒருவர், மோக்ஷதாதா மற்ருெருவர் என்று கூற இடமே கிடையாது. இதுதான் தீர்மானம். அவ்விதமே 'जन्मानेकशतैः' என்று முன் குறிப்பிடப்பட்ட சுலோகப் பிரகாரம் ஸாக்ஷாத் ஈசுவரனே தம் பக்தர்களை அனுக்ரஹிப்பதற்காக குரு ரூபத்தை எடுத்துக்கொண்டு வந்து பக்தர்களது எதிரில் தோன்றி உயர்ந்த உபதேச மொழிகளால் அவர்களின் அக்ஞானத்தைப் போக்கி மோக்ஷமடையும்படி செய்கிருர். ஆகையால் ஞானதாதாவும், மோக்ஷதாதாவும் ஒருவரேதான் என்பதில் ஸந்தேஹமுண்டா ?

குப்புஸ்வாமி அய்யர்:- ஸந்தேஹமே கிடையாது. சிவ விஷ்ணு மூர்த்திகளுக்கு அபேதம்தான் என்ற ஸித்தாந்தம் ஸந்நிதான வாக்கியத்தால் விளக்கப்பட்டதுகூட ஆச்சர்யமில்லை. குருமூர்த்திக்கும்கூட ஈசுவர அபதேம் உண்டு என்று பிரமாண வாக்கியங்களுடன் கூறி எங்களது அக்ஞானத்தை போக்கடித்ததுதான் முக்கிய விஷயமாகும். இப்பொழுதுதான் நாங்கள் கூறிய अज्ञानतिमिरान्धस्य என்ற சுலோகத்தின் அர்த்தம் பூர்ணமாகத் தெரிந்தது.

சந்திரசேகரய்யர்:- அது மாத்திரமா ?இதுவரை ஸந்நிதானம் கூறியதெல்லாம் அந்த சுலோகத்தின் அமூல்யமான ஒரு பாஷ்யம் என்றே கருதுகிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- இந்த ஸித்தாந்தத்தைத்தான் முன்பு மஹான்கள் வேறுவிதமாகக் காட்டியிருக்கிறார்கள்.

परिपक्वमला ये तान् उत्सादनहेतुशक्तिपातेन ।
योजयति परे तत्वे सदीक्षयाऽऽचार्यमूर्तिस्थः ॥

பரிபக்வமலா யே தான் உத்ஸாதன ஹேது ஶக்தி பாதேன ।
யோஜயதி பரே தத்வே ஸதீக்ஷயா ஆசார்ய மூர்த்திஸ்த்த: ॥

(எவர்களின் மனதிலுள்ள அழுக்குகள் (காம க்ரோதாதிகள்) விலகிவிட்டனவோ, அவர்களை ஆசார்ய உருவிலுள்ள ஈசுவரன் நல்ல கடாக்ஷத்தினால் ஞானத்தை அழிக்கும் சக்தியை விழும்படி செய்வதன் மூலம் பரதத்துவத்தில் சேர்த்து வைக்கிறார்.) என்ற சுலோகத்தால் அந்தக் கருத்து வெளியாகிறது.

அதாவது ஸாக்ஷாத் பகவானே ஸத்குருவின் மூர்த்தியில் புகுந்துகொண்டு, சித்தசுத்தியடைந்த முக்கிய சிஷ்யர்களை அநுக்ரஹித்து, அவர்களது அக்ஞானத்தை விலக்கக்கூடிய சக்தியை சிஷ்யர்களது மனதில் பிரவேசிக்கச் செய்து அவர்களைப் பரமாத்ம ஸ்வரூபத்தில் ஈடுபடும்படிச் செய்கிறார். ஆகையால் குருவுக்கும் ஈசுவரனுக்கும் அபேதம்தான் என்பது இந்த சுலோகத்தினால் தெரியவில்லையா?

குப்புஸ்வாமி அய்யர்:– இதைத்தான் சிவானந்தலஹரியில் 'वीक्षां मे दिश चाक्षुषीं सकरुणाम्' (*வீக்ஷாம் மே திச சாக்ஷுஷீம் ஸகருணாம்*) * என்று நமது பகவத்பாதர்களும் வர்ணித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படித் திருப்பிச் சொல்லாதீர்கள். பகவத்பாதர் சொன்னதைத்தான் அந்த சுலோக கர்த்தா அனுவாதம் செய்திருக்கிறார் என்று சொல்லுங்கள். ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்று ஒருவர் கூறியதைத்தான் मातृदेवो भव (*மாத்ருதேவோ பவ*) என்று வேதம் அனுவதிக்கிறது என்று ஒரு மேதாவி உபந்யாஸத்தில் கூறியதுபோல் கூறுகிறீர்களே ! (சிரிப்பு)

குப்புஸ்வாமி அய்யர்: शान्तं पापम् (*ஶாந்தம் பாபம்*) விஷயம் ஒன்றுதானா என்று கேட்க விரும்பினேன். அவ்வளவுதான்.

ஸ்ரீஸந்நிதானம்:– விஷயமும் ஒருவிதத்தில் மாறித்தான் இருக்கிறது. ஏனென்றால் பகவத்பாதாள் ஸாக்ஷாத் பரமசிவனைப் பார்த்து அவரது கடாக்ஷவீக்ஷணம் வேண்டும் என்று பிரார்த்தித்தார். 'परिपक्वमलाः' (*பரிபக்வமலா:*) என்ற சுலோகத்திலோ, 'सदीक्षया आचार्यमूर्तिस्थः' (*ஸதீக்ஷயா ஆசார்யமூர்த்திஸ்த்த:*) என்று கூறியபடி குருவின் உருவத்தில் இருந்துகொண்டு சிஷ்யனை பகவான் அனுக்ரஹிக்கிறார் என்றுதானே கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் இதில் கொஞ்சம் விசேஷமிருக்கிறது. (சிரிப்பு)

குப்புஸ்வாமி அய்யர்:– எப்படியும் பகவானை நாம் ஆராதித்தால் அவர் தாமாகவே குருவின் உருவத்தில் வந்து தம் பக்தர்களைக் காப்பாற்றுவார் என்ற தத்துவத்தைத் தெரிந்து கொண்டோம். ஆனால் शक्तिपातेन (*சக்திபாதேன*) என்று கூறப்பட்டதன் கருத்து நன்றாகப் புரியவில்லையே ?

ஸ்ரீஸந்நிதானம்:– ''சக்தி பாதம்'' என்றால் குருவானவர் தம் சக்தியை (தேஜஸ்ஸை) சிஷ்யனது உடலில் செலுத்துவது என்று அர்த்தம். அவ்விதம் தன் தேஜஸ்ஸை சிஷ்யனது உடம்பிலும் மனதிலும் ஏற்றுவதற்கு மூன்று உபாயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அதற்குத்தான் स्मरणदीक्षा (*ஸ்மரண தீக்ஷை*) चाक्षुषदीक्षा (*சாக்ஷுஷ தீக்ஷை*) स्पर्शदीक्षा (*ஸ்பர்ஶ தீக்ஷை*) என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன.

---

* சிவானந்தலஹரி – சு.29

குப்புஸ்வாமி அய்யர்:- கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனாலும் அதை விளக்கிக்கூறும்படி வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- கைவல்ய நவநீதம் என்ற கிரந்தத்தில் இந்த தீக்ஷைகள் ஸ்பஷ்டமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

कमठझषवयांसीवादरात् स्मृत्युदीक्षा-
च्छदपुटयुगमध्यस्पर्शनैर्दीक्षयित्वा ।
अमुमथ गुरुराह त्वज्ज्ञनिं मार्जयिष्या-
म्यहमपि, मम वाक्यं श्रूयते चेत्सुभक्त्या ॥

கமட ஜஷ வயாம்ஸீவாதராத் ஸ்ம்ருத்யுதீக்ஷா-
ச்சதபுட யுக மத்ய ஸ்பர்ஸனைர் தீக்ஷயித்வா ।
அமுமத குருராஹ த்வஜ்ஜனிம் மார்ஜயிஷ்யா-
ம்யஹமபி மம வாக்யம் ச்ரூயதே சேத் ஸுபக்த்யா ॥

என்ற சுலோகத்தால் மூன்று தீக்ஷைகளும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. அதாவது: ஆமையானது வெகுதூரத்திலிருக்கும் தன் குஞ்சுகளை நினைத்துக்கொண்ட மாத்திரத்தில் அவைகள் வளர்கின்றன. மீனோ தன் பார்வையினாலே பக்கத்திலுள்ள குஞ்சுகளை வளர்க்கிறது. பறவைகள் தன் குஞ்சுகளை இரண்டு இறக்கைகளுக்கு நடுவில் அடைகார்த்து அவைகளை வளர்க்கின்றன. அதுபோல் குருவானவர் அன்புடன் தன் சிஷ்யனை ஸ்மரித்தால் அதன் மூலம் அவனுக்கு ஞானோதயம் உண்டாகும்; அல்லது அவர் கடாக்ஷவீக்ஷணத்தாலும் ஞானம் உண்டாகும். ஹஸ்த மஸ்தக ஸம்யோகம் மூன்றாவது. குரு தன் கையை சிஷ்யனது சிரஸில் வைத்து அனுக்ரஹிப்பதாலும் சிஷ்யனுக்கு ஞானோதயம் ஏற்படும்படி செய்யலாம். இம்மூன்றும் ஸமஷ்டியாக (சேர்ந்து) ஏற்படுவது ஸந்யாஸி சிஷ்யர்களுக்கு மாத்திரம்தான். ஏற்கெனவே இந்த விஷயத்தை முன்பு கூறியிருக்கிறேன்.

குப்புஸ்வாமி அய்யர்:- நாங்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் ஒரு ஸந்தேஹத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று நினைத்தோம். ஆனால் அதுவும் கடைசி வார்த்தையால் தானாகவே நிவிருத்தியாய்விட்டது.

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களுக்கு ஸந்தேஹம் ஏற்பட்டதும் அது விலகியதும் எனக்குத் தெரியாமலில்லை. ஆனால் அதன்படி கிருஹஸ்தர்களுக்கு முதல் இரண்டு தீக்ஷைகளும் ஏற்படக்கூடாது என்று சொல்ல முடியாது. அவர்களது அதிகாரத்தை அனுஸரித்து ஒன்றோ இரண்டோ ஏற்படலாம். ஆனால் மூன்றாவது தீக்ஷை ஏற்பட முடியாது. அதைத்தான் समष्टि (ஸமஷ்டி) பதத்தால் குறிப்பிட்டோம். ஆகவே ஸந்யாஸி சிஷ்யர்களுக்குத்தான் மூன்றும் சேர்ந்து கிடைக்கும்.

குப்புஸ்வாமி அய்யர்:– அப்படியானால் ஸந்நிதானத்தின் பார்வையானது லக்ஷக்கணக்கானவர்களிடம் சென்றிருக்கலாமே. அவர்களெல்லாம் ஞானிகளாகியிருப்பதாகக் காணவில்லையே.

ஸ்ரீஸந்நிதானம்:– வெறும் பார்வையினாலேயே ஞானம் ஏற்படுமென்றால் உபநிஷத்துக்களில் சிரவணம், மனனம், நிதித்யாஸனம் முதலிய ஸாதனங்களையே விதிக்க வேண்டியதில்லையே! ஆகையால் வெறும் பார்வையை குருகடாக்ஷம் என்று கூற முடியாது. அன்புடன் கூடிய விசேஷமான பார்வைதான் குருகடாக்ஷமாகும். இது உங்களுக்குத் தெரியாதா?

குப்புஸ்வாமி அய்யர்:– தெரியாமலில்லை. ஆனால் கேவலம் குரு கடாக்ஷத்தாலேயே மோக்ஷபர்யந்தமுள்ள எல்லா சிரேயஸ்ஸுகளும் கிடைக்கக்கூடும் என்ற நம்பிக்கையாலேயே நாங்கள் இங்கு வந்தோம். அது சுலபமானதன்று என்றும், அதற்கு வேறு சில ஸாதனங்களும் தேவை என்றும் இப்பொழுதுதான் உணர்ந்து கொண்டோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– அது மாத்திரமில்லை. அதிகார ஸம்பத்தும் முக்கியமாக வேண்டும்.

குப்புஸ்வாமி அய்யர்:– 'अधिकारिणः प्रमितिजनको वेदः' (*அதிகாரிண: ப்ரமிதிஜநகோ வேத:*) என்று முன்பே உத்தரவானதையும் நாங்கள் மறக்கவில்லை. ஆனாலும் தோடகாசார்யர் விஷயத்தில் சங்கரபகவத்பாதாள் அனுக்ரஹம் செய்து அவரை மஹாஞானியாகச் செய்ததுபோல், ஸந்நிதானம் எங்களை அனுக்ரஹம் செய்தாலொழிய எங்களது ஸ்வப்ரயத்னத்தால் நாங்கள் இந்த ஸம்ஸார

ஸமுத்திரத்தைத் தாண்டி அக்கரை செல்வோம் என்ற நம்பிக்கையே எங்களுக்கு இன்னும் ஏற்படவில்லை.

ஸ்ரீஸந்நிதானம்:– தோடகாசார்யருக்கும் ஒரு முயற்சியும் இல்லாமல் அந்த ஆசார்ய அனுக்ரஹம் கிடைத்ததாக நீங்கள் எண்ணுகிறீர்களா என்ன ?

குப்புஸ்வாமி அய்யர்:– தோடகர் நமது ஆசார்யாளுக்குப் பலவித சுசுரூஷைகள் செய்துவந்ததால்தான் அவரிடம் வாத்ஸல்யம் ஏற்பட்டு ஆசார்யாள் அவ்விதம் அனுக்ரஹித்தார்கள். அதுபோலவே நாங்களும் ஸந்நிதானத்துக்கு எல்லா சுசுரூஷைகளையும் செய்து வந்தால் எங்களுக்கும் ஞானம் ஏற்படாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் எனக்கு சுசுரூஷை செய்து கொண்டேயிருந்தால் உங்களது குடும்பம் என்னவாகும் ? உங்கள் குமாரரது உத்தியோகம் என்னவாகும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டாமா ?

சந்திரசேகரய்யர்:– எல்லாவற்றையும் விடத் தயார். ஸத்குருவின் கருணைகடாக்ஷமும் ஆத்மஞானமும் கிடைக்குமானால் இந்த உத்தியோகம் எம்மாத்திரம் ?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படிச் சொல்லாதீர்கள். இப்பொழுது நீங்கள் ஒரு ஸாதாரண நீதிபதியாக இருக்கிறீர்கள். உங்களது உத்யோகம் இன்னும் உயர்ந்து கொண்டே வந்து பாரத தேசத்துக்கே பிரதான நீதிபதியாக (ஸுப்ரீம் கோர்ட் ஜட்ஜ்) நீங்கள் பதவியேற்றுப் பல அற்புதமான கார்யங்களை ஸாதிக்கவேண்டியிருக்கிறது. அவ்வளவு மகத்தானப் பொறுப்புக்களை வஹித்து ஏராளமான ஐச்வர்யங்களையும் ஸம்பாதித்து ஸௌக்யமாக இருக்க வேண்டுமென்று உங்களது ஜாதக பலன் இருந்தால் நீங்கள் அதை மாற்றமுடியுமா ? (இருவரும் ஆனந்தத்துடன் கண்ணீர் விடுகிறார்கள்.)

சந்திரசேகரய்யர்:– ஸர்வக்ஞமூர்த்தியான தங்களது அநுக்ரஹம் அப்படியே இருக்குமானால் அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான். ஆனாலும் தோடகாசார்யர் போல் நமக்கும் குருகடாக்ஷமாத்திரத்தால் பிற்காலத்திலாவது

ஞானஸித்தி ஏற்படக்கூடாதா என்ற ஸந்தேஹம் நிவிருத்தியாகவில்லை.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானுல் கேளுங்கள். தோடகாசார்யார் வெறும் குரு சுசுரூஷையினுல் மாத்திரம் ஞானம் பெறவில்லை. முன்பிறவிகளில் கர்ம–பக்தி–ஞான மார்க்கங்களில் நன்ருக ஈடுபட்டு பகவானையும் நன்ருக ஆராதித்ததுடன், வேதாந்த விசாரமும் நன்ருகச் செய்திருக்கிருர். ஆனுல் ஏதோ ஒரு பிராரப்தகர்ம வசத்தால் மேதாவிலாஸம் மங்கிப்போனது போலிருந்து, பிறகு குரு பக்தியின் பிரபாவத்தாலும், பிராரப்தத்தின் அனுபவகாலம் முடிந்து போனபடியாலும், முன் ஜன்ம வாஸனை மறுபடியும் உத்புத்தமாயிருக்கலாம். முன் ஜன்ம வாஸனையுடன் ஆசார்ய அனுக்ரஹமும் ஒன்றுகூடிச் சேர்ந்ததனுல்தான் அவர் திடீரென்று மஹாபண்டிதராகவும் ஞானியாகவும் ஆனுர் என்றுதான் தீர்மானிக்கவேண்டும்.

சந்திரசேகரய்யர்:– அதுவரையில் மந்தபுத்தியாயிருந்த தோடகருக்கு ஆசார்யாள் அநுக்ரஹித்த பிறகுதான் ஞானேதயம் ஏற்பட்டது என்றுதான் சங்கரவிஜயம் கூறுகிறது. ஆகவே குரு அநுக்ரஹம் ஒன்றுதான் காரணம் என்று கூறமுடியாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படி குருபக்தியினுலேயே அவர் ஞான ஸித்தியடைந்தார் என்ருல் எல்லோரும் சோம்பேறிகளாக இருந்து வெறும் குரு சுசுரூஷைமாத்திரத்திலேயே ஈடுபட்டு ஸுலபமாக ஞானத்தை ஸம்பாதித்துவிடமாட்டார்களா ? அவ்விதம் எல்லோரையும் சோம்பேறிகளாகச் செய்வதற்குத்தான் சாஸ்திரம் ஏற்பட்டிருக்கிறதா ? श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः (*ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:*) என்ற விதிப்படி ஆத்ம விசாரம் செய்வது கஷ்டமானபடியால் அந்த விசாரமார்க்கத்தை விட்டுக் குறுக்கு வழியில் இறங்கி எல்லோரும் வெறும் குரு சுசுரூஷையிலேயே ஈடுபடுவார்களானுல் அந்த சாஸ்திரவிதிகளுக்கு பிராமாண்யமே இல்லாமல் போகாதா ?

சந்திரசேகரய்யர்:– அப்படியானுல் குரு பக்தியுடன் மற்ற ஸாதனங்களும் வேண்டும் என்ருகிறது. வேறு ஸாதனங்களுக்குள் சுலபமான ஒரு ஸாதனத்தைக் கைக் கொண்டு அனுஷ்டித்து வந்தால்

அதன் பலனை அடைய முடியாதா ? ஏதாவது ஒரு முக்கியமான மந்திரத்தை ஸந்நிதானத்தில் உபதேசம் பெற்றுக் கொண்டு பகவதாராதனம் செய்து வந்து குருபக்தியையும் செய்துவந்தால் ஞான ஸித்தியடைய முடியாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:- சாஸ்திரங்களில் घट्टकुटीप्रभातन्यायः (*கட்ட குடீப்ரபாதந்யாய:*) என்று ஒரு நியாயம் கூறுவார்கள். நீங்கள் இப்பொழுது அந்த நிலைக்கே வந்துவிட்டீர்கள் போலும்.

சந்திரசேகரய்யர்:- அந்த நியாயத்தின் கருத்தை விளக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:- ஒரு திருஷ்டாந்தத்துக்காக அதைக் கூறினேன். வேறு விதமாக நினைக்கவேண்டாம். அதாவது ஒரு திருடன் இரவில் நகரத்துக்குள் புகுந்து தன் திருட்டு வேலைகளைச் செய்துவிட்டுக் கிடைத்த பொருள்களுடன் தன் வீட்டுக்குப் புறப்பட்டான். அதுவோ பெரிய பட்டணம். அங்கே ரக்ஷா புருஷர்களின் (போலீஸ்காரர்) தொல்லை ஜாஸ்தியாயிருந்தபடியால் அதைத் தவிர்ப்பதற்காக நேர் வழியில் செல்லாமல் சுற்றிச் சுற்றிப் பல தெருக்கள் வழியாக தன் ஊருக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டேயிருந்தான். வழி தவறிவிட்டபடியால் ஊர் எல்லையிலுள்ள ரக்ஷா ஸ்தானம் (போலீஸ் ஸ்டேஷன்) வந்து சேர்ந்தான். இரவும் விடிந்துவிட்டது. எந்த ரக்ஷா புருஷர்களை (போலீஸ்காரர்களை) ஏமாற்றவேண்டுமென்று நினைத்து வேறு வழியில் அவன் சென்றானோ அவர்களையே விடியற்காலையில் ஸந்திக்கும்படி நேர்ந்துவிட்டபடியால் அவர்களிடமே அவன் அகப்பட்டுக்கொண்டு காராகிருஹம் (ஜெயில்) செல்லும்படியாய் விட்டது. இதுதான் கட்டகுடீப்ரபாதந்யாயமாகும்.

சந்திரசேகரய்யர்:- எங்களுக்கும் அந்த நியாயத்துக்கும் என்ன ஸம்பந்தம் என்று புரியவில்லையே !

ஸ்ரீஸந்நிதானம்:- நீங்கள் ''குருகடாக்ஷத்தாலேயே எல்லாம் கிடைக்குமே. மற்ற ஸாதனங்களெல்லாம் எதற்கு?'' என்று முதன் முதலில் கேட்டீர்கள். அதற்கு பதிலாக அந்த ஸந்தேஹங்களெல்லாம் விலகுவதற்காகவே இதுவரையில் பல விஷயங்களைப் பற்றி

விமர்சனம் செய்து வந்தோம். அப்படியும் உங்களது ஸந்தேஹம் தீர்ந்தபாடில்லை. மறுபடியும் முன்கேட்ட அதே கேள்வியையே கேட்க ஆரம்பித்து விட்டீர்களே. இப்பொழுது அந்த நியாயத்தின் கருத்து புரிந்ததா ? (சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:– நாங்கள் முன்பு குருகடாக்ஷத்தைப் பற்றித்தான் பேசி வந்தோம். இப்பொழுதோ மந்திர உபதேசத்தைப் பற்றியல்லவா பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் அந்தத் திருடன் போல் நாங்கள் பழைய இடத்திற்குப்போய் மாட்டிக்கொள்ளவில்லையே. (சிரிப்பு). ஆகையால் ஏதாவது மந்திர உபதேசம் செய்தால் அதன் மூலமாவது எங்களுக்கு மனஸ் சாந்தி கிடைக்குமென்றெண்ணியே அதைத் தெரிவித்தேன். ஸந்நிதானத்தில் வந்துபோனதற்கு அறிகுறியாக ஒரு மந்திர உபதேசமாவது எங்களுக்குக் கிடைக்குமேயானால் நாங்கள் மிகவும் தன்யர்களாவோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– ''மந்திரத்தினால் மாங்காய் விழாது'' என்ற பழமொழியை நீங்கள் கேட்டதில்லையா ?

சந்திரசேகரய்யர்:– மாங்காய் விழாது, ஆனால் மந்திரஜபத்தால் மனதுக்கு சாந்தி ஏற்படுமென்றே தோன்றுகிறது. (சிரிப்பு)

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானால் அதற்கு ஸந்தர்ப்பம் வரும்பொழுது அதையும் செய்துகொள்ளலாம். ஆனால் இதனாலெல்லாம் நீங்கள் விரும்பிய ஞானமோ, மோக்ஷமோ கிடைக்காது. இதைத்தான் நமது பகவத்பாதாள் வேறொரு திருஷ்டாந்தத்தால் விவேகசூடாமணியில் வர்ணித்திருக்கிறார்கள்.

न गच्छति विना पानं व्याधिरौषधशब्दतः ।
विनाऽपरोक्षानुभवं ब्रह्मशब्दैर्न मुच्यते ॥

ந கச்சதி விநா பானம் வ்யாதிரௌஷதஶப்தத: ।
விநாஅபரோக்ஷானுபவம் ப்ரஹ்மஶப்தை: ந முச்யதே ॥

(வியாதியுள்ளவன் மருந்தை உட்கொள்ளாமல் மருந்துகளின் பெயர்களை மட்டும் ஆவர்த்தி செய்தால் வியாதி நிவ்ருத்தியாகுமா? அதுபோலவே சிரவணமனன நிதித்யாஸாதி ஸாதனங்களை

அப்யாஸம் செய்தால்தான் அபரோக்ஷ ஆத்மஞானம் ஏற்படும். வெறும் மந்திரங்களை ஆவர்த்தி செய்வதால் மாத்திரம் மோக்ஷம் கிட்டாது.)

சந்திரசேகரய்யர்:– ஸ்ரீவித்யை முதலான மஹா மந்திரங்களை ஜபம் செய்து புரச்சரணம் செய்தால் அதன்மூலம் ஞானமோ, மோக்ஷமோ ஏற்படாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் ஸ்ரீவித்யை வரையில் போக வேண்டிய அவசியமேயில்லையே. உங்களுக்கு ஏற்கெனவே உபதேசமாயிருக்கும் காயத்ரீ ஒன்றே போதாதா ? न गायत्र्याः परो मन्त्रः (*ந காயத்ர்யா: பரோ மந்த்ர:* – காயத்ரீக்கு மேலான மந்திரம் கிடையாது.) என்ற ஸ்மிருதி வாக்கியத்தை நீங்கள் கேட்டதில்லையா ?

சந்திரசேகரய்யர்:– காயத்ரீயையும் பிரதிதினம் ஜபம்செய்து கொண்டுதான் வருகிறோம். அத்துடன் ஸ்ரீவித்யை முதலான மஹாமந்திரங்களையும் ஜபம் செய்து வந்தால் ஆத்மஞானம் ஏற்படாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– இதற்கு நமது பகவத்பாதாளே (விவேக சூடாமணி சு. 67) பதில் கூறியிருக்கிறார்கள். கவனித்துப் பாருங்கள்.

आप्तोक्तिं खननं तथोपरिशिलापाकर्षणं स्वीकृतिं
निक्षेपः समपेक्षते नहि बहिः शब्दैस्तु निर्गच्छति ।
तद्वद् ब्रह्मविदोपदेशमननध्यानादिभिर्लभ्यते
मायाकार्यतिरोहितं स्वममलं तत्त्वं न दुर्युक्तिभिः ॥

ஆப்தோக்திம் கனனம் ததோபரி ஶிலாபாகர்ஷணம் ஸ்வீக்ருதிம்
நிக்ஷேப: ஸமபேக்ஷதே நஹி பஹி: ஶப்தைஸ்து நிர்கச்சதி ।
தத்வத் ப்ரஹ்ம விதோபதேஶமநந த்யாநாதிபிர் லப்யதே
மாயா கார்ய திரோஹிதம் ஸ்வமமலம் தத்த்வம் ந துர்யுக்திபி: ॥

இந்த சுலோகத்தின் அர்த்தம் தெரியுமா ? தெரிந்தால் கூறுங்கள்.

குப்புஸ்வாமி அய்யர்:– நானே கூறுகிறேன். ஒருவன் பூமியிலுள்ள புதையலை எடுக்கவேண்டுமானுல் ஓ புதையலே ! புதையலே ! என்று கூவினுல் மாத்திரமோ அல்லது வேறு மந்திர ஜபங்களாலோ அது வெளியில் வராது. அந்தப் புதையலை அடைவதற்குரிய முயற்சிகளைச் செய்துதான் தீரவேண்டும். அதாவது நம்பிக்கையுள்ளவர்களின் மூலம் புதையல் எங்கு இருக்கிறது என்பதை முதலில் அறியவேண்டும். பிறகு பூமியைத் தோண்டவேண்டும். பிறகு மேற்புறமுள்ள கல்லை அகற்றி மண்ணை விலக்கித் தன் கையை விட்டு அதை வெளியில் எடுத்தால்தான் அது கைக்கு வந்து சேரும். அதுபோல் பிரஹ்மவித்துக்களின் உபதேசம், மனனம், நிதித்யாஸனம் முதலிய ஸாதனங்களால்தான் அந்த ஆத்ம தத்துவத்தை அறியமுடியுமே தவிர வெறும் யுக்திகளால் அதை அறிய இயலாது.

ஸ்ரீஸந்நிதானம்:– இதில் मायाकार्यतिरोहितं (*மாயாகார்ய திரோஹிதம்*) என்பதன் ஸ்வாரஸ்யத்தை விட்டுவிட்டீர்களே !

சந்திரசேகரய்யர்:– அதை ஸந்நிதானத்திடமிருந்தே அறிய விரும்புகிருேம். உபதேசிக்க வேண்டும்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியானுல் கேளுங்கள். ஆத்மதத்துவமானது நமது ஹ்ருதயகமலத்திலேயே ஸதா விளங்கிக் கொண்டுதானிருக்கிறது. அதை அடைய நாம் முயற்சி செய்யவேண்டிய அவசியமே இல்லை. அதை மூடிக் கொண்டு இருக்கும் அக்ஞானம், அஹங்காரம் முதலிய ஆவரணங்களை விலக்குவதற்குத்தான் நாம் முயற்சி செய்யவேண்டும். அதற்கு சிரவணுதிகள்தான் ஸாதனங்கள். திருஷ்டாந்தத்திலும் நிதியானது ஏற்கெனவே பூமிக்கடியில் இருப்பதால் அதை உண்டுபண்ண முயற்சிக்கவேண்டியதில்லை. முன் கூறிய உபாயங்களால் அதை மூடிக்கொண்டிருக்கும் கல், மண் முதலியவைகளை அகற்றும் முயற்சிதான் அங்கு தேவைப்படுகிறது; ஆகையால் அது வெறும் சப்தங்களால் வெளியே வராது என்ற கருத்தையும் அறியவேண்டும்.

சந்திரசேகரய்யர்:– வெறும் சப்தங்களுக்கும் மந்திரங்களுக்கும் வித்யாஸமில்லையா? ஸ்ரீவித்யாதி மந்திர ஜபங்களால் மோக்ஷம் கிடைக்காது என்று அதனுல் தீர்மானிக்கலாமா?

'मोक्षैकहेतुविद्या तु श्रीविद्या नात्र संशयः' (*மோக்ஷைகஹேது வித்யா து ஸ்ரீவித்யா நாத்ர ஸம்ஶய:*) என்ற பிரமாண வாக்கியங்களால் ஸ்ரீவித்யா உபாஸனம் மோக்ஷத்தையே அளிக்கக்கூடியது என்று ஸித்தமாகவில்லையா ?

ஸ்ரீஸந்நிதானம்: 'न गायत्र्याः परो मन्त्रः' (*ந காயத்ர்யா: பரோ மந்த்ர:*) என்ற வாக்கியம் மாத்திரம் பிரமாணமில்லையா என்ன? (சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:- இருந்தாலும் 'राज्यं देयं शिरो देयं न देया षोडशाक्षरी' (*ராஜ்யம் தேயம் ஶிரோ தேயம் ந தேயா ஷோடஶாக்ஷரீ*) என்று ஸ்ரீவித்யையின் அபூர்வத் தன்மையையும் மஹிமைகளையும் விளக்கியிருப்பதால் அதில் விசேஷம் இருப்பதுபோல் தோன்றுகிறது. அது மோக்ஷ ஸாதனமாக இருக்கக்கூடாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:- ஸரி. 'न देया षोडशाक्षरी' (*ந தேயா ஷோடஶாக்ஷரீ*) என்று நீங்களே கூறிவிட்டீர்களே ! (சிரிப்பு) நியாயஸ்தலங்களில் (கோர்ட்) நீதிபதி ஸ்தானத்தில் (ஜட்ஜ்) இருந்துகொண்டு தீர்ப்பு (ஜட்ஜ்மெண்ட்) கூறுவது போல் 'न देया षोडशाक्षरी' (*ந தேயா ஷோடஶாக்ஷரீ*) என்று தீர்ப்பு கூறிவிட்டீர்களே ! (இன்னும் சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:- நான் இப்பொழுது சிஷ்ய ஸ்தானத்தில்தான் இருக்கிறேன். நீதிபதியாக இல்லை.

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியானால் 'शिष्यस्तेऽहं शाधि मां त्वां प्रपन्नम्' (*சிஷ்யஸ்தேऽஹம் ஶாதி மாம் த்வாம் ப்ரபந்நம்*) என்றல்லவா பிரார்த்திக்கவேண்டும்.

சந்திரசேகரய்யர்:- ஆகா ! அதே வாக்கியத்தால் அப்படியே பிரார்த்திக்கிறேன். ஸ்ரீவித்யா மந்திர விஷயமான என்னுடைய சிறு ஸந்தேஹங்களை விலக்கி என்னை அனுக்ரஹிக்கும்படி வேண்டுகிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியானால் முதலில் நீங்கள் நமது சங்கர பகவத்பாதாளின் உபதேச மொழிகளில் பூர்ண நம்பிக்கை வைக்கவேண்டும். அவர்தான் நமக்குப் பரம ஆப்தர் என்று நம்பி அவரது வாக்கியங்களிலேயே பூர்ண விசுவாசத்துடன் இருக்க

வேண்டும். வேதம், ஸ்மிருதி, புராணம் முதலிய எல்லா பிரமாணங்களையும் ஒன்றுபடுத்தி ஆராயக்கூடிய சக்தி நமக்குக் கிடையாது. ஸர்வக்ஞமூர்த்தியான ஆசார்யாளோ எல்லாவற்றையும் உணர்ந்து இருப்பதால் நம் போன்ற அதிகாரிகளுக்கு இது ஹிதம் இது அஹிதம் என்பதை விளக்கிக்கூறமுடியும். அவர் கூறுவது வேத ஸ்மிருதி புராணங்களுக்கு விருத்தமாக ஒருக்காலும் இருக்க முடியாது. ஏனென்றால் அவர் எல்லாவற்றிலும் கரை கண்டவர். இதை நம்புங்கள்.

(இதைக் கேட்டவுடன் குப்புஸ்வாமி அய்யரும் சந்திரசேகரய்யரும் எழுந்து நின்று,

श्रुतिस्मृतिपुराणानां आलयं करुणालयम् ।
नमामि भगवत्पादशंकरं लोकशंकरम् ॥

ச்ருதி ஸ்ம்ருதி புராணாநாம் ஆலயம் கருணாலயம் |
நமாமி பகவத்பாத சங்கரம் லோகசங்கரம் ||

என்று கூறி ஆனந்த பாஷ்பத்துடன் வணங்கி நின்றார்கள்.)

ஸ்ரீஸந்நிதானம்:– (மந்தஹாஸத்துடன்) உட்காருங்கள். ஸ்ரீவித்யாதி மந்திர ஜபங்களால் மோக்ஷம் கிடைக்கும் என்று கூறினீர்கள் அல்லவா ? அதில் தவறொன்றுமில்லை. அப்படியே காயத்ரீ, பஞ்சாக்ஷரம் முதலிய மந்திரங்களாலும் மோக்ஷம் கிடைக்கும். ஆனால் ஸாக்ஷாத் மோக்ஷ ஜனகமாக அவைகளைக் கூறமுடியாது. 'ज्ञानादेव तु कैवल्यं', 'तमेवं विद्वानमृत इह भवति' (*ஞாநாதேவ து கைவல்யம், தமேவம் வித்வானம்ருத இஹ பவதி*) என்ற பிரபல சுருதி வாக்கியங்களால் ஆத்மதத்துவ ஞானம்தான் ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதனம் என்று கூறப்பட்டிருக்கிறது. இதில் 'एव' என்று ஏவகாரம் போட்டிருப்பதால் மற்றவைகளுக்கு விலக்கு ஏற்பட்டே தீரவேண்டும். ஸ்ரீவித்யாதி உபாஸனங்களும் ஏவகாரத்தால் விலக்கப்பட்டிருப்பதால் அவைகளுக்கும் ஸாக்ஷாத் மோக்ஷ ஸாதனத்வம் கிடையாது. இதுதான் ஆசார்யாளின் கருத்து.

சந்திரசேகரய்யர்:– ஆனால் 'मोक्षैकहेतुविद्या तु श्रीविद्या नात्र संशयः' (*மோக்ஷைகஹேது வித்யா து ஸ்ரீவித்யா நாத்ர ஸம்சய:*) என்ற புராண வாக்கியத்திற்கு கதி என்ன ?

ஸ்ரீஸந்நிதானம்:– மோக்ஷத்திற்குக் கர்மா, உபாஸனம் இவைகளும் பரம்பரையாக ஸாதனம்தானே! ஆகையால் மற்ற மந்திர ஜபங்களைவிடவும் உபாஸனங்களை விடவும் ஸ்ரீவித்யா மந்திர ஜபத்துக்கும் உபாஸனத்துக்கும் அதிக மஹிமை இருக்கலாம். ஸ்வல்ப காலத்தில் மோக்ஷமளிக்கக் கூடிய சக்தியும் இருக்கலாம். அவ்வளவே தவிர அது ஸாக்ஷாத் மோக்ஷஜனகமாகாது.

சந்திரசேகரய்யர்:– காயத்ரீ மந்திர ஜபமும் பரம்பரையாக மோக்ஷ ஸாதனம்தானு? அப்படியானுல் 'न गायत्र्याः परो मन्त्रः' (*ந காயத்ர்யா: பரோ மந்த்ர:*) என்று விசேஷம் கூறவேண்டியதில்லையே!

ஸ்ரீஸந்நிதானம்:– காயத்ரீ மந்திரத்தின் அர்த்தத்தை விசாரித்துப் பார்த்தால்தான் அதன் பெருமை தெரியவரும். அது சிவன், விஷ்ணு, பிரம்மா, தேவீ முதலிய தேவதைகளின் மஹிமைகளைக் குறிப்பதுடன் நிர்குணப் பிரஹ்ம ஸ்வரூபத்தைக்கூட விளக்கும் மஹாமந்திரமல்லவா ? அந்த காயத்ரீயை மூன்று காலங்களிலும் ஸந்தியாவந்தன மத்தியில் உபாஸித்துவந்தால் அது ஒன்றே ஸகலவித சிரேயஸ்ஸையும் கொடுக்காதா என்ன ?

सप्तकोटिमहामन्त्राः चित्तभ्रमणकारकाः ।
गायत्रीमात्रसारोऽपि ब्राह्मणो नात्र संशयः ॥

ஸப்தகோடி மஹாமந்த்ரா: சித்தப்ரமணகாரகா: |
காயத்ரீமாத்ர ஸாரோऽபி ப்ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய: ||

என்ற வசனத்தை நீங்கள் கேட்டதில்லையா? அவ்விதம் 'श्रीविद्यामात्रसारोऽपि ब्राह्मणो नात्र संशयः' (*ஸ்ரீவித்யாமாத்ர ஸாரோऽபி ப்ராஹ்மணோ நாத்ர ஸம்சய:*) என்று எங்கேயாவது கூறப்பட்டிருக்கிறதா ? சொல்லுங்கள்.ஒருவன் த்ரிகாலங்களிலும் ஸந்தியாவந்தனத்தை மாத்திரமாவது விதிவத்தாகச் செய்துவந்தாலே அவனுக்கு ப்ரஹ்மலோகப் பிராப்தி பலன் கூறப்படுகிறது.

सन्ध्यामुपासते ये तु सततं संशितव्रताः ।
विधूतपापास्ते यान्ति ब्रह्मलोकं सनातनम् ।

ஸந்த்யாமுபாஸதே யே து ஸததம் ஸம்ஶிதவ்ரதா: |
விதூதபாபாஸ்தே யாந்தி ப்ரஹ்மலோகம் ஸனுதனம் ||

என்று ஸ்மிருதிகளில் பலன் கூறப்பட்டிருப்பதை நீங்கள் கேட்டதில்லையா ? ஆகையால் காயத்ரீ மந்திரத்தையோ, ஸந்தியாவந்தனுதி நித்யகர்மாக்களையோ ஸாமான்யமாக நீங்கள் எண்ண வேண்டாம். ப்ரஹ்மலோகம் வரையில் உள்ள பலன்களைக் கொடுப்பதுடன் அவை பரம்பரயா மோக்ஷஜனகம்தான்.

சந்திரசேகரய்யர்:– மோக்ஷத்திற்கு ஆத்ம விசாரம்தான் முக்கிய ஸாதனம் என்பதை அறிந்துகொண்டோம். ஆனுல் இனிமேல் என்னைப்போன்ற லௌகிக உத்யோகத்திலிருப்பவர்கள் சாஸ்திர விசாரம் செய்து ஆத்மஞானத்தை ஸம்பாதிக்க முடியாதே. குருவினிடம் வேதாந்த விசாரம் செய்யவும் அவகாசம் கிடையாதே. நாங்கள் எப்படி மோக்ஷமடைய முடியும் ? எங்களுக்கோ ஸாதாரண காவ்ய ஞானம் தான் இருக்கிறது. மற்றபடி சாஸ்திர வ்யுத்பத்தி கிடையாது. நாங்கள் இந்நிலையில் என்ன செய்யவேண்டும்?

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் குடும்ப யோகக்ஷேமத்துக்காக லௌகிக உத்யோகத்தில் இருந்து வருவதில் தவறில்லை. அதில் இருந்துகொண்டே இவ்வளவு தூரம் ஸம்ஸ்கிருத பாஷா ஞானத்தை ஸம்பாதித்துக் கொண்டிருக்கிறீர்களே. இதே பரம சிலாக்யம். ஸம்ஸ்கிருத ஞானமே இல்லாத மற்றவர்களைவிட நீங்கள் எவ்வளவோ சிறந்தவர்கள் என்பதில் ஸந்தேஹமுண்டா ?

சந்திரசேகரய்யர்:– ஆனுலும் வேதாந்த சாஸ்திர விசாரம் செய்யும் திறமை எங்களுக்கில்லையே ?

ஸ்ரீஸந்நிதானம்:– முயற்சி செய்தால் காலக்ரமத்தில் அதுவும் உங்களுக்கு ஏற்பட்டே தீரும். வாஸ்தவத்தில் அதிகமான சாஸ்திர பாண்டித்யம் கூட அவ்வளவாக வேண்டியதில்லை. ஏனென்ருல்,

उत्तमा तत्त्वचिन्ता स्यात् मध्यमं शास्त्रचिन्तनम् ।
अधमा मन्त्रचिन्ता स्यात् तीर्थभ्रान्तिस्ततोऽधमा ॥

உத்தமா தத்த்வசிந்தா ஸ்யாத் மத்யமம் ஶாஸ்த்ரசிந்தனம் ।
அதமா மந்த்ரசிந்தா ஸ்யாத் தீர்த்த ப்ராந்திஸ்ததோऽதமா ॥

என்ற வாக்கிய ப்ரகாரம் பார்த்தால் சாஸ்திர விசாரத்தைவிடத் தத்துவவிசாரம்தான் சிலாக்யமானது. உங்களுக்கு ஸம்ஸ்கிருத பாஷா

ஞானமிருப்பதால் நீங்கள் அந்த தத்துவவிசார மார்க்கத்தை அனுஸரித்துக் கொண்டு வரலாம். ஆசார்யாளது பிரகரண கிரந்தங்களைத் தகுந்த குருவின் மூலம் படித்து அதன் அர்த்தத்தை மனனம் செய்து வந்தாலே போதும்.

சந்திரசேகரய்யர்:–(கடிகாரத்தைப் பார்த்து) ஆகா ! நாங்கள் மிகவும் அபசாரம் செய்துவிட்டோம். ஏனென்ருல் மணி பன்னிரண்டாய்விட்டது. ஸந்நிதானத்தில் ஏகாந்த ஸம்பாஷணம் செய்வதால் உண்டான ஆனந்தத்தில் இவ்வளவு காலம் சென்றுவிட்டதை நாங்கள் கவனிக்கவே இல்லை. மன்னிக்க வேண்டும். நாங்கள் ஸாயங்காலம் வந்து பாக்கி விஷயங்களைப் பற்றி ஸந்நிதானத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிருேம். ஸந்நிதானத்துக்கு மாத்யான்னிக ஸ்நானம், அனுஷ்டானம், பிக்ஷை எல்லாவற்றிற்கும் எங்களால் தாமதமாகிவிட்டதற்கு எங்களை மன்னிக்கும்படி மறுபடியும் கேட்டுக்கொள்கிருேம்.

(இருவரும் எழுந்து ஸந்நிதானத்தை வணங்குகிருர்கள்.)

ஸ்ரீஸந்நிதானம்:– இதில் ஓர் அபசாரமும் கிடையாது. மன்னிக்கவேண்டிய அவசியமும் இல்லை. ஏனென்ருல் இது மாதிரி தர்ம ஸ்தாபனங்களில் பக்தர்களுக்காகச் சில நாட்கள் காலவிளம்பம் ஏற்படுவது ஸஹஜம்தானே. உங்களுக்கு ஊரில் கோர்ட்டுக்குப் போகவேண்டிய நிர்பந்தம் இருப்பதால் 10 மணிக்குள் எல்லாவற்றையும் முடித்துக்கொள்ள வேண்டிய அவசியமிருக்கும். இங்கே அதுமாதிரியான நிர்பந்தம் ஒன்றும் கிடையாதல்லவா ? ஆகையால் உட்காருங்கள். ஸந்தேஹங்களைக் கேளுங்கள்.

சந்திரசேகரய்யர்:– (உட்கார்ந்து கொண்டு) இன்னும் எவ்வளவோ கேட்கவேண்டியிருக்கிறது. அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தால் பிக்ஷாகாலம் அதிக்ரமித்துப் போய்விடுமே !

ஸ்ரீஸந்நிதானம்:– ஆஹாரம்தான் பிரதிதினமுமிருக்கிறதே. உங்களைப் போன்ற பக்தர்களை அனுக்ரஹிக்கவேண்டிய கடமைதானே முக்கியம். இந்த சாரதாபீடமானது பக்த சிஷ்யர்களின் எல்லா ஸந்தேஹங்களையும் நிவிருத்தி செய்து அவர்களுக்கு ப்ரஹ்ம வித்யையை ஊட்டி உபதேசித்து அவர்களை

கிருதார்த்தர்களாக்குவதற்காகவே ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் என் சரீரத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. சில நாட்களில் 4 மணிக்குப் பிறகுகூட பிக்ஷை செய்யும்படி நேருவது இங்கு ஸஹஜம்தான். ஆகையால் உங்களுக்குப் பசியில்லாதிருந்தால் ஸாவகாசமாக எல்லா ஸந்தேஹங்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். ஸங்கோசப்படவேண்டாம்.

சந்திரசேகரய்யர்:– நாங்கள் ஸாயங்காலம் வந்து ஸாவகாசமாக எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொள்கிறோமே, அதற்கு உத்தரவாகக்கூடாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– श्रेयांसि बहुविघ्नानि (ச்ரேயாம்ஸி பஹுவிக்நாநி) என்ற நியாயப்படி அதற்குள் என்னென்ன விக்னங்கள் நேருமோ, யார் கண்டார்கள் ? ஆகையால் கிடைத்த ஸந்தர்ப்பத்தில் நீங்கள் கேட்கவேண்டியதைக் கேட்டுத் தெரிந்துகொள்வதுதான் நலம்.

சந்திரசேகரய்யர்:– ஸந்தியாவந்தனத்தை விதிவத்தாகச் செய்தாலே பிரஹ்மலோகம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. அது அர்த்தவாத வாக்கியமாக இருக்குமோ என்று தோன்றுகிறது. ஏனென்றால் உயர்ந்த அச்வமேதாதி கர்மாக்களாலும், சிறந்த உபாஸனங்களாலுமேதான் ப்ரஹ்மலோக ப்ராப்தி ஏற்படுமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். தவிரவும் ஜ்யோதிஷ்டோமாதி யாகங்களால்கூட ஸ்வர்கத்தைத்தான் அடையமுடியுமே தவிர ப்ரஹ்மலோகம் வரையிலுள்ள பலன்களை அடையமுடியாதே ! அப்படியிருக்கையில் இந்த ஸுலபமான வெறும் ஸந்தியாவந்தன மாத்திரத்தால் ப்ரஹ்மலோக ப்ராப்திபலன் ஏற்படமுடியுமா என்று ஸந்தேஹிக்கிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் கூறுவது ஒருவிதத்தில் நியாயம்தான். ஏனென்றால் அதிக சிரமத்துடனும், அதிகமான பொருள் செலவுடனும், அதிக மனித ஸஹாயத்துடனும் ஆடம்பரமாகச் செய்யக்கூடிய யாகங்களுக்கே ஸ்வர்காதி அல்பபலன் கிடைக்கும்பொழுது ஒரு சிரமமும் இல்லாமல் செலவையும் மனித ஸஹாயத்தையும் எதிர்பார்க்காமல் ஸுலபமாகச் செய்யக்கூடிய இந்த அல்பமான ஸந்தியாவந்தன கர்மாவுக்கு இவ்வளவு உயர்ந்த பலனா என்று நீங்கள் திகைக்கிறீர்கள் இல்லையா ?

சந்திரசேகரய்யர்:– ஸந்தியாவந்தனத்தில் யக்ஞயாகாதி கர்மாக்களைவிட என்ன விசேஷ தத்துவமிருக்கிறது என்பது தெரியவில்லையே ?

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களது ஸந்தேஹங்களைத் தெளிய வைப்பதற்கு உங்களையே ஒரு திருஷ்டாந்தமாக வைத்துக் கூறுகிறேன். நீங்கள் இப்பொழுது நீதிபதியாக இருக்கிறீர்கள். நியாயஸ்தானத்திற்கு (கோர்ட்டுக்கு) வாஹனத்தில் சென்று உங்களது ஆசனத்தில் (ஸீட்டில்) அமர்ந்து கொண்டு வக்கீல்களும் ஸாக்ஷிகளும் கூறுவதைக் கேட்டுவிட்டு சட்டப்படி ஏதோ தீர்ப்பு (ஜட்ஜ்மெண்டு) கூறுகிறீர்கள். இதில் உங்களது சரீரத்துக்கு அதிக சிரமம் தரும்படியான கார்யம் ஒன்றும் கிடையாது. ஆனால் உங்களது ஸேவகனே காலை முதல் இரவு படுக்கும் வரையில் உழைத்து உங்களுக்காக மிகவும் சரீர சிரமம் அடைகிறான். ஆனாலும் உங்களது உத்தியோக பலன் ஆயிரக்கணக்கான ரூபாய்கள். ஸேவகனுக்கோ பத்தோ, பதினைந்தோதான் சம்பளம் கிடைக்கும். அதுபோல அதிக சிரமப்பட்டுச் செய்யும் யாகங்களைவிட அனாயாஸமாகச் செய்யப்படும் ஸந்தியாவந்தனத்திற்கு அதிக பலன் ஏற்படுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது ?

சந்திரசேகரய்யர்:– நீதிபதிக்கு சரீர சிரமமில்லாவிட்டாலும் மூளையின் வேலை அதிகமாயிருப்பதை வைத்துக்கொண்டுதான் அதற்கு அதிக மதிப்பு வைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படியே யாகாதி மந்திரங்களைவிட ஸந்தியா மந்திரங்களில் தத்துவ விஷயங்கள் அதிகமாக அடங்கியிருப்பதால் அதற்கும் அதிகச் சிறப்பு இருப்பதில் என்ன ஆச்சரியம் ?

சந்திரசேகரய்யர்:– அப்படி என்ன தத்துவம் அடங்கியிருக்கிறது என்பது புலப்படவில்லையே !

ஸ்ரீஸந்நிதானம்:– நீங்கள் ஸந்தியாவந்தன பாஷ்யம் பார்த்ததில்லையா ? அதில் ஸந்தியா மந்திரங்களின் அர்த்தம் நன்றாக விளக்கப்பட்டிருப்பதை இனிமேலாவது பாருங்கள்.

சந்திரசேகரய்யர்:– நாங்கள் பார்த்துத் தெரிந்து கொள்வதென்றால் அது மிகவும் சிரமமான காரியமாகும்.

ஸந்நிதானமே அதைக் கொஞ்சம் விளக்கிக் காட்டிவிட்டால் அதை மனதில் பதிய வைத்துக்கொண்டு பின்னால் ஸந்தியா பாஷ்யத்தைப் பார்த்து மனதில் ஸ்திரப்படுத்திக்கொள்ள ஸௌகர்யமாயிருக்குமென்று நினைக்கிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியானால் நீங்களே ஸந்தியா மந்திரங்களில் ஏதாவது ஒன்றைச் சொல்லுங்கள். அதன் அர்த்தத்தை விளக்குவதிலிருந்து மற்றவைகளையும் தெரிந்து கொள்ளலாம்.

சந்திரசேகரய்யர்:- आपो हिष्ठा मयोभुवः । ता न ऊर्जे दधातन । महे रणाय चक्षसे (*ஆபோ ஹிஷ்ட்டா மயோபுவ:। தா ந ஊர்ஜே ததாதன। மஹேரணாய சக்ஷஸே* ।) இன்னும் சொல்லட்டுமா ?

ஸ்ரீஸந்நிதானம்:- ஸரி, போதும். இதன் அர்த்தத்தை விளக்குவதற்கே பலமணிநேரமாகும். ஆனாலும் சுருக்கமாகக் கூறுகிறேன். இதற்கு மார்ஜன மந்திரம் என்று பெயர். இந்த மந்திரங்களால் ஜலத்தைக் கைவிரல்களால் எடுத்துப்ரோக்ஷித்துக் கொள்ளவேண்டும் என்பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. அவ்விதம் ப்ரோக்ஷணம் செய்து கொள்வதால் சரீரம், வாக்கு, மனது என்ற த்ரிகரணங்களும் சுத்தியடையக்கூடும். அதன் அர்த்தம் பின்வருமாறு: हे आपः (*ஹே ஆப:*) என்று "அப்"(நீர்)தேவதையை ஸம்போதனம் செய்து அழைக்கிறார். ஓ அப்தேவதையே, நீங்கள் எங்களுக்கு मयोभुवः (*மயோபுவ:*) சுகத்தை உண்டுபண்ணக் கூடியவர்களாக, स्थ (*ஸ்த்த*)-இருக்கவேண்டும். (இங்கு आपः (*ஆப:*) என்பது நித்ய பஹுவசனமாகையால் அதன் விசேஷணமாகிய मयोभुवः (*மயோபுவ:*) என்பதும் பஹு வசனமாகவே அமைந்திருக்கிறது.) ताः (*தா:*) - அப்பேர்ப்பட்ட நீங்கள் नः (*ந:*)- எங்களுக்கு ऊर्जे (*ஊர்ஜே*) - அன்ன ஸமிருத்தியை दधातन (*ததாதன*)- உண்டுபண்ணுங்கள். அன்ன ஸமிருத்தி எதற்காக? வெறும் சரீரபோஷணத்திற்காகவா என்றால் அது இல்லை; இது ஆத்ம ஞானத்திற்காகத்தான் என்று கூறுகிறார் महे रणाय चक्षसे (*மஹேரணாய சக்ஷஸே*) என்ற வாக்கியத்தினால். महते रमणीयाय चक्षुषे (*மஹதே ரமணீயாய சக்ஷுஷே*) என்று அதன் வியாக்யானம். அதாவது மிக உயர்ந்ததாயும் ஆனந்தகரமாயும் உள்ள ஆத்மதத்துவ ஞானத்துக்காக என்று அதன் அர்த்தம். ஆகவே ஆத்மதத்துவ ஞானத்தை அடைவதற்காக அன்ன ஸமிருத்தியை எங்களுக்கு உண்டுபண்ணி

எங்களுக்கு எல்லாவித சுகங்களேயும் அளியுங்கள் என்று இந்த மந்திரத்தால் பிரார்த்திக்கிருர்.

சந்திரசேகரய்யர்:– ஆத்மதத்துவ ஞானத்துக்கும் அன்ன ஸமிருத்திக்கும் என்ன ஸம்பந்தம் என்று தெரியவில்லேயே. அன்னம் தேக போஷணத்துக்காக ஏற்பட்டதல்லவா ?

ஸ்ரீஸந்நிதானம்:– ''சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும்'' என்று தமிழில் ஒரு பழமொழி உண்டல்லவா ? அவ்விதமே शरीरमाद्यं खलु धर्मसाधनम् (*ஶரீரமாத்யம் கலு தர்மஸாதனம்*) என்று ஸம்ஸ்கிருதத்திலும் நீதிவாக்கியமிருக்கிறது. இது உங்களுக்குத் தெரியாதா ?

சந்திரசேகரய்யர்:– அப்படியாளுல் இந்த சரீரத்தைப் போஷிப்பதற்காக கிருஷியில் ஈடுபட்டு அந்த கிருஷியானது மழை ஜலத்தால் நன்ருக விளேயவேண்டுமே என்று ஒருவர் வருண பகவானே பிரார்த்திப்பது போலல்லவா இந்த பிரார்த்தனேயும் இருக்கிறது. இதில் ஆத்ம தத்துவம் அடங்கியிருப்பதாகத் தோன்றவில்லேயே! இந்த ஸந்தேஹத்தை விலக்க வேண்டுகிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:–நீங்கள் கூறியது சரீர போஷணம். நான் கூறியதோ சரீரரக்ஷணம். புரிந்ததா ? கிருஷி முதலிய பாஹ்ய கார்யங்களில் மாத்திரம் ஈடுபட்டவர்கள் சரீர போஷணத்திற்காகவே அந்தத் தொழில்களேச் செய்து வருகிருர்கள். ஆளுல் வேதாந்த விசாரத்தில் ஈடுபடுபவர்களோ சரீரரக்ஷணத்திற்காகத்தான் முயற்சி செய்வார்கள். पोषणं (போஷணம்) என்ருல் வளர்ப்பது रक्षणं (ரக்ஷணம்) என்ருல் காப்பாற்றுவது. இவ்விரண்டிற்குமுள்ள வித்தியாஸத்தை நீங்கள் தெரிந்துகொண்டுவிட்டீர்களல்லவா ? ஒருவர் ஜீவனத்திற்காகச் சாப்பிடுகிருர். இன்னெருவர் சாப்பிடுவதற்காக ஜீவிக்கிருர் என்ருல் இரண்டுக்கும் வித்யாஸமில்லேயா ? (சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:– ஆஹா தெரிந்துகொண்டோம். ஆளுலும் அவ்வித சரீர ரக்ஷணத்திளுல் ஆத்ம தத்துவ விசாரத்திற்கு எவ்விதத்தில் உபயோகமுண்டாகிறது என்பதை அறிய விரும்புகிருேம்.

ஸ்ரீஸந்நிதானம்:- நீங்கள் நாராயணோபநிஷத்தை அத்யயனம் செய்திருக்கிறீர்களா ?

சந்திரசேகரய்யர்:- லௌகிக ப்ரவிருத்தியிலுள்ள எங்களுக்கு அந்த பாக்யமேது ?

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியானால் கூறுகிறேன் கேளுங்கள். நாராயண உபநிஷத்தில் अन्नेन प्राणाः प्राणैर्बलं बलेन तपस्तपसा श्रद्धा श्रद्धया मेधा मेधया मनीषा मनीषया मनो मनसा शान्तिः शान्त्या चित्तं चित्तेन स्मृतिं स्मृत्या स्मारं स्मारेण विज्ञानं विज्ञानेनात्मानं वेदयति (*அந்நேன ப்ராணா: ப்ராணைர் பலம் பலேன தபஸ் தபஸா ச்ரத்தா ச்ரத்தயா மேதா மேதயா மனீஷா மனீஷயா மனோ மனஸா ஶாந்தி: ஶாந்த்யா சித்தம் சித்தேன ஸ்ம்ருதிம் ஸ்ம்ருத்யா ஸ்மாரம் ஸ்மாரேண விக்ஞானம் விக்ஞானேனாத்மானம் வேதயதி*) என்று ஒரு வாக்கியம் காணப்படுகிறது. இந்த வாக்கியத்தில் அன்னத்தின் கடைசி பரிணாமம் ஆத்மக்ஞானம்தான் என்று குறிப்பிட்டு இருக்கிறது. அன்னத்தினால் பிராணன் விருத்தியடைகிறது. பிராணனால் சரீர இந்திரியங்களுக்கு பலமுண்டாகிறது. அதனால் தபஸ் விருத்தியாகிறது. இவ்விதமே காரண கார்யங்களைக் கூறிக்கொண்டு வந்து கடைசியில் विज्ञानेनात्मानं वेदयति என்று ஆத்மக்ஞானத்தில் கொண்டு வந்து அத்துடனேயே முடிக்கிறது. இதிலிருந்து அன்னமானது பரம்பரையாக ஆத்மக்ஞானத்திற்கும் எப்படி ஸாதனமாகிறது என்பது நன்றாக விளங்கவில்லையா ?

சந்திரசேகரய்யர்:- இதுமாதிரியே எல்லா மந்திரங்களும் ஆத்மக்ஞானபரமாகவே இருக்கமுடியுமா ?

ஸ்ரீஸந்நிதானம்:- பரம்பரையாகவோ ஸாக்ஷாத்தாகவோ எல்லா ஸந்தியா மந்திரங்களுமே ஆத்மவஸ்துபரமாகவே இருக்கும் என்பதில் ஸந்தேஹமேயில்லை. सूर्य आत्मा जगतस्तस्थुषश्च (*ஸூர்ய ஆத்மா ஜகதஸ்தஸ்துஷச்ச*) என்று ஒரு மந்திரம் ஸந்தியாமந்திரங்களுக்குள் இருக்கிறது. அதற்கு ஆதித்யமண்டல அந்தர்யாமியாயிருக்கும் பரமாத்ம வஸ்துதான் ஜங்கமஸ்தாவராதி ஸர்வ ப்ரபஞ்சத்துக்கும் ஸ்வரூபமாக சைதன்ய ரூபமாக விளங்குகிறது என்று அர்த்தம். இவ்விதமே பல முக்கிய மந்திரங்கள் ஸகுண ப்ரஹ்மபரமாகவோ நிர்க்குண ப்ரஹ்மபரமாகவோ, ஸந்தியாவந்தன ப்ரகரணத்தில் அடங்கியிருப்பதை நன்கு கவனித்துப்பார்த்தால் தெரியும்.

சந்திரசேகரய்யர்:– அப்படியானால் நாங்கள் ஏற்கெனவே செய்து வருவதுபோல் ஸந்தியாவந்தனம் செய்து வந்தாலேயே எங்களுக்கு ஜன்மஸாபல்யம் கிடைக்குமென்றுதான் உத்தரவாகிறதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– ஏற்கெனவே செய்துவருவதுபோல் செய்ய வேண்டாம் (சிரிப்பு). மந்திரங்களின் அர்த்தக் ஞானத்துடனும் விசேஷபக்தி சிரத்தையுடனும் செய்து வரவேண்டும். ஸந்தியாவந்தனம் என்றால் வெகு இளப்பமாகவே சிலர் நினைப்பார்கள். அதுபோல் நீங்கள் நினைக்க வேண்டாம்.

சந்திரசேகரய்யர்:– அப்படியானால் நாங்கள் ஸ்ரீவித்யாமந்திரங்களை உபதேசம் பெறுவதில் பயனில்லை என்றாகிறது. காயத்ரீயில் அவ்வளவு மஹத்துவம் என்ன இருக்கிறது என்று தெரியவில்லையே.

ஸ்ரீஸந்நிதானம்:– காயத்ரீயை இளப்பமாக நினைக்க வேண்டாம். நமது ஸ்ரீசங்கரபகவத்பாதாளே இதற்கு பாஷ்யம் செய்திருப்பதாகக் கூறுகிறார்கள். அந்த பாஷ்யத்தில் நிர்க்குணபரமாகவே அர்த்தம் செய்திருப்பதாகவும் மஹாவாக்கியங்களின் அர்த்தமெல்லாம் அடங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. ஆகையால் காயத்ரீ மாதாவை நன்கு உபசரித்துவாருங்கள். கொஞ்சகாலம் அவ்விதம் அர்த்தக்ஞானத்துடன் காயத்ரீ மந்திரத்தை ஜபித்து வாருங்கள். ஸந்தியாவந்தனாதி நித்ய கர்மாக்களையும் விடாமல் தவறாமல் அனுஷ்டித்து வாருங்கள். அடுத்த தடவை வரும்பொழுது மற்ற மந்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

சந்திரசேகரய்யர்:– அப்படியானால் நாங்கள் பரமதன்யர்கள். இந்த ஜன்மாவிலேயே எங்களுக்கு ஸ்ரீவித்யாதி மந்திரம் கிடைக்காதோ என்று நினைத்தோம். அடுத்த தடவை இது கிடைக்குமானால் நாங்கள் ச டிய சீக்கிரமே மறுபடியும் புறப்பட்டு வருகிறோம். ஆனால் ஸந்நிதானம் முன் கூறிய சுலோகத்தில் உள்ள अधमा मन्त्रचिन्ता स्यात् (*அதமா மந்த்ர சிந்தா ஸ்யாத்*) என்ற வாக்கியத்தின் கருத்துதான் நன்றாக விளங்கவில்லை. அதையும் உபதேசித்தருளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீஸந்நிதானம்:– நான் சொல்ல வேண்டுமென்று நினைத்ததை நீங்களே கூறிவிட்டீர்களே! (சிரிப்பு) அதைத்

தெரிந்து கொண்டும்கூட, மந்திர உபதேசத்திலேயே மனதை ஈடுபடுத்துகிறீர்களே !

சந்திரசேகரய்யர்:- ஜன்மாந்தர ஸம்ஸ்காரமே எங்களுக்கு அப்படியிருக்கும் போலிருக்கிறது. ஸந்நிதானத்தில் மந்திர உபதேசம் பெற்ருல்தான் ஜன்மஸாபல்யம் ஏற்படும் போல் தோன்றுகிறது.

ஸ்ரீஸந்நிதானம்:- இவ்வளவு எடுத்துச் சொல்லியும் உங்களுக்கு அந்த மந்திர சாஸ்திர மோஹம் இன்னும் போகவில்லையா ? சரி, உங்களது விருப்பப்படியே அடுத்த தடவை பார்த்துக் கொள்ளலாம்.

சந்திரசேகரய்யர்:- நாங்கள் ஸ்ரீரங்கத்தில் அச்சிடப்பட்ட சாங்கரக்ரந்தாவளியை வாங்கி வைத்திருக்கிருேம். அதில் கடைசியாக உள்ள பிரபஞ்சஸாரத்தில் மந்திர சாஸ்திர ரஹஸ்யங்களை பகவத்பாதாள் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அதைப் பார்த்தது முதல் தீவிர அபிலாஷை ஏற்பட்டு விட்டது. அதனால்தான் மந்திர உபதேச விஷயமாக பிரார்த்தித்துக்கொண்டேன்.

ஸ்ரீஸந்நிதானம்:- சாங்கரக்ரந்தாவளியில் முதல் புஸ்தகத்தில் என்ன விஷயமிருக்கிறது தெரியுமா ?

சந்திரசேகரய்யர்:- ஆகா தெரியும். ஸூத்திரபாஷ்யம்தான் முதலில் போடப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:- ப்ரபஞ்சஸாரம் (மந்திர சாஸ்திரம்) எத்தனையாவது ஸம்புடத்தில் வருகிறது பார்த்தீர்களா ?

சந்திரசேகரய்யர்:- அது கடைசி ஸம்புடத்தில் இருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:- க்ரந்தாவளியின் மத்திய பாகத்தில் என்ன இருக்கிறது பார்த்ததுண்டா ?

சந்திரசேகரய்யர்:- ஆகா பார்த்திருக்கிருேம். விவேகசூடாமணி முதலிய பிரகரண க்ரந்தங்கள் போடப்பட்டு இருக்கின்றன.

ஸ்ரீஸந்நிதானம்:- அப்படியானால் முதலில் ஸூத்ரபாஷ்யம் முதலான பிரஸ்தானத்ரய பாஷ்யங்களையும், அதன் பிறகு மத்தியில் பிரகரணக்ரந்தங்களையும், இயற்றி விட்டுக் கடைசியில் ப்ரபஞ்சஸாரம் என்னும் மந்திர சாஸ்திரத்தை எழுதியிருக்கிருர் என்று

தான் தெரிய வருகிறது. இந்த வரிசை க்ரமத்தினுல் முக்கிய அதிகாரிகளுக்கு ஸூத்ர பாஷ்யாதி க்ரந்தங்களும், மத்தியம அதிகாரிகளுக்கு பிரகரண க்ரந்தங்களும், அதம அதிகாரிகளுக்கு மந்திர சாஸ்திரமும் நமது சங்கரபகவத்பாதாளால் எழுதப் பட்டதாகத்தானே தீர்மானிக்கவேண்டும்? அப்பொழுது अधमा मन्त्रचिन्ता स्यात् என்ற ப்ரமாண வாக்கியமும் இதற்கு ஒத்து வருமல்லவா ? ஆகவே ப்ரபஞ்சஸாரம் கடைசி ஸம்புடத்தில் இருக்கிறது என்ற உங்களது வாக்கியப்படி பார்த்தாலும் அது அதம அதிகாரி விஷயம்தான் என்று கிடைக்கவில்லையா ?

சந்திரசேகரய்யர்:– நான் என் வார்த்தையினுலேயே, ஸ்வயம் கிருதானர்த்தம் செய்து கொண்டு விட்டதை இப்பொழுதுதான் உணருகிறேன். மந்திர உபதேசம் பெற்று அம்பிகையை உபாஸிக்கவேண்டுமென்றே மனம் விரும்புவதால் நான் அதமாதிகாரியாகத்தானிருக்க வேண்டுமென்றே நினைக்கிறேன். நான் உத்தமாதிகாரியாவதற்கு இன்னெரு ஜன்மம் தான் எடுக்க வேண்டுமா ?

ஸ்ரீஸந்நிதானம்:– அப்படி நினைக்காதீர்கள். நான் கூறியபடி நீங்கள் நடந்து வந்தால் இந்த ஜன்மாவிலேயே உத்தம அதிகாரியாகலாம். முதற்படியாக நீங்கள் ஸந்தியாவந்தனுதி நித்யகர்மாக்களை அர்த்த ஞானத்துடன் அனுஷ்டித்துக் கொண்டு காயத்ரீ உபாஸனம் செய்யுங்கள். காயத்ரீயின் பலம் இருந்தால்தான் மற்ற மந்திரங்களின் ஸித்தி சீக்கிரம் கிடைக்கக்கூடும். அதனுல்தான் न गायत्र्याः परो मन्त्रः (*ந காயத்ர்யா: பரோ மந்த்ர:*) என்று முன்னோர்கள் கூறியிருக்கிருர்கள்.

சந்திரசேகரய்யர்:– அப்படியே செய்கிறோம். அடுத்த தடவையாவது ஸ்ரீவித்யாமந்திர உபதேசம் கிடைக்குமல்லவா ?

ஸ்ரீஸந்நிதானம்:– என்னிடம் வாக்குமூலம் வாங்கிவிடாதீர்கள். நீங்கள் நீதிபதியாயிருப்பதால் உங்களிடம் வாக்குமூலம் கொடுப்பதில் கொஞ்சம் யோசிக்க வேண்டியதாகத்தானிருக்கிறது. (சிரிப்பு)

சந்திரசேகரய்யர்:– அது கோர்ட்டு விஷயம். இதுவோ குரு சிஷ்ய ஸம்வாதம். ஆகையால் இதில் யாதொரு கவலையும் வேண்டாம்.

என்னைப் போன்ற சிஷ்யர்களுக்கு அபய ப்ரதானம் செய்தால் அது வாக்குமூலமாய் விடாது. ஆகையால் ஸ்ரீவித்யா உபதேசத்தை அருளுமாறு வேண்டுகிறேன்.

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களது விருப்பம் பூர்த்தியாவதற்குரிய ஒரு நல்ல மந்திரத்தை உபதேசிப்பதாகத்தான் இப்பொழுது கூற முடியும். அது ஸ்ரீவித்யைதான் என்பது நிச்சயமில்லை.

சந்திரசேகரய்யர்:– நாங்கள் விரும்புவதை உபதேசித்து எங்களை அனுக்ரஹம் செய்யக்கூடாதா ?

ஸ்ரீஸந்நிதானம்:– உங்களை அனுக்ரஹம் செய்வதில் தடையில்லை. ஆனால் நீங்கள் விரும்புவதை உபதேசித்தால்தான் அந்த அனுக்ரஹம் கிடைக்குமென்று சொல்ல இயலாது. ஏனென்றால் குழந்தைகளிடம் கத்தியைக் கொடுக்கத் தாயார் சம்மதிப்பாளா ?கத்தி மிகவும் கூர்மையாகவும் அழகாகவும் தானிருக்கிறது. ஆனால் அதை உபயோகிப்பதற்கு வேண்டிய விவேகம் குழந்தைக்கு கிடையாதல்லவா ? மந்திர உபதேசம் பெற்ற பிறகு அதை வேறு சில ப்ரயோகங்களில் வினியோகம் செய்யும்படி நேர்ந்தால் அது ஆபத்தாக முடிந்துவிடுமல்லவா ?

சந்திரசேகரய்யர்:– நாங்கள் குழந்தைகளல்லவே ! ஸந்நிதானத்தின் உத்தரவுப்படியே அந்த மந்திரத்தை ஜபம் செய்து அம்பிகையை உபாஸித்து வருவதில் தவறு உண்டா ?

ஸ்ரீஸந்நிதானம்:– அவஸரப்படாதீர்கள். ஒரு நோயாளியானவன் வைத்தியரிடம் (டாக்டரிடம்) சென்று தன் வியாதியைப்பற்றிக் கூறலாமே தவிர அதற்கு இன்ன மருந்தைத்தான் கொடுக்கவேண்டும் என்று வைத்தியரை வற்புறுத்த முடியுமா ? அதுபோல் ஒரு சிஷ்யர் தன் குருவினிடம் தன் மனோ நிலையை எடுத்துக்கூறி அதற்குப் பரிஹாரம் செய்யும்படி வேண்டிக்கொள்ளலாமே தவிர அதற்கு இன்னது ஸாதனம் என்பதையும்கூடச் சொல்லி, அதுதான் வேண்டுமென்று கேட்கலாமா? ஆகையால் நீங்கள் அடுத்த தடவை வரும்பொழுது உங்களுக்கு உசிதம்போல் நல்ல உபதேசம் கிடைக்கும்.

சந்திரசேகரய்யர்:– அப்படியானால் நாங்கள் மிகவும் பாக்யசாலிகள். ஸந்நிதான உத்தரவுப்படியே நடந்து வருகிறோம்.

எங்களது அக்ஞானத்தை விலக்கி ஞானோபதேசம் செய்து எங்களது ஜன்மாவை ஸபலமாகச் செய்தருளும்படி மறுபடியும் கேட்டுக்கொள்கிறோம். மற்ற ஸந்தேஹங்களை அடுத்த தடவை வரும்பொழுது கேட்டுத் தெரிந்துகொள்கிறோம்.

இவ்விதம் கூறிவிட்டு ஜஸ்டிஸ் சந்திரசேகர அய்யரும் அவரது தகப்பனாரான ஸ்ரீமான் குப்புஸ்வாமி அய்யரும் எழுந்து நின்று ஆனந்த பாஷ்பத்துடன்,

अज्ञानतिमिरान्धस्य ज्ञानांजनशलाकया ।
चक्षुरुन्मीलितं येन तस्मै श्रीगुरवे नमः ॥

அக்ஞான திமிராந்தஸ்ய ஞானாஞ்ஜன ஶலாகயா |
சக்ஷுருந்மீலிதம் யேந தஸ்மை ஸ்ரீகுரவே நம: ||

என்று சொல்லிக்கொண்டு ஸாஷ்டாங்கமாக வணங்கி நின்றார்கள். ஸந்நிதானம் அவர்களுக்கு பலமந்திராக்ஷதைகளையும் ஸ்ரீசாரதாம்பாள் பிரஸாதத்தையும் ஸ்ரீசக்ர அர்ச்சனை செய்த பிரஸாதங்களையும் தன் திவ்ய ஹஸ்தத்தாலேயே கொடுத்து அனுக்ரஹித்துவிட்டு மத்தியான்ன ஆஹ்னிகத்துக்குச் சென்றார்கள்.

பிதா புத்திரர்களும் அவர்களுடன் கூட வந்த மற்றவர்களும் பிரஸாதம் பெற்றுக்கொண்டு அக்கரைக்குச் சென்று ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்திற்கு வந்து அங்கேயும், பிரஸாதம் பெற்று ஜாகைக்கு வந்தார்கள். இந்த லேககரும் கூடவே சென்றார். அங்கு ஜாகைக்கு போய்ப்பார்த்தால் இரண்டு மூன்று கடிதங்கள் அறைக்குள் கிடந்தன. ஜன்னல் வழியாக தபால்காரனால் போடப்பட்டிருக்க வேண்டும் என்று தோன்றியது. அதை சந்திரசேகரய்யர் பிரித்துப் பார்த்ததில் ஒரு லெட்டர் மாத்திரம் அவருக்கு மிகவும் ஆச்சரியத்தை உண்டுபண்ணியது போல் தோன்றியது. அதில் குப்புஸ்வாமி அய்யரின் ஸமீப பந்து ஒருவருக்கு புத்ரோத்ஸவம் ஏற்பட்டிருப்பதாகக் கண்டிருந்தது. தசராத்திரக்ஞாதிகளாகையால் பத்து நாள் விருத்தியானது தங்களுக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறி அவர் எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்துவிட்டார்.

ஏனென்றால் நேற்றைய தினம், ''காலையிலேயே வாருங்கள், பலமந்திராக்ஷதையைப் பெற்றுப்போகலாம்'' என்றார்கள்

ஸந்நிதானம். ''நான்கு நாட்கள் கழித்துப் போகிறோம்'' என்று குப்புஸ்வாமி அய்யர் கூறியும் அதை மாற்றி ''நாளை மத்தியான்னத்துக்குள் நீங்கள் புறப்படப்போகிறீர்கள்'' என்றும் ''கடவுளின் முடிவு அதுதான்'' என்றும் ஸந்நிதானம் உறுதியாகக் கூறியதன் அர்த்தம் இப்பொழுதுதான் புரிகிறது. அவர் ''ஸாயங்காலம் வருகிறோமே'' என்று கேட்டதற்கும் श्रेयांसि बहुविघ्नानि (*ச்ரேயாம்ஸி பஹு விக்னானி*) என்று ஏதோ காரணம் கூறி அதையும் மாற்றிவிட்டார்கள். பிறகு இந்த லேககரைப் பார்த்து ஸ்ரீமான் சந்திரசேகரய்யர் கூறலானார்.

சந்திரசேகரய்யர்:– ஒரு லெட்டரில் நாங்கள் அவசியம் ஒரு வக்கீல் கான்ப்ரன்ஸ்ஸுக்குக் கட்டாயம் வந்துசேரும்படி எழுதியிருக்கிறது. அதற்காக இன்றே நாங்கள் புறப்பட வேண்டும். இன்னொரு லெட்டரில் எங்களது ஸமீப பந்து ஒருவருக்கு புத்ர உத்ஸவம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவந்தபடியால் எங்களுக்கு விருத்தி வந்துவிட்டது. நாங்கள் முதல் கார்யத்தை ஏதோ சாக்குச் சொல்லி விட்டுவிட்டாலும்கூட இரண்டாவதான ஜாதாசௌச காரணத்தால் நாங்கள் இங்கிருந்தும் பலனில்லை. விருத்தியுடன் ஸந்நிதானத்தை தரிசிக்க முடியாதல்லவா? பிறந்து இன்று இரண்டாவது நாள் ஆகிறபடியால் இன்னும் 8 நாட்களுக்குப் பிறகுதான் ஸந்நிதானத்தை தரிசித்துப் பேசமுடியும். ஆகையால் இன்று ஸாயங்காலத்திற்குள்ளாகவே நாங்கள் புறப்பட்டாக வேண்டும்.

லேககர்:– फलानुमेयाः प्रारंभाः (*பலானுமேயா: ப்ராரம்பா:*) என்று நான் நேற்றே கூறவில்லையா ? நமது ஸந்நிதானத்தின் எண்ணங்கள் கார்யஸித்திக்குப் பிறகுதான் தெரியவரும் என்று சொன்னேனே; அதை இன்று நீங்கள் நேரில் பார்த்துவிட்டீர்களல்லவா? நீங்கள் ஸாயங்காலம் வருவதாகக் கூறியதற்கு श्रेयांसि बहुविघ्नानि என்று ஏதோ காரணம் கூறி உங்களை உடனேயே பலமந்திராக்ஷதை கொடுத்து அனுப்பிய அவரது தீர்க்க தரிசனமும் இப்பொழுது விளங்கி விட்டதல்லவா?

சந்திசேகரய்யர்:– அவரது மஹிமைகளையும் தீர்க்க தரிசனத்தையும் பார்த்துவிட்டோம்; அனுபவித்தும் விட்டோம். இன்று ஜாதாசௌசம் ஏற்படப்போகிறது என்று ஞான திருஷ்டியால்

தெரிந்துகொண்டுதான் அவர் எங்களைக் காலையிலேயே (ஆசௌசம் ஏற்படுவதற்கு முந்தியே) வரும்படி நேற்று வற்புறுத்தினார்கள் என்பது இப்பொழுதுதான் தெரிகிறது. இது மஹத்தான ஆச்சரியமில்லையா? அவர் ஒரு ஸர்வக்ஞமூர்த்தி என்பதையும் இன்று ப்ரத்யக்ஷமாகப் பார்த்துவிட்டோம்.

லேககர்:– உங்களுக்கு இது ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் இதுபோன்ற ஆச்சர்யமான பல ஸம்பவங்களை அடிக்கடி நான் நேரில் பார்த்திருப்பதால் எனக்கு இதில் அதிகமான விசேஷமொன்றும் தோன்றவில்லை.

சந்திரசேகரய்யர்:– நான் ஸ்ரீவித்யாமந்திர உபதேசத்திற்காக எவ்வளவு வற்புறுத்திக் கேட்டும்கூட என்னை என் வார்த்தைகளாலேயே மடக்கிவிட்டார், பார்த்தீர்களா ? நாங்கள் கோர்ட்டில் வாதிகளின் வார்த்தைகளைக் கொண்டே அவர்களை மடக்கிவிட்டதாகக் கூறிக்கொண்டு பெருமிதம் கொள்வது வழக்கம். அப்பேர்ப்பட்ட நாங்களே ஸந்நிதானத்தில் எங்களது வார்த்தை களாலேயே மடக்கப்பட்டு விட்டோம். இது வேறு எங்கும் காண முடியாத ஓர் ஆச்சரியமாகும். " राज्यं देयं शिरो देयं न देया षोडशाक्षरी (*ராஜ்யம் தேயம் ஶிரோ தேயம் ந தேயா ஷோடஶாக்ஷரீ*) என்ற உங்களது வார்த்தையே உங்களுக்கு பதிலளித்து விட்டதே! " என்கிறார். இந்தப் பேச்சுத் திறமையையும் ப்ரதிபாசக்தியையும் நான் வேறெங்கும் கண்டதில்லை. நான் எப்படியும் ஸ்ரீவித்யா மந்திரத்தைப் பெற்று விடலாமென்றே நினைத்தேன், அது பலிக்கவில்லை.

லேககர்:– அடுத்த தடவை வந்தால் உங்களது விருப்பம் போல் உபதேசம் பெறக்கூடாதா ?

சந்திரசேகரய்யர்:– அதற்கும் வாக்குக் கொடுக்கவில்லையே. உசிதம்போல் செய்கிறோம் என்றுதானே உத்தரவாயிற்று.

லேககர்:– வைத்திய திருஷ்டாந்தத்தால் குருவுக்குத்தான் அதை நிர்ணயிக்க உரிமையுண்டு என்றார்களே ?

சந்திரசேகரய்யர்:– அந்த குருநாதரே மனப்பூர்வமாக எந்த உபதேசத்தை அளிக்கிறாரோ அதுதான் ச்ரேயஸ்கரமாகும்.

லேககர்:– நீங்கள் எல்லா பாரத்தையும் குருநாதரிடமே விட்டுவிட்டு நிம்மதியாயிருங்கள். அதுதான் உசிதம்.

சந்திரசேகரய்யர்:– அப்படித்தான் செய்யப்போகிறோம். நாங்கள் இன்று ஸாயங்காலம் புறப்பட்டுப் போகிறோம். மறுபடியும் நாங்கள் இவ்விடம் எப்பொழுது வருவோமோ தெரியாது. எல்லா விஷயங்களுக்கும் நீங்களே லெட்டர் எழுதுங்கள்.

லேககர்:– இன்னும் ஆறு மாதத்திற்குள் சிஷ்ய பரிக்ரஹ மஹோத்ஸவம் நடக்கும். அதற்கு வாருங்கள்.

சந்திரசேகரய்யர்:– அவசியம் வருகிறோம். எங்களது பாக்கி உள்ள ஸந்தேஹங்களையும் ஸந்நிதானத்தில் கேட்டுத் தெரிந்து கொள்கிறோம். எங்களது ஸாஷ்டாங்க வந்தனங்களை ஸன்னிதியில் தெரிவியுங்கள்.

இவ்விதம் கூறிவிட்டு அன்று ஸாயங்காலம் ஸ்ரீமான் ஜஸ்டிஸ் சந்திரசேகரய்யரும் ஸ்ரீ குப்புஸ்வாமி அய்யரும் தமது பரிவாரங்களுடன் இந்த லேககரிடம் விடைபெற்றுக் கொண்டு ஊருக்குப் புறப்பட்டுப் போனார்கள். குப்புஸ்வாமி அய்யர் स्मर्तव्या वयमादरेण भवता यावत्पुनर्दर्शनम् என்று இந்த லேககரிடம் கூறிக் கொண்டே காரில் ஏறி உட்கார்ந்தார். எல்லோரையும் ஏற்றிக்கொண்டு கார் ஷிமோகாவுக்குப் புறப்பட்டது.

* * *

ௐ15ௐ

ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதீ மஹாஸந்நிதானம் தமது குரு, பரமகுரு, பரமேஷ்டி குரு, பராபர குரு இவர்களுக்குப் பிரதி வருஷமும் ஆராதனை நடத்தி வந்தது எல்லோரும் அறிந்த விஷயமே. அதில் முக்கியமாக குரு ஆராதனையின் பொழுது கந்த ஆராதனை, புஷ்ப ஆராதனை, தீர்த்த ஆராதனை என்ற மூன்று ஆராதனைகளையும் மூன்று நாட்கள் செய்வது வழக்கம். ஆராதனைக்காக வரிக்கப்படுகிற பிராம்மணர்கள் மற்ற உபசாரங்களுடன் போஜனத்திற்காக அந்த அந்த ஸ்தானத்தில் உட்கார்ந்தவுடன் இலைகளில் எல்லாப் பக்ஷ்ய போஜ்யாதி பதார்த்தங்களைப் பரிமாறச் செய்து நமது குருநாதாள் தம் திவ்ய ஹஸ்தத்தாலேயே பிராம்மணர்களுக்குத் தீர்த்தம் கொடுப்பார்கள். பிராம்மணர்கள் சாப்பிட ஆரம்பித்தவுடன் ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொரு விதமாக அர்த்த புஷ்டியுள்ள உபசாரவார்த்தை சொல்லிப் போவார்கள். ஒரு வருஷத்தில், ''सावकाशतया भोक्तव्यम्'' ''நீங்கள் இப்பொழுது நாழியாகிவிட்டது என்றோ இனிமேல் அதிக நாழியாகுமென்றோ கவலைப்படவேண்டாம். வயிறு நிறையச் சாப்பிடுங்கள்'' என்று முதலில் கூறிப் பின் தானே அதற்கு விளக்கமும் கூறினார்கள்:– ''अवकाशश्च कालतः न तु देशतः'' ''அவகாசம் என்றால் இரண்டு விதம். காலத்தினால் ஏற்படும் அவகாசம், தேசத்தினால் உண்டாகும் அவகாசம். அதில் தேச அவகாசத்தை நான் குறிப்பிடவில்லை. கால அவகாசத்தைத்தான் குறிப்பிட்டேன்'' என்று. அதாவது தேச அவகாசத்தை வைத்துக் கொண்டு ஸாவகாசமாய்ச் சாப்பிடுங்கள் என்றால் கொஞ்சம் வயிற்றில் இடம் விட்டுச் சாப்பிடுங்கள் என்று அர்த்தமாகி விடுமாம். அதற்காகவே தேச அவகாசத்தைத் தாம் குறிப்பிடவில்லையென்று விளக்கிவிட்டார்கள். கால அவகாசத்தை வைத்துக் கொண்டால் தோஷமில்லை. கால அவகாசம் அதிகமானாலும் பாதகமில்லை என்று தான் அதற்கு அர்த்தம் கிடைக்கும். ஆகவே सावकाशत्वं च कालतः न तु देशतः என்ற மணிமொழியால் அவகாசத்தை வயிற்றில் வைக்காமல் (வயிறு

நிரம்ப) சாப்பிடுங்கள். நேரமாய்விடுமோ என்ற கவலேவேண்டாம் என்ற தம் அபிப்பிராயத்தை எத்தனே அழகாக இரண்டு பதங்களால் சுருக்கிக் கூறிவிட்டார்கள். இப்படியே ஒவ்வொரு வருஷ ஆராதனேயிலும் ஏதாவது அபூர்வமான உபசார வார்த்தைகளேச் சொல்லிப் பிராம்மணர்களேயும் மற்ற பக்தர்களேயும் பரவசப்படுத்துவார்கள்; களிப்பூட்டுவார்கள்.

ஒருசமயம் ஆராதனேப் பிராம்மணர்கள் சாப்பிடும் பொழுது ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்ததைக் கண்ட குருநாதாள் அதை எப்படியாவது நிறுத்தும்படி செய்யவேண்டும் என்று எண்ணி ஓர் உபாயம் செய்தார்கள். இதை எழுதியவர் அப்பொழுது பிரம்மசாரியாயிருந்ததால் ஆராதனே கோஷ்டியில் கலந்து கொள்ளமுடியாதல்லவா? ஆகையால் இவரை வரவழைத்து அந்தப் பங்க்தியின் மத்தியில் உட்கார வைத்து கடோபநிஷத்தை உயர்ந்த த்வனியில் பாராயணம் செய்யும்படி உத்தரவிட்டு ''பிராம்மணர்கள் கடோபநிஷத்தை அர்த்தாநுஸந்தானம் செய்துகொண்டே சாப்பிட்டால் நல்லது'' என்று ஸூசனேயாகச் சொல்லிவிட்டு சென்ருர்கள். இவ்விதம் செய்ததால் அநேக பலன்கள் ஏற்பட்டன. பிராம்மணர்கள் பேசுவதை நிறுத்தியது, அதன்மூலம் ஆராதன கர்மாவானது ஸாபல்யமடைந்தது, பிராம்மணர்களின் மனத்திற்கு நிம்மதியுண்டானது, அவர்களுக்கு மனத்தாங்கல் ஏற்படாமலே இந்தக் கார்யத்தைச் சுலபமாக ஸாதித்தது. அதுமுதல் கடோபநிஷத் பாராயண ஸம்பிரதாயத்தை ஏற்படுத்தியது இன்னெரு பலன். இவ்விதம் அநேக பலன்கள் தரும்படியான ஒரு காரியத்தை ஒரு வார்த்தையினுலேயே ஸாதித்துவிட்டார்கள். அந்த மஹிமையை என்னவென்று சொல்வது !

இன்னெரு விஷயம்: பூர்வாச்சிரமத்திலிருந்த இந்த எழுத்தாளரைப் பற்றியது. ஸ்ரீமடத்திலிருந்து ஆஸ்திக மஹோஜ்ஜீவினீ என்ற பத்திரிகை சென்ற அக்ஷய வருஷத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததல்லவா? அந்தப் பத்திரிகைக்கு அடிக்கடி விஷயதானம் செய்யும்படியும், மற்றவர்களின் கட்டுரைகளே ஸரிபார்க்கும்படியும், இந்த எழுத்தாளருக்கு ஸ்ரீ ஸந்நிதானம் உத்தரவிட்டிருந்தார்கள். அத்துடன் மல்லிக்கரை சுப்பிரமண்ய சாஸ்திரிகளுடன் கலந்து ஆலோசித்து சீர்திருத்தம் செய்து அச்சுக்கு அனுப்ப வேண்டுமென்றும் சொல்லியிருந்தார்கள். கொஞ்சகாலம்

வரையில் உத்தரவுப்படியே நடந்துவந்தது. பல அபிப்பிராயப்பேதங்களாலும், வேறு சில காரணங்களாலும் மல்லிக்கரை சாஸ்திரிகளுக்கும் இந்த எழுத்தாளருக்கும் ஒத்துவரவில்லை. இதை எப்படியோ கண்டுபிடித்து இந்த எழுத்தாளரை வரவழைத்துப் பத்திரிகை விஷயங்களைப் பற்றிப் பல கேள்விகள் கேட்டு அதற்கெல்லாம் பதிலளித்தவுடன் ''ஸரி போய் வா'' என்று உத்தரவளித்தார்கள். இந்த எழுத்தாளர் கிளம்பும்பொழுது उभयोरपि सामानाधिकरण्यं नास्ति वा? என்று கேட்டார்கள். இதற்கு இரண்டு விதமாக அர்த்தம் சொல்லலாம். ஒரே அதிகரணத்தில் (இடத்தில்) இருப்பது இல்லையா என்று ஓர் அர்த்தம். அபிப்பிராய பேதமா என்று வேருெரு அர்த்தம். இந்தச் சந்தர்ப்பத்தில் இரண்டாவது அர்த்தத்தைத்தான் குறிப்பிட்டு நம்மை எச்சரிக்கிருர் என்று நினைத்து இந்த எழுத்தாளர் தயங்கி நின்றபோது தம் வாக்கியத்துக்கு விளக்கம் கூறுவதுபோல் एकत्रैव निवासो नास्ति वा इति पृष्टम् ''ஒரே இடத்தில் இருவரும் வசிப்பதில்லையோ என்று கேட்டேன். அவ்வளவுதான்'' என்று சிரித்துக்கொண்டு சொன்ஞர்கள். மல்லிக்கரை சாஸ்திரிகளிடமும் இப்படியே சொன்ஞர்களாம். நாங்கள் இருவரும் சேர்ந்து யோசித்துப் பார்த்து குருநாதாளின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொண்டோம். ''இருவரும் ஒற்றுமையாக ஒரே இடத்திலேயே இருந்துகொண்டு பத்திரிகை விஷயங்களைக் கவனிக்கவேண்டும்; அபிப்பிராய பேதமோ விரோதமோ இல்லாமல் ஸமரஸமாயிருந்து பத்திரிகையை நடத்த வேண்டும்'' என்ற தம் கருத்தைச் சொல்லாமல் சொல்லி வியங்கியமாகத் தெரிவித்தார்கள் என்று அறிந்து கொண்டு ஏற்கெனவேயுள்ள அபிப்பிராயபேதத்தை விட்டுப் பரஸ்பரம் ஒற்றுமையாகவே இருந்து வந்தோம். இவ்விதம் ஒருவர் மனத்திற்கும் புண்படாமலும், தம் அதிகாரத்தை உபயோகிக்காமலும் விரோதமாக உள்ளவர்களை ஒற்றுமையுடன் ஒன்று சேர்க்கும் அநுக்ரஹ சக்தியானது நமது குருசரணுளுக்கு அஸாதாரணமானது என்பதைப் பல உதாஹரணங்களால் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

* * *

16

மஹாதானபுரத்தில் ஸ்ரீஅபிநவவித்யாதீர்த்தர்

(ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் தன் பூர்வாசிரமத்தில் ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் என்ற பெயருடன் சிருங்கேரி ஸ்ரீ ஸத்வித்யா ஸஞ்ஜீவினீ பாடசாலையில் ஆசிரியராக இருந்தார். அந்தச்சமயம் ஸ்ரீநிவாஸன் என்ற சிறுவர் பாடசாலையில் புதிதாகச் சேர்ந்த வித்யார்த்தி என்ற முறையில் ஜகத்குரு ஸ்ரீசந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகளின் கருணைகடாக்ஷத்தைப் பெற்றவராக, ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகளின் ரட்சணையில் சிறிது காலம் இருந்தார். பின்னால் அந்த ஸ்ரீநிவாஸன் ஜகத்குரு ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தராக மாறி ஸ்ரீ சாரதா பீடத்தின் 35 ஆவது பீடாதிபதியாக புகழுடன் விளங்கியபோது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருச்சி ஜில்லா அகண்ட காவிரிக்கரை தீரத்தில் மஹாதானபுரம் என்ற கிராமத்திற்கு விஜயயாத்திரையாக வந்தார். அப்போது ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் அந்த கிராமத்தில் தன் ஆசிரமத்தில் தங்கி இருந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டது ஒரு சுவாரஸியமான நிகழ்ச்சியாக ஆயிற்று. அதன் வர்ணனையே இந்தக் கட்டுரை. இது 1961 இல் வெளிவந்த போது வரைந்தவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. ஆனால் சைலியைக் கவனிக்கும் போது இதையும் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளே எழுதியிருக்க வேண்டும் என்று தீர்மானித்து இங்கே வெளியிடுகிறோம்.)

ஸ்ரீ சிருங்ககிரி சாரதாபீடத்தை அலங்கரித்து வந்த நமது பரமகுருநாதாளான ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்கள் சுமார் 55 வருஷங்களுக்கு முன் இந்த மஹாதானபுரத்திற்கு விஜயம் செய்து பக்தகோடிகளையும் சிஷ்யகோடிகளையும் அனுக்ரஹித்த விஷயத்தை இவ்வூரிலுள்ள பல பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறோம். அது ஸமயம் மஹாதானபுரத்தில் இரண்டு மூன்று நாட்கள் தங்கி ஸ்ரீசாரதா சந்திரமௌலீசுவர பூஜை செய்த காக்ஷியையும், தீர்த்த

பிரஸாதத்துக்கும் உபந்யாஸ சிரவணத்துக்கும் ஆயிரக்கணக்கான ஜனங்கள் குழுமியிருந்ததையும், அன்னக்கொடி கட்டி பிராம்மண ஸுவாஸினீ ஸந்தர்ப்பணேகள் நடந்த வைபவத்தையும் இங்குள்ள பெரியோர்கள் மூலம் கேள்விப்படுகிறோம். அம்மஹான் அருளிய உபதேச மொழிகளைக் கேட்டவர்கள் இன்றும் பலர் இருக்கிறார்கள்.

அதற்கடுத்த பட்டத்தில் வந்த நமது குருநாதாளான ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளவர்கள் தக்ஷிண தேசத்தில் விஜயம் செய்து கொண்டிருக்கையில் இவ்வூர் பிரமுகர்கள் பலர் காவேரிக்கு அக்கரையில் முகாம் செய்திருந்த அந்த ஸந்நிதானத்திடம் சென்று இவ்வூருக்கு விஜயம் செய்து அனுக்ரஹிக்கும்படி பலவாறாக பிரார்த்தித்தும் அது ஸபலமாகாமல் போய்விட்டது. ஏனென்றால் சென்ற ருதிரோத்காரி வருஷத்தில் காவேரியில் வந்த பெருவெள்ளத்தாலும் ஏரி உடைப்பாலும் பயிர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டதைச் சுட்டிக்காட்டி இந்த ஸந்தர்ப்பத்தில் பரிவாரங்களுடன் தாம் அங்கு வருவது உசிதமாகாது என்று கருணையுடன் கூறி மறுத்து விட்டார்கள். சிஷ்யர்களிடம் உள்ள அளவற்ற கருணைதான் அவ்விதம் மறுத்ததற்குக் காரணம் என்பதில் ஸந்தேஹமில்லை. ஸந்நிதானம் தங்களது சிரமத்தை அறிந்து அவ்விதம் கூறியது கொஞ்சம் ஆறுதலாயிருந்தபோதிலும் இவ்வூர் மஹாஜனங்களுக்கு நம் குரு பீடமாகிய சாரதாபீடம் இங்கு வரவில்லையே என்ற ஏக்கம் இருந்து கொண்டே வந்ததில் ஆச்சரியமில்லை.

மறுபடியும் சாரதாபீடம் இங்கு விஜயம் செய்து தங்களது ஏக்கத்தை நிவிருத்தி செய்யாதா என்று சாதகபக்ஷிபோல் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மஹாதானபுர மஹாஜனங்களுக்குத் தங்களது அபீஷ்டத்தை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய ஒரு ஸந்தர்ப்பம் சென்ற விகாரி வருஷம் (1959) சைத்ர சுத்த அஷ்டமி குருவாரத்தன்று கிடைத்து விட்டது. ஏனென்றால் அன்று மாலை ஸ்ரீ ஜகத்குரு சாரதாபீடாதிபதிகளாகிய ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த ஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமஹாதானபுரத்துக்கு விஜயம் செய்து இவ்வூரிலுள்ள பல சிஷ்யர்களின் மனதிலிருந்த ஏக்கத்தை நிவிருத்தி செய்துவிட்டார்கள். ஏற்கெனவே அந்த மஹானை இவ்வூருக்கு விஜயம் செய்யும்படி பலதடவை பல இடங்களில் சென்று இவர்கள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். முதன் முதலில் காமநாயக்கன் பாளையம் முகாமில் இவ்வூரிலிருந்து ஸ்ரீ K.S.ஸ்ரீநிவாஸய்யர்,

ஸ்ரீ B. வெங்கடராமய்யர் முதலிய பிரமுகர்கள் சென்று தரிசித்து இவ்வூருக்கு விஜயம் செய்யும்படி வேண்டினார்கள்.

ஸ்ரீஸந்நிதானம் (ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர்):– மஹாதானபுரத்துக்கு அவசியம் விஜயம் செய்வோம். கவலை வேண்டாம்.

ஸ்ரீநிவாஸய்யர்:– ஸந்நிதானம் விஜயம் செய்ய எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீஸந்நிதானம்:– நாங்கள் பக்தர்களுடைய விசேஷ வேண்டுகோளுக்காக இவ்வூர் வந்திருக்கிறோம். இங்கிருந்து பல கிராமங்களைத் தாண்டி நேராக அங்கே வருவது உசிதமாகாது. யாத்ராக்ரமமாக வரும்பொழுது அங்கே வருகிறோம்.

ஸ்ரீநிவாஸய்யர்:– அதற்குள் என்னென்ன மாறுதல்கள் நேரப்போகிறதோ தெரியவில்லை.

ஸ்ரீஸந்நிதானம்:– ஒரு மாறுதலும் நேராது. நீங்கள் இந்த சாரதாபீடத்தில் அனன்ய பக்தியுடன் இருக்கும்பொழுது உங்களுக்கு ஒரு குறையும் வராது. நீங்கள் சீக்கிரமாகவே ஸ்ரீ சாரதா சந்திரமௌலீசுவர பூஜையை மஹாதானபுரத்திலேயே தரிசனம் செய்யப்போகிறீர்கள். கவலைவேண்டாம்.

இவ்விதம் வந்தவர்களை அனுக்ரஹித்து பலமந்திராக்ஷதை பிரஸாதம் அளித்து விடைகொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

மறுபடியும் கரூர்வழியாக யாத்ராக்ரமமாக வரும்பொழுது முன்புபோலவே பிரார்த்தனை செய்ததை ஏற்றுக்கொண்டு ஸ்ரீமஹாஸந்நிதானம் ஸ்ரீராமநவமிக்கு முதல்நாள் இங்கே விஜயம் செய்தார்கள். 50 வருஷங்களுக்கு முன் விஜயம் செய்திருந்த ஸ்ரீஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ம பாரதீ ஸ்வாமிகளுக்குப் பிறகு ஸ்ரீசாரதாபீடம் இங்கு வராத குறையை நீக்குவதற்குத்தானோ என்னமோ ஒரு நாள் தங்குவதாக வாக்கு அளித்த மஹான் ஐந்து நாட்கள் இங்கே தங்கி எல்லோரையும் பக்தி வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டார்கள். முதன் முதலில் பிரார்த்தித்தவரான ஸ்ரீ K.S.ஸ்ரீநிவாஸய்யரது கிருஹத்திலேயே இந்த கிராம

மஹாஜனங்களின் அபிப்ராயப்படி ஸ்ரீ ஸந்நிதானம் வந்து இறங்க ஏற்பாடாயிற்று. இதில் முன்ஸீப் ஸ்ரீநிவாஸய்யரும் ஸ்ரீ வைத்தியநாத அய்யரும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டு இம்மஹோத்ஸவத்தைச் சிறப்பித்தார்கள். பட்டணப்பிரவேசத்தையும் நன்கு நடத்திவைத்தார்கள்.

மஹாதானபுரத்தில் இதுவரையில் கண்டும் கேட்டும் இராத வாசாமகோசரமான ஒரு மஹோத்ஸவம் குருவாரம் ஸாயங்காலம் நடைபெற்றது. மஹாதானபுரம் பாடசாலைப் பக்கம் நமது ஸ்ரீ ஸந்நிதானம் வந்ததும் ஏற்கெனவே தயார் செய்யப்பட்டிருந்த தங்கப் பல்லக்கில் ஏறி அமர்ந்து கொள்ளவே அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் 'ஜயவிஜயீ பவ' என்ற கோஷத்துடனும் உபநிஷத்பாராயணம் மேளவாத்யம் அதிர்வேட்டுக்கள் வாணவேடிக்கைகள் இவைகளுடனும் சாலைவழியாக ப்ரதக்ஷிணமாக பல்லக்கில் பவனி வர பக்தர்களே பல்லக்கைத் தாங்கிக் கொண்டு வந்தார்கள்.

தீர்த்த விநாயகர் ஆலயத்துக்கு ஸமீபத்தில் வரவே வருண பகவான் கடாக்ஷிக்க ஆரம்பித்து விட்டார். மழை தானுகவே வந்ததா ? அல்லது நமது ருஷ்யசிருங்காசிரமவாஸியான வித்யாதீர்த்தர்தான் மழையை வரவழைத்தாரா என்ற ஸந்தேஹம் பின்னுல் தெளிந்தது. ஏனென்ருல் நமது வித்யாதீர்த்தர், ''ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளது ஆசிரமம் எங்கே?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார்களாம். தீர்த்த விநாயகர் ஆலயத்தில்தான் அவரது ஆசிரமம் என்று தெரிந்து கொண்டு அங்கே வந்து சேருவதற்குள் மழை பொழியும்படி செய்தார்போலும். மழை என்ற வியாஜம் இல்லாவிட்டால் நடுவழியில் இறங்க முடியாதல்லவா? ஸம்ஸ்தானுதிபதியாயிருப்பவர் ஒரு ஸாதாரண ஸந்யாஸியின் ஆசிரமத்துக்கு கால்நடையாகவே நடந்து வர மற்றவர்கள் அனுமதிப்பார்களா ? அதிலும் கிரீடதாரணம் முதலிய ராஜ லக்ஷணங்களுடன் வரமுடியாதல்லவா ? அதற்காகவே இந்த யுக்தியைக் கையாண்டார் போலும்!

தீர்த்த விநாயகர் ஆலயத்துக்கு ஸமீபத்தில் பல்லக்கு பவனிவரும்போது அங்கிருந்த ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் தன் சிஷ்யர்களுடன் பூர்ணகும்ப மரியாதை செய்து அஞ்ஜலிபந்தத்துடன் வணங்கி நின்ருர். உடனே வருணபகவானும் கடாக்ஷித்தார். அந்த

அகாலத்தில் மேகம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை. ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளைப் பார்த்தவுடன் பல்லக்கிலிருந்து இறங்கி ''ஆசிரமத்துக்குப்போவோம்'' என்று சொல்லி கூடவே அழைத்து வந்து விட்டார்கள். பாஷ்ய ஸ்வாமிகளோ இந்தத் தற்செயலான நிகழ்ச்சியில் பரபரப்பு அடைந்து திக்ப்ரமம் பிடித்தவர்போல் ஆகிவிட்டார். தன் ஆசிரமத்துக்கு அந்த ராஜகுருவை அழைத்துவரவேண்டி இருப்பதை மறந்து நின்றுர். ஆனுல் அந்த குருநாதர் அவரது மனோநிலையைத் தெரிந்து கொண்டு தாமாகவே அவரை அழைத்துக் கொண்டு வந்து ஆசிரமத்தில் புகுந்தார். ஸ்ரீ ஸந்நிதானம் அங்கு வந்து அங்குள்ள பூர்வ குருநாதரின் படத்தையும் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் படத்தையும் பார்த்தவுடன் அஞ்ஜலிபந்தத்தால் வணங்கிவிட்டு கிரீடம், ஹாரம், பீதாம்பரம் முதலிய ராஜபிருதங்களையெல்லாம் கழற்றி வைத்து விட்டு ஆஸனத்தில் அமர்ந்தார். ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளுக்கோ ஒன்றும் தோன்றவில்லை. ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஓர் இடத்தில் ஏதோ ஓர் ஆசிரமத்தில் நாலு அக்ஷரம் வித்யாப்பியாஸம் செய்து வைத்ததை நினைத்துக்கொண்டு அந்த கிருதக்ஞதையைக் காண்பிப்பதற்காக ஸம்ஸ்தான வழக்கத்தையும் மீறிக் கொண்டு இவ்விதம் நம்மிடம் வந்திருக்கிருரே ! கிருஷ்ணபரமாத்மா விதுர கிருஹத்துக்கு வந்தது போல் அல்லவா இருக்கிறது! நாம் எவ்வளவு தன்யன். நமக்கு இவ்வளவு பாக்கியமா என்று எண்ணி ஸாஷ்டாங்கமாக வந்தனம் செய்து நின்று பின்வரும் சுலோகத்தைக் கூறினுர்.

श्रियं विकर्षत्यपहन्त्यघानि श्रेयः परिस्नौति तनोति कीर्तिम् ।
संदर्शनं लोकगुरोरमोघं तवात्मयोनेरिव संनिधत्ते ॥

ச்ரியம் விகர்ஷத்யபஹந்த்யகானி ச்ரேய: பரிஸ்நௌதி தநோதி கீர்த்திம் ।
ஸந்தர்ஶநம் லோககுரோரமோகம் தவாத்மயோநேரிவ ஸந்நிதத்தே ॥ (கிராதா)

இவ்விதம் சொல்லி தக்ஷிணுமூர்த்தி ஸ்தோத்திரம் சொல்ல ஆரம்பித்தார். உடனே குருநாதர் கையமர்த்தி உட்காரும்படி செய்து குசலப்ரச்னம் விசாரித்தார். 10 நிமிடத்திற்குள் நூறு கேள்விகளைக் கேட்டுவிட்டார். பல விஷயங்களையும் அதற்குள் தெரிந்துகொண்டுவிட்டார். அவரது ப்ரதிபா சக்தியை என்னவென்று

சொல்வது? அவரது கருணை விசேஷத்தைத்தான் எவ்விதம் வர்ணிப்பது? அதில் சிலவற்றை மாத்திரம் இதில் குறிப்பிடுகிறோம்.

ஸ்ரீ ஸந்நிதானம்:- உங்களது ஆசிரமத்துக்கு ஸமீபத்தில் வந்தவுடன் மழை வந்ததைப் பார்த்தீர்களா ?

பாஷ்ய:- மழை வரவழைக்கப்பட்டதைப் பார்த்தேன். தன்யனானேன்.

ஸ்ரீ ஸந்நிதானம்:- அப்படிச் சொல்லவேண்டாம். இவர் தீர்த்த விஜயகரல்லவா? அவரே அந்த தீர்த்தம் வரும்படி செய்து இருக்கக்கூடாதா ?

பாஷ்ய:- வித்யாதீர்த்தத்துடன் தீர்த்த விஜயகரும் சேர்ந்து விட்டால் கேட்க வேண்டுமா? இரண்டு தீர்த்தங்களும் சேர்ந்து இந்த ஊரையே தீர்த்தமயமாகச் செய்துவிட்டன.

ஸ்ரீ ஸந்நிதானம்:- நான் இவ்விடம் வரவேண்டுமென்று நினைத்தேன். மழையும் வந்துவிட்டது. அவ்வளவுதானே.

பாஷ்ய:- தாங்கள் ஸம்ஸ்தான கௌரவத்தை விட்டு இவ்விதமெல்லாம் செய்யலாமா ?

ஸ்ரீ ஸந்நிதானம்:- (சிரித்து) நானாக வரவில்லையே. மடத்து அதிகாரிகள்தான் என்னை மழையிலிருந்து காப்பாற்றுவதற்காக இவ்விடம் அழைத்து வந்தார்கள். இதில் என்ன தோஷம்?

பாஷ்ய:- ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவைக் குழந்தைப் பருவத்தில், பூதனை, சகடாஸுரன் முதலிய பால க்ரஹங்களிடமிருந்து அவரது தாய் தந்தையர்கள் காப்பாற்றியதுபோல் தங்களை இந்த அதிகாரிகள் மழையிலிருந்து காப்பாற்றுகிறார்கள் போலும்! (சிரிப்பு)

ஸ்ரீ ஸந்நிதானம்:- அதெல்லாம் வேண்டாம். இந்த மழை வராவிட்டால் நான் இந்த வேஷத்துடன் பல்லக்கிலிருந்து நடுவழியில் இறங்கமுடியாதல்லவா. இந்த மழை தக்க சமயத்தில் பெரும் உபகாரம் செய்துவிட்டது. ஸம்ஸ்தான நியமப்படி நாம் இங்கு வரமுடியாதே என்று நினைத்தேன். ஆனால் மடத்து அதிகாரிகளே என்னைப் பல்லக்கிலிருந்து இறக்கி உங்களது ஆசிரமத்துக்கு

அழைத்து வரும்படி இந்த வருண பகவான் செய்துவிட்டது ஆச்சரியமில்லையா? (சிரிப்பு)

பாஷ்ய:– इच्छामात्रं प्रभोः सृष्टिः (*இச்சா மாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:*) என்ற நியாயப்படி தாங்கள் ஒன்று நினைத்தால் அது நடக்காமல் போகுமா? எப்படியும் நான் தன்யனானேன்.

இவ்விதம் ஸ்ரீபாஷ்யஸ்வாமிகளுடன் அளவளாவிவிட்டு மழை விட்டவுடன் ஜாகைக்குப் போய்ச்சேர்ந்தார்கள். ஸ்ரீ K.S.ஸ்ரீநிவாஸ அய்யரது கிருஹம் கிராம மத்தியிலிருப்பதையும் நல்ல வஸதியுடனிருப்பதையும் கருதி அங்கேயே ஸ்ரீ ஸந்நிதானம் தங்கியிருக்கும்படி கிராமத்தார் ஏற்பாடு செய்திருந்தபடியால் அவ்விடமே சென்று தூளிபாதபூஜையை ஏற்றுக் கொண்டு சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் குழுமியிருந்த அந்தப் பந்தலையும் பந்தல் அலங்காரங்களையும் பார்த்து பரம ஸந்தோஷமடைந்து ''நீங்கள் அனைவரும் சிருங்கேரி சாரதா பீடத்தில் எவ்வளவு பக்தியும் மதிப்பும் வைத்திருக்கிறீர்கள் என்பது இந்த மஹா ஸபையையும் இந்த அலங்கார மண்டபத்தையும் உங்களது அளவு கடந்த உத்ஸாஹத்தையும் நேரில் பார்த்ததிலிருந்தே தீர்மானித்துவிட்டோம்'' என்றார்கள். அதற்கு கிராம பிரமுகர் ஒருவர் ''சுமார் 50 வருஷங்களுக்குப் பிறகு வந்திருக்கும் சாரதா பீடம் எங்களிடம் அனுக்ரஹத்தைக் காண்பிப்பதற்காகவே இவ்விதம் மங்களகரமாக மழையுடன் வந்திருக்கிறது. இந்தக் கோடை காலத்தில் வந்திருக்கும் இந்தப் பெரு மழையானது பொன்மழை போன்றதாகும். நாங்கள் பரம தன்யர்கள்'' என்றார்.

பிறகு ஸ்ரீ ஸந்நிதானம் ''சாரதாபீடம் மஹிமை பொருந்தியதாக இருந்தாலும் அது சிரத்தாபக்தியுள்ளவர்களிடம்தான் பிரகாசிக்கக் கூடுமல்லவா? நீங்கள் மிகவும் சிரத்தாளுக்கள் என்பதை இந்த மழையே காண்பித்து விட்டது. ஏனென்றால் ''श्रद्धा वा आपः என்ற சுருதிப்படி உங்களது சிரத்தைதான் மழை ரூபமாக வெளிப்பட்டிருக்கிறது என்பதில் ஸந்தேஹமே கிடையாது. இம்மாதிரியேதான் கல்லிடைக்குறிச்சி பட்டண பிரவேசத்திலும் மழை பொழிந்தது. நீங்கள் அனைவரும் ஸ்ரீ சாரதா சந்திரமௌளீசுவர தரிசனம் செய்து ஜன்ம ஸாபல்யமடைவீர்கள்'' என்று சொல்லிவிட்டு ஸ்நானத்திற்கு சென்று விட்டார்கள். மறுதினமும் ஸாயங்காலம்

பாஷ்ய ஸ்வாமிகளது ஆசிரமத்துக்கு விஜயம் செய்து அங்கிருந்தே பல்லக்கு உத்ஸவம் முன்தினம் போலவே பவனி வந்தது.

அன்றிலிருந்து ஐந்து நாட்களிலும் இந்த சிறு அக்ரஹாரம்கூட ப்ரம்மலோகம் போல் விளங்கி வந்தது. பக்கத்து கிராமங்களிலிருந்தும் பலர் வந்து குழுமி விட்டார்கள். பூஜை, தரிசனம், தீர்த்தப்ரஸாதம், கதாகாலக்ஷேபம், உபந்யாஸம் ஆகிய இவையெல்லாம் மற்ற ஊர்களிலும் நடைபெற்றபோதிலும் ஒரு விசேஷம் மாத்திரம் இவ்வூரைச் சிறப்பித்தது.

அதாவது யதிசக்கரவர்த்தியாகிய அந்த மஹானுக்கு ஸ்வாகத பத்திரிகை வாசித்துக் கொடுத்தவர் ஒரு யதீசுவரராகவே அமைந்து விட்டார். ஸ்ரீபாஷ்ய ஸ்வாமிகளே அந்த மஹாஸபையில் ஓர் அழகான ஸ்வாகத பத்திரிகையை கிராம ப்ரதிநிதியாக இருந்து வாசித்து ஸ்ரீ ஸந்நிதானத்தில் ஸமர்ப்பணம் செய்தார். அந்த ஸம்ஸ்கிருத ஸ்வாகத பத்திரிகையிலிருந்து ஒரு பாகத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன்.

आः किमिदं भागधेयमस्माकं! यतः प्रातःस्मरणीयाः स्पृहणीय-सद्गुणगणाश्च महापुरुषा इमे अस्मदीयसद्गुरुसार्वभौमस्थाने पट्टाभिषिक्ताः समुज्ज्वलन्ति । अहो धन्याः स्मो वयं, येनेमे संयमिसार्वभौमाः सांप्रतं अस्मन्नयनपदवीदवीयांसो न सन्ति । अहो धन्यतराः स्मो वयं येन सद्गुरुणा साकं तदाराध्यदेवतां भगवतीं शारदां चन्द्रमौलीशं रत्नगर्भगणपतिं च सममेव साक्षात्कुर्मः । अहो धन्यतमाः स्मो वयं येन सद्गुरुमुखारविन्दविसृत्वरसदुपदेशामृतसारमयीं सारस्वतझरीं पायं पायं श्रावं श्रावं च परमानन्दमेदुरितान्तरंगाः विनापि पुरुषयत्नं विनापि मेधाविलासं विनापि श्रवणमननादिकं विनापि तत्वविचारं विनापि ब्रह्मसाक्षात्कारं, ब्रह्मानन्दरससध्रीचीनां कामप्यनिर्वचनीयां निर्वृतिमुपलभामहे ।

ஸ்ரீபாஷ்ய ஸ்வாமிகள் இந்த ஸ்வாகத பத்திரிகையை கிராமத்தாரின் சார்பாக ஸ்ரீ ஸந்நிதானத்தில் ஸமர்ப்பணம் செய்தவுடன் வித்வான் ஸ்ரீ நாகரத்னசர்மா அவர்கள் தமிழில் மொழி பெயர்த்து அதை விவரணம் செய்தார். ஸ்ரீ ஸந்நிதானம் பரம ஸந்தோஷமடைந்தார்கள். அன்று கரூர், ஈரோடு, திருச்சி முதலிய இடங்களிலிருந்தும் பக்கத்து

கிராமங்களிலிருந்தும் பலர் வந்திருந்தார்கள். ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் ஏற்கெனவே பிரார்த்தித்துக்கொண்டபடி ஸ்ரீசந்திரசேகர பாரதீ குருநாதரின் திவ்ய சரித்திரத்தையே அந்த மஹா ஸபையில் உபந்யாஸம் செய்து அந்த மஹான் எல்லோரையும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டார்கள். கடைசியில் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகளின் பால சிஷ்யன் சிரஞ்சீவி சுந்தரம் என்ற பையன் (12 வயது) ''சங்கரரின் மஹிமை'' என்ற விஷயமாக ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பால பாஷையில் பேசியதைக் கேட்டு ஸந்தோஷத்துடன் சிலாகித்து அனுக்ரஹித்தார்கள்.

இந்த ஐந்து நாட்களும் ஜனங்கள் தங்களைப் பூலோகத்தில் இருப்பதாகவே நினைக்கவில்லை. தேவலோகத்தில் இருப்பதாகவே எண்ணிக் குதூஹலித்தார்கள். இவ்விதம் பரமானுக்ரஹம் செய்த அந்த அபிநவவித்யாதீர்த்த மூர்த்தியை ஸதா ஸ்மரணம் செய்து வணங்குவோமாக.

✣ ✣ ✣

அநுபந்தம்

ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் என்று அழைக்கப்பட்ட ஸ்ரீ ஸச்சிதானந்த தீர்த்தர் எழுதியுள்ள இந்தக் கட்டுரைகளுடன் அவர் பல சமயங்களில் கவனம் செய்த ஸ்தோத்திரங்களிலிருந்து மூன்றை வெளியிடுகிறோம்.

॥श्रीजगद्गुरु स्तोत्रम् ॥

ஸ்ரீ ஜகத்குரு ஸ்தோத்ரம்

இந்த 'ஸ்ரீ ஜகத்குரு ஸ்தோத்ரம்' என்ற ஸ்தோத்ரம், ஓர் ஓவியர் வரைந்திருந்த ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகளின் திருவுருவப் படத்தைப் பார்த்தவுடன் இயற்றப்பட்டது.

काषायाम्बरभूषं कान्तं करकमलकलितजपमालम् ।
करुणापूर्णकटाक्षं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥१॥

காஷாயாம்பர பூஷம் காந்தம் கரகமல கலித ஜபமாலம் ।
கருணா பூர்ண கடாக்ஷம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

काषायाम्बरभूषम् காஷாய வஸ்திரமணிந்தவரும், कान्तं மனதைக் கவருகின்றவரும், करकमल தாமரைபோன்ற கையில், कलितजपमालम् ஜபமாலை வைத்துக் கொண்டிருப்பவரும், करुणापूर्ण தயை நிரம்பிய कटाक्षम् கடாக்ஷமுள்ளவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् கண்டேன். (1)

पार्श्वन्यस्तकमण्डलुपादुकमुपशान्तमङ्गलाकारम् ।
पंकजसहचरनयनं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥२॥

பார்ஶ்வ ந்யஸ்த கமண்டலு பாதுகம் உபஶாந்த மங்களாகாரம் ।
பங்கஜ ஸஹசர நயநம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

पार्श्वन्यस्तकमण्डलुपादुकम् பக்கத்தில் கமண்டலம், பாதுகை இவைகளை வைத்திருப்பவரும், उपशान्त சாந்தி பொருந்தியதும், मङ्गलाकारं மங்களத்தைத் தருவதுமான உருவமுள்ளவரும், पङ्कजसहचरनयनं தாமரை போன்ற கண்களுள்ளவருமான, कञ्चन ஒரு कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (2)

आजानुलम्बिभुजयुगमनर्घरुद्राक्षमालिकाभरणम् ।
आसेचनकालोकं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥३॥

ஆஜாநுலம்பி புஜ யுகமநர்க ருத்ராக்ஷ மாலிகாபரணம் ।
ஆஸேசநகாலோகம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

आजानुलम्बि முழங்கால்வரை தொங்கும், भुजयुगम् இரண்டு கைகளுள்ளவரும் अनर्ध, விலையுயர்ந்த, रुद्राक्ष मालिकाभरणम् ருத்ராக்ஷ மாலையை ஆபரணமாகக் கொண்டவரும், आसेचनकालोकं எத்தனை தடவை கண்டாலும் திருப்தி ஏற்படாத பார்வையுள்ளவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (3)

भस्मोद्धूलितफालं भस्मीकृतरागशंसिमुखकमलम् ।
विस्मयनीयचरित्रं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥४॥

பஸ்மோத்தூலித பாலம் பஸ்மீக்ருத ராக ஶம்ஸி முககமலம் ।
விஸ்மயநீய சரித்ரம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

भस्मोद्धूलितफालं நெற்றியில் விபூதியணிந்தவரும், भस्मीकृतरागशंसि எல்லா ஆசைகளும் சாம்பலாகப் போனதைக் காட்டுகின்ற, मुखकमलं தாமரைப் போன்ற முகத்தையுடையவரும், विस्मयनीयचरित्रं அதிசயிக்கத்தக்க சரித்திரமுள்ளவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (4)

महनीयमहिमबोधकमुखभावं मुग्धहसितलसदधरम् ।
कमनीयनिखिलगात्रं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥ ५ ॥

மஹநீய மஹிமபோதக முகபாவம் முக்த ஹஸித லஸததரம் ।
கமநீய நிகில காத்ரம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

महनीय கொண்டாடத் தகுந்த, महिम மாஹாத்ம்யத்தை, बोधक தெரிவிக்கும், मुखभावम् முகபாவத்தை உடையவரும், मुग्धहसित அழகிய புன்சிரிப்புடன், लसदधरम् விளங்கும் அதரத்தை உடையவரும், कमनीयनिखिलगात्रम् சரீரம் முழுவதிலும் அழகு பொருந்தியவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् தரிசித்தேன். (5)

पद्मासनोपविष्टं पाण्डित्याभाषिफालविस्तारम् ।
प्राणायामसुनिष्ठं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥ ६ ॥

பத்மாஸநோபவிஷ்டம் பாண்டித்யாபாஷி பால விஸ்தாரம் ।
ப்ராணாயாம ஸுநிஷ்டம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

पद्मासनोपविष्टम् பத்மாஸனத்தில் அமர்ந்திருப்பவரும், पाण्डित्याभाषि அறிவுத் திறமையை வெளிவிட்டுக் கூறுகின்ற, फालविस्तारम् அகன்ற நெற்றி உள்ளவரும், प्राणायामसुनिष्ठम् ப்ராணாயாமம் செய்வதில் நிலைபெற்றவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् கண்டேன். (6)

नासाग्रनिहितनयनं न्यासातिशयप्रशंसिनिजचरितम् ।
व्यासाचार्यमिवान्यं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥ ७ ॥

நாஸாக்ர நிஹித நயநம் ந்யாஸாதிஶயப்ரஶம்ஸி நிஜ சரிதம் ।
வ்யாஸாசார்யமிவாந்யம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

नासाग्रनिहितनयनं மூக்கு நுனியில் கண்பார்வையைச் செலுத்தியவரும், न्यासातिशयप्रशंसि ஸந்யாஸத்தின் பெருமையைக் கூறுகின்ற निजचरितम् தன் சரித்திரத்தை உடையவரும், व्यासाचार्यमिवान्यं வியாஸாசார்யருடைய அபராவதாரமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (7)

मङ्गलकेलीभवनं मञ्जुलगुणपुञ्जनिलयमुरुकरुणम् ।
मननासक्तस्वान्तं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥ ८ ॥

மங்கள கேளீ பவநம் மஞ்ஜுளகுண புஞ்ஜ நிலய முருகருணம் ।
மநநாஸக்த ஸ்வாந்தம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

मङ्गलकेलीभवनं மங்களங்கள் விளையாடும் கிருஹமாயும், मञ्जुलगुणपुञ्जनिलयं சிறந்த குணக்குவியலுக்கு இருப்பிடமானவரும், उरुकरुणं மிகுந்த தயையுள்ளவரும் मननासक्तस्वान्तं (பரமாத்ம தத்துவத்தை) மனனம் செய்வதில் ஈடுபட்ட மனமுள்ளவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजम् யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (8)

अनुभूयमाननिर्वृतिमीषन्मुकुलीकृतेक्षणद्वन्द्वम् ।
आनन्दभरितहृदयं कञ्चन कर्मन्दिराजमद्राक्षम् ॥ ९ ॥

அநுபூயமான நிர்வ்ருதிம் ஈஷந் முகுலீக்ருதேக்ஷண த்வந்த்வம் ।
ஆனந்த பரித ஹ்ருதயம் கஞ்சந கர்மந்தி ராஜமத்ராக்ஷம் ॥

अनुभूयमाननिर्वृतिं ஆத்மானந்தத்தை அநுபவிக்கின்றவரும், ईषन्मुकुलीकृत சிறிது மூடப்பட்ட, ईक्षणद्वन्द्वं இரு கண்களையுடையவரும், आनन्दभरितहृदयम् மனதில் ஆனந்தம் நிறைந்தவருமான, कञ्चन ஒரு, कर्मन्दिराजं யதிசிரேஷ்டரை, अद्राक्षम् பார்த்தேன். (9)

नवरत्नमाल्यमेतद्रचितं भक्तेन वैद्यनाथेन ।
साधयतु सर्वमिष्टं सद्गुरुचरणाब्जसक्तचित्तानाम् ॥ १० ॥

நவரத்ந மால்யமேதத் ரசிதம் பக்தேன வைத்யநாதேன ।
ஸாதயது ஸர்வமிஷ்டம் ஸத்குரு சரணப்ஜ ஸக்த சித்தாஞம் ॥

भक्तेन பக்தரான, वैद्यनाथेन வைத்யநாதரால், रचितं இயற்றப்பட்ட, एतत् இந்த, नवरत्नमाल्यं நவரத்னமாலையானது, सद्गुरुचरणाब्ज ஸத்குருவின் தாமரை போன்ற பாதங்களில், सक्तचित्तानां ஈடுபட்ட மனமுள்ளவர்களின், सर्वं इष्टं எல்லா இஷ்டத்தையும், साधयतु நிறைவேற்றட்டும். (10)

***

॥ श्रीसद्गुरुपादुकास्तवराजः ॥

ஸ்ரீ ஸத்குரு பாதுகாஸ்தவராஜம்

श्रीमच्छृङ्गगिरावधिष्ठितवतो व्याख्यानसिंहासनं
श्रीविद्यामनुजापनिर्मलतरस्वान्तस्य शान्तात्मनः ।
श्रेयःसन्ततिसंप्रदानकलनाकल्पद्रुलीलाजुषः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ १ ॥

ஸ்ரீமச்ச்ருங்ககிராவதிஷ்டிதவதோ வ்யாக்யாந ஸிம்ஹாஸநம்
ஸ்ரீவித்யா மநுஜாப நிர்மலதர ஸ்வாந்தஸ்ய ஶாந்தாத்மந: |
ஶ்ரேயஸ்ஸந்ததி ஸம்ப்ரதாந கலநா கல்பத்ரு லீலாஜு₂ஷ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ||

श्रीमच्छृङ्गगिरौ அழகு பொருந்திய சிருங்கேரியில், व्याख्यानसिंहासनं வியாக்யான ஸிம்ஹாஸனத்தில் (ஜகத்குரு பீடத்தில்), अधिष्ठितवतः அமர்ந்திருந்தவரும், श्रीविद्यामनुजाप ஸ்ரீவித்யை எனும் மந்திரத்தை ஜபம் செய்வதால், निर्मलतरस्वान्तस्य பரிசுத்தமான மனமுள்ளவரும், शान्तात्मनः ராக துவேஷங்களற்றவரும், श्रेयस्सन्ततिसंप्रदानकलनाकल्पद्रुलीलाजुषः கல்பக விருக்ஷம்போல் மங்கள வரிசைகளை அநாயாஸமாகக் கொடுப்பவருமான, श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின், श्रीपादुका ஸ்ரீ பாதுகைதான், मे गतिः எனக்கு கதி. (1)

वेदान्ताम्बुधिमन्थनोद्यतमनोमन्थानसंपादित-
ब्रह्मानन्दसुधाझरीरसभरास्वादप्रसन्नात्मनः ।
वाग्वैखर्यभिभूतवैबुधमहाचार्यस्य साधीयसः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ २ ॥

வேதாந்தாம்புதி மந்தனோத்யத மனோ மந்தான ஸம்பாதித
ப்ரஹ்மாநந்த ஸு₂தாஜரீ ரஸபராஸ்வாத ப்ரஸந்நாத்மந: |
வாக்வைகர்யபிபூத வைபுத மஹாசார்யஸ்ய ஸாதீயஸ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகரகுரோ: ஸ்ரீ பாதுகா மே கதி: ||

वेदान्ताम्बुधिमन्थनोद्यत- உபநிஷத்துக்களென்னும் கடலைக் கடைவதில் ஈடுபட்ட, ब्रह्मानन्दसुधाझरी - மனமென்னும் மத்தால்

அடைந்த, मनोमन्थानसंपादित - ப்ரஹ்மானந்தமென்ற அமிருத பிரவாஹத்தின், रसभरास्वाद - மிகுந்த ரஸத்தை அனுபவிப்பதால், प्रसन्नात्मनः - தெளிவான மனமுள்ளவரும், वाग्वैखर्यभिभूतवैबुधमहाचार्यस्य - பேச்சுத்திறமையால் தேவ குருவான பிருஹஸ்பதியை ஜெயித்தவரும், साधीयसः - மிக்க நல்ல ஸ்வபாவமுள்ளவருமான, श्रीमच्चन्द + गतिः - ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகைதான் எனக்கு கதி. (2)

कारुण्यामृतपूरपूरितहृदः कल्याणपारंपरी -
 केलीमन्दिरतामुपाश्रितवतः कामान्तकोपासितुः ।
काषायाङ्कितवाससः करलसद्दण्डस्य कान्ताकृतेः
 श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ३ ॥

காருண்யாம்ருத பூர பூரித ஹ்ருத: கல்யாண பாரம்பரீ
கேளீ மந்திரதாமுபாஶ்ரிதவத: காமாந்தகோபாஸிது: ।
காஷாயாங்கிதவாஸஸ: கரலஸத்தண்டஸ்ய காந்தாக்ருதே:
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகரகுரோ: ஸ்ரீ பாதுகா மே கதி: ॥

कारुण्यामृतपूर - தயை என்னும் அமிருத பிரவாஹத்தால், पूरितहृदः - நிறைந்த மனமுள்ளவரும், कल्याणपारम्परी - மங்கள பரம்பரைகளுக்கு, केलीमन्दिरतामुपाश्रितवतः - விளையாடுமிடமாக இருப்பவரும், कामान्तकोपासितुः - காமனை எரித்த ஈசனை உபாஸிக்கின்றவரும், काषायाङ्कितवाससः - காஷாய வஸ்திரம் தரித்தவரும், करलसद्दण्डस्य - கையில் தண்டத்துடன் விளங்குபவரும், कान्ताकृतेः - அழகிய வடிவமுள்ளவருமான, श्रीमच्चन्द्र + गतिः - ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகைதான் எனக்குப் புகலிடம். (3)

वेदान्तध्वनिघोषिणो बुधमयूराणां मनस्तोषिणः
 विद्यासस्यविपोषिणः स्वजनतासंतापविद्वेषिणः ।
अद्वैतामृतवर्षिणो जलधरस्यानन्दसन्दायिनः
 श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ४ ॥

வேதாந்த த்வநி கோஷிணோ புதமயூராணாம் மநஸ்தோஷிண:
வித்யாஸஸ்ய விபோஷிண: ஸ்வ ஜநதா ஸந்தாப வித்வேஷிண: ।
அத்வைதாம்ருத வர்ஷிணோ ஜலதரஸ்யாநந்த ஸந்தாயிந:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

वेदान्तध्वनिघोषिणः – உபநிஷத் சப்தங்களைக் கூறுவதன் மூலம் கோஷத்தை எழுப்புகின்றவரும், बुधमयूराणां – வித்வான்களாகிற மயில் களுடைய, मनस्तोषिणः – மனதை ஸந்தோஷப்படுத்துகின்றவரும், विद्यासस्यविपोषिणः – ஞானம் என்னும் பயிரை வளர்க்கின்றவரும், स्वजनता – தன்னை அண்டிய ஜனங்களின், संताप – தாபத்தை, विद्वेषिणः – விலக்குகின்றவரும், अद्वैतामृतवर्षिणः – அத்வைதமென்னும் அமிருதத்தைப் பொழிகின்றவரும், आनन्दसंदायिनः – ஆனந்தத்தைக் கொடுக்கின்றவரும் जलधरस्य – மேகம் போன்றவருமான ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸத்குருவின் பாதுகையே எனக்கு கதி. (4)

இங்கு ஸத்குருவை மேகத்துடன் ஒப்பிடப்பட்டிருக்கிறது. மேகம் இடியோசையை எழுப்பி மயில்களுக்கு இன்பத்தைத் தருகிறது. ஸ்ரீ ஸத்குரு உபநிஷத் ப்ரவசனத்தால் வித்வான்களின் மனதைக் களிப்படையச் செய்கிறார். மழையைப் பொழிந்து தாபத்தை அகற்றி பயிர்களை வளர்த்து எல்லோருக்கும் உணவைக் கொடுத்து ஆனந்தத்தைத் தருகிறது மேகம். ஸத்குருவோ அத்வைதாமிருதத்தைப் பொழிந்து ஞானத்தைப் பரப்பி ஆத்யாத்மிகம் முதலான உள் தாபங்களை அகற்றி ப்ரஹ்மானந்தத்தைத் தருகிறார்.

संसाराम्बुधिपारलङ्घनकलाजङ्घालतामीयुषः
सर्वाम्नायरहस्यबोधनविधौ वैदग्ध्यमासेदुषः ।
वैराग्यैकनिकेतनस्य विबुधव्रातैकरक्षामणेः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ५ ॥

ஸம்ஸாராம்புதி பாரலங்கன கலா ஜங்காலதாமீயுஷ:
ஸர்வாம்நாயரஹஸ்ய போதந விதௌ வைதக்த்ய மாஸேதுஷ: ।
வைராக்யைக நிகேதநஸ்ய விபுதவ்ராதைக ரக்ஷாமணே:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

संसाराम्बुधि – ஸம்ஸாரமென்னும் கடலின், पार – அக் கரையை, लङ्घनकला – தாண்டிச்செல்லும் கலையில், जङ्घालतां – மிகுந்த வேகத்துடன் செல்லும் திறமையை, ईयुषः – அடைந்தவரும், सर्वाम्नाय – எல்லா வேதங்களின், रहस्य – ரஹஸ்யத்தை, बोधनविधौ – உபதேசிக்கும் கார்யத்தில், वैदग्ध्यं – திறமையை, आसेदुषः – அடைந்தவரும், वैराग्यैकनिकेतनस्य – பற்றின்மைக்கு ஒரே (ஒப்பற்ற)

இருப்பிடமானவரும், विबुधव्रातैकरक्षामणे: - வித்வான்களின் ஸமூஹத்தை ஒப்பற்ற முறையில் காப்பாற்றுபவருமான, श्रीमचन्द्रकिशोरशेखरगुरो: - ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் श्रीपादुका - ஸ்ரீபாதுகை, मे- गति: - எனக்கு அடைக்கலம். (5)

आस्थानीमधिजग्मुषोऽपि विषयेष्वास्थामनापेदुषः
कारुण्यार्द्रकटाक्षसन्ततिजुषः कल्याणसीमापुषः ।
तुङ्गातीरमुपेयुषो मम मनस्यावासमासेदुषः
श्रीमचन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ६ ॥

ஆஸ்தாநீமதிஜக்முஷோऽபி விஷயேஷ்வாஸ்தாமநாபேதுஷ:
காருண்யார்த்ர கடாக்ஷஸந்ததி ஜுஷ: கல்யாண ஸீமாபுஷ: ।
துங்காதீரமுபேயுஷோ மம மநஸ்யாவாஸமாஸேதுஷ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

आस्थानीं - சிருங்கேரி ஸ்ரீஜகத்குரு ஸம்ஸ்தானத்தை, अधिजग्मुषोऽपि - அதிபதியாக அடைந்திருந்தபோதிலும், विषयेषु - விஷயங்களில், आस्थां - ஆசையை, अनापेदुषः - அடையாதவரும், कारुण्यार्द्र - கருணாரஸத்தால் कटाक्षसन्ततिजुषः - நனைந்த, கடாக்ஷ பரம்பரையுள்ளவரும், कल्याणसीमापुषः - உயர்ந்த எல்லைவரை மங்களங்களை ஓங்கச் செய்கின்றவரும், तुङ्गातीरं - துங்கா நதியின் கரையை, उपेयुषः - அடைந்தவரும், मम - என்னுடைய, मनसि - மனதில், आवासं - வாஸத்தை, आसेदुषः - அடைந்தவருமான, श्रीमचन्द्र + गतिः - ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகையே எனக்கு கதி. (6)

சிருங்கேரி ஜகத்குரு ஸம்ஸ்தாநாதிபதியாயிருப்பது என்பது சக்கரவர்த்தி பதவிபோன்றது. ஆசார்யஸ்தானத்திலிருப்பதால் எல்லாம் அவர்களுக்கு ஸ்வாதீனமானது. அப்படியிருந்தபோதிலும் ஒன்றிலும் பற்றில்லாமல் ஸ்ரீ மஹாஸந்நிதானம் விளங்கி வந்தது யாவருக்கும் தெரிந்த விஷயம். எல்லா விஷயங்களும் தனக்கு ஸ்வாதீனமாய் இருந்தும் அதில் ஆசையைத் துறப்பதுதான் உண்மையான வைராக்யம்.

विकारहेतौ सति विक्रियन्ते येषां न चेतांसि त एव धीराः

(குமார ஸம்பவம் 1 - 59)

जीवन्मुक्तिसुखानुभूतिलहरीमामज्ज्यमानान्तरो-
ऽप्यात्मानं जडबालमूकवधिरोन्मत्तादिवद्दर्शयन् ।
योऽयं व्यञ्जयति क्रमेण भरतादीनां स्थितिं तादृशः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ७ ॥

ஜீவன்முக்தி ஸுகாநுபூதி லஹரீ மாமஜ்ஜ்யமாநாந்தரோ-
Sப்யாத்மாநம் ஜட பால மூக பதிரோந்மத்தாதிவத் தர்ஶயன் ।
யோSயம் வ்யஞ்ஜயதி க்ரமேண பரதாதீநாம் ஸ்திதிம் தாத்ருஶ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

जीवन्मुक्तिसुखानुभूतिलहरी - ஜீவத்தசையிலேயே முக்தியடைந்து அதனுலேற்பட்ட பிரஹ்மானந்தானுபவ பிரவாஹத்தில், मामज्ज्यमानान्तरः अपि - மனம் நன்கு மூழ்கியிருந்த போதிலும், जड - அறிவில்லாதவன், बाल - சிறுவன், मूक - ஊமை, बधिर - செவிடன், उन्मत्तादिवत् - பைத்தியம் பிடித்தவன் இவர் முதலானவர்கள்போல, आत्मानं - தன்னை, दर्शयन् - (வெளியில்) காண்பித்துக் கொண்டு, क्रमेण - முறையே, भरतादीनां - ஜடபரதர் முதலானவர்களின் स्थितिं - நிலைமையை, योऽयं - எந்த இவர், व्यञ्जयति - வெளிக்காட்டுகிருரோ, तादृशः - அந்த, श्रीमच्चन्द्र + गतिः ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகையே எனக்கு கதி. (7)

ஸ்ரீ மஹாஸந்நிதானம் ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரமடைந்து அக்ஞானம் விலகி முக்தியேற்பட்டு ஜீவன்முக்தராக விளங்கினவர். இவர் மனம் எப்பொழுதும் ப்ரஹ்மானந்த அநுபவத்திலேயே நிலைத்திருக்கும். எல்லாமறிந்தவராயிருந்தும் ஜடபரதர்போல் உலக வியவஹாரத்தில் வேண்டுமென்றே ஒன்றுமறியாதவர்போல நடந்து கொள்வார்கள். உண்மை நிலையையறியாத சிலர் இவரைப் பார்த்து அறிவில்லாதவர் என்றும், அறிவு வளர்ச்சியடையவில்லை என்றும் நினைக்கின்றனர். நாம் பேசி அவர் பதில் பேசாமல் இருந்தால் ஊமை என்றும், செவிடு என்றும் எண்ணுகின்றனர். சில ஸமயம் ஒன்றுக்கொன்று ஸம்பந்தமில்லாமல் பேசுவதைப் பார்த்து சித்தப்ரமம் என்றும் சொல்கின்றனர். ஞானிகள் உலக வியவஹாரத்தில் இம்மாதிரித்தான் இருப்பார்கள். ஜடபரதர், ஸதாசிவப்ரஹ்மம் இவர்களின் நிலையை புராணம், சரித்திரம் மூலமாய் கேள்விப்பட்டிருக்கிருேம். அதை ஸ்ரீ மஹாஸந்நிதானத்திடம் நேரில் பார்த்தோம்.

सङ्गी बाध्यत एव लोक इति वा वैयासिकं यद्वचः
तस्याप्यद्भुतगौरवं विशदयन्सङ्गं त्यजँल्लौकिकम् ।
स्वात्मानन्दरसानुभूतिभरितो वाभाति यस्तादृशः
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ८॥

ஸங்கீ பாத்யத ஏவ லோக இதி வா வையாஸிகம் யத்வச:
தஸ்யாப்யத்புத கௌரவம் விஶதயந் ஸங்கம் த்யஜந் லௌகிகம் ।
ஸ்வாத்மாநந்த ரஸாநுபூதி பரிதோ பாபாதி யஸ்தாத்ருஶ:
ஸ்ரீமச்சந்த்ர கிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ॥

सङ्गी - பற்றுதல் உள்ளவன், लोके - உலகில், बाध्यत एवेति - அவசியம் துன்புறுவான் என்ற, वैयासिकं - வியாஸருடையதான, यत् वचः - எந்த வார்த்தையுண்டோ, तस्यापि - அதற்கும், अद्भुतगौरवं - வியக்கத் தக்க மதிப்பை, विशदयन् - வெளிப்படுத்திக் கொண்டு, लौकिकं सङ्गं - உலகப்பற்றுதலே, त्यजन् - விட்டு, स्वात्मानन्दरसानुभूतिभरितः - ஆத்மானந்தத்தின் ரஸத்தை பூர்ணமாயனுபவித்துக்கொண்டு, यः - எவர், बाभाति - விளங்குகிறாரோ, तादृश - அப்பேற்பட்ட, श्रीमचन्द्र + गतिः - ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் பாதுகையே எனக்கு கதி. (8)

ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஜீவன்முக்த நிலையை அடைந்து விட்டதால் இனிமேல் எந்த ஸங்கம் ஏற்பட்டாலும் அவர்நிலை மாறாது. அவர் உலக ஸங்கத்தை விட்டது அவருக்காகவன்று. தம் நிலையையடையாத மற்றவர்கள், ஸங்கத்தால் கெட்டுப்போகக்கூடாது என்ற கருணையால் அவர்களுக்கு வழிகாட்டியாக தாம் ஸங்கத்தை துறந்தார். இதன் மூலம் 'ஸங்கத்தால் துன்பமடைவான்' என்ற வியாஸ வாக்குக்கும் மதிப்புக்கொடுத்ததாக ஆகிறது.

आलापैरनवद्यसूक्तिभरितैरानन्दसंदायिभिः
ब्रह्मात्मानुभवप्रकाशनपरैः स्वैरोद्गतैः सुस्वरैः ।
बालोन्मत्तविडम्बनव्यतिकरे व्यावृण्वतो नैपुणीं
श्रीमच्चन्द्रकिशोरशेखरगुरोः श्रीपादुका मे गतिः ॥ ९ ॥

ஆலாபைரநவத்ய ஸூக்தி பரிதைராநந்த ஸந்தாயிபி:
ப்ரஹ்மாத்மாநுபவ ப்ரகாஶநபரை: ஸ்வைரோத்கதை:
ஸுஸ்வரை: ।

பாலோந்மத்த விடம்பந வ்யதிகரே வ்யாவ்ருண்வதோ நைபுணீம்
ஸ்ரீமச்சந்த்ரகிஶோர ஶேகர குரோ: ஸ்ரீபாதுகா மே கதி: ||

अनवद्य – குற்றமற்ற, सूक्तिभरितैः – நல்வார்த்தை நிரம்பியதும், आनन्दसंदायिभिः – ஆனந்தத்தைத் தருவதும், ब्रह्मात्मानुभवप्रकाशनपरैः – தன் ப்ரஹ்மானுபவத்தை வெளிக்காட்டுவதும், स्वैरोद्गतैः – தன் இஷ்டப்படி வெளிவந்ததும், सुस्वरैः – நல்ல இனிமையான த்வனியுள்ளதுமான, आलापैः – பேச்சுக்களால், बालोन्मत्तविडम्बनव्यतिकरे – சிறுவன், பித்தன் இவர்களைப் போல் நடிப்பதில், नैपुणीं – திறமையைக், व्यावृण्वतः – காட்டுகிற, श्रीमचन्द्र + गतिः – ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸத்குருவின் ஸ்ரீபாதுகையே எனக்கு சரணம். (9)

ஸ்ரீ மஹாஸந்நிதானத்தின் பேச்சுக்கள் பாமரர்களுக்கு சிறுவர்களுடையவும், பித்தர்களுடையவும் பேச்சுக்கள் போலவே தோன்றும். சிறுவர் போலும் பித்தர்போலும் நடிப்பதில் ஸ்ரீஸ்வாமிகள் திறமையைக் காட்டுவார்கள். ஆனால் விவேகிகள் அவ்வாறு எண்ணமாட்டார்கள். யத்ருச்சையாக அவர்கள் முகார விந்தத்திலிருந்து வெளிவரும் ஒவ்வொரு வார்த்தையும் ஆத்மானுபவத்தை நன்கு வெளிக்காட்டும். கேட்போர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்கும். அச்சொல்லில் ஒரு தோஷத்தையும் யாரும் கூறமுடியாது.

चमत्कृतसुधीचेताश्चन्द्रचूडालसद्गुरुः ।
सच्चिदानन्दतीर्थेऽस्मिन्समुदञ्चयतां दृशौ ॥ १० ॥

சமத்க்ருத ஸுதீ சேதாஶ்சந்த்ர சூடால ஸத்குரு: |
ஸச்சிதானந்த தீர்த்தேऽஸ்மிந் ஸமுதஞ்சயதாம் த்ருஶௌ ||

மிகுந்த அறிவுள்ளவர்களுடைய மனதையும் வியப்பில் ஆழத்துகின்ற ஸ்ரீசந்திரசேகர பாரதீ ஸத்குரு இந்த ஸச்சிதானந்த தீர்த்தரிடம் தன் கிருபாகடாக்ஷத்தை அருளட்டும். (10)

❖ ❖ ❖

॥ श्रीजगद्गुरुपञ्चकम् ॥

ஸ்ரீ ஜகத்குரு பஞ்சகம்

'ஸ்ரீ ஜகத்குரு பஞ்சகம்' என்ற ஸ்தோத்ரம் ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளைப் போற்றுகிறது.

हृद्यानवद्यनिजसूक्तिविशेषजालै
विद्रावितस्वजनहार्दतमः प्ररोहान् ।
विद्याधुनीविहरणोद्यतराजहंसान्
विद्यासुतीर्थगुरुराजवरान् नमामः ॥ १ ॥

अज्ञानिनां तिमिरितासु मनोगुहासु
विज्ञानदीपकलिकामुपदर्शयन्ती ।
प्रज्ञानिधेः सदुपदेशगवी गुरोर्नः
प्रज्ञाप्रकाशमनिशं प्रचुरीकरोतु ॥ २ ॥

लोके मनांसि निजभक्तचकोरकाणा -
मानन्दयन्नमृतवाङ्मयवर्षणेन ।
उद्भासते कुवलयान्तरतापजात -
सर्वंकषो गुरुमुखेन्दुरसौ प्रसन्नः ॥ ३ ॥

शर्म प्रदातुमिह सर्वजनाय लोके
धर्मप्रचारसरणिं समुपादिशन्नः ।
विद्यासुतीर्थगुरुसंयमिसार्वभौमो
भूमौ चिरायुरधिगत्य चिरं विजीयात् ॥ ४ ॥

आसेतोराहिमाद्रेश्च धर्मपालनतत्परः ।
विद्यातीर्थगुरुः सोऽयं वर्धतामुत्तरोत्तरम् ॥ ५ ॥

ஹ்ருத்யாநவத்ய நிஜஸூக்தி விஶேஷஜாலை:
வித்ராவித ஸ்வஜந ஹார்த தம: ப்ரரோஹான்।
வித்யாதுநீ விஹரணோத்யத ராஜஹம்ஸான்
வித்யாஸுதீர்த்த குருராஜவரான் நமாம: ॥ 1 ॥

அக்ஞாநினும் திமிரிதாஸு மனோ குஹாஸு
விக்ஞாந தீபகலிகாமுபதர்ஶயந்தீ ।
ப்ரக்ஞா நிதே: ஸதுபதேஶ கவீ குரோர்ந:
ப்ரக்ஞா ப்ரகாஶமநிஶம் ப்ரசுரீகரோது ॥ 2 ॥

லோகே மநாம்ஸி நிஜபக்த சகோரகாணா-
மாநந்தயந்நம்ருத வாங்மய வர்ஷணேந ।
உத்பாஸதே குவலயாந்தர தாபஜாத-
ஸர்வங்கஷோ குருமுகேந்துரஸௌ ப்ரஸந்ந: ॥ 3 ॥

ஶர்ம ப்ரதாதுமிஹ ஸர்வஜநாய லோகே
தர்மப்ரசார ஸரணிம் ஸமுபாதிஶந்ந: ।
வித்யாஸுதீர்த்த குருஸம்யமி ஸார்வபௌமோ
பூமௌ சிராயுரதிகத்ய சிரம் விஜீயாத் ॥ 4 ॥

ஆஸேதோ ராஹிமாத்ரேஶ்ச தர்மபாலன தத்பர: ।
வித்யாதீர்த்த குரு: ஸோऽயம் வர்ததாமுத்தரோத்தரம் ॥ 5 ॥

மனோகரமானதும் தோஷலேசமில்லாததுமான தன் சிறந்த பல உபதேசங்களால் தன்னை அண்டியவர்களின் மனதிலுள்ள அக்ஞானத்தை விரட்டுபவரும், ராஜஹம்ஸம் நதியில் விளையாடுவதுபோல் ''வித்யை'' என்னும் நதியில் விளையாடுவதில் ஈடுபட்டவருமான (சாஸ்திர சர்ச்சைகளில் குதூஹலத்துடன் ருசியுடன் ஈடுபடுபவர்) ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த குருராஜரை வணங்குகிறோம். (1)

ஞானத்திற்கு இருப்பிடமான நம் ஆசார்யருடைய ஸதுபதேச வசனமானது எப்பொழுதும் ஞான ஒளியை மிகுதியாக்கட்டும். இந்த உபதேசமானது அக்ஞானிகளுடைய இருளடைந்த மனமென்னும் குஹைகளில் அறிவு என்னும் தீபத்தை ஏற்றிவைக்கிறது. (2)

உலகில் சரத்காலத்துப் பூர்ணசந்திரன் தன் நிலவைப் பொழிந்து சகோரபக்ஷிகளின் மனதை இன்புறுத்துகிறான். இதுபோலவே ப்ரஸன்னமான குருவின் முகம் சகோர பக்ஷிகள் போன்ற தன் பக்தர்களின் மனதை தனது உபதேசாமிருதவர்ஷத்தால் இன்புறுத்துகிறது. (குருவின் முகமாக உபதேசத்தைக் கேட்டமாத்திரத்தில் எல்லோரும் ஆனந்தமடைகின்றனர்) பூமிக்கும்

நீலோத்பல புஷ்பத்திற்கும் பகலில் சூரிய கிரணத்தாலேற்பட்ட உள்தாபத்தையெல்லாம் முழுவதும் சந்திரன் போக்கி மலரச்செய்கிருன். இதுபோல குருவின் முகம் பூமியிலுள்ள யாவருடைய மனதின் தாபத்தையெல்லாம் முழுவதும் போக்குகிறது. (குருவின் முகத்தை தரிசித்தமாத்திரத்திலேயே மனதிலுள்ள தாபமெல்லாம் எல்லோருக்கும் நீங்கிவிடுகிறது.) (3)

உலகில் எல்லா ஜனங்களுக்கும் க்ஷேமத்தைக் கொடுப்பதற்காக தர்மம் பரவும் மார்க்கத்தை நமக்கு உபதேசிக்கின்ற யதிசிரேஷ்டரான ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த குரு பூமியில் நீண்ட ஆயுளுடன் வெகுகாலம் ஸர்வோத்கிருஷ்டமாக விளங்கவேண்டும். (4)

ஸேது முதல் இமயமலைவரை எங்கும் தர்மத்தைக் காப்பாற்றுவதில் ஈடுபட்டுள்ள ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்த குரு மேன்மேலும் அபிவிருத்தியடையட்டும். (5)

✣✣✣

ஆதிசங்கரபகவத்பாதாள் முதன்முதலில் ஸ்தாபித்த சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடத்தின் 34-வது பீடாதிபதியான ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ மஹாஸ்வாமிகள், உலக இன்பங்களில் சிறிதளவும் பற்றின்றி வைராக்ய சக்கரவர்த்தியாக வாழ்ந்து காட்டிய ஓர் ஒப்பற்ற மஹாபுருஷர் மட்டுமின்றி ஜீவன்முக்தரும் ஆவார். தமது வாழ்நாள் முழுவதையும் ஆத்மநிஷ்டையிலேயே கழித்து, சாஸ்திரங்களில் கூறப்பட்ட அத்தனை ஜீவன்முக்த லக்ஷணங்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்த ஒரு மஹாஞானி.

தமக்கு பிரதம சிஷ்யராகவும் ஸ்ரீ சாரதா பீடத்திற்கு வாரிசாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீ அபிநவவித்யாதீர்த்தர், ''ஸ்ரீநிவாஸன்'' என்ற பெயருடன் பிரம்மசாரியாக குருகுலவாஸம் செய்த நாட்களில் ஏற்பட்ட பல சுவையான நிகழ்ச்சிகள் மிக அழகாக இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளன.

சாஸ்திர விஷயங்களில் தமது சிஷ்யர்களுக்கு ஏற்பட்ட உண்மையான சந்தேகங்களை இம்மஹான் கருணை கூர்ந்து எப்படிப் போக்கினார், மேலும் அவர்களுக்கு எப்படி மனநிறைவையும் பேரானந்தத்தையும் அருளினார் என்பவை இந்தப் புத்தகத்தில் மிக விஸ்தாரமாகவும் மிக சுவாரஸியமாகவும் ஸ்ரீ பாஷ்ய ஸ்வாமிகள் அவர்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

Rs.60/-